# நன்னூல் உரை வளம்

19

## இலகுபோதம்

இரா. கண்ணன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies

நன்னூல் உரைவளம் (தொகுதி-19)

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

இயற்றிய

# நன்னூல் இலகுபோதம்

பதிப்பாசிரியர்

முனைவர் இரா. கண்ணன்


உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்

இரண்டாம் முதன்மைச் சாலை,

தரமணி, சென்னை-600 113

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | **Nannūl ilakupōtam (Vol. 19)** |
| Author | : | Dr. R. Kannan<br>Associate Professor<br>Dept. of Tamil Language<br>Presidency College, Chennai - 5 |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus, Tharamani<br>Chennai-600 113<br>Ph: 22542992 |
| Publication No. | : | 707 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Year of Publication | : | 2010 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 11 Point |
| No. of Pages | : | 296 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 130/- (Rupees One hundred and thirty only) |
| Printed by | : | Sri Venkateswara Offset<br>New No. 47, Rajanga Mathya Street<br>Vadapalani, Chennai - 600 026.<br>Phone : 23621409 |
| Subject | : | Tamil Grammar |

**முனைவர் கரு.அழ. குணசேகரன்**
**இயக்குநர்**
**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**
**சென்னை – 113**

# அணிந்துரை

வாழ்வை இலகுவாக்க மனிதன் படைத்துக் கொண்ட கருவிகள் பற்பல. அவற்றுள் மொழியும் ஒன்று. ஆயினும் பிற கருவிகள் யாவற்றுள்ளும் தலையாயதும் தனிச் சிறப்புடையதும் மொழியே. மொழி இன்றேல் வேறு எக்கருவியும் தோன்றி யிராது. மொழி, மனத்தின் உயிர்; பிறபிற கலைகளுக்கும் கருவிகளுக்கும் தாய். மாந்தரின வாழ்விற்கு இத்துணை இன்றியமையாக் கருவியாய்த் திகழும் மொழி, உலகம் யாண்டும் பரவிக் கிடக்கும் மக்களினக் குழுக்களிடையே பலவாகக் காணக் கிடக்கிறது. அம் மொழிக்கூட்டத்திடையே பன்மீன் நாப்பண் விளங்கு பால்மதி போல் இலங்குவது தமிழ்.வரலாற்றுக்காலந் தொடங்கி இன்றளவும் தன்னேரிலாத் தகைசால் சீர்மை யுடன் திகழும் இத் தமிழ்மொழியின் இலக்கிய இலக்கணப் பரப்பு அளந்திட்டுக் கூற ஒண்ணா விரிவினை உடையது. காலமும் கடும்புனலும் கொண்டது போக எஞ்சியன சிலவே யாயினும், மறைந்து போனவற்றிற்கு மாற்றாகக் காலந் தோறும் தோன்றிய பனுவல்களோ பற்பல. அழகு தமிழில் அமைந்த அந்நூல்களின் பொதிபொருளைப் பழகு தமிழில் விளக்க எழுந்த உரைகளும் மிகப் பல.

ஒல்காப் புகழுடைய தொல்காப்பியத்திற்குப் பின் ஏறத்தாழ பன்னிரண்டு நூற்றாண்டுகள் கழித்துத் தோன்றி இன்றளவும் தனிச் சிறப்புடன் வாழ்வது நன்னூல். பெயருக்கு ஒப்பவே தமிழின் இலக்கணத்தை நலம்படவும் நயம்படவும் இயம்பும் இந்நூலிற்கு உரைவிளக்கம் கண்டோர் பலர். அவ்வுரைகளுள் பல, தம் பெயரை மட்டுமே நிறுத்தி தாம் மாய்ந்தன. வேறுபலவோ, அச்சேறியபோதும் இன்று காணுதற்கும் அரியனவாய் உள்ளன. இவ்வாறு காலச் செலவால் அருகி உள்ள உரைகளை அரிதின் முயன்று திரட்டி இருபத்திரண்டு தொகுதிகளாக உருவாக்கப் பெற்றுள்ள இவ்வுரை வளத்தினைஎம் நிறுவனத்தின் வழி வெளியிடுவதில் பெருமிதம் கொள்கிறோம்.மயிலை நாதர், சங்கர நமச்சிவாயர்,சிவஞான முனிவர், கூழங்கைத் தம்பிரான், விசாகப் பெருமாளையர், ஆ.முத்துத் தம்பிப்பிள்ளை, இராமானுச கவிராயர், கா.கோபாலா சாரியார், தி.கோ.ரங்காசாரியார், ஆறுமுக நாவலர், வ.குமார சாமிப்புலவர், வை.மு.சடகோப ராமானு சாசாரியார், சே.கிருட்டிணமாசாரியார், பவானந்தம் பிள்ளை, கொ.இராம லிங்கத்தம்பிரான், கா.நமச்சிவாய

முதலியார், மோசசு பொன்னையா ஆகியோரின் உரைகளும், என்றி பவார் செய்த பாயிரப் பகுதிக்கான ஆங்கில மொழி பெயர்ப்பும், இலாசரசு செய்த எழுத்ததிகாரம் மற்றும் சொல்லதிகாரத்திற்கான ஆங்கில மொழிபெயர்ப்பும் இவ்வுரை வளத்தில் திரட்டப் பெற்றுள்ளன. நன்னூலைத் தழுவி இயற்றப் பெற்று ஒரு நூற்றாண்டு காலத்திற்கும் மேல் மீள்பதிப்புக் காணாத திருப்பாற்கடல்நாதன் கவிராயரின் தமிழிலக்கணம், சி.அருணாசலம் பிள்ளையின் TAMIL GRAMMAR, இ.சாமுவேல் பிள்ளையின் தொல்காப்பிய நன்னூல், G.U.போப்பின் காண்டிகையுரை, ஆ.முத்துத் தம்பிப்பிள்ளையின் நன்னூல் இலகுபோதம் ஆகியன இவ்வுரைவளத் திரட்டில் தனித்தனி நூல்களாக வெளியிடப் பெற்றுள்ளன. இவ்வுரைவளம் தமிழன்னைக்கு அணி சேர்க்கும் என்பதில் ஐயமில்லை.

நன்னூல் உரைவளத்தின் பதிப்பாசிரியரான **முனைவர் இரா.கண்ணன்**, சென்னை மாநிலக்கல்லூரித் தமிழ்த் துறையில் இணைப்பேராசிரியராகப் பணியாற்றுகிறார். இவர் அறுபதிற்கும் மேற்பட்ட நூல்களின் ஆசிரியர். இவ்வுரை வளத்தின் பதிப்புப் பணியோடு எழுத்துக் கோர்த்தல், மெய்ப்புத் திருத்தல், வடிவமைத்தல் உள்ளிட்ட அனைத்துப் பணிகளையும் தனியொருவராக இருந்து சிறப்புடன் செய்துள்ள இப்பதிப்பாசிரியரை மனதார வாழ்த்துவதுடன் நன்றி நவிலுங் கடப்பாடுமுடையேன்.

நிறுவனப் பணிகளில் எம்முடன் இணைந்து பணியாற்றும் துணை இயக்குநர், பேராசிரியப் பெருமக்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள் ஆகிய அனைவர்க்கும் எம் நன்றி உரித்தாகுக.

**கரு.அழ.குணசேகரன்**

சென்னை – 113.

12.10.2010.

# முன்னுரை

தமிழிலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐம்பெரும் பிரிவுகளை உடையது என்பர். இது பொது வழக்கே யாயினும் பிற்காலத்தில் பாட்டியல் அனைய புதுப்புது இலக்கணப் பிரிவுகள் தமிழில் தோன்றி நன்கு செழித்து வளர்ந்துள்ளன. அவ்வாறே எழுத்து, சொல் முதலான ஒவ்வொரு பிரிவினிலும் தோன்றிய இலக்கண நூல்களும் பல உள. தொல்காப்பியம், எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்று அதிகாரங்களை உடையதாதலான் அது மூன்றிலக்கணம் கூறும் நூல் என்பது போதரும். ஆயினும் பொருளதிகாரத்துள் அமைந்து கிடக்கும் உவமவியலும், செய்யுளியலும் முறையே அணியிலக்கணத்தையும், யாப்பிலக்கணத்தையும் வேண்டுமளவிற்கு விளக்கிக் கூறுதலான், அந்நூல் ஐந்திலக்கண நூலுமாம். தொல்காப்பியத்திற்குப் பின் பல்வேறு இலக்கண நூல்கள் எழுந்தன.பழங்காலத்தில் பெருவழக்காய் வழங்கிய அவ்விலக் கண நூல்கள் இன்று வீழ்ந்து போயின. இன்று வழங்கப் பெறும் இலக்கண நூல்களுள் வீரசோழியம், தொல்காப்பியத்திற்குப் பின் எழுந்த முதல் ஐந்திலக்கண நூலாகும். ஆயினும் அந்நூல் வடமொழி சார்பினைப் பெரும்பான்மை தழுவிச் செல்வதால் அது அவ்வளவாகப் போற்றப் படுவதில்லை. வீரசோழியத்திற்குப் பின் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண் டளவில் பவணந்தி முனிவரால் நன்னூல் இயற்றப்பட்டது. நன்னூல் ஐந்திலக்கணம் கூறிய நூல் என்றும், இன்று எழுத்து மற்றும் சொல்லிலக் கணம் உரைக்கும் பகுதி மட்டுமே கிடைக்கப் பெறுகிறது என்றும் எஞ்சிய பகுதிகள் காலச் செலவால் அழிந்திருக்கக் கூடும் என்றும் கருதுவாரும் உண்டு. இன்று வழக்கில் உள்ள நன்னூலின் மொத்த நூற்பாத் தொகை நானூற்று அறுபத்திரண்டு. பாயிரம், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என மூன்று பகுதிகளாய் அமைந்துள்ள இந்நூலின்கண் பாயிரம் 55 நூற்பாக்களையும், எழுத்ததிகாரம் 202 நூற்பாக்களையும் சொல்லதிகாரம் 205 நூற்பாக்களையும் பெற்றுள்ளன. பாயிரம், பவணந்தியால் இயற்றப்பட்டதன்று என்பர்.

நன்னூலிற்கு இன்றுகாறும் எழுந்துள்ள உரைகள் பல. ஆயினும் மயிலைநாதரின் உரையே முதலில் எழுந்த உரையாகும். மயிலைநாதர் நன்னூல் ஆசிரியர் பவணந்தியின் சம காலத்தவர். மயிலைநாதரின் உரை நன்னூலிற்கு இன்று வரை எழுந்துள்ள உரைகள் யாவற்றிலும் தலைமை யானது, தனிச் சிறப்புடையது. இவ்வுரைக்குப் பின் பல உரைகள் எழுந்தன. அவற்றுள் சில அச்சேறாமலேயே இறந்தன.வேறுசில அச்சேறிய பின்னும் இன்று அருகியுள்ளன.இவ்வாறு காலச்செலவான் அருகி வரும் உரைகளைக் காத்தற் பொருட்டும், தமிழாய்விற்குத் தக்க கருவி நூலாய் அமையும் திறம் நோக்கியும் இவ்வுரைவளம் உருவாக்கப் பெற்றுள்ளது.இதில் நன்னூலின் சிறந்த உரைகள் அனைத்தும் திரட்டப் பெற்றுள்ளன.

நூற்பா அதன்கீழ் சீர் பிரிக்கப் பெற்ற நிலையில் நூற்பா,ஆங்கில எழுத்துப் பெயர்ப்பு, இலாசரசு செய்த மூல நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பு, தொல்காப்பியம் முதல் சுவாமிநாதம் வரையிலான இலக்கண நூல்களில்

இருந்து தரப்பெற்றுள்ள ஒப்புமைப் பகுதி,நன்னூல் உரைகள் ஆகியன இவ்வுரைவளத்தில் நிரல்படுத்தப்பட்டுள்ளன. மூலநூலின் பாட வேறுபாடும், மயிலை நாதர் உரையின் பாடவேறுபாடும் காட்டப் பெற்றுள்ளன.

நன்னூலிற்கு விருத்த யாப்பில் எழுந்த ஆண்டிப்புலவர் உரை அழிந்து போனது. அச்சேறிய உரைகளுள் பல இன்று அருகி பெயரளவில் மட்டுமே அறியப் பெறுபவையாக உள்ளன. அச்சேறிய அரிய உரைகளை யேனும் காக்கும் வகையில் இவ்வுரைவளம் இருபத்திரண்டு தொகுதிகளாக வெளியிடப் பெறுகின்றது. தமிழ் உலகம் ஏற்றுப் போற்றும் என நம்புகிறேன்.

நன்னூல் உரைவளத் திரட்டினை வெளியிட நிதியுதவி கோரி தமிழக அரசினை நாடியபோது உலகத் தமிழாராச்சி நிறுவனம் மூலம் வெளியிட அந்நிறுவனத்திற்குப் பரிந்துரைத்த ***தமிழக நிதியமைச்சர், இனமானப் பேராசிரியர் மாண்புமிகு க. அன்பழகன்*** அவர்களின் அருளுள்ளம் எந்நாளும் எம்மால் நினைவு கூரத்தக்கது. அவ்வாறே,இவ்வுரைவளத் தொகுதிகள் அனைத்தும் வெளிவரப் பரிந்துரைத்துத் துணை நின்ற, ***தமிழகத் துணைமுதல்வர் மாண்பமை டாக்டர் மு.க.ஸ்டாலின்*** அவர்களின் பேருதவிக்கு உளமார்ந்த நன்றியினை உரித்தாக்குவதே யன்றி எளியேன் செய்ய இயல்வதுதாமென்?

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர், பேராசிரியர் முனைவர் ***கரு.அழ.குணசேகரன்*** அவர்களும், துணை இயக்குநர் **திரு.க.ந.வீரபாகு சுப்பிரமணியன்** அவர்களும் நன்னூல் உரைவள நூல்கள் அனைத்தையும் விரைந்து வெளிக் கொணர்ந்தனர். அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

இவ்வுரைவளத் திரட்டுப் பணியின்போது பல்லாற்றான் உதவிய சென்னை இராணிமேரி கல்லூரிப் பேராசிரியை **முனைவர் ந.கலைவாணி** அவர்களுக்கும், உற்றுழி உதவிய அனைவர்க்கும் உளமார்ந்த நன்றியினை உரித்தாக்கிக் கொள்வதோடு, தோன்றாத் துணையாய் இருந்து எம்மை இயக்கி வரும் தில்லைக் கூத்தனின் பொன்னார் திருவடிகளைப் போற்றிப் பணிந்து அமைகிறேன்.

10.11.2010

**இரா.கண்ணன்.**

சென்னை–55

# நன்னூல் இலகுபோதம்

## எழுத்தியல்

**கடவுள் வணக்கமும் எடுத்துக்கொண்ட விஷயமுங் கூறுஞ் சூத்திரம் யாது?**

**பூமலி யசோகின் புனைநிழ லமர்ந்த**
**நான்முகற் றொழுதுநன் கியம்புவ னெழுத்தே**

(பூமலி அசோகின் புனைநிழல் அமர்ந்த
நால் முகன் தொழுது நன்கு இயம்புவன் எழுத்தே)

**இதன் பொருள்.:** பூமலி – பூக்கள் நிறைந்த, அசோகின் – அசோகமரத்தினது, புனை – அலங்கரிக்கப்பட்ட, நிழல் அமர்ந்த – நிழலின்கண் எழுந்தருளியிருந்த, நான்முகற்றொழுது – நான்கு முகங்களையுடைய, கடவுளை வணங்கி, எழுத்து – எழுத்திலக்கணத்தை, நன்கு இயம்புவன் – நன்றாகச் சொல்வேன், எ–று. ஏகாரம் – ஈற்றசை.

**இச் சூத்திரத்துள் எது முதல் எதுகாறுங் கடவுள் வணக்கம் கூறப்பட்டது?**

"பூமலி யசோகின் புனைநிழ லமர்ந்த; நான்முகற்றொழுது" என்பதுவரையுமே.

**எது முதலெதுகாறும் எடுத்துக் கொண்ட விஷயங் கூறப்பட்டது?**

"நன்கியம்புவனெழுத்தே" என்பது வரையும்.

**இந் நூலாசிரியர் ஆருகதர் என்பது எதனால் விளங்குகின்றது?**

"பூமலியசோகின் புனைநிழலமர்ந்த, நான்முகற்றொழுது"

என்பதனால். நான் முகன் – அருகன். அருகனை வழிபடுவோன் ஆருகதன்.

**எடுத்துக்கொண்ட விஷயம் யாது?**

"எழுத்து" (எழுத்து – எழுத்திலக்கணம்)

**கடவுள் வணக்கஞ் செய்தது எதன் பொருட்டு?**

எடுத்துக்கொண்ட விஷயம் இனிது முடிதற் பொருட்டு.

**எழுத்திலக்கண மெத்தனை பகுப்பினையுடையது?**

எண்பெயர் முறைபிறப் புருவ மாத்திரை

**முதலீ றிடைநிலை போலி யென்றா**

**பதம்புணர் பெனப்பன் னிருபாற் றதுவே.**

(எண் பெயர் முறை பிறப்பு உருவம் மாத்திரை

முதல் ஈறு இடைநிலை போலி என்றா

பதம் புணர்ப்பு எனப் பன்னிருபாற்று அதுவே.)

இ–ள்.: எண்– எழுத்தினெண்ணும், பெயர் – பெயரும், முறை – முறையும், பிறப்பு – பிறப்பும், உருவம் – வடிவமும், மாத்திரை – ஒலியளவும், முதல் ஈறு இடைநிலை – முதல்நிலை கடைநிலை இடைநிலைகளும், போலி – போலியும், பதம் – பதமும், புணர்ப்பு – புணர்ச்சியும், எனப் பன்னிருபாற்று – என்று பன்னிருபகுதியினை யுடைத்தாகும், அது– அவ்வெழுத்திலக்கணம்,எ–று.

**அவற்றுள் அகத்திலக்கண மெத்தனை?**

"எண் பெயர் முறைபிறப் புருவ மாத்திரை, முதலீ றிடைநிலை போலி" எனப் பத்து.

**புறத்திலக்கண மெத்தனை வகைப்படும்?**

பதம்புணர்பென இரண்டு.

**அகம்புறமென்னும் பாகுபாடு எதனாற் பெறப்பட்டது?**

"என்றா" என்னும் எண்ணிடைச்சொல் பிரித்தலால். அகத்திலக்கணம் – பொருளைவிட்டு நீங்காதமைந்த இலக்கணம். புறத்திலக்கணம் – சம்பந்த இலக்கணம்.

**எழுத்திலக்கண மெத்தனை இயல்களாற் கூறப்படும்?**

அகத்திலக்கணம் பத்தும் எழுத்தியலென வோரியலாகவும், புறத்திலக்கண மிரண்டனுள் அவ் வெழுத்தானாகும் பதம் பதவியலென வோரியலாகவும், அப் பதம் புணரும் புணர்ப்பு உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரிய லென்னும் மூன்றும் புணரியலென வோரியலாகவும் ஆக மூன்றியலாற் கூறப்படும்.

**எழுத்தாவதின்ன தென்வும் அதன்வகை யித்தனை யெனவுங் கூறுஞ் சூத்திரம் யாது?**

**மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி**

**யெழுத்தது முதல்சார் பெனவிரு வகைத்தே.**

(மொழி முதற்காரணம் ஆம் அணுத்திரள் ஒலி எழுத்து;

அது முதல் சார்பு என இருவகைத்து ஏ)

இ–ள்.: **மொழிமுதற் காரணம் ஆம்** – மொழிக்கு முதற் காரணமாகிய, **அணுத்திரள்** – அணுத்திரளே, **ஒலியெழுத்து** – ஒலியெழுத்து, **அது முதல் சார்பென இருவகைத்து** –அது முதலெழுத்துஞ் சார்பெழுத்துமென விருவகையினை யுடையது, **எ–று.**

*இச் சூத்திரத்திற் கூறப்பட்ட எழுத்து எவ்வெழுத்து?*

"ஒலியெழுத்து"

**ஒலி யெழுத்தாவது யாது?**

"மொழி முதற் காரணமாம் அணுத்திரள் ஒலியெழுத்து"

**அவ்வெழுத்து எத்தனை வகைப்படும்?**

"அது முதல் சார்பு என விருவகைத்தே"

**ஒலி வடிவினதாகிய எழுத்தே யன்றி வேறுமுளதா?**

வரிவடிவினதாகிய வெழுத்துமுண்டு. அது, "கட்புலனில்லாக் கடவுளைக் காட்டுஞ் சட்டகம் போலச் செவிப்புல வொலியை, யுட்கொளற்கிடுமு ருபாம் வரியெழுத்து" என்பதனாற் பெறப்படும்.

**முதலெழுத்து இத்தனை யென்பதும் அதன் வகையுங் கூறுஞ் சூத்திரம் யாது?**

**உயிரு முடம்புமா முப்பது முதலே.**

(உயிரும் உடம்பும் ஆம் முப்பதும் முதல் ஏ)

**இ—ள்.: உயிரும்** – பன்னிரண்டு உயிரெழுத்தும். **உடம்பும்** – பதினெட்டு மெய்யெழுத்தும், **ஆம் முப்பதும்** – ஆகிய முப்பதெழுத்தும், **முதலே** – முதலெழுத்தாம், எ—று. (உடம்பு – மெய்யெழுத்து)

**முதலெழுத் தெத்தனைவகைப்படும்?**

"உயிரும் உடம்புமாம்" என விரண்டு.

**முதலெழுத்தெத்தனை?**

"முப்பது முதலே"

**சார்பெழுத்தெத்தனை வகைப்படும்?**

**உயிர்மெய் யாய்த முயிரள பொற்றள**
**பஃகிய இஉ ஐஔ மஃகான்**
**றனிநிலை பத்துஞ் சார்பெழுத் தாகும்.**

(உயிர்மெய், ஆய்தம், உயிரளபு, ஒற்றளவு
அஃகிய இ, உ, ஐ, ஔ மஃகான்
தனிநிலை பத்தும் சார்பு எழுத்து ஆகும்)

**இ—ள்.: உயிர்மெய்** – உயிர்மெய்யும், **ஆய்தம்** – ஆய்தமும், **உயிரளபு** – உயிரளபெடையும், **ஒற்றளபு** – ஒற்றளபெடையும், (அஃகிய) **இ** – குற்றியலிகரமும், (அஃகிய) **உ** – குற்றியலுகரமும், (அஃகிய) **ஐ** – ஐகாரக் குறுக்கமும், (அஃகிய) **ஔ** – ஔகாரக் குறுக்கமும், (அஃகிய) **மஃகான்** – மகரக் குறுக்கமும், (அஃகிய) **தனிநிலை** – ஆய்தக் குறுக்கமும், **பத்துஞ் சார்பெழுத்து ஆகும்** – ஆகிய பத்துஞ் சார்பெழுத்தாகும், **எ—று.**

அஃகல் – குறுகல்.

**சார்பெழுத்தின் விரிகூறுஞ் சூத்திரம் யாது?**

**உயிர்மெய் யிரட்டுநூற் றெட்டுய ராய்தம்**
**எட்டுயி ரளபெழு மூன்றொற் றளபெடை**

**ஆறே ழஃகு மிம்முப் பானேழ்**
**உகர மாறா றைகான் மூன்றே**
**ஔகா னொன்றே மஃகான் மூன்றே**
**ஆய்த மிரண்டொடு சார்பெழுத் துறுவிரி**
**ஒன்றொழி முந்நூற் றெழுபா னென்ப.**

(உயிர்மெய் இரட்டு நூற்றெட்டு உயர் ஆய்தம் எட்டு
உயிரளபு எழுமூன்று, ஒற்றளபெடை
ஆறேழ், அஃகும் இ முப்பானேழ்
உகரம் ஆறாறு, ஐகான் மூன்றே
ஔகான் ஒன்றே, மஃகான் மூன்றே
ஆய்தம் இரண்டு ஒடு சார்பெழுத்து உறுவிரி
ஒன்றொழி முந்நூற்று எழுபான் என்ப)

**இ–ள்.: உயிர்மெய் இரட்டு நூற்றெட்டு** – உயிர்மெய் இருநூற்றுப்பதினாறு, **உயர் ஆய்தம் எட்டு** – முற்றாய்தம் எட்டு, **உயிரளபு எழுமூன்று** – உயிரளபெடை இருபத்தொன்று, **ஒற்றளபெடை ஆறேழ்** – ஒற்றளபெடை நாற்பத்திரண்டு, **அஃகும் இ முப்பானேழ்** – குற்றியலிகரம் முப்பத்தேழு, (அஃகும்) **உகரம் ஆறாறு** – குற்றியலுகரம் முப்பத்தாறு, (அஃகும்) **ஐகான் மூன்று** – ஐகாரக் குறுக்கம் மூன்று, (அஃகும்) **ஔகான் ஒன்று** – ஔகாரக் குறுக்கம் ஒன்று, (அஃகும்) **மஃகான் மூன்று** – மகரக் குறுக்கம் மூன்று, (அஃகும்) **ஆய்தம் இரண்டொடு** – ஆய்தக் குறுக்கம் இரண்டுடனே, **சார்பெழுத்து உறு விரி ஒன்று ஒழி முந்நூற்றெழுபான் என்ப** – சார்பெழுத்தினது மிகுந்த விரி முந்நூற் றறுபத்தொன்பதாம் என்று சொல்லுவர் புலவர், எ–று.

**உயிர்மெய் யெழுத்தெத்தனை?**
"உயிர்மெய்யிரட்டு நூற்றெட்டு"

**முற்றாய்தமெத்தனை?**
"உயராய்தமெட்டு"

**உயிரளபெடை எத்தனை?**
"உயிரளபு எழுமூன்று"

**ஒற்றளபெடை எத்தனை?**
"ஒற்றளபெடை ஆறேழ்"

**குற்றியலிகரமெத்தனை?**
"அஃகும் இம்முப்பானேழ்"

**குற்றியலுகரமெத்தனை?**
"அஃகும் உகரம் ஆறாறு"

**ஐகாரக்குறுக்கமெத்தனை?**

"அஃகும் ஐகான் மூன்றே"

ஔகாரக் குறுக்க மெத்தனை?

"அஃகும் ஔகான் ஒன்றே"

மகரக் குறுக்கமெத்தனை?

"அஃகும் மஃகான் மூன்றே"

ஆய்தக் குறுக்கமெத்தனை?

"அஃகும் ஆய்தம் இரண்டு"

ஆகச் சார்பெழுத்தெத்தனை?

"சார்பெழுத்துறுவிரி, ஒன்றொழிமுந்நூற் றெழுபா னென்ப" பெயர்வகை கூறுஞ் சூத்திரம் யாது?

இடுகுறி காரணப் பெயர் பொதுச் சிறப்பின.

(இச்சூத்திரம் பெயரியலிலெடுத்து வினாவி விளக்கப்படும்)

***இதுமுதல் இத்தனை உயிரென்றும், இதுமுதல் இத்தனை மெய்யென்றுங் கூறுஞ் சூத்திரம் யாது?***

அம்முத லீரா றாவி கம்முதன்

மெய்ம்மூ வாறென விளம்பினர் புலவர்.

(அ முதல் ஈராறு ஆவி, க முதல் மெய் மூவாறு என விளம்பினர் புலவர்)

**இ—ள்.: அம்முதல் ஈராறு ஆவி** (என) – நெடுங்கணக்கினுள் அகரமுதலிய பன்னிரண்டனையும் உயிரெழுத்தென்றும், **கம்முதல் மூவாறுமெய் என** – ககர முதலிய பதினெட்டனையும் மெய்யெழுத்தென்றும், **விளம்பினர் புலவர்** – சொன்னார் அறிவுடையோர்.

*உயிரெழுத்தெவை?*

"அம்முதலீராறு ஆவி" (ஆவி – உயிரெழுத்து)

*மெய்யெழுத்தெவை?*

"கம்முதன் மெய்ம்மூவாறு"

அவற்றுட், குற்றெழுத்திவை யெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

அவற்றுள்,

அ இ உ எ ஒக்குறி லைந்தே.

(அவற்றுள், அ இ உ எ ஒக்குறில் ஐந்து எ)

**இ—ள்.: அவற்றுள்** – ஆவியு மெய்யு மென்றவற்றுள், **அ இ உ எ ஒ ஐந்து குறில்** – அ இ உ எ ஒ என்னும் ஐந்துங் குற்றெழுத்தாம்.

*குற்றெழுத்தெவை?*

"அ இ உ எ ஒக்குறில்"

*குற்றெழுத்தெத்தனை?*

"குறில் ஐந்தே"

*சுட்டெழுத்துகள் எவை?*

**அ இ உம்முதற் றனிவரிற் சுட்டே.**

(அ இ உம்முதல் தனிவரில் சுட்டே)

**இ–ள்.: அ இ உ** – அ இ உ என்னும் மூன்றும், **முதல் தனிவரின் சுட்டே** – மொழிக்கு முதலிலே தனித்துச் சுட்டுப் பொருளைக் காட்டவரிற் சுட்டெழுத்தாம், எ–று.

*சுட்டெழுத்து எவ்வெவ்விடத்துப் பொருளையுணர்த்தும்?*

அகரம் தூரத்தேயுள்ள பொருளையும், இகரம் சமீபத்துள்ள பொருளையும், உகரம் நடுவிலுள்ள பொருளையுஞ் சுட்டும்.

அகர விகர வுகரம் முறையே

சேய்மை அண்மை இடைமைச் சுட்டே. (இஃதுரைச் சூத்திரம்)

*முதலென்று பொதுப்படச் சொன்னதினாற் கொள்ளக்கிடப்பது யாது?*

சுட்டெழுத்து மொழி முதலிலே புறத்தும் அகத்தும் வருமென்பது.

அகச்சுட்டுச் சொல்லின் வேறாகாது நின்று சுட்டுதல்.

**உ–ம்.**

அவன், அவள், இவன், உது.

புறச்சுட்டுச் சொல்லின் புறத்தே நின்று சுட்டுதல்.

**உ–ம்.**

அக்கொற்றன்

*வினாவெழுத்தெவை?*

**எ யா முதலும் ஆ ஓ வீற்றும்**

**ஏ யிரு வழியும் வினாவா கும்மே**

(எ யா முதலும் ஆ ஓ ஈற்றும்

ஏ இரு வழியும் வினாவாகும் ஏ)

**இ–ள்.: எ யா முதலும்** – எ யா என்னுமிரண்டும் மொழிக்கு முதலிலும், **ஆ ஓ ஈற்றும்** – ஆ. ஓ என்னுமிரண்டும் மொழிக் கடையிலும், **ஏ இருவழியும் வினா ஆகும்** – ஏகாரம் இவ்விரண்டிடத்திலும் தனித்து வினாபொருளைக் காட்டவரின் வினாவெழுத்தாம், எ–று.

*மொழி முதலில் வரும் வினாவெழுத்தெவை?*

"எ யா முதல் (வினாவாகும்மே)"

**உ–ம்.:**

எக்கொற்றன்? யாங்ஙனம்? எவன்? யாவன்?

*மொழியீற்றில் வரும் வினாவெழுத்தவை?*

"ஆ ஓ வீற்றும் (வினாவாகும்மே)

**உ–ம்.:** கொற்றானா? கொற்றனோ?

*மொழிமுதலீறென்னு மிரண்டிடத்தும் வரும் வினாவெழுத்தெது?*

"ஏயிருவழியும் வினாவாகும்மே"

உ–ம்.:

ஏவன்? கொற்றனே?

*யாவாகிய வுயிர்மெய்யை உயிரோடு சேர்த்துக் கூறியதென்னை?*

"ஒன்றின முடித்த றன்னின் முடித்தல்" என்னுமுத்தியாற் சேர்த்துக் கூறப்பட்டது.

*வல்லெழுத்தெவை?*

**வல்லினங் க ச ட த ப ற வென வாறே.**

(வல்லினம் க ச ட த ப ற எ னஆறு ஏ)

**இ–ள்.:– க ச ட த ப ற என ஆறு வல்லினம்** – க ச ட த ப ற என்று ஆறும் வல்லெழுத்தாம், **எ–று.**

*மெல்லெழுத்தெவை?*

**மெல்லினம் ங ஞ ண ந ம ன வென வாறே.**

(மெல்லினம் ங ஞ ண ந ம ன என ஆறு ஏ)

**இ–ள்.: ங ஞ ண ந ம ன என ஆறு மெல்லினம்** – ங ஞ ண ந ம ன என்று ஆறும் மெல்லெழுத்தாம், **எ–று.**

இடையெழுத்தெவை?

**இடையினம் ய ர ல வ ழ ள வென வாறே.**

(இடையினம் ய ர ல வ ழ ள என ஆறு ஏ)

**இ–ள்.: ய ர ல வ ழ ள என ஆறு இடையினம்** – ய ர ல வ ழ ள என்று ஆறும் இடையெழுத்தாம், எ–று.

ஆக மெய்யெழுத்து எத்தனை வகைப்படும்?

வல்லினம், மெல்லினம், இடையினமென மூன்றாம்.

வல்லினம் – கடின ஓசை யுடைய இனம்.

மெல்லினம் – மென்மையான ஓசை யுடைய இனம்.

இடையினம் – கடினமுமாகாது மென்மையுமாகாது இடைப்பட்ட ஓசையுடைய வினம்.

இதுகாறும் எழுத்தினது எண்ணும் பெயருங் கூறப்பட்டன. இனி முறை கூறப்படும்.

*முறையாவது யாது?*

**சிறப்பினு மினத்தினுஞ் செறிந்தீண் டம்முதல்**

**நடத்த றானே முறையா கும்மே.**

(சிறப்பினும் இனத்தினும் செறிந்து ஈண்டு அ முதல் நடத்தல் தானே முறை ஆகும் ஏ)

**இ–ள்.: சிறப்பினும் இனத்தினுஞ் செறிந்து** – சிறப்பினாலும் இனத்தினாலும் பொருந்தி, **ஈண்டு அம்முதல் நடத்தல்தானே முறையாகும்மே** – இவ்வுலகத்திலே அகரமுதலாக வழங்குதலே எழுத்துக்களது முறையாம், **எ–று.**

*இம்முறையாக வருவதற்கு காரணம் யாது?*

எல்லாவெழுத்தின்கண்ணுங் கலந்துநிற்குஞ் சிறப்பு நோக்கி எல்லாவெழுத்திற்கும் முன்னர் அகரமும், அதற்கினமாதலின் அதன்பின்னர் ஆகாரமும், பிறப்புஞ் செய்கையுஞ் சுட்டுப்பொருட்டாதலும் அகரத்தோடு அளவும் ஒத்தலின் அவற்றின் பின்னர் இகரமும், அதற்கினமாதலின் அதன்பின்னர் ஈகாரமும், இடமுஞ் செய்கையுஞ் சுட்டுப் பொருட்டாதலும் இகரத்தோடு அளவும் ஒத்தலின் அவற்றின்பின்னர் உகரமும் அதற்கினமாதலின் அதன் பின்னர் ஊகாரமும், இடமுஞ் செய்கையும் உகரத்தோடு அளவும் ஒத்தலின் அவற்றின் பின்னர் எகரமும், அதற்கினமாதலின் அதன்பின்னர் ஏகாரமும், பிறப்புஞ் செய்கையும் ஏகாரத்தோடு அளவும் ஒத்தலிற் றனக்கினமாகிய குற்றெழுத்தின்றேனும் அவற்றின் பின்னர் ஐகாரமும், இடனுஞ் செய்கையும் ஒத்தலின் அதன்பின்னர் ஒகரமும், அதற்கினமாதலின் அதன் பின்னர் ஓகாரமும், பிறப்புஞ் செய்கையும் வடிவும் ஓகாரத்தோடு அளவும் ஒத்தலிற் றனக்கினமாகிய குற்றெழுத்தின்றேனும் அவற்றின் பின்னர் ஔகாரமும் தம்முள் இயைய வைக்கப்பட்டன.

முதல் நாவும் முதலண்ணமும் உறப் பிறத்தலான் மெய்களின் முன்னர்க் ககரமும், அதற்கினமாதலின் அதன் பின்னர் ஙகரமும், இடை நாவும் இடை யண்ணமும் உறப் பிறத்தலானும் அளவானுங் ககரத்தோடு இடமொத்தலானும் அவற்றின் பின்னர்ச் சகரமும், அதற்கினமாதலின் அதன் பின்னர் ஞகரமும், நுனி நாவும் நுனி யண்ணமும் உறப் பிறத்தலானும் அளவானுஞ் சகரத்தோடு இடமொத்தலானும் அவற்றின் பின்னர் டகரமும், அதற்கினமாதலின் அதன் பின்னர் ணகரமும், நுனி நாவும் அண்பன் முதலும் உறப் பிறத்தலானும் அளவானும் டகரத்தோடு இடமொத்தலானும் அவற்றின் பின்னர்த் தகரமும், அதற்கினமாதலின் அதன் பின்னர் நகரமும், இதழ் இயையப் பிறத்தலானும் அளவானுந் தகரத்தோடு இடமொத்தலானும் அவற்றின் பின்னர்ப் பகரமும், அதற்கினமாதலின் அதன் பின்னர் மகரமும் தம்முள் இயைய வைக்கப்பட்டன.

வல்லெழுத்துக்களை முன்னாகக் கூறி, அவற்றிற் கினமொத்த மெல்லெழுத்துக்களை அவற்றின் பின்னாகக் கூறி, இடையெழுத் தாறனையும் அவற்றின் பின்னாகக் கூறினார், வல்லெழுத்துகள் நான்கும், மெல்லெழுத்துண் மூன்றும், இடையெழுத்துகள் இரண்டும், மொழிக்கு முதலாதல் நோக்கி யென்றுணர்க.

*இனமாவது யாது?*

தான முயற்சி யளவு பொருள்வடி
வானவொன் றாதியோர் புடையொப் பினமே.

(தானம் முயற்சி அளவு பொருள் வடிவு ஆன ஒன்று ஆதி ஓர்புடை ஒப்பு இனமே)

**இ–ள்.: தானம்** – பிறப்பிடமும், **முயற்சி** – தொழிலும், **அளவு** – மாத்திரையும், **பொருள்** – பொருளும், **வடிவு** – உருவமும், **ஆன ஒன்று ஆதி** – ஆகிய இவற்றுள் ஒன்று முதலாக, **ஓர் புடை ஒப்பு இனம்** – ஒருபுடை யொத்தல் இனமாம், **எ–று.**

*முதலெழுத்துக்கள் வருவதன் முறை யாது?*

**ஐ ஔ இஉச் செறிய முதலெழுத்**

**திவ்விரண் டோரின மாய்வரன் முறையே**

(ஐ ஔ இ உச் செறி அ; முதல் எழுத்து இவ்விரண்டு ஓர் இனமாய் வரல் முறையே)

**இ–ள்.: ஐ ஔ இ உச்செறி அ** – ஐகார ஔகாரங்கள் முறையே இகர உகரங்களைத் தழுவிய அகரமாம். ஆக, **முதல் எழுத்து இவ்விரண்டு ஓர்இனமாய் வரல்முறையே** – ஒழிந்த முதலெழுத்தெல்லாம் இவ்விரண்டோரினமாய் வருதன் முறையாம், **எ–று.**

அ இ = ஐ, அ உ = ஔ.

ஐகாரமும் ஔகாரமும் சந்தியக்கரங்களாதலின் அவையொழித்தொழிந்த முதலெழுத்தெல்லாம், பிறப்பிடம், தொழில், அளவு, பொருள், வடிவு என்னும் காரணங்கள் ஒன்றும் பலவும் ஒத்தல் பற்றி இவ்விரண்டோரினமாய் வருமெனக் கொள்க. இடையினமு மவ்வியல்பினவோ வெனின், உயிர்கள் போல மிடற்றுப் பிறந்த வாயு கண்ணுற்றடையப் பிறத்தலான் இடையெழுத்துக்களுள் முன்னர் யகரமும், அதற்கினமாதலின் அதன்பின்னர் ரகரமும், இடமும் அளவும் ஒத்தலானுஞ் சந்தவின்பத்திற்கு இடைபுடைமையானும் அவற்றின்பின்னர் லகரமும், அதற்கினமாதலின் அதன்பின்னர் வகரமும், இடமும் அளவும் வகரத்தோடு முயற்சியும் ஒத்தலானும் சந்தவின்பத்திற்கு இயைபுடைமையானும் அவற்றின்பின்னர் ழகரமும், அதற்கினமாதலின் அதன்பின்னர் ளகரமுமாக வருதலின் அவையும் இவ்விரண்டோரினமாம் என்க.

***எழுத்துக்களின் பிறப்பாவது யாது?***

**நிறையுயிர் முயற்சிய னுள்வளி துரப்ப**

**எழுமணுத் திரளுரங் கண்ட முச்சி**

**மூக்குற் றிதழ்நாப் பல்லணத் தொழிலின்**

**வெவ்வே றெழுத்தொலி யாய்வரல் பிறப்பே.**

(நிறை உயிர் முயற்சியின் உள்வளி துரப்ப

எழும் அணுத்திரள்; உரம் கண்டம் உச்சி

மூக்கு, உற்று, இதழ் நா பல் அணத் தொழிலின்

வெவ்வேறு எழுத்து ஒலியாய் வரல் பிறப்பு ஏ)

**இ–ள்.: நிறை உயிர் முயற்சியின்** – ஒலியெழுத்தாகிய காரியத்திற்கு வேண்டும் காரணங்களிற் குறைவின்றி நிறைந்த உயிரினது முயற்சியால், **உள்வளி** – உள்ளே நின்ற உதானன் என்னுங் காற்றானது, **துரப்ப** – எழுப்ப, **எழும்** – எழுகின்ற, **அணுத்திரள்** – செவிப்புலனா மணுக்கூட்டம், உரம் கண்டம் உச்சி மூக்கு மார்புங் கழுத்துந் தலையும் நாசியுமாகிய நான்கிடத்தையும், **உற்று** – பொருந்தி, **இதழ் நா பல் அணத்தொழிலின்** – உதடும் நாக்கும் பல்லும் மேல்வாயுமாகிய நான்கனுடைய முயற்சிகளால், **வெவ்வேறு எழுத்தொலியாய் வரல் பிறப்பு** – வேறு வேறு எழுத்தாகிய ஓசைகளாய்த் தோன்றுதல் அவற்றின் பிறப்பாம், **எ–று.**

*எழுத்துக்களின் பிறப்பிடங்களெவை?*

"உரங்கண்ட முச்சிமூக்கு"

*எவ்வுறுப்புக்களது தொழிலா லெழுத்துக்கள் பிறப்பன?*

"இதழ்நாப்பல்லணத் தொழிலின்"

*உதானன் என்னும் உள்வளி எதனாற் றொழிற்படும்?*

"நிறையுயிர் முயற்சியின்"

*அணுத்திரள் எதனாற் றொழிற் படுவன?*

'உள்வளிதுரப்ப எழும் அணுத்திரள்"

*முதலெழுத்துக்கள் எங்கே பிறப்பன?*

அவ்வழி

ஆவி யிடைமை யிடமிடறா கும்

மேவு மென்மைமூக் குரம்பெறும் வன்மை.

(அவ்வழி, ஆவி இடைமை இடம் மிடறு ஆகும்; மேவும் மென்மை மூக்கு; உரம்பெறும் வன்மை)

**இ—ள்.: அவ்வழி** – முன்சொன்ன வழியாற் பிறக்குமிடத்து, **ஆவி இடைமை இடம் மிடறு ஆகும்** – உயிரெழுத்துக்களுக்கும் இடையினத்திற்கும் இடம் கழுத்தாகும், **மென்மை மூக்கு மேவும்** – மெல்லினம் நாசியை இடமாகப் பொருந்தும், **வன்மை உரம்பெறும்** – வல்லினம் மார்பை இடமாகப் பெறும், எ—று.

*அவற்றுள் உயிரெழுத்தும் இடையெழுத்து மெங்கே பிறப்பன?*

**"அவ்வழி, ஆவி இடைமை இடம் மிடறாகும்"**

*மெல்லெழுத்தெங்கே பிறப்பன?*

**"மேவு மென்மை மூக்கு"**

*வல்லெழுத்தெங்கே பிறப்பன?*

**"உரம்பெறும் வன்மை"**

*அங்காத்தன் முயற்சியாற் பிறக்கும் எழுத்துக்கள் யாவை?*

**அவற்றுள்,**

**முயற்சியுள், அ ஆ வங்காப் புடைய**

(அவற்றுள்

முயற்சியுள் அ ஆ அங்காப்பு உடைய)

**இ—ள்.: அவற்றுள்** – மேலே இடம் வகுக்கப்பட்ட முதலெழுத்துக்களுள், **அ ஆ** – அ ஆ இரண்டும், **முயற்சியுள்** – நால்வகை முயற்சியுள், **அங்காப்பு உடைய** – அண்ணத்தின் றொழிலாகிய அங்காத்தலை யுடையனவாய்ப் பிறக்கும், எ—று.

***இ ஈ எ ஏ ஐ எம்முயற்சியாற் பிறக்கும்?***

**இ ஈ எ ஏ ஐ அங் காப்போ**

**டண்பன் முதனா விளிம்புற வருமே.**

(இ ஈ எ ஏ ஐ அங்காப்பு ஒடு

அண்பல் முதல்நா விளிம்பு உற வருமே)

**இ—ள்.: இ ஈ எ ஏ ஐ** — இ ஈ எ ஏ ஐ ஐந்தும், **அங்காப்போடு** — அங்காப்புடனே, **அண்பல் முதல்நா விளிம்பு உற வருமே** — மேல் வாய்ப்பல்லை நாக்கடியினது ஓரமானது பொருந்தப் பிறக்கும், எ—று.

*உ ஊ ஒ ஓ ஔகாரங்கள் பிறத்தற்கு முயற்சி யாது?*

**உ ஊ ஒ ஓ ஔவிதழ் குவிவே.**

(உ ஊ ஒ ஓ ஔ இதழ் குவிவு ஏ)

**இ—ள்.: உ ஊ ஒ ஓ ஔ** — உ ஊ ஒ ஓ ஔ ஐந்தும் பிறத்தற்கேதுவாகிய முயற்சி, **இதழ் குவிவு** — உதடுகள் குவிதலாம், எ—று.

*க ங வும் ச ஞவும் ட ணவும் எவ்வாறு பிறக்கும்?*

**க ங வுஞ் ச ஞ வும் டணவு முதலடை**

**நுனிநா வண்ண முறமுறை வருமே**

( க ங வும், ச ஞ வும் ட ண வும் முதல் இடை

நுனிநா அண்ணம் உற முறைவருமே)

**இ—ள்.: க ங நா முதல் அண்ண முதல்** — கவ்வும் ஙவ்வும் நாக்கினடி மேல்வாயடியையும், **சஞநாவிடை அண்ணவிடை** — சவ்வும் ஞவ்வும் நாக்கினடு மேல்வாய்நடுவையும், **டண நாநுனி அண்ண நுனி** — டவ்வும் ணவ்வும் நாக்கின்கடை மேல் வாய்க்கடையையும், **உற முறைவருமே** — பொருந்த இம்முறையே பிறக்கும், எ—று.

*க ஙக்கள் எம் முயற்சியாற் பிறக்கும்?*

**"க ங முதனா (முதல்) அண்ண முறவருமே"**

*ச ஞக்கள் எம் முயற்சியாற் பிறக்கும்?*

**"ச ஞ இடைநா (இடை) அண்ண முறவருமே"**

*ட ணக்கள் எம் முயற்சியாற் பிறக்கும்?*

**"நுனிநா (நுனி) அண்ண முறவருமே"**

*த நக்கள் எம்முயற்சியாற் பிறக்கும்?*

**அண்பல் லடிநா முடியுறத் தநவரும்.**

(அண்பல் அடி நாமுடி உறத் தநவரும்)

**இ—ள்.: அண்பல் அடி** — மேல்வாய்ப் பல்லினது அடியை, நாமுடி உற — நாக்கு நுனி பொருந்த, **த ந வரும்** — தவ்வும் நவ்வும் பிறக்கும், எ—று.

ப மக்க ளெ.ம்முயற்சியாற் பிறக்கும்?

**மீகீழி தழுறப் பம்மப் பிறக்கும்.**

(மீகீழ் இதழ்உறப் பம்மப் பிறக்கும்)

**இ—ள்.: மீ கீழ் இதழ் உற** — மேலுதடுங் கீழுதடும் பொருந்த, **பம்மப் பிறக்கும்** — பவ்வும் மவ்வும் பிறக்கும், எ—று.

*யகர மெம் முயற்சியாற் பிறக்கும்?*

**அடிநா வடியண முறயத் தோன்றும்**

(அடிநா அடிஅணம் உற யத் தோன்றும்)

**இ–ள்.: நா அடி அண அடி உற** – நாக்கினடியானது மேல்வாயடியைப் பொருந்த, **ய தோன்றும்** – யகரமானது பிறக்கும், **எ–று.**

*ரழக்க ளெம்முயற்சியாற் பிறக்கும்?*

அண்ண நுணிநா வருட ரழவரும்.

( அண்ணம் நுனிநா வருட ரழவரும்)

**இ–ள்.: அண்ணம் நுனிநா வருட** – மேல்வாயை நாக்கு நுனியானது தடவ, **ர ழ வரும்** – ரவ்வும் ழவ்வும் பிறக்கும், **எ–று.**

*லகர ளகரம் எம்முயற்சியாற் பிறக்கும்?*

**அண்பன் முதலு மண்ணமு முறையின்**

**நாவிளிம்பு வீங்கி யொற்றவும் வருடவும்**

**லகார ளகாரமா யிரண்டும் பிறக்கும்.**

(அண்பல் முதலும் அண்ணமும் முறையின்

நாவிளிம்பு வீங்கி ஒற்றவும் வருடவும்

லகார ளகாரமாய் இரண்டும் பிறக்கும்)

**இ–ள்.: அண்பல் முதல் நாவிளிம்பு வீங்கி ஒற்ற லகாரமாய்** – மேல் வாய்ப் பல்லடியை நாவோரமானது தடித்து நெருங்க லகாரமாகியும், **அண்ணம் நா விளிம்பு வீங்கி வருட ளகாரமாய்** – மேல்வாயை நாவோரமானது தடித்துத் தடவ ளகாரமாகியும், **இரண்டும் பிறக்கும்** – இரண்டெழுத்துக்களும் இம் முறையே பிறக்கும், **எ–று.**

லகரம் எம்முயற்சியாற் பிறக்கும்?

"அண்பல் முதல் நாவிளிம்பு வீங்கி யொற்ற

லகாரம் பிறக்கும்"

ளகார மெம்முயற்சியாற் பிறக்கும்?

"அண்ணம் நாவிளிம்பு வீங்கி வருட ளகாரம் பிறக்கும்.

*வகார மெம்முயற்சியாற் பிறக்கும்?*

மேற்பல் லிதழுற மேவிடும் வவ்வே.

(மேற் பல் இதழ் உற மேவிடும் வவ்வே)

**இ–ள்.: மேற்பல் இதழ் உற** – மேல்வாய்ப்பல்லைக் கீழுதடு பொருந்த, **வவ் மேவிடும்** – வகரமானது பிறக்கும், **எ–று.**

**ற ன எம்முயற்சியாற் பிறக்கும்?**

**அண்ண நுனிநா நனியுறிற் றனவரும்.**

(அண்ணம் நுனிநா நனியுறில் றனவரும்)

**இ–ள்.: அண்ணம் நுனிநா நனிஉறில்** – மேல்வாயை நாக்குநுனி மிகப் பொருந்தின், **றனவரும்** – றவ்வும் னவ்வும் பிறக்கும், **எ–று.**ஆய்தத்திற்கும்

சார்பெழுத்திற்கும் பிறப்பிடமும் முயற்சியுங் கூறுஞ் சூத்திரம் யாது?

**ஆய்தக் கிடந்தலை யங்கா முயற்சி**

**சார்பெழுத் தேனவுந் தம்முதலனைய**

(ஆய்தக்கு இடம் தலை, அங்கா முயற்சி சார்பெழுத்து ஏனவுந் தம் முதல் அனைய)

**இ–ள்.: ஆய்தக்கு இடம் தலை** – ஆய்தம் பிறத்தற்கு இடம் தலை, **முயற்சி அங்கா** – தொழில் வாயைத் திறத்தலாம், **சார்பெழுத்து ஏனவும் தம் முதல் அனைய** – சார்ந்து வருவனாகிய ஒழிந்த எழுத்துகளின் பிறப்பும் இடப் பிறப்பு முயற்சியுப் பிறப்புகளினாலே தத்தம் முதலெழுத்துகளை ஒப்பனவாம்,எ – **று**.

சார்பெழுத்துக்குப் பிறப்பிடமும் முயற்சியும் தத்தம் முதலெழுத்துக்குரிய பிறப்பிடமும் முயற்சியுமே யாமென்றபடி.

ஆய்தத்திற்குப் பிறப்பிடம் யாது?

" ஆய்தக்கிடந்தலை"

ஆய்த மெம்முயற்சியாற் பிறக்கும்?

" அங்கா முயற்சி"

மற்றைச் சார்பெழுத்துக்களுக்கு இடமும் முயற்சியும் யாவை?

" தம் முதலனைய"

**மேலே கூறப்பட்ட பிறப்புக்குப் புறனடை யாது?**

**எடுத்தல் படுத்த னலித லுழப்பில்**
**திரிபுந் தத்தமிற் சிறிதுள வாகும்.**

(எடுத்தல் படுத்தல் நலிதல் உழப்பில்
திரிபும் தத்தமில் சிறிது உள ஆகும்.)

**இ–ள்**. பலவெழுத்திற்குப் பிறப்பு ஒன்றாகச் சொல்லப்பட்டன வெனினும்,**எடுத்தல்** – உயர்த்திக் கூறுதலும், **படுத்தல்** – தாழ்த்திக் கூறுதலும் ஆகிய, **உழப்பின்** – எழுத்திற்குரிய ஒலி முயற்சியால், **திரிபும்** – ஒன்றற்கொன்று பிறப்பு வேறுபாடுகளும், **தத்தமில்** – அவ்வற்றின்கண்ணே, **சிறிது உள ஆகும்** – சிறிது சிறிது உள்ளனவாகும், எ – **று**.

அவ்வேறுபாடுக ளெவைகளாலுண்டாகும்?

"எடுத்தல் படுத்தல் நலிதலுழப்பின்"

***உயிர்மெய் வருமாறு கூறுஞ் சூத்திரம் யாது?***

**புள்ளிவிட் டவ்வொடு முன்னுரு பாகியும்**

**ஏனை யுயிரோ டுருபு திரிந்தும்**

**உயிரள பாயதன் வடிவொழித் திருவயிற்**

**பெயரொடு மொற்றுமுன் னாய்வரு முயிர்மெய்**

(புள்ளி விட்டு அவ்வொடு முன் உருவு ஆகியும்

ஏனை உயிரோடு உருபு திரிந்தும்

உயிர் அளபு ஆய் அதன் வடிவு ஒழித்து இரு வயின்

பெயரொடும் ஒற்று முன் ஆய் வரும் உயிர்மெய்.)

**இ – ள். புள்ளி விட்டு** – மெய் புள்ளியை விட்டு, **அவ்வொடு** – அகரத்தோடு கூடிய வழி, **முன் உரு ஆகியும்** – அவ் விட்ட உருவே உருவாகியும்,**ஏனை உயிரோடு** – அஃகொழிந்த உயிர்களோடு கூடிய வழி, **உருபு திரிந்தும்** – உருவு வேறுபட்டும், **உயிர் அளபு ஆய்** – தன் மாத்திரை தோன்றாது உயிர் மாத்திரையே மாத்திரையாய், **அதன் வடிவு ஒழித்து** – தன் வரிவடிவின் விகார வடிவே வடிவாய் உயிர் வடிவை யொழித்து, **இரு வயின் பெயரொடும்** – உயிரும் மெய்யுமாகிய இரண்டிடத்தும் பிறந்த உயிர்மெய் யென்னும் பெயருடனே,**ஒற்று முன் ஆய் வரும் உயிர்மெய்** – ஒற்றொலி முன்னும் உயிரொலி பின்னுமாகி உயிர்மெய்யெழுத்து வரும், **எ – று.**

மெய்யெழுத்துப் புள்ளியின்றித் தன்வடிவோடு நிற்பதெவ்விடத்து?

க் + அ = க, ச் + அ = ச என அகரத்தோடு கூடுமிடத்து.

உருவு திரிவதெவ்விடத்து?

க் + ஆ = கா, க் + இ = கி என மற்றை உயிர்களோடு கூடுமிடத்து.

**ஆய்த மெவ்வெழுத்தைச் சார்ந்து வரும்?**

**குறியதன் முன்ன ராய்தப் புள்ளி**

**உயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே.**

(குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி

உயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே)

**இ – ள். ஆய்தப்புள்ளி** – புள்ளி வடிவினதாகிய ஆய்தம், **குறியதன் முன்னர்** – குற்றெழுத்தின் முன்னதாய்,**உயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்து** – உயிரொடு கூடிய வல்லெழுத்தாறனுள் ஒன்றன் மேலதாய் வரும், **எ – று.**

**உ – ம்.**

எஃகு, கஃசு, இருபஃது, பஃறி.

*எனவே முற்றாய்தம் எத்தனை?*

வல்லின வகையான் வரும் ஆய்தம் ஆறு.

அவ் + கடிய – அஃகடிய எனத் திரிதலென்னும் புணர்ச்சி விகாரத்தான்வருமாய்த மொன்று.

அ + கான் – அஃகான் என விரித்தலென்னும் செய்யுள் விகாரத்தான் வரும் ஆய்தம் ஒன்று. ஆக **முற்றாய்தமெட்டு.**

*உயிரளபெடையாவன யாவை ?*

**இசைகெடின் மொழிமுத லிடைகடை நிலைநெடில்**

**அளபெழு மவற்றவற் றினக்குறில் குறியே.**

(இசை கெடின் மொழி முதல் இடை கடை நிலை நெடில்

அளபெழும் அவற்று அவற்று இனக் குறில் குறியே.)

**இ – ள். இசைகெடின் மொழிமுதல் இடை கடை நிலைநெடில் அளபு எழும்** – பாட்டில் ஓசை குறையின் மொழிக்கு முதலிலும் நடுவிலும் இறுதியிலும் நின்ற நெட்டெழுத்தேழும் அவ்வோசையை நிறைக்கத் தத்தம் மாத்திரையின் மிக்கொலிக்கும், **அவற்று அவற்று இனக்குறில் குறியே** – அப்படி யளபெடுத்தமையை அறிதற்கு அவற்றின் பின் அஃததற்கு இனமாகிய குற்றெழுத்துக்கள் வரிவடிவில் அறிகுறியாய் வரும், எ – று.

**உ–ம்.**

*ஓஒதல் வேண்டும் மொளிமாழ்குஞ் செய்வினை*
*யாஅது மென்னுவர்*

எனவும் ,

*உறாஅர்க் குறுநோய் உரைப்பாய் கடலைச்*
*செறாஅஅய் வாழிய நெஞ்சு*

எனவும்,

*அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு நல்ல படாஅ பறை*

எனவும் வரும்.இவற்றுள், ஓதல் என்பதில் ஓ வென்னும் நெட்டெழுத்து மொழிக்கு முதலிலும்,உறார் என்பதில் ஆவென்னு நெட்டெழுத்துக் கடையிலும் அளபெடுத்த வாறு காண்க.செறாய் என்பதில் ஆவென்னு நெட்டெழுத்து ஈரளபெடுத்து வந்தது.

*அளபெடையென்பதன் பொருள் யாது?*

அளபு – மாத்திரை. எடை – எடுத்தல். ஒலியளவில் நீண்டு ஒலித்தல்.

*இவ்வளபெடைகளே யன்றி வேறு அளபெடைகளு முளவோ?*

செய்யுளோசை குன்றாவிடத்தும் இன்னிசை நிறைக்கவுஞ் சொல்லிசை நிறைக்கவும் வரும் அளபெடைகளும் உண்டு.

இன்னிசை நிறைக்க வரும் அளபெடையாவது யாது?

இன்னிசை நிறைக்க வரும் அளபெடையாவது குற்றெழுத்து நெட்டெழுத்தாக நீண்டு இன்னிசை நிறைத்தற் பொருட்டு அளபெடுப்பது.

சொல்லிசை நிறைக்க வரும் அளபெடையாவது யாது?

சொல்லிசை நிறைக்க வரும் அளபெடையாவது பெயர்ச்சொல் வினையெச்சச் சொல்லின் இசையை நிறைத்தற் பொருட்டு அளபெடுப்பது.

*கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே*
*எடுப்பதூஉம் எல்லாம் மழை*

இதனுள்,கெடுப்பதும் எடுப்பதும் என நிற்பினும் செய்யுளோசை குன்றாதாயினும்,இன்னிசை நிறைத்தற் பொருட்டுக் குறில் நெடிலாய் அளபெடுத்தமை காண்க.

*உரனசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்*
*வரனசைஇ இன்னும் உளேன்*

இதனுள், உரனசை வரனசை என நிற்பினுஞ் செய்யுளோசை குன்றாதாயினும், விருப்பமெனப் பொருள்படும் நசையென்னும் பெயர்ச்சொல், விரும்பியென வினையெச்சப் பொருள்படும் பொருட்டு வினையெச்சச் சொல்லாதற்கு நசைஇ என அளபெடுத்தமை காண்க.

உயிரளபெடை எதனாலிருபத்தொன்றாயின?

நெட்டெழுத்து ஏழும் மொழிக்கு முதல் இடை கடை என்னும் மூன்றிடத்தும் அளபெடுக்கும் எனவே உயிரளபெடை இருபத்தொன்றாதல் பெறப்படும்.ஔகாரம் மொழிக்குநடுவிலும் கடையிலும் வாராமையால் அவ்விரண்டும் கழிக்க நின்ற உயிரளபெடை பத்தொன்பது.அப்பத்தொன்பதொடுஇன்னிசை நிறைக்க வரும் அளபெடை, சொல்லிசை நிறைக்க வரும் அளபெடை என்னும் இரண்டும் கூட்ட உயிரளபெடை இருபத்தொன்றாதல் காண்க.

உயிரளபெடைக்கு வரிவடிவில் வரும் அறிகுறி யாவை ?

அவற்றவற்றின் இனக் குறில்குறியே

*ஒற்றளபெடையாவன யாவை?*

**ங ஞ ண ந ம ன வ ய ல ள வாய்தம்**
**அளபாங் குறிலிணை குறிற்கீ ழிடைகடை**
**மிகலே யவற்றின் குறியாம் வேறே.**

(ங ஞ ண ந ம ன வ ய ல ள ஆய்தம் அளபு ஆம் குறில்இணை குறிற்கீழ் இடைகடை; மிகலே அவற்றின் குறி ஆம் வேறே)

**இ–ள்.:** (இசைகெடின்) **குறில் இணைகுறிற்கீழ் இடைகடை ங ஞ ண ந ம ன வ ய ல ள ஆய்தம் அளபு ஆம்** –பாட்டில் ஓசைகுறையின், குறிலிணையின் கீழுங் குறிலின் கீழும் மொழிக்கு நடுவிலுங் கடையிலும் நின்ற ஙம்முதலிய இப்பத்தும் ஆய்தமுமாகிய பதினோரெழுத்தும் அவ்வோசையை நிறைக்கத் தத்தம் மாத்திரையின் மிக்கொலிக்கும், **அவற்றின் குறிவேறு மிகல் ஆம்** – அப்படி அளபெடுத்தமையை அறிதற்கு அவற்றின்பின் அவ்வெழுத்துக்களே வரிவிடிவில் வேறறிகுறியாய் வரும், **எ–று.**

**உ–ம்.:**

இலங்ங்கு வெண்பிறைசூ டீசனடி யார்க்குக்
கலங்ங்கு நெஞ்சமிலை காண்''

எனவும்,

''எங்ங் கிறைவனுள னென்பாய் மனனேயா
னெங்ங் கெனத்திரிவா ரின்''

எனவும்,

''மடங் கலந்த மனனே களத்து
விடங்ங் கலந்தானை வேண்டும்''

எனவும்,

அங்ங் கனிந்த வருளிடத்தார்க் கன்புசெய்து
நங்ங் களங்கறுப்பா நாம்

எனவும் வரும். இவற்றுள், இலங்கு என்பதிற் குறிலிணைக் கீழிடையிலும், எங்கு என்பதிற் குறிற்கீழிடையிலும் ஙகரம் அளபெடுத்தது. மடம் என்பதிற் குறிலிணைக் கீழ்க்கடையிலும் நம் என்பதிற் குறிற்கீழ்க்கடையிலும் மகரந்திரிந்த ஙகரம் அளபெடுத்தது.

*விலஃஃகி வீங்கிரு ளோட்டுமே மாத*
*ரிலஃஃகு முத்தி னினம்*
*எஃஃகிலங்கிய கையரா யின்னுயிர்*
*வெஃஃகு வார்க்கில்லை வீடு*

இவற்றுள் விலஃகி என்பதிற் குறிலிணைக் கீழிடையிலும், எஃகு என்பதிற் குறிற்கீழிடையிலும் ஆய்தம் அளபெடுத்தது. "முரஞ்ஞ்சு" "முரண்ண்டு", "பருந்ந்து", "அரும்ம்பு", "முரன்ன்று", "குரவ்வ்வை" "அரய்ய்யர்", "கல்ல்லன்ன" "கொள்ள்ளென்று" எனவும் வரும்.

*குற்றியலிகரமாவன யாவை ?*

**யகரம் வரக்குற ளுத்திரி யிகரமும்**
**அசைச்சொன் மியாவி னிகரமுங் குறிய.**

(யகரம் வரக் குறள் உத் திரி இகரமும்
அசைச் சொல் மியாவின் இகரமும் குறிய.)

**இ – ள்.யகரம் வரக் குறள் உத் திரி இகரமும்** – யகரத்தை முதலிலே உடைய சொல் வரக் குற்றியலுகரந் திரிந்த இகரமும்,**அசைச் சொல் மியாவின் இகரமும் குறிய** – அசைச்சொல்லாகிய மியாவென்பதின் மகரத்தின் மேலிருக்கிற இகரமும் குற்றியலிகரங்களாகும்.

**உ – ம்.**

நாகு + யாது = நாகியாது, எஃகு + யாது =எஃகியாது, வரகு + யாது =வரகியாது, கொக்கு + யாது = கொக்கியாது,

குரங்கு + யாது =குரங்கியாது, தெள்கு + யாது = தெள்கியாது எனவும், கேண்மியா எனவும் வரும்.

*குற்றியலிகரம் முப்பத்தேழாதல் எங்ஙனம் ?*

பொதுப்படக் கூறிய குற்றியலுகரம் முப்பத்தாறினாலும் அசைச்சொல் மியாவினாலுங் குற்றியலிகரம் முப்பத்தேழாதல் காண்க.

*குற்றியலுகரமாவது யாது?*

**நெடிலோ டாய்த முயிர்வலி மெலியிடை**
**தொடர்மொழி யிறுதி வன்மையூ ருகரம்**
**அஃகும் பிறமேற் றொடரவும் பெறுமே.**

(நெடிலோடு ஆய்தம் உயிர் வலி மெலி இடை
தொடர்மொழி இறுதி வன்மை ஊர் உகரம் அஃகும் பிற மேல் தொடரவும் பெறுமே.)

**இ – ள். நெடிலோடு** – தனி நெடிலுடனே. **ஆய்தம்** – ஆய்த மொன்றும், **உயிர்** – சொல்லுக்கு நடுவிலும் கடையிலும் வாராத ஔகாரம் நீங்கிய உயிர் பதினொன்றும், **வலி** – வல் லெழுத்தாறும், **மெலி** – மெல்லெழுத்தாறும், **இடை**

– வல் லெழுத்துக்களோடு தொடராத வகர நீங்கிய இடையெழுத் தைந்தும் ஆகிய முப்பத்தாறுனுள் ஒன்றினாலே. **தொடர்** – ஈற்றுக்கு அயலெழுத்தாகத் தொடரப்பட்டு.**மொழி இறுதி வன்மை ஊர் உகரம்** – சொல்லின் இறுதியில் வல்லெழுத்துக் களுள் யாதாயினும் ஒன்றன் மேல் ஏறிவரும் உகரமானது. **அஃகும்** – தன் மாத்திரையிற் குறுகும். **பிற மேல் தொடரவும் பெறும்** – இவற்றுள் ஆய்தத் தொடர் முதலிய ஐந்து தொடரும். வன்மை யூருகரத்தை ஈற்றயலெழுத்துத் தொடர்தலே யின்றிப் பிறவெழுத்துக்களுள் ஒன்றும் பலவும் அவ்வீற்றயலெழுத்தின் மேலே தொடரவும் பெறும். எ – று.

*நெடிலோடு என நெடிலை ஓடு கொடுத்துப் பிரித்தது யாது பற்றி?*

நெடிலோடு என நெடிலை ஓடு கொடுத்துப் பிரித்தார்.பிற மேற்றொடர்தல் அதற்கில்லை யென்பது தோன்றுதற் கென்க.பிறமேற் தொடரின் உயிர்த்தொடர் எனப்படும்.உயிரென்றது குறில் நெடில் இரண்டையும்.

**உ – ம்.**

**(1) நாகு. காசு. நீறு** என்பன நெடிற்றொடர்க் குற்றியலுகரம்.

**(2) எஃகு. கஃசு. இருபஃது** என்பன ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம்.

**(3) வரகு. பலாசு. கயிறு. போவது. ஒன்பது. இரும்பூது** என்பன உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்.

**(4)கொக்கு. கச்சு. பற்று. பின்னாக்கு. விளையாட்டு.குருத்து** என்பன வன்றொடர் குற்றியலுகரம்.

**(5)கங்கு.பஞ்சு.அம்பு.கன்று. பட்டாங்கு. சுண்ணாம்பு** என்பன மென்றொடர்க் குற்றியலுகரம்.

**(6)வெய்து.சால்பு.தெள்கு** என்பன இடைத்தொடர்க் குற்றியலுகரம்.

மொழிந்த பொருளோடொன்ற வவ்வயின் மொழியா தாதனையுமுட்டின்று முடித்தலென்னு முத்தியால். நுந்தை யென்னு முறைப்பெயரின் முன்னின்ற நகரமெய்யின் மேல் ஏறி நின்கும் உகரமும் குறுகு மெனக் கொள்க.

*நெடிற்றொடர்க் குற்றியலுகர மொழி எத்தனை எழுத்துமொழி?*

அதுமாத்திரம்.'நெடுலொடு' என்றமையான் ஈரெழுத்து ஒருமொழியாம்.

*குற்றியலுகர மெதனால் முப்பத்தாறாயின?*

தனிநெடிற்றொடர் ஏழும்.ஆய்த்தொடரொன்றும்.நடுவிலும் கடையிலும் வாராத ஔகார மொழித்தொழிந்த உயிர் பதினொன்றும் வன்றொடர் ஆறும். மென்றொடராறும். வல்லெழுத்துக்களோடு தொடராத வகரம் ஒழிந்த இடையெழுத் தைந்தும் ஆகிய ஆறு தொடர்களானுங் கூடிய முப்பத்தாறுங் குற்றியலுகரமாம்.

*இவற்றை விட வேறு குற்றியலுகரமுண்டோ?*

நுந்தை யென்னு முறைப்பெயரிலே நகரத்தின் மேலிருக்கும் உகரமாம்.

*உயிரெழுத்தினது குறுக்கம் உயிரேயாகவும்.குற்றியலுகரமும் குற்றியலிகரமும் சார்பெழுத்தினுள் வைக்கப்பட்டது யாது பற்றி?*

புணர்ச்சி வேற்றுமையானும்,பொருள் வேற்றுமையானும், சீருந் தளையுஞ் சிதையுமிடத்து அலகு பெறாமையானும்,அவை உயிரின் வேறாய்ச் சார்பெழுத்தெனப்பட்டன.

*ஐகார ஒளகார குறுக்கங்கள் வருமிடங் கூறுஞ் சூக்கிரம் யாது ?*

**தற்சுட் டளபொழி யைம்மூ வழியும்**

**நையு மௌவு முதலற் றாகும்.**

(தன் சுட்டு அளபு ஒழி ஐம் மூ வழியும்
நையும் ஔவும் முதல் அற்று ஆகும் )

**இ – ள். தற் சுட்டு அளபு ஒழி ஐ** – தன்னைச் சுட்டுதற் கண்ணும் அளபெடுத்தற்கண்ணும் அல்லாத வழி வந்த ஐகாரம், **மூ வழியும் நையும்**– – சொல்லுக்கு முதலிடை கடைகளிலே எங்கே நிற்பினும் தன் மாத்திரையிற் குறுகும், **ஔவும் முதல் அற்று ஆகும்** – ஔகாரமும் அவ்வாறே தன் பெயர் சொல்லுதற் கண்ணும் அளபெடைக்கண்ணும் குறுகாது சொல்லுக்கு முதலிலே தன் மாத்திரையிற் குறுகும், **எ—று.**

**உ – ம்.**

ஐப்பசி, இடையன், குவளை, எனவும்,

மௌவல் எனவும் வரும்.

தன்பெயர் குறியாது பொருள் குறித்து வரும் ஐ, மை, கை, வௌ என்பனவும் குறுகும்.

*ஐகாரக்குறுக்கம் எங்கே வரும் ?*

தற்சுட் டளபொழி யைம்மூ வழியும் நையும்.

*ஐகாரக்குறுக்கம் எதனால் மூன்றாயின ?*

மொழிக்கு முதலிடை கடையாகிய மூன்றிட வகையாலும் வருதலின் மூன்றாயின.

*ஔகாரக்குறுக்கம் எங்கே வரும் ?*

ஔவு முதலற் றாகும்.

*ஔகாரக்குறுக்கம் எதனால் ஒன்றாயது ?*

மொழிக்கு இடை கடையில் வாராது முதலில் மாத்திரம் வருதலால் ஒன்றாயிற்று.

*ஐகார ஔகாரங்கள் எங்கே குறுகா ?*

'தற்சுட்டு அளபு ஒழி' என்றதனால்,தம்பெயர் சொல்லுமிடத்தும் அளபெடைக் கண்ணும் குறுகா.

***மகாரக்குறுக்கம் எங்கே வரும் ?***

**ணனமுன்னும் வஃகான் மிசையுமக் குறுகும்.**

(ண ன முன்னும் வஃகான் மிசையும் மக் குறுகும்.)

**இ – ள். ண ன முன்னும்** – ணகர னகரங்களில் ஒன்று நின்று தொடர அதன் முன் வரினும், **வஃகான் மிசையும்** – வகரம் வந்து தொடர அதன்மேல் நிற்பினும், **ம குறுகும்** – மகரம் தன் மாத்திரையிற் குறையும், எ – று.

*மகாரக்குறுக்கம் எதனான் மூன்றாயின ?*

இட வகையான் மூன்றாயின.

*ஆய்தக்குறுக்கம் எங்கே வரும்?*

லளவீற் றியைபினா மாய்த மஃகும்

(ல ள ஈற்று இயைபின் ஆம் ஆய்தம் அஃகும்)

**இ – ள்.ல ள ஈற்று இயைபின் ஆம் ஆய்தம்** – லகார ளகாரவீற்றுப் புணர்ச்சியில் ஆகின்ற ஆய்தம், **அஃகும்** – தன்னரை மாத்திரையிற் குளுகும், எ – று.

**உ – ம்.**

கல் + தீது = கஃறீது

முள் + தீது = முஃடீது

என வரும்.

*ஆய்தக் குறுக்கம் எதனாலிரண்டாயின?*

இடவகையால் இரண்டாயின.

**உருவங் கூறுஞ் சூத்திரம் யாது?**

**தொல்லை வடிவின வெல்லா வெழுத்துமாண்**

**டெய்து மெகர மொகரமெய் புள்ளி.**

(தொல்லை வடிவின எல்லா எழுத்தும் ஆண்டு
எய்தும் எகர ஒகர மெய் புள்ளி.)

**இ - ள். எல்லா எழுத்தும் தொல்லை வடிவின** - எல்லா வெழுத்துக்களும் நெடுங்கணக்கினுள் எழுதப்பட்டு வருகின்ற பழைய வடிவினை யுடையவாம். **ஆண்டு எகர ஒகரம் மெய் புள்ளி எய்தும்**-அவ்வடிவை யுடையனவாய் வழங்குமிடத்து எகர மும் ஒகரமும் மெய்களும் மேற் புள்ளியைப் பெறும். **எ – று.**

எல்லா எழுத்தும் நெடுங்கணக்கில் எழுதப்பட்டு வரும் பண்டை வடிவினையே வடிவாகவுடையன. நெடுங்கணக்கில் வரும் பண்டை வடிவாவது. உயிரெழுத்துப் பன்னிரண்டும் மெய்யெழுத்துப் பதினெட்டும் ஆகிய முதலெழுத்துக்கள் முப்பதும்.தம்முட் புள்ளிபெறற்பாலன உளவாகவும் புள்ளியின்றி எழுதப்பட்டு வரும் வடுவாம். இந்நூலுள்ளும்.

கம்முதன் மெய்ம் மூவாறென விளம்பினர் புலவர்

எனவும்.

வல்லினங் கசடதபற வெனவாறே

எனவும் புள்ளியின்றி வழங்கப்பட்டவாறு காண்க.

புள்ளியும் தொல்லை வடிவேயாயினும் எகர ஏகாரங்கட்கும்,ஒகர ஓகாரங்கட்கும் தனிமெய் அகரமேறிய மெய்கட்கும் வடிவொப்புமை நோக்கி, அவை தம்முள் வேற்றுமை யெடுத்துக் கூறி அதனை வலியுறுத்து முகத்தான் அவ்வழக்கின்கண் மாணாக்கரை நிறுத்துமாறே,

ஆண்டெய்து மெகரவொகரமெய் புள்ளி

என்றாரெனக் கொள்க.முற்காலத்தார் எகரத்துக்கிட்ட புள்ளியை

இக்காலத்தார் விட்டுப் புள்ளியில்லாத வடிவினையுடைய எ (ஏகாரத்தை ) எ என இவ்வாறு திரித்து எழுதுவர்.ஒ ஓவும் அப்படியே.

உ – ம்.

எரி,எரி (ஏரி),ஒடு,ஒடு (ஓடு),கெண்டை,கெழல் (கேழல்),கொண்டல், கொடை (கோடை),உல்கு, உலகு என எகரமும்ஒகரமும் தனிமெய்யும் புள்ளி பெற்று நின்றவாறு காண்க.

முன்னே 'புள்ளி விட்டவ்வொடு' என்னுஞ் சூத்திரத்தில் உருவு திரிந்துமெனக் மைறியது வருமாறு

தனிமெய்கள் மற்றைய உயிர்களோடு கூடுமிடத்து மேலும் கீழும் விலங்கு பெற்றுங்,கோடு பெற்றும்,புள்ளி பெற்றும், புள்ளியும் கோடுமுடன் பெற்று முருவந்திரியும்.கி,கூ முதலியன கீழ்விலங்கு பெற்றன.கெ,கே முதலியன கோடு பெற்றன.கா,ஙா முதலியன புள்ளி பெற்றன. அருகே பெற்ற புள்ளியைப் பிற்காலத்தார் காலாக வெழுதினர். மகரத்திலுமிரண்டு புள்ளியுள் உட்பெறு புள்ளியை வளைத்தெழுதினர்.கொ,கோ,ஙொ,ஙோ முதலியன புள்ளியுங் கோடு முடன் பெற்றன.

ககர எகரத்தினது பண்டை வடிவு – ĺ க .

ககர எகரத்தினது புதிய வடிவு – கெ

ககர ஏகாரத்தினது பண்டை வடிவு – 1 க

ககர ஏகாரத்தினது புதியபண்டை வடிவு – கே

கா ஙா முதலியவற்றின் பண்டை வடிவு – க0, ங0

இவையே புள்ளி பெற்றன வெனப்பட்டன.

இப் புள்ளியைப் பிற்காலத்தார் – ா – இப்படிக் காலாக்கினர்

ககர ஒகரத்தினது பண்டை வடிவு – ĺ க0

ககர ஒகரத்தினது புதிய வடிவு – கொ

ககர ஓகாரத்தினது பண்டை வடிவு – 1 க0

ககர ஓகாரத்தினது பண்டை வடிவு – கோ

இவையே புள்ளியுங் கேடுங் உடன் பெற்றனவாம்.

எழுத்துக்களுக்கு மாத்திரைக் கூறும் சூத்திரம் யாது ?

மூன்றுயி ரளபிரண் டாநெடி லொன்றே குறி லோ
டையௌக் குறுக்க மொற்றள பரையொற் றிஉக் குறுக்க
மாய்தம் கால்குறண் மஃகா னாய்த மாத்திரை.

(மூன்று உயிர் அளபு இரண்டா நெடில் ஒன்றே
குறிலோடு ஐ ஔக் குறுக்கம் ஒற்று அளபு
அரை ஒற்று இ உக் குறுக்கம் ஆய்தம்
கால் குறள் மஃகான் ஆய்த மாத்திரை.)

இ - ள். - **உயிர் அளபு** ( மாத்திரை ) **மூன்று** - உயிரளபெடைக்கு மாத்திரை மூன்றாம்.**நெடில்**( மாத்திரை ) **இரண்டு ஆம்** - நெட்டெழுத்திற்கு மாத்திரை இரண்டாம். **குறிலோடு ஐ ஔக் குறுக்கம் ஒற்று அளபு** (மாத்திரை) **ஒன்றே** - குற்றெழுத்திற்கும் ஐகாரக் குறுக்கத்திற்கும் ஔகாரக் குறுக்கத்திற்கும்

ஒற்றள பெடைக்கும் தனித்தனி மாத்திரை ஒன்றாம். **ஒற்று இ உக் குறுக்கம் ஆய்தம் அரை** - மெய் யெழுத்திற்கும் குற்றியலிகரத்திற்கும் குற்றியலுகரத்திற்கும் ஆய்தத்திற்கும் தனித்தனி மாத்திரை அரையாம். **குறள் மஃகான் ஆய்த மாத்திரை கால்** - மகரக்குறுகத்திற்கும் ஆய்தக் குறுகத்திற்கும் தனித்தனி மாத்திரை காலாம்.

*மூன்று மாத்திரை எழுத்து யாது?*

'(மாத்திரை) மூன்றுயிரளபு'

*இரண்டு மாத்திரை எழுத்து யாது?*

'(மாத்திரை) இரண்டாம் நெடில்'

*ஒரு மாத்திரை எழுத்துக்கள் எவை?*

'(மாத்திரை) ஒன்றே குறிலோ டையெளக்குறுக்க மொற்றளபு'

*அரை மாத்திரை எழுத்துக்கள் எவை?*

'(மாத்திரை) அரை ஒற்று இஉக்குறுக்க மாய்தம்'

*கால் மாத்திரை எழுத்துக்கள் எவை?*

(மாத்திரை) கால்குறண் மஃகான் ஆய்தம்

*இச் சூத்திரத்திலே மாத்திரை கூறப்படாத வெழுத்து யாது?*

உயிர்மெய்

*அதற்கு மாத்திரை கூறப்படாதது யாது பற்றி?*

முன்னே உயிர்மெய் யிலக்கணங் கூறிய சூத்திரத்திலே 'உயிரளவாய்' என்றதனால் ஈண்டுங் கூறப்பட்டிலது *மாத்திரையாவது யாது?*

இயல்பெழு மாந்த ரிமைநொடி மாத்திரை.

(இயல்பு எழு மாந்தர் இமை நொடி மாத்திரை.)

**இ-ள். மாந்தர் இயல்பு எழும் இமை நொடி** - மனிதருடைய இயல்பாக உண்டாகின்ற கண்ணிமைப் பொழுதுங் கைந்நொடிப் பொழுதும், **மாத்திரை** - ஒரு மாத்திரை யென்னும் வரையறைப்பொழுதாம், **எ - று.**

ஒரு மாத்திரையாவது இரண்டிமையுந் தம்மிற் கூடி நீங்குங் காலம்.

ஆவியு மொற்று மளவிறந்து இசைத்தலும்
மேவு மிசைவிளி பண்டமாற்று ஆதியின்.

(ஆவியும் ஒற்றும் அளவு இறந்து இசைத்தலும் மேவும் இசை விளி பண்டம் மாற்று ஆதியின்.)

**இ – ள். ஆவியும் ஒற்றும்** – முதலும் சார்புமாகிய உயிரெழுத்துக்களும் அவ்விருவகை மெய்யெழுத்துக்களும், **அளவு இறந்து இசைத்தலும் மேவும்** – முன் சொன்ன அளவுக் கடந்து மிக்கொலித்தலையும் பொருந்தும், **இசை விளி பண்டம் மாற்று ஆதியின்** – இராகமும் அழைத்தலும் பண்டமாற்றலும் முதலியவைகளிடத்து, **எ – று.**

**உ – ம்.**

***வயங்கிழாஅய் வலிப்பல்யான் கேஎளினி*** எனவும்,

***தயிரோஒஒதயிர்*** எனவும்,

***கஂஂஂஂறென்னுங் கானத்துக் கல்ல தரத்தஞ்***
***சுஂஂஂ றென்னுந் தண்டோட்டுப் பண்ணை***

எனவும் வரும்.

ழகராகாரமும்,ககர ஏகாரமும், ரகர ஓகாரமும் ஆய்தமும் இங்கே அளவிறந்திசைத்தல் காண்க.

*ஆதியென்றதனால் அடங்குவன யாவை?*

முறையீடு,புலம்பல்,குறிப்பிசை முதலாயின

மேற்காட்டிய உதாரணத்தில் சுஂஂஂறென்பது குறிப்பிசை.

**பன்னீ ருயிருங் கசதந பமவய**
**ஞஙவீ ரைந்துயிர் மெய்யு மொழி முதல்**

(பன்னீர் உயிரும் க ச த ந ப ம வ ய
ஞ ங ஈர் ஐந்து உயிர் மெய்யும் மொழி முதல்)

இ - ள். பன்னீர் உயிரும் - பன்னிரண்டுயிரெழுத்துக்களும். கசதநபமவயஞங ஊரைந்து உயிர்மெய்யும் - ககர முதல் ஙகர மீறாகச் சொல்லப்பட்ட பத்து வர்க்கத் துயிர்மெய்யெழுத்துக்களும். மொழிமுதல் - சொல்லுக்கு முதலாகும். எ - று.

உ – ம்.

அடை, ஆடை,இடை, ஈடு, உடை, ஊடல், எடு, ஏடு, ஐயம், ஒளி, ஓடை, ஔவியம் – எனவும்,

கலை, கார், கிளி, கீரி, குடி, கூழ், கெண்டை, கேழல், கைதை, கொண்டல், கோடை, கௌவை எனவும்,

சட்டி, சாந்து, சிற்றில், சீற்றம், சுரை, சூரல், செக்கு, சேவல், சை, சௌரியம் எனவும்

தத்தை, தார், தித்தி, தீமை, துணி, தூணி, தெற்றி, தேன், தையல், தொண்டை, தோடு, தௌவை எனவும்,

நந்து நாரை, நிலம், நீத்து, நுகம், நைல், நெய்தல், நேயம், நைதல், நொச்சி, நோக்கம், நௌவி எனவும்

பனி, னால், பிடி,பீடு, புகழ், பூமி, பெடை, பேதை, பைதல், பொன், போது, பௌவம் எனவும்,

மலை, மாண்பு,மிடறு, மீளி, முயல், மூப்பு, மெலிவு, மேனி,மையல், மொழி, மோனை, மௌவல் எனவும் வரும்.

*இச்சூத்திரத்தினால் மொழிக்கு முதலாகாதவெழுத்து யாதென்பது பெறப்படுகின்றது?*

மெய்யெழுத்தென்பது.

*இச்சூத்திரத்திலே கசதநபம எனினுமாறெழுத்தையும் முறையிற் கூறி, வயஞங என்னு நான்கையும் முறைபிறழக் கூறியது யாது பற்றி ?*

முன்னையவாறும் பன்னிரண்டுயிரோடும் முதலாமென்பது கொள்ள வைத்தற்கு அவற்றை முறைப்படவும், பின்னைய நான்கும் சிலவுயிரோடு முதலாமென்பது பின்னரறிவித்தற்கு அவற்றை முறைபிழறவும் கூறியபடியாம்.

*இங்கே கசதநபமவயஞங வென்ற வெழுத்துக்கள் என்ன குறித்து நின்றன?*

தத்தம் வர்க்கத்தைக் குறித்து நின்றன. க என்பது, க, , கா, கி, மீ, கு, கூ, கெ, கே, கை, கொ, கோ, கௌ என்னும் பன்னிரண்டிற்கும் குறியீடாம். இவ்வாறே மற்றையவுமாம்.

*வகரமெய் எவ்வுயிர்களோடு கூடி மொழிக்கு முதலில் வரும்?*

உஊஒஓ வலவொடு வம்முதல்

(உ ஊ ஒ ஓ அல ஒடு வம் முதல்)

**இ –ள். உ ஊ ஒ ஓ அலவொடு** – உ ஊ ஒ ஓ என்னு நான்குமல்லாத எட்டுயிர்களோடும், **வ முதல்** – வகர சொல்லுக்கு முதலாகும். **எ – று.**

**உ – ம்.**

வளை, வாளை, விளை, வீடு, வெளி, வேர், வையம், வௌவல் என வரும்.

***யகர மெய் எவ்வுயிர்களோடுமொழிக்கு முதலில் வரும்?***

அஆ உஊ ஓஔ யம்முதல்.

(அ ஆ உ ஊ ஓ ஔ யம் முதல்.)

**இ – ள். அஆஉஊஓஔ** – அ ஆ உ ஊ ஓ ஔ என்னும் ஆறுயிரோடும். **ய முதல்** – யகர மெய் சொல்லுக்கு முதலாகும். **எ – று.**

**உ – ம்.**

யவனர், யானை, யுகம், யூகி, யோகி, யௌவனம் என வரும்.

ஞகர மெய் எவ்வுயிர்களோடு மொழிக்கு முதலில் வரும்?

அஆஎ ஒவ்வோ டாகு ஞம்முதல்

(அ ஆ எ ஒவ் ஓடு ஆகும் ஞம் முதல்)

**இ – ள். அ ஆ எ ஒவ் ஓடு** – அ ஆ எ ஒ என்னும் நான்குயிரோடும். **ஞம் முதல் ஆகும்** – ஞகர மெய் சொல்லுக்கு முதலாகும். **எ – று.**

**உ – ம்.**

ஞமலி, ஞாலம், ஞெகிழி, ஞொள்கிற்று.

***ஙகரமெய் எங்கெங்கே எவ்வுயிரோடு மொழிக்கு முதலில் வரும்?***

சுட்டியா வெகர வினாவழி யவ்வை ஒட்டி
ஙவ்வு முதலா கும்மே.

(சுட்டு யா எகர வினா வழி அவ்வை
ஒட்டி ஙவ்வும் முதல் ஆகும்மே.)

**இ – ள். சுட்டு யா எகர வினா வழி** – மூன்று சுட்டும் யா வினாவும் எகர வினாவுமாகிய இடைச்சொற்களின் பின், **அவ்வை ஒட்டி ஙவ்வும் முதல் ஆகும்** – அகரத்தைச் சேர்ந்து ஙகர மெய்யும் சொல்லுக்கு முதலாகும். **எ – று.**

**உ – ம்.**

அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், எங்ஙனம், யாங்ஙனம் என வரும்.

ஙனமென்பது இடத்தையும் தன்மையையு முணர்த்தும் பலபொரு ளொருசொல்

**எழுத்துக்கள் முற் கூறிய மாத்திரையின் மிக்கொலிக்கவும் பெறுமென்பதும் அது பெறுமிடம் இவை யென்பதும் கூறுஞ் சூத்திரம் யாது?**

ஆவி ஞணநம னயரல வழளமெய்
சாயு முகர நாலாறு மீறே.

(ஆவி ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள மெய்
சாயும் உகர நால் ஆறும் ஈறே.)

**இ - ள். ஆவி** - தனித்தும் மெய்யோடும் வரும் பன்னி ரண்டு உயிரும், **ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள மெய் -** ஞ ண ந ம ன என்னும் மெல்லொற் றைந்தும், ய ர ல வ ழ ள என்னு மிடையொற்று ஆறுமாகிய பதினொரு மெய்களும், **சாயும் உகரம்**- குற்றியலுகரமாகிய **நால் ஆறும் ஈறே** - இருபத்து நான்கு எழுத்தும் மொழிக்கீறாகும், **எ - று.**

**உ -ம்.**

ஆ, ஈ ஊ ஏ ஐ ஓ – எனவும்,

விள, பலா, கரி, தீ, கடு, பூ, சேஎ, தே, தை, நொ, போ, நௌ – எனவும்

உரிஞ், மண், பொருந், மரம், மொன், வேய், வேர், வேல், தெவ், வீழ், வாள், அஃகு எனவும் வரும்.

*மெல்லின மெய் ஆறனுள் எத்தனை மெய்கள் மொழிக்கீறாகும்?*

ஞண நமன என்னும் ஐந்துமாம்.

*மொழிக்கீறாகும் மெய்யெழுத்தெத்தனை?*

ஞண நமன யரலவ ழள என்னும் பதினொன்றுமாம்.

*மொழிக்கீறாத எழுத்துக்கள் எவை?*

வல்லின மெய் ஆறும் ஙகரமெய்யுமாம்.

***உடனிலை மெய்ம்மயக்கமாவது யாது?***

தம்மொடு தாமே மயங்கும் மயக்கம்.

வேற்றுநிலை மெய்ம்மயக்கமாவது யாது?

தம்மொடு பிறவே மயங்கு மயக்கம்.

தம்மோடு தாமே மயங்கு மெழுத்துக்களெவை?

க ச த ப என்னும் நான்கும்.

**உ –ம்.:**

சுக்கு, கச்சு, பத்து, செப்பு.

தம்மோடு பிறவே மயங்கு மெழுத்துக்களெவை?

ர ழ என்னு மிரண்டும்.

**உ –ம்.:**

சேர்தல், வாழ்தல்

தம்மொடு தாமும் பிறவு மயங்கு மெழுத்துக்களெவை?

ஒழிந்த பன்னிரண்டு மெய்களுமாம்.

உ–ம்.:

அங்ஙனம், அங்கு; மஞ்ஞை; மஞ்சு; வட்டம், வட்கல், வண்ணம், வண்டு; வெந்நீர், வேந்து; அம்மை, அம்பு; வெய்யர், வெய்து; வெல்லம், வெல்க; தெவ்வர், தெவ்வாது; கொள்ளல், கொள்க; கற்றல், கற்பு; அன்னை, அன்பு எனவரும்.

உயிர்மெய்ம் மயக்க மெப்படி வரும்?

நியதி யின்றி வேண்டியவாறே மயங்கும்.

இச் சூத்திரத்தால் பெறப்படும் பொருள் யாது?

பதினெட்டு மெய்களுள்ளே, க ச த ப வென்னு நான்கும் தம்மொடு தாமே யன்றிப் பிறமெய்யோடு கூடாவென்பதும், ர ழ வென்னும் இரண்டும் தம்மொடு கூடாவென்பதும், ர ழ வொழிந்த பதினாறும் தம்மோடு தாங் கூடுமென்பதும் மற்றைய பன்னிரண்டும் தம்மோடும் வேறு மெய்யோடுங் கூடுமென்பதும் உயிருடன் மெய்யும் மெய்யுடன் உயிரும் நியதியின்றிக் கூடுமென்பதும் பெறப்படும் பொருளாம்.

உயிர்மெய்ம் மயக்கமென்றது மொழியிடையே நியதியின்றி உயிரும் மெய்யும் தம்முண் மாறிக் கூடி வருதலையே யாமெனக் கொள்ளுக.

உ–ம்.:

"ஆரூரன்" இம்மொழியை ஆர், ஊர், அன் எனப் பிரித்து இடைநின்ற உயிரும் தம்முண் மாறிக் கூடி நிற்றல் காண்க. "ஆன்" என்பதில் முதலு மீறுமே யன்றி இடைநிலை யில்லையே யெனின், 'இரண்டும் கூடும் பொருத்துவாயே இடைநிலை மயக்கமாமெனக் கொள்க.

வேற்றுநிலை மெய்ம்மயக்க மின்னதென்பதற்குச் சூத்திரப் பிரமாணம் யாது?

"க ச த ப வொழித்த வீரேழன் கூட்டம் மெய்ம்மயக்கு"

மெய்ம்மயக்கம் எனினும் வேற்றுநிலை மெய்ம்மயக்கம் எனினும் பொருளொன்றே.

உடனிலை மெய்ம்மயக்க மின்னதென்பதற்குச் சூத்திரப் பிரமாணம் யாது?

"உடனிலை ரழவொழித் தீரெட்டாகும்"

இவ்விருவகை மயக்கமும் எங்கே வரும்?

"இவ்விருபால் மயக்கு மொழியிடை மேவும்"

நியதியின்றி வரும் மயக்கம் யாது?

"இவ்விருபால் மயக்கு மொழியிடை வடிவும்"

நியதியின்றி வரும் மயக்கம் யாது?

"உயிர்மெய்ம் மயக்கள வின்றே"

ஙகர வகரங்கள் தம்மொடு தாமே யன்றி வேறெம் மெய்களோடு மயங்கும்?

ஙம்முன் கவ்வாம் வம்முன் யவ்வே.

இ—ள்.: **நம் முன் கவ் ஆம்** – ஙகரத்தின் முன் ககரம் மயங்கும், **வம்முன் யவ் (ஆம்)** – வரகத்தின் முன் யகரமும் மயங்கும்.

**உ—ம்.:**

கங்கன், எனவும். தெவ்யாது, எனவும் வரும்.

ஞ நக்கள் தம்மொடு தாமே யன்றி வேறெம் மெய்களோடு மயங்கும்?

ஞநமுன் றம்மினம் யகரமொ டாகும்

(ஞ ந முன் தம் இனம் யகரம் ஒடு ஆகும்)

**இ—ள்.: ஞந முன்** – ஞகர நகரங்களின்முன், **தம் இனம்** – அவற்றிற் கினமாகிய சகர தகரங்களும், **யகரம், ஒடு ஆகும்** –யகரமும் மயங்கம், **எ—று.**

**உ—ம்.:**

கஞ்சன், உரிஞ் யாது எனவும், கந்தன், பொருந் யாது, எனவும் வரும்.

டறக்கள் தம்மொடு தாமே யன்றி வேறெம் மெய்களோடு மயங்கும்?

டறமுன் கசப மெய்யுடன் மயங்கும்.

(டறமுன் கசப மெய்உடன் மயங்கும்)

**இ—ள்.:** டற **முன்** – டகர றகரங்களின் முன், **க ச ப மெய் உடன் மயக்கும்** – க ச ப என்னு மூன்று மெய்களும் இணங்கி மயங்கும், **எ—று.**

**உ—ம்.:**

கட்கம், கட்சி, திட்பம், எனவும், கற்க, நற்சிறார், கற்ப. எனவும் வரும்.

ண ன க்களின் முன்னே தாமேயன்றி வேறெம்மெய்கள் மயங்கும்?

ண னமுன் னினங்கச ஞபமய வவ்வரும்.

(ண ன முன் இனம் க ச ஞ ப ம ய வவ் வரும்)

**இ—ள்.: ண ன முன்** – ணகர னகரங்களின் முன், **இனம்** – அவற்றிற் கினமாகிய டகர றகரங்களும், **க ச ஞ ப ம ய வவ்வரும்** – க ச ஞ ப ம ய வ என்னும் இவ்வேழு மெய்களும் மயங்கும், **எ—று.**

**உ—ம்.:—**

விண்டு, எண்கு, வெண்சோறு, வெண்ஞமலி, பண்பு, வெண்மை, மண்யாது, மண்வலிது எனவும், கன்று, புன்கு, புன்செய், புன்ஞமலி, புன்பயிர், புன்மலர், பொன்யாது, பொன்வலிது எனவும் வரும்.

மகரத்சின் முன்னே தானே யன்றி வேறெம் மெய்கள் மயங்கும்?

**இ—ள்.: மம்முன்** – மகரத்தின்முன், **ப ய வ மயங்கும் என்ப** – பயவ என்னு மூன்று மெய்களும் மயங்குமென்று சொல்லுவர் புலவர், **எ—று.**

**உ—ம்.:—**

கம்பன், கலம்யாது, கலம்வலிது, என வரும்.

யகரத்தின் முன்னும், தம்முன்னே தாம் மயங்காத ர ழக்களின் முன்னும் வேறு எம் மெய்கள் மயங்கும்?

**யரழ முன்னர் மொழிமுதன் மெய்வரும்.**

(ய ர ழ முன்னர் மொழிமுதல் மெய்வரும்)

**இ–ள்.: ய ர ழ முன்னர்** – ய ர ழ என்னு மூன்று மெய்களின் முன், **மொழிமுதன்மெய்வரும்** – மொழிக்கு முதலாக நின்ற பத்துமெய்களும்மயங்கும், **எ–று.**

**உ–ம்.:–**

ஆய்க, எய்சிலை, ஆய்தல், ஆய்நர், ஆய்பவை. வாய்மை தெய்வம், பாய்ஞெகிழி, வேய்ங்குழல் எனவும், ஆர்கவார்சிலை, ஆர்தல், ஆர்நர், ஆர்பவை, நேர்மை, கூர்வாள் போர்யானை, நேர்ஞெகிழி, ஆர்ங்கோடு, எனவும், ஆழ்க, வீழ்சிலை, ஆழ்தல், ஆழ்நர், ஆழ்ப, கீழ்மை, வாழ்வு, வீழ்யானை, வாழ்ஞெண்டு, பாழ்ங்கிணறு எனவும், யரழ முன்னே க ச த ந ப ம வ ய ஞ ங என்னும் மொழிமுதன் மெய் பத்தும் மயங்குதல் காண்க.

யகரத்தின் முன்னர் யகரம் மயங்குதல் உடனிலை மயக்கமாதலின் அதனை வேற்றுநிலை மெய்ம்மயக்கச் சிறப்புவிதி கூறுஞ் சூத்திரங்களு ளொன்றாகிய இச்சூத்திரத்திற் கூறியது யாது பற்றி?

அதனையொழித்து ஏனைய கொள்ளுதல் ஏற்புழிக்கோடல் என்னு முத்தியாதலின் அதுபற்றியாம்.

ல ள முன் தாமே யன்றி வேறெம்மெய்கள் மயங்கும்?

**ல ள முன் கசப வயவொன்றும்மே.**

(ல ள முன் க ச ப வ ய ஒன்றும் ஏ)

**இ–ள்.: ல ள முன்** – லகர ளகரங்களின் முன், **க ச ப வ ய ஒன்றும்** – நகர முதலிய விவ்வைந்தும் மயங்கும், **எ–று.**

**உ–ம்.:–**

செல்க, வல்சி, செல்ப, செல்வம், கொல்யானை, கொள்க, நீள்சிலை, கொள்ப, கள்வன், வெள்யானை, எனவரும்.

உடனிலை மெய்ம்மயக்கச் சிறப்புவிதி கூறுஞ் சூத்திரம்யாது?

**ரழ வல்லன தம்முற்றாமுட னிலையும்.**

(ரழ அல்லன தம்முன் தாம் உடன் நிலையும்)

**இ–ள்.:– ர ழ அல்லன** – ரகர ழகரமல்லாத பதினாறு மெய்களும், **தம் முன் தாம் உடன் நிலையும்** – தமக்குமுன் தாம் உடனின்று மயங்கும், **எ–று.**

**உ–ம்.:–**

அக்கம், அங்ஙனம், அச்சம், இஞ்ஞானம், அட்டு, அண்ணம், அத்து, அந்நீர், அப்பு, அம்மை, அய்யம், அல்லி, அவ்வை, அல்லல், அற்றம், அன்னை என வரும்.

முன்னே "க ச த ப வொழித்த" வென்னுஞ் சூத்திரத்திலே, "உடனிலை ரழவொழிந் தீரெட்டாகும்" என உடனிலை மயக்கங் கூறி மீண்டும் அதனையே இங்கே கூறியது யாது பற்றி?

இன்னது இதுவென்று பொதுவிலக்கணங் கூறுமுகத்தால் ஆண்டுக் கூறி, அஃதிவ்வாறு வருமென ஈண்டுச் சிறப்பிலக்கணம் கூறுமுகத்தால் மீட்டுங் கூறினார்.

தம்மொடு தாம் மயங்காத வெழுத்துக்கள் யாவை?

"ர ழ"

ஈரொற்று உடனிலையா மிடமும், நியதியின்றி மயங்குவனவற்றுட் சிலவற்றிற்கு வரையறையுங் கூறுஞ் சூத்திரம் யாது?

யரழவொற் றின்முன் கசதப ஙஞநம

ஈரொற் றாம்ரழத் தனிக்குறிலணையா

(யரழ வொற்றின்முன் க ச த ப ங ஞ ந ம ஈரொற்று ஆம்; ர ழ தனிக்குறில் அணையா)

இ—ள்.: **ய ர ழ ஒற்றின்முன்** – ய ர ழ என்னு மூன்று மெய்களின் முன்னரும், **க ச த ப ங ஞ நம ஈர் ஒற்று ஆம்** – க ச த ப ங ஞ ந ம என்னும் எட்டு மெய்களும் வந்து ஈரொற்றுடனிலையாம், **ர ழ தனிக்குறில் அணையா** – ரகார ழகார மெய்கள் தனிக்குறிற்கீழ் ஒற்றாக மயங்கா, **எ—று.**

**உ—ம்.:—**

வேய்க்குறை, வேர்க்குறை, வீழ்க்குறை எனவும்,

வேய்ச்சிறை, வேர்ச்சிறை, வீழ்ச்சிறை எனவும்,

வேய்த்தலை, வேர்த்தலை, வீழ்த்தலை எனவும்,

வேய்ப்புறம், வேர்ப்புறம், வீழ்ப்புறம் எனவும்,

வேய்ங்குழல், ஆர்ங்கோடு, பாழ்ங்கிணறு எனவும்,

தேய்ஞ்சது, கூர்ஞ்சிறை, பாழ்ஞ்சுனை எனவும்,

காய்ந்தனம், நேர்ந்தனம், வாழ்ந்தனம் எனவும்,

வேய்ப்புறம், ஈர்ப்பனை, பாழ்ம்பதி எனவும் வரும்.

எந்தமெய்களின் முன் எந்தமெய்கள் ஈரொற்றாயும் மயங்கும்?

"ய ர ழவொற் றின்முன் கசதப ஙஞநம வீரொற்றாம்"

எந்தமெய்கள் தனிக்குறின் முன்னர் ஒற்றாக மயங்கா?

"ரழத் தனிக்குறி லணையா"

ரழத்தனிக்குறி லணையாவெனவே இணைக்குறின் முன்னும் நெடின் முன்னும் வருமென்பதும், தனிக்குறின் முன்னே உயிர்மெய்யாய் வருமென்பதும் பெறப்படும்.

**உ—ம்.:—**

புகர், புகழ், நேர், கேழ், கரு, கழு எனவரும்.

இச்சூத்திரத்திலே க ங ச ஞ த ந ப ம வென முறையிற் கூறாததென்னை?

க ச த பக்கள் ய ர ழ முன்னே, தம்மொடு தாமே மயங்கி யீரொற் றுடனிலையாமென்பதும், ங ஞ நமக்கள் தம்மினத்தோடு தாம் மயங்கி யீரொற் றுடனிலையாமென்பதுங் கொள்ள அங்ஙனங் கூறினார்.

**செய்யுளில் எந்தமெய்முன் எந்தமெய் ஈரொற்றாய் மயங்கும்?**

ளமெய் திரிந்த னணமுன் மகாரம்

நைந்தீ ரொற்றாஞ் செய்யு ளுள்ளே.

(லள மெய் திரிந்த ன ண முன் மகாரம்

நைந்து, ஈரொற்று ஆம் செய்யுள் உள்ளே)

**இ–ள்.: ல ள மெய் திரிந்த ன ண முன் மகாரம்** – லகார ளகார வொற்றுத்திரிந்த னகார ணகாரங்களின் முன்வரும் மகரவொற்று, **நைந்து ஈரொற்று ஆம் செய்யுளுள்** – முன் சொன்னபடியே குறுகி அந்தமெய்களுடனே ஈரொற்றுடனிலை யாம் பாட்டினுள், எ–று.

உ–ம்.:–

*திசையறி மீகானும் போன்ம்*'' எனவும்,

*மயிலியன் மாதர் மருண்ம்* எனவும் வரும்.

மொழிக்கு முதலாகா வெழுத்துக்கள் முதலாதலும் ஈறாகா வெழுத்துக்க ளீறாதலும் மயங்கா வெழுத்துக்கள் மயங்குதலுமொரோ வழியுண்டெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

தம்பெயர் மொழியின் முதலு மயக்கமும்

இம்முறை மாறியு மியலுமென்ப.

(தம்பெயர் மொழியின் முதலும் மயக்கமும் இம்முறை மாறியும் இயலும் என்ப)

**இ–ள்.: தம்பெயர் மொழியின்** – எழுத்துக்கள் தம்பெயர்களாகிய மொழியின் கண்ணே, **முதலும் மயக்கமும் இம்முறை மாறியும் இயலும்** – முதனிலையும் இடைநிலையும் (இறுதிநிலையும்) ஆகிய இவ்விதிகளைத் தழுவாமலும் வரும், **எ–று.**

உ–ம்.:

*அவற்றுள்*

*லஃகான் முன்னர் யவ்வுந் தோன்றும்*

இதிலே லகரம், முதலாகியும், கூனிறுதி லகரமெய்யோடு மயங்கியும் வந்தது. கெப்பெரிது; இதில் மெய்யோடீறாகாத எகரம் மெய்யோடீறாய் வந்தது.

இச்சூத்திரத்தில் முதனிலையும் இடைநிலையுங் கூறி இறுதிநிலை கூறாது விடுத்ததென்னை?

இரண்டுங் கூறவே எஞ்சிய விறுதிநிலைதானே போதருதலின்.

இஃது எவைகளுக்குப் புறனடைச் சூத்திரம்?

முதலீ றிடைநிலைகளுக்குப் புறனடை.

மொழிப்போலி

மொழிப்போலி, முதலிடை கடைகளிலே நிற்றற்குரிய சிலவெழுத்துக்கீடாக வேறுசில வெழுத்து நின்றிசைப்பினும் தம் பொருள் வேறுபடா மொழிகளாம்.

ஓரீறு ஓரீற்றோடு மங்குதலுமுண்டெனக் கூறஞ் சூத்திரம் யாது?

மகர விறுதி யஃறிணைப் பெயரின்

னகரமோ டுறழா நடப்பன உளவே

(மகர இறுதி அஃறிணைப் பெயரின்

னகரமோடு உறழா நடப்பன வுளவே)

**இ–ள்.: அஃறிணைப் பெயரின் இறுதி மகரம்** – பால்பகா வஃறிணைப் பெயர்களிடத்து ஈற்றிலே நின்ற மகரமெய் **னகரமோடு உறழா நடப்பன உள** – னகர மெய்யோடு ஒத்து நடப்பவை உண்டு,**எ–று.**

**உ–ம்.:–**

அகம்– அகன்; நிலம்–நிலன்; கலம்–கலன், எனவரும். '**உறழா நடப்பன வுள**'வெனவே, நடவாதனவு முளவென்றா ராயிற்று.

**உ–ம்.:–**

வட்டம், குட்டம் இவற்றின் மகரவீறுகள் னகரமாகா.

இவ் வகை யீறுகள் வேறுமுளவோ?

சுரும்பு –சுரும்பர், அரும்பு–அரும்பர், வண்டு–வண்டர் என மென்றொடர்க் குற்றியலுகரம் அர் என்பதனோ டொத்து வருதலும், பந்தல் – பந்தர், சாம்பல் – சாம்பர், மதில்–மதிள், எனச் சில லகர மெய்யீற்றுப் பெயரிறுதி லகரம், ரகர ளகர மெய்யோ டொத்து வருதலுமுண்டு.

அகரவுயிர் எங்கேநின்றவிடத்து எவ்வுயிர்வந்து ஒத்துநடக்கும்?

அஐ முதலிடை யொக்குஞ் சஞயமுன்

(அஐ முதலிடை ஒக்குஞ் ச ஞ ய முன்.)

**இ–ள்.:– முதல் இடை**– சொல்லுக்கு முதலிலும் நடுவிலும், **அ ஐ ஒக்கும் ச ஞ ய முன்** – அகரமுன் ஐகாரமும் வேறுபாடின்றி ஒத்துநடக்கும். சகர ஞகர யகரங்களுக்கும் முன்வருமாயின், **எ–று.**

**உ–ம்.:–**

பசல்–பைசல், மஞ்சு– மைஞ்சு, மயல் –மையல் எனவும், அமச்சு –அமைச்சு; இலஞ்சி – இலைஞ்சி; அரயர்–அரையர் எனவும் வரும்.

நகரமெய் எங்கே நின்ற விடத்து எந்த மெய் வந்து ஒத்து நடக்கும்?

ஐகான் யவ்வழி நவ்வொடு சில்வழி
ஞஃகா னுறழு மென்மரு முளரே
(ஐகான் யவ்வழி நவ்வொடு சில்வழி
ஞஃகான் உறழும் என்மரும் உளரே)

**இ–ள்.: சில்வழி** – சொல்லுக்கு நடுவே சிலவிடத்து, **ஐகான்வழி யவ்வழி** – ஐகாரத்தின் பின்னும் யகரமெய்யின் பின்னும், **நவ்வொடு ஞஃகான் உறழும் என்மரும் உளர்** – இயல்பாய் வரும் நகர மெய்யினோடு ஞகர மெய் ஒத்துநடக்கும் என்று சொல்வாருஞ் சிலருண்டு, **எ–று.**

**உம்.:–**

“ செய்ஞ்ஞின்ற நீல மலர்கின்ற தில்லைச்சிற் றம்பலவன் மைஞ்ஞின்ற வொண்கண் மலைமகள் கண்டு மகிழ்ந்து நிற்க நெய்ஞ்ஞின் றெரியும் விளக்கொத்த நீல மணிமிடற்றான் – கைஞ்ஞின்ற வாடல்கண் டாற்பின்னைக் கண்கொண்டு காண்பதென்னே” எனவும், சேய்நலூர் – சேஞ்லூர், ஐந்நூறு – **ஐஞ்ஞூறு** எனவும் வரும்.

இப்படி வருவன வேறுமுளவோ?

ணகர னகர மெய்களின்முன் வருமொழி வினைச்சொல்லின் முதலிலே யா நின்றவிடத்து ஞா வந்துநிற்பினு மொக்கும்.

உ – ம்.:–

மண்யாத்த மண்ஞாத்த, பொன்யாத்த – பொன்ஞாத்த என வரும்.

எவ்வெழுத்துக்கள் கூடி எவ்வெழுத்துப்போல இசைக்கும்?

அம்மு னிகரம் யகர மென்றிவை
எய்தி னையொத் திசைக்கு மவ்வோ
டுவ்வும் வவ்வு மௌவோ ரன்ன.

(அம்முன் இகரம் யகரம் என்ற இவை எய்தின் ஐ ஒத்து இசைக்கும் அவ்வோடு உவ்வும் வவ்வும் ஔ ஓரன்ன).

**இ–ள்.:– அம்முன் இகரம் யகரம் என்ற இவை எய்தின் ஐ ஒத்து இசைக்கும்** – அகரத்தின் முன் இகரமும் யகரமும் என்று சொல்லப்பட்ட இவை தனித்தனி வருமிடத்து ஐகாரம் போல ஒலிக்கும், **அவ்வோடு உவ்வும் வவ்வும் ஔ ஓரன்ன** – அகரத்தோடு உகரமும் வகரமெய்யும் தனித் தனிக் கூடியொலிக்குமிடத்து கூவையும் ஒலி காரத்தை ஒருவாறு ஒப்பனவாம், **எ–று.**

எவ்வெழுத்துக்கள் கூடி ஐகாரமொலிக்கும்?

"அம்மு னிகரம் யகர மென் றிவை யெய்தின் ஐயொத் திசைக்கும்"

**உ – ம்.**

அ–இ= ஐ. அ–ய்=ஐ ஐவனம் என்பதை அஇவனம் எனவும் அய்வனம் எனவும் வழங்குதல் கூடுமாயிலும் அவ்வழக்குப் பொலியேயன்றி இலக்கணமன்று.

எவ்வெழுத்துக்கள் கூடி ஔகாரமொலிக்கும்?

"அவ்வோ டுவ்வும் வவ்வும் ஔ ஓரன்ன"

**உ–ம்.**

அ – உ – ஔ, அ – வ்– ஔ, ஔவை என்பது அஉவை அவ்வை எனவரும் இவ்வழக்கும் இலக்கணமன்றாம்.

எழுத்துப்போலியென்பது எழுத்துப் போல்வதொன்றன்றி எழுத்தன்று. போலி, மொழிப்போலி எழுத்துப்போலி யென இருவகைப்படும். அய்– எழுத்துப்போலி, மரன் மொழிப்போலி.

உயிரெழுத்துக்கள் ஓரெழுத்தாகிய எகாக்கரமென்றும் ஈரெழுத்தாகிய சந்தியக்கரமென்றும் தோற்றத்தா லிருவகைப்படும் அ ஆ முதலியன எகாக்கரம், ஐ ஔ சந்தியக்கரம் ஐகாரமும் ஔகாரமும் முறையே அகர இகரமும் அகர உகரமும் கூடிப்பிறப்பனவாதலின் சந்தியக் கரமெனப்பட்டன (சந்தி – கூட்டம். அக்கரம் – எழுத்து) எழுத்துக்களினது கூறுகளை ஆராயுமிடத்துச் சந்தியக்கரங் கொள்வதன்றி மொழியாக்கத்துக்கண் அவை கொள்ளப்படா. கொள்ளப்படுமாயின் காடு என்பது "க்ஆட்உ" என வழங்குதலும் முறையாமன்றோ.

எழுத்துகளுக்குச் சாரியைவிதிக்குஞ் சூத்திரம் யாது?

மெய்க ளகரமு நெட்டுயிர் காரமும்
ஐயௌக் கானு மிருமைக் குறியில்

விரண்டொடு கரமுமாஞ் சாரியை பெறும் பிற.

(மெய்கள் அ கரமும் நெட்டுயிர் காரமும்

ஐ ஔக் கானும் இருமைக் குறில் இவ்

விரண்டொடு கரமும் ஆம் சாரியை பெறும்பிற)

**இ–ள்.: மெய்கள் அகரமும்** – ஒற்றுக்கள் அவ்வோடு கரச்சாரியையும், **நெட்டயிர் காரமும்** – உயிர் நெடில்கள் காரச்சாரியையும், ஐ ஔக்கானும் – அவற்றுள் ஐகார ஔகாரங்கள் காரச்சரியையுடனே கான்சாரியையும், **இருமைக்குறில் இவ்விரண்டுடொடு கரமும்** – உயிர்க்குறிலும் உயிர்மெய்க்குறிலும் காரம் கான் என்னும் இரண்டுடனே கரச்சாரியையும், **ஆம்சாரியை பெறும்** – ஆகின்ற சாரியைகளைப் பெறும், **எ–று.**

**உ–ம்.:** க ங எனவும், ஆகாரம், ஐகாரம், ஔகாரம் எனவும், ஐகான் ஔகான் எனவும், அகாரம், அஃகான், அகரம், மகாரம், மஃகான், மகரம் எனவும் வரும்.

காரச்சரியையும் கான்சாரியையும் பெறும் நெட்டெழுத்தெவை?

"நெட்டுயிர் காரமும்" என்றதனாலும் "ஐஔகானும்" என்றதனாலும் ஐகார ஔகாரங்கள்.

**உ–ம்.:**

ஐகான், ஔகான், ஐகாரம், ஔகாரம், எனவரும்.

காரம் கான் கரம் என்னு மூன்று சாரியையும் பெறுமெழுத்தெவை?

"இருமைக் குறில் இவ்விரண்டொடு கரமும்" என்றனால் உயிர்க்குறிலும் உயிர்மெய்க்குறிலும்.

**உ–ம்.**

அகாரம். அஃகான், அகரம், மகாரம், மஃகான், மகரம்.

மெய்கள் என்ன சாரியைபெறும்?

மெய்கள் அவ்வோடுகூடிய கரம் காரம் கான் மூன்றும் பெறுமாயினும் அவ்வோடு கூடிய கரமே பெரும்பான்மையும் பெறுமென்பர் "மெய்கள் அ கரம்" என்றாரெனக் கொள்க.

மெய்யெழுத்துக்கள் எதனைப் பெற்றபின் மூன்று சாரியைகளையும் பெறும்?

மெய்கள் அகரம்பெற்றே சாரியை பெறும்

சாரியைபெறா வெழுத்தெவை?

உயிர்மெய்நெடிலும் ஆய்தமும்

பிறவென்றதனாற் பெறப்படுவன யாவை?

மெய்யெழுத்துக்கள் கரமுதலிய சாரியையின்றி அகரம் பெற்றுக் கசதப என்றாற்போல நிற்றலும் மற்றைய வெழுத்துக்கள் வாளா அ ஆ என நிற்றலும் உண்டென்பதும் குறிலோடு கான் புணருமிடத்து இடையே ஆய்தம் விரியும் என்பதும் ஆனம் முதலிய வேறு சாரியைகளும் பெறும் என்பதும் பெறப்படுவனவாம். ஆன முதலிய சிறப்பில் வழக்கு இக்காலத்துமுண்டு.

**எழுத்துக்கள் தாம் பதமாய பொழுதும் அப்பதம் தம்மோடு முருபோடும் புணரும் பொதும் முற் கூறிய இலக்கணங்களின் வேறுபடுமா?**

மொழியாய்த்தொடரினு முன்னனைத்தெழுத்தே

(மொழியாய்த் தொடரினும் முன் அனைத்து எழுத்தே)

**இ–ள்.: எழுத்து** – இவ்வெழுத்துக்கள், **மொழியாய்த் தொடரினும்** – தான் பதமாயவிடத்தும் அப்பதம் தம்மோடும் உருபோடும் புணருமிடத்தும், **முன் அனைத்து** – தமக்குரிய முன்னை இலக்கணத்தையே யுடையனவாகும், எ–று.

இச் சூத்திரத்திலே மொழியாய்த் தொடரினும் என்றமையான் எழுத்தாலாகும் பதங்களினது இலக்கணத்தை எடுத்துக் கூறும் பதவியலுக்கு தோற்றுவாய் செய்யப்பட்டது.

எழுத்தியல் முற்றிற்று

# பதவியல்

1. பதமின்னதென்பதும் அதன்வகையும் கூறுஞ் சூத்திரம் யாது.

எழுத்தே தனித்துந் தொடர்ந்தும் பொருடரிற்
பதமா மதுபகாப் பதம்பகு பதமென
விருபா லாகி யியலு மென்ப.

(எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள் தரின் பதம் ஆம்; அது பகாப்பதம் பகுபதமென இருபாலாகி இயலுமென்ப).

**இ—ள்.: எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரின் பதம் ஆம்** — எழுத்துக்கள் தாமே ஒவ்வொன்றாகத் தனித்தும் இரண்டு முதலாகத் தொடர்ந்தும் பிறபொருளைத் தருமாயின் அது பதமாம்; **அது பகாப்பதம் பகுபதம் என இருபால் ஆகி இயலும் என்ப**— அப்பதம் பகாப்பதமெனவும் பகுபதமெனவும் இரண்டு வகையினை யுடையதாகி நடக்கும் என்று சொல்லுவர் புலவர், எ—று.

2.பதமாவது யாது?

''எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருடரிற் பதமாம்''

3. அப்பத மெத்தனைவகைப்படும்?

''அது பகாப்பதம் பகுபதமென விருபாலாகி வியலுமென்ப''

4. பொருடரிற் பதமாம் என்பதனாற் பெறப்படுவது யாது?

எழுத்துத் தனித்துநின்ற வழியும் தொடர்ந்துநின்ற வழியும் பொருள் தராவிடத்துப் பதமாகா. ங என்றவிடத்தும் ஙஞணநமன என்றவிடத்தும் தம்பெயரையன்றி வேறு பொருளுணர்த்தாமையின் பதமாகாமை காண்க.

ஒரெழுத் தொருமொழிக ளெத்தனை?

உயிர்மவி லாறுந் தபநவி லைந்துங்
கவசவி னாலும் யவ்வி லொன்று
மாகு நெடினொ து வாங்குறி லிரண்டோ
டோரெழுத் தியல்பத மாறேழ் சிறப்பின.

(உயிர் மவில் ஆறும் த ப நவில் ஐந்தும்
க வ சவில் நாலும் யவ்வில் ஒன்றும்
ஆகும்நெடில் நொ து ஆம்குறில் இரண்டோடு
ஒரெழுத்து இயல்பதம் ஆறேழ் சிறப்பின)

**இ—ள்.: உயிர் மவில் ஆறும்** — உயிர்வருக்கத்திலும் மவ்வருக்கத்திலும், அவ்வாறும் **தப நவில் ஐந்தும்** — தவ்வருக்கத்திலும் பவ்வருக்கத்திலும் ஐவ்வைந்தும், **கவசவில் நாலும்** — கவ்வருக்கத்திலும் வவ்வருக்கத்திலும் சவ்வருக்கத்திலும் நந்நான்கும், **யவ்வில் ஒன்றும் ஆகும் நெடில்** — யவ்வருக்கத்தில் ஒன்றும் ஆகு நெட்டெழுத்தாலாய மொழி நாற்பதும். நொ து ஆம் குறில் இரண்டோடு — நொவ்வுந் துவ்வும் ஆகுங் குற்றெழுத்தாலாகிய மொழி

இரண்டுடனே, **ஓர் எழுத்து இயல் பதம் ஆறேழ் சிறப்பின** – ஒரெழுத்தாலாகிய மொழிகள் நாற்பத்திரண்டுஞ் சிறப்பினவாம், எ–று.

உயிர்நெட்டெழுத்தினாலும் உயிர்மெய் நெட்டெழுத்தினாலும் ஆய ஒரெழுத்தொருமொழி யெத்தனை?

" உயிர்மவில் ஆறும் தபநவில் ஐந்தும் கசவில் நாலும் யவ்வில் ஒன்றும் ஆகுநெடில்" என்றமையால் நாற்பது

உயிர்வருக்கத்தினும் மவ்வருக்கத்தினு மெத்தனை?

" உயிர் மவிலாறும்"

**உ–ம்.:** ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, எனவும் மா, மீ, மூ, மே, மை, மோ எனவும் வரும்

தபநவி லெத்தனை?

"தபநவிலைந்து"

**உ–ம்.:** தா, தீ, தூ, தே, தை எனவும் பா பூ பை போ எனவும் நா நீ நே நை நோ எனவும் வரும்.

கவசவிலெத்னை?

"கவசவினாலும்"

**உ–ம்.:** கா, கூ, கை, கோ எனவும் வா, வீ, வை, வெள எனவும் சா, சீ, சே, சோ எனவும் வரும்

யகரதிலெத்தனை?

"யவ்விலொன்று"

**உ–ம்.:** யா.

குற்றெழுத்திலெத்தனை?

"நொ து வாங் குறிலிரண்டு"

உ–ம்.: நொ, து (நொ– துன்பப்படு. து– புசி)

இவை சிறப்பின என்றமையாற் சிறப்பிலாதனவு முண்டோ?

கெள, பீ, வே என நெடிலும் கு எனக் குறிலுமாக இவை சிறப்பிலாதன.

பலவெழுத்தாலாகுந் தொடர்மொழிகளுக்கு எழுத்து வரையறை கூறுஞ் சூத்திரம்யாது?

பகாப்பத மேழும் பகுபத மொன்பதும்
எழுத்தீ றாகத் தொடரு மென்ப
(பகாப்பதம் ஏழும் பகுபதம் ஒன்பதும்
எழுத்து ஈறாகத் தொடரும் என்ப)

**இ–ள்.: பகாப்பதம் ஏழும்** – பகாப்பதங்கள் இரண்டெழுத்து முதல் ஏழெழுத்தீறாகவும், **பகுபதம் ஒன்பதும் எழுத்து ஈறாகத் தொடரும் என்ப** – பகுப்பதங்கள் இரண்டெழுத்து முதல் ஒன்பதெழுத்தீறாகவும் தொடரும் என்று **சொல்லுவர் புலவர், எ–று.**

உ–ம்.: அணி, அறம், அகலம், அருப்பம், தருப்பணம், உத்தரட்டாதி எனவும், கூனி, கூனன், குழையன், பொருப்பன், அம்பலவன், அரங்கத்தான்,

உத்தராடத்தான், உத்தரட்டதியான், எனவும் வரும். நடத்துவிப்பிக்கிறான் எனப் பகுதி முதலிய உறுப்பு வேறுபட்டு வருவனவற்றிற்கு இவ்வரையறை இல்லையென்றறிக.

பகாப்பதம் எத்தனையெழுத்தீறாகத் தொடரும்?

பகாப்பதம் ஏழெழுத் தீறாகத் தொடரும்.

பகுபத எத்தனையெழுத்தீறாகத் தொடரும்?

பகுபத மொன்ப தெழுத்தீறாகத் தொடரும்

பகாப்பதவியல்பும் அதன்பகுதியுங் கூறுஞ் சூத்திரம்யாது?

பகுப்பாற் பயனற் றிடுகுறி யாகி
முன்னே யொன்றாய் முடிந்தியல் கின்ற
பெயர்வினை யிடையுரி நான்கும் பகாப்பதம்.

(பகுப்பால் பயன் அற்று இடுகுறி ஆகி
முன்னே ஒன்று ஆய் முடிந்து இயல்கின்ற
பெயர் வினை இடை உரி நான்கும் பகாப்பதம்)

**இ—ள்.: பகுப்பால் பயன் அற்று** – பகுத்தலால் பகுதி விகுதி முதலாகிய பயனில்லாமல். **இடு குறி யாகி** – காரணமின்றி இடப்பட்ட குறியாகி, முன்னே ஒன்று ஆய் முடிந்து இயல்கின்ற – படைப்புக் காலந்தொட்டு ஒன்றாகி முடிந்து நடக்கின்ற, **பெயர் வினை இடை உரி நான்கும் பகாப்பதம்** – பெயர்ச்சொல்லும் வினைச் சொல்லும் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் மாகிய நான்கும் பகாப்பதங்களாம், **எ—று.**

**உ—ம்.:** நிலம், நீர், நெருப்பு, காற்று என்பன பெயர்ப்பகாப்பதம், நட, வா, உண், தின் என்பன வினைப்பகாப்பதம். மன், கொல், போல் மற்று என்பன இடைப் பகாப்பதம். உறு, கழி, நனி, தவ என்பன உரிப்பகாப்பதம்.

நெருப்பு என்பதைப் பகுக்கப்புகின் நெரு ப் பு என நிற்கு மாயினும் அக்கூறுகள் யாதும் பொருளைத்தராமலும் காரணம் புலப்படாமலும் நிற்றலால் ஆதிதொட்டு ஒரே கூற்றினையுடையதாய் முடிந்து நிற்றல் காண்க.

பகாப்பதம் எத்தனை வகைப்படும்?

"பெயர்வினை இடையுரி நான்கும் பகாப்பதம்"

பகுபத வியல்பும் அதன்பகுதியும் கூறுஞ் சூத்திரம் யாது?

பொருளிடங் காலஞ் சினைகுணந் தொழிலின்
வருபெயர் பொழுதுகொள் வினைபகு பதமே

(பொருள் இடம் காலம் சினை குணம் தொழிவின் வருபெயர் பொழுதுகொள் வினை பகுபதமே)

**இ—ள்.: பொருள் இடம் காலம் சினை குணம் தொழிவின் வருபெயர்** – பொருளும் இடமும் காலமுஞ் சினையுங் குணமுந் தொழிலும் காரணமாக வருகின்ற பெயர்ச்சொற்களும், **பொழுது கொள்வினை** – தெரிநிலையாகவும் குறிப்பாகவும் காலத்தைக் கொள்ளும் வினைச்சொற்களும் பகுபதமே – பகுப்பதங்கள்ாகும், **எ—று.**

பொழுது கொள்வினை பகுபதமெனவே, அவ்விருவகை வினையாலணையும் பெயர்களும் பகுபதமாமென்பது அருத்தாபத்தியாற் கூறினாரெனவறிக

பெயர்ப்பகுபதம் எத்தனை வகைப்படும்?

"பொருள் இடம் காலம் சினை குணம் தொழிலின் வருபெயர் என்றதனாற் பொருட்பெயர்ப் பகுபதம், இடப்பெயர்ப் பகுபதம், காலப்பெயர் பகுபதம், சினைப்பெயர்ப் பகுபதம். குணப்பெயர்ப் பகுபதம், தொழிற்பெயர்ப் பகுபதம் என ஆறாம்.

உ–ம்.:

(1) பொன்னன் என்பது பொருட்பெயர்ப் பகுபதம்

(2) அகத்தன் என்பது இடப்பெயர்ப் பகுபதம்.

(3) ஆதிரையான் என்பது காலப்பெயர்ப் பகுபதம்.

(4) கண்ணன் என்பது சினைப்பெயர்ப் பகுபதம்.

(5) கரியன் என்பது குணப்பெயர்ப் பகுபதம்..

(6) ஊணன் என்பது தொழிற்பெயர் பகுபதம்.

வினைப்பகுபதம் எத்தனை வகைப்படும்?

தெரிநிலைவினைப் பகுபதம் குறிப்புவினைப் பகுபதம் என இரண்டாம்.

தெரிநிலைவினைப் பகுபதம் எத்தனை வகைப்படும்?

உடன்பாட்டுத் தெரிநிலைவினை முற்றுப் பகுபதம், உடன் பாட்டுத் தெரிநிலைவினைப் பெயரெச்சப் பகுபதம் உடன்பாட்டுத் தெரிநிலைவினை. வினையெச்சப் பகுபதம், எதிர்மறைத் தெரிநிலைவினை முற்றுப் பகுபதம் எதிர்மறைத் தெரிநிலை வினைப் பெயரெச்சப் பகுபதம், எதிர்மறைத் தெரிநிலைவினை வினையெச்சப் பகுபதம் என அறுவகைப்படும்.

உ–ம்.: நடந்தான் நடக்கின்றான் நடப்பான் என்பன உடன் பாட்டுத் தெரிநிலைவினை முற்றுப் பகுபதம்.

(1) நடந்த நடக்கின்ற நடக்கும் என்பன உடன்பாட்டுத் தெரிநிலைவினைப் பெயரெச்சப் பகுபதம்.

(2) நடந்து நடக்க நடக்கின் என்பன உடன்பாட்டுத் தெரிநிலைவினை வினையெச்சப் பகுபதம்.

(3) நடந்திலன் நடக்கின்றிலன் நடவான் என்பன எதிர் மறைத் தெரிநிலை வினைமுற்றுப் பகுபதம்.

(4) நடவாத என்பது எதிர்மறைத் தெரிநிலைவினைப் பெயரெச்சப் பகுபதம்.

(5) நடவாது நடவாமல் என்பன எதிர்மறைத் தெரிநிலைவினை வினையெச்சப் பகுபதம்.

குறிப்பு வினைப் பகுபதம் எத்தனை வகைப்படும்?

உடன்பாட்டுக் குறிப்புவினை முற்றுப் பகுபதம், உடன் பாட்டுக் குறிப்புவினைப் பெயரெச்சப் பகுபதம், உடன்பாட்டுக் குறிப்புவினை வினையெச்சப் பகுபதம், எதிர்மறைக் குறிப்புவினை முற்றுப் பகுபதம், எதிர் மறைப்

குறிப்புவினைப் பெயரெச்சப் பகுபதம், எதிர் மறைக் குறிப்புவினை வினையெச்சப் பகுபதம் என ஆறு வகைப்படும்

உ—ம்.: (கங) பொன்னன் ஊணன் அற்று இற்று எற்று என்பன உடன்பாடு குறிப்புவினை முற்றுப் பகுபதம்.

(6) கரிய பெரிய என்பன உடன்பாட்டுக் குறிப்புக் வினைப் பெயரெச்சப் பகுபதம்.

(கரு) பைய மெல்ல என்பன உடன்பாட்டுக் குறிப்புவினை வினையெச்சப் பகுபதம்.

(7) அல்லன் இல்லன் அற்று இற்று என்பன எதிர்மறைக் குறிப்பு வினைமுற்றுப் பகுபதம்.

(8) அல்லாத இல்லாத என்பன எதிர்மறைக் குறிப்பு வினைப் பெயரெச்சப் பகுபதம்

(9) அன்றி இன்றி அல்லாமல் இல்லாமல் என்பன எதிமறைக் குறிப்புவினை வினையெச்சப் பகுபதம்.

23. வினையாலணையும் பெயர்ப் பகுபத மெத்தனை?

தெரிநிலை வினையாலணையும் பெயர்ப் பகுபதமெனவும் குறிப்பு வினையாலணையும் பெயர்ப் பகுபதமெனவும் இருவகைப்படும்.

(10) நடந்தான் நடந்தவன் என்பன தெரிநிலை வினையாலணையும் பெயர்ப் பகுபதம்.

(11) பொன்னன் பொன்னவன் என்பன குறிப்பு வினையாலணையும் பெயர்ப் பகுபதம்.

24. பெயர்ப்பகுபதம் குறிப்புவினைப் பகுபதம் குறிப்பு வினையாலணையும் பெயர்ப்பகுபதமென்று மூன்றிற்கும் வேறுபாடு என்னை?

பெயர்ப்பகுபதம் பகுதி விகுதியிரண்டிலும் பொருட்சிறப்புடையதாய்க் காலங் கொள்ளாது வேற்றுமை யுருபேற்று வரும். வினைக்குறிப்பு முற்றுப் பகுபதம் பகுதியிற் பொருட் சிறப்புடையதாய்க் காலத்தைப் குறிப்பாகக் காட்டி வேற்றுமையுருபோலாது வரும்வினைப்குறிப்பு முற்றாலணையும் பெயர்ப் பகுபதம் விகுதியிற் பொருட்சிறப்புடையதாய் காலத்தைக் குறிப்பாகக் காட்டி வேற்றுமையுருபேற்று வரும். இவையே இம்மூன்றுக்கும் வேறுபாடாம் உம். பொன்னனை வணங்கினான் சாத்தன் பண்டு பொன்னன். பண்டு பொன்னைக் கொணர்ந்தேன் எனவரும்.

தெரிநிலைவினைமுற்றுப் பகுபதம் தெரிநிலை வினையாலணையும் பெயர்ப் பகுபதமென்று மிரண்டற்கும் வேறுபாடென்னை?

தெரிநிலை வினைமுற்றுப் பகுபதம் பகுதியிற் பொருட்சிறப்புடையதாய்க் காலத்தை வெளிப்படையாகக் காட்டி வேற்றுமையுரு போலாது வரும் தெரிநிலை வினையாலணையும் பெயர்ப் பகுபதம் விகுதியிற் பொருட்சிறப்புடையதாய்க் காலத்தை வெளிப்படையாகக் காட்டி வேற்றுமையுருபேற்று வரும். இவையே இவ்விரண்டற்கும் வேறுபாடாம் உ—ம். சாத்தன் நடந்தான்; நடந்தானைத் தடுத்தேன் எனவரும்.

எல்லாச் சொற்களையுங் கூறுங்காற் பொருள்சிறக்குமிடத் தெழுத்தை எடுத்தும், அயலெழுத்தை நலிந்தும் மற்றை யெழுத்துக்களைப் படுத்துங் கூறுக.

மேற்கூறிய பெயர்ப் பகுபதங்களுள் அடங்காது வேறாய் வருவனவுஞ் சிலவுள; அவை தொழிற்பெயரும், பண்புப்பெயரும் பிற பெயருமாம். உ–ம்.: நடத்தல், வருந்தல், உண்டல், சேறல் எனவும் செம்மை கருமை எனவும், சேர்ந்தார்க் கொல்லி, உடுக்கை எனவும் வரும்.

பகுபதங்கள் எவ்வுறுப்புக்களான் முடிக்கப்படும்?

பருதி விகுதி யிடைநிலை சாரியை
சாந்தி விகார மாறினு மேற்பவை
முன்னிப் புணர்ப்ப முடியும்மெப் பதங்களும்
(பகுதி விகுதி இடைநிலை சாரியை
சந்தி விகாரம் ஆறினும் ஏற்பவை
முன்னிப் புணர்ப்ப முடியும் எப்பதங்களும்)

**இ–ள்.: பகுதி விகுதி இடைநிலை சாரியை சந்தி விகாரம் ஆறினும்** – முதனிலையும் இறுதிநிலையும் இடைநிலையுஞ் சாரியையுஞ் சந்தியும் விகாரமும் ஆகிய இவ்வாறு உறுப்பினுள்ளும் ஏற்பவை முன்னிப் புணர்ப்ப – பொருளமைதிக்கு ஏற்பவைகளை நினைத்து அறிவுடையோர் கூட்டிமுடிக்க, எப்பதங்களும் முடியும் – எவ்வகைப்பட்ட பகுபதங்களும் முடிவுபெறும், எ–று.

கூனி என்பது கூன் இ எனப் பகுதி விகுதியான் முடிந்தது. உண்டான் என்பது உண் ட் ஆன் என அவ்விரண்டுடன் இடைநிலைபெற்று முடிந்தது. உண்டனன் என்பது உண் ட் அன் அன் என அம்முன்றுடன் சாரியை பெற்று முடிந்தது. பிடித்தனன் என்பது பிடி த் த் அன் அன் என அந்நான்குடன் சாந்தி பெற்று முடிந்தது. நடந்தனன் என்பது நட த் த் அன் அன் என அவ்வைந்தும் பெற்றுச் சந்தியால் வந்த தகரவல்லொற்று மெல்லொற்றாதலாகிய விகாரமும் பெற்று முடிந்தது.

பகுதியாவன யாவை?

தத்தம்
பகாப்ப தங்களே பகுதி யாகும்.
(தத்தம் பகாப்பதங்களே பகுதி ஆகும்)

உ–ம்.: குழையன் அகத்தன் ஆதிரையான் பல்லன் செய்யன் கூத்தன் எனப் பெயர்ப்பகுபதங்கட்குக் குழை, அகம், ஆதிரை, பல், செம்மை, கூத்து என்னும் பொருளாதி யறுவகைப் பெயரும் பகுதியாய் வந்தன. வினைக்குறிப்பு முற்றிற்கும் இவையே உதாரணமாமெனக் கொள்க. அவன் எவன் பிறன் எனப் பெயப்பகுபதங்கட்கு இடைச்சொற்கள் பகுதியாய் வந்தன. அற்று இற்று எற்று என வினைக்குறிப்பு முற்றுப் பகுபதங்கட்கு இடைச் சொற்கள் பகுதியாய் வந்தன.

பண்புப் பகுதிகளெவை?

செம்மை சிறுமை சேய்மை தீமை
வெம்மை புதுமை மென்மை மேன்மை
திண்மை யுண்மை நுண்மை யிவற்றெதிர்

இன்னவும் பண்பிற் பகாநிலைப் பதமே

(செம்மை சிறுமை சேய்மை தீமை

வெம்மை புதுமை மென்மை மேன்மை

திண்மை உண்மை நுண்மை யிவற்றெதிர்

இன்னவும் பண்பின் பகாநிலை பதமே),

செம்மை... நுண்மை – செம்மை முதல் நுண்மையீறாகச் சொல்லப்பட்டபதினொன்றும் இவற்று எதிர் – இவைகளுக்கு எதிரான வெண்மை முதலானவைகளும் இன்னவும் – இவை போல்வன பிறவும் பண்பின் பகாநிலைப்பதமே – பண்புப் பொருளினின்றும் வேறு பொருள் பகுக்கப்படாத நிலையையுடைய பதங்களாம், எ–று.

இவை விகுதிகளோடு புணர்ந்தனவன்றோ பகாப்பதமாவதெங்ஙனம்?

இவை சொன்னிலையாற் பகுபதமாயினும் மைவிகுதிக்குப் பகுதிப்பொருளல்லது வேறு பொருளில்லாமையால் பொருணிலியாற் பகாப்பத மென்பதாம்.

மைவிகுதியோடு புணர்ந்துநின்ற பண்புப்பெயர்கள் விகுதியோடாயினும் பதத்தோடாயினும் புணருங்கால் எப்படிப் புணரும்?

ஈறுபோத லிடையுகர மிய்யாதல்

ஆதி நீட லடியகர மையாதல்

தன்னொற் றிரட்டன் முன்னின்ற மெய்திரிதல்

இனமிக வினையவும் பண்பிற் கியல்பே.

(ஈறு போதல் இடைஉகாரம் இ ஆதல்

ஆதி நீடல் அடி அகரம் ஐ ஆதல்

தன் ஒற்று இரட்டல் முன்னின்ற மெய்திரிதல்

இனம் மிகல் இனையவும் பண்பிறகு இயல்பு).

**இ–ள்.: ஈறுபோதல்** – இறுதியிலுள்ள எழுத்துக் கெடுதலும், **இடை உகரம் இ ஆதல்** – நடுநின்ற உகரம் இகரமாதலும், ஆதிநீடல் – முதனின்ற அகரம் நெடிலாதலும், **அடி அகரம் ஐ ஆதல்** – முதனின்ற அகரம் ஐகாரமாதலும், **தன் ஒற்று இரட்டல்** – தன்மெய் நடுவே மிகுதலும், **முன் நின்ற மெய் திரிதல்** – முன்னின்ற மெய் வேறொரு மெய்யாதலும், **இனம் மிகல்** – வருமெழுத்திற்கு இனவெழுத்து மிகுதலும், **இனையவும் பண்பிற்கு இயல்பு** – இவைபோல்வன பிறவும் அப்பண்பினுக்கு இயல்பாகும், **எ–று.**

**உ–ம்.:** நல்லன் நன்மையின் ஈறு கெட்டது.

கரியன் கருமையின் ஈறு கெட்டு நடுநின்ற உகரம் இகரமாயிற்று.

பாசி பசுமையின் ஈறு கெட்டு ஆதிநீண்டது.

பைந்தார் பசுமையின் ஈறு நடுநின்ற உயிர்மெய்யும் கெட்டுவருமெழுத்திற்கு இனவெழுத்து மிகுந்து முதலிலிருந்த அகரம் ஐகாரமாயிற்று.

வெற்றிலை வெறுமையின் மையீறு கெட்டுத் தன்னொற்றிரட்டியது .

சேதாம்பல் செம்மையின் மையீறு போய் ஆதி நீண்டு முன்னின்ற மகரமெய் தகரமெய்யாகத் திரிந்தது.

ஈறு போதலுக்கு உதாரணம் யாது?

நல்லன்.

இடையுகரம் இ ஆதலுக்கு உதாரணம் யாது?

கரியன்.

ஆதிநீடலுக்கு உதாரணம் யாது?

பாசி.

அடியகரம் ஐயாதலுக்கு உதாரணம் யாது.

பைந்தார்.

தன்னொற்றிரட்டலுக்கு உதாரணம் யாது?

வெற்றிலை.

முன்னின்றமெய் திரிதலுக்கு உதாரணம் யாது?

சேதாம்பல்.

இனமிகுதலுக்கு உதாரணம் யாது?

பெருங்குணம்.

இனையவுமென்றதனால் வரும் விகாரங்களுக்கு உதாரணம் யாது?

காராடு

மையீற்றுப் பண்புப் பெயர்கள் இயல்பாயும் புணருமோ?

ஆம் – உ–ம். செம்மையன், நன்மையன்.

தொல்லாசிரியர்கள் கருமை முதலியவற்றைப் பண்புப் பெயரென்றும் அவை விகுதியோடு புணரும்போது கருமையன் என்றல்லது கரியன் எனப் புணராவென்றும், கரியன் கரும்பூனை என்பன கருமென்னும் பண்படியாக வந்தனவென்றுங் கூறுவர்.

தெரிநிலை வினைப் பகுபதங்கட்கு எவை பகுதிகளாய் வரும்?

நடவா மடி சீ விடுகூ வேவை

நொப்போ வௌவுரி ஞுண்பொருந் திருந்தின்

தேய்பார் செல்வவ் வாழ்கே ளஃகென்

றெய்திய விருபான் மூன்றா மீற்றவுஞ்

செய்யெ னேவல் வினைப்பகாப் பதமே.

(நட வா மடி சீ விடு கூ வே வை

நொட்போ வெள உரிஞ் உண் பொருந் திரும் தின்

தேய் பார் செல் வவ் வாழ் கேள் அஃகு என்று

எய்திய இருபான் மூன்று ஆம் ஈற்றவும்

செய் என் ஏவல் வினைப்பகாப் பதமே.)

**இ–ள்.: நட .. அஃகு என்று எய்திய இருபான் மூன்று ஆம் ஈற்றவும் –**

நட வா மடி சீ விடு கூ வே வை நொ போ வெள உரிஞ் உண் பொருந் திரும் தின் தேய் பார் செல்வவ் வாழ் கேள் அஃகு என்று முதனிலையாகப் பொருந்திய இருபத்து மூன்று ஈற்றையுடைய வாய்பாடுகளெல்லாம், செய் என் ஏவல் வினைப்பகாப்பதமே – செய்யென்னும் வாய்பாட்டு ஏவல் வினைப் பகுதியாம், எ—று.

செய்யென் ஏவல் வினைப்பகாப்பதம் என்றவளவிலே செய்யெனேவற் பகாப்பதமும் அடங்குமாயினும் வா முதலிய முதனிலைகள் தாமே ஏவற் பொருளுணர்த்தாது ஆய்விகுதியோடு புணர்ந்து நின்று உணர்த்துமென், ரறிவித்தற்கு வேறு கூறினார்.

ஏவற்பகுதிக்கு உதாரணம். நடவாய். வாராய், உண்ணாய், தின்னாய், அஃகாய் எனவும், நடமின், வம்மின், உண்மின், தின்மின், அஃகுமின் எனவும் வரும். முன்னிலையேவலொருமை வினைச்சொற்கள் ஆயென்னும் விகுதி குன்றி நடவா உண் தின் அஃகு என நிற்குமென அறிக. நிற்பினும் விகுதியோடு புணர்ந்தவைகளேயாம். இப்படி விகுதி புணர்ந்துகெட்டு நிற்குஞ் சொற்கள் இன்னும் பலவுண்டு. அவையெல்லாம் பின் காட்டப்படும். உதாரணம் நடந்தான், வந்தான், மடித்தான், சீத்தான், விட்டான். கூவினான், வெந்தான், வைத்தான், நொந்தான், போயினான், வெளவினான், உரிஞினான், உண்டான், பொருநினான், திருமினான், தின்றான், தேய்ந்தான், பார்த்தான், சென்றான், வவ்வினான், வாழ்ந்தான், கேட்டான் அஃகினான் எனவரும்.

ஒரு நிகரனவாகிய வினைப்பகுதிகள் விகுதி முதலியவற்றோடு புணருங்கால் ஒரேவிதமாகவே விகாரப்பட்டு வருமோ?

இத்தெரிநிலைவினைப் பகுதிகள் விகுதியோடு புணரும்போது, தொழுதான் உண்டான் எனச் சில இயல்பாதலன்றியும், செல்சேறல் என முதனீண்டும், தா தந்தான் எனத் தனிநெடில் குறுகியும், சா செத்தான் என முதல் ஆகாரம் எகரமாகியும், கொணா கொணர்ந்தான் என முதலயலெழுத்துக் குறுகி ரகரமெய் விரிந்தும், விரவு விராவினான் என நடுக்குறில் நீண்டும், முழுகு முழுகினான், மூழ்கினான் என இயல்பும் விகாரமுமாக உறழ்ந்தும், வா வருகிறான் எனத் தனிநெடில் குறுகி ஒருயிர்மெய் விரிந்தும், கல் கற்றான் என ஈற்றுமெய் வருமெய்யாகத் திரிந்தும் செல் சென்றான் என ஈற்றுமெய் வருமெழுத்திற்கு இனமாகத் திரிந்தும் இன்னும் பலவாறு விகாரப்பட்டும் வரும்

தெரிநிலைவினைப் பகுபதங்கட்கு வினைச் சொற்களேயன்றிப் பிறசொற்கள் பகுதியாதலில்லையோ?

தெரிநிலைவினைப் பகுபதங்கட்கு நட வா முதலிய வினைச்சொற்களேயன்றிச் சிறுபான்மை பெயர்ச்சொல் இடைச்சொல் உரிச்சொற்களும் பகுதியாய் வரும்.

உ–ம்.: சித்திரித்தான், கடைக்கணித்தான் என்பவற்றின் முறையே சித்திரம், கடைக்கண் என்னும் பெயர்ச்சொற்கள் பகுதி யாயின. பொன்போன்றான். புலிநிகர்த்தான் என்பவற்றின் முறையே போல், நிகர் என்னுமிடைச்சொற்கள் பகுதியாயின. சான்றான், மாண்டான் என்பவற்றின் முறையே சால், மாண் என்னு முரிச்சொற்கள் பகுதியாயின. பிறவு மிவ்வாறு வருதல் காண்க.

முன்னிலையேவலொருமை வினைச்சொற்கள் விகுதி புணர்ந்தே வருமோ?

நடவாய் என விகுதி புணர்ந்தும், நட என விகுதி புணர்ந்து கெட்டும் வரும்

நடவா முதலிய வாய்பாட்டுப் பகுதிகள் எல்லாம் எவ்வாய்பாட்டில் அடங்கும்?

செய்யென்னும் வாய்பாட்டி லடங்கும்.

செய்யென்னும் வாய்பாட்டில் அடங்கிய கருத்து யாது.

பின்னரெடுத்தாளுதற்குக் குறிசெய்த படியாம்.

ஏவற்பகுதிகள் ஏவலின்மேல் ஒரேவல் ஈரேவலாதல் எப்படி?

செய்யென் வினைவழி விப்பி தனிவரின்

செய்வியென் னேவ விணையி னீரேவல்

(செய்என் வினைவழி விப்பி தனிவரிற்

செய்வி என் ஏவல் இணையின் ஈரேவல்)

**இ–ள்.: செய்யென் வினைவழி** – செய்யென்னும் வாய்பாட்டு முதனிலைத் தனிவினையின்பின், **விப்பி தனிவரின்** – வில்விகுதியாயினும் பிவ்விகுதியாயினுந் தனித்து வருமாயின், **செய் என் ஏவல்** – செய்யென்னு மேவலின்மேல் ஒரேவலாய்ச் செய்வியென்னும் வாய்பாட்டேவற் பகுதியாம். இணையின் **ஈர்** –ஏவல் அவ்வினையின்பின் இவ்விகுதிகள் தன்னொடும் பிறிதொடும் இணைந்து வருமாயின் செய்விப்பியென்னும் வாய்பாட்டேவற் பகுதியாம், **எ–று.**

உ–ம்.: நடப்பியாய் நடப்பிப்பியாய் வருவியாய் வருவிப்பியாய் எனவரும்.

சிறுபான்மை உரையிற்கோடலொன்னு முத்தியால் கு, சு, டு, து, பு, று என்னும் ஆறு விகுதிகளுள் ஒன்று பெற்றும் சில பகுதிகள் விகாரப்பட்டும் அப்படி வருமெனக் கொள்க.

**உ–ம்.:** போ போக்கு பாய் பாய்ச்சு உருள் உருட்டு நட் நடத்து எழு எழுப்பு துயில்துயிற்று எனவும் இயங்கு இயக்கு திருந்து திருத்து தோன்று தோற்று ஆடு ஆட்டு தேறு தேற்று.

செய்விஎன்னும் வாய்பாட்டேவலாவது யாது?

"செய்யென் வினைவழி விப்பி தனிவரிற் செய்வியெனேவல்"

ஏவலின்மே லீரேவலாதற்கு எப்படியாகும்?

"இணையினீரேவல்"

இங்கே கூறிய விகுதிகளன்றி ஏவற்பகுதிகள் வேறு விகுதி பெறுதலில்லையோ?

கு சு டு து பு று என்னும் ஆறு விகுதிகளிலொன்று பெற்றும் வரும்.

**உ–ம்.:** போக்கு பாய்ச்ச உருட்டு நடத்து எழுப்பு துயிற்று எனவரும்.

ஏவற்பகுதிகள் விகுதிபெறாது வேறுவகையால் ஏவல்மேல் ஏவலாதலில்லையோ?

இயங்கு – இயக்கு, திருந்து – திருத்து, தோன்று – தோற்று, ஆடு– ஆட்டு, தேறு– தேற்று, உருகு – உருக்கு, என விகாரப்பட்டும் வரும்.

பகுதிக்குப்புறனடைகூறுஞ் சூத்திரம் யாது?

விளம்பிய பகுதிவே றாதலும் விதியே

(விளம்பிய பகுதி வேறாதலும் விதியே)

**விளம்பிய பகுதி** – சொல்லப்பட்ட பகுதிகள், **வேறாதலும் விதியே** – வேறுபட்டு வருதலும் விதியேயாகும், **எ—று.**

**உ—ம்.:** வந்தான் வருகிறான் என்பனவற்றில் வா என்னும் பகுதி வ எனவும் வரு எனவும் வேறுபட்டு வந்தமை காண்க. அவ்வாறே செத்தான் என்பதில் என்னும் பகுதி வேறுபட்டது.

வினைமுற்று விகுதிகளெவை?

அன் ஆன் அள் ஆள் அர் ஆர் பம்மார்
அ ஆ குடு துறு என் ஏன் அல் அன்
அம் ஆம் எம் ஏம் ஓமொடும்மூர்
கடதற ஐஆய் இம்மின் இர்ஈர்
ஈயர் கயவு மென்பவும் பிறவும்
வினையின் விகுதி பெயரினுஞ் சிலவே.

(அன் ஆன் அள் ஆள் அர் ஆர் ப மார்
அ ஆ குடுதுறு என் ஏன் அல்அன்
அம் ஆம் எம் ஏம் ஓம்ஒடு உம்ஊர்
கடதற ஐஆய் இ மின் இர் ஈர்
ஈயர் கயஉம் என்பவும் பிறவும்
வினையின் விகுதி பெயரினும் சிலவே.)

**இ—ள்.: அன் ஆன்** – அன் ஆன் என்னும் இரண்டும் ஆண்பாற்படர்க்கை விகுதி, **அள் ஆள்** – அள் ஆள் என்னும் இரண்டும் பெண்பாற் படர்க்கை. **அர் ஆர் ப மார்** – அர் ஆர் ப மார் என்னும் நான்கும் பலவின்பாற் படர்க்கை. **கு டு து று என் ஏன் அல் அன்** – கு டு து று என் ஏன் அல் அன் என்னும் எட்டும் ஒருமைத்தன்மை. இவ்வெட்டனுள் டு து று என்னும் மூன்றும் ஒன்றன்பாற்படர்க்கை. **அம் ஆம் எம் ஏம் ஓம் ஒடு உம்மூர் கடதற** – அம் ஆம் எம்ஏம் ஓம் (உம் மூர்ந்த கவ்வும் டவ்வும் தவ்வும் தவ்வுமாகிய ) கும் டும் என்னும் ஒன்பதும் பன்மைத்தன்மை ஐ ஆய்இஐ ஆய் இ என்னும் மூன்று முன்னிலை ஒருமை, மின் இர் ஈர் மின் இர் ஈர் என்னும் மூன்றும் முன்னிலைப்பன்மை உம் – உம் ஒன்றும் ஆண்பாற்படர்க்கை, பெண்பாற்படர்க்கை, ஒன்றன்பாற் படர்க்கை, பலவின்பாற் படர்க்கை, என்னும் நான்கிற்கும் பொதுவாம். என்பவும் பிறவும் வினையின் விகுதி – என்பனவாகிய இம் முப்பத்தேழும் பிறவும் வினைமுற்று விகுதிகளாம்; பெயரினும் சில – பெயரினிடத்தும் இவற்றுட் சில விகுதிகளாம், எ—று.

இச்சூத்திரத்தில் அன்விகுதி ஈரிடத்திற் கூறப்பட்ட தென்னை?

முதலிற் கூறப்பட்டது ஆண்பாற்படர்க்கை விகுதி என்பதும் பின்னர் கூறப்பட்டது தன்மை ஒருமை விகுதி என்பதும் அறிவித்தற்கு.

இவ்விகுதிகளுள்ளே குறிப்புவினைமுற்று, தெரிநிலை வினைமுற்று இரண்டிற்கும் பொதுவாயுள்ள விகுதிகள் யாவை?

அன் ஆன் அள் ஆள் அர் ஆர் அ டு து று என் ஏன் அம் ஆம் எம் ஏம் ஓம் ஐ ஆய் இ இர் ஈர் என்னும் இருபத்திரண்டுமாம்.

தெரிநிலை வினைமுற்று ஒன்றுக்குமே உரிய விகுதிகள் யாவை?

ப மார் ஆ கு அல் அன் கும் டும் தும் றும் மின் ஈயர் க ய உம் என்னும் பதினைந்துமாம்.

உ–ம்.: (1) நடந்தனன், நடந்தான், இவை ஆண்பாற்படர்க்கை.

(2) நடந்தனள், நடந்தாள், இவை பெண்பாற்படர்க்கை,

(3) நடந்தனர், நடந்தார், நடப்ப, நடமார் இவை பலர் பாற்படர்க்கை.

(4) நடந்தன , நடவா இவை பலவின்பாற்படர்க்கை

(5) நடக்கு, உண்டு, நடந்து, சேறு, நடந்தனென், நடந்தேன் நடப்பல், நடப்பன் இவை ஒருமைத்தன்மை.

(6) நடந்தது, கூயிற்று, குண்டுகட்டு இவை ஒன்றன்படர்க்கை.

(7) நடப்பம், நடப்பாம், நடப்பெம், நடப்பேம், நடப்போம், நடக்கும், உண்டும், நடந்தும், சேறுமை இவை தன்மைப் பன்மை.

(8) நடந்தனை, நடந்தாய், நடத்தி இவை ஒருமை முன்னிலை

(9) நடமின், நடந்தனிர், நடந்தீர், இவை பன்மைமுன்னிலை

(10) நிலீயர், நடக்க, வாழிய இவை வியங்கோள்.

(11) நடக்கும் இது செய்யுமென்னு முற்று.

(12) பிறவுமென்றதனால், மறால் , அழேல் சொல்லிக்காண் என ஆல், ஏல், காண் முதலிய விகுதிகளும் வரும்.

குறிப்பு வினைமுற்றுக்கு உதாரணம்.: கரியன், கரியான், கரியள், கரியாள், கரியர், கரியார், கரியன, குறுந்தாட்டு, கரிது, குழையிற்று கரியென், கரியேன், கரியம், கரியாம், கரியெம், கரியேம், கரியோம், கரியை, கரியாய், வில்வி, கரியிர், கரியீர் என வரும்.

இச்சூத்திரத்திற் கூறப்பட்ட விகுதிகளுள்ளே பெயர்விகுதிகள் எத்தனை?

அன் ஆன் அள் ஆள் அர் ஆர் மார் அ து இ என்னும் பத்துமாம்.

உ–ம்.: குழையன், வானத்தான், குழையள், வானத்தாள், குழையர், வானத்தார், தேவிமார், குழையன, யாது, பொன்னி.

இதிற்கூறப்படாத பெயர் விகுதிகள் யாவை?

மன் மான் கள் வை தை கை பி முன் அ ல் ன் ள் ர் வ் முதலியனவாம்.

உ–ம்.: வடமன், கோமான், கோக்கள், அவை, எந்தை, எங்கை, எம்பி, எம்முன், தோன்றல், பிறன், பிறள், பிறர், அவ், என வரும்.

தெரிநிலைவினைப் பெயரெச்ச விகுதிகள் யாவை?

தெரிநிலைவினைப் பெயரெச்ச விகுதிகள் அ, உம் என்னும் இரண்டுமாம்.

உ—ம்.: செய்த, செய்கின்ற, செய்யும் என வரும்.

குறிப்புவினைப் பெயரெச்ச விகுதி யாது?

குறிப்புவினைப் பெரெச்ச விகுதி அ ஒன்றேயாம்.

உ—ம்.: கரிய என வரும்.

தெரிநிலைவினை வினையெச்ச விகுதிகள் யாவை?

தெரிநிலைவினை வினையெச்ச விகுதிகள் உ, இ, ய், பு, ஆ, ஊ, என அ, இன் ஆல், கால், எல், எனின், ஆயின், எனும், கு, இய இயர், வான், பான், பாக்கு கடை, வழி ; இடத்து, உம், மல், மை, மே என்னும் இருபத்தெட்டும் பிறவுமாம். இவற்றுள், இறுதியில் கூறிய மல் மை, மே என்னும் மூன்று விகுதிகளும் எதிர்மறையில் வரும்.

உ—ம்.: நடந்து, ஓடி, போய், உண்குபு உண்ணா, உண்ணூ, உண்ணென, உண்ண, உண்ணின், உன்டால், உண்டாக்கால் உண்டானேல், உண்டானெனின், உண்டானாயின், உண்டானேனும், உணற்கு உண்ணிய, உண்ணியர், செய்வான் உண்பான், உண்பாக்கு, செய்தக்கடை, செய்தவழி செய்தவிடத்து, காண்டலும், உண்ணாமல் உண்ணாமை, உண்ணாமே என வரும்.

குறிப்புவினை வினையெச்ச விகுதிகள் யாவை?

குறிப்புவினை வினையெச்ச விகுதிகள் அ, றி, து, ஆல், மல், கால், காடை, வழி, இடத்து என்னும் ஒன்பதும் பிறவுமாம்.

உ—ம்.: மெல்ல, அன்றி, அல்லது, அல்லால், அல்லாமல் அல்லாக்கால் அல்லாக்கடை, அல்லாவழி, அல்லாவிடத்து என வரும்.

தொழிற்பெயர் விகுதிகள் யாவை?

தொழிற்பெயர் விகுதிகள் தல், அல், ஐ, கை வை,கு, பு, உ, தி, சி,வி, உள், காடு, பாடு, அரவு, ஆனை, மை, து என்னும் பத்தொன்பதும் பிறவுமாம்.

உ—ம்.: நடத்தல், ஆடல், வாட்டம், கொலை, நடக்கை, பார்வை, போக்கு, நடப்பு, வரவு, மறதி, புணர்ச்சி , புலவி, செய்யுள், சாக்காடு, கோட்பாடு, தேற்றரவு, வாரானை, நடவாமை பாய்த்து எனவரும். மை விகுதி செய்தமை செய்கின்றமை, என இறந்த காலவிடைநிலை நிகழ்கால இடை நிலைகளோடு கூடியும் வரும். துவ்விகுதி அவர் செய்தது, செய்கின்றது, செய்வது என முக்காலவிடை நிலைகளோடு கூடியும் வரும்.

பண்புப்பெயர் விகுதிகள் யாவை?

பண்புப்பெயர் விகுதிகள் மை, ஐ, சி, பு, உ, கு, றி, று அம், நர், என்னும் பத்தும் பிறவுமாம்.

உ—ம்.: நன்மை, தொல்லை, மாட்சி, மாண்பு, மழவு, நன்கு, நன்றி, நன்று, நலம் நன்னர், என வரும்.

பிறவினை விகுதிகள் யாவை?

பிறவினை விகுதிகள் வி, பி, கு, சு, டு, து, பு, று என்னும் எட்டுமாம்.

உ—ம்.: செய்வி, நடப்பி, போக்கு, பாய்ச்சு, உருட்டு, நடத்து, எழுப்பு, துயிற்று, என வரும்.

கரை தேய் என வருந் தன்வினை பிறவினைகளுக்குப் பொதுவாகிய முதனிலைகள், சிறுபான்மை இவ்விகுதி வேண்டாது, கரைத்தான், தேய்த்தான்,

கரைத்திலன், தேய்த்திலன், கரைக்கின்றான், தேய்க்கின்றான்; கரைக்கின்றிலன், தேய்க்கின்றிலன்; கரைப்பான், தேய்ப்பான், கரைக்கான், தேய்க்கான், எனப் பிறவினைப் பொருளைத் தரும்போது, வல்லெழுத்து மிக்கும் கரைந்தான், கரைந்திலன், கரைகிறான் கரைகின்றிலன்; கரைவான், கரையான், எனத் தன்வினைத் பொருளைத் தரும்போது வல்லெழுத்து மிகாதும் வருமென்றறிக.

வினைமுதற்பொருள், செயப்படுபொருள், கருவிப் பொருள்களை யுணர்த்தும் விகுதிகளெவை?பெயரிடைநிலையாவது யாது?

இலக்கியங் கண்டதற் கிலக்கண மியம்பலிற்
பகுதி விகுதி பகுத்திடை நின்றதை
வினைப்பெய ரல்பெயர்க் கிடைநிலை யெனலே.

(இலக்கியம் கண்டு அதற்கு இலக்கணம் இயம்பலின்
பகுதி விகுதி பகுத்து இடைநின்றதை
வினைப்பெயர் அல்பெயர்க்கு இடைநிலை எனலே)

**இ–ள்.: இலக்கியம்கண்டு அதற்கு இலக்கணம் இயல்பலின்** – அறிவுடையோராலே நியமிக்கப்பட்ட இலக்கியத்தைப் பார்த்து அவ்விலக்கியத்திற்கு அவ்விலக்கியத் தினமைதியேயிலக்கணமாகச் சொல்லுதலால், **பகுதி விகுதி பகுத்து** – முன்செல்லப்பட்ட பகுதியையும் விகுதியையும் பிரித்து, **இடை நின்றதை**– நடுநின்றதை, வினைப்பெயர் அல்பெயர்க்கு இடைநிலை எனல் – வினையாலணையும் பெயரல்லாத பெயர்களுக்கு இடைநிலையென்று சொல்லுக, **எ–று.**

பெயரிடைநிலை எத்தனை?

ஞகர வகர சகர தகர இச் என ஐந்து இடைநிலைகள்.

உ–ம்.: அறிஞன், வினைஞன், கவிஞன் என்பன ஞகரவிடைநிலைபெற்றன. கதிரவன், வானவன், ஒதுவான், பாடுவான் என்பன வகரவிடைநிலை பெற்றன. இடைச்சி; வலைச்சி, புலைச்சி என்பன சகரவிடைநிலை பெற்றன. வண்ணாத்தி, பாணத்தி, மலையாட்டி, வெள்ளாட்டி என்பன தகர இடை நிலை பெற்றன. செட்டிச்சி தச்சிச்சி என்பன இச்சிடைநிலை பெற்றன.

பெயரிடைநிலை என்ன பகுபதத்தில் வரும்?

பெயர்ப்பகுபதத்திலேயே வருமென்பது, "வினைப்பெயரால் பெயர்க் கிடைநிலை யெனலே" என்றதனாற் பெறப்படும்.

இ, ஐ, அம் என்னும் மூன்று விகுதிகளும் வினைமுதற் பொருளையுஞ் செயப்படு பொருளையுங் கருவிப்பொருளையும் உணர்த்தும்.

உ–ம்.: அலரி, பறவை, எச்சம் என்பன, அலர்வது, பறப்பது, எஞ்சுவது என வினைமுதற்பொருளை உணர்த்தலால் இ ஐ அம் வினைமுதற்பொருள் விகுதி. ஊருணி, தொடை, தொல்காப்பியம் என்பன, ஊராரால் உண்ணப்படுவது, தொகுக்கப்படுவது. தொல்காப்பியராற் செய்யப்பட்டது எனச் செயப்படுபொருளை யுணர்த்தலால் இ ஐ அம் செயப்படு பொருள் விகுதி. மண்வெட்டி, பார்வை, நோக்கம் என்பன மண்ணை வெட்டுங்கருவி, பார்க்குங்கருவி, நோக்குங் கருவி எனக் கருவிப்பொருளை யுணர்த்தலால் இ ஐ அம் கருவிப்பொருள் விகுதி.

துணிவுப்பொருளுணர்த்தும் விகுதிகளெவை?

விடு, ஒழி விகுதிகள் துணிவுப்பொருளை யுணர்த்தும்

**உ–ம்.:** செய்துவிட்டான், செய்தொழிந்தான் என வரும்.

தற்பொருட்டுப் பொருளுணர்த்தும் விகுதிகளெவை?

கொள் விகுதி வினைப்பயன் வினைமுதலைச் சென்றடைதலாகிய தற்பொருட்டுப் பொருளையுணர்த்தும்.

**உ–ம்.:** அடித்துக்கொண்டான் என வரும்.

செயப்பாட்டு வினைப்பொருளுணர்த்தும் விகுதிகளெவை?

படு உண் விகுதிகள் செயப்பாட்டு வினைப்பொருள் உணர்த்தும்.

**உ–ம்.:** கட்டப்பட்டான், கட்டுண்டான் என வரும்.

தன்மைப் பொருளுணர்த்தும் விகுதிகளெவை?

மை விகுதி தன்மைப்பொருள் உணர்த்தும்

**உ–ம்.:** பொன்மை, ஆண்மை என வரும்

பகுதிப்பொருள் விகுதிகளெவை?

இரு, இடு என்பன தமக்கென வேறுபொருளின்றிப் பகுதிப்பொருள் விகுதியாய் வரும்.

**உ–ம்.:** எழுந்திருக்கின்றான், உரைத்திடுகின்றான் என வரும்.

புணர்ந்து பின் கெடுதலுடைய விகுதிகள் யாவை?

முன்னிலையேவலொருமை ஆய் விகுதியும், பெயரெச்ச விகுதியும் தொழிற்பெயர் விகுதியும், வினைமுதற் பொருளை யுணர்த்தும், இகரவிகுதியும், செயப்படுபொருளை யுணர்த்தும் ஐ விகுதியும், பகுதியோடு புணர்ந்து பின் கெடுதலும் உண்டு. கெடினும், புணர்ந்து நின்றாற்போலவே தம்பொருளை யுணர்த்தும்.

**உ–ம்.:** நீ நட, நீ நடப்பி, நீ செல் என்பவைகளிலே ஆய்விகுதி புணர்ந்து கெட்டது. கொல்களிறு, ஓடாக் குதிரை என்பவைகளிலே பெயரெச்ச விகுதிகள் புணர்ந்து கெட்டன. அடி, கேடு இடையீடு என்பவைகளிலே தல் என்னும் தொழிற்பெயர் விகுதி புணர்ந்து கெட்டது. காய், தளிர், பூ கனி, திரை, நுரை, அலை என்பவைகளிலே வினைமுதற் பொருளுணர்த்தும் இகரவிகுதி புணர்ந்து கெட்டது. ஊண் தீன் கோள் என்பவைகளிலே செயப்படு பொருளுணர்த்தும் ஐகாரவிகுதி புணர்ந்து கெட்டது.

சிறுபான்மை வரிப்புனைபந்து என்பதில் வரிந்து என்னும் வினையெச்ச விகுதியும் கொள்வாருங் கள்வருநேர் என்பதில் நேர்வர் என்னு முற்றுவிகுதியும் கெட்டுவந்தன. இவ்வாறே பிறவிகுதிகளுள்ளுஞ் சில கெட்டு வருமெனவும் கொள்க.

இறந்தகால வினையிடைநிலை யுணர்த்துஞ் சூத்திரம் யாது?

தடறவொற் றின்னே யைம்பான் மூவிடத்

திறந்த காலந் தருந்தொழி லிடைநிலை.

(தடறஒற்று இன்னே ஐம்பால் மூவிடத்து

இறந்த காலம் தரும்தொழில் இடைநிலை)

**இ–ள்.: த ட ற ஒற்று இன்–** தகர டகர றகர மெய்களும் இன்னென்னுங்

குற்றொற்றும், **ஐம்பால் மூவிடத்து** – ஐம்பான் மூவிடங்களிலும், **இறந்தகாலம் தரும் தொழில் இடைநிலை**– இறந்த காலத்தைக் காட்டும் வினைப் பகுபதங்களினுடைய இடை நிலைகளாகும், **எ–று.**

இறந்தகால வினையிடைநிலைகள் யாவை?
"தடறவொற்றின்னே"

அவை எப்பாலிடங்களில் வரும்?

"ஐம்பான் மூவிடத்து"

**உ–ம்.:** நடந்தான், நடந்தாள், நடந்தார், நடந்தது, நடந்தன, நடந்தேன், நடந்தேம், நடந்தாய், நடந்தீர் எனவும், உண்டான் எனவும், சென்றான் எனவும், உறங்கினான் எனவும் வரும். சிறுபான்மை இன்னிடைநிலை எஞ்சியது எனக் கடைகுறைந்தும், போனது என முதல் குறைந்தும் வரும்.

நிகழ்காலவினை யிடைநிலைகள் எவை?

ஆநின்று கின்று கிறுமூ விடத்தின்

ஐம்பா னிகழ்பொழு தறைவினை யிடைநிலை.

(ஆதின்று கின்று கிறு மூவிடத்தின்

ஐம்பால் நிகழ்பொழுது அறைவினை இடைநிலை)

**இ–ள்.: ஆநின்று கின்று கிறு** – ஆநின்றெனபதும் கின்றெனபதுங் கிறுவெனபதும், **ஐம்பான் மூவிடத்தின்** – ஐம்பான் மூவிடங்களிலும், **நிகழ்பொழுது அறைவினை இடைநிலை** – நிகழ்காலத்தைக் காட்டும் வினைப் பகுபதங்களினுடைய இடைநிலைகளாகும், **எ–று.**

**உ–ம்.:** நடவாநின்றான், நடக்கின்றான், நடக்கிறான் எனவரும். மற்றைப் பாலிடங்களினும் ஒட்டிக்கொள்க.

எதிர்கால இடைநிலையும், முக்கால விடைநிலைகளுக்கும் புறநடையுங் கூறுஞ் சூத்திரம் யாது?

பவ்வ மூவிடத் தைம்பா லெதிர்பொழு

திசைவினை யிடைநிலை யாமிவை சிலவில.

(பவ்வ மூவிடத்து ஐம்பால் எதிர்பொழுது

இசைவினை இடைநிலை ஆம் இவை சில இல)

**இ–ள்.: பவ்வ** – பகரமெய்யும் வகரமெய்யும், **ஐம்பால் மூவிடத்து** – ஐம்பான் மூவிடங்களிலும், **எதிர்பொழுது இசைவினை இடைநிலை ஆம்** – எதிர்காலத்தைக் காட்டும் வினைப் பகுபதங்களினுடைய இடைநிலைகளாகும்; **இவை சில இல** – இம்முக்காலவிடை நிலைகளும் சில முற்று வினையெச்ச வினைகட்டு இலவாம், **எ–று.**

**உ–ம்.:** நடப்பான், வருவான், நடப்பேன், வருவேன், நடப்பாள், செய்வோம், செய்வார், வருவது, நடப்பது, நடப்பன, செய்வன எனவரும்.

பகரவகரங்கள் எப்பாலிடங்களில் எதிர்கால இடைநிலையாய் வரும்?
"பவ்வமூவிடத் தைம்பா லெதிர்பொழு திசைவினை யிடைநிலையாம்"

மேற்கூறிய தகரவொற்றுமுதல் வகரவொற்றீறாகவுள்ள முக்கால இடைநிலைகள் எல்லாம் எல்லா வினைகட்கும் உண்டோ?

"இவை சிலஇல" என்றதனாற் சிலவினைகட்கில்லையாம்.

சிலவில என்றதனால் விலக்கப்பட்ட வினைசொற்கள் இவையென்பதும், இடைநிலை மாத்திரமன்று இறுதிநிலையுங் காலங்கெட்டு மென்பதும் உணர்த்தும் சூத்திரம் யாது?

றவ்வொ டுகர வும்மைநிகழ் பல்லவுக்
கழிவுங் கவ்வோ டெதிர்வுமின் னேவல்
வியங்கோ ளிம்மா ரெதிர்வும் பாந்தஞ்
செலவொடு வரவுஞ் செய்யுநிகழ் பெதிர்வும்
எதிர்மறை மும்மையு மேற்கு மீங்கே.

(றவ்வொடு உகர உம்மை நிகழ்பு அல்லவும்,
தவ்வொடு இறப்பும் எதிர்வும், டவ்வொடு
கழிவும், கவ்வோடு எதிர்வும், மின்ஏவல்
வியங்கோள் இமார் எதிர்வும், ப அந்தம்
செலவொடு வரவும், செய்யும் நிகழ்வு எதிர்வும்
எதிர்மறை மும்மையும் ஏற்கும் ஈங்கே)

இ–ள்.: றவ்வொடு உகர உம்மை நிகழ்வு அல்லவும் – றகரமெய்யோடு கூடி உகரவிகுதியும் உம்விகுதியும் இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும், டவ்வொடு (உகர உம்மை) கழிவும் – டகர மெய்யோடு கூடி உகரவிகுதியும் உம் விகுதியும் இறந்த காலத்தையும், கவ்வோடு (உகர உம்மை) எதிர்வும் – ககர மெய்யோடு கூடி உகரவிகுதியும் உம்விகுதியும் எதிர்காலத்தையும், மின் ஏவல் வியங்கோள் இ மார் எதிர்வும் – மின் விகுதியும் ஏவல் வினைகளும் வியங்கோள் விகுதிகளும் இகர விகுதியும் மார்விகுதியும் எதிர்காலத்தையும், ப அந்தம் செலவொடு வரவும் – பகர விகுதி இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும், செய்யும் நிகழ்பு எதிர்வும் – செய்யுமென்னும் வாய்பாட்டு முற்று விகுதி நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும், எதிர்மறை மும்மையும் – எதிர்மறை ஆகாரவிகுதி மூன்று காலத்தையும், ஏற்கும் ஈங்கே – ஏற்றுவரும் மேலைச் சூத்திரத்து இவை சிலவில வெண்றவைகளுள், எ–று.

றுவ்வீற்று றும்மீற்று வினைச்சொற்கள் சில எக்காலங்காட்டும்?

"றவ்வொ டுகர வும்மை நிகழ்வு அல்லவும்" என்றமையால் இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும் காட்டும்.

உ–ம்.: சென்று சென்றும் என்பன முறையே சென்றேன் சென்றோம் எனப் பொருள்பட்டு இறந்தகாலம் காட்டின.

சேறு சேறும் என்பன முறையே செல்வேன் செல்வேம் எனப் பொருள்பட்டு எதிர்காலங் காட்டின.

துவ்வீறும் தும்மீறும் எக்காலங்காட்டும்?

(உகாரவும்மை) "தவ்வொடிறப்பு மெதிர்வும்"

உ–ம்.: 1. வந்து வந்தும் என்பன முறையே வந்தேன் வந்தேம் எனப் பொருள்பட்டு இறந்தகாலம் காட்டின.

2.வருது வருதும் என்பன முறையே வருவேன் வருவேம் எனப் பொருள்பட்டு எதிர்காலங் காட்டின.

டுவ்வீறும் டும்மீறும் எக்காலங் காட்டும்?

("உகரவும்மை") "டவ்வொடு கழிவும்"

உ–ம் (ரு) உண்டு உண்டும் என்பன முறையே உண்டேன் உண்டேம் எனப் பொருள்பட்டு இறந்தகாலங் காட்டின.

குவ்வுறும் கும்மீறும் எக்காலங் காட்டும் ("உகரவும்மை") "கவ்வோடெதிர்வும்"

உ–ம். உண்கு உண்கும் என்பன முறையே உண்பேன் உண்போம் எனப் பொருள்பட்டு எதிர்காலங்காட்டின.

மின்னீறு ஏவல் வியங்கோளீறு இகரவீறு மாரீறு என்னும் இவை எக்காலங்காட்டும்?

"மின்னேவல் வியங்கோளிம்மாரெதிர்வும்"

உ–ம். (எ) உண்மின் உண்ணீர் உண்ணும் உண்ணாய் உண் என மின் ஈர் உம் ஆய் என்னும் ஏவல் விகுதிகளும், உண்க, வாழிய, வாழியர், எனக்க இய இயர் என்னும் வியங்கோள் விகுதிகளும் சேறி என இகரவிகுதியும் உண்மார் என மார்விகுதியும் எதிர்காலங்காட்டின.

சேறி என்பது செல்வாய் எனவும் உண்மார் என்பது உண்பார் எனவும் பொருள்படும்.

பகரவீறு எக்காலங்காட்டும்?

"பாந்தஞ்செலவொடு வரவும்"

உ–ம். (அ) உண்ப என்பது உண்டார் எனவும் உண்பார் எனவும் பொருள்பட்டு இறந்தகாலமும் எதிர்காலமுங் காட்டின.

செய்யும் என்னும் வாய்பாட்டுமுற்று எக்காலங்காட்டும்?

"செய்யும் நிகழ்பு எதிர்வும்"

உ–ம். (க) உண்ணும் என்னும் செய்யுமென் வாய்பாட்டு முற்று நிகழ்காலமும் எதிர்காலமுங் காட்டிற்று.

எதிர்மறை ஆகாரவீறு எக்காலங்காட்டும்?

"எதிர்மறை மும்மையுமேற்கும்"

(1) பண்டு உண்ணா, இன்று உண்ணா, நாளை உண்ணா, என எதிர்மறை முக்காலமுங் காட்டிற்று.

(11) இகரவிகுதி எழுத்துப்பேறாய் வருந் தகரமெய்யின் மேல் ஏறிவரும்; அவ்விகுதி சென்றி செல்லாநின்றி என இறந்த காலவிடைநிலை நிகழ்கால விடைநிலைகளோடு கூடி வரும் போது அவை காலங்காட்டலாற்றான் காலங்காட்டாது நிற்கும்.

இவை சிலவில வென்றவைகளுள்ளே, காலங்காட்டும் விகுதிகளை மாத்திரஞ்சொல்லிக் காலங்காட்டும் பகுதியையும் பிறவிடைநிலையையுஞ்

சொல்லாமையால் அவை சிறுபான்மையின வந்தவிடங்களிற் கண்டு கொள்க என்றாராயிற்று. அவை வருமாறு.

கு டு று என்னும் மூன்றுயிர்மெய்யீற்றுச் சில குறிலிணைப் பகுதிகள் தம்மொற்றிரட்டி இறந்தகாலமுங்காட்டும்.

**உ–ம்.:** புகு – புக்கான், நகு – நக்கான் எனவும், தொடு – தொட்டான், விடு – விட்டான் எனவும் உறு – உற்றான், பெறு – பெற்றான் எனவும் வரும்.

யகரவிடைநிலை இறந்தகாலமும், ஆகியடந்து ஆவிருந்து என்னும் இரண்டிடை நிலைகளும் நிகழ்காலமுங் காட்டும்.

உ–ம். போயது எனவும், உண்ணாகிந்தான், உண்ணாவிருந்தான் எனவும் வரும்.

இசின் என்பது இறந்தகால விடைநிலையாயும் மகரமெய்யும் மன் என்பதும் எதிர்கால விடைநிலைகளாயுஞ் செய்யுளில் வரும்.

உ–ம். என்றிசினோர் எனவும் என்மர், என்மனார் எனவும் வரும். ஈங்கே என்ற மிகையால் வருதி என இகரவிகுதி நிகழ்காலங் காட்டுதலையும் பெயரெச்ச வினையெச்சங்களில் இடைநிலையின்றி விகுதிகாலம் காட்டுதலையும் அமைத்துக் கொள்க.

வடமொழியாக்கங் கூறுஞ் சூத்திரம் யாது?

இடையி னான்கு மீற்றி லிரண்டும்
அல்லா வச்சை வருக்கமுத லீறி
யவ்வாதி நான்மை ளவ்வாகு மையைம்
பொதுவெழுத் தொழிந்தநா லேழும் திரியும்.
(இடையில் நான்கும் ஈற்றில் இரண்டும்
அல்லா அச்சு ஐவருக்கு முதல்ஈறு
ய ஆதி நான்மை ள் ஆகும் ஐயைம்
பொது எழுத்து ஒழிந்தநா லேழும் திரியும்).

**இ–ள்.: இடையில் நான்கும் ஈற்றில் இரண்டும் அல்லா அச்சு** – ஆரிய மொழியுள் அச்சென்று வழங்கும் உயிர் பதினாறனுள்ளும் இடையினின்ற ருரூ லுலூ என்னு நான்கும் ஈற்றினின் அம் அ; என்னும் இரண்டும் ஒழிந்த அ, ஆ, இ, ஈ, உ, ஊ எ ஐ ஒ ஔ என்னும் பத்தும் ஐவருக்க முதல் ஈறு–அல்லெ்ன வழங்கும் முப்பத்தேழு மெய்யுள்ளுங் க ச ட த ப என்னும் ஐந்து வருக்கத்தினிடையில் உரப்பியும் எடுத்துங் கனைதுஞ் சொல்லப்பட்டு நிற்கும் மூன்றுமொழிந்த க ங ச ஞ ட ண த ந ப ம என்னும் பத்தும் யரலவ என்னும் நான்கும், ள ஆகும் ஐயைம்பொது எழுத்து ளவ்வும் ஆகிய இருப்பதைந்தும், தமிழிற்கும். ஆரியத்திற்கும் பொதுவெழுத்தாம்; ஒழிந்த நாலேழும் திரியும்– இவையன்றி மேல் உயிருள் ஒழிந்த ஆறும் ஐந்து வருக்கங்களினும் இடைகளில் ஒழிந்த பதினைந்தும், முப்பதாமெய் முதலான எட்டனுள் ளகர மொழிந்த ஏழுமான இருபத்தெட்டும் ஆரியத்திற்குச் சிறப்பெழுத்தாய்த் தமக்கேற்ற பொதுவெழுதாகத் திரிந்து வடமொழியாம். எ–று.

வடமொழிச் சொற்கள் தமிழில் வரும்போது வடமொழிஎழுத்துகள் எவ்வாறு வரும்?

"பொதுவெழுத்தொழிந்த நாலேழுந்திரியும்"

தமிழ்க்கும் வடமொழிக்கும் பொதுவெழுத்தெவை?

"இடையில் நான்கும் ஈற்றில் இரண்டும் அல்லா அச்சு
ஐவருக்க முதலா யவ்வாதி நான்மை ளவ்வாகும்
ஐயைம்பொது எழுத்து"

தமிழில் இல்லாத வடமொழியெழுத்தெவை?

"ஒழிந்தநாலேழும்"

வடமொழியில் எல்லாமாக எழுத்தெத்தனை?

"ஐயைம்பொது ஒழிந்தநாலேழு" ஆகஐம்பத்துமூன்று.

வடமொழி உயிரெழுத்தெத்தனை?

பதினாறு

வடமொழி மெய்யெழுத்தெத்தனை?

முப்பத்தேழு

உயிரெழுத்துக்கு வடமொழியில் என்ன பெயர்?

அச்சு, சுரம், என்பன

மெய்யெழுத்து என்ன பெயர்பெறும்?

அல் எனவும் வியஞ்சனம் எனவும் படும்

ஐவருக்கமாவது யாது?

வடமொழியிலே தனித்தனி ஐங்கூற்றெழுத்தாகவுள்ள
க ச ட த ப வென்னும் ஐந்து வருக்கமுமாம்.

உ–ம். க, க2, க3, க4, ங இவை ஐந்தும் கவ்வருக்கம் மற்றையவுமிப்படியே தத்தம் மெல்லெழுத்தோடு ஐவைந்தாக வரும்.

தற்சம மொழியாவது யாது?

ஒலி வேறுபாடின்றி வந்து வழங்கும் வடசொற்கள் தற்சமம் எனப்படும்.

உ–ம் கமலம், காரணம்

தற்பவமாவது யாது?

தமிழிலே ஏற்ற எழுத்தின்மையால் ஒலிதிரிந்து வந்து வழங்கும் வடசொற்கள் தற்பவம் எனப்படும். ஹர – ஜ் அரண். ஞானம் – ஞானம்.

ஐவருக்கத்தில் இடைநின்ற மூன்றும் எவ்வாறுச்சரிக்கப்படும்?

இரண்டு மூன்று நான்கு முறையே உரப்பியும் எடுத்துங் கனைத்துங் கூறப்படும்.

உ–ம்.: கவ்வருக்கத்தில் இரண்டாங் ககரம் உரப்பியும் மூன்றாங் ககரம் எடுத்தும், நான்காங் ககரம் கனைத்து முச்சரிக்க படுதல் காண்க.

205. மேலே திரியுமென்றவற்றுள் இவை இவை இன்னவாறு திரியு மென்பதுணர்த்துஞ் சூத்திரம் யாது?

அவற்றுள்,
ஏழாமுயி ரிய்யு மிருவுமை வருக்கத்
திடையின் மூன்று மவ்வம் முதலும்
எட்டே யவ்வு முப்பது சயவும்
மேலொன்று சடவு மிரண்டு சதவும்
மூன்றே யகவு மைந்திரு கவ்வும்
ஆவீ றையு மீயீ றிகரமும்.

(அவற்றுள்,
ஏழாம் உயிர் இய்யும் இருவும் ஐவருக்கத்து
இடையின் மூன்றும் அவ்வம் முதலும்
எட்டே யவ்வும் முப்பது சயவும்
மேல்ஒன்று சடவும் இரண்டு சதவும்
மூன்று அகவும் ஐந்து இரு கவ்வும்
ஆஈறு ஐயும் ஈ ஈ று இகரமும்)

**இ—ள்.: அவற்றுள்** – மேற்றிரியுமென்றவற்றுள், **ஏழாம் உயிர் இயும் இருவும்** – சிறப்பெழுத்தாகிய ஏழாமுயிர் இகரமும் இருவுமாம். **ஐவருக்கத்து இடையின் மூன்றும் அவ்வம் முதலும்** – ஐந்து வருக்கங்களினும் இடைநின்ற மூன்றும் அவ்வவ் வருக்கங்களின் முதலெழுத்தாம்; **எட்டே யவ்வும்** – எட்டாமெய்யான சவ்வருக்கத்துள் எடுத்துச் சொல்லுமெய் ஒரோவி டத்து யகரமுமாம்; **முப்பது சயவும்** – முப்பதாமெய் மொழி முதற்கட் சகரமும் இடைக்கண் யகரமுமாம்; **மேல் ஒன்று சடவும்**–முப்பத்தொன்றாமெய் மொழிமுதற்கட் சகரமும் இடைக்கண் டகரமுமாம்; **இரண்டு சதவும்** – முப்பத்திரண்டாமெய் மொழிமுதற்கட் சகரமும் இடைக்கண் தகரமுமாம்; **மூன்று அகவும்** – முப்பத்தமுன்றாமெய் மொழிமுதற்கண் அகரமும் இடைக்கட் ககரமுமாம் **ஐந்து இரு கவ்வும்** – முப்பத்தைந்தாமெய் இரண்டு ககரமாம்; **ஆ ஈறு ஐயும்** – மொழியிறுதி ஆகாரம் ஐகாரமாம் **ஈ ஈறு இகரமும்** – மொழியிறுதி யீகாரம் இகரமாம், **எ—று.**

மேல் 'திரியும்' எனப் பொதுவிதி போந்தவற்றுள், பயின்றுவருவனவற்றிற்குத் திரிபுகூறி, ஏனைய வந்தவழிக் காண்கவென்பார். இகரமுமாகுமெனப் பயனிலை கொடுத்து முடியாது இகரமுமென அவாய் நிலையாக முடித்தார்.

வடமொழி ஏழாமுயிராகிய இருவென்னு மெழுத்துத் தமிழில் எப்படித்திரியும்?

"ஏழாமுயிரிய்யுமிருவும்"
உ–ம். இருஷபம்–இடபம்
இருஷி–இருடி.

ஐவருகத்தினும் இடைநின்ற மும்முன்றெழுத்துக்களும் எப்படித்திரியும்?
"ஐவருக்கத்திடையின் மூன்றும் அவ்வம்முதலும்"

உ–ம். நகம், நாகம், மேகம், இம்மூன்று ககரமும் வடமொழியில் முறையே இரண்டாம் மூன்றாம் நான்காம் ககரங்கள் அவை தமிழில் முதற்ககரமாகத் திரிந்தன. ச ட த ப க்க ளுமிவ்வாறே வரும்.

எட்டாமெய்யாகிய ஜகரம் சகரமாகவன்றி வேறெழுத்தாகவுந் திரியுமா?

"எட்டேயவ்வும்"

உ–ம். கஜம்–கயம்

முப்பதாமெய் எப்படித்திரியும்?

"முப்பதுசயவும்"

உ–ம். சங்கரன்– சங்கரன்.

தேசம் – தேயம்.

முப்பத்தொராமெய்யாகிய ஷகரம் எப்படித்திரியும்?

"மேலொன்று சடவும்"

உ–ம். ஷண்முகன்–சண்முகன்.

விஷம்–விடம்.

முப்பத்திரண்டாமெய்யாகிய ஸகரம் எப்படித்திரியும்?

"(மேல்) இரண்டுசதவும்"

உ–ம். மாஸம்–மாசம்.

மாஸம்–மாதம்.

ஸபை – சபை.

முப்பத்து மூன்றா மெய்யாகிய ஹ எப்படித்திரியும்?

"(மேல்) மூன்றே அகவும்"

உ–ம். ஹர– அரன்.

மோஹம் – மோகம்.

மஹீ–மகி.

ஹ மொழிமுதலில் அகரமும், இடையிலும் கடையிலும் ககரமுமாம்.

113. முப்பத்தைந்தா மெய்யாகிய க்ஷ எப்படித்திரியும்?

"(மேல்) ஐந்திருகவ்வும்"

உ–ம். பக்ஷம்–பக்கம்.

இது மொழிமுதலில் ஒருககரமாம்.

உ–ம். க்ஷீரம்–கீரம்.

114. ஆகாரவீறும் ஈகாரவீறும் எப்படியாகும்?

"ஆவீறு ஐயும் ஈயீறு இகரமும்"

உ–ம். மாலா –மாலை.

மஹீ–மகி. ஸ்திரீ–ஸ்திரி.

தமிழ் வழக்கின்படி மொழிமுதலாகாத சில வெழுத்துக்களைத் தமக்கு முதலாகவுடைய வடமொழிகள் தமிழிலே வரும்போது இவற்றை முதலாகப்

பெறுமென்றுணர்த்துஞ் சூத்திரம் யாது?

ரவ்விற் கம்முத லாமுக் குறிலும்
லவ்விற் கிம்முத லிரண்டும் யவ்விற்
கிய்யு மொழிமுத லாகிமுன் வருமே

(ரவ்விற்கு அம் முதல் ஆம் முக்குறிலும்
லவ்விற்கு இம்முதல் இரண்டும், யவ்விற்கு
இய்யும் மொழிமுதல் ஆகி முன் வருமே)

**இ–ள்.: ரவ்விற்கு அம்முதல் ஆம் முக்குறிலும்** – ரகர லகர யகரங்களை முதலாகவுடைய வடமொழிகள் தமிழில் வரும்போது ரகரத்திற்கு அகர இகர உரகமாகிய முக்குறிலும், **லவ்விற்கு இம்முதல் இரண்டும்** – லகரத்திற்கு இகர உகரங்களும், **யவ் விற்கு இய்யும் மொழிமுதல் ஆகிமுன் வரும்**– யகரத்திற்கு இகரமும் மொழிமுதலாகி முன்னே வரும், **எ–று.**

உ–ம்.: ரங்கம், ராமன் , ரோமம், என்பன அரங்கம், இராமன், உரோமன் எனவும், லாபம், லோபம் என்பன இலாபம், உலோபம், எனவும் யக்ஷன், இயக்கண் எனவும் வரும்.

இரண்டெழுத்திணைந்து ஒரெழத்தின் றன்மைபெற்று வரும் வடமொழியெழுத்துக்களுள் இவை இப்படிவருமென் றுணர்த்துஞ் சூத்திரம் யாது?

இணைந்தியல் காலை யரலக் கிகரமும்
மவ்வக் குகரமு நகரக் ககரமும்
மிசைவரும் ரவ்வழி யுவ்வு மாம்பிற.

(இணைந்து இயல்காலை ய ரலக்கு இகரமும்
மவ்வக்கு உகரமும் நகரக்கு அகரமும்
மிசைவரும் ரவ்வழி உவ்வும் ஆம்பிற)

**இ–ள்.: இணைந்து இயல் காலை** – இரண்டெழுத்திணைந்து ஒரெழுத்து நீர்மையாய் வருமிடத்து, **யரலக்கு இகரமும்** – தமிழிலே பின்னிற்கும் யர லக்கண்மீதே இகரமும், **மவ்வக்கு உகரமும்** – மகர வகரங்கண்மீதே உகரமும் நகரக்கு அகரமும் மிசைவரும்– **ககரமீதே** அகரமும் வரும் ரவ்வழி உவ்வும் ஆம்– இணைந்து முன்னிற்கும் ரகரத்திற்குப் பின்னர் உகரமும் வரும், **எ–று.**

**உ–ம்.:** வாக்யம்– வாக்கியம், வாச்யம்– வாச்சியம் , நாட்யம்– நாட்டியம், எனவும், வக்கிரம், வச்ரம்–வச்சிரம், சத்ரம்– சத்திரம், அப்ரம்– அப்பிரம். எனவும், சுக்லம்–சுக்கிலம், ஆம்லம்–ஆமிலம், எனவும், பத்மம்–பதுமம், பக்வம் பக்குவம், எனவும் ரத்நம், அரதனம். எனவும் அர்க்கன், அருக்கன், எனவும் அர்த்தம் அருத்தம், எனவும். வரும். பிறவென்றமையானே, சக்தி –சத்தி கக்ஷி –கட்சி காவ்யம்–காப்பியம் பர்வதம் – பருப்பதம், என்றற்றொடக்கத்துக் திரிபும், ஸ்தூலம் – தூலம் என்றற்றொடக்கத்துக்கேடும், மற்றும் விகாரத்தால் வருவனவுங் கொள்க.

117. தமிழிற்கேயுரிய சிறப்பெழுத்திவையெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

றனழ எ ஒவ்வு முயிர்மெய்யு முயிரள
பல்லாச் சார்புந் தமிழ்பிற பொதுவே.

(ற ன ழ எ ஒவ்வும் உயிர்மெய்யும் உயிரளபு

அல்லாச் சார்பும் தமிழ்; பிறபொதுவே).

**இ—ள்.: ற ண ழ எ ஒவ்வும்** – முதலும் சார்புமான நாற்பதெழுத்துள்ளும், றகர னகர ழகர எகர ஒகரமான முதலெழுத்தைந்தும், உயிர்மெய்யும் உயிர் அளவு அல்லாச் சார்பும் தமிழ் – உயிர்மெய்யும் உயிரளபெடையு மல்லாத சார்பெழுத்தெட்டும் தமிழிற்கே சிறப்பெழுத்தாம்; பிறபொது–ஒழிந்த இருபத்தேழுந் தமிழிற்கும் ஆரியத்திற்கும் பொதுவெழுத்தாம். **எ—று.**

எகர ஒகரங்கள் வடமொழியில் இல்லையாயினும் அவை, ஏகார ஓகாரங்களுண்மையின் அவற்றது குறுக்கமெனக் கொண்டு அவமதிக்கப்படுமென்பது நோக்கியே ஆண்டில்லாத ற ன ழ மெய்களைமுற்கூறினார்.

118. தமிழிற்கேயுரிய சிறப்பெழுத்தெவை?

“றனழஎ ஒவ்வுமுயிர் மெய்யுமல்லாச் சார்புந் தமிழ்”

பதவியல் முற்றிற்று

## புணரியல்

பன்னிரண்டு பகுதியினதாகிய எழுத்ததிகாரத்தில் இதுகாறும் எத்தனை பகுதி கூறப்பட்டன?

எண்முதற் பதமீறாகிய பதினொன்றுங் கூறப்பட்டன.

ஆக எழுத்ததிகாரம் எத்தனை இயல்களையுடையது?

எழுத்தியல், பதவியல், புணரியல் என மூன்றியல் களையுடையது.

இனிக் கூறக் கிடக்கும் பகுதி யாது?

புணர்ச்சி

புணர்ச்சியாவது யாது?

மெய்யுயிர் முதலீ றாமிரு பதங்களுந்
தன்னொடும் பிறிதொடு மல்வழி வேற்றுமைப்
பொருளிற் பொருந்துழி நிலைவரு மொழிகள்
இயல்பொடு விகாரத் தியைவது புணர்ப்பே.

(மெய் உயிர் முதல் ஈறு ஆம் இருபதங்களும்
தன்னொடும் பிறிதொடும் அல்வழி வேற்றுமைப்
பொருளின் பொருந்துழி நிலைவரு மொழிகள்
இயல்பொடு விகாரத்து இயைவது புணர்ப்பே).

**இ–ள்.: –மெய் உயிர் முதல் ஈறு ஆம் இருபதங்களும்** – மெய்முதலாயும், உயிர்முதலாயும், மெய்யீறாயும் உயிரீறாயும் உள்ள பகாப்பதம், பகுபதம் என்னும் இரண்டு பதங்களும், **தன்னொடும் பிறி தொடும்** – தன்னொடுதானும் தன்னொடு பிறிதுமாய், **அல்வழி வேற்றுமைப் பொருளின் பொருந்துழி** – அல்வழிப் பொருளினாலேனும் வேற்றுமைப் பொருளினாலேனும் பொருந்துமிடத்து, **நிலைவருமொழிகள் இயல்பொடு விகாரத்து இயைவது புணர்ப்பு** – நிலைமொழியும் வருமொழியும் இயல்போடாயினும் விகாரத்தோ டாயினும் பொருந்துவது புணர்ச்சியாம், **எ–று.**

புணர்ச்சி எத்தனை வகைப்படும்?

இயல்பு புணர்ச்சி விகாரப்புணர்ச்சி என இருவகைப்படும்.

பொருணோக்கினால் புணர்ச்சி எத்தனை வகைப்படும்?

அல்வழிப்புணர்ச்சி வேற்றுமைப்புணர்ச்சி என இரு வகைப்படும்.

தன்னோடு தான் புணர்வதெப்படி?

ஆல்–வீழ்ந்து என்னுமிடத்து ஆல் என்னும் நிலைமொழியீறாகிய லகரமெய்யும் வீழ்ந்தது என்னும் வருமொழி முதலாகிய வகரமெய்யும் புணர்தலின் தன்னொடு தான் புணர்தலாயிற்று. ஆ உண்டு ஆவுண்டு என்பதிலும் உயிரீறும் உயிர்முதலும் வருதலின் தன்னொடுதானே. ஆலிலை

ஆல் இலை என மெய்யீறும் உயிர்முதலும் புணர்தலின் தன்னொடு பிறிது புணர்தல். பெயரொடு பெயரும் பெயரொடு வினையும் பிறவும் வருதலுங் கொள்க.

நிலைமொழியாவது யாது?

இருமொழி புணருமிடத்து முதலில் நிறுத்துமொழி

வருமொழியாவது யாது?

வந்துபுணரும் இரண்டாமொழி

அல்வழி வேற்றுமைப்புணர்ச்சிகள் இவையெனக் கூறும் சூத்திரம் யாது?

வேற்றுமை யைம்முத லாறா மல்வழி
தொழில்பண் புவமை யும்மை யன்மொழி
எழுவாய் விளியீ ரெச்சமுற் றிடையுரி
தழுவு தொடரடுக் கென வீரேழே.

(வேற்றுமை ஐமுதல் ஆறாம்;
அல்வழி தொழில் பண்பு உவமை உம்மை அன்மொழி
எழுவாய் விளி ஈரெச்சம் முற்று இடைஉரி
தழுவு தொடர் அடுக்கு என ஈரேழே).

**இ–ள்.:– வேற்றுமை ஐ முதல் ஆறாம்** – வேற்றுமைப் புணர்ச்சி ஐ ஆல் கு இன் அது கண் என்னும் ஆறுருபுகளும் மறைந்தாயினும் வெளிப்பட்டாயினும் வரப்பதங்கள் பொருந்துந் தொடர்ச்சியாம்; **அல்வழி** – அல்வழிப் புணர்ச்சி, **தொழில் தழுவுதொடர்** – வினைத்தொகையும், **பண்பு** (தழுவுதொடர்) – பண்புத்தொகையும், **உவமை** (தழுவுதொடர்) – உவமைத்தொகையும், **அன்மொழி** (தழுவுதொடர்)– அன்மொழித்தொகையும், **எழுவாய்** (தழுவுதொடர்) – எழுவாய்த்தொடரும், **விளி** (தழுவுதொடர்) – விளித்தொடரும், **ஈர் எச்சம்** (தழுவுதொடர்) – பெயரெச்சத்தொடரும், வினையெச்சத் தொடரும், **முற்றுத்** (தழுவுதொடர்)– தெரிநிலை வினைமுற்றுத் தொடருங் குறிப்பு வினை முற்றுத்தொடரும், **இடை** (தழுவுதொடர்) – இடைச் சொற்றொடரும், **உரி** (தழுவுதொடர்) – உரிச்சொற்றொடரும் **அடுக்குத்** (தழுவுதொடர்) **என ஈரேழே**–அடுக்குத்தொடரும் எனப் பதங்கள் பொருந்துந் தொடர்ச்சி பதினான்காம், **எ–று.**

அவ்வழிப்புணர்ச்சி வேற்றுமைப்புணர்ச்சி என்னு மிரண்டனுள் வேற்றுமைப்புணர்ச்சி எவை?

"வேற்றுமை ஐம்முதலாறாம்"

**வேற்றுமை**

**உ–ம்.:–**

| **வேற்றுமைத்தொகை** | **வேற்றுமை விரி** |
|---|---|
| (1) நிலக்கடந்தான் .... (ஐ) | நிலத்தைக் கடந்தான் |
| (2) கல்லெறிந்தான் ... (ஆல்) | கல்லா லெறிந்தான் |

(3) கொற்றன்மகன்.... (கு) கொற்றனுக்கு மகன்

(4) மலைவீழருவி ...... (இன்) மலையின்வீழருவி

(5) சாத்தன்கை .... (அது) சாத்தனது கை,

(6) குன்றக்கூகை ... (கண்) குன்றத்தின்கட் கூகை.

அல்வழிப்புணர்ச்சி யெவை?

"அவ்வழி, தொழில்பண் புவமை யும்மையன்மொழி,
எழுவாய் விளியீ ரெச்சமுற் றிடையுரி தழுவு தொட
ரடுக்கெனவீ ரேழே"

இப்பதினான்கனுள்ளே தொகைநிலைத் தொடரெத்தனை?

வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை என ஐந்து.

## அல்வழி

உ-ம்.:—

(1) கொல்யானை......... வினைத்தொகை.

(2) கருங்குதிரை .... பண்புத்தொகை

(3) சாரைப்பாம்பு ....... இருபெயரொட்டுப் பண்புத்தொகை

(4) மதிமுகம் ...... உவமைத்தொகை

(5) இராப் பகல் .......... உம்மைத்தொகை

(6) பொற்றொடி ...... அன்மொழித்தொகை.

ஐந்துதொகைநிலைத்தொடர்

தொகாநிலை தொடர்களெவை?

எழுவாய்த்தொடர், விளித்தொடர், பெயரெச்சத்தொடர் வினையெச்சத்தொடர், தெரிநிலை வினைமுற்றுத் தொடர், குறிப்புவினை முற்றுத்தொடர். இடைச்சொற்றொடர், உரிச்சொற்றொடர், அடுக்குத்தொடர், என ஒன்பதுமாம்.

உ-ம்.:—

(1) சாத்தன்வந்தான்.... எழுவாய்த்தொடர்

(2 சாத்தாவா...... விளித்தொடர்

(3) வந்தசாத்தன் ......பெயரெச்சத்தொடர்

(4) வந்துபோனான் ... வினையெச்சத்தொடர்

(5) வந்தான்சாத்தன் ... தெரிநிலைவினைமுற்றுத் தொடர்

(6) பெரியன்சாத்தன் ... குறிப்புவினைமுற்றுத்தொடர்

(7) மற்றொன்று ..... இடைச்சொற்றொடர்

(8) நனிபேதை ...... உரிச்சொற்றொடர்

(9) பாம்பு பாம்பு .... அடுக்குத்தொடர்.

ஒன்பது தொகாநிலைத் தொடர்.

இவற்றுட் கருங்குதிரையென்பது எப்படி விரியும்?

கரியதாகிய குதிரையென விரியும். கருமையாகிய குதிரையென்றாயினும் கருமையினையுடைய குதிரையென்றாயினும் விளிக்குமிடத்து வழுவாம். கருமையாகிய குதிரையெனின் சாரையாகிய பாம்பென்பதுபோல் கருமையும் ஒரு குதிரையாம். இனிக் கருமையினை யுடைய குதிரையென்று விரியின் வேற்றுமைத்தொகையாம்.

தழுவு தொடராவது யாது?

தழுவுதொடர் பொருட்பொருத்தமுறத் தழுவுந்தொடர்

தழுவுதொடரென இவ்விருபது தொடரும் அடக்கப்படுதலின் தாழாத் தொடரு முண்டென்றாராயிற்று. தாழாத் தொடராவது யாது?

தழாத்தொடராவது நிலைமொழியானது வருமொழியோடு பொருட்பொருத்தமுறத் தழுவாத தொடர்.

**உ–ம்.:–**

கைக்களிறு என்பது கையையுடைய களிறு என விரிக்கப்படுதலால், கையென்பது களிறென்பதைத் தழுவாது தொடர்ந்தது; இது தழாத்தொடராகிய வேற்றுமைப் புணர்ச்சி. சுரையாழ வம்மிமிதப்ப என்பது சுரைமிதப்ப அம்மியாழ எனக் கூட்டப்படுதலால், சுரையென்பது ஆழ என்பதையும் அம்மியென்பது மிதப்ப என்பதையுந் தழுவாது தொடர்ந்தன. இவை தழாத்தொடராகிய அல்வழிப்புணர்ச்சி.

இயல்பு புணர்ச்சியாவது யாது?

விகார மனைத்து மேவல தியல்பே.

(விகாரம் அனைத்தும் மேவலது இயல்பே)

**இ–ள்.:– விகாரம் அனைத்தும்** – மேல்வரும் விகாரவகையனைத்தும்; **மேவலது இயல்பு** – அடையாதது இயல்பு புணர்ச்சியாம், **எ–று.**

**உ–ம்.:–**

பொன்–மலை – பொன்மலை, புகழ் – அழகு–புகழழகு, ஒளி– மணி– ஒளிமணி, எனவரும்.

விகாரமிதுவென்றும் அஃதித்தனை வகைப்படுமென்றும் அவை இல்விடத்து வருமென்றும் உணர்த்தும் சூத்திரம் யாது?

தோன்ற றிரிதல் கெடுதல் விகாரம்
மூன்று மொழிமூ விடத்து மாகும்.

(தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம்
மூன்றும் மொழிமூவிடத்தும் ஆகும்).

**இ–ள்.:– தோன்றல்**–எழுத்தாயினுஞ் சாரியையாயினுந் தோற்றுதலும் **திரிதல்** – வேறுபடுதலும், **கெடுதல்** – கெடுதலும் விகாரம்–முன்சொன்ன விகாரமாகும்; **மூன்றும்** –இம்மூவகை விகாரமும், **மொழி மூவிடத்தும் ஆகும்** – நிலைமொழி வருமொழிகளுடைய முதல் இடை கடை என்னு மூன்றிடத்தும் ஏற்றபடி வரும், **எ–று.**

விகாரமாவது யாது?

"தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம்"

அவை மொழியின்கண் எங்கே வரும்?

"மூன்றுமொழி மூவிடத்துமாகும்"

தோன்றலாவது யாது?

புணர்ச்சிக்கண் எழுத்து மிகுவது.

திரிதலாவது யாது?

புணர்ச்சிக்கண் எழுத்து வடிவு வேறுபடுதல்.

கெடுதலாவது யாது?

புணர்ச்சிக்கண் எழுத்து நீங்குதல்.

உ–ம்.:–

**தோன்றல்**

(1) பூ –கொடி–பூங்கொடி வருமொழி முதலில் மெய்தோன்றிற்று.

(2) தமிழ்–பிள்ளை–தமிழப்பிள்ளை என நிலைமொழி யீற்றிற் சாரியை தோன்றிற்று.

(3) நெடு– அரவு–நெட்டரவு என நிலைமொழி நடுவில் டகரம் தோன்றிற்று.

**திரிதல்**

(1) ஆறு–பத்து–அறுபது என நிலைமொழிமுதலில் ஆகாரம் அகரமாகத் திரிந்து.

(2) பல்–தலை–பஃறலை என நிலைமொழியீற்று லகரம் ஆய்தமாய்த் திரிந்தது.

(3) இரும்பு– ஆணி– இருப்பாணி என நிலைமொழி யிடையில் மகரம் பகரமாய்த் திரிந்தது.

**கெடுதல்**

(1) நிலவலயம் என்பதில் நிலைமொழியீற்றுமெய் கெட்டது.

(2) அறுபது என்பதில் வருமொழியிடைமெய் கெட்டது.

(3) மரத்துக்கண் என்பதில் அத்து என்பதன் அகரம் வருமொழி முதலிற் கெட்டது.

செய்யுள் விகாரங் கூறுஞ் சூத்திரம் யாது?

வலித்தன் மெலித்த னீட்டல் குறுக்கல்
விரித்த றொகுத்தலும் வருஞ் செய்யுள் வேண்டுழி

(வலித்தல் மெலித்தல் நீட்டல் குறுக்கல்
விரித்தல் தொகுத்தலும் வரும் செய்யுள் வேண்டுழி)

**இ–ள்.:– வலித்தல்** – மெல்லொற்றை வல்லொற்றாக்கலும், **மெலித்தல்** – வல்லொற்றை மெல்லொற்றாக்கலும், நீட்டல்– குற்றெழுத்தை நெட்டெழுத் தாக்கலும், **குறுக்கல்** –நெட்டெழுத்தைக் குற்றெழுத்தாக்கலும், **விரித்தல்** – இல்லாதவெழுத்தை வருவித்தலும், **தொகுத்தலும்**– உள்ளவெழுத்தை நீக்கலும், **செய்யுள் வேண்டுழிவரும்**– செய்யுளிடத்து அடி தொடை முதலானவைகளை நோக்கி அமைக்க வேண்டுமிடத்து வருவனவாம், **எ–று.**

**உ–ம்.:–**

(1) "குறுத்தாட்பூதஞ் சுமந்த வறக்கதி ராழியெம் மண்ண லைத்தொழினே" இங்கே குறுந்தான் எனற்பாலது தண்டை என வலிந்துகின்றது.

(2) "தண்டையி னினக்கிளி கடிவோள், பண்டைய ளல் லண்மானோக் கினளே" இங்கே தட்டை எனற்பாலது குறுத்தாள் என மெலிந்துநின்றது.

(3) "தீத்தொழிலே கன்றித் திரிதந் தெருவைபோற் போத்தறார் புல்லறிவினார்" இங்கே பொத்தறா ரெனற்பாலது போத்தறா ரென நீண்டு நின்றது.

(4) "யானை–யெருத்தத் திருந்த விலங்கிலைவேற் றென்னன்றிருத்தார் நன்றென்றேன் றியேன்" இங்கே தீயேன் எனற்பாலது தியேன் எனக் குறுகிநின்றது.

(5) "சிறியிலை வெதிரினெல்விளையும்மே" இங்கே விளையுமே எனற்பாலது விளையும்மே என மகரமெய் விரிந்து நின்றது.

(6) சிறியவிலை எனற்பாலது சிறியிலை என யகரவுயிர்மெய் தொக்கு நின்றது.

இவ்வாறு விகாரங்களேயன்றி வேறு செய்யுள் விகாரங்களு முளவோ?

ஒருமொழி மூவழிக் குறைதலு மனைத்தே

(ஒருமொழி மூவழிக் குறைதலும் அனைத்தே)

**இ–ள்.:–ஒருமொழி மூவழிக்குறைதலும் அனைத்து**– ஒருசொல்லினுடைய முதலிடை கடையென்னு மூன்றில் ஓரிடத்துக் குறைந்து வருதலும் அச்செய்யுள் விகாரமாம், **எ–று.**

**உ–ம்.:–**

(1) "மரையிதழ் புரையு மஞ்செஞ் சீறடி" இங்கே தாமரை எனற்பாலது மரை என முதற்குறைந்து நின்றது.

(2) "வேதின வெரி நினோதி முதுபோத்து" இங்கே ஓந்தி எனற்பாலது ஓதி என இடைக் குறைந்து நின்றது.

(3) "நீலுண் டுதலிகை கடுப்ப" இங்கே நீலம் எனற்பாலது நீல் எனக் கடைக் குறைந்து நின்றது.

புணர்ச்சிக்கண் விகாரங்களெவை?

தோன்றல் திரிதல் கெடுதல் நீளல் நிலைமாறல் என்பன.

**உ–ம்.:–**

யாது–யாவது; இதுதோன்றல். மாகி–மாசி; கண்ணகல் பரப்பு–

கண்ணகன் பரப்பு; உயர்திணைமேல — உயர்திணை மேன; இவை திரிதல். யாவர் — யார்; யார் — ஆர், யானை — ஆனை, யாடு— ஆடு, யாறு— ஆறு, இவை கெடுதல் பொழுது—போழ்து, பெயர் — பேர் இவை நீளல், வைசாகி — வைகாசி, மிஞிறு— ஞிமிறு, சிவிறி—விசிறி தசை—சதை, இவை எழுத்து நிலைமாறுதல், கண்மீ—மீகண், இல்வாய்—வாயில், நகர்ப்புறம்— புறநகர், இவை சொன்னிலை மாறுதல்.

மொழிக்குறைக்கும் தொகுத்தலுக்கும் வேறுபாடு யாது?

குறை ஒருமொழியின் முதலிடை கடைகளி லோரிடத்தில் எழுத்துக் குறைதல், தொகுத்தல் மொழியிறுதியிலே விதிவகையால் வந்த விகுதி குறைந்து நிற்றல்.

ஒரு புணர்ச்சிக்கண் ஒருவிகாரந்தான் வருமோ?

ஒருபுணர்க் கிரண்டு மூன்று முறப்பெறும்

(ஒருபுணர்க்கு இரண்டும் மூன்றும் உறப்பெறும்)

**இ—ள்.:— ஒரு புணர்க்கு** — ஒருபுணர்ச்சிக்கு, **இரண்டும் மூன்றும் உறப்பெறும்** — விகாரம் ஒன்றேயன்றி இரண்டு மூன்றும் வரப்பெறும். **எ—று.**

**உ—ம்.:—**

(1) யானை—கோடு—யானைக்கோடு ஒருவிகாரம்

(2) நிலம்—பனை—நிலப்பனை இரண்டு விகாரம்

(3) பனை— காய் — பனங்காய் மூன்று விகாரம்.

## பொதுப்புணர்ச்சி

பொதுப்புணர்ச்சி கூறுஞ் சூத்திரம் யாது?

எண்மூ வெழுத்தீற் றெவ்வகை மொழிக்கும்
முன்வரு ஞ ந ம ய வக்க ளியல்புங்
குறில்வழி யத்தனி யைந்நொது முன்மெலி
மிகலுமாம் ண ள ன ல வழிநத்திரியும்

(எண்மூவெழுத்து ஈற்று எவ்வகை மொழிக்கும்
முன்வரு ஞ ந ம ய வக்கள் இயல்பும்
குறில்வழியத் தனிஐ நொ து முன் மெலி
மிகலும் ஆம் ண ள ன ல வழிநத் திரியும்)

**இ—ள்.:— எண்மூ வெழுத்தீற் றெவ்வகை மொழிக்கும் முன்வரும் ஞ ந ம ய வக்கள் இயல்பும்** — இயல்பினாலாயினும் விதியினாயினும் இருபத்துநான் கெழுத்தையும் ஈறாகவுடைய பெயர்ச்சொல் வினைச்சொல் இடைச்சொல் உரிச்சொல் என்னும் நாக்கு சொற்களுக்கும் முன்னே வரும் ஞகர நகர மகர யகர வகரங்கள் அல்வழி வேற்றுமை இரண்டிலும்இயல்பாதலும், **குறில்வழி ய** — குற்றெழுத்தின் பின்னின்ற யகர மெய்யே, **தனி ஐ** — ஒரெழுத்தொரு மொழியாகிய உயிர் உயிர்மெய் என்னும் ஐகாரமே, **நொ து முன் மெலி மிகலும் ஆம்** — நொவ்வே துவ்வே யென்பவைகளுக்கு முன் வரும் ஞகார நகார மகாரங்கள் பிற சொற்களின் முன் இயல்பாதலன்றி மிக்கு

முடிதலும் ஆகும், **ணளனல வழி நத்திரியும்** – ணள ன லக்களின் முன் வரும் நகரம் பிறவீற்றின்முன் இயல் பாதலன்றித் திரியும், **எ–று.**

விதியீறாவது இயல்பாக நின்ற உயிரேனும் ஒற்றேனும் போய் மற்றோருயிரீறாகவேனும் ஒற்றீறாகவேனும் நிற்பது.

புணரியலில் அல்வழி வேற்றுமைகளுள் ஒன்றைக் குறிப்பாக வேனும் வெளிப்படையாகவேனும் விதவாத இடமெல்லாம் அவ்விரண்டையும் கொள்க.

இச்சூத்திரத்திலே சொல்லப்பட்ட இரு கணமும் யாவை?

மென்கணம் இடைக்கணம்.

ஞ ந ம ய வ என்னுமெழுத்துக்கள் எங்கே இயல்பாம்?

"எண்மூ வெழுத்தீ றெவ்வகை மொழிக்கும்
முன்வரு ஞநமய வக்க ளியல்பும்"

ஞநம என்னும் மூன்றும் இயல்பாதலேயன்றி வேறுசெய்கையும் பெறுமோ?

" குறில்வழி யத்தனி யைந் நொ து முன்மெலி மிகலுமாம்"

அம்மூன்றனுள் நகரம் இயல்பும் மிகலுமேயன்றி வேறுசெய்கையும் பெறுமோ?

" ண ள ன ல வழிநத் திரியும்"

இச்சூத்திரத்திலே நிலைமொழிச் செய்கையா, வருமொழிச் செய்கையா, எது கூறப்பட்டது?

வாள்–ஞான்றது வாண் ஞான்றது எனவும், வேல் ஞான்றது வேன்ஞான்றது எனவும் சில நிலைமொழியீறுகள் இங்கே கூறப்பட்ட எழுத்துக்களோடு புணரும்போது விகாரப்படுதலின் வருமொழிச் செய்கையே கூறப்பட்டது. நிலைமொழிச்செய்தி மேல்வரும் சிறப்பு விதிகளிற் கூறப்படும்.

உ–ம்:–

(1) விள, பலா, புளி, தீ, கடு, பூ, சே, பனை, கோ, கௌ, உரிஞ், மண், பொருந், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், யாழ், ஊழ், வாள், எஃகு என்னும் நிலைமொழி களோடு, அல்வழிப்புணர்ச்சிக்கு உதாரண மாக, ஞான்றது, நீண்டது, மாண்டது, யாது, வலிது என்னும் வருமொழி களையும், வேற்றுமைப் புணர்ச்சிக்கு உதாரணமாக ஞாற்சி, நீட்சி, மாட்சி, யாப்பு, வன்மை என்னும் வருமொழிகளையுங் கூட்டி,

| **அல்வழி** | **வேற்றுமை** |
|---|---|
| விளஞான்றது | விளஞாற்சி |
| விளநீண்டது | விளநீட்சி |
| விளமாண்டது | விளமாட்சி |
| விளயாது | விளயாப்பு |
| விளவலிது | விளவன்மை |

என எல்லாவீற்றின் முன்னும் ஞ ந ம ய வக்கள் இயல்பாதல் காண்க.

**(2)**

| **அல்வழி** | **வேற்றுமை** |
|---|---|
| மெய்ஞ்ஞான்றது | மெய்ஞ்ஞாற்சி |
| மெய்ந்நீண்டது | மெய்ந்நீட்சி |
| மெய்ம்மாண்டது | மெய்ம்மாட்சி |
| கைஞ்ஞான்றது | கைஞ்ஞாற்சி |
| கைக்நீண்டது | கைந்நீட்சி |
| கைம்மாண்டது | கைம்மாட்சி |

எனக் குறின் முன்னின்ற யகரத்தின் முன்னுந் தனி ஐமுன்னும் மெலிமிகுதல் காண்க.

**(3)** நொ து முன் மெலி மிகலுமாம் என்ற எச்சவும்மையால், அவ்விரண்டன் முன்னும் இடை யெழுத்து மிகலுமாம் என்றாராயிற்று.

நொ ஞெள்ளா–நொஞ்ஞெள்ளா து ஞெள்ளா–துஞ்ஞெள்ளா

நொ நாகா–நொந்நாகா து நாகா–துந்நாகா

நொ யவனா–நொய்யவனா து யவனா–துய்யவனா

நொ வளவா–நொவ்வளவா து வளாவா –துவ்வளவா

இவை வினைச்சொற்களாதலால், அல்வழியிலே மிகுந்தன.

ண ள ன ல வழி நத்திரியுமென்றது பின் வரும்.

"ன ல முன்றனவும்"என்னுஞ் சூத்திரத்திலே காண்க.

மெய்யீற்றுப் பொதுப்பெயர் உயர்திணைப் பெயர்களும் உயிரீற்றுப் பொதுப்பெயர் உயர்திணைப்பெயர்களும் வன்கணத்தோடு புணருமாறு கூறுஞ் சூத்திரம் யாது?

பொதுப்பெயருயர் திணைப் பெயர்க ளீற்றுமெய்
வலிவரி னியல்பா மாவி யரமுன்
வன்மை மிகாசில விகாரமா முயர்திணை.

(பொதுப்பெயர் உயர்திணைப்பெயர்கள் ஈற்று மெய்
வலி வரின் இயல்பு ஆம்; ஆவியர முன்
வன்மை மிகா சில விகாரமாம் உயர்திணை)

**இ–ள்.:– பொதுப் பெயர் உயர்திணைப்பெயர்கள் ஈற்றுமெய் வலிவரின் இயல்பாம்** – பொதுப்பெயர்களுக்கும் உயர்திணைப் பெயர்களுக்கும் ஈற்றிலுள்ள மெய்கள் வல்லெழுத்து முதன்மொழிகள் வரின் இயல்பாகும். ஆவி யரமுன் வன்மைமிக–உயிரையும் யகர ரகர மெய்களையும் ஈறாகவுடைய அவ்விருவகைப் பெயர்களுக்கும் முன்வரும் வல்லெழுத்துக்கள் மிகாவாம். **உயர்திணை சில விகாரம் ஆம்** – மெய்யீறும் உயிரீறுமாகிய உயர்திணைப்பெயர்களுட் சிலபெயர்கள் நாற்கணங்களோடும் புணருமிடத்து நிலைமொழி வருமொழிகள் விகாரப்படுதலும் உடையனவாம், **எ–று.**

நாற்கணமாவன வன்கணம், மென்கணம், இடைக்கணம், உயிர்க்கணம் என்பனவாம்.

நிலைமொழிச் செய்கையாய்த் திரிதற்குரிய எழுத்துக்கள் திரியாதியல்பாதலும், வருமொழிச் செய்கையாய் மிகுதற்குரிய எழுத்துக்கள் மிகாதியல்பாதலுங் கருதி, ஈற்றுமெய் இயல்பாம் என்றும், வன்மை மிகா என்றும், பகுத் தோதினார். உயிர்போல வருமொழிச் செய்கையாய் வன்மை மிகுதற் குரியனவாகிய யரழக்கண் மூன்றினுள்ளும் ழகரம் பொதுப்பெயர் உயர்திணைப் பெயர்களுக்கு ஈறாகாமையால், இங்கே ஒழிக்கப்பட்டது.

பொதுப்பெயராவது யாது?

பொதுப்பெயராவது உயர்திணை அஃறிணை யிரண்டுக்கும் பொதுவாய் வரும் பெயர். பொதுப்பெயர் விரவுப்பெயர் என்பன ஒரு பொருட்சொற்கள். உயர்திணை அஃறிணை இரண்டினும் விரவுதலுடைய பெயர் விரவுப்பெயர். விரவுதல்–கலத்தல்.

**உ–ம்.:–**

சாத்தன் செல்வன் என்பன மனுஷர்க்கும் மாடு குதிரை யானைகளுக்கும் இடப்படுதலின் பொதுப்பெயராம்.

உயர்திணைப் பெயராவது யாது?

மனுஷர் தேவர் முதலியோர் பெயர் உயர்திணைப் பெயராம்.

இச்சூத்திரத்திலே சொல்லப்பட்ட பெயர்கள் யாவை?

மெய்யீற்றுப் பொதுப்பெயர், மெய்யீற்றுயர்திணைப் பெயர், உயிரீற்றுப் பொதுப்பெயர், உயிரீற்றுயர்திணைப்பெயர்.

இவை எக்கணத்தோடு புணரும் புணர்ச்சி இங்கே கூறப்பட்டது?

வன்கணத்தோடு புணரும் புணர்ச்சி.

இச்சூத்திரத்திலே என்ன ஈறு முதலோடு புணரும் புணர்ச்சி கூறப்பட்டது?

மெய்யீறும் உயிரீறும் வருமொழிமுதல் வன்கணத்தோடு புணரும் புணர்ச்சி கூறப்பட்டது.

மெய்யீற்றுப் பொதுப்பெயரும் உயர்திணைப்பெயரும் வல்லினத்தோடு எப்படிப்புணரும்?

"பொதுப்பெயர் உயர்திணைப்பெயர்க ளீற்றுமெய், வலிவரின் இயல்பாம்"

**உ–ம்.:–**

(1) சாத்தன், கொற்றன், ஆண் இவற்றின்முன், குறிது, சிறிது, தீது, பெரிது, குறியன், சிறியன், தீயன், பெரியன்; கை, செவி, தலை, புறம், இவற்றை வருவித்து. சாத்தன்குறியது, சாத்தன் குறியன், சாத்தன்கை என முறையே கூட்டிப், பொதுப்பெயரீற்று னகர ணகர மெய் இருவழியும் இயல்பாதல், காண்க. ஊரன், அவன் இவற்றின்முன், குறியன், சிறியன், தீயன், பெரியன்; கை, செவி, தலை, புறம் இவற்றை வருவித்து ஊரன்குறியன், ஊரன்கை, என முறையே கூட்டி, உயர்திணைப் பெயரீற்று னகரமெய் இருவழியும் இயல்பாதல் காண்க. தோன்றல், வேள் இவற்றின் முன், குறியன், சிறியன், பெரியன்; கை, செவி, தலை, புறம் இவற்றை வருவித்து, தோன்றல்குறியன், தோன்றல்கை, வேள்குறியன், வேள்கை, என முறையே கூட்டி, உயர்திணைப்பெயரீற்று

லகரளகரமெய் இருவழியும் இயல்பாதல் காண்க. தோன்றல்–தீயன்–தோன்றறீயன், தோன்றல்–தலை–தோன்றறலை. எனவும் லகர மெய்யும், வேள்–தீயன்–வேடீயன், வேள்–தலை–வேடலை, எனவும் ளகரமெய்யும் தகரம் வருமிடத்துக் கெடுதல் மயக்கவிதின்மை பற்றியென்றறிக.

உயிரீற்றுப்பொதுப்பெயர் உயர்திணைப்பெயர்களும், யகர ரகர வீற்றுப் பொதுப்பெயர் உயர்திணைப்பெயர்களும் வல்லினத்தோடு எவ்வாறு புணரும்?

“ (பொதுப்பெய ருயர்திணைப் பெயர்களீற்று) ஆவியர முன் வன்மை மிகா”

(2) சாத்தி, கொற்றி, தாய் இவற்றின் முன் குறிது, சிறிது தீது, பெரிது; குறியள், சிறியள், தீயள், பெரியள்; கை, செவி, தலை, புறம் இவற்றை வருவித்து, சாத்திகுறிது, சாத்திகுறியள்; சாத்திகை என முறையே கூட்டிப் பொதுப்பெயரீற்று உயிர் யகரமுன் வலி இருவழியும் இயல்பாதல் காண்க. நம்பி, விடலை இவற்றின்முன் குறியன், சிறியன், தீயன், பெரியன்; கை, செவி, தலை, புறம் இவற்றையும் அவர் ஒருவர் இவற்றின்முன் குறியர் சிறியர் தீயர் பெரியர்; கை, செவி, தலை, புறம் இவற்றையும் வருவித்து, நம்பி குறியன், நம்பிகை அவர்குறியர், அவர்கை, என முறையே கூட்டி, உயர்திணைப்பெயரீற்று உயிர் ரகர முன் வலி யிருவழியும் இயல்பாதல் காண்க.

உயர்திணைப் பெயர்களுட் சில விகாரப்படுதலு முண்டோ?

“ சில விகாரமாமுயர்திணை”

(3) கபிலன்–பரணன் –கபிலபரணர், வடுகன்–நாதன்–வடுகநாதன், அரசன்–வள்ளல்–அரசவள்ளல், இவை ஈறுகெட்டியல்பாய் முடிந்தன. ஆசீவகர்,–பள்ளி–ஆ சீவகப்பள்ளி,வாணிகர் தெரு–வாணிகத்தெரு, இவை ஈறுகெட்டு, வருமொழி வல்லெழுத்து மிக்கு முடிந்தன. குமரன்–கோட்டம், குமரகோட்டம், குமரக்கோட்டம்; வாசுதேவன்–கோட்டம், வாசுதேவகோட்டம். வாசுதேவக் கோட்டம், இவை ஈறுகெட்டு, வருமொழி வல்லெழுத்து இயல்பாயும் மிக்கும் முடிந்தன. பார்ப்பான்–கன்னி–பார்ப்பனக்கன்னி, இது ஈற்றயல்குறுகி, அகரச்சாரியை பெற்று வருமொழி வல்லெழுத்துமிக்கு முடிந்தது. வேளாளன்–பிள்ளை–வேளாண்பிள்ளை என நிலைமொழி யீற்று அன்கெட்டு ளகர மெய் ணகரமெய்யாகத் திரிந்து முடிந்தது. மக்கள்– பண்பு–மக்கட்பண்பு மக்கள்–சுட்டு–மக்கட்சுட்டு, என நிலைமொழியீற்று மெய்திரிந்து முடிந்தது.

ஈற்று வினா யாவினா விளிப்பெயர் என்னு மிவைமுன்னே வல்லினம் எவ்வாறு புணரும்?

ஈற்றியா வினாவிளிப் பெயர் முன்வலி யியல்பே.

(ஈற்று யா வினா விளிப்பெயர் முன் வலி இயல்பே.)

**இ–ள்.:– ஈற்று யாவினா விளிப்பெயர் முன்** – ஆ ஏ ஓ என்னு மூன்றீற்று வினாமுன்னும், யாவென்னும் வினாப்பெயர் முன்னும், உயிரீறும் மெய்யீறுமாகிய விளிப்பெயர் முன்னும், **வலி இயல்பு** – வரும் வல்லெழுத்துக்கள் இயல்பாகும், எ–று.

**உ–ம்.:–**

(1)அரசனா கொண்டான், அரசனே சென்றான், அரசனோ தந்தான், என ஆ ஏ ஓ வீற்று வினாமுன் வலி இயல்பாதல் காண்க.

(2)யா குறியன, சிறியன, தீயன, பெரியன என யா வினாமுன் வலி இயல்பாதல் காண்க.

(3) நம்பி, நம்பீ, விடலை, விடலாய், கிள்ளை, கிள்ளாய், தாய், தாயே, இவற்றின், முன். கொள், செல், தா; போ இவற்றை வருவித்து, நம்பிகொள், நம்பிசெல். நம்பிதா, நம்பிபோ, என முறையே கூட்டி, விளிப்பெயர் முன்வலி இயல்பாதல் காண்க.

சில முன்னிலைவினை ஏவல்வினைகளுக்கு முன்வரும் வல்லினச் செய்திகூறுஞ் சூத்திரம் யாது?

ஆவி ய ர ழ விறுதிமுன் னிலைவினை
ஏவன்முன் வல்லின மியல்பொடு விகற்பே.

(ஆவி ய ர ழ இறுதி முன்னிலைவினை
ஏவல் முன் வல்லினம் இயல்பொடு விகற்பே)

**இ–ள்.: ஆவி ய ர ழ இறுதி முன்னிலைவினை ஏவல் முன் –** உயிரையும் யரழ என்னும் மூன்றுமெய்களையும் இறுதியாகவுடைய முன்னிலைவினை முன்னும் ஏவல்வினை முன்னும், **வல்லினம் இயல்பொடு விகற்பே –** வருங் க ச த ப க்கள் இயல்புடனே விகற்பமாம், எ–று.

முன்னிலைவினையென்றது, தன்மைவினை படர்க்கை வினைகளுக்கு இனமாய், முன்னின்றான் றொழிலை யுணர்த்தும் வினையை. ஏவல்வினையென்றது, இனமின்றி முன்னிலை யொன்றற்கே உரியதாய்; முன்னின்றானைத் தொழிற்படுத்தும் வினையை.

விகற்பமாவது ஒரு கால் இயல்பாயும் ஒருகால் விகாரமாயும் புணர்வது. விகற்பம், உறழ்ச்சி என்பன ஒருபொருட் சொற்கள்.

உ–ம்.:–

(1) உண்டி, உண்டனை, உண்டாய் எனவும், உண்டனிர், உண்டீர் எனவும், நிறுத்தி, சாத்தா, கொற்றா, தேவா, பூதா எனவும், சாத்தரே, கொற்றரே, தேவரே, பூதரே எனவும், வருவித்து உண்டிசாத்தா, உண்டனிர்சாத்தரே எனக் கூட்டி, ஆவியர இறுதி முன்னிலைவினை முன் இயல்பாதல் காண்க. ழகரமெய் முன்னிலைவினைக்கு ஈறாகாது. முன்னிலைவினைமுன் விகற்பம் வந்தவழிக் கண்க.

(2) கொணா, எறி, விடு, ஆய், சேர், தாழ் என நிறுத்தி, சாத்தா, கொற்றா, தேவா, பூதா என வருவித்து, கொணா சாத்தா, என முறையே கூட்டி, ஆவி யரழ விறுதி ஏவல்வினைமுன் இயல்பாதல் காண்க. நடகொற்றா, நடக்கொற்றா, எய்கொற்றா, எய்க்கொற்றா என ஏவல்வினைமுன் விகற்பித்தல் காண்க.

## உயிரீற்றுச் சிறப்புப் புணர்ச்சி

உயிரீற்று மொழிமுன் உயிர்முதன்மொழிவந்து புணருமாறு கூறும் சூத்திரம் யாது?

இ ஈ ஐ வழி யவ்வு மேனை
உயிர்வழி வவ்வு மேமுனிவ் விருமையும்
உயிர்வரி னுடம்படு மெய்யென் றாகும்.

(இ ஈ ஐ வழி யவ்வும், ஏனை
உயிர்வழி வவ்வும், ஏ முன் இவ்விருமையும்
உயிர்வரின் உடம்படு மெய் என்று ஆகும்)

**இ—ள்.: இ ஈ ஐ வழி யவ்வும்** – இகர ஈகார ஐகாரங்களின் முன்னே யகரமும், **ஏனை உயிர்வழி வவ்வும்** –அ ஆ உ ஊ ஒ ஓ ஔ என்னும் இவ்வேழுயிர்களின் முன்னே வகரமும், **ஏ முன் இவ்விருமையும்** – ஏகாரத்தின் முன்னே யகரமும் வகரமும், **உயிர்வரின் உடம்படுமெய் என்று ஆகும்** – உயிர் முதன் மெ் வரின் உடம்படுமெய்யென்று வரப்பெறும், **எ—று.**

உடம்படுமெய்யாவது யாது?

உடம்படுமெய்யென்பது, நிலைமொழியீற்றினும் வருமொழி முதலினு நின்ற உயிர்களை உடம்படுத்தும் மெய். உடம்படுத்தலெனினும், உடன்படுத்த லெனினும் ஒக்கும். வருமுயிருக்கு உடம்பாக அடுக்குமெய்யெனினும் பொருந்தும்.

யகரவுடம்படுமெய் எங்கேவரும்?

"இ ஈ ஐவழி யவ்வும்" (உயிர்வரின் உடம்படுமெய் யென்றாகும்)

**உ—ம்.:—**

மணி அழகு – மணியழகு.

தீ ஆடி – தீயாடி.

மலை அடி – மலையடி.

வகரவுடம்படுமெய் எங்கேவரும்?

"ஏனை உயிர்வழி வவ்வும்" (உயிர்வரின் உடம்படுமெய் யென்றாகும்)

**உ—ம்.:—**

விள இலை—விளவிலை.

பலா அரும்பு—பலாவரும்பு

மடு ஆழம்—மடுவாழம்

பூ அரசு—பூவரசு

எ அன்—எவன்

சே ஏறி—சேவேறி

நொ அழகியது—நொவ்வழகிது.

கோ உண்டான்—கோவுண்டான்

கௌ அழகிது–கௌவழகிது.

யகர வகர வுடம்படுமெய்கள் இரண்டும் எங்கேவரும்?

" ஏ முன் இவ்விருமையும் உடம்படுமெய்யென்றாகும்"

**உ–ம்.:–**

சே அடி–சேவடி

சே அடி–சேயடி

ஏ கார மளபெடுக்குமிடத்துவரும் எகரமுன்னரும் யகரமும் வகரமும் உடம்படுமெய்யாக வரும்.

உ–ம். ஏஎ இவளொருத்தி–ஏஎயிவளொருத்தி.

சேஎ அடைந்தது–சேஎவடைந்தது.

இப்புணர்ச்சி இயல்பு புணர்ச்சியோ? விகாரப் புணர்ச்சியோ?

உயிரோடுயிர் மயங்காமையின் அவை உடம்படுமெய் பெற்றுப் புணரும் புணர்ச்சியெல்லாம் இயல்புபுணர்ச்சியேயாம். அது தோன்றல் விகாரமன்று.

எகரவினாவும் முச்சுட்டுமாகிய உயிரீற்றிடைச் சொற்கள் நாற்கணத்தோடும் புணருமாறு கூறுஞ் சூத்திரம் யாது?

எகர வினாமுச் சுட்டின் முன்னர்
உயிரும் யகரமு மெய்தின் வவ்வும்
பிறவரி னவையுந் தூக்கிற் சுட்டு
நீளின் யகரமுந் தோன்றுத னெறியே.

(எகரவினா முச்சுட்டின் முன்னர்
உயிரும் யகரமும் எய்தின் வவ்வும்,
பிறவரின் அவையும், தூக்கில் சுட்டு
நீளின் யகரமும் தோன்றுதல் நெறியே.)

**இ–ள்.:– எகரவினா (முன்னர்) முச்சுட்டின் முன்னர்**–எகரவினா விடைச் செல்லின் முன்னும் மூன்று சுட்டிடைச் சொல்லின் முன்னும், **உயிரும் யகரமும் எய்தின் வவ்வும்** – உயிரும் யகரமும் வரின்வகரமும், **பிறவரின் அவையும்** –யகரமொழிந்த மெய்கள் வரின் அவ்வம்மெய்களும், **தூக்கில் சுட்டு நீளின் யகரமும் தோன்றுதல் நெறியே** – செய்யுளின்கட் சுட்டு நீண்டு வருமிடத்து யகரமும் மிகுதல் முறையாம், **எ–று.**

எகரவினாமுன்னும் அ இ உ என்னும் புறச்சுட்டின் முன்னும் உயிரும் யகரமும் வரின் எவ்வாறு புணரும்?

" எகரவினா முச்சுட்டின் முன்னர் உயிரும் யகரமுமெய்தின் வவ்வும்" (தோன்றுதனெறியே)

**உ–ம்.:–**

எ அணி–எவ்வணி.

எ யானை– எவ்யானை.

அ அணி–அவ்வணி.

அ யானை—அவ்யானை.

இ அணி—இவ்வணி

இ யானை—இவ்யானை.

உ அணி—உவ்வணி.

உ யானை—உவ்யானை.

இங்கே இந்நான்கெழுத்துக்கு முன்னே உயிர் வந்தவிடத்து வகர உடம்படுமெய்யல்லாத வகரமெய் தோன்றிப் பின்னர் அவ் வகரமெய்யிரட்டியதும் யகரம் வந்தவிடத்து உடம்படுமெய்யல்லாத வகரம் தோன்றியதும் தோன்றல் விகாரமெனக் கொள்க.

அந்நான்கிற்கு முன்னும் பிறவெழுத்துத்துவரின் எவ்வாறு புணரும்?

"(எகரவினா முச்சுட்டின் முன்னர்ப்)

பிறவரின் அவையும் (தோன்றுதனெறியே)"

**உ—ம்.:—**

எ குதிரை—எக்குதிரை.

எ சேனை—எச்சேனை.

எ தண்டு—எத்தண்டு.

எ படை—எப்படை.

எ ஞாலம்—எஞ்ஞாலம்.

எ நாடு—எந்நாடு.

எ மலை—எம்மலை.

அ குதிரை—அக்குதிரை.

இ குதிரை—இக்குதிரை.

உ குதிரை—உக்குதிரை.

அ சேனை—அச்சேனை.

இ சேனை—இச்சேனை.

எனவரும்.

செய்யுளின்கண்ணே நீண்ட சுட்டின்முன் உயிர்வரின் எவ்வாறு புணரும்?

" தூக்கிற்சுட்டு நீளின் யகரமும் தோன்றுதல் நெறியே"

**உ—ம்.:—** அ இடை—ஆயிடை.

எகரவினா முச்சுட்டின்முன்னர் உயிர்வரின் வகரமும் நீண்டசுட்டின் முன் உயிர்வரின் யகரமும் தோன்றுமென்றது, உயிர்முன் உயிர் புணர்தற்குக் கூறிய "இஈஐவழி" என்னுஞ் சூத்திரத்தில் அடங்காதா?

அடங்காது. "இஈஐவழி" என்னும் சூத்திரத்தில் உடம் படுமெய் வருமாறு கூறப்பட்டது. இவ்வெகரவினா முச்சுட்டென்னுஞ் சூத்திரத்தில் கூறப்பட்டவை உடம்படு மெய்யல்லாத வகர யகர மெய்கள்.

எகரவினா முச்சுட்டின் முன் யகரம்வரின் வகரமும் பிறவரின் அவற்றுள்ளே ஞ ந ம வரின் அவையுந் தோன்று மென்றதனால் விலக்கப்பட்ட விதி யாது?

"எண்மூ வெழுத்தீற் றெவ்வகை மொழிக்கும்

முன்வரு ஞநமய வக்க ளியல்பும்" என்றவிதி.

பிறவரின் என்றவற்றுள்ளே க ச த ப வரின் அவை தோன்றுமென்றது யாது வகுத்தபடியாம்?

முன் எய்தாதது எய்தாதது எய்துவித்தலின் புதுவிதி வகுத்தபடியாம்.

ஆகவே இச்சூத்திரம் என்னவிகாரம் கூறுகின்றது?

தோன்றல் விகாரம்.

நெறியென்றமையால், யாங்ஙனம் என யாவினா முன்னும், ஆங்ஙனம், ஈங்ஙனம், ஊங்ஙனம், என நீண்ட சுட்டின் முன்னும், ஙகர மிகுதலும், ஈது எனவும் ஆங்கு, ஈங்கு, ஊங்கு, ஆண்டு, ஈண்டு, ஊண்டு எனவும் சுட்டுப்பெயர் நீளலும் "விண்வத்துக் கொட்கும்"எனவும் "செல்வழி செல்க" எனவும் "சார்வுழிச்சார்ந்த தகையன்" எனவும் மெய்யீற்றின் முன் உயிர்வர, இப்படி உடம்படுமெய்யல்லாத வகரம் பெறுதலுங்கொள்க.

உடம்படுமெய்பெற்றுப் புணர்தற்பாலவாகிய சிலவுயிர் முன் உயிர்ப் புணர்ச்சிக்கண் கெடுதலும், உயிர்முன் யகரப் புணர்ச்சிக்கண் திரிதலுமுண்டா மெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

உயிர்வரி னுக்குறண் மெய்விட் டோடும்

யவ்வரினிய்யா முற்றுமற் றொரோவழி.

(உயிர் வரின் உக்குறள் மெய் விட்டு ஓடும்;

யவ்வரின் இஆம்; முற்றும் அற்று ஒரோவழி)

**இ–ள்.:– உக்குறள் உயிர்வரின் மெய்விட்டு ஓடும்**–குற்றியலுகரம் உயிர் முதன்மொழி வந்தாற் றனக்கிடமாகிய மெய்யின் மேற் றனித்துநின்ற வியல்பு கெடப் பெறும்; **ய வரின் இ ஆம்** – யகரமுதன் மொழி வந்தால் அது இகரமாகத் திரியும்; **முற்றும் அற்று ஒரோவழி**–முற்றியலுகரமும் அவ்விருவிதியும் பெறும் ஒவ்வோரிடத்து, எ–று.

உயிர்வரின் குற்றியலுகரம் எவ்விகாரம் பெறும்?

"உயிர்வரின் உக்குறண் மெய்விட்டோடும்"

**உ–ம்.:–**

(1) நாகு, எஃகு. வரகு, கொக்கு, குரங்கு, தெள்கு, இவற்றின்முன் அரிது, அருமை முதலிய உயிர்முதன் மொழிகளை வருவித்து, நாகரிது, நாகருமை எனக் கூட்டி, இருவழியும் உயிர் வரக் குற்றியலுகரந் தான் வல்லின மெய்யின்மே லேறிநின்ற கெடப்பெறுதல் காண்க.

யகரம்வரின் குற்றியலுகரம் யாதாம்?

" (உக்குறள்) யவ்வரினிய்யாம்"

(2) நாகு முதலியவற்றின் முன், யாது, யாப்பு என வருவித்து, நாகியாது, நாகியாப்பு, எனக் கூட்டி, இருவழியும் யகரம் வரக் குற்றியலுகரம் இகரமாகத் திரிதல் காண்க.

உயிரும் யகரமும் வரின் முற்றியலுகரம் இவ்விதி பெறுதலுமுண்டோ?

"முற்றுமற்றொரோவழி"

(3) கதவு–அழகிது–கதவழகிது, கதவு–யாது–கதவியாது, எனவும், அது–ஐ–அதை எனவும், முற்றியலுகரம் ஒரோரிடத்து அவ்விருவிதியும் பெறுதல் காண்க.

இவ்விதியேயன்றிக் குற்றியலுகரம் வேறுவிதியும் பெறுமோ?

ஒரோவிடத்துக் குற்றுகரம் இ ஈ ஐ வழி என்னுஞ் சூத்திர விதியும் பெறும்.

**வரலாறு:–**

"தன்முகமாகத் தானழைப்பதுவே." இதில்: அழைப்பது என்பது குற்றுகரமொழி; ஏகாரவிடைச்சொல் வர: "அழைப்பதே" என முடிதற்பாலது, அங்ஙனமுடியாது, வகர வுடம்படுமெய் பெற்று,"அழைப்பதுவே" என முடிந்தது. "அடித்தடித்துவக்காரமுன் றீற்றிய வற்புத மறியேனே" இதில் "அடித்து" என்பது குற்றுகரமொழி; அக்காரமென்னும் உயிர் முதன்மொழி வர, அடித்தக்காரமென. முடிதற்பாலது அங்ஙன முடியாது வகரவுடம்படுமெய் பெற்று, "அடித்துவக்காரம்" என முடிந்தது. (அக்காரம்–சர்க்கரை.)

நாகரிது என்புழிமுன்னர்க் குற்றுகரவோசையும் பின்னர் உயிரோசையுமாக அவ்விரண்டுங்கூடி யல்லது அப்பொருளுணர்த்தாமையின் உயிரேறுங்காற் குற்றுகரங் கெட்டுப்போக நின்ற ஒற்றின்மேல் உயிரேறிற்றெனக் கொள்ளலாகாது என்பர் நச்சினாக்கினியர். அதுபற்றியே கெடுமென்னாது ஒடுமென்றதாமென்க.

குற்றியலுகரம் உயிர் வரின் ஓடும் என்றது "இ ஈ ஐ வழி என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல்; யவ்வரின் இய்யாம் என்றது எய்தாத தெய்துவித்தல்; ஒரோவிடத்து முற்றியலுகரம் இவ்விதி யிரண்டனுள் முன்னையது பெறும் என்றது "இ ஈ ஐ வழி" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதன்மேற் சிறப்புவிதி; பின்னையது பெறும் என்றது எய்தாத தெய்துவித்தல்.

உயிரீற்றுச் சொன்முன்னே வன்கணம் புணருமாறு தொகுத்துக் கூறும் சூத்திரம் யாது?

இயல்பினும் விதியினு நின்ற வுயிர்முன்

க ச த ப மிகும்வித வாதன மன்னே.

(இயல்பினும் விதியினும் நின்ற உயிர் முன் க ச த ப மிகும்; விதவாதன மன்னே)

**இ–ள்.:– இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன்** –இயல்பினாலும் விதியினாலும் இறுதியாக நின்ற உயிர்களின்முன், **க ச த ப மிகும் விதவாதமன்** – வருங் க ச த பக்கள் பெரும்பாலும் மிகும் பின் சிறப்புவிதியிற் சொல்லாதவைகளுள், **எ–று.**

இங்கே இயல்பீறாவது யாது?

"முன்னே "ஆவி ஞ ண ந ம ய ன ர ல வ ழ ள மெய் சாயுமுகர நாலாறு

மீறே" என்ற சூத்திரத்தாற் கூறப் பட்ட மொழிக் கியல்பாகவுள்ள இருபத்து நான்கீற்றினுள் உயிரீறு"

விதியீறாவது யாது?

புணர்ச்சியின் பொருட்டு ஒற்றீறொழித்து உயிரீறாகியேனும் ஒற்றீற்றின்மேல் வந்து உயிரீறாகியேனும் நிற்கும் உயிரீறு. அது வட்டக்கல் என்பதில் வட்டம் என்பது வட்டவெனவும் தமிழப் பிள்ளை யென்பதில் தமிழ எனவும் நிற்பது போல்வது.

இச்சூத்திரவிதி அல்வழிக்கா வேற்றுமைக்கா?

"விதவாமையின் இரண்டுக்குமாம்"

உ–ம்.:–

(1) ஆடூஉக்குறியன், நம்பிக்கொற்றன் எனவும், ஆடூஉக்கை செட்டித்தெரு எனவும், உயர்திணைப் பெயர்முன் இரு வழியும் வல்லெழுத்து மிக்கன. சாத்திப்பெண் எனப்பொதுப்பெயர் முன் அல்வழியில் வல்லெழுத்து மிக்கது. தீக்கடிது, விளக்குறிது, தராக்கடிது, தீப்பெரிது, வடுத்தீது, கொக்குக் கடிது, கொண்மூக்கரிது, சேச்சிறிது, சேப்பெரிது எனவும் ஒன்றைக்கை, வட்டக்கல், தாழக்கோல் எனவும், அஃறிணைப் பெயர் முன் அல்வழியில் வல்லெழுத்து மிக்கன. இவற்றுள், ஒற்றை, வட்ட, தாழ என்பன விதியீறு. விளக்கோடு, பலாக்காய், கிளிச்சிறை, தீக்கடுமை, கடுக்காய், கொக்குக்கால், வண்டுக்கால், கொண்மூக்குழாம், சேக்கொம்பு, தினைத்தாள், சோப்பெருமை என அஃறிணைப்பெயர்முன் வேற்றுமையில் வல்லெழுத்து மிக்கன.

(2) ஆடிக்கொண்டான், ஆடாக்கொண்டான், ஆடூஉக் கொண்டான், ஆடெனக்கொண்டான், ஆடக் கொண்டான், உண்பாக்குச் சென்றான், பூத்துக் காய்த்தது. பொள்ளெனப் பரந்தது, சாலப்பகைத்தது எனவும், தெரிநிலைவினையெச்சத்தின் முன்னுங் குறிப்பு வினை யெச்சத்தின் முன்னும் வல்லெழுத்து மிக்கன. கூவிற்றுக்கோழி எனவும், குண்டுகட்டுக்களிறு எனவும், தெரிநிலைவினைமுற்றின் முன்னுங் குறிப்புவினை முற்றின் முன்னும் வல்லெழுத்து மிக்கன.

(3) ஆங்கக் கொண்டான், இனிச்செய்வேன், மற்றைத்தெரு, என இடைச்சொல்லின் முன் வல்வெழுத்து மிக்கன.

(4) தவப்பெரியன், கடிக்கமலம், பணத்தோள், என உரிச்சொல்லின் முன் வல்லெழுத்து மிக்கன.

(5) சொன்றிக்குழிசி, எனத் திசைச்சொன் முன்னும் கங்கைச் சடை என வடசொன் முன்னும் வல்லெழுத்து மிக்கன.

விதவாதன வெனவே முன் விதந்தனவும் இனி விதப்பனவு முளவென்றாயிற்று. அவை யாவை?

அவைமுன் "பொதுப்பெயருயர்திணைப்பெயர்களீற்று... ஆவியரமுன் வன்மைமிகா" என்றவிதியினும், "ஆவி யரழ விறுதிமுன்னிலைவினை ஏவன்முன் வல்லினமியல்பொடு விகற்பே" "என்ற சூத்திரத்தினும் போந்தவைமுன் விதந்தனவாம். இனிவிதப்பன வருஞ் சூத்திரங்களில் வருவன".

விதவாதன பெரும்பாலு மிகும் எனவே, விதந்தன சிறுபான்மை மிகா எனவும் கூறினாராயிற்று, அவை வருமாறு:-

(1) நொக்கொற்றா, துக்கொற்றா, சாத்தா, தேவா, பூதா என்பன. "ஏவன்முன் வல்லின மியல்பொடு விகற்பே என முற்கூறிய சிறப்புவிதி பெறாது, வல்லெழுத்து மிக்கே வந்தன. எனவே, நொ, து, முன் மூவினமும் மிகு மென்றாராயிற்று.

(2) ஏரிகரை, குழவிகை, குழந்தைகை, "பழமுதிர்சோலை மலைகிழவோனே" எனவும், கூப்புகரம், ஈட்டுதனம் நாட்டுபுகழ் எனவும் முறையே வேற்றுமையிலும் அவ்வழியிலும் பின் விதவாதன மிகாவாயின.

வல்லினம் உயிரீற்றுயர்திணைப்பெயர் பொதுப்பெயர் களுக்கு முன் மிகும் என்றது "ஆவியரமுன் வன்மை மிகா" என எய்தியதன்மேற் சிறப்புவிதி, அஃறிணைப் பெயர்களுக்கு முன்னும் வினை முதலியவைகளுக்கு முன்னும் மிகும் என்றது எய்தாத தெய்துவித்தல்.

மேற்கூறிய சூத்திரவிதியில் அடங்காத உயிரீற்றின் முன்வரும் வல்லினப் புணர்ச்சியு முளதா?

மரப்பெயர் முன்ன ரினமெல்லெழுத்து
வரப்பெறு னவுமுள வேற்றுமை வழியே

(மரப் பெயர் முன்னர் இனமெல் எழுத்து
வரப்பெறுனவும் உள வேற்றுமை வழியே)

**இ–ள்.:– மரப்பெயர் முன்னர்** – உயிரீற்றுச் சில மரப்பெயர்களுக்கு முன், **இனமெல் எழுத்து வரப்பெறுனவும் உள**–மேற்கூறிய பொதுவிதியால் வரும் வல்லெழுத்துமிகாது அவற்றிற்கினமாகிய மெல்லெழுத்து மிகப்பெறுவனவுஞ் சிலவுளவாம், **வேற்றுமை வழி** – வேற்றுமைவழியில், **எ–று.**

**உ–ம்.:–**

விள– காய்– விளங்காய், களா–கனி– களங்கனி, மா துளிர்–மாந்துளிர், காயா–பூ–காயாம்பூ, எனவரும்.

இது "இயல்பினும் விதியினும்" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது ஒருவழி விலக்கிப் பிறிதுவிதிவகுத்தல்.

## அகரவீற்றுச் சிறப்பு விதி

சில அகரவீற்றுச் சொற்களின் முன்னே வன்கணம் மிகாவெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

செய்யிய வென்னும் வினையெச்சம் பலவகைப்
பெயரி னெச்சமுற் றாற னுருபே
அஃறிணைப் பன்மை யம்மமுன் னியல்பே.

(செய்யிய என்னும் வினையெச்சம், பல்வகைப் பெயரினெச்சம், முற்று, ஆறனுருபு, அஃறிணைப் பன்மை, அம்ம முன் இயல்பே)

**இ–ள்.:– செய்யிய என்னும் வினையெச்சம்** – செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சவினையும், **பல்வகைப் பெயரின் எச்சம்** – பலவகைப்பட்ட பெயரெச்சவினையும், (பல்வகை)முற்று பலவகைப்பட்ட முற்றுவினையும், **ஆறன் உருபு** – ஆறாம்வேற்றுமை அகரவுருபும், **அஃறிணைப் பன்மை** –அஃறிணைப் பன்மைப் பெயரும், **அம்மமுன் இயல்பே** – அம்ம என்னும் உரையசையிடைச் சொல்லும் ஆகிய அகரவீற்றுச் சொற்களாறன் முன்னும் வல்லெழுத்துக்கள் இயல்பாம், எ–று.

முதலிலும் ஈற்றிலும் அகரவீற்றுச் சொல் வைத்தமையால், இடை நின்றனவும் அகரவீற்றுச் சொற்கள் என்பது பெற்றாம்.

அவ்வகர வீற்றுச் சொற்கள் யாவை?

செய்யியவென்னும் வாய்பாட்டு வினையெச்சம், பலவகைப்பட்ட பெயரெச்சம், பலவகைமுற்று, ஆறாம் வேற்றுமை அகரவுருபு, அஃறிணைப் பன்மைப் பெயர் அம்ம என்னு மிடைச்சொல் என்னும் ஆறுமாம்.

பல்வகைப் பெயரெச்சமென்றது, வினையடி நான்கினும் பிறந்த பெயரெச்சங்களை, பலவகை முற்றென்றது, வினையடி நான்கினும் பிறந்த முற்றுவினைகளை. வினையடி நான்காவன, இயல்பாகிய வினையடி ஒன்றும், மற்றைப்பெயர் இடை உரியடியாகப் பிறந்த செயற்கைவினையடி மூன்றுமாம்.

முன்னே முற்றென விதந்தமையால், அஃறிணைப் பன்மை என்றது பெயரை.

செய்யிய வென்னும் வாய்பாட்டு வினையெச்சத்தின்முன் வலிவரின் எவ்வாறாம்?

"செய்யியவென்னும் வினையெச்ச முன் இயல்பே"

**உ–ம்.:–**

(1) உண்ணியகொண்டான், சென்றான், தந்தான், போயினான் எனச் செய்யியவென்னும் வினையெச்சமுன் இயல்பாயின. (உண்ணிய–உண்ண.)

அகரவீற்றுப் பெயரெச்சத்தின் முன் வல்லினம் எவ்வாறாம்?

"பல்வகைப் பெயரினெச்ச முன் இயல்பே"

(2) உண்ட, உண்ணாநின்ற, உண்ணாத. எனவும், கடைக்கணித்த, சித்திரித்த, வெளுத்த, சினவிய, கறுவிய, அமரிய, எனவும், திண்ணென்ற பொன்போன்ற எனவும், சான்ற, உற்ற எனவும், வரும் நால்வகைத் தெரிநிலைப் பெயரெச்சவினை முன்னும், அமர்முகத்த, கடுங்கண்ண சிறிய, பெரிய, உள, இல, பல, சில எனவும், பொன்னன் எனவும், கடிய எனவும், வரும் மூவகை வினைக்குறிப்புப் பெயரெச்சமுன்னும், குதிரை, செந்நாய், தகர், பன்றி இவற்றை வருவித்து, உண்டகுதிரை உண்டசெந்நாய், உண்ட தகர், உண்டபன்றி, என முறையே கூட்டிப், பல்வகைப் பெயரெச்சமுன் இயல்பாதல் காண்க. குறிப்புவினை, இயற்கைவினையடி ஏலாமையால், மூவகையாயிற்று.

அகரவீற்று வினைமுற்றின்முன் வல்லினம் எவ்வாறாம்?

"பல்வகை முற்று முன் இயல்பே"

(3) உண்டன, உண்ணாநின்றன, உண்பன, உண்ணாதன, என்னுந் தெரிநிலைவினை முற்று முன்னும், அமர் முகத்தன, கரியன, என்னுங் குறிப்புவினை முற்று முன்னும், அமர் முகத்தன, கரியன, என்னுங் குறிப்புவினை முற்றுமுன்னும் குதிரை, செந்நாய், தகர், பன்றி, இவற்றை வருவித்து, உண்டன குதிரை, உண்டன செந்நாய், எனக் கூட்டி முற்றுமுன் இயல்பாதல் காண்க.

இனி, மேற்காட்டிய பெயரெச்சவினைகட்கும், அன்பெறாத அகரவீற்றுப் பல்வகை முற்றுவினைகட்கும், பொருள் வேறுபாடன்றிச் சொல்வேறுபாடின்மையால், அவையே உதாரணமாகக் கொள்க.

வாழ்க கொற்றா, சாத்தா, தேவா, பூதா என வியங்கோண்முற்றின் முன் இயல்பாயின. வாழிய என்பதனோடும் இப்படியே கூட்டுக.

முற்றுமுன் இயல்பாம் எனவே, அருத்தாபத்தியால் இவ்வினைமுற்று வினையெச்சமாகியுங், குறிப்புமுற்று ஈரெச்சமாகியும் நின்றபோது வரும் வல்லினம் இயல்பாதலுங் கொள்க.

**வரலாறு:—**

உண்ட கண்டன: இஃது உண்டுகண்டன எனப் பொருள்படுதலால், வினைமுற்று வினையெச்சமாயிற்று. அமர்முகத்த கலக்கின இஃது அமர்முகத்தவாகிக் கலக்கின எனப் பொருள்படுதலால், குறிப்புமுற்று வினையெச்ச மாயிற்று.அமர்முகத்தகுதிரை வந்தன: இஃது அமர்முகத்தனவாகிய குதிரை வந்தன எனப் பொருள்படுதலால் குறிப்புமுற்றுப் பெயரெச்சமாயிற்று. இவற்றின் முன் வல்லினம் இயல்பாதல் காண்க.

அ என்னும் ஆறானுருபின்முன் வலிவரின் எவ்வாறாம்?

"ஆறனுருபே முன்னியல்பே"

(4) தன கைகள், தன செவிகள், தன தாள்கள், தன பதங்கள் என ஆறனுருபின் முன் இயல்பாயின.

அகரவீற்று அஃறிணைப்பெயரின் முன் வலிவரின் எவ்வாறாம்?

"அஃறிணைப் பன்மை முன்னியல்பே"

(5) பலகுதிரைகள், பல செந்நாய்கள், பலதகர்கள், பல பன்றிகள் எனவும், பல கொடுத்தான். பலசெய்தான், பல தந்தான், பல போக்கினான் எனவும், அஃறிணைப் பன்மைப் பெயர்முன் இருவழியும் இயல்பாயின.

அம்ம என்னு முரையசை யிடைச் சொன்முன் வலிவரின் எவ்வாறாம்?

"அம்மமுன் இயல்பே"

(6) அம்மகொற்றா, அம்மசாத்தா, அம்மதேவா, அம்மபூதா, என உரையசை யிடைச்சொன் முன் இயல்பாயின.

இது "இயல்பினும் விதியினும்" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கல்.

இறுதியில் நின்ற உயிர்மெய்கெடப் பெறும் ஒரு வியங்கோண்முற்றுள தென்றும், அது கெட்டுநின்றவழியும் அதன்முன்வரும் வல்லினம் இயல்பேயாம் என்றுங் கூறுஞ் சூத்திரம் யாது?

வாழிய வென்பத னீற்றி னுயிர்மெய்
ஏகலு முரித்தஃ தேகினு மியல்பே.

(வாழிய என்பதன் ஈற்றின் உயிர்மெய்
ஏகலும் உரித்து; அஃது ஏகினும் இயல்பே.)

**இ–ள்.:– வாழிய என்பதன் ஈற்றின் உயிர்மெய் ஏகலும் உரித்து** – வாழிய என்னும் வியங்கோண்முற்றினுடைய இறுதியிலுள்ள யகரவுயிர்மெய் குறைதலும் உரித்தாகும். **அஃது ஏகினம் இயல்பே** – அவ்வுயிர்மெய் குறைந்து இகரவீறாய் நின்றாலும் வல்லினம் பொதுவிதியினாலே மிகாது சிறப்புவிதியிற் கூறிய இயல்பேயாம், **எ–று.**

இது மேற்கூறிய சூத்திரத்தில் அடங்குமேயாகவும் இச்சூத்திரத்தில் வகுத்தது யாதுபற்றி?

வாழியவென்னும் வியங்கோண்முற்று ஒரோவிடத்து ஈற்றுயிர் குறையப் பெறுதலின் அச்செய்தி "செய்ய்ய" வென்னுஞ் சூத்திரத்தினாற் பெறப்படாமையிற் பெறுவித்தற்கும், ஈற்றுயிர்மெய் குறைந்தவிடத்தும் வரும் வல்லினம் இயல்பே யாதலின் அவ்வியல்பு "செய்ய்ய" வென்னுஞ் சூத்திரத்தினாற் பெறப்பட்டமையின் அதனைத் தழுவுதற்கும் இச்சூத்திரம் வகுக்கப்பட்டது.

ஏகலும் உரித்து என்ற உம்மையால் ஈற்றுயிர்மெய் கெடாமையே வலியுடைத்தெனக் கொள்க.

**உ–ம்.:–**

(1) ஆவாழி, அந்தணர்வாழி, என ஈற்றுயிர்மெய் குறைந்தது.

(2) வாழிகொற்றா வாழி சாத்தா வாழிதேவா வாழிபூதா, என ஈற்றுயிர்மெய் குறைந்தவிடத்து வல்லினம் இயல்பாயின.

வாழியவென்னும் வினையெச்சமும்வேறு; வாழிய வென்னும் வியங்கோண்முற்றும் வேறாதலின், இவ்விதி வாழியவென்னும் வியங்கோண் முற்றிற்கேயாம்.

ஈற்றுயிர்மெய் கெடவும்பெறும் வினையெச்சமு மொன்றுண்டெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

சாவவென் மொழியீற் றுயிர்மெய் சாதலும்விதி.

(சாவ என் மொழி ஈற்று உயிர்மெய் சாதலும்விதி)

**இ–ள்.:– சாவ என் மொழி ஈற்று உயிர்மெய்** – சாவவென்னுஞ் செயவெனெச்ச வினைச்சொல்லினுடைய இறுதியில் உள்ள வகர வுயிர்மெய், **சாதலும் விதி** – கெட்டுப் புணர்தலும் விதியாகும், **எ–று.**

இங்ஙனம் வருதலுண்டேனும் சாவவென்பதே சிறப்புடைத்தென்பது உம்மையாற் பெறப்படும்.

**உ–ம்.:–**

சாவ–குத்தினான் = சாக்குத்தினான் எனவரும்.

சாவவென்னும் வினையெச்சம் உயிர்மெய்யீறு போய்ச் சாவென நிற்பினும் வரும் வல்லினம் “ இயல்பினும் விதியினும்” என்னுஞ் சூத்திர விதிப்படியே புணரு மென்பது இச்சூத்திரக் கருத்தாம்.

பலசில வென்னுஞ் சொற்கள் தம்முன்னேதாமும் பிறவும்வரின் புணருமாறு கூறுஞ் சூத்திரம் யாது?

பலசில வெனுமிவை தம்முன் றாம்வரின்
இயல்பு மிகலு மகர மேக
லகரம் றகர மாகலும் பிறவரின்
அகரம் விகற்ப மாகலு முளபிற.
(பலசில எனும் இவை தம்முன் தாம்வரின்
இயல்பும் மிகலும், அகரம் ஏக
லகரம் றகரம் ஆகலும், பிற வரின்
அகரம் விகற்பம் ஆகலும் உள)

**இ—ள்.:— பல சில எனும் இவை தம்முன் தாம்வரின் இயல்பும்** – பல சில என்னும் இவ்விருசொல்லுந் தமக்கு முன்னே தாம் வருமாயின் இயல்பாதலும், **மிகலும்** – மிகுதலும், **அகரம் ஏக லகரம் றகரம் ஆகலும்** – அகரங் கெட லகரம் றகரமாகத் திரிதலும், **பிறவரின் அகரம் விகற்பம் ஆகலும் உள** – இவற்றின் முன் பிறமொழிகளுள் யாதாயினுமொன்று வரின் அகரம் நிற்றலும் நீங்கலும் உளவாம், **எ—று.**

இச்சூத்திரத்திற் சொல்லப்பட்ட செய்கைகள் எத்தனை?

இயல்பும், மிகலும், திரிதலும், விகற்பமாகலும் என நான்கு செய்கைகள்.

பலசில என்னும் இருசொல்லும் தம்முன்னே தாம்வரின் இந்நான்கு செய்கைகளுள் எவற்றைப் பெறும்?

“பலசில வெனுமிவை தம்முன் றாம்வரின் இயல்பும் மிகலும் அகரமேக லகரம் றகரமாகலும் உள”

**உ—ம்.:—**

(1) பல பல, சில சில என இயல்பாயின.

(2) பலப்பல, சிலச்சில என மிக்கன.

(3) பற்பல, சிற்சில என அகரங்கெட லகரம் றகரமாயிற்று.

பலசில என்பன அல்வழியிற் பிறமொழிகள் வரின் எவ்வாறாம்?

பலசில வெனுமிவை தம்முன் பிறவரின் அகரம் விகற்பமாகலு முள”

(4) பலகலை, பல்கலை பலசாலை, பல்சாலை.

பலதாழிசை, பஃறாழிசை பலபடை, பல்படை.

பலஞானம், பன்ஞானம் பலநாள், பன்னாள்.

பலமணி, பன்மணி பலவளை, பல்வளை,

பலயாழ், பல்யாழ் பலவணி, பல்லணி.

பலவாயம், பல்லாயம் (சில என்பதும் இவ்வாறே)

எனப் பிறவர அகரம் விகற்பமாயிற்று.

பிறவென்ற மிகையினாலே, பல்பல சில்சில என அகரங் கெட லகரம் றகர மாகாது ஒரோவிடத்து அருகி வருதலும், இன்னும், அகரவீற்றுப் புணர்ச்சியுள் அடங்காது வருவனவுங் கொள்க.

## ஆகாரவீற்றுச் சிறப்புவிதி

முன் "இயல்பினும் விதியினும்" என்னுஞ் சூத்திரத்தில் விதித்த ஆகாரவீற்றுட் சிலவற்றிற்குச் சிறப்புவிதி கூறுஞ் சூத்திரம்யாது?

**உ–ம்.:–**

அல்வழி யாமா மியா முற்று முன்மிகா.

(அல்வழி ஆ மா மியா முற்று முன்மிகா)

**இ–ள்.:– அல்வழி ஆமா** – அல்வழியில் ஆவும் மாவுமாகிய இருபெயரும், **மியாமுற்று முன் மிகா** – மியா என்னும் முன்னிலையசை இடைச்சொல்லும் ஆகாரவீற்றஃறிணைப் பன்மை யெதிர்மறைமுற்றுவினையுமாகிய இவற்றின் முன் வரும் வல்லினம் இயல்பாகும், **எ–று.**

அல்வழியில் ஆ மா என்பவற்றின் முன்வரும் வல்லினம் எவ்வாறு புணரும்?

"அல்வழி ஆமா முன்மிகா"

**உ–ம்.:–**

ஆகுறிது, மாகுறிது, சிறிது, தீது, பெரிது என அல்வழியில் ஆவுமாவுமாகிய இருபெயர் முன்னும் வலி இயல்பாயின. மா இங்கே விலங்கு.

மியாமுன் வல்லினம் எவ்வாறாம்?

"மியா முன்மிகா"

**உ–ம்.:–**

(2) கேண்மியா கொற்றா, கேண்மியா சாத்தா, தேவா பூதா என மியா என்னும் முன்னிலையசையிடைச்சொல் முன் வலி இயல்பாயின.

ஆகாரவீற்றஃறிணைப் பன்மை எதிர்மறை முற்றுமுன் வல்லினம் எவ்வாறாம்?

"முற்று முன்மிகா"

(3) உண்ணா குதிரைகள், உண்ணா செந்நாய்கள், தகர்கள், பன்றிகள், என ஆகாரவீற்றஃறிணைப் பன்மை யெதிர்மறை முற்றுவினைமுன் வலி இயல்பாயின.

உண்ணாக் குதிரைகள் எனப் பெதுவிதியால் மிகுமாயின் தகரவீறு குறைந்த எதிர்மறைப் பெயரெச்சமானெக் கொள்க.

ஆமா என்ற மாத்திரமே காட்டுப்பசு எனவும் பொருள்பட இரட்டுற மொழிந்தமையால், ஆமா என்னும் பெயர் முன்னும் வலி மிகாமை கொள்க.

வ—று.:—

ஆமாகுறிது, ஆமாசிறிது. தீது, பெரிது என வரும்.

முற்றுமுன் மிகா எனவே, அருத்தாபத்தியால் அவ்வினையா லணையும் பெயர்முன்னும், அவ்வினைமுற்று வினையெச்சமா யவற்றின் முன்னும் அவ்வாறு மிகாமை கொள்க.

வ—று.:—

உண்ணாகிடந்தன, சென்றன, தந்தன, போயின எனவரும், இங்கே உண்ணா என்றது, வினையாலணையும் பெயராயின் உண்ணாதனவாகிய குதிரைகள் கிடந்தன எனவும், வினைமுற்று வினையெச்சமாயின், உண்ணாதனவாய்க் கிடந்தன எனவும், பொருள்படும். உண்ணாக் கிடந்தன எனப் பொதுவிதியால் மிகுமாயின், உண்டு எனப் பொருள்படுஞ் செய்யா என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சமும், உண்ணாது எனப் பொருள்படுந் துவ்வீறு குறைந்த செய்யா என்னும் எதிர்மறை வினையெச்சமு மானெக் கொள்க.

இது "இயல்பினும் விதியினும்" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது ஒருமருங்கு விலக்கல்.

ஆகாரவீற்றுட் சிலவற்றிற்குச் செய்யுண்முடிபு கூறுஞ் சூத்திரம் யாது?

குறியதன் கீழாக் குறுகுலு மதனோ
டுகர மேற்றலு மியல்புமாந் தூக்கின்.

(குறியதன் கீழ் ஆக் குறுகலும் அதனோடு
உகரம் ஏற்றலும் இயல்பும் ஆம் தூக்கின்)

**இ—ள்.:— குறியதன் கீழ் ஆக் குறுகலும்** — குற்றெழுத்தின் கீழ் நின்ற ஆகாரம் அகரமாதலும், **அதனோடு உகரம் ஏற்றலும்** —அவ்வகரமாதலுடனே உகரம் பெறுதலும், **இயல்பும் ஆம் தூக்கின்** — அவ்விரண்டுமின்றித் தன்னியல்பின் நிற்றலுமாகிய மூன்றுவிதியும் ஆகும் பாட்டினிடத்து, எ—று.

நிலா, சுறா, இரா என்பன செய்யுளிலே நில, சுற, இர எனக் குறுகியும், நிலவு, சுறவு, இரவு எனக் குறுகலோடு உகரம் பெற்றும், இவ்வாறின்றி நிலா, சுறா, இராவென இயல்பாயும் வருமென்பது கருத்து.

உ—ம்.:—

"நிலவிரிகானல்வாய் நின்று." நிலா விரி; (குறுகல்.)

"மருவினென்செய்யுமோ நிலவு". நிலா: (குறுகலோடு
உகரமேற்)

"நிலாவணங்கு வெண்மணன்மேனின்று" (இயல்புறல்.)

வழக்கின்கண்ணே இம்மூன்றனுள் எவ்விதி பெறும்?

செய்யுளில் இம்மூன்றுமாமெனவே, வழக்கில் இரண்டும் ஒன்றுமாம் என்றாராயிற்று.

வ—று.:—

உதித்தது நிலவு, உதித்தது நிலா; கண்டேன் கனவு, கண்டேன் கனா எனக் குறுகலோடு உகரமேற்றலுந் தன்னியல்புமாகிய இரண்டும் வந்தன. தரா, மிடா எனத் தன்னியல் பொன்றுமாய் நின்றன. இம்மூன்றுமே யன்றி அம்முப் பெறுதலுமுண்டு.

உ–ம்.:–

"நறவங்கண்ணி நற்போர்ச்செம்பியன்" "குரவநீடிய கொன்றையங்கானல்" என்பன ஆகாரங்குறுகி அம்முப்பெற்றமை காண்க.

ஆக் குறுகலும் அதனோடுகரமேற்றலுமாம் என்றது எய்தாத எய்துவித்தல்; இயல்புமாம் என்றது அவ்விடத்து வருவதோரையமறுத்தல்.

## இகரவீற்றுச் சிறப்புவிதி

"இயல்பினும் விதியினும்" என்னுஞ் சூத்திரவிதி பெறற்பாலனவாகிய சில வினையெச்சக் குறிப்புச் சொற்கள் செய்யுளிலே குற்றுகரவீறும் பெறுமெனவும், அங்ஙனம், பெறும்போது வருமொழி வல்லெழுத்து இயல்பாமெனவுங் கூறுஞ் யாது?

அன்றி யின்றியென் வினையெஞ் சிகரந்

தொடர்பினு ளுகர மாய்வரி னியல்பே.

(அன்றி இன்றி என் வினையெஞ்சு இகரம்

தொடர்பினுள் உகரம் ஆய் வரின் இயல்பு)

**இ–ள்.:– அன்றி இன்றி என் வினையெஞ்சு இகரம்**–அன்றி இன்றி என்னும் வினையெச்சக் குறிப்புச் சொற்களின் ஈற்றிலுள்ள இகரம், **தொடர்பினுள் உகரம் ஆய்வரின் இயல்பு** –செய்யுளில் உகரமாய்த் திரிந்து வரின் வருங் கசதபக்கள் பொது விதியான் மிகாது இயல்பாகும், **எ–று.**

தொடர்பு என்பதன் பொருள் யாது?

தொடர்பு–செய்யுள்.

உ–ம்.:–

வாளன்றுபிடியா வன்கணாடவர்... வாள் அன்றி

விண்ணின்று பொய்ப்பின்...... விண் இன்றி.

அன்றி இன்றி என்பன செய்யுளில் உகரவீறாய்த் திரிதல் நியதியோ?

"உகரமாய்வரின்" என்றமையால் அங்ஙனம்வருதல் நியதியன்று என்பதும், வராதவழி வருமொழிவல்லினம் "அறிவின்றிக் கொடுத்தான்" என மிகுமென்பதும் பெறப்படும்.

வினையெஞ்சிகரந் தொடர்பினுள் உகரமாமென்றது எய்தாதெய்துவித்தல்; அஃதெய்தியவிடத்துப் புணரும் வல்லினம் இயல்பாம் என்றது "இயல்பினும் விதியினும்" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கல்.

இ ஈ ஐ வழி என்னுஞ் சூத்திரவிதியில் அடங்காத ஓர் அளவுப் பெயர்க்கு விதிகூறுஞ் சூத்திரம் யாது?

உரிவரி னாழியி னீற்றுயிர் மெய்கெட
மருவும் டகர முரியின் வழியே
யகரவுயிர் மெய்யா மேற்பன வரினே.

(உரி வரின் நாழியின் ஈற்றுயிர்மெய் கெட
மருவும் டகர முரியின் வழியே
யகர உயிர்மெய் ஆம் ஏற்பன வரினே)

**இ—ள்.:— உரிவரின்** – உரி என்னும் அளவுப்பெயர் வரின், **நாழியின் ஈற்றுயிர்மெய் கெட டகரம் மருவும்** – நாழி என்னும் அளவுப்பெயரினது ஈற்றிலுள்ள ழகர இகர வுயிர்மெய் நீங்க டகரமெய்வரும்; **உரியின் வழி யகர உயிர்மெய் ஆம் ஏற்பன வரின்**—உரியென்னும் அளவுப்பெயரின் பின் யகர வுயிர்மெய் வரும். அவ்வுயிர்மெய் வருதற்கு ஏற்ற வருமொழிகள் வருமாயின், **எ—று.**

நாழி என்பது உரிவரின் எவ்வாறு புணரும்?

"உரிவரின் நாழியி னீற்றுயர் மெய்கெட மருவும்டகரம்"

**உ—ம்.:—**

(1) நாழி—உரி—நாடுரி எனநாழியின் ஈற்றுயிர் மெய்கெட்டு டகரம் தோன்றிற்று. "உரிவரின் நாழியி னீற்றுயிர் மெய்கெட" எனக் கெடுதலைமுற் கூறியவதனால் "நாவுரி" என வருதலுங் கொள்க.

உரியின் பின்னே ஏற்பனவரின் யாது தோன்றும்?

" உரியின் வழியே யகர உயிர்மெய்யா மேற்பனவரினே"

உரியகொள், உரியசாமை, உரியபயறு, உரியமிளகு உரியவரகு என உரியின்பின் யகரவுயிர்மெய் வந்தது.

ஏற்பன வரின் எனவே, ஏலாதன வரின், உரியரிசி, உரியாழக்கு, உரியெண்ணெய் எனப் பொதுவிதி பெறுதல் கொள்க.

ஆழாக்கிரண்டு கொண்டது உழக்கு; உழக்கிரண்டு கொண்டது உரி; உரியிரண்டு கொண்டது நாழி.

உரிவரின் நாழியின் ஈற்றுயிர்மெய் கெட டகரமருவும் என்றது " இ ஈ ஐ வழி" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல்; உரியின்வழி யகரவுயிர் மெய்யாம் ஏற்பன வரின் என்றது எய்தாததெய்துவித்தல்.

சுவைப்புளிமுன் வன்கணம்வரின் எவ்வாறாம்?

சுவைப்புளி முன்னின மென்மையுந் தோன்றும்)

(சுவைப்புளி முன்இன மென்மையுந் தோன்றும்)

**இ—ள்.:— சுவைப்புளி முன்** – மரத்தையுணர்த்தாது புளிப்புச் சுவையை யுணர்த்துகின்ற புளியென்னும் பெயர்முன், **இனமென்மையும் தோன்றும்** – வல்லெழுத்து வரின் அவ்வல்லெழுத்தேயன்றி அவற்றிற்கினமாகிய மெல்லெழுத்து மிகவும் பெறும், **எ—று.**

உ–ம்.:–

புளிக்கறி புளிங்கறி,புளிச்சோறு, புளித்தயிர், புளிந்தயிர், புளிப்பாளிதம். புளிம்பாளிதம் என வரும். புளிப்பையுடைய கறி என விரிக்கப்படுதலால் இவ்விதி வேற்றுமை வழிக்கேயா மென்க.

மென்மையும் என்ற இறந்தது தழீஇய இழிவு சிறப்பும்மையால், புளிக்கறி எனப் பொதுவிதியால் வரும் வல்லெழுத்து மிகலே சிறப்புடைத்தெனக் கொள்க. உரையிற்கோடலால் மரப்புளிக்கு அம்சாரியை வருமெனக் கொள்க.

உ–ம்.:–

புளி–காய் புளியுங்காய். புளியங்கோடு, புளியமரம் என வரும்.

இனமென்மையுந் தோன்றும், என்றது, “இயல்பினும் விதியினும்”

என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதன்மேற் சிறப்புவிதி.

அல்வழியிலே இஐ முன்னே வன்கணம் எவ்வாறு புணரும்?

அல்வழி இ ஐம் முன்ன ராயின்

இயல்பு மிகலும் விகற்பமு மாகும்.

(அல்வழி இ ஐம் முன்னர் ஆயின்

இயல்பும் மிகலும் விகற்பமும் ஆகும்)

**இ–ள்.:– இ ஐம் முன்னர் அல்வழி ஆயின்** – இகர ஐகாரவீற்றஃறிணைப் பெயர்முன் வல்லினம் அல்வழியினிடத்து வருமாயின், **இயல்பும் மிகலும் விகற்பமும் ஆகும்** – இயல்பாதலும் பொது விதியான் மிகுதலும் ஒன்றற்கே ஒருகான் மிகாமையும் ஒரு கான் மிகுதலும் ஆகும், **எ–று.**

ஒப்பின் முடித்தலால், ஐகாரவீறும் உடன் கூறினார்.

இயல்பு எழுவாய்த்தொடர், உம்மைத் தொகைகளிலும், மிகுதி பண்புத்தொகை, உவமைத் தொகைகளிலும் விகற்பஞ் சில பெயர்முன் எழுவாய்த் தொடரிலுங் கொள்ளப்படும்.

உ–ம்.: –

(1) பருத்திகுறிது, யானைகரிது என எழுவாய்த்தொடரிலும், பரணி கார்த்திகை, யானை , குதிரை என உம்மைத் தொகையிலும், வலி இயல்பாயின.

(2)மாசித்திங்கள், சாரைப்பாம்பு எனப் பண்புத் தொகையிலும், காவிக்கண், பனைக்கை என உவமைத் தொகையிலும், வலி மிக்கன.

(3)கிளிகுறிது, கிளிக்குறிது, தினைகுறிது, தினைக் குறிது, என எழுவாய்த் தொடரில் விகற்பித்தன.

இயல்பு என்றது “இயல்பினும் விதியினும்” என்னுஞ் சூத்திரத்தால் எய்திய தொருவழி விலக்கல்; மிகல் என்றது எய்தியதிகந்து படாமைக் காத்தல்; விகற்பம் என்றது எய்தியது விலக்கலுடன் விலக்காமை.

## ஈகாரவீற்றுச் சிறப்புவிதி

ஆப்பீ என்பது நாற்கணத்தோடும் புணரும்போது எவ்வாறாம்?

ஆமுன் பகரவீ யனைத்தும் வரக் குறுகும்

மேலன வல்வழி யியல் பாகும்மே.

(ஆ முன் பகரவீ அனைத்தும் வரக் குறுகும்

மேலன அல்வழி இயல்பு ஆகும்)

**இ—ள்.:— ஆ முன் பகரவீ அனைத்தும் வரக்குறுகும்** – ஆ என்னும் பெயர் முன் நின்ற பகரவீகாரம் இருவழியும் நாற்கணமும் வரிற் குறுகும்; **மேலன அல்வழி இயல்பு ஆகும்** – குறுகி விதியிகர வீறாக நின்ற அதன்மேல் வரும் வல்லினம் அல்வழியிலே மேலைச் சூத்திரத்துட் கூறிய விதி மூன்றனுள் இயல்பைப் பெறும், எ—று.

பகரவீ என்றது இடக்கரடக்கல்; வருஞ் சூத்திரத்திற் பவ்வீ என்பதும் அது. இடக்கரென்பது சபையிலே சொல்லத் தகாத சொல். இடக்கர், அவையல்கிளவி என்பன ஒரு பொருட் சொற்கள். இடக்கரடக்கல் என்பது சொல்லத் தகாத சொல்லை அவ்வாய்பாடு மறைத்துப் பிறவாய்பாட்டாற் சொல்லல்.

**உ—ம்.:—**

ஆப்பியரியது, ஆப்பிகுளிரும், ஆப்பிநன்று, ஆப்பிவலிது என வரும். இனி வேற்றுமையில், ஆ ப்பியருமை, ஆப்பிக்குளிர்ச்சி ஆப்பிநன்மை, ஆப்பிவன்மை எனவரும்.

ஆமுன் பகரவீ அனைத்தும் வரக் குறுகும் என்றது எய்தாததெய்துவித்தல்; அஃதெய்தியவழி வரும் வல்லினம் அல்வழியில் இயல்பாகும் என்றது மேலைச் சூத்திரத்தால் எய்தியதிகந்து படாமைக் காத்தல்.

பீ நீ மீ முன் வல்லினம்வரின் அல்வழியில் எவ்வாறாம்?

பவ்வீ நீ மீ முன்ன ரல்வழி

இயல்பாம் வலிமெலி மிகலுமா மீக்கே.

(பவ்வீ நீ மீ முன்னர் அல்வழி

இயல்பு ஆம் வலி மெலி மிகலும் ஆம் மீக்கே)

**இ—ள்.:— பவ்வீ நீ மீ முன்னர்** – பகர மெய்யின்மேல் ஏறிநின்ற ஈகார வீற்றிடக்கர்ப் பெயரும், நீ என்னு முன்னிலைப் பெயரும், மேலிடத்தை உணர்த்தும் மீ என்னும் பெயருமாகிய இம்மூன்றன் முன்னும், **அல்வழி இயல்பு ஆம்** – வரும் வல்லினம் அல்வழியில் இயல்பாகும். **மீக்கு வலி (மிகலுமாம்) மெலிமிகலுமாம்** – மீ யென்னுஞ் சொற்குமுன் வல்லெழுத்து மிகுதலுமாகும், மெல்லெழுத்து மிகுதலுமாகும், எ—று.

**உ—ம்.:—**

(1) பீகுறிது, சிறிது, தீது, பெரிது எனவும், நீ குறியை,

தீயை, பெரியை, எனவும், மீகண் எனவும், இயல்பாயின.

(2) மீக்கூற்று, மீக்கோள், என வெய்தியதிகந்துபடாமல்

வலிமிக்கது; மீந்தோல் என மெலி மிக்கது.

மீகண் என்பது அல்வழிமுடிபன்றாகவும் இங்கே கூறப்பட்டது யாதுபற்றி?

இயல்பாதல்நோக்கி உடன் கூறப்பட்டது.

மீகண்–மேற்கண். மீக்கோள்–மேற்போர்வை. மீந்தோல்–மேற்றோல். இவை வேற்றுமைப்புணர்ச்சி.

நீ என்னும் பொதுப்பெயர், அல்வழியிலே நீ என்றும் வேற்றுமையிலே நின் என்றும் நிற்கையினாலே, "பொதுப்பெயருயர்திணைப்பெயர்" என்னுஞ் சூத்திரத்துள் அடங்கவில்லை.

பவ்வீ நீ மீ முன்னரல்வழி யியல்பாம் என்றது ஒருவழி " இயல்பனும் விதியினும்" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலகல்; மீக்கு முன் வலி மிகலாம் என்றது அச்சூத்திரத்தால் எய்தியதிகந்து படாமைக்காத்தல், மீக்குமுன் மெலி மிகலாம் என்றது அச்சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல்.

வல்லினம் வந்து இயல்பாகப் புணரும் உகரவீற்றுச் சொற்கள் யாவை?

மூன்றா றுருபெண் வினைத்தொகை சுட்டீ

றாகு முகர முன்ன ரியல்பாம்.

(மூன்று ஆறுஉருபு எண் வினைத் தொகை சுட்டு

ஈறு ஆகும் உகரமுன்னர் இயல்பு ஆம்)

**இ–ள்.:– மூன்று ஆறு உருபு –** மூன்றாம் வேற்றுமை யுருபிற்கும், ஆறாம் வேற்றுமை யுருபிற்கும், **எண் –** இயல்பாயும் விகாரமாயும் வரும் எண்ணிற்கும், **வினைத்தொகை**–வினைத்தொகைக்கும், **சுட்டு ஈறு ஆகும் உகரம் முன்னர்**–சுட்டுப்பெயருக்கும் ஈறாகிய உகரத்தின்முன், **இயல்பு ஆம்** – வரும் வல்லினம் இயல்பாகும், **எ–று.**

**உ–ம்.:–**

(1) சாத்தனொடு கொண்டான், சாத்தனோடு கொண்டான், சென்றான், தந்தான், போயினான் என மூன்றாம் வேற்றுமை யுருபின்முன் வல்லினம் இயல்பாயின.

(2) சாத்தனதுகை, தனாதுகை. செவி, தலை, புறம் என ஆறாம் வேற்றுமையுருபின்முன் வல்லினம் இயல்பாயின.

(3) ஒருகை, ஒருசெவி, தலை, புறம் என எண்ணுப்பெயர் முன் இயல்பாயின. இரு, அறு, எழு, ஏழு என்பவற்றோடும் இப்படியே ஒட்டுக. ஏழு என்பது இயல்பாய எண்ணுப்பெயர்; மற்றவை விகார வெண்ணுப்பெயர்.

(4) அடுகளிறு, கூட்டுசேனை, தானை, படை என வினைத்தொகைமுன் இயல்பாயின. தரு, புகு, தெறு, எழு, விரவு; நாட்டு, ஏறு இவற்றோடும் ஒட்டுக.

(5) அதுகுறிது; அதுசிறது; தீது, பெரிது எனவும், அது கண்டான், செகுத்தான், தந்தான், படைத்தான் எனவும், சுட்டுப்பெயர்முன் இருவழியும் இயல்பாயின. இது உது என்பவற்றோடு இப்படியே ஒட்டுக.

உதுகாண், உதுக்காண், என விகற்பித்து வருவது "இயல்பின் விகாரமும்" என்னும் இரண்டாம் வேற்றுமைப் புறனடைச் சூத்திரத்தில் "அன்னபிறவும்" என்பதனால் அமையும்.

இது "இயல்பினும் விதியினும்" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கல்.

அன்று என்பது ஆன்றென எங்கே வரும்?

அதுமுன் வருமன் றான்றாந் தூக்கின்.

(அதுமுன் வரும் அன்று ஆன்று ஆம் தூக்கின்)

**இ–ள்.:– அதுமுன் வரும் அன்று** – அது என்னுஞ் சுட்டுப்பெயர்முன் வரும் அன்றென்னும் வினைக்குறிப்பு முற்று, **தூக்கின் ஆன்று ஆம் –** பாட்டினிடத்து முதனீளும், **எ–று.**

**உ–ம்.:–**

அது–அன்று–அதான்று எனவரும்.

ஆன்றேயாம்என இயல்பை விலக்காமையால், அதுவன்றி, அதன்று எனவும் வரும்.

அதுமுன் வருமென விதந்தமையால் இது உதுமுன் வரும் அன்று அங்ஙனமாகாது.

அல்வழியிலே தம்முன்வரும் வல்லெழுத்து இயல்பாகப் பெறுங்குற்றுகரங்கள் யாவை?

வன்றொட ரல்லன முன்மிகா வல்வழி

(வன்றொடர் அல்லன முன்மிகா அல்வழி)

**இ–ள்.: வன்றொடர் அல்லனமுன்** – வன்றொடரொழிந்த ஐந்து குற்றியலுகரவீற்றின் முன்னும், **அல்வழி மிகா** – வரும் வல்லினம் அல்வழியில் இயல்பாகும், **எ–று.**

அல்வழியிலே தம்முன்வரும் வல்லினம் மிகப்பெறுங் குற்றுகரம் யாது?

"வன்றொடரல்லன முன்மிகா வல்வழி" என்றமையால் வல்லினம் வன்றொடர் முன்னே அல்வழியில் மிகும்.

**உ–ம்.:–**

எழுத்து–சிறிது எழுத்துச்சிறிது, பற்று–பெரிது, பற்றுப் பெரிது எனவரும்.

வன்றொடரல்லன முன்மிகா வல்வழி என்ற எதிர்மறையாற் பெறப்படுவன யாவை?

ஒழிந்த ஐந்து தொடரும் அல்வழியில் இயல்பாகுமென்பதும், வன்றொடர் அல்வழியில் மிகுமென்பதும். வேற்றுமையில் விதவாத எல்லாத்தொடரும் மிகுமென்பதும் பெறப்படும்.

**உ–ம்.:–**

நாகுகடிது, எஃகு சிறிது, வரகுதீது, குரங்குபெரிது, தெள்கு கொடிது

எனவும், எஃகுகால், அஃகுபிணி, பெருகுதனம், ஓங்குகலம், எய்துபொருள் எனவும், சேறுகொற்றா வருது சாத்தா, வந்துதேவா, செய்துபூதா எனவும், பொருது சென்றான், அறிந்துதந்தான், எய்துசென்றான் எனவும், அல்வழியில் இயல்பாயின.

ஏழாம் வேற்றுமை யிடப்பொருளுணர நின்ற அங்குமுதலிய சொற்களின் முன் வரும் வல்லினம் எவ்வாறாம்?

ஏழாம் வேற்றுமை யிடப்பொருளுணர நின்ற அங்கு, இங்கு, உங்கு எங்கு, ஆங்கு, ஈங்கு, ஊங்கு, யாங்கு, யாண்டு என்னும் மென்றொடர்க் குற்றுகரவீற்றிடைச் சொற்களின் முன்வரும் வல்லினம் மிகும்.

வ–று.:–

அங்குக் கொண்டான், இங்குக்கொண்டான், உங்குக் கொண்டான், எங்குக்கொண்டான், ஆங்குக் கொண்டான், ஈங்குக் கொண்டான், ஊங்குக்கொண்டான், யாங்குக் கொண்டான்; சென்றான், போயினான் எனவரும்.

ஏழாம் வேற்றுமைக் காலப் பொருளுணர நின்ற அன்று முதலியன முன் வரும் வல்லினம் எவ்வாறாம்?

ஏழாம்வேற்றுமைக் காலப் பொருளுணர நின்ற அன்று, இன்று, என்று, பண்டு, முந்து என்னும் மென்றொடர்க்குற்றுகர வீற்றிடைச் சொற்களின் முன் வரும் வல்லினம், அன்றுகண்டான், இன்றுசென்றான், என்றுதந்தான், பண்டுபெற்றான், முந்று கொண்டான் என இயல்பாயே முடியும்.

வன்றொடர்முன் வரும் வல்லினம் இயல்பாதலும் உண்டோ?

கூப்புக்கரம், நாட்டுபுகழ், கூட்டுசேனை, என இயல்பாதலுமுண்டு.

வினைத்தொகையில் வரும் வன்றொடர்முன் வல்லினம் இயல்பாமென்க.

வேற்றுமைக்கண்ணே வல்லினம் மிகாத குற்றுகரங்கள் எவை?

இடைத்தொடராய்தத் தொடர்ரொற் றிடையின்
மிகாநெடி லுயிர்த்தொடர் முன்மிகா வேற்றுமை.

(இடைத்தொடர், ஆய்தத்தொடர், ஒற்று இடையின் மிகா நெடில், உயிர்த்தொடர், முன்மிகா வேற்றுமை.)

**இ–ள்.:– இடைத்தொடர் (முன்)** – இடைத்தொடர் முன்னும், **ஆய்தத் தொடர்(முன்)** – ஆய்தத்தொடர் முன்னும், **ஒற்று இடையின் மிகா நெடிற்** (றொடர் முன்) – ஒற்று இடையே மிகாத நெடிற்றொடர்முன்னும், (ஒற்று இடையின் மிகா) **உயிர்த்தொடர்முன்** – ஒற்று இடையே மிகாத உயிர்த்தொடர் முன்னும் வரும் வல்லினம், **வேற்றுமை மிகா** – வேற்றுமையில் இயல்பாம், **எ–று.**

**உ–ம்.:–**

(1) தெள்குகால், சிறை, தலை, புறம் என இடைத்தொடர்க் குற்றியலுகரத்தின் முன் வேற்றுமையில் வலி இயல்பாயின. (தெள்கு–தெள்.)

(2)எஃகுகடுமை, சிறுமை, தீமை, பெருமை என ஆய்தத்தொடர்க் குற்றியலுகரத்தின்முன் வேற்றுமையில் இயல்பாயின.

(3) நாகுகால், செவி, தலை, புறம் என ஒற்றிடையே மிகாத நெடிற்றொடர்க் குற்றியலுகரத்தின் முன் வேற்றுமையில் இயல்பாயின.

(4) வாகுகதிர், சோறு, தாள், பதர் என ஒற்றிடையே மிகாத உயிர்த்தொடர்க் குற்றியலுகரத்தின் முன் வேற்றுமையில் இயல்பாயின.

இதுவும் "இயல்பினும் விதியினும்" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதொருவழி விலக்குதல்.

வேற்றுமையில் தன்னொற்றிரட்டும் குற்றுகரங்கள் யாவை?

நெடிலோ டுயிர்த்தொடர்க் குற்றுக ரங்களுட் டறவொற்றிரட்டும் வேற்றுமை மிகவே.

(நெடிலோடு உயிர்த்தொடர்க்குற்றுகரங்களுள்

ட ற ஒற்று இரட்டும் வேற்றுமை மிகவே.)

**இ–ள்.:–நெடிலோடு உயிர்த்தொடர்க்குற்றுகரங்களுள்–** நெடிற்றொடர்களும் உயிர்த்தொடர்களுமாகிய குற்றியலுகர மொழிகளுள், **டற ஒற்று** – அவ்வுகரப் பற்றுக்கோடாகிய வல்லொற்றுள் டகர றகர மென்னும் இரண்டொற்றும், **மிக வேற்றுமை இரட்டும்** – பெரும்பாலும் வேற்றுமையில் இரட்டும், எ–று.

இச்சூத்திரத்திற் கூறப்பட்ட வருமொழி முதலென்ன?

வருமெழுத்தைச் சொல்லாமையால், நாற்கணமுமேயாம்.

**உ–ம்.:–**

ஆடு–கால்–ஆட்டுக்கால், பாறு–கால்–பாற்றுக்கால், முருடு–கால்–முருட்டுக்கால், முயிறு–கால்–முயிற்றுக்கால் என வரும். செவி, தலை, புறம், ஞாற்சி, நிறம், மயிர், யாப்பு, வன்மை, அடி என்பனவற்றையும் ஒட்டி, வேற்றுமையிலே டற வொற்றிரட்டுதல் காண்க.

"டறவொற்றிரட்டும் வேற்றுமை மிகவே" என்றதனாற் கொள்ளக் கிடப்பன யாவை?

இவ்விரண்டொற்றும் பெரும்பாலும் வேற்றுமையில் இரட்டும் எனவே, சிறுபான்மை வேற்றுமையில் இரட்டாமையும், சிறுபான்மை அல்வழியில் இரட்டுதலும் சிறுபான்மை இருவழியும் பிறவொற்றிரட்டுதலுங் கொள்க.

**வ–று.:–**

(1) "காவிரி புரக்கு நாடு கிழவோனே" காடகமிறந்தார்க்கே நாடுமென் மனனே காண்" "கறைமிடறணியலு மணிந்தன்றக்கறை" என்பனவற்றுள், நாடுகிழவோன், காடகம், மீடறணியல், என வேற்றுமையிலே டறவொற்றிரட்டாவாயின.

(2) காடு–அரண்–காட்டரண், ஏறு–ஏனம்–ஏற்றேனம், வரடு–ஆடு–வரட்டாடு, குருடு–கோழி–குருட்டுக்கோழி, வெளிறு பனை–வெளிற்றுப்பனை, என அல்வழியிலே டற வொற்றிரட்டின.

**(3)** வெருகு–கண்–வெருக்குக்கண். எருது–கால்–எருத்துக்கால் எனவும், எருது–மாடு–எருத்துமாடு எனவும், இருவழியும் பிறவொற்றிரட்டின.

வன்றொடர்க் குற்றியலுகரமாகும் மென்றொடர்க் குற்றியலுகர மொழிகளு முளவெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

மென்றொடர் மொழியுட் சிலவேற் றுமையிற்
றம்மின வன்றொட ராகா மன்னே.

(மென்றொடர் மொழியுள் சில வேற்றுமையில் தம் இன வன்றொடர் ஆகா; மன்னே.)

**இ–ள்.:– மென்றொடர் மொழியுள் சில** – மென்றொடர்க் குற்றியலுகர மொழிகளுள்ளே சில மொழிகள், வேற்றுமையில் தம் இன வன்றொடர் ஆகா; **மன்**– வேற்றுமையிலே தமக்கினமாகிய வன்றொடர்க் குற்றியலுகர மொழிகளாகாதன. ஆவன பெரும்பாலன, எ–று.

இச்சூத்திரத்திற் கூறப்பட்ட வருமொழி முதலென்ன?

வருமெழுத்தைச் சொல்லாமையால், நாற்கணமுமாம்.

இச்சூத்திரத்தில் எதிர்மறைமுகத்தாற் கூறப்பட்டன வெத்துணைய?

வன்றொடர் ஆகாதன சிலவெனவே ஆவன பலவென்றாராயிற்று.

ஆகாதன சிலவற்றிற்கு உதாரணம் யாவை?

வண்டுக்கால், பந்துத்திரட்சி முதலியன வன்றொடராகாதன.

ஆவன பலவற்றிற்கு உதாரணம் யாவை?

**உ–ம்.:–**

மருந்து – பை – மருந்துப்பை, சுரும்பு – நாண் – சுருப்புநாண், கரும்பு – வில்– கருப்புவில், கன்று – ஆ– கற்றா என வரும்.

மன் என்ற மிகை யாதுபயன்குறித்து வைக்கப்பட்டது?

சில வன்றொடராகா எனவே, ஆவன பலவென்பது தானேவந்தியையவும், மன்னே என்ற மிகையாலே, என்பு–உடம்பு–எற்புடம்பு, அன்பு–தளை–அற்புத்தளை, குரங்கு–மனம்– குரக்குனம், எனச் சிறுபான்மை அல்வழிக்கண் வண்றொடராதலுங் கொள்ளுமாறு வைக்கப்பட்டது.

சில மென்றொடர்க் குற்றியலுகர மொழிகள் மூவினமும் வரிற் றம் மின வன்றொடராம் என்றது எய்தாததெய்து வித்தல்; உயிர்வரிற் றம்மின வன்றொடராம் என்றது "உயிர்வரினுக் குறள்" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதன் மேற் சிறப்பு விதி.

ஒருவகைக் குற்றுகரவீற்றுக்கு நிலைமொழிச் செய்கையாக விகாரங் கூறுஞ் சூத்திரம் யாது?

ஐயீற் றுடைக்குற் றுகரமு முளவே.

(ஐ ஈற்று உடைக் குற்றுகரமும் உளவே.)

**இ–ள்.:–** ஐ ஈற்று உடைக் குற்றுகரமும் உள ஐகாரச் சாரியையை இறுதியிலே பெற்று வரும் மென்றொடர்க் குற்றியலுகர மொழிகளுஞ் சிலவுளவாம், எ–று.

மேலைச் சூத்திரத்தைச் சாரவைத்தமையால், இதுவும் மென்றொடரென்பது பெற்றாம். வருமெழுத்தைச் சொல்லாமையால், நாற்கணமுங் கொள்க.

**உ–ம்.:–**

பண்டு–காலம்–பண்டைக்காலம், இன்று–நாள்–இற்றை நாள் எனவும், அன்று–கூலி அற்றைக்கூலி, இன்று–நலம் இற்றைநலம் எனவும் இருவழியும் வரும்.

மேலைச் சூத்திரத்தைச் சாரவைத்தாரேனும், ஐயீற்றுடைக் குற்றுகரம் எனப் பொதுப்படக் கூறினமையால் நேற்று – பொழுது நேற்றைப் பொழுது எனவும் நேற்று–கூலி–நேற்றைக்கூலி எனவும் இருவழியும் வன்றொடர் ஐகாரச்சாரியை பெறுதலும், ஐயீற்றுடைக் குற்றுகரம் என உடைமையாக்கிக் கூறினமையால், வருமொழி நோக்காது ஒன்று ஒற்றை, இரண்டு இரட்டை, என ஒருமொழியாக நின்று ஐகாரம் பெறுதலும்; ஓராண்டு–ஓராட்டை, ஈராண்டு–ஈராட்டை, எனத் தொடர்மொழியாக நின்று ஐகாரம் பெறுதலுங் கொள்க.

சிலமென்றொடர்க் குற்றியலுகரமொழிகள் ஐகாரச்சாரியை பெறும் என்றது எய்தாததெய்துவித்தல்; வன்றொடராத லோடு ஐகாரச்சாரியையும் பெறும் என்றது "மென்றொடர் மொழி" என்னும் மேலைச் சூத்திரத்தால் எய்தியதன்மேற் சிறப்புவிதி.

குற்றுகரவீற்றுத் திசைப்பெயர்களுக்கு விதி கூறுஞ் சூத்திரம் யாது?

திசையொடு திசையும் பிறவுஞ் சேரின்
நிலையீற் றுயிர்மெய் கவ்வொற்று நீங்கலும்
றகரம் னலவாத் திரிதலு மாம்பிற.

(திசையொடு திசையும் பிறவும் சேரின்
நிலை ஈற்று உயிர்மெய் கவ்வொற்று நீங்கலும்
றகரம் ன ல ஆத் திரிதலும் ஆம்பிற.)

**இ–ள்.:– திசையொடு திசையும் பிறவும் சேரின்** – திசைப்பெயரோடு திசைப்பெயரும் பிறபெயர்களும் புணருமிடத்து, நிலை ஈற்று உயிர்மெய் கவ்வொற்று நீங்கலும்–நிலைமொழியீற்றிலேநின்ற உயிர்மெய்யும் அதன் மேனின்ற ககரமெய்யுங் கெடுதலும், **றகரம் ன ல ஆத்திரிதலும் ஆகும்** – அவ்விடத்து நின்ற றகரமெய் னகர மெய்யாகவும் லகரமெய்யாகவும் திரிதலும் ஆகும், **எ–று.**

திசையொடு திசை புணரும்போது நிலைமொழியாக நிற்றற்குரிய திசைகள் யாவை?

பிற என்ற மிகையினாலே, திசைப்பெயரோடு திசைப்பெயர் புணரும் போது நிலைமொழி பெருந்திசையாகிய வடக்குந் தெற்குமாம்.

வருமொழியாக வந்து புணரும் திசைகள் யாவை?

வருமொழி கோணத்திசையாகிய கிழக்கும் மேற்குமாம். நிலை மொழியாய் நிற்பன வடக்குந் தெற்குமே.

பெருந்திசையும் கோணத்திசையும் வருமொழியோடு எவ்வாறு புணரும்?

தெற்கென்பதன் றகரம் னகரமாகவும் மேற்கென்பதன் றகரம் லகரமாகவுந் திரியாது எனவும், மேற்கென்பதன் றகரந் தகரம் வரும் வழித் திரியாது எனவும், கிழக்கென்பதன் ழகரத்து அகரங் கெட்டு முதனீண்டே வரும் எனவுங் கொள்க.

உ–ம்.:–

வடக்கு–வடமேற்கு, வடதிசை, வடபால், வடமலை, வடவேங்கடம் எனவும், தெற்கு–தென்கிழக்கு, தென்மேற்று, தென்குமரி, தென்மலை, தென்வீதி எனவும், மேற்கு–மேல்கடல், மேனாடு, மேல்வீதி, மேற்றிசை எனவும், குடக்கு–குடதிசை, குடகடல், குடநாடு எனவும், குணக்கு–குணதிசை, குணகடல், எனவும். கிழக்கு–கீழ்கரை, கீழ்சார், கீழ்த்திசை எனவும், வரும்.

இன்னும், பிற என்ற மிகையாலே, கீழைக்குளம், கீழைச்சேரி, மேலைக்குளம், மேலைச்சேரி என ஐகாரம் பெறுதலும், வடக்கூர், வடக்குமலை; தெற்கூர் தெற்குமலை, என மேற்காட்டிய விகாரமின்றியும் வருதலும், பெருந்திசையோடு பெருந்திசை புணரும்போது தெற்குவடக்கு, வடக்குத் தெற்கு; கிழக்குமேற்கு, மேற்குக்கிழக்கு எனப் பொதுவிதி பெறுதலுங் கொள்க.வடகிழக்கென்பது வடக்குங் கிழக்குமாயதோர் கோணம் என உம்மைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாக விரியும். வடதிசையென்பது வடக்காகியதிசை எனப் பண்புத்தொகை. வடமலையென்பது வடக்கின்கண்மலை என ஏழாம் வேற்றுமைத் தொகை. தெற்குவடக்கென்பது தெற்கும் வடக்கும் என உம்மைத் தொகை.

இஃது எய்தாததெய்துவித்தல்.

ஒரோவழி முதனீண்டு ஈற்றுயிர்மெய்கெட்டுப் புணரும் மென்றொடர்க் குகற்றுகரமொழியு முளதெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

தெங்கு நீண் டீற்றுயிர் மெய்கெடுங் காய்வரின்.

(தெங்கு நீண்டு ஈற்று உயிர் மெய் கெடும் காய்வரின்.)

**இ–ள்.:– காய்வரின்** –காயென்னுஞ் சொல் வருமாயின், **தெங்கு நீண்டு ஈற்று உயிர்மெய் கெடும்** – தெங்கென்னு நிலைமொழி முதனீண்டு, ஈற்றிலுள்ள உயிர்மெய் நீங்கும், **எ–று.**

இதிற் கூறப்படும் விகாரமெத்தனை?

தெங்கு தேங்கு என முதல்நீளலும் ஈற்றுயிர் மெய்யாகிய கு கெடுதலும் ஆகிய விகாரங்கள் இரண்டு.

உ–ம்.:–

தெங்கு–காய்–தேங்காய், எனவரும். கெட்டே புணருமென்னாமையால், தெங்கங்காய் என வருவதுங் கொள்க.

குற்றுகரவீற்று எண்ணுப்பெயர் எண் முதலிய பெயரோடு புணருமாறு கூறுஞ் சூத்திரம் யாது?

எண்ணிறை யளவும் பிறவு மெய்தின்
ஒன்று முதலெட் டீறா மெண்ணுண்
முதலீ ரெண்முத னீளு மூன்றா
றேழ்குறு கும்மா றேழல் லவற்றின்
ஈற்றுயிர் மெய்யு மேழ னுயிரும்
ஏகு மேற்புழி யென்மனார் புலவர்.
(எண் நிறை அளவும் பிறவும் எய்தின்
ஒன்று முதல் எட்டு ஈறு ஆம் எண்ணுள்
முதல் ஈரெண் முதல் நீளும் மூன்று
ஆறு ஏழ் குறுகும் ஆறு ஏழு அல்லவற்றின்
ஈற்று உயிர் மெய்யும் ஏழன் உயிரும்
ஏகும் ஏற்புழி என்மனார் புலவர்.)

**இ—ள்.:— எண் நிறை அளவும் பிறவும் எய்தின்** — எண்ணுப் பெயரும் நிறைப்பெயரும் அளவுப்பெயரும் பிறபெயர்களும் வரின், **ஒன்று முதல் எட்டு ஈறு ஆம் எண்ணுள்** — நிலைமொழியாக நின்ற ஒன்று முதல் எட்டீறாகும் எண்களுள், **முதல் ஈர் எண் முதல் நீளும்** — முதலிலுள்ள இரண்டெண்களும் முதல் குறில் நீளும்; **மூன்று ஆறு ஏழ் குறுகும்** — மூன்றும் ஆறும் ஏழும் முதனெடில் குறுகும்; **ஆறு ஏழு அல்லவற்றின் ஈற்று உயிர்மெய்யும் ஏழன் உயிரும் ஏகும் ஏற்புழி என்மனார் புலவர்** — ஆறும் ஏழுமல்லாத ஆறெண்களினுடைய இறுதிலுள்ள உயிர்மெய்களும் ஏழனுடைய இறுதியிலுள்ள உயிருங் கெடும் ஏற்குமிடத்து என்று சொல்லுவர் புலவர், **எ—று.**

இச்சூத்திரத்துட் கூறிய விகாரமும், இப்புணர்ச்சி முற்ற முடித்தற்குப் பின் ஐந்து சூத்திரத்தாற் கூறும் விகாரமும், பண்புத்தொகைக்கே உரியனவாம்.

**உ—ம்.:—**

ஆறு—பத்து—அறுபது, அறு கழஞ்சு, அறுநாழி, அறுவட்டி என ஆறு நெடுமுதல குறுகி முடிந்தது. ஏழு — பத்து எழுபது எழுகழஞ்சு எழுநாழி, எழுவகை என ஏழு நெடுமுதல் குறுகி முடிந்தது. ஏழு கடல்— ஏழ்கடல் என ஏழனீற்றுயிர் கெட்டது. ஏழாயிரம் என உயிர்வருமிடத்து உகரங் கெடுதல் "முற்றுமற்றொரோவழி" என்பாதனாற் கொள்க.

மற்றவைகளுக்கு உதாரணம் பின்னே காட்டப்படும்.

இன்னும், ஏற்புழி என்றதனால், ஒன்றுமுத லெட்டீறா மெண்ணுள் இரண்டு முதலியன, இரண்டுகழஞ்சு, மூன்றுபடி, நான்கு பொருள், ஐந்துபூதம், ஆறுகணம், ஏழுகடல், எட்டுக்கோடி எனப் பொதுவிதியான் முடிதலும், "ஒன்று தேரினா னொருவன் கூற்றமே" எனச் சிறுபான்மை ஒன்றும் அங்ஙனமுடிதலுங் கொள்க.

எண்ணிறையளவும் பிறவுமெய்தின் என்பதனை மேல் ஐந்து சூத்திரத்தோடும், ஏற்புழி என்பதை இப்பொருண்மை யதிகாரம் முற்றுமளவும் உய்த்துரைத்துக் கொள்க.

இச்சூத்திரத்திலே நிலைமொழிக்குக் கூறப்படும் விகாரங்களெத்தனை?

முதனீளல், நெடுமுதல்குறுகல், ஈற்றுயிர் மெய்யும் உயிரும் கெடுதல் ஆகிய விவகாரங்கள் மூன்றுமாம்.

முதனீளும் எண்ணுப்பெயர்கள் எவை?

"எண்ணிறை யளவும் பிறவு மெய்தின் ஒன்றுமுதலெட்

டீறா மெண்ணுண் முதலீ ரெண்முதனீளும்"

நெடுமுதல் குறுகுவன எவை?

"மூன்றாறேழ் குறுகும்"

ஈற்றுயிர்மெய் கெடுவன எவை?

"ஆறேழல்லவற்றி னீற்றுயிர் மெய்...ஏகும்?"

ஈற்றுயிர் கெடுவது எது?

"ஏழனுயிரும் ஏகும்"

முதலிரண்டெண்ணும் முதனீள்வது எவ்விடத்து?

"முதனீள்வது உயிர்வரு வழியாம்"

உ–ம்.:–

ஓராடை, ஈராண்டு.

மூன்றும் ஆறும் ஏழும் முதல்குறுகுவது எவ்விடத்து?

மூன்றும் ஆறும் ஏழும் முதல் குறுகுவது மெய்வழு வழியாம்.

உ–ம்.:–

முக்கழஞ்சு, அறுகால், எழுகடல், மும்மலை.

ஒன்று இரண்டு மூன்று நான்கு ஐந்து எட்டு இவை ஈற்றுயிர்மெய் கெடப் பெறுவது எவ்விடத்து?

ஈற்றுயிர்மெய் கெடுவது நாற்கணமும் வருவழியாம்.

உ–ம்.:–

மேல்வருஞ் சூத்திரவுரைகளிற் காண்க.

ஏழு ஈற்றுயிர் கெடுவது எவ்விடத்து?

முதல் குறுகாத வழியாம்.

உ–ம்.:–

ஏழ்கடல்.

இச்சூத்திரத்தில் குற்றியலுகரவீற்றுச் சொற்களேயன்றி வேறு ஈற்றுச் சொல்லும் கூறப்பட்டுள்ளதோ?

ஏழு என்பது, முற்றியலுகரவீறாயினும், ஒன்றின முடித்தறன்னின முடித்தலென்னும் உத்தியால் அஃது இங்கே சொல்லப்பட்டது,

பின்னே ஒன்றுமுதல் எட்டீறாகத் தனித்தனி எடுத்து விகாரங் கூறலின் இச்சூத்திரத்தின் பயன் யாதாமோ?

இச்சூத்திரம் அவ்வெட்டினுக்கும் பொதுவிகாரங் கூறுகின்றது. மேல்வரும் ஐந்து சூத்திரங்களும் சிறப்புவிகாரங் கூறுவன.

முதலிரண்டெண்ணுக்கும் சிறப்புவிதி கூறுஞ் சூத்திரம் யாது?

ஒன்றன் புள்ளி ரகரம் ஆக
இரண்ட னொற்றுயி ரேகவுவ் வருமே.

(ஒன்றன் புள்ளி ரகரம் ஆக
இரண்டன் ஒற்று உயிர் ஏக உவ் வருமே.)

**இ—ள்.:— ஒன்றன் புள்ளி ரகரம் ஆக** – (எண்முதலிய பெயர் வருமிடத்து ஈற்றுயிர் மெய்கெட நின்ற) ஒன்றென்னும் எண்ணினது னகரமெய் ரகரமெய்யாக, **இரண்டன் ஒற்று உயிர் ஏக உவ்வரும்**—இரண்டென்னும் எண்ணினது னகரமெய்யும் ரகரத்தை ஊர்ந்து நின்ற அகரவுயிருங் கெட அவ்விரண்டு ரகரமெய்மேலும் உகரம் வரும் (ஏற்புழி)—ஏற்குமிடத்து, **எ—று.**

ஏற்புழி என்றதனால், ரகரமெய் உகரம் பெறுவது மெய்வரின் எனவும், உயிர்வரின் உகரம் பெறாதெனவும் கொள்க.

**உ—ம்.:—**

ஒருபது, இருபது, ஒருகழஞ்சு, இருகழஞ்சு, ஒருநாழி, இருநாழி, ஒருவகை, இருவகை எனவும், ஓரொன்று, ஈரொன்று, ஓரெடை ஈரெடை; ஒருழக்கு, ஈருழக்கு, ஈருழக்கு, ஓரிலை, ஈரிலை, எனவும் வரும்.

இன்னும், ஏற்புழி என்றதனால், ஆயிரம் வருமிடத்து, ஓராயிரம் ஈராயிரம் என முடிதலேயன்றி, ஓராயிரம் இராயிரம் என முதனீளாது முடிதலும், யகரம் வருமிடத்து, ஒருயானை, இருயானை என முடிதலேயன்றி, ஓர்யானை, ஈர்யானை என உகரம் பெறாது, முதனீண்டு முடிதலுங் கொள்க.

ஒன்று என்பது உயிர்வரின் எவ்வாறு புணரும்?

ஒன்று என்பது ஆடை என்பதனோடு புணருமிடத்து "எண்ணிறையளவும் பிறமெய்தின் ஒன்று முதலெட்டீறா மெண்ணுண் முதலீ ரெண்முதனீளும்" என்ற விதிப்படி ஒன்று என நீண்டு, "ஆறேழல்லவற் றீற்றுயிர்மெய் ஏகும்" என்ற விதிப்படி ஈற்றுயிர்மெய் கெட்டு ஓன் என நின்று "ஒன்றன்புள்ளி ரகரமாக" என்ற விதிப்படி னகரவொற்று, ரகரவொற்றாய் ஓர் என நின்று, "உடல்மேல் உயிர்வந்தொன்றுவ தியல்பே" என்ற விதிப்படி ரகத்தின்மேல் வருமொழி ஆகாரமேறி "ஓராடை" எனப் புணரும்.

இரண்டு என்பது உயிர்வரின் எவ்வாறு புணரும்?

"எண்ணிறையளவும் பிறவு மெய்தின் ஒன்று முதலெட்டீறா மெண்ணுண் முதலீ ரெண் முதனீளும்" என்றதனால் ஈரண்டு என்றாகி, ஈற்றுயிர்மெய் ஏகும்" என்றதனால் ஈரன் எனநின்று, "இரண்டனொாற்றுயிர் ஏக" என்றதனால் ணகரவொற்றும் ரகாரமிசைநின்ற அகரவுயிரும் கெட்டு ஈர் என நின்று, மேலே கூறியபடி வகுமொழி உயிரேறி ஈராடை என இவ்வாறு புணரும்.

மூன்றினுக்குச் சிறப்புவிதி கூறுஞ் சூத்திரம் யாது?

மூன்றனுறுப் பழிவும் வந்தது மாகும்.

(மூன்றன் உறுப்பு அழிவும் வந்ததும் ஆகும்)

**இ–ள்.:– மூன்றன் உறுப்பு அழிவும் வந்ததும் ஆகும்** – (எண் முதலிய பெயர் வருமிடத்து இறுதியுயிர்மெய் கெட நின்ற) மூன்றென்னும் எண்ணினது னரகமெய் கெடுதலும் வருமெய்யாகத் திரிதலும் ஆகும் (ஏற்புழி) ஏற்குமிடத்து, **எ–று.**

மூன்று என்னுஞ்சொல் புணர்ச்சிக்கண் எத்தனை விகாரங்களைப் பெறும்?

"எண்ணிறையளவும்" என்னுஞ் சூத்திரத்தால் ஈற்றுயிர் மெய் கெடுதலும், "மூன்றனுறுப்பழிவும் வந்ததுமாகும்" என்னுஞ் சூத்திரத்தால் னகரமெய் கெடுதலும் அந்த னகரமெய் வருமெய்யாகத் திரிதலுமாகிய மூன்று விகாரங்களைப் பெறும்.

மூன்றன் ஈற்றுயிர்மெய்யும் னகரவொற்றுங் கெடுவது எவ்வழி?

உயிர்க்கணம் வந்துழியாம்.

**உ–ம்.:–**

மூவொன்று, மூவெடை, மூவுழக்கு, மூவுலகு.

மூன்றன்முன் வன்கணமும் மென்கணமும் வரின் எவ்வாறாம்?

நெடுமுதல் குறுகி ஈற்றுயிர் மெய்கெட்டு னகரவொற்று வருமொற்றாகும்.

**உ–ம்.:–**

முப்பது, முக்கழஞ்சு, முந்நாழி, முந்நூல், முவ்வட்டி என வரும்.

வகரம்வருமிடத்து எவ்வாறு முடியும்?

வகரம் வருமிடத்து முவ்வட்டி என முடிதலேயன்றி மூவட்டி என முதல்குறுகாது னகரமெய் கெட்டும் முடியும்.

யகரம் வருமிடத்து எவ்வாறு முடியும்?

முவ்யானை என னகரமெய் வருமெய்யாகத் திரியாது வகரமெய்யாகத் திரிந்து முடியும்.

நான்கு என்னுஞ் சொல்லினுக்குச் சிறப்புவிதி கூறுஞ் சூத்திரம் யாது?

நான்கன் மெய்யே லறவாகும்மே.

(நான்கன் மெய்யே ல ற ஆகும் ஏ)

**இ–ள்.: நான்கன் மெய்** – (எண்முதலிய பெயர்கள் வருமிடத்து இறுதியுயிர்மெய் கெட நின்ற) நான்கென்னும் எண்ணினது னகரமெய், **ல ற ஆகும்** – லகர மெய்யாகவும் றகரமெய்யாகவுந் திரியும், **ஏற்புழி** – ஏற்குமிடத்து, **எ–று.**

நான்கு என்பது உயிர்க்கணம் இடைக்கணங்களோடு எவ்வாறு புணரும்?

நான்கு என்பது உயிர் இடைக்கணங்கள் வந்துழி ஈற்றுயிர்மெய் கெட்டும் மேல்நின்ற னகரவொற்று லகர வொற்றாய்த் திரிந்து புணரும்.

**உ–ம்.:–**

நாலென்று, நாலெடை, நாலுழக்கு, நாலடி எனவும் நால்வட்டி எனவும் வரும்.

வல்லினம் வருமிடத்து எவ்வாறு புணரும்?

ஈற்றுயிர்மெய் கெட்டு னகரம் றகரமாய்த் திரிந்து புணரும்.

உ—ம்.:—

நாற்பது, நாற்கழஞ்சு.

மெல்லினம் வருமிடத்து எவ்வாறு புணரும்?

னகரவீற்றுப் புணர்ச்சிபோற் புணரும்.

உ—ம்.:—

நான்மணி, நானாழி.

ஐந்தினுக்குச் சிறப்புவிதி கூறுஞ் சூத்திரம் யாது?

ஐந்தனொற் றடைவது மினமுங் கேடும்.

(ஐந்தன் ஒற்று அடைவதும் இனமும் கேடும்)

**இ—ள்.: ஐந்தன் ஒற்று** – (எண்முதலிய பெயர்கள் வருமிடத்து இறுதியுயிர்மெய் கெட நின்ற) ஐந்தென்னும் எண்ணினது நகரமெய், **அடைவதும் இனமும் கேடும்** –வருமெய்யாகத் திரிதலும் வருமெய்க்கினமாகத் திரிதலும் கெடுதலுமாம் (ஏற்புழி)–ஏற்குமிடத்து, **எ—று.**

ஐந்து உயிர்வரின் எவ்வாறு புணரும்?

மேலைப் பொதுவிதியான் ஈற்றுயிர்மெய் கெட்டு இடைநின்றவொற்று "ஐந்தனொற்றடைவது மினமுங் கேடும்" என்னுஞ் சிறப்புவிதியாற் கெட்டுப் புணரும்.

உ—ம்.:—

ஐயொன்று, ஐயிரண்டு.

மென்கணம் வரின் எவ்வாறு புணரும்?

ஈற்றுயிர்மெய் கெட்டு நகரவொற்று வருமொற்றாய்த் திரிந்து புணரும். நகரம் வரின் நகரவொற்றுத் திரியாது தானே நிற்கும்.

உ—ம்.:—

ஐம்மூன்று, ஐம்மஞ்சாடி, ஐம்மண்டை, ஐம்மணி, ஐஞ்ஞாண், ஐந்நூறு, ஐந்நாழி, ஐந்நூல்.

வன்கணம் வரின் எவ்வாறு புணரும்?

ஈற்றுயிர்மெய் கெட்டு நகரவொற்று வருமொற்றிற்கு இனமாய்த் திரிந்தும் புணரும். தகரம் வரின் நகரவொற்றுத் திரியாது தானே நிற்கும்.

உ—ம்.:—

ஐம்பஃது, ஐங்கழஞ்சு, ஐங்கலம், ஐந்தலை.

இடையினம் வரின் எவ்வாறு புணரும்?

ஒற்றும் உயிர்மெய்யுங் கெட்டும், உயிர்மெய் கெட்டு ஒற்று வருமொற்றாய்த் திரிந்தும் புணரும்.

உ—ம்.:—

ஐவட்டி, ஐவண்ணம், ஐயாறு, ஐய்யாறு.

எனவே ஐந்து என்னுஞ் சொல் வருமொழியோடு புணரும்போது படுஞ் செய்கைகள் எத்தனை?

ஈற்றுயிர்மெய் கெடுதல், இடைநின்ற நகரம் வருமெய்யாகத் திரிதல், அதற்கினமாதல், கெடுதல் என நான்கு செய்கைகளாம்.

ஏற்புழி என்றதனால், நகரமெய் வருமெய்யாகத் திரிவது மெல்லினம் வருமிடத்தேனவும், இனமாகத் திரிவது, வல்லினம் வருமிடத்தெனவும் கெடுவது உயிரும் இடையினமும் வருமிடத்தெனவுங் கொள்க.

எட்டினுக்குச் சிறப்புவிதி கூறுஞ் சூத்திரம் யாது?

எட்ட னுடம்புணவ் வாகுமென்ப.

(எட்டன் உடம்பு ண ஆகும் என்ப.)

**இ–ள்.:– எட்டன் உடம்பு ண ஆகும் என்ப**–(எண்முதலிய பெயர்கள் வருமிடத்து இறுதியுயிர்மெய் கெட நின்ற) எட்டென்னும் எண்ணினது டகரமெய் நாற்கணமும் வர ணகரமெய்யாகத் திரியும் என்று சொல்லுவர் புலவர், **எ–று.**

**உ–ம்.:–**

எண்பது, எண் கழஞ்சு, எண்கலம், எண்குணம் எனவும், எண்ணாழி எனவும், எண்வகை எனவும், எண்ணைஞ்து எனவும் வரும்.

"எண்ணிறையளவும்" என்னுஞ் சூத்திரத்துட் கூறிய புணர்ச்சிக்கு வேண்டும் விகாரம் எச்சூத்திரம் வரையும் கூறப்படுகின்றது?

இச்சூத்திரம்காறுமே.

ஒன்பதென்னும் எண்முன்னர்ப் பத்தும் நூறும் வந்து புணர்வழிப்படும் விகாரங் கூறுங் சூத்திரம் யாது?

ஒன்பா னொடுபத்து நூறு மொன்றின்
முன்னதி னேனைய முரணி யொவ்வொடு
தகர நிறீ இப்பஃ தகற்றி னவ்வை
நிரலே ணளவாத் திரிப்பது நெறியே.

(ஒன்பானொடு பத்தும் நூறும் ஒன்றின்
முன்னதின் ஏனைய முரணி ஒவ்வொடு
தகரம் நிறீஇ பஃது அகற்றி னவ்வை
நிரலே ணள ஆத் திரிப்பது நெறி)

**இ–ள்.:– ஒன்பான் ஒடு பத்தும் நூறும் ஒன்றின்**–ஒன்பதுடனே பத்தென்பதும் நூறென்பதும் வந்து புணருமாயின், **முன்னதின்** – முன்னதாகிய பத்தினாலே, **ஏனைய முரணி**–மற்றை வருமொழியாகிய பத்தையும் நூற்றையும் பெருக்குமாற்றால் நூறெனவும் ஆயிரமெனவும் திரித்து, நிறுத்தி, **ஒவ்வொடு தகரம் நிறீஇ** – நிலை மொழி முதலிலுள்ள ஒகரவுயிரோடு தகரமெய்யை அதற்கு ஆதாரமாகநிறுத்தி, **பஃது அகற்றி** –

அந்நிலைமொழி யிறுதியிலுள்ள பஃதைக் கெடுத்து, **நிரலே ண ள ஆத் திரிப்பது நெறி** – அம்மொழி முதற்கு ளகரமெய்யாகவுந் திரிப்பது முறையாகும், **எ–று.**

நெறியே என்ற இலேசானே, தனிக்குறின் முன்னொற் றிரட்டித்தலுங் கொள்க.

(1) ஒன்பது–பத்து–(1) ஒன்பதுநூறு, (2) தொன்பதுநூறு, (3) தொன்நூறு, (4) தொண்நூறு, (5) தொண்ணூறு

ஒன்பது–பத்து–என்பதில் பத்து என்பதை நூறு எனத் திரித்து த்கரமெய்யை ஏற்றி, தொன்பது நூறு என ஆக்கி தொன்பது என்பதனீற்றிலுள்ள பஃது என்பதை அகற்றித் தொன்நூறு என்றாக்கி, தொன் என்பதன் னகரமெய்யை ணகரமெய்யாக்கித் தொண்நூறு என்றாக்கித் தொண்ணூறு எனப் புணர்த்துக.

(2) ஒன்பது–நூறு– (1) ஒன்பது ஆயிரம், (2) தொன்பது ஆயிரம், (3) தொன் ஆயிரம், (4) தொள் ஆயிரம் (5) தொள்ளாயிரம், (6) தொளாயிரம் என இக்காலத்து மருவியது.

பஃதகற்றி யென்பதனோடு பொருந்த ஒன்பஃதனோ டென்னாது ஒன்பானொடென்றமையால், ஒன்பது நின்று புணரினும் இவ்விதியே பெறுமென்றறிக.

வருமொழிப்பத்தின் செய்தி கூறுஞ் சூத்திரம் யாது?

முதலிரு நான்கா மெண்முனர்ப் பத்தின்
இடையொற் றேக லாய்த மாகல்
எனவிரு விதியு மேற்கு மென்ப.

(முதல் இரு நான்கு ஆம் எண்முனர்ப் பத்தின்
இடை ஒற்று ஏகல் ஆய்தம் ஆகல்
என இருவிதியும் ஏற்கும் என்ப)

**இ–ள்.:– முதல் இருநான்கு ஆம் எண் முனர்** – ஒன்று முதலாகிய எட்டெண்களின் முன்னும் வரும், **பத்தின் இடை ஒற்று ஏகல்** – பத்தென்னும் எண்ணினது நடுநின்ற தகரமெய் கெடுதலும், **ஆய்தம் ஆகல்** – தகர நின்ற விடத்து அது கெட ஆய்தம் வருதலும், **என இருவிதியும் ஏற்கும் என்ப** – என்னும் இவ்விரண்டு விதியும் பொருந்தும் என்று சொல்லுவர் புலவர், **எ–று.**

பத்தின் இடையொற்றுக் கெடுதலும் ஆய்தமாகத் திரிதலும் எவ்வழி?

“முதலிரு நான்கா மெண்முனர்”

**உ–ம்.:–**

ஒரு–பத்து–ஒருபது, ஒருபஃது, இருபது, இருஃது, முப்பது, முப்பஃது, நாற்பது, நாற்பஃது, ஐம்பது, ஐம்பஃது; அறுபது, அறுபஃது, எழுபது, எழுபஃது, எண்பது எண்பஃது; எனவரும்.

மேலைச் சூத்திரத்தானெய்திய ஒருபஃது முதலிய நிலைமொழிகள் எவை வந்தால் தமக்கு இயல்பாகிய தகரம் பெற்று நிற்கும்?

ஒருபஃ தாதிமுன் னொன்று முதலொன்பான்
எண்ணுமவை ஊர் பிறவுமெய்தின்
ஆய்தம் மழியவாண் டாகுந் தவ்வே.

(ஒருபஃது ஆதிமுன் ஒன்றுமுதல் ஒன்பான்
எண்ணும் அவை ஊர் பிறவும் எய்தின்
ஆய்தம் அழிய ஆண்டு ஆகும் தவ்வே.)

**இ–ள்.:– ஒருபஃது ஆதிமுன்** – ஒருபஃது முதலாகிய எட்டெண்களின் முன்னும், **ஒன்றுமுதல் ஒன்பான் எண்ணும் அவை ஊர் பிறவும் எய்தின்** – ஒன்று முதலாகிய ஒன்ப தெண்களும் அவ்வெண்களை ஊர்ந்த மற்றவையும் வந்து புணருமாயின் அவ்வெண்களை ஊர்ந்த மற்றவையும் வந்து புணருமாயின், ஆய்தம் அழியத ஆண்டு ஆகும்–நிலைமொழியிலே நின்ற ஆய்தங் கெட இயல்பாகிய தகரம் அவ்வாய்த நின்றவிடத்து வரும், எ–று.

**உ–ம்.:–**

ஒருபத்தொன்று, இருபத்தொன்றே காலேயரைக்கால், முப்பத்தொரு கழஞ்சு, எழுபத்தெண்கலனே தூணி, எண்பத்தொன்பதியாண்டு, எனவரும். மற்றவைகளும் இப்படியே.

ஆய்தங்கெடத் தகரம் வரும் என்றமையின், அருத்தா பத்தியால் ஆய்தமில்லாத ஒருபது முதலானவைகளுந் தகரம் பெறு மென்றாராயிற்று.

பத்து ஒன்பது என்பனவற்றின் முன்னே எண்முதலிய நாற் பெயரும் வந்து புணரின் எவ்வாறாம்?

ஒன்றுமுத லீரைந் தாயிரங் கோடி
எண்ணிறை யளவும் பிறவரிற் பத்தின்
ஈற்றுயிர் மெய்கெடுத் தின்னு மிற்றும்
எற்ப தேற்கு மொன்பது மினைத்தே.
(ஒன்று முதல் ஈரைந்து ஆயிரம் கோடி
எண் நிறை அளவும் பிறவரின் பத்தின்
ஈற்று உயிர்மெய் கெடுத்து இன்னும் இற்றும்
ஏற்பது ஏற்கும் ஒன்பதும் இனைத்து.)

**இ–ள்.:– ஒன்றுமுதல் ஈரைந்து ஆயிரம்கோடி எண் நிறை அளவும் பிறவரின்** – ஒன்றுமுதலிய பத்தும் ஆயிரமுங் கோடியுமாகிய எண்ணுப் பெயரும் நிறைப்பெயரும் அளவுப்பெயரும் பிற பெயரும் வந்து புணருமாயின், **பத்தின் ஈற்று உயிர்மெய்கெடுத்து** – நிலைமொழியாகிய பத்தினது இறுதியிலுள்ள தகர வுயிர்மெய்யை அழித்து, **இன்னும் இற்றும் ஏற்பது ஏற்கும்** – இன்சாரியையாயினும் இற்றுச் சாரியையாயினும் அவ்விடத்திற்கேற்பது

ஏற்றுநிற்கும், **ஒன்பதும் இனைத்து** –ஒன்பதென்னும் நிலைமொழியும் இப்படியே எண்ணுப்பெயர் முதலானவை வந்து புணருமாயின் இன்னாயினும் இற்றாயினும் அவ்விடத்திற்கு ஏற்பது ஏற்று நிற்கப்பெறும், **எ–று.**

பத்து ஈற்றுயிர்மெய் கெட்டு இன்சாரியையாயினும் இற்றுச் சாரியையாயினும் பெற்று நிற்றல் எவ்வழி?

"ஒன்றுமுத லீரைந் தாயிரங் கோடி எண்ணிறை யளவும் பிறவரிற் பத்தின் ஈற்றுயிர் மெய்கெடுத் தின்னு மிற்றும் ஏற்பதேற்கும்"

ஒன்பதின் செய்தியென்னை?

"ஒன்பதும் இனைத்தே"

அற்றாயின் ஒன்பதை வேறுபிரித்துக் கூறிய தென்னை?

பத்து ஈற்றுயிர்மெய் கெட்டு இன்னும் இற்றுமேற்று நிற்கும்; ஒன்பது அங்ஙனம் ஈற்றுயிர்மெய் கெடாது. சாரியை மாத்திரம் பெறுமென்ப துணர்த்தற்கா மெ்க.

**உ–ம்.:–**

பதினொன்று, பதின்மூன்று, பதினாயிரம், பதின்கழஞ்சு, பதின்கலம், பதின்மடங்கு எனவும், பதிற்றொன்று, பதிற்றிரண்டு, பதிற்றுமூன்று, பதிற்றுக்கோடி, பதிற்றுத் தூணி, எனவும், ஒன்பதினாயிரம், ஒன்பதின்கழஞ்சு, ஒன்பதின்கலம், ஒன்பதின் மடங்கு எனவும், ஒன்பதிற்றொன்று, ஒன்பதிற்றிரண்டு, ஒன்பதிற்றுக் குறுணி எனவும் வரும். மற்றவைகளும் இப்படியே. பதினொன்று உம்மைத் தொகை. பதிற்றொன்று பண்புத்தொகை.

ஏற்பதேற்கும் என்றதனால், பத்துக்கோடி, ஒன்பதுகோடி, பத்திரட்டி எனப் பொதுவிதிப்படியே முடிந்து நிற்றலுங் கொள்க.

இரண்டு முன்வரின் பத்து எவ்வாறாம்?

இரண்டு முன்வரிற் பத்தினீற் றுயிர்மெய்
கரந்திட வொற்றுனவ் வாகு மென்ப.

(இரண்டு முன்வரின் பத்தின் ஈற்று உயிர்மெய்
கரந்திட ஒற்று ன ஆகும் என்ப.)

**இ–ள்.: இரண்டு முன் வரின்** – இரண்டென்பது முன்வருமாயின், **பத்தின் ஈற்று உயிர்மெய் கரந்திட** – பத்தென்னு நிலைமொழியினது ஈற்றிலுள்ள துகரவுயிர்மெய் கெட, **ஒற்று ன ஆகும் என்ப** – தகரமெய் னகரமெய்யாகத் திரியும் என்று சொல்லுவர் புலவர், **எ–று.**

இச்சூத்திரம் எச்சூத்திரத்தான் எய்தியவிதியை விலக்குவது?

பத்து இரண்டு–பத்திரண்டு என முடியாது பன்னிரண்டென முடிதலின் "உயிர்வரி னுக்குறண்மெய்விட்டோடும்" என்னுஞ் சூத்திரவிதியை விலக்குவது.

**உ–ம்.:–**

பன்னிரண்டு எனவரும். இது உம்மைத் தொகை.

ஒன்பதொழிந்த ஒன்றுமுதற் பத்தீறாகிய ஒன்பதெண்களையும் இரட்டித்துச் சொல்லுமிடத்து எவ்வாறாம்?

**ஒன்ப தொழித்தவெண் ணொன்பது மிரட்டின்**

**முன்னதின் முன்னல வோட வுயிர்வரின்**

**வவ்வு மெய்வரின் வந்தது மிகனெறி.**

**(ஒன்பது ஒழித்த எண் ஒன்பதும் இரட்டின்**

**முன்னதின் முன் அல ஓட உயிர்வரின்**

**வவ்வும் மெய்வரின் வந்ததும் மிகல்நெறி.)**

**இ–ள்.:– ஒன்பது ஒழித்த எண் ஒன்பதும் இரட்டின்**–ஒன்பதென்னும் எண்ணொன்றனையும் ஒழித்து நின்ற ஒன்று முதற் பத்தீறாகிய ஒன்பதெண்ணினையும் இரட்டித்துச் சொல்லின், **முன்னதின் முன் அல ஓட**– நிலைமொழியினது முதலெழுத்தல்லா தவைகளெல்லாங் கெட, **உயிர்வரின் வவ்வும்** – உயிர் முதலின எண் வரின் வகரமெய்யும், **மெய்வரின் வந்ததும் மிகல் நெறி**–மெய் முதலான எண்வரின் வந்தமெய்யும் மிகுதல் முறையாம், **எ–று.**

**உ–ம்.:–**

ஒவ்வொன்று, இவ்விரண்டு, மும்மூன்று, நந்நான்கு, ஐவ்வைந்து, அவ்வாறு, எவ்வேழு, எவ்வெட்டு, பப்பத்து எனவரும்.

நெறி என்றமையால், மூன்று நான்கு ஆறு ஏழு என்பனவற்றிற்குக் குறுக்கமும், ஒரோவொன்று, ஒன் றொன்று, கழக்கழஞ்சு என இரட்டித்தலும், பத்துப்பத்து, பத்து பத்து என்னும் விகற்பமும், நானான்கு என்னுந் திரிபும், ஐயைந்து, ஐவ்வந்து, என்னு முறழ்ச்சியும் இன்னுங் குற்றியலுகரப் புணர்ச்சியுள் அடங்காதனவுங் கொள்க.

உடம்படுமெய்யாயின் இய்யிரண்டென வரற்பாலதாகிய இவ்விரண்டு என்பது கொண்டு, அவ்வாறு ஒவ்வொன்று என்பனவற்றின் வகரம் உடம்படுமெய்யன்மை யுணர்க.

**குற்றுகரவீற்றுப் புணர்ச்சிக்குச் சிறப்புவிதி எச்சூத்திரமுதல் எச்சூத்திரம் வரையுங் கூறப்பட்டது?**

"வன்றொடரல்லன" என்னுஞ் சூத்திரமுதல் "ஒன்ப தொழித்த" வென்னுஞ் சூத்திரங் காறும்.

## ஊகாரவீற்றுச் சிறப்புவிதி

"இயல்பினும் விதியினு நின்ற வுயிர்முன் கசதப மிகும்" என்னுஞ் சூத்திர விதியில் முற்றும் அடங்காத ஊகாரவீற்றுச் சொல் ஒன்றற்குச் சிறப்புவித கூறுஞ் சூத்திரம் யாது?

**பூப்பெயர் முன்னின மென்மையுந் தோன்றும்.**

**(பூப்பெயர்முன் இனமென்மையும் தோன்றும்.)**

**இ–ள்.:– பூப்பெயர் முன்** – பூவென்னும் பலபொருட் பெயர்ச்சொல்லின் முன், **இன மென்மையும் தோன்றும்** – வல்லினம் வரிற் பொது விதியான்

மிகுதலே யன்றி அவற்றிற் கினமாகிய மெல்லினமும் மிகும், **எ—று.**

**உ—ம்.:—**

பூங்கொடி, பூஞ்சோலை, பூந்தடம், பூம்பணை. எனவரும்.

இவைகளுள்ளே, பூவென்பது மலராயின், இரண்டாம் வேற்றுமைத்தொகை; அழகாயிற் பண்புத்தொகை.

மென்மையுந் தோன்றுமென்ற வும்மையாற் கொள்ளக்கிடப்பது யாது?

பூக்கொடி என "இயல்பினும் விதியினும்" என்னும்சூத்திரவிதியால் வன்மையுந் தோன்றுமென்பது

## ஏகார ஒகாரவீற்றுச் சிறப்புவிதி

."இயல்பினும் விதியினும்" என்னுஞ் சூத்திரவிதியில் அடங்காத ஏகார ஓகாரவீற்று இடைச்சொற்களுக்குச் சிறப்புவிதி கூறுஞ் சூத்திரம் யாது?

இடைச்சொல் லேயோ முன்வரி னியல்பே

(இடைச்சொல் ஏ ஓ முன்வரின் இயல்பே.)

**இ—ள்.:— இடைச்சொல் ஏ ஓ முன்** — இடைச்சொல்லாகிய ஆறேகாரத்தின் முன்னும்^எட்டோகாரத்தின் முன்னும், **வரின் இயல்பு** — வல்லினம் வரிற் பொதுவிதியான் மிகாது இயல்பாகும்.

**உ—ம்.:—**

நீயே கொண்டாய்; இது **வினா.**

காலே கையே, இஃது **எண்.**

அவருள் இவனே கொண்டான்; இது **பிரிநிலை.**

யானே கொண்டேன்; இது **எதிர்மறை.**

"கடல்போற் றோன்றல் காடிறந்தோரே" இஃது **ஈற்றசை.** அவனே கொண்டான்; இது **தேற்றம்.**

கொளலோ கொண்டான்; இஃது **ஒழியிசை.**

நீயோ கொண்டாய்; இது **வினா.**

யானோ கொண்டேன்; இஃது **எதிர்மறை.**

அவனோ போனான்; இது **கழிவு.**

யானோ தேறே னவர்பொய் வழங்கலரே; இது **பிரிநிலை.** புற்றோ புதரோ: இஃது **ஐயம்.**

களிறென்கோ கொய்யுளைமாவென்கோ: இஃது **எண்.** காணியவம்மினோ கங்குலது நிலையே: இஃது **அசைநிலை.**

இவையெல்லாம் இயல்பாயவாறு காண்க.

## ஐகாரவீற்றுச் சிறப்புவிதி

ஐகாரவீற்றுச் சிறப்புவிதி கூறுஞ் சூத்திரம் யாது?

வேற்றுமை யாயி னைகா னிறுமொழி

ஈற்றழி வோடுமம் மேற்பவு முளவே.

(வேற்றுமை ஆயின் ஐகான் இறுமொழி

ஈற்று அழிவோடும் அம் ஏற்பவும் உளவே.)

**இ–ள்.:– ஐகான் இறுமொழி வேற்றுமை ஆயின்** –ஐகாரவீற்றுச் சொற்கள் வேற்றுமைக்கண் வருமாயின், **ஈற்று அழிவோடும் அம் ஏற்பவும் உள** – ஈற்றைகாரங் கெடுதலுடனே அம்முச்சாரியை பெற்று முடிவனவும் சிலவுள, **எ–று.**

"ஈற்றழி வோடுமம் மேற்பவு முளவே" என்றமையாற் பெறக்கிடப்பது யாது?

ஈற்றழிவின்றியு மம்மேற்பவு முளவென்பது.

**உ–ம்.:–**

(1) வழுதுணை–காய்–வழுதுணங்காய், தாழை–பூ–தாழம்பூ, ஆவிரை–வேர்–ஆவிரம்வேர், என ஈற்றைகாரங் கெட்டு அம்முச்சாரியை பெற்றன.

(2) புன்னை–கானல்–புன்னையங்கானல், முல்லை–புறவம்–முல்லையம்புறவம், என ஈற்றைகாரங் கெடாமல் அம்முச்சாரியை பெற்றன.

ஏற்பவுமுள என்றதனால், முல்லைப்புறவம் எனவரினுங் கொள்க, இது எய்தாததெய்வதுவித்தல்.

மேலைச் சூத்திரவிதியில் அடங்காத ஐகாரவீற்றுச் சொல் ஒன்றற்கு விதி கூறுஞ் சூத்திரம் யாது?

பனைமுன் கொடிவரின் மிகலும் வலிவரின்

ஐபோ யம்முந் திரள்வரி னுறழ்வும்

அட்டுறி னைகெட்டந் நீள்வுமாம் வேற்றுமை.

(பனை முன் கொடிவரின் மிகலும் வலிவரின்

ஐபோய் அம்மும் திரள்வரின் உறழ்வும்

அட்டு உறின் ஐ கெட்டு அம்நீள்வும் ஆம் வேற்றுமை)

**இ–ள்.: பனைமுன் கொடிவரின் மிகலும்** – பனையென்னும் பெயர்முன் கொடியென்னும் பெயர் வருமாயின் வந்தது மிகலும், **வலிவரின் ஐபோய் அம்மும்** – க ச த பக்கள் வருமாயின் நிலை மொழி யீற்றைகாரங் கெட்டு அம்முப் பெறுதலும், **திரள்வரின் உறழ்வும்** – திரளென்னும் பெயர் வருமாயின் வந்தது மிகுந்தும் ஐபோய் அம்முப்பெற்றும் விகற்பித்தலும், **அட்டு உறின் ஐகெட்டு அம் நீள்வும் ஆம் வேற்றுமை** – அட்டென்னும் பெயர் வருமாயின் ஐகாரங் கெட்டு வருமொழி அகரம் ஆகாரமாதலும் ஆகும் வேற்றுமைக்கண், **எ–று.**

பனைமுன் வல்லினம் மிகுவது எவ்வழி?

"பனைமுன் கொடிவரின் மிகலாம் வேற்றுமை"

**உ–ம்.:–**

பனைக்கொடி.

பனை ஐபோய் அம்பெறுவது எவ்வழி?

"பனை முன் வலிவரின் ஐபோ யம்மாம் வேற்றுமை"

உ—ம்.:—

பனங்காய், பனஞ்செறும்பு, பனந்தூண், பனம்பழம்.

பனைமுன் திரள்வரின் எவ்வாறாம்?

"பனைமுன் திரள்வரின் உறழ்வாம் வேற்றுமை"

உ—ம்.:—

பனைத்திரள், பனந்திரள்.

பனை ஐபோய் அம் நீளப்பெறுவது எவ்வழி?

"அட்டுறின் ஐகெட் டந்நீள்வாம் வேற்றுமை"

உ—ம்.:—

பனாட்டு. பனைமுன் கொடிவரின் மிகும் என்றது "இயல்பினும் விதியினும்" என்னுஞ் சூத்திரத்தால் எய்திய திகந்து படாமைக் காத்தல். வலிவரின் ஐ போய் அம்முப்பெறும் என்றது "வேற்றுமையாயின்" என்னும் மேலைச்சூத்திரத்தால் எய்தியதிகந்து படாமைக்காத்தல்; திரள் வரின் உறழ்வாம் என்றது "இயல்பினும்" என்பதனாலும், மேலைச்சூத்திரத்தாலும் எய்தியதிகந்து படாமைக்காத்தல்; அட்டுறின் ஐ கெட்டு அம் நீளும் என்றது "இ ஈ ஐ வழி" என்பதனால் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல்.

## மெய்யீற்றுப் புணர்ச்சி

மெய்யீற்றின்முன் உயிர்முதன் மொழிவரின் புணருமாறு கூறுஞ் சூத்திரம் யாது?

உடன்மேலுயிர்வந் தொன்றுவ தியல்பே.

(உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.)

**இ—ள்.: உடல்மேல்** — நிலைமொழி யீற்றினின்ற மெய்யின்மேல், **உயிர் வந்து ஒன்றுவது இயல்பே** — வருமொழி முதலுயிர் வந்து ஒன்றுபட்டிணங்கி நிற்பது இயல்பு புணர்ச்சியேயாம், **எ—று.**

விகாரப்பாடின்றி உடல்மே லுயிர்வந் தொன்றுவதேயன்றி விகாரத்தோடு ஒன்றுவது முண்டா?

தனிக்குறின் முன்னொற் றுயிர்வரி னிரட்டும்.

(தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்.)

**இ—ள்.: தனிக்குறில் முன் ஒற்று** — தனிக்குற்றெழுத்தின் முன்னின்ற மெய், **உயிர்வரின் இரட்டும்** — உயிர்வரின் இரட்டித்து நிற்கும், **எ—று.**

உ—ம்.:—

மண்—அரிது—மண்ணரிது, பொன்—அரிது— பொன்னரிது எனவும், மண்—அகம்—மண்ணகம், பொன்—ஒளி—பொன்னொளி எனவும் வரும்.

இஃது இயல்பு புணர்ச்சியா விகாரப்புணர்ச்சியா?

ஒற்றிரட்டலால் விகாரப்புணர்ச்சியே.

## மெய்யீற்றின் முன் மெய்

யகரமொழிந்த பத்து மெய்முன்னும் யகரம்வரின் "எண்மூவெழுத்தீற்று" என்னுஞ் சூத்திரவிதிப்படி இயல்பாகாது வேறுவிதியும் பெறுமோ?

தன்னொழி மெய்ம்முன் யவ்வரி னிகரந்
துன்னு மென்று துணிநரு முளரே.
(தன் ஒழி மெய்ம் முன் யவரின் இகரம்
துன்னும் என்று துணிநரும் உளரே.)

**இ–ள்.:– தன் ஒழி மெய்முன் ய வரின்** – தன்னையொழிந்த ஞ ண ந ம ன ர ல வ ழ ள என்னும் பத்து மெய்களின் முன்னும் யகரம் வந்தால், **இகரம் துன்னும் என்று துணிநரும் உளர்** – இகரச்சாரியையைத் தன்முன் பொருந்துமென்று அரிதிற் கொள்வாருஞ் சிலருளர், **எ–று.**

**உ–ம்.:–**

வேள்–யாவன்–வேளியாவன், மண்–யாது–மண்ணியாது எனவும், வேளியானை, மண்ணியானை எனவும், வரும்.

"துணிநருமுளரே" என்றமையாற் கொள்ளக்கிடப்பது யாது?

மண்யாது எனஇயல்பாமெனத் துணிவார் பலரென்பது.

சில மெல்லின இடையினவீற்று முதனிலைத் தொழிற்பெயர்களுக்கு முன்னும் ஏவல்களுக்கு முன்னும் யகரமல்லாத மெய்வந்து புணருமாறு கூறுஞ் சூத்திரம் யாது?

ஞ ண ந ம ல வ ள ன வொற்றிறு தொழிற்பெயர்
ஏவல் வினை நனி யவ்வன் மெய்வரின்
உவ்வுறு மேவ லுறாசில சில்வழி.

(ஞ ண ந ம ல வ ள ன ஒற்று இறு தொழிற்பெயர்
ஏவல்வினைநனி யஅல் மெய்வரின்
உ உறும், ஏவல் உறாசில சில்வழி.)

**இ–ள்.:– ஞ ண ந ம ல வ ள ன ஒற்று இறு தொழிற்பெயர் ஏவல் வினை** – ஞ ணந ம ல வ ள ன என்னும் எட்டு மெய்களும் இறுயாகிய முதனிலைத் தொழிற்பெயர்களும் ஏவல்வினைகளும், **ய அல் மெய்வரின்** – யகரமொழிந்த மெய்கள் வருமாயின், **நனி உ, உறும்** – பெரும்பாலும் உகரச்சாரியையை இறுதிக்கட் பொருந்தும்; **சில ஏவல் சில்வழி உறா** – சிலவேவல் வினைகள் சிலவிடங்களிலே அவ்வுகரச்சாரியைப் பொருந்தாவாம், **எ–று.**

முதனிலைத் தொழிற்பெயராவது தொழிற்பெயர் விகுதி குன்றி முதனிலை மாத்திரம் நின்று தொழிற்பெயர்ப் பொருளைத் தருவதாம்.

**உ–ம்.:–**

(1) உரிநுக் கடிது, உண்ணுக்கடிது, பொருநுக்கடிது, திருமுக்கடிது, தின்னுக்கடிது, நீண்டது, வலிது எனவும், கடுமை, நீட், வன்மை எனவும், தொழிற்பெயர்கள் இருவழியும் உகரம் பெற்றன. மற்றவைகளும் இப்படியே. உரிஞுதல் உண்ணல் என்புழிவரும் விகுதி குன்றி, நின்றமை காண்க.

(2) உரிஞுகொற்றா, உண்ணுகொற்றா, பொருநுகொற்றா, திருமு கொற்றா, தின்னு கொற்றா, நாகா, வளவா என ஏவல்வினை உகரம் பெற்றன. மற்றவையும் இப்படியே

இது எய்தாத தெய்துவித்தல்.

உகரச்சாரியை பெற்றும் பெறாதும் வரும் ஏவல் வினைகள் எவை?

ண ன ல ள என்னும் மீற்றன.

உ—ம்.:—

உண்கொற்றா, தின்சாத்தா, வெவ்பூதா, துள்வளவா என வரும்.

உகரம்பெற்றோ வரும் ஏவல்வினைகள் எவை?

ஞ ந ம வ என்னு மீற்றன.

உ—ம்.:—

உரிஞு கொற்றா, பொருநுகொற்றா, திருமுகொற்ற, தெவ்வுகொற்றா, எனவரும்.

உகரச்சாரியையே யன்றி அகரச்சாரியையும் பெறுந் தொழிற்பெயரும் உளதோ?

நவ்விறு தொழிற்பெயர்க் கவ்வும்மாம் வேற்றுமை.

(நவ்விறு தொழிற்பெயர்க்கு அவ்வும் ஆம் வேற்றுமை)

**இ—ள்.:— ந இறு தொழிற்பெயர்க்கு** —நகரமிறுதியாகிய முதனிலைத் தொழிற்பெயர்க்கு, **அவ்வும் ஆம் வேற்றுமை**—உகரச்சாரியையேயன்றி அகரச்சாரியையுமாகும் வேற்றுமைக்கண், எ—று.

உ—ம்.:—

பொருநக்கடுமை, நன்மை, வன்மை எனவரும். பொருநுதல் – ஒத்தல்; அது ஒருவர் மற்றொருவர்போல வேடங்கொள்ளும் பொருநரது தொழில். பொருநர் – கூத்தர்.

இது மேலைச்சூத்திரத்தால் எய்தியதன் மேற் சிறப்புவிதி.

## ணகர னகரவீறு

11. ணகார னகாரவீறு புணருமாறு கூறுஞ் சூத்திரம் யாது?

ண ன வல்லினம்வாட்டறவும் பிறவிரின்
இயல்பும் மாகும் வேற்றுமைக் கல்வழிக்
கனைத்துமெய் வரினு மியல்பா கும்மே.

(ண ன வல்லினம் வரட்டறவும் பிறவரின்
இயல்பும் ஆகும் வேற்றுமைக்கு அல்வழிக்கு
அனைத்துமெய் வரினும் இயல்பு ஆகும்மே.)

**இ–ள்.:– ண ன** – ணகார னகாரங்கள், **வேற்றுமைக்கு வல்லினம் வரட்டறவும்** – வேற்றுமைக்கண் வன்கணம் வந்தால் முறையே டகரமும் றகரமும், **பிறவரின் இயல்பும் ஆகும்**–மெல்லினமும் இடையினமும் வந்தால் இயல்பும் ஆம் **அல்வழிக்கு அனைத்து மெய்வரினும் இயல்பு ஆகும்**– அல்வழிக்கண் மூவின மெய்களும் வந்தாலும் இயல்பேயாகும், **எ–று.**

ஒப்பின் முடித்தலால், னகரமும் உடன் கூறினார். பின்னே கூட்டிச் சொல்லப்படும் எழுத்துக்களும் இவ்வுத்தியே கொள்க.

ண ன முன் வல்லினம் வரின் வேற்றுமையில் எவ்வாறாம்?

“ண ன வல்லினம் வரட் டறவாகும் வேற்றுமைக்கு,

**உ–ம்.:–**

மண்–குடம்–மட்குடம், மட்சாடி, மட்டூதை, மட்பானை, பொன்–குடம்–பொற்குடம், பொற்சாடி, பொற்றூதை, பொற்பானை எனவரும்.

வேற்றுமையில் ண னக்கள் இயல்பாய் நிற்றல் எவ்வழி?

“ண னப் பிறவரின் இயல்பாகும் வேற்றுமைக்கு”

**உ–ம்.:–**

மண்ஞாற்சி, பொன்ஞாற்சி, நீட்சி; மாட்சி, யாப்பு, வன்மை எனவரும்.

ண ன முன் முக்கணமும் வரின் எவ்வாறாம்?

“அல்வழிக்கு அனைத்து மெய்வரினு மியல்பாகும்மே”

**உ–ம்.:–**

மண்கடிது, பொன்கடிது, மண்சிறிது, தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, யாது, வலிது, எனவரும்.

ணகார னகாரவீறு முக்கணங்களோடும் புணரும்போது திரிதலும் இயல்பாதலுமேயன்றிக் கெடுவதுமுண்டோ?

குறிலணை வில்லா ண னக்கள் வந்த
நகரந் திரிந்துழி நண்ணுங் கேடே.

(குறில் அணைவு இல்லா ண னக்கள் வந்த
நகரம் திரிந்துழி நண்ணும் கேடே)

**இ–ள்.: குறில் அணைவு இல்லா ண னக்கள்– தனிக்குறிலொன்றனையுஞ்** சாராது ஒருமொழி தொடர்மொழிகளைச் சார்ந்த ணகார னகார மெய்கள், வந்த நகரம் திரிந்துழி–வருமொழிக்கு முதலாக வந்த நகரம் மயக்க விதியில்லாமையினாலே திரிந்தவிடத்து, **கேடு நண்ணும்** – கெடுதலைப் பொருந்தும், **எ–று.**

**உ–ம்.:–**

(1) தூண்–நன்று–தூணன்று, பசுமண்–நன்று–பசுமணன்று எனவும், தூணன்மை எனவும், ணகரம் இருவழியுங் கெட்டது.

(2) அரசன்–நல்லன்–அரசனல்லன், செம்பொன்–நன்று–செம்பொனன்று எனவும் செம்பொனன்மை, எனவும் னகரம் இருவழியுங் கெட்டது.

ண னக்கள் வந்த நகரந் திரிந்துழி நண்ணுங்கேடு என்றது மேலைச் சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல்.

நகரந்திரிதற்குவிதி முன்னே எச்சூத்திரத்திற் கூறப்பட்டது? "எண்மூவெழுத் தீற்று" என்னுஞ் சூத்திரத்திலே "ண ள ல வழிநத்திரியும்" எனக் கூறப்பட்டது.

வேற்றுமைக்கண்ணும் வல்லினம்வரின் இயல்பாயும் அல்வழிக்கண்ணும் வல்லினம்வரின் டகரமாயும் நிற்கும் ணகரவீறு முளவெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

சாதிகுழூஉப் பரண் கவண்பெய ரிறுதி
இயல்பாம் வேற்றுமைக் குணவெண் சாண்பிற
டவ்வா கலுமா மல்வழி யும்மே.

(சாதி குழூஉப்பரண் கவண்பெயர் இறுதி
இயல்பாம் வேற்றுமைக்கு உணவுஎண் சாண்பிற
டவ்வா கலுமா மல்வழி யும்மே.)

**இ–ள்.:–** **சாதிப்** (பெயர்) – சாதிபற்றி வரும் பெயர்களுக்கும், குழூ உப் (பெயர்) – திரள்பற்றி வரும் பெயர்களுக்கும், பரண் கவண் **பெயர் இறுதி** – பரண் கவணென்னும் பெயர்களுக்கும் ஈற்று ணகரம், **வேற்றுமைக்** (கும்) **இயல்பு ஆம்** – வேற்றுமைக்கண்ணும் வல்லினம்வரின் இயல்பாகும்: **உணவு எண்** (பெயர்)– உணவுக்குரிய எள்ளின் றிரிசொல்லாகிய எண்ணென்னும் பெயருக்கும். சாண் (பெயர்) – சாணென்னும் நீட்ட லவளவைப் பெயருக்கும், **(இறுதி)** – ஈற்று ணகரம், **அல்வழியும் டவ்வாகலும் ஆம்** –அல்வழிக்கண்ணும் வல்லினம்வரின் திரிந்துடகரமாதலும் பொருந்தும், எ–று.

இச்சூத்திரம் எச்சூத்திரவிதியை விலக்குவது?

"ண ன வல்லினம்வர" என்னுஞ் சூத்திரத்தாலெய்திய விதியை விலக்குவது.

வேற்றுமைக்கண்ணும் வன்கணம்வரின் இயல்பாய்முடியும் ணகர வீற்றுப் பெயர்கள் யாவை?

"சாதிகுழூஉப்பரண் கவண்பெயரிறுதியியல்பாம் வேற்றுமைக்கு"

உ–ம்.:–

(1) பாண்குடி எனவும், அமண்குடி எனவும், உமண்குடி எனவும், பரண்கால் எனவும், கவண்கால் எனவும், வேற்றுமையிலும் இயல்பாயிற்று. (பாண்–பாடுதற்றொழிலுடைய தொரு சாதி. உமண் – உப்பமைத்தற் றொழிலுடைய தொரு சாதி. அமண் – அருகனை வழிபடுவதொரு கூட்டம்)

அல்வழிக்கண்ணும் வல்லினம்வரின் 'டகரமாகத்' திரிந்துமுடியும் ணகரவீற்றுப் பெயர்கள் யாவை?

"உணவெண்சாண்பிற டவ்வாகலுமா மல்வழியும்மே"

உ–ம்.:–

(2) எண்–கடிது–எட்கடிது, சாண்–கோல்–சாட்கோல் என அல்வழியிலுந் திரிந்தது, டவ்வாகலுமாம் என்ற

உம்மையால், எண்கடிது, சாண்கோல் இயல்பாதலே சிறப்பாம்.

பிற என்ற மிகையால், வேற்றுமையில் பாணக்குடி என அகரச் சாரியை பெறுதலும், கண்கடுமை அட்டுண்டுழனி என்னும் இயல்பும், மட்குடம் மண்குடம் எண்ணும் உறழ்வும், எண்ணுப்பேறு என உகரம் பெறுதலும், இருவழியிலும் இன்னும் ணகரவீற்றுள் அடக்காதவையுண்டேல் அவையுங் கொள்க. அட்டுண்டுழனி அட்டு – ஊண் – துழனி – அட்டுஉண்ணலாலாகிய ஒலி.

இயல்பாம் வேற்றுமைக்கு என்றது "ண ன வல்லினம் வரட்டறவும் என எய்தியது விலக்கல் டல்வாகலுமாம் அல்வழியும் என்றது" "அல்வாழ்க்கனைத்து மெய் வரினு மியல்பாகும்" எனும் என எய்தியதன்மேற் சிறப்புவிதி

.21.'ணன வல்லினம்' என்னுஞ் சூத்திரவிதிக்கு அமையாத ணகார வீற்றுச் சொல்லுமுளதெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

ணஃகான் கிளைப்பெய ரியல்பு மஃகான்

அடைவு மாகும் வேற்றுமைப் பொருட்கே

(ணஃஃகான் கிளைப்பெயர் இயல்பு மஃகான்

அடைவும் ஆகும் வேற்றுமைப் பொருட்கு ஏ)

**இ–ள்.:– ணஃகான் கிளைப்பெயர்** – ணகரத்தை யிறுதியிலுடைய சாதிப் பெயர், **இயல்பும்** – வல்லினம் வராஉறு திரியாதியல்பாதலும், **அஃகான்** – அடைவும் அகரச்சாரியை பெறுதலும், **வேற்றுமைப் பொருட்கு ஆகும்** – வேற்றுமைப்பொருட் புணர்ச்சிக் கண் ஆகும், **எ–று.**

உ–ம்.:–

எயின்குடி, சேரி, தோட்டம், பாடி எனவும், எயினக்கன்னி, எயினச்சிறுவன், எயினத்தலைவன், எயினப்பிள்ளை, ஞாற்சி நீட்சி, மாட்சி யாப்பு, வலிமை ஆட்சி எனவும் வரும். எயினப்பிள்ளை – எயினரது பிள்ளை (எயின் – வேட்டுவச்சாதி.)

வேற்றுமைப்பொருட்கு இயல்பு என்றது "ண ன வல்லினம் வரட்டறவும்" என எய்தியது விலக்கல்: அஃகானடைவு என்றது பிறிதுவிதி வகுத்தல்.

அகரச்சாரியை விரியுமிடத்தும் இயல்பாய்ப் புணருமோ?

எயின் – அ–குடி. எயினக்குடி என "இயல்பினும் விதியினும் நின்றவுயிர்முன் க ச த ப மிகும்" என்ற விதிப்படி வல்லினமிக்குப் புணரும்.

வல்லினம்வரின் உறழ்ந்து முடியும் ணகரவீற்றுச்சொல்லு முளதெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

மீன்றவ் வொடுபொரூஉம் வேற்றுமை வழியே,

(மீன் றவ் வொடு பொரூஉம் வேற்றுமை வழியே.)

**இ–ன்.:– மீன்** – மீனென்னு மொழியிறுதி னகரம், **வேற்றுமைவழி** – வேற்றுமைக்கண், **றவ்வொடு பொரூஉம்** – வல்லெழுத்துவரின் றகரத்தோடு உறழ்ந்துவரும், **எ–று.**

உ—ம்.:—

மீன் — கண் — மீற்கண், மீன்கண், செவி, தலை, புறம் என வரும்.

றவ்வொடு பொரூஉம் வேற்றுமைவழி என்றது. "ணன வல்லினம் வரட்டறவும்" என எய்தியதிருவாழ் தொருவாற்றல் விலக்கல்.

தேன் என்னு மொழி புணருமாறு கூறுஞ் சூத்திரம் யாது?

தேன்மொழி மெய்வரி னியல்பு மென்மை
மேவி னிறுதி யழிவும் வலிவரின்
ஈறுபோய் வலிமெலி மிகலுமா மிருவழி.

(தேன்மொழி மெய்வரின் இயல்பும் மென்மை
மேவின் இறுதி யழிவும் வலிவரின்
ஈறுபோய் வலிமெலி மிகலும் ஆம் இருவழி.)

**இ—ள்.:— தேன்மொழி** — தேனென்னுஞ் சொல், **மெய்வரின் இயல்பும்** — மூவின மெய்களும் வரின் இறுதி னகரமெய் இயல்பாதலும், **மென்மை மேவின் இறுதி அழிவும்** — மெல்லினம் வரின் அம்மெய் இயல்பாதலேயன்றிக் கெட வந்த வல்லினமாவது அதற்கினமாவது மிகுதலும் ஆகும் இருவழிக்கண்ணும், **எ—று.**

தேன் என்னுஞ்சொல் இயல்பாதல் எவ்வழி?

"தேன்மொழி மெய்வரின் இயல்பா மிருவழி"

உ—ம்.:—

தேன்கருமை, தேன்சாடி, தேன்மலிவு எனவும், தேன்கடிது, தேன்ஞான்றது, தேன்யாது எனவும் வரும்.

இங்கே மெய்யெனப்பட்டவை யாவை?

மொழிக்கு முதலாகவரும் க ச த ந ப ம வ ய ஞ ங வென்னும் பத்துள் நகர ஙகர மிரண்டுமொழித்த எட்டு மெய்யுமாம்.

தேன் என்னுஞ்சொல் மென்கணம் வரின் எவ்வாறு புணரும்?

"தேன்மொழி மென்மை மேவி னிறுதி யழிவுமா மிரு வழி" என்றமையால் இயல்பாதலேயன்றிக் கெடுதலுமாம்.

உ— ம்.:—

தேமலர், மேலர், எனவும் தேன்மொழி, தேமொழி எனவும் வரும்.

தேன் என்னுஞ் சொல் வல்லினம் வரின் எவ்வாறு புணரும்?

"தேன்மொழி வலிவரின் ஈறுபோய், வலிமெலி மிகலு மா மிருவழி."

உ—ம்.:—

தேன்குடம், தேக்குடம், தேங்குடம், எனவும் தேன்குழம்பு, தேக்குழம்பு, தேங்குழம்பு, எனவும் வரும்.

தேன் என்னுஞ்சொல் நியதியோடு இயல்பாகப் புணர்வது எக்கணம் வரின்?

மெல்லினமும் வல்லினமும் விதந்துரைக்கப்பட்டமையின் எஞ்சியதாகிய இடையினம் வரின் எனக் கொள்க.

அன்னத்தை யுணர்த்தும் எகின் என்னுஞ்சொல் எவ்வாறு புணரும்?

மரமல் லெகின்மொழி யியல்பு மகரம்

மருவ வலிமெலி மிகலு மாகும்.

(மரம் அல் எகின்மொழி இயல்பும் அகரம்

மருவ வலிமெலி மிகலும் ஆகும்)

**இ–ள்.:– மரம் அல் எகின்மொழி** – மரமல்லாத அன்னத்தை யுணர்த்தும் எகினென்னுஞ் சொல், **இயல்பும்** – வேற்றுமையிலும் வல்லினம் வர இறுதி இயல்பாதலும், **அகரம் மருவ வலி மெலி மிகலும் ஆகும்** – இருவழியிலும் அகரச்சாரியை பொருந்த வரும் வல்லெழுத்தாவது அதற்கினமாவது மிகுதலும் ஆகும், **எ–று.**

**உ–ம்.:–**

(1) எகின்கால், சிறை, தலை, புறம் என வேற்றுமையிலும் இயல்பாயிற்று.

(2) எகினப்புள், எகினம்புன் எனவும், எகினக்கால், எதினங்கால் எனவும், இருவழியிலும் அகரம் வர வலி மெலிமிகுந்தன.

அகரம் வருதற்கு வருமெழுத்தைச் சொல்லாமையால், நாற்கணமுங்கொள்க, எகின மாட்சி, எகின வாழ்க்கை எகினவழுகு எனவரும்.

எகின்மொழியியல்பு என்றது "ணன வல்லினம் வரட்டறவும்" என எய்தியது விளக்கல் அகரமருவ என்றது அச்சூத்திரத்தால் இருவழிக்கண்ணும் எய்தியது விலக்கிப்பிறிது விதி வகுத்தல், வலிமெலி மிகும் என்றது இயல்பினும் விதியினும்" என்பதனால் எய்தியதன்மேற் சிறப்பு விதி.

குயின் ஊன் என்னும் பெயர்கள் எவ்வாறு புணரும்?

குயினூன் வேற்றுமைக்கண்ணும் இயல்பே

(குயின் ஊன் வேற்றுமைக்கண்ணும் இயல்பே)

**இ–ள்.: குயின் ஊன்** – குயினென்னும் பெயரும் ஊனென்னும் பெயரும், **வேற்றுமைக்கண்ணும் இயல்பு** – வேற்றுமையினிடத்தும் இயல்பாகும், **எ–று.**

**உ–ம்.:–**

குயின் கடுமை, ஊன் கடுமை, சிறுமை, தீமை, பெருமை, எனவரும். ('குயின் – மேகம்.')

வேற்றுமைக்கண்ணுமியல்பு என்றது "ணன வல்லினம் வரட்டறவும்" என எய்தியது விலக்கல்.

வேற்றுமைக்கண்ணு மியல்பே என்ற வும்மையாற் பெறப்படுவது யாது?

அல்வழிக்கண்ணு மியல்பாமென்பது.

கன்னன் வேற்று மென்மையோ டுறழும்.

(மின்பின் பன்கன் தொழிற்பெயர் அனைய

உன் அ ஏற்று மென்மையோடு உறழும்.)

**இ—ள்.:— மின்பின் பன்கன் தொழிற்பெயர் அனைய** – மின் முதலிய நான்கு சொற்களும் முதனிலைத் தொழிற்பெயர்போல யகரமல்லாத மெய்கள் வரின் உகரச்சாரியை பொருந்தும், கன் அ மூக்கு மென்மையோடு உறழும் இவற்றுட் கன்னென்னுஞ் சொல் உகரச் சாரியையே யன்றி அகரச் சாரியையும் பெற்று வல்லினம் வந்தால் வருமெழுத்தாவது அதற்கு இனமாவது மிகப்பெறும், **எ—று.**

மின் பின் பன் கன் என்னு நான்கும் இருவழிப் புணர்ச்சிக்கண்ணும் பெறுஞ் சாரியை யாது?

மின்பின் பன்கன் றொழிற்பெய ரனைய

தொழிற்புணர்ச்சி முன்னே எச் சூத்திரத்திற் கூறப்பட்டது?

"ஞண நமல வளன வொற்றிறு தொழிற்பெயர் ஏவல் வினைநனி யவ்வன் மெய்வரின் உவ்வுறும்" என்னுஞ் சூத்திரத்திற் கூறப்பட்டது.

**உ—ம்.:—**

மின்னுக்கடிது, பின்னுக்கடிது, பன்னுக்கடிது, கன்னுக் கடிது, நன்று, வலிது. எனவும், கடுமை, நன்மை, வன்மை, எனவும். வரும்.

கன் என்னும் பெயர் வேறுவிதியும் பெறுமோ?

"கன் அவ்வேற்று மென்மையோ டுறழும்"

**உ—ம்:—**

கன்னத்தட்டு, கன்னந்தட்டு எனவும், கன்னத்தாக்கு, கன்னந்தூக்கு எனவும் வரும்.

தொழிற்பெயரனைய என்றதும் அவ்வேற்கும் என்றதும் "ணன வல்லினம் வரட்டறவும்" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல்;

மென்மையோடுறழும் என்றது "இயல்பினும் விதியினும்" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதன்மேற் சிறப்புவிதி, (கன் – கன்னார்தொழில். பன் – ஓர் நாணல்.)

தன் என் நின் என்பன புணருமாறு கூறுஞ் சூத்திரம் யாது?

தன்னென் னென்பவற் றீற்றுனவ் வன்மையோ

டுறழு நின்னீ றியல்பா முறவே.

(தன் என் என்பவற்று ஈற்று ன வன்மையோடு

உறழும் நின் ஈறு இயல்பு ஆம் உறவே.)

**இ—ள்.:— தன் என் என்பவற்று ஈற்று ன** – தன் என் என்னும் விகார மொழிகளுடைய இறுதியிலுள்ள னகரமெய், **வன்மையோடு உறழும்** – வல்லினம் வரிற் பொதுவிதியால் றகரமாகத் திரிதலும் அவ்விதி யேலாது இயல்பாதலும்; **நின் ஈறு இயல்பு ஆம்** – நின்னென்னும் விகாரமொழியினது இறுதியிலுள்ள னகரமெய் வல்லினம் வரிற் றிரியாது இயல்பேயாகும், **எ—று.**

உ–ம்.:–

தன்பகை, தற்பகை, என்பகை, எற்பகை எனவும், நின்பகை, எனவும் வரும்.

இவற்றுள் இயல்பாதலும் றகரமாகத் திரிதலும் பெறுவன எவை?

"தன் என் என்பவற் றீற்றுனவ் வன்மையோ டுறழும்"

இயல்பாகவே புணருஞ் சொல் யாது?

"''நின்னீ றியல்பா முறவே''

உறவேயென்ற மிகையாற் கொள்ளக்கிடப்பன யாவை?

உறவே என்ற மிகையால், மின் பின் முதலியவை, மின் கடிது, மின்கடுமை என இருவழியுஞ் சாரியைபெறுதலுந்திரிதலுமின்றி வருதலும், மான்குழம்பு, அழன்கை, கான்கோழி, வான்சிறப்பு, அலவன்கால், கலுழன் சிறை என வேற்றுமையிலே சிறப்புவிதி சொல்லப் பெறாதவைகள் இயல்பாதலும், வரிற்கொள்ளும் எனச் செயினென்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம் பொதுச் சூத்திரத்தால் இயல்பாகாது திரிதலும், இன்னும் னகர மெய்யீற்றுள் அடங்காதவை இருந்தால் அவையுங் கொள்க. (அழன் – பிணம்.)

னவ் வன்மையோடுறழும் என்றது "ண ன வல்லினம் வரட்டறவும்" என எய்தியதொருவாற்றான் விலக்கல்; "நின்னீறியல்பாம் என்றது எய்தியது விலக்கல்."

## மகரவீறு

41. மகரவீறு நாற்கணத்தோடும் இருவழியும் புணருமாறு கூறுஞ் சூத்திரம் யாது?

மவ்வீ றொற்றழிந் துயிரீ றொப்பவும்
வன்மைக் கினமாத் திரிபவு மாகும்.
(மவ்வீறு ஒற்று அழிந்து உயிர்ஈறு ஒப்பவும்
வன்மைக்கு இனம் ஆத்திரிபவும் ஆகும்.)

**இ–ள்.:– மவ்வீறு** – மகரவீற்றுச் சொற்கள், **ஒற்று அழிந்து உயிர்ஈறு ஒப்பவும்** – நாற்கணமும் வர, இறுதியிலுள்ள மகரமெய் கெடவிதியுயிரீறாய் நின்று இயல்புயிரீறுபோலப் புணர்வனவும், **வன்மைக்கு இனம் ஆத் திரிபவும் ஆகும்** – வல்லினம் வரிற் கெடாது அவற்றிற்கு இனமாகத் திரிவனவும் ஆகும், எ–று.

உயிரீறொத்தலாவது, உயிர்வரின் அவை உடம்படுமெய் பெறவும், வல்லினம் வரின் அவை மிகவும், மெல்லினமும் இடையினமும் வரின் அவை இயல்பாகவும் புணர்தல்.

மகரமெய் உயிரும் இடையினமும் வல்லினமும் வரக் கெடுவது வேற்றுமையிலும் அல்வழியிலே பண்புத்தொகை உவமைத் தொகைகளிலுமாம் எனவுங்கொள்க.

மகரமெய் வல்லினம் வரக் கெடாது இனமெல்லெழுத்தாகத் திரிவது பண்புத்தொகை உவமைத்தொகை யிரண்டு மொழித் தொழிந்த அல்வழிப்புணர்ச்சியிலாம் எனவும், வினையாலணையும் பெயரிறுதி மகரமும், தனிக்குறிலைச்சார்ந்த மகரமும், வேற்றுமையிலும், வல்லினம் வரிற்கெடாது இனவெழுத்தாகத் திரியும் எனவுங் கொள்க.

உ—ம்.:—

(1) மரம் – அடி – மரவடி. மரம் – வேர் – மரவேர், மரம் – கோடு – மரக்கோடு, என வேற்றுமையிலும், வட்டம் – ஆழி – வட்டவாழி, வட்டம் – வடிவம் – வட்ட வடிவம், வட்டம் – கல் – வட்டக்கல், எனப் பண்புத்தொலையிலும், பவளம் – இதழ் – பவளவிதழ், பவளம் – வாய் – பவளவாய், கமலம் – கண் – கமலக்கண், என உவமைத் தொகையிலும் உயிரும் இடையினமும் வல்லினமும் வராஈறுகெட்டு உயிரீறு போன் முடிந்தன. மரம் – நார் – மரநார், எனவும் மரம் – நீண்டது – மரநீண்டது. வட்டம் – நேமி – வட்டநேழி எனவும் மெல்லினம் வர ஈறு கெட்டு உயிரீறுபோன் முடிந்தன.

(2) நாம் – கடியம் – நாங்கடியம், நிலம் – தீ – நிலந்தீ, உண்ணும் – சோறு – உண்ணுஞ் சோறு, உண்டனம் சிறியேம் – உண்டனஞ்சிறியேம். பூதனும் – தேவனும் – பூதனுந்தேவனும், என அல்வழிக்கண் எழுவாய்த் தொடர் முதலியவற்றில் வல்லினம் வர ஈறு, திரிந்து முடிந்தது. சிறியேம் – கை – சிறியேங்கை எனவும். நம் – கை – நங்கை எனவும், வினையாலணையும் பெயரிறுதி மகரமுந் தனிக்குறிலைச்சார்ந்த மகரமும் வேற்றுமையிலும் வல்லினம் வரத் திரிந்து முடிந்தன.

இனமாத் – திரியும் என்றமையின், அருத்தாபத்தியால், நாம் பெரியம், சிறியேம்பண்பு எனப் பகரம் வருவழித் திரியாதென்பது பெற்றாம்.

மகரவீற்றுச் சொற்கள் புணர்ச்சியால் எத்தனை வகைப்படும்?

"ஒற்றழிந்துயிரீறொப்ப" னவும் ஒற்றழியாது வன்மைக்கினமாத் திரிவனவும் என இருவகைப்படும்.

ஒற்றழிந்துயிரீறொப்பன எத்தனைவகையிற் புணரும்?

இயல்புயிரீ றுபோல உயிர்வரி னுடம்படு மெய்பெற்றும் வல்லினம் வரின் அது மிகப்பெற்றும், மெல்லினமும் இடையினமும் வரின் இயல்பாய் நின்றும் மூன்று வகையிற் புணரும்.

ஒற்றழியாது நிற்கும் மகரவீறு எத்தனைவகையிற் புணரும்?

ஒற்றழியாது நிற்கும் மகரவீற்றுச்சொல் வல்லினம் வரின் மகரங் கெடாது அவற்றிற் கினமாய்த் திரிந்து ஒரே வகையிற் புணரும்.

மகரவீறு கேடுந் திரிபுமின்றிப் புணருமிடமு முளதோ?

ஆம். பகரம்வருவழிக் கேடுந் திரிபுமின்றி இருவழியும் புணரும்.

உ—ம்.:—

கலம் பெற்றான். மரம் பெரிது.

இச்சூத்திரத்திற்குக் கருவிச்சூத்திரங்க ளெவை?

"இ ஈ ஐ வழி...உயிர்வரினுடம்படு மெய்யென்றாகும்" என்னுஞ்சூத்திரமும், "இயல்பினும்விதியினு" மென்னுஞ் சூத்திரமுமாம்.

வேற்றுமைக்கண்ணும் அல்வழிக்கண்ணும் "மவ்வீறொற்றழிந்து" என்னுஞ் சூத்திரவிதியில் அமையாத மகரவீற்றுச் சொற்களுமுளவெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

வேற்றுமை மப்போய் வலிமெலி யுறழ்வும்

அல்வழி யுயிரிடை வரினியல் பும்முள.

(வேற்றுமை மம்போய் வலி மெலி உறழ்வும்

அல்வழி உயிர் இடை வரின் இயல்பும் உள.)

**இ–ள்.: வேற்றுமை மப்போய் வலிமெலி உறழ்வும்** – வேற்றுமைக்கண் மகரவிறுதி கெட வல்லினமாவது அவற்றிற்கு இனமாவது மிகுதலும், **அல்வழி உயிர் இடை வரின் இயல்பும் உள** – அல் வழிக்கண் உயிரும் இடையினமும் வரிற் கெடாதியல்பாதலும் உளவாம், எ–று.

மகரமெய் உயிரும் இடையினமும் வர இயல்பாவது பண்புத் தொகை உவமைத்தொகை யிரண்டுமொழித்தொழிந்த அல்வழிப் புணர்ச்சியிலெனக் கொள்க.

இச்சூத்திரத்திற்குச் சம்பந்தமான சூத்திரங்களெவை?

"மவ்வீ" றென்னுஞ் சூத்திரமும், "இயல்பினும் விதியினும்" என்னுஞ் சூத்திரமும், "உடல்மேலுயிர்வந்" தென்னுஞ் சூத்திரமும், "எண்மூவெழுத்தீற்" றென்னுஞ் சூத்திரமும் இச்சூத்திரத்திற்கு இன்றியமையாதனவாம்.

**உ–ம்.:–**

(1) குளம் – கரை – குளக்கரை, குளங்கரை என வேற்றுமையில் ஈறுகெட்டு உறழ்ந்தது.

(2) மரமடைந்தது, மரம் வலிது எனவும், வலமிடம், நிலம் வானம் எனவும், உண்ணுமுணவு, ஆளும் வளவன் எனவும், உண்டன மடியேம், உண்டனம் யாம் எனவும், அரசனும் மைச்சனும், புலியும் யானையும் எனவும், எழுவாய்த்தொடர் முதலிய அல்வழியில் உயிரும் இடையினமும் வர ஈறுகெடாதியல்பாக முடிந்தது.

வினையாலணையும் பெயரிறுதி மகரமுந் தனிக்குறிலைச் சார்ந்து மகரமும், சிறியேமன்பு, சிறியேம் வாழ்வு எனவும், நம்மன்பு, நம்வாழ்வு எனவும், வேற்றுமையிலும் உயிரும் இடையினமும் வர இயல்பாமெனக் கொள்க.

மப்போய் என்றது மேலைச்சூத்திரத்தால் எய்தியதிகந்து படாமைக் காத்தல். வலி மெலியுறழ்வும் என்றது "இயல்பினும் விதியினும்" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதன்மேற் சிறப்புவிதி. அல்வழி யுயிரிடை வரினியல்பாம் என்றது மேலைச் சூத்திரத்தால் எய்தியது விலக்கல்.

வருமொழி ஞ ந க்களாகத் திரியும் மகரவீற்றுச்சொற்கள் எவை?

நுந்தம்,

எம் நம் மீறா மவ்வரு ஞநவே.

(நும் தம்

எம் நம் ஈறு ஆகும் ம வரு ஞ நவே.)

**இ–ள்.:– நும் தம் எம் நம் ஈறு ஆம் ம** – நும்முதலிய நான்கு விகார மொழிகளுக்கும் இறுதியாகிய மகரமெய், **வரு ஞ நவே** – வரு ஞகர நகரங்களாகத் திரியும், எ–று.

**உ–ம்.:–**

நுஞ்ஞாண், நுந்நூல், தஞ்ஞாண், தந்நூல், எஞ்ஞாண், எந்நூல், நஞ்ஞாண், நந்நூல், எனவரும்.

ஞ ந வரின் அவையாகத் திரியும் எனவே, ஒழிந்த மகரம் வரின் நும்மணி என இயல்பாமென்பது பெற்றாம்.

மவ் வரு ஞ ந என்றது "மவ்வீறொற்றழிந்து" என எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல்.

அகம் என்னுஞ்சொல் செவி கை என்பனவரின் எவ்வாறு புணரும்?

அகமுனர்ச் செவிகை வரினிடை யனகெடும்.

(அகம் முனர்ச் செவி கை வரின் இடையன கெடும்.)

**இ—ள்.: அகம் முனர்ச் செவி கை வரின்** – அகமென்னும் இடப்பெயர் முன் செவி கையென்னுஞ் சினைப்பெயர்கள் வந்தால், **இடையன கெடும்** – நிலைமொழி யிறுதிமகரம் வன்மைக்கு இனமாகத் திரிதலேயன்றி அதனடு நின்ற ககரமெய்யும் அதன் மேலேறிய அகரவுயிருங் கெடும், **எ—று.**

**உ—ம்.:—**

அகம் – செவி – அஞ்செவி, அகம் – கை – அங்கை, எனவரும்.

இடையன கெடும் என்றது "வன்மைக் கினமாத்திரிபவும்" என எய்தியதன்மேற் சிறப்பு விதி.

இடையன கெடுமென்றதேயன்றிப் புணருமாறு கூறப்படவில்லையே. அஃது எதனாற் பெறப்படும்?

"வன்மைக் கினமாத் திரிபவுமாகும்" என்பதனாற் பெறப்படும்.

ககர சகர முறைப்படி கைசெவி யெனக் கூறாது செவிகை யெனக் கூறியது யாது குறித்ததாம்?

அகஞ்செவி அகங்கை என வருதல் வழுவன்றென்பது குறித்ததாம்.

உகரச்சாரியையும் அகரச்சாரியையும் பெற்றுப் புணரும் மகரவீற்றுச் சொற்கள் இவையெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

ஈமுங்,

கம்மு முருமுந் தொழிற்பெயர் மானும்

முதலன வேற்றுமைக் கவ்வும் பெறுமே.

(ஈமும்

கம்மும் உருமும் தொழிற்பெயர் மானும்

முதலன வேற்றுமைக்கு அவ்வும் பெறும்.)

**இ—ள்.:— ஈமும் கம்மும் உருமும் தொழிற்பெயர் மானும்** – ஈம் கம் உரும் என்னு மூன்று சொல்லும் இருவழியும் முதனிலைத் தொழிற் பெயர்போல யகரமல்லாத மெய்கள்வரின் உகரச்சாரியை பெற்று முடியும்; **முதலன வேற்றுமைக்கு அவ்வும் பெறும்** – இவற்றுள்ளே முதற்கணின்ற ஈமுங் கம்மும் வேற்றுமைக் கண் உகரச்சாரியை யன்றி அகரச்சாரியையும் பெறும், **எ—று.**

**உ—ம்.:—**

ஈமுக்கடிது, கம்முக்கடிது, உருமுக்கடிது, நீண்டது, வலிது எனவும், கடுமை, நீட்சி, வன்மை எனவும், ஈமக்குடம், கம்மக்குடம் எனவும் வரும். (ஈம் – சுடுகாடு. கம்—கம்மியரது தொழில், உரும் – இடி.)

இது "மவ்வீறொற்றழிந்து" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல்.

உகரச்சாரியையோடு அகரச்சாரியையும் பெற்றுப் புணரும் மகர வீற்றுச் சொற்கள் யாவை?

"முதலன (ஈமுங்கம்மும்) வேற்றுமைக்கவ்வும்பெறுமே."

இச்சூத்திரம் எச் சூத்திரத்தாலெய்திய விதியை விலக்குவது?

"மவ்வீறொற்றழிந்து" என்னும் விதியை விலக்குவது.

மகரவீற்றுப் புணர்ச்சி கூறிய ஐந்து சூத்திரங்களாலும் விதிக்கப்பட்ட விகாரங்கள் எத்தனை?

ஈறுகெடுதல், திரிதல், இயல்பாதல், இயல்பாய் நின்று சாரியை பெறுதல் என்னும் விகாரங்கள் நான்குமாம்.

## ய ர ழ வீறு

யகர ரகர ழகர வீறுகள் வன்கணத்தோடு புணருமாறு கூறுஞ் சூத்திரம் யாது?

யரழ முன்னர்க் கசதப வல்வழி
இயல்பு மிகலு மாகும், வேற்றுமை
மிகலு மினத்தோ டுறழ்தலும் விதிமேல்.

(ய ர ழ முன்னர்க் க ச த ப அல்வழி
இயல்பும் மிகலும் ஆகும் வேற்றமை
மிகலும் இனத்தோடு உறழ்தலும் விதி மேல்.)

**இ–ள்:– ய ர ழ முன்னர்** – யகர ரகர ழகர மெய்களின் முன், **க ச த ப** – ககர சகர தகர பகரங்கள் வரின், **அல்வழி இயல்பும் மிகலும் ஆகும்** – அல்வழியில் இயல்பாதலும் மிகுதலும், **வேற்றுமை மிகலும் இனத்தோடு உறழ்தலும் விதி** – வேற்றுமையில் மிகுதலும் வல்லினமாவது மெல்லினமாவது மிகுதலும் விதியாகும், **எ–று.**

அல்வழியில் யரழ வொற்றின்முன் வல்லினம் வரின் எவ்வாறாம்?

"யரழ முன்னர்க் க ச த ப வல்வழி, இயல்பு மிகலுமாகும்"

வேற்றுமையில் யரழ வொற்றின்முன் வல்லினம் எவ்வாறாம்?

"வேற்றுமை மிகலுமினத்தோ டுறழ்தலும் விதிமேல்"

யரழ முன்னர் வல்லினம் புணருமாறு கூறி மற்றைக் கணங்கள் புணருமாறு கூறாத தென்னை?

ஏனைக்கணங்கள் புணரும்போது இயல்பா மென்பது "எண்மூவெழுத்தீற்று" என்னுஞ் சூத்திரத்தாற்கூறப்பட்டமையின் வல்லினமாத்திரங் கூறப்பட்டது.

அல்வழி இயல்பு மிகுதி இரண்டனுள், இயல்பு, எழுவாய்த்தொடர் உம்மைத்தொகை வினைத்தொகைகளிலும், மிகுதி பண்புத்தொகை உவமைத் தொகைகளிலுங் கொள்ளப்படும். ரகர வீற்று வினையெச்சத்தின் முன் வரும் வல்லினம் இயல்பாம்.

உ—ம்.:—

(1) வேய் குறிது, வேர்சிறிது, யாழ்பெரிது, என எழுவாய்த் தொடரிலும், பேய் பூதம், நீர்கனல், இகழ் புகழ், என உம்மைத்தொகையிலும், செய்கடன், தேர் பொருள், வீழ்புனல் என வினைத்தொகையிலும், உண்ணியர் போவான், என வினையெச்சத்தின் முன்னும் இயல்பாயின. பொய்க்கீர்த்தி, கார்ப் பருவம், பூழ்ப்பறவை எனவும், வேய்த்தோள், கார்க்குழல், காழ்ப்படிவம் எனவும், போய்க்கொண்டான் எனவும், பண்புத்தொகை முதலியவற்றில் மிகுந்தன.

(2) நாய்க்கால், தேர்த்தலை, பூழ்ச்செவி, என வேற்றுமையில் மிகுந்தன. வேய்க்குழல், வேய்ங்குழல், ஆர்க்கோடு ஆர்ங்கோடு என வேற்றுமையில் இனத்தோடுறழ்ந்தன.

மேல் என்ற மிகையால், 'வாய்புகுவதனினும்' என வேற்றுமையில் இயல்பாதலும், பாழ்க்கிணறு, பாழ்ங்கிணறு, எனப் பண்புத்தொகையில் உறழ்தலும், காய் – யாது – காயாது, நோய் – யானை – நோயானை, எனத் தனிக்குறிலைச் சாராத யகரத்தின்முன் யகரம் வரின் இருவழியும் நிலைமொழி யிறுதி யகரங்கெடுதலும், மகிழம்பூ, மகிழங்கோடு, என வருவனவும் இன்னும் அடங்காதவைகளிருந்தால் அவைகளுங்கொள்க.

அகரச்சாரியை பெறும் ழகாரவீற்றுச் சொற்களுமுளவெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

தமிழவ் வுறவும் பெறும்வேற் றுமைக்கே
தாழுங் கோல்வந் துறமே லற்றே.
(தமிழ் அ உறவும் பெறும் வேற்றுமைக்கே
தாழும் கோல் வந்து உறுமேல் அற்றே)

**இ—ள்.:— தமிழ் வேறுமைக்கு அ உறவும் பெறும்** – தமிழென்னுஞ் சொல் நாற்கணமும் வரின் வேற்றுமைக்கண் அகரச்சாரியை பொருந்தவும்பெறும், **தாழும் கோல் வந்து உறுமேல் அற்று** – தாழென்னுஞ் சொல்லுங் கோலென்னுஞ் சொல் வந்து பொருந்துமாயின் அவ்வகரச் சாரியை பெறும், எ—று.

தமிழ் என்னுஞ் சொல் "யரழ முன்னர்" என்னுஞ் சூத்திரத்தால் எய்திய விதியேயன்றி வேறுவிதியும் பெறுமோ?

"தமிழவ் வுறவும் பெறும் வேற்றுமைக்கே"

உ—ம்.:—

தமிழ்ப் பிள்ளை, தமிழப் பிள்ளை, தமிழ் நாகன், தமிழ நாகன், தமிழ் வளவன், தமிழ வளவன், தமிழரசன், தமிழவரசன், என வரும்.

தமிழப்பிள்ளை தமிழையுடைய பிள்ளையென விரியும்.

கோல்வரின் தாழ் வேறுவிதியும் பெறுமோ?

"தாழுங் கோல்வந் துறுமே லற்றே"

உ—ம்.:—

தாழ்க்கோல், தாழக்கோல் என வரும். தாழ்க்கோல் என்பது தாழைத் திறக்குங் கோல் என விரியும். (தாழ்க்கோல் திறவுகோல்.)

முகாரவீற்றுள் வல்லினத்தோடு விகற்பமாகப் புணருஞ்சொல் இது வெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

கீழின்முன் வன்மை விகற்பமு மாகும்.

(கீழின் முன் வன்மை விகற்பமும் ஆகும்.)

**இ–ள்.: கீழின்முன் வன்மை** – கீழென்னுஞ், சொல்லின்முன் வரும் வல்லினம், **விகற்பமும் ஆகும்** – ஒருகால் இயல்பாகியும் ஒரு கான் மிக்கும் வரும் விகற்பத்தையும் பொருந்தும், **எ–று.**

**உ–ம்.:–**

கீழ்குலம். கீழ்க்குலம்; கீழ்சாதி, கீழ்ச்சாதி, என வரும்.

விகற்பமும் என்னும் இழிவுசிறப் பும்மையால், இவற்றுள் இயல்பே சிறப் புடைத்தென்றறிக.

## லகர ளகரவீறு

வன்மை விகற்பமுமாகும் என்றது "யரழ முன்னர்" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது பெரும்பாலும் விலக்கல்.

லகார ளகார வீற்றுப் புணர்ச்சி கூறுஞ் சூத்திரம் யாது?

லளவேற் றுமையிற் றடவு மல்வழி
அவற்றோ டுறழ்வும் வலிவரி னாமெலி
மேவி னணவு மிடைவரி னியல்பும்
ஆகு மிருவழி யானு மென்ப.

(லள வேற்றுமையில் றட வும் அல்வழி
அவற்றோடு உறழ்வும் வலி வரின் ஆம்: மெலி
மேவின் ன ண வும், இடைவரின் இயல்பும்
ஆகும் இருவழியானும் என்ப.)

**இ–ள்.:– லள வலிவரின் வேற்றுமையில் றட வும்** – லகர ளகரமாகிய இரண்டு மெய்யீறுகளும் வல்லினம் வந்தால் வேற்றுமைக்கண் முறையே றகார டகார மெய்களும், **அல்வழி அவற்றோடு உறழ்வும் ஆம்** – அல்வழிக்கண் றகார டகாரங்களுடனே உறழ்வனவும் ஆகும், **இருவழியானும் மெலி மேவின் னணவும்** – இருவழிக்கண்ணும் மெல்லினம் வந்தால் முறையேனகார ணகார மெய்களும், **இடைவரின் இயல்பும் ஆகும் என்ப** – இடையினம் வந்தால் இயல்பும் ஆகும் என்று சொல்லுவர் புலவர், **எ–று.**

ல ள வல்லினம் வரின் எவ்வாறு புணரும்?

"ல ள வேற்றுமையிற் றடவு மல்வழி அவற்றோ டுறழ்வும் வலிவரினாம்"

**உ–ம்.:–** (1) கல் – குறை – கற்குறை. முள் – குறை – முட்குறை, என வல்லினம் வர வேற்றுமையில் றகர டகரங்களாகத் திரிந்தன.

(2) கல் – குறிது –கல்குறிது, கற்குறிது; முள் – குறிது – முள்குறிது, முட்குறிது, என வல்லினம் வர அல்வழியில் ஒருகால் இயல்பாகியும் ஒருகாற் றிரிந்தும் உறழ்ந்தன.

மெல்லினம் வரின் ல ள எவ்வாறு புணரும்?

"மெலி மேவி னணவு மாகு மிருவழி யானு மென்ப"

(3) கல் – மாண்டது – கன்மாண்டது. முள் – மாண்டது – முண்மாட்து எனவும், கல் – மாட்சி – கன் மாட்சி, முள் – மாட்சி – முண்மாட்சி, எனவும். மெல்லினம் வர இருவழியும் னகர ணகரமாகத் திரிந்தன.

இடையினம் வரின் ல ள எவ்வாறு புணரும்?

"இடைவரி னியல்பும் ஆகு மிருவழி யானுமென்ப"

(4) கல் – யாது – கல்யாது, முள் – யாது – முள்யாது எனவும் கல் – யாப்பு – கல்யாப்பு, முள் – யாப்பு – முள்யாப்பு எனவும் இடையினம் வர இருவழியும் இயல்பாயின.

அல்வழியவற்றோடுறழ்வும் என்றாரேனும், இவற்றோடு மயங்காத தகரம் வரின், ஏற்புழிக்கோடலால், கற்றீது, முட்டீது எனத் திரிபொன்றுமே கொள்க

.அல்வழிக்கண்ணே தனிக்குறிலின் பின்னின்ற லகர ளகரங்கள் தகரத்தோடு புணரும்போது "லளவேற்றுமை" என்னுஞ் சூத்திரவிதியேயன்றி வேறுவிதியும் பெறுமோ?

குறில்வழி லளத்தவ் வணையி னாய்தம்.

ஆகவும் பெறூஉ மல்வழி யானே.

(குறில்வழி ல ள, த அணையின், ஆய்தம்

ஆகவும் பெறூஉம் அல்வழியானே.)

**இ–ள்.:– குறில்வழி ல ள** – தனிக்குறிலின் பின்னின்ற லகர ளகரமெய்கள், **அல்வழியான் த அணையின்** – அல்வழிக்கண்ணே தகரம் வருமாயின், **ஆய்தம் ஆகவும் பெறூஉம்** – றகர டகரங்களாகத் திரிதலேயன்றி, ஆய்தமாகத் திரிதலையும் பொருந்தும், எ–று.

**உ–ம்.:–**

கல் – தீது – கற்றீது, கஃறீது, முள் – தீது – முட்டீது, முஃடீது, என வரும்.

இஃது என்ன ஆய்தம்?

"லளவீற்றியைபினாமாய்தமஃகும்" என்றமையிற்குற்றாய்தம்.

இது மேலைச்சூத்திரத்தால் எய்தியதன் மேற் சிறப்புவிதி.

குற்றெழுத்தினைச் சாராத லளக்கள் புணருமாறு கூறுஞ் சூத்திரம் யாது?

குறில்செறி யாலள வல்வழி வந்த

தகரந் திரிந்தபிற் கேடுமீரிடத்தும்

வருநத் திரிந்தபின் மாய்வும் வலிவரின்

இயல்புந் திரிபு மாவன வுளபிற.

(குறில் செறியா ல ள அல்வழி வந்த

தகரம் திரிந்தபின் கேடும், ஈரிடத்தும்

வரு நத் திரிந்தபின் மாய்வும், வலி வரின்

இயல்பும் திரிபும் ஆவன உள பிற.)

**இ–ள்.:– குறில் செறியா ல ள** – தனிக்குறிலொன்றனையுஞ் சாராத லகார ளகார மெய்கள், **அல்வழி வந்த தகரம் திரிந்தபின் கேடும்** – அல்வழிக்கண் வருமொழிக்கு முதலாய் வந்த தகரந் திரியுமிடத்துக் கெடுதலும், **ஈரிடத்தும் வரு நத் திரிந்தபின் மாய்வும்** – இருவழிக் கண்ணும் வருமொழிக்கு முதலாய் வந்த நகரந் திரியுமிடத்துக் கெடுதலும், **வலிவரின் இயல்பும் திரிபும் ஆவன உள** – வல்லெழுத்து முதன்மொழி வந்தால் அல்வழிக்கண் உறழாது இயல்பாதலுந் திரிதலும். வேற்றுமைக் கண்ணே திரியாதியல்பாதலும் பொருந்துவன வுள, **எ–று.**

லளக்கள் அல்வழியில் வல்லினம் வர உறழாதியல்பாவது எழுவாய்த்தொடர், விளித்தொடர், உம்மைத்தொகை, வினை முற்றுத்தொடர், வினைத்தொகைகளிலும், திரிவது பண்புத்தொகை, உவமைத்தொகை, வினையெச்சங்களிலு மெனக் கொள்க.

தகரம் வரின் குறில்செறியா லளக்கள் எவ்வாறு புணரும்?

"குறில்செறி யாலள வல்வழி வந்த தகரந் திரிந்தபிற் கேடும்"

**உ–ம்.:–**

(1) வேல் – தீது – வேறீது, வாள் – தீது – வாடீது, மக்காள் – தின்மின் – மக்காடின்மீன், தோன்றல் – தீயன் – தோன்றறீயன், வேள் – தீயன் – வேடீயன், என அல்வழியிலே தகரந் திரியுமிடத்துக் கெட்டன.

நகரம் வரின் குறில் செறியா ல ள எவ்வாறு புணரும்?

"ஈரிடத்தும் வருநத் திரிந்தபின் மாய்வும்"

(2) வேல் – நன்று – வேனன்று, குரல் – நன்று – குரனன்று,

வாள் – நன்று – வாணன்று. பொருள் – நன்று – பொரு.

ணன்று, எனவும், வேல் – நன்மை – வேனன்மை, குரல் – நன்மை – குரனன்மை; வான் – நன்மை – வாணன்மை எனவும், இருவழியிலும் நகரந் திரியுமிடத்துக் கெட்டன.

வல்லினம் வரின் குறில் செறியா ல ள எவ்வாறு புணரும்?

"வலிவரின் இயல்புந் திரிபு மாவன வுள"

(3) கால்கடிது, மரங்கள்கடிய எனவும், மக்காள்சென்மின், கால்கை, பொருள் புகழ் எனவும், உண்டாள் சீதை, உண் பல் சிறியேன், கேள் சாத்தா எனவும், கால் சுடர், அருள் குரு எனவும், அல்வழியிலே எழுவாய்த்தொடர் முதலியவற்றில் உறழாதியல்பாயின, வேற்படைக்குமன், வாட்படைக்கையன் எனவும். வேற்கண், வாட்கண் எனவும், அல்வழியிலே பண்புத்தொகை முதலியவற்றில் உறழாது திரிந்தன.

"கால்குதித்தோடிக் கடல்புகமண்டி" "வாள்போழ்ந் தட்ட நீள் கழன் மறவர்" என வேற்றுமையிலே வலிவரத் திரியாதியல் பாயின.

பிறவென்ற மிகையானே கல்குறுமை, கற்குறுமை, முள்குறுமை, முட்குறுமை, கொள்கடுமை, கொட்கடுமை, வாள்கடுமை, வாட்கடுமை, எனக் குணவேற்றுமைக்கண் உறழ்தலும், வேறீது, வேற்றீது, வாடீது, வாட்டீது, என

நெடியதனிறுதி அல்வழிக்கட் கெட்டுந் திரிந்தும் உறழ்தலும், விழல் – காடு – விழன்காடு, விழன்சேறு தாள் புறம் என லகாரஈறு வேற்றுமைக்கண் றகரமாகாது னகரமாய்த் திரிதலும், நூற்கடல் நூல்சில என அல்வழிக்கண் உறழாது ஓரிடத்துத் திரிதலும் ஓரிடத்துத் திரியாமையும், முன்னாளைவாழ்வு முன்னாளையரசு ஒருநாளைக்குழவி ஒருதிங்களைக்குழவி என ளகரஈறு ஐகாரம் பெறுதலும், பூலங்கோடு உதளங்கோடு எனவும், வெயிலத்துக்கொண்டான் வெயிலிற்கொண்டான் இருளத்துக்கொண்டான் இருளிற்கொண்டான் எனவும், முறையே வேற்றுமைக்கட்டிரியாது அம்முப்பெறுதலும் அத்துப் பெறுதலும் இன்பெறுதலும், இன்னோரன்ன பிறவுங்கொள்க.

இது "லளவேற் றுமையிற் றடவும்" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல்.

வேடீயன், தோன்றறீயன் என வரும் உயர்திணைப்பெயர்ப் புணர்ச்சிக்கு உதாரணங்கள் "பொதுப்பெயருயர் திணைப்பெயர்கள்" என்னுஞ் சூத்திரவுரையிற் கூறப்பட்டதாயினும் லளக்கள் கெடுதலுக்கு விதி இச்சூத்திரத்தாற் பெறப்படுதலின் மீண்டும் உதகரிக்கப்பட்டன.

வருமொழித் தகரம் திரிந்தபின்னர் லகர ளகரங்கள் கெடுமென்ற தென்னை?

லகர ளகரங்களோடு தகர மயங்காதாதலின் அவை நோக்கி றகர டகரமாகத் திரியற்பாலதாகிய தகரந்திரியு முன்னே லளக்கள் கெடுமாயின் பின்னர்த் திரியுமாறில்லையாதலின் அங்ஙனங் கூறப்பட்டது.

லகரத்தை யிறுதியாகவுடைய விகுதிபெற்ற தொழிற்பெயரும் ளகரத்தை யிறுதியாகவுடைய முதனிலை திரிந்த தொழிற்பெயரும் எவ்வாறு புணரும்?

லளவிறு தொழிற்பெயரீ ரிடத்து முவ்வுறா
வலிவரி னல்வழி யியல்புமா வனவுள.
(ல ள இறு தொழிற்பெயர் ஈரிடத்தும் உவ்வுறா
வலிவரின் அல்வழி இயல்பும் ஆவன வுள)

**இ–ள்.: ல ள இறு தொழிற்பெயர்** – லகரத்தை யிறுதியாகவுடைய விகுதிபெற்ற தொழிற்பெயரும் ளகரத்தை யிறுதியாகவுடைய முதனிலை திரிந்த தொழிற்பெயரும், ஈரிடத்தும் **உவ்வுறா** – இருவழியிலும் யகரமல்லாத மெய்கள் வந்தால் உகரம் பெறாவாம், **வலிவரின் அல்வழி இயல்பும் ஆவுன உள** – வல்லினம் வந்தால் அல்வழிக்கண் உறழாதியல்பாவனவுஞ் சிலவுள, எ–று.

**உ–ம்.:–**

**(1)** ஆடல் சிறந்தது, ஆடற்சிறந்தது; ஆடனன்று, ஆடல் வலிது எனவும், ஆடற்சிறப்பு, ஆடனன்மை, ஆடல்வன்மை. எனவும், கோள்கடிது, கோட்கடிது; கோணன்று, கோள்வலிது. எனவும், கோட்கடுமை. கோணன்மை, கோள்வன்மை எனவும் இருவழியும் உகரம் பெறாது பொதுவிதியான் முடிந்தன.

(2) நடத்தல்கடிது, நடப்பித்தல்கடிது எனச் சில உறழாது அல்வழியில் இயல்பாயின.

இயல்பும் என்ற உம்மையால், பின்னல்கடிது, பின்னற்கடிது; உன்னல்கடிது, உன்னற்கடிது, எனப் பொதுவிதியால் உறழ்தலே பெரும்பாலன வென்க.

ஈரிடத்தும் உவ்வுறா என்றது ஐயமறுத்தல்; வலிவரினல் வழியியல்புமா வனவுன என்றது ஒருவாறு "அல்வழியவற்றோடு றழ்வும்" என எய்தியது விலக்கல்.

வல்லென்னுஞ் சொல் எவ்வாறு புணரும்?

வல்லே தொழிற்பெய ரற்றிரு வழியும்
பலகை நாய் வரினும் வேற்றுமைக் கவ்வுமாம்.

(வல் தொழிற்பெயர் அற்று இருவழியும்
பலகை நாய் வரினும் வேற்றுமைக்கு அவ்வுமாம்.)

**இ–ள்.: வல் இருவழியும் தொழிற்பெயர் அற்று** – வல்லென்னுஞ் சூதாடுகருவிப்பெயர் யகரமல்லாத மெய்கள் வரின் முதனிலைத் தொழிற்பெயர்போல இருவழியும் உகரச்சாரியை பெறும், **பலகை நாய் வரினும் வேற்றுமைக்கு அவ்வுமாம்** – பலகை நாயென்னும் இருபெயர் வரினும் பிறபெயர்கள் வரினும் வேற்றுமைக்கண் உகரச்சாரியையே யன்றி அகரச்சாரியையும் பெறும், எ–று.

உ–ம்.:–

(1) வல்லுக்கடிது, நன்று, வலிது எனவும், வல்லுக்கடுமை, நன்மை, வன்மை எனவும், இருவழியுந் தொழிற்பெயர் போல உகரச்சாரியை பெற்றது. (வல்– சூதாடுகருவி.)

(2) வல்லப்பலகை, நாய், புலி, குதிரை. எனவும். வல்லுப்பலகை, நாய், புலி, குதிரை எனவும், வேற்றுமையில் அகரச்சாரியையம் உகரச்சாரியையும் பெற்றது. வல்லப்பலகை – வல்லின தறை வரைந்த பலகை. வல்லநாய் – வல்லினுணாய் என விரியும்.

இது "ளளவேற்றுமையிற்றடவும்" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல்.

இஸ்து எச்சூத்திர விதியை விலக்குவது?

"லள வேற்றுமையிற் றடவும்" என்னுஞ் சூத்திர விதியை.அல்வழிக்கண்ணும் றகரமாய்த் திரிந்து முடியுஞ்சொற்க ளிவையெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

நெல்லுஞ் செல்லுங் கொல்லுஞ் சொல்லும்
அல்வழி யானும் றகர மாகும்.

(நெல்லும் செல்லும் கொல்லும் சொல்லும்
அல்வழி யானும் றகர மாகும்.)

**இ–ள்.:– நெல்லும் செல்லும் கொல்லும் சொல்லும்** – நென் முதலிய நான்கு சொற்களினீற்று லகரமெய், **அல்வழியானும் றகரம் ஆகும்** – பொதுவிதியால் உறழாது அல்வழிக்கண்ணும் வேற்றுமைபோல றகர மெய்யாகத் திரியும், எ–று.

உ–ம்.:–

நெற்கடிது, செற்கடிது, கொற்கடிது, சொற்கடிது, சிறிது, தீது, பெரிது என வரும். (செல் – மேகம், கொல் – கொற்றொழில்.)

இதுவும் "ளள வேற்றுமையிற் றடவும்" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல்.

இல்லென்னுஞ் சொல் எவ்வாறு புணரும்?

இல்லெ னின்மைச் சொற்கை யடைய
வன்மை விகற்பமு மாகா ரத்தொடு
வன்மை யாகலு மியல்பு மாகும்.
(இல் என் இன்மை சொற்கு ஐ அடைய
வன்மை விகற்பமும் ஆகாரத்தொடு
வன்மை ஆகலும் இயல்பும் ஆகும்)

**இ—ள்.:— இன்மை இல் என் சொற்கு** — இன்மைப் பண்பை யுணர்த்தி நிற்கும் இல் என்னுஞ் சொல்லுக்கு, **ஐ அடைய வன்மை விகற்பமும்** — ஐகாரச் சாரியை பொருந்த அவ்விடத்து வரும் வல்லினம் விகற்பித்தலும், **ஆகாரத்தொடு வன்மை ஆகலும்** — ஆகாரச் சாரியை பொருந்த அவ்விடத்து வரும் வல்லின மிகலும், **இயல்பும் ஆகும்** — இவ் விருவிதியும் பெறாதியல் பாதலும் பொருந்தும், **எ—று.**

சாரியை பெறுதற்கு வருமெழுத்தைச் சொல்லாமையால், நாற்கணமுங் கொள்க.

**உ—ம்.:—**

இல்லைப்பொருள் இல்லைபொருள், (விகற்பித்தல்) இல்லாப்பொருள் (மிகல்) இல்பொருள், ஞானம், வன்மை, அணி (இயல்பு) என வரும்.

இல்லென்னும் பண்புச்சொல் ஐகார ஆகாரச்சாரியைகள் பெறும் என்றதும், இயல்பாம் என்றதும் "ளள வேற்றுமையிற் றடவுமல்வழி யவற்றோ டுறழ்வும்" என எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல்; ஐகாரச்சாரியை முன் வல்லினம் விகற்பமாம் என்றது "அல்வழி இ ஐம் முன்ன ராயின்" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதிகந்து படாமைக் காத்தல்; ஆகாரச் சாரியை முன் வல்லினம் மிகும் என்றது "இயல்பினும் விதியினும்" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதிகந்து படாமைக் காத்தல்.

புள்வள் என்பன "ளள வேற்றுமையிற் றடவும்" என்னும் விதியே யன்றி வேறு விதியும் பெறுமோ?

புள்ளும் வள்ளுந் தொழிற்பெயரு மானும்.
(புள்ளும் வள்ளும் தொழிற்பெயரும் மானும்.)

**இ—ள்.: புள்ளும் வள்ளும்** — இவ்விரு சொற்களும், **தொழிற்பெயரும் மானும்** — இருவழியும் யகரமல்லாத மெய்கள் வந்தாற் பொதுவிதியான் முடிதலே யன்றித் தொழிற்பெயர்போல உகரச் சாரியையும் பெற்றுப் புணரும், **எ—று.**

**உ—ம்.:—**

புள்ளுக்கடிது, வள்ளுக்கடிது, நன்று, வலிது எனவும், புள்ளுக்கடுமை, வள்ளுக்கடுமை, நன்மை, வன்மை எனவும் வரும்.

தொழிற்பெயரும் என்ற வும்மையாற் பெறப்படுவது யாது?

உம்மையால் "லள வேற்றுமையிற் றடவும்" என்னுஞ், சூத்திர விதிப்படி புள்கடிது, புட்கடிது; வள்கடிது, வட்கடிது எனவும், புட்கடுமை, வட்கடுமை எனவும், புண்ஞான்றது, வண்ஞான்றது எனவும், புண்ஞாற்சி வண்ஞாற்சி எனவும், வருமென்பது பெறப்படும். இது "லள வேற்றுமையிற் றடவும்" இது, "லள வேற்றுமையிற் றடவும்" என்னுஞ் சூத்திரத்தால் எய்தி யதன்மேற் சிறப்புவிதி.

## வகரவீறு

வகரவீற்றுச் சுட்டுச்சொல் எவ்வாறு புணரும்?

சுட்டு வகரமு வினமுற முறையே

ஆய்தமு மென்மையு மியல்பு மாகும்.

(சுட்டு வகரம் மூவினம் உற முறையே

ஆய்தமும் மென்மையும் இயல்பும் ஆகும்.)

**இ–ள்.:– சுட்டு வகரம்** – அவ் இவ் உவ் என்னும் அஃறிணைச் சுட்டுப் பெயர்களினீற்று வகரமெய், **மூவினம் உற**–வல்லினமும் மெல்லினமும் இடையினமும் வர, **முறையே ஆய்தமும் மென்மையும் இயல்பும் ஆகும்** – முறையாக ஆய்தமும் வரு மெல்லினமும் இயல்பும் ஆகும், எ–று.

**உ–ம்.:–**

(1) அவ் – கடிய அஃகடிய, இவ் – கடிய – இஃகடிய, உன்கடிய – உஃகடிய, என வல்லினம் வர ஆய்தமாகத் திரிந்தது.

(2) அவ் – ஞானம் – அஞ்ஞானம், இவ் – ஞானம் – இஞ்ஞானம், உவ் – ஞானம் – உஞ்ஞானம், என மெல்லினம் வர வரு மெல்லினமாகத் திரிந்தது.

(3) அவ் – யாவை – அவ்யாவை, இவ் – யாவை – இவ்யாவை, உவ் – யாவை – உவ்யாவை, என இடையினம் வர இயல்பாயிற்று.

வேற்றுமைப் புணர்ச்சிக்கு அற்றுச்சாரியை பெறும் என மேல்விதத்தலால், இவ்விதி அல்வழிக்கெனக் கொள்க.

தெவ்வென்னுஞ் சொல் எவ்வாறு புணரும்?

தெவ்வென் மொழியே தொழிற்பெய ஏற்றே

மவ்வரின் வஃகான் மவ்வு மாகும்.

(தெவ் என் மொழியே தொழிற்பெயர் அற்றே

மவ்வரின் வஃகான் மவ்வும் ஆகும்.)

**இ–ள்.: தெவ் என் மொழி** – தெவ் என்னும் பகையை யுணர்த்தும் பெயர், தொழிற்பெயர் அற்று – யகரமல்லாத மெய்களோடு புணருமிடத்துத் தொழிற்பெயர் போல உகரச்சாரியை பெற்று முடியும், **மவ்வரின் வஃகான் மவ்வும் ஆகும்** – மகர மெய் வரின் உகரச்சாரியை பெறுதலேயன்றி ஒரோவிடத்து வகரமெய் மகரமெய்யாகத் திரியவும் பெறும், எ–று.

**உ–ம்.:–**

(1) தெவ்வுக்கடிது, தெவ்வுமாண்டது, தெவ்வுவலிது எனவும், தெவ்வுக்கடுமை, தெவ்வுமாட்சி, தெவ்வுவலிமை எனவும், இருவழியும் உகரச்சாரியை பெற்றது.

(2) தெவ்வுமன்னர். தெம்மன்னர், எனவும். தெவ்வுமுனை, தெம்முனை எனவும், இருவழியும் மகரமெய் வர உகரச் சாரியை பெற்றும், மகர மெய்யாகத் திரிந்தும் வந்தது.

தெவ் என்பது யகரம் வரின் எவ்வாறு புணரும்?

"எண்மூ வெழுத்தீற்று" என்னுஞ் சூத்திரவிதிப்படி

தெவ் யாது என இயல்பாகவே புணரும்.

மவ்வும் என்னும் உம்மையாற் பெறப்படுவது யாது?

உம்மையான் உகரப்பேறே சிறந்ததென்பது.

## வருமொழித் தகர நகரத் திரிபு

வருமொழித் தகரநகரத் திரிபு கூறுஞ் சூத்திரம் யாது?

னலமுன் றனவும் ணளமுன் டணவும்

ஆகுந் தநக்க ளாயுங் காலே.

(ன ல முன் றனவும் ண ள முன் டணவும்

ஆகும் த நக்கள் ஆயுங்காலே)

**இ-ள்.:- ன ல முன் (தநக்கள்) றனவும்** - னகர லகரங்களின் முன் வருந் தகரம் றகரமாம்; அவற்றின்முன் வரும் நகரம் னகர மாம்; **ணள முன் தநக்கள் டணவும் ஆகும்** - ணகர ளகரங்களின் முன் வருந் தகரம் டகரமாம்; அவற்றின் முன் வரும் நகரம் ணகரமாம்; **ஆயுங்கால்** - ஆராயுமிடத்து, **எ-று.**

**உ-ம்.:-**

பொன் - தீது - பொன்றீது, கல் - தீது - கற்றீது, பொன் - நன்று - பொன்னன்று, கல் - நன்று - கன்னன்று எனவும், மண் - தீது - மண்டீது, முள் - தீது - முட்டீது, மண் - நன்று - மண்ணன்று, முள் - நன்று - முண்ணன்று எனவும், அல்வழியிலே திரிந்தன. பொற்றீமை, கற்றீமை; பொன்னன்மை, கன்னன்மை எனவும், மட்டீமை, முட்டீமை, மண்ணன்மை, முண்ணன்மை எனவும், வேற்றுமையிலே திரிந்தன.

ஆயுங்காலே என்றதனால், அல்வழி வேற்றுமைப் பொருணோக் கத்தாலன்றி மயக்கவிதியின்மையால் இப்படிப்புணரு முதலீறிரண்டனுள் ஒன்றேனும் இரண்டுமேனும் விகாரப்பட்டு மயங்குதற்கு உரியனவாகிப் புணருமென்பதும், மயக்கவிதி யுள்ளனவற்றிற்கு வரும் விகாரம் அல்வழி வேற்றுமைப் பொருணோக்கத்தால் வருமென்பதும், பெற்றாம்.

மேல்வரும் உருபு புணர்ச்சிக்கண் முடியு முடிபெல்லாம் ஈண்டுப் பொருட் புணர்ச்சிக்கண்ணும் வேறுபாடின்றி யொத்து முடியுமெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

உருபின் முடிபவை யொக்குமப் பொருளினும்

(உருபின் முடிபவை ஒக்கும் அப்பொருளினும்.)

**இ–ள்.:– உருபின் முடிபவை** – மேல் உருபுபுணர்ச்சிக்கண் முடியு முடிபுள், **அப்பொருளினும் ஒக்கும்** – அவ்வுருபின் பொருளாகிய வேற்றுமைப் புணர்ச்சிக்கண்ணும் ஒத்து முடியும், **எ–று.**

உருபுபுணர்ச்சியாவது வேற்றுமையுருபு வெளிப்பட்டு நிற்பப் புணரும் புணர்ச்சி; உறிக்கட்டயிர் என்பதுபோல. வேற்றுமைப் பொருட்புணர்ச்சியாவது வேற்றுமையுருபின்றி அவ்வுருபின் பொருள்படப் புணரும் புணர்ச்சி; உறித்தயிர் என்பதுபோல.

**உ–ம்.:** –

(1)எல்லாவற்றதும் என்பது உருபுபுணர்ச்சி; எல்லா வற்றுக்கோடும் என்பது பொருட்புணர்ச்சி. மேல் உருபு புணரியலில் "எல்லா மென்பதிழிதிணை யாயின் அற்றோடுருபின் மேலும் முறுமே" என்ற விதிப்படி எல்லாவற்றதும் என்ற உருபு புணர்ச்சிக்கு அஃறிணைக்கண் ஆற்றும் உருபின்மேல் உம் மும் பெற்றாற்போல எல்லாவற்றுக்கோடும் என்னும் பொருட் புணர்ச்சிக்கும் பெற்றன. எல்லாநமதும் என்பதும் உருபுபுணர்ச்சி; எல்லாநங்கையும் என்பது பொருட்புணர்ச்சி, "அன்றேனம்மிடை யடைந்தற்றாகும்" என்ற விதிப்படி எல்லா நமதும் என்னும் உருபுபுணர்ச்சிக்கு உயர்திணைக்கண் நம்மும் உருபின்மேல் உம்மும் பெற்றாற்போல, எல்லா நங்கையும் என்னும் பொருட்புணர்ச்சிக்கும் பெற்றன.

(2) எல்லார் தமதும், எல்லீர்நுமதும் என்பன உருபுபுணர்ச்சி; எல்லார்தங்கையும், எல்லீர்நுங்கையும் என்பன பொருட்புணர்ச்சி, மேல் உருபுபுணரியலில் "எல்லாரு மெல்லீரு மென்பவற்றும்மை – தள்ளி நிரலே தம் நும் சாரப் – புல்லு முருபின் பின்னரும்மே" என்ற விதிப்படி எல்லார்தமதும் எல்லீர்நுமதும் என்னும் உருபு புணர்ச்சிக்கு எல்லாரும் எல்லீரும் என்பவைகளின் இறுதியிலுள்ள முற்றும்மைகளைத் தள்ளி முறையே தம்முச்சாரியையும் நும்முச்சாரியையும் வந்து பொருந்த அவைகளினாலே தள்ளுண்ட முற்றுமைகள் உருபுகளின் பின்னே வந்து புணர்ந்தாற்போல, எல்லார்தங்கையும் எல்லீர்நுங்கையும் என்னும் பொருட்புணர்ச்சிக்கும் முடிந்தன.

(3) தனது, தமது, நமது என்பன உருபுபுணர்ச்சி; தன்கை தங்கை, நங்கை என்பன பொருட்புணர்ச்சி; மேல் உருபு புணரியலில் "தான்றா நாமுதல் குறுகும்" என்ற விதிப்படி உருபுபுணர்ச்சிக்குத் தான் தாம் நாம் என்பன முறையே தன் தம் நம் என விகாரப்பட்டாற்போலப், பொருட்புணர்ச்சிக்கும் விகாரப்பட்டன. எனது, எமது, நினது, நுமது என்பன உருபுபுணர்ச்சி; என்கை, எங்கை, நின்கை, நுங்கை என்பன பொருட்புணர்ச்சி; "யான், யாம் நீ நீர் என் எம் நின் நும் ஆம்" என்ற விதிப்படி உருபுபுணர்ச்சிக்கு யான் யாம் நீ நீர் என்பன முறையே என் எம் நின் நும் என விகாரப் பட்டாற்போலப், பொருட்புணர்ச்சிக்கும் விகாரப்பட்டன.

(4) ஆனது, மானது, கோனது என்பன உருபுபுணர்ச்சி; ஆன்கோடு, மான்கோடு, கோன்குணம் என்பன பொருட்புணர்ச்சி. மேல் உருபு புணரியலில் "ஆமா கோனவ் வணையவும் பெறுமே" என்ற விதிப்படி உருபுபுணர்ச்சிக்கு னகரச்சாரியை வந்தாற்போலப், பொருட்புணர்ச்சிக்கும் வந்தது.

(5) அவற்றது, இவற்றது, உவற்றது என்பன உருபுபுணர்ச்சி; அவற்றுக்கோடு, இவற்றுக்கோடு, உவற்றுக்கோடு என்பன பொருட்புணர்ச்சி,

மேல் உருபு புணரியலில் "வவ்விறு சுட்டிற் கற்றுறல் வழியே" என்ற விதிப்படி உருபு புணர்ச்சிக்கு அற்றுச்சாரியை வந்தாற்போலப், பொருட்புணர்ச்சிக்கும் வந்தது.

(6) அதனது, இதனது, உதனது என்பன உருபுணர்ச்சி, அதன்கோடு, இதன்கோடு, உதன்கோடு என்பன பொருட்புணர்ச்சி. மேல் உருபு புணரியலில் "சுட்டின்முன்னாய்த மன்வரிற் கெடுமே" என்ற விதிப்படி உருபுபுணர்ச்சிக்கு அன்சாரியைப்பேறும் ஆய்தக்கேடும் வந்தாற்போலப், பொருட்புணர்ச்சிக்கும் வந்தன.

இவைபோல்வன பிறவும் இப்படியே முடித்துக்கொள்க.

## புணரியலுக்குப் புறனடை

உயிரீற்றுப்புணர்ச்சி மெய்யீற்றுப் புணர்ச்சிகளிற் கூறப்பட்ட விதிபெறாத சொற்களுக்கும் விதிகூறப்படாத சொற்களுக்கும் விதி கூறுஞ் சூத்திரம் யாது?

இடையுரி வடசொலி னியம்பிய கொளாதவும்
போலியு மரூஉவும் பொருந்திய வாற்றிற்
கியையப் புணர்த்தல் யாவர்க்கு நெறியே.
(இடைஉரி வடசொலின் இயம்பிய கொளாதவும்
போலியும் மரூஉவும் பொருந்திய ஆற்றிற்கு
இயையப் புணர்த்தல் யாவர்க்கும் நெறியே.)

**இ–ள்.: இடைஉரி வடசொலின் இயம்பிய கொளாதவும்** – இடைச்சொற்களுள்ளும் உரிச்சொற்களுள்ளும் வடசொற்களுள்ளும் உயிரீறும் ஒற்றீறுமான புணரியலிலே தோன்றல் திரிதல் கெடுதல் இயல்பாதல் எனச்சொல்லிய புணர்ச்சியிலக் கணங்கள் பொருந்தாது வேறுபட்டு வருவனவும், **போலியும்** – இலக்கணப் போலிமொழிகளும், **மரூஉவும்** – மரூஉமொழிகளும், **பொருந்திய ஆற்றிற்கு இயையப் புணர்த்தல்** – இருவகை வழக்கிலும் நடக்குமுறைமைக்குப் பொருந்துமாறு புணர்க்கை, **யாவர்க்கும் நெறி** – அறிவுடையோரெல்லார்க்கும் முறை, **எ–று.**

**உ–ம்.:–**

(1) "மடவை மன்ற தடவு நிலைக்கொன்றை" என்பதில் மன்ற தடவு என அகரவீற்றிடைச்சொன்முன் வல்லெழுத்து மிகாதியல்பாயிற்று. ஆன்கன்று, மான்கன்று, வண்டின்கால். தேரின்செலவு, யாழின்புறம் என வேற்றுமைப் புணர்ச்சிக்கண் னகரவீற்றுச் சாரியை யிடைச் சொற்கள் திரியாதியல்பாயின.

(2) மழகளிறு, உறுபுனல், எனவும், கமஞ்சூல், தடஞ்செவி, தடந்தோள், கயந்தலை எனவும், உயிரீற்றுச்சொன்முன் வல்லெழுத்து மிகாதியல்பாயும் மெல்லெழுத்து மிகுந்தும் வந்தன.

(3) அளிகுலம், தனதடம், ஆதிபகவன் என உயிரீற்று வடசொன்முன் வல்லெழுத்து மிகாதியல்பாயின.

(4) இல் – முன் – முன்றில், பொது – இல் – பொதியில், என வரும் இலக்கணப்போலி மொழிகளும், அருமருந்தன்னபிள்ளை – அருமந்தபிள்ளை,

குணக்குள்ளது – குணாது தெற்குள்ளது – தெனாது, வடக்குள்ளது – வடாது, சோழநாடு – சோணாடு, பாண்டியனாடு – பாண்டிநாடு, மலையமானாடு – மலாடு, தொண்டைமானாடு – தொண்டை நாடு, தஞ்சாவூர் – தஞ்சை, ஆற்றூர் – ஆறை, ஆதன் றந்தை – ஆந்தை, பூதன்றந்தை – பூந்தை, வடுகன்றந்தை – வடுகந்தை, என வரு மரூஉ மொழிகளும், நிலை மொழி வருமொழிகளுள் ஏற்குஞ் செய்கையறிந்து முடித்துக்கொள்க. மற்றவைகளும் இப்படியே.

வடமொழித் தொகைப்பதங்கள், தமிழில் ஆங்காங்கு வருமிடத்துப் பெரும்பாலும் அவ்வடநூற் புணர்ச்சியே பெறும். புணர்ச்சியெனினுஞ் சந்தியெனினும் ஒக்கும். அச்சந்தி, தீர்க்க சக்தி, குணசந்தி, விருத்திசக்தி என மூவகைப்படும்.

**1. தீர்க்கசந்தி**

தீர்க்கசந்தியாவது யாது?

அ ஆ இ ஈ உ ஊ என்னு மூன்றினங்களும் தம்முற்றாம் புணரின் ஈறுமுதலுங் கெடத் தத்தம் நெட்டெழுத்துத் தோன்றப்பெறும் புணர்ச்சி தீர்க்கசந்தியாம்.

(1) அ ஆவின் முன் அ ஆ வரின், ஈறுமுதலுங் கெட, ஆவொன்று தோன்றும்:–

**உ–ம்.:–**

பத – அம்புயம் – பதாம்புயம்

சிவ – ஆலயம் – சிவாலயம்

நேசா – அதிபதி – நேசாதிபதி

சதா – ஆனந்தம் – சதானந்தம்

(2) இ ஈ யின் முன் இ ஈ வரின், ஈறுமுதலுங் கெட, ஈயொன்று தோன்றும்:–

(உ–ம்.) கிரி – இந்திரன் – கிரீந்திரன்

கிரி – ஈசன் – கிரீசன்

மகீ – இந்திரன் – மகீந்திரன்

நதி – ஈசன் – நதீசன்

(3) உ ஊ வின் முன் உ ஊ வரின், ஈறுமுதலுங் கெட, ஊ வொன்று தோன்றும்–

**உ–ம்.:–**

குரு – உபதேசம் – குரூபதேசம்

மேரு – ஊர்த்துவம் – மேரூர்த்துவம்

வதூ – உத்துவாகம் – வதூத்துவாகம்

வதூ – ஊரு – வதூரு

**2. குணசந்தி**

குணசந்தியாவது யாது?

அஆ முன் இஈயும் உஊவும் வரின் ஈறுமுதலுங் கெடமுறையே ஏயும் ஓவும் தோன்றப் புணரும் புணர்ச்சி குணசந்தியாம்.

(1) அ ஆவின் முன் இ ஈ வரின், ஈறுமுதலுங் கெட, ஏ யொன்று தோன்றும்–

(உ–ம்.) நர – இந்திரன் – நரேந்திரன்

சுர – ஈசன் – சுரேசன்

தரா – இந்திரன் – தரேந்திரன்

மகா – ஈசன் – மகேசன்

(2) அ ஆவின் முன் உ ஊ வரின், ஈறுமுதலுங் கெட, ஓவொன்று தோன்றும்:–

(உ–ம்.) பாத – உதகம் – பாதோதகம்

ஞான – ஊர்ச்சிதன் – ஞானோர்ச்சிதன்

கங்கா – உற்பத்தி – கங்கோற்பத்தி

தயா – ஊர்ச்சிதன் – தயோர்ச்சிதன்

### 3. விருத்திசந்தி

விருத்திசந்தியாவது யாது?

அஆ முன் ஏஐயும் ஓ ஔவும் வரின் ஈறுமுதலுங்கெட முறையே ஐயும் ஔவும் தோன்றப்புணரும் புணர்ச்சி விருத்திசந்தியாம்.

(1) அ ஆவின் முன் ஏ ஐ வரின், ஈறுமுதலுங்கெட, ஐயொன்று தோன்றும்–

**உ–ம்.:** லோக – ஏகநாயகன் – லோகைகநாயகன்

சிவ – ஐக்கியம் – சிவைக்கியம்

தரா – ஏகவீரன் – தரைகவீரன்

மகா – ஐசுவரியம் – மகைசுவரியம்

(2) அ ஆவின் முன் ஓ ஔ வரின், ஈறுமுதலுங்கெட, ஔவொன்று தோன்றும்:–

**உ–ம்.:** கலச – ஓதனம் – கலசௌதனம்

திவ்விய – ஔடதம் – திவ்வியௌடதம்

கங்கா – ஓகம் – கங்கௌகம்

மகா – ஔதாரியம் – மகௌதாரியம்

## உருபு புணர்ச்சி

### உருபுகள்

வேற்றுமையுருபுகள் சாருமிடவகையால் இத்தனை யாகுமெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

ஒருவ னொருத்தி பலரொன்று பலவென

வருபெய ரைந்தொடு பெயர்முத லிருநான்

குருபு முறழ்தர நாற்பதா முருபே.

(ஒருவன் ஒருத்திபலர் ஒன்று பல என

வரு பெயர் ஐந்தொடு பெயர் முதல் இருநான்கு

உருபும் உறழ்தர நாற்பது ஆம் உருபு.)

**இ–ள்.: ஒருவன் ஒருத்தி பலர் ஒன்று பல என வருபெயர் ஐந்தொடு** – ஒருவனும் ஒருத்தியும் பலரும் ஒன்றும் பலவும் என்று கருத வரும் ஐந்து பெயரோடும், **பெயர் முதல் இருநான்கு உருபும் உறழ்தர** – எழுவாய் வேற்றுமையான பெயர் முதல் விளியீறாக நின்ற எட்டுருபுகளையும் பெருக்க, **உருபு நாற்பது ஆம்** – வேற்றுமையுருபுகள் நாற்பதாகும், **எ–று.**

பெயர்முத லிருநான்கு என்பதில் பெயரென்பது திரிபில்லாது தன்னியல்பாய் நிற்கு மெழுவாய் வேற்றுமை.

**வ–று.:–**

1. நம்பி, சாத்தி, மக்கள், மரம், மரங்கள் என்னும் இவற்றுள், நம்பி, நம்பியை, நம்பியால், நம்பிக்கு, நம்பியின், நம்பியது, நம்பிகண், நம்பீ என ஒருவனென்னும் வாய்பாட்டுயர் திணை ஆண்பாற் பெயரோடு எட்டுருபுகளும் வந்தன. மற்றை நான்கு பெயர்களோடும் இப்படியே யொட்டுக.

எழுவாயுருபொன் றில்லாதிருக்கவும் ஐ முதலியன போல எழுவாயுருபு மொன்றாக எண்ணப்பட்டதென்னை?

செயப்படுபொருள் முதலியவற்றின்வேறாய்ப் பொருண் மாத்திர முணர்த்தலின் திரிபின்மையாகிய எழுவாய்நிலையு மொரு வேற்றுமை யுருபாயிற் றென்க.

பால்வகையாற் பெயர் எத்தனை யாகும்?

"ஒருவன்னொருத்தி பலரொன்று பலவென
வருபெயரைந்து"

வேற்றுமையுருபு எட்டு எனக் கூறின் அமையுமாகவும் நாற்பதெனக் கூறியதென்னை?

எல்லா வேற்றுமையருபுமேலாத பெயருஞ் சிலவுளவாயி னும் ஐம்பாற்பெயரும் எட்டு வேற்றுமையுருபுகளை யுமேற்குமெ மன்பது பொதுவகையால் வலியுறுத்தற் கென்க.

உருபின் பயனும் அது வருமிடமுங் கூறுஞ் சூத்திரம் யாது?

பெயர்வழித் தம்பொரு டரவரு முருபே.

(பெயர்வழித் தம்பொருள் தர வரும் உருபே.)

**இ–ள்.:– உருபு** – வேற்றுமை யுருபுகள், **தம்பொருள் தர**–தம்பொருளைக் கொடுக்க, **பெயர்வழி வரும்** – பெயர்க்குப்பின் வரும், **எ–று.**

**வ–று.:–**

நம்பிபெற்றான், நம்பியைப்பெற்றான், நம்பியாற்பெற்றான் என வரும். மற்றவையும் இப்படியே

.போன உயிரீற்றுப்புணர்ச்சி மெய்யீற்றுப்புணர்ச்சி யிரண்டினுங் கூறிய வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கு விதித்த முடிபுகள் உருபுபுணர்ச்சிக்கும் பெரும்பாலும் பொருந்துமெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

ஒற்றுயிர் முதலீற் றுருபுகள் புணர்ச்சியின்

ஒக்குமன் னப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே.

(ஒற்று உயிர் முதல் ஈற்று உருபுகள் புணர்ச்சியின் ஒக்கும் மன் அப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே.)

**இ—ள்.:— ஒற்று உயிர் முதல் ஈற்று உருபுகள்** – நிலைமொழியோடும் வருமொழியோடும் புணரும் மெய்யுயிர்களை முதலும் ஈறுமாகவுடைய ஐமுதலிய ஆறுருபுகளும், **புணர்ச்சியின் மன்ஒக்கும்** – இடைச்சொல்லாயினும் இயல்பொடு விகாரத்தியையும் புணர்ச்சிவகையாற் பெரும்பாலும் ஒக்கும், **வேற்றுமைப்புணர்ப்பு** – போன விரண்டியலுள்ளும் வேற்றுமைப் புணர்ச்சிக்கண், **அப்பெயர்** – இயல்பொடு விகாரத்தியைந்த மெய்யுயிர் முதலீற்றுப் பெயர்களை, **எ—று.**

**உ—ம்.:—**

நம்பிகண்வாழ்வு; இங்கே "பொதுப்பெய ருயர்திணைப் பெயர்க ளீற்றுமெய் வலிவரி னியல்பாம் "ஆவி யரமுன் வன்மை மிகா" என்றும், "ண ன வல்லினம் வரட்டறவும் பிறவரி னியல்புமாகும் வேற்றுமைக்கு" என்றுஞ் சொல்லியபடியே, கண்ணுருபின் முதலுமீறும் இயல்பாயின.

உறிக்கட்டயிர்; இங்கே "இயல்பினும் விதினினு என்ற வுயிர் முன் க ச த ப மிகும்" என்றும். "ண ன வல்லினம் வரட்டறவும்" என்றுஞ் சொல்லியபடியே, கண்ணுருபின் முதலுமீறும் விகாரமாயின.

பழிக்கஞ்சி; இங்கே "இயல்பினும் விதியினு நின்ற வுயிர்முன் க ச த ப மிகும்" என்றும், "முற்றுமற் றொரோவழி" என்றுஞ் சொல்லியபடியே, குவ் வுருபின் முதலு மீறும் விகாரமாயின.

மன் என்றமையால், சிறுபான்மை ஒவ்வாவென்பதாம்.

நம்பிக்குப்பிள்ளை; இங்கே "பொதுப்பெய ருயர்திணைப் பெயர்களீற்றுமெய் வலிவரி னியல்பா மாவி ய ர முன் வன்மை மிகா" என்ற விதி யொவ்வாமற் குவ் வுருபின்முதல் வல் லொற்று மிக்கது. மற்றவையும் இப்படியே வருதலை ஆராய்ந்தறிக.

## சாரியை

சாரியை வருமாறு கூறுஞ் சூத்திரம் யாது?

பதமுன் விகுதியும் பதமு முருபும்

புணர்வழி யொன்றும் பலவுஞ் சாரியை

வருதலுந் தவிர்தலும் விகற்பமு மாகும்.

(பதமுன் விகுதியும் பதமும் உருபும்

புணர்வழி ஒன்றும் பலவும் சாரியை

வருதலும் தவிர்தலும் விகற்பமும் ஆகும்.)

**இ–ள்.: பதமுன் விகுதியும் பதமும் உருபும் புணர்வழி** – பதத்தின் முன் விகுதியாவது பதமாவது உருபாவது புணருமிடத்து, **சாரியை ஒன்றும் பலவும்** – ஒரு சாரியையாயினும் பல சாரியையாயினும், **வருதலும் தவிர்தலும் விகற்பமும் ஆகும்** – வருதலும் வராதொழிதலும் இவ்விரண்டுமாகிய விகற்பமும் ஆகும். **எ–று.**

உ–ம்.:–

(1) நடந்தனன் எனவும், நடந்தான் எனவும், நடந்தன, நடந்த எனவும், விகுதிப்புணர்ச்சியுட் சாரியைவேண்டியும் வேண்டாதும் விகற்பித்தும் வந்தன.

(2) புளியங்காய் எனவும், புளிக்கறி எனவும், நெல்லின்குப்பை, நெற்குப்பை எனவும், பதப்புணர்ச்சியுட் சாரியை அவ்வாறாயின.

(3) அவற்றை எனவும். தன்னை எனவும், ஆனை, ஆவை. எனவும் உருபுபுணர்ச்சியுட் சாரியை அவ்வாறாயின.

(4) ஆவினுக்கு, மரத்தினுக்கு இவைகளிலே சாரியை பலவந்தன.

பதமுன் பதமுமெனக் கூறாது பதமுன் விகுதியுமென விகுதியை முதலெடுத்துக் கூறிய தென்ன?

பதப்புணர்ச்சி உருபுபுணர்ச்சி இரண்டுங் கூறி விகுதிப் புணர்ச்சிக்கு விதிகூறாமையின் அதுவும் பதப்புணர்க்சிக்குக் கூறிய விதியே பெறுமென்பது காட்டுதற்கென்க.

பொதுச்சாரியைகள் எவை?

அன் ஆன் இன் அல் அற்றிற் றத்தம்
தம் நம் நும் ஏ அஉ ஐ குன
இன்ன பிறவும் பொதுச்சாரியையே.

(அன் ஆன் இன் அல் அற்று இற்று அத்து அம்
தம் நம் நும் ஏ அஉ ஐ குன
இன்ன பிறவும் பொதுச்சாரியையே.)

**இ–ள்.:– அன்....ன** – அன் முதல் னகரமெய்யீறாகச் சொல்லப்பட்ட பதினேழும், **இன்னபிறவும்** – இவை போல்வன பிறவும், **பொதுச்சாரியை** – விகுதிபத முருபென்னு மூன்று புணர்ச்சிகளிலுந் தனிமொழிகளிலும் வருதலினாலே பொதுச் சாரியையாகும், எ–று.

**உ–ம்.:–**

அன் – ஒன்றன் கூட்டம், ஆன் – ஒரு பாற்கு, இன் – வண்டின்கால், அல் – தொடையல், அற்று – பலவற்றை, இற்று, பதிற்றுப்பத்து, அத்து – மரத்திலை, அம் – மன்றம், தம் – எல்லார்தம்மையும், நம் – எல்லாநம்மையும், நும் – எல்லீர் நும்மையும், ஏ– கலனே தூணி, அ – நடந்தது, உ–சாத்தனுக்கு, ஐ – ஒற்றை, கு – உய்குவை, ன் – ஆன் என முறையே காண்க.

இன்னபிறவும் என்றதனால், தன் – அவன்றனை, தான் – அவன்றான், தாம் – அவர்தாம், ஆம் – புற்றாஞ்சோறு, ஆ–இல்லாப்பொருள், து– செய்துகொண்டான் என்பனவும், இன்னும் வருவன உளவாயின் அவையுங் கொள்க.

ஆனுருபிற்கும் ஆன்சாரியைக்கும் இன்னுருபிற்கும் இன்சாரியைக்கும் வேற்றுமை யாது?

சாரியையாபின் உருபேற்றலும் உருபாயின் அஃதேலாமையும் தம்முள் வேற்றுமையாம்.

## உருபு புணர்ச்சிக்குச் சிறப்புவிதி

எல்லாமென்பது எச்சாரியைகளைப் பெறும்?

எல்லா மென்ப திழிதிணை யாயின்
அற்றோ டுருபின் மேலும் முறுமே
அன்றே னம்மிடை அடைந்தற்றாகும்.

(எல்லாம் என்பது இழிதிணை ஆயின்
அற்றோடு உருபின் மேல் உம் உறுமே
அன்றேல் நம்இடை அடைந்து அற்று ஆகும்)

**இ—ள்.: எல்லாம் என்பது** – எல்லாமென்னும் பொதுப்பெயர், **இழிதிணை ஆயின் (இடை) அற்று உருபின்மேல் உம் உறும்** – அஃறிணையில் வரும்போது அதனோடு ஆறுருபுகளும் புணரின் இடையிலே அற்றுச்சாரியையும் உருபின்மேல் முற்றும்மையும் பெறும், **அன்றேல் இடை நம் அடைந்து அற்று ஆகும்** – உயர்திணையில் வரும்போது இடையிலே நம்முச்சாரியை யடைந்து அதுபோல் உருபின்மேல் முற்றும்மையும் பெறும், **எ—று.**

எல்லாம் என்பது உயர்திணையாயின் எல்லேம் என்பதுபோல மகரவீற்றுத் தன்மைப்பெயர்.

எல்லாம் என்பது அஃறிணையாயின் ஆறுருபுகளையும் எவ்வாறேற்கும்?

"எல்லாம் என்ப திழிதிணை யாயின் அற்றோ டுருபின் மேல் உம் உறுமே."

**உ—ம்.:—**

எல்லாவற்றையும்.

எல்லா மென்பது உயர்திணையாயின் ஆறுருபுகளையு மெவ்வாறேற்கும்.

"அன்றேல் நம் இடையடைந்து அற்றாகும்"

(உயர்திணை யாயின் நம் இடையடைந்து உருபின் மேல் உம் உறும்.)

**உ—ம்.:—**

எல்லாநம்மையும் எனவரும், மற்றையுருபுகளோடும் இப்படியே யொட்டுக. எல்லா நம்மையும் உயர்திணைத் தன்மைப்பன்மை.

இனி, இரட்டுற மொழிதலால், இழிதிணையாய் இன் அற்றோடு எனக்கொண்டு, எல்லாவற்றினையும் என வருதலுங் கொள்க.

எல்லாரு மெல்லீருமென்னுஞ் சொற்கள் ஆறுருபுகளையு மேற்குமாறு கூறுஞ் சூத்திரம் யாது?

எல்லாரு மெல்லீரு மென்பவற் றும்மை
தள்ளி நிரலே தம் நும் சாரப்
புல்லு முருபின் பின்ன ரும்மே.

(எல்லாரும் எல்லீரும் என்பவற்று உம்மை
தள்ளி நிரலே தம் நும் சாரப்
புல்லும் உருபின் பின்னர் உம்மே.)

**இ–ள்.:– எவ்வாரும் எல்லீரும் என்பவற்று உம்மை தள்ளி** – ஆறுருபும் புணருமிடத்து எல்லாரும் எல்லீரும் என்னும் இரு பெயர்களினுடைய இறுதியிலுள்ள முற்றும்மைகளைத் தள்ளி, **நிரல் தம் நும் சார** – முறையே தம்முச்சாரியையும் நம்முச்சாரியையும் அவையிருந்த இடங்களிலே பொருந்த, **உம் உருபின் பின்னர்ப் புல்லும்** – அவற்றினாலே தள்ளுண்ட முற்றும்மைகள் உருபுகளின் பின்னே வந்து பொருந்தும், **எ–று.**

எல்லாரும் எல்லீரு மென்னும் பெயர்கள் ஆறுருபுகளையும் ஏற்கு மிடத்துப் படுஞ்செய்கைகள் யாவை?

இறுதியும்மைகளைத் தள்ளலும் தம் நும் சாரியைகளை முறையே பொருந்தலும் அவற்றின் பின்னே உருபுகளைப் பெறுதலும் அவற்றின்பின்னர் உம்முப் பெறுதலுமாகிய நான்கு செய்கைகளுமாம்.

உ–ம்.:–

எல்லார்தம்மையும், எல்லாரையும் எனவும், எல்லீர்நும்மையும், எல்லீரையும் எனவும், விகற்பித்து வந்தன. மற்றையுருபுகளோடும் இப்படியேயொட்டுக. இங்கே கூறிய தம் நும் என்பன சாரியைகள், வருஞ் சூத்திரத்தில் வருவன பொதுப் பெயர்கள்.

நந்தம்மை, நுந்தம்மை எனப் படர்க்கைக்குரிய தம்முச்சாரியை தன்மை முன்னிலைகளில் வருதல் "ஓரிடம் பிறவிடந் தழுவலு முளவே" என்னும் வழுவமைதி.

உருபுகளாறும் புணருமிடத்து நெடுமுதல் குறுகும் பெயர்களும் வேறாகத் திரியும் பெயர்களு மிவையெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

தான்றா நா முதல் குறுகும் யான் யாம்
நீ நீர் என் எம் நின் நு மாம்பிற
குவ்வி னவ்வரு நான்கா றிட்டல.

(தான் தாம் நாம் முதல் குறுகும் யான் யாம்
நீநீர் என் எம் நின் நும் ஆம் பிற
குவ்வின் அவ்வரும் நான்கு ஆறு இரட்டல்

**இ–ள்.: தான் தாம் நாம் முதல் குறுகும்** – தான் தாம் நாம் என்னுமூன்று பெயர்களும் உருபுகள் புணருமிடத்து நெடுமுதல் குறுகி முறையே தன் தம் நம் என வரும், **யான் யாம் நீ நீர் என் எம் நின் நும் ஆம்** – யான் யாம் நீ நீர் என்னு நான்கு பெயர்களும் உருபுகள் புணருமிடத்து முறையே என் எம் நின் நும் எனத்

திரியும். **குவ்வின் அவ்வரும்** – இவ்வேழு பெயரோடும் குவ்வுருபு புணருமிடத்து நடுவே அகரச்சாரியை வரும், **நான்கு ஆறு இரட்டல** – இவ்வேழு விகாரமொழிகளோடு நான்கனுருபும் ஆறனுருபும் புணருமிடத்துத் தனிக்குறின் முன்னொற்றுக்கள் இரட்டாவாம், எ–று.

முதல் குறுகும் பெயர்கள் யாவை?

"தான் தாம் தாம் முதல் குறுகும்"

வேறாகத் திரியும் பெயர்கள் யாவை?

"யான், யாம், நீ, நீர், என், எம், நின், நும், ஆம்"

இவ்வேழும் குவ்வுருபேற்குமிடத்து இடையே வரும் சாரியை யாது?

'குவ்வின் அவ்வரும்'

ஆறனுருபும் அகரச் சாரியையோடு கூடிய நான்கனுருபும் வரின் இவ்வேழும் எவ்வாறு புணரும்?

உ–ம்.:–

(1) தான் – ஐ – தன்னை

தாம் – ஐ – தம்மை

நாம் – ஐ – நம்மை எனவும்,

யான் – ன் – என்னை

யாம் – ஐ – எம்மை

நீ – ஐ – நின்னை

நீர் – ஐ – நும்மை எனவும் வரும். ஒழிந்த உருபுகளோடும் இப்படியே ஒட்டுக.

(2) தான் – அ – கு – தனக்கு

தாம் – அ – கு – தமக்கு எனக் குவ்வுருபு புணருமிடத்து அகரச்சாரியை பெற்றன.

(3) தன் – அ – கு – தனக்கு எனவும்,தனது,தனாது,தன எனவும் அகரச் சாரியையும் ஆறாம் வேற்றுமை உருபுகளும் வந்த இடத்தும் தனிக் குற்றொற்றிரட்டாவாயின.

பிற என்ற மிகையால் நீ,நீர் என்பன முறையே உன் உம் எனவும் திரிந்து வருதல் கொள்க.

நகரச் சாரியை பெற்று உருபேற்பன இவையெனக் கூறும் சூத்திரம் யாது?

ஆமா கோனவ் வணையவும் பெறுமே

(ஆ மா கோன் அவ் அணையவும் பெறுமே)

இ–ள்.:– **ஆ மா கோ** – ஆவென்னும் பசுவின் பெயரும் மாவென்னும் விலங்கின் பொதுப்பெயரும் கோ என்னும் இறைவனை உணர்த்தி நிற்கும் பெயரும் **னவ் வணையவும் பெறும்** – உருபுகள் புணருமிடத்து னகரச் சாரியை பொருந்தவும் பெறும், எ –று.

உ–ம்.:–

ஆனை,ஆவை,மானை,மாவை,கோனை,மோவை என விகற்பித்து வருதல் காண்க. மற்றை யுருபுகளோடும் இப்படியே ஒட்டுக.

அனையவும் பெறுமென்றதனாற் பெறக்கிடப்பது யாது?

அவை தனுமொழியாக நிற்குமிடத்தும் ஆன், கோன் என நிற்றலும் உண்டென்பது பெறப்படும்.

இன்னும் உம்மையால், குவ்வுருபு புணரும்போது, ஆனுக்கு, மானுக்கு, கோனுக்கு என உகரச் சாரியையும் உடன் பெறுதலும், ஆவுக்கு, மாவக்கு, கோவுக்கு என உகரச் சாரியை யொன்றே பெறுதலும், ஆவினுக்கு, மாவினுக்கு, கோவினுக்கு என இன் சாரியையும் உகரச் சாரியையும் உடன்பெறுதலும் ஆவினை, மாவினை, கோவினை என இன்னுருபொழிந்த உருபுகள் புணரும்போது இன் சாரியை பெறுதலுங் கொள்க.

ஒருபது இருபது முதலிய குற்றுகரவீற்றெண்ணுப் பெயர்கள் ஆன் சாரியை வரின் எவ்வாறாம்?

ஒன்று முதலெட் டீறா மெண்ணூர்
பத்தின்முன் ஆன்வரிற் பவ்வொற் றொழியமேல்
எல்லா மோடு மொன்பது மிற்றே.

(ஒன்று முதல் எட்டு ஈறு ஆம் எண் ஊர்
பத்தின் முன் ஆண் வரின் ப ஒற்று ஒழிய மேல் எல்லாம் ஓடும்
ஒன்பதும் இற்றே.)

**இ–ள்.:– ஒன்று முதல் எட்டு ஈறு ஆம் எண் ஊர் பத்தின் முன் –** ஒன்று முதல் எட்டீறாகிய எண்களோடு புணர்ந்த பத்தென்னும் எண் முன் உருபுகள் புணருமிடத்து, **ஆன்வரின் –** ஆன்சாரியை வருமாயின் ,**பவ்வொற்று ஒழியமேல் எல்லாம் ஓடும்–**அப்பத்தென்னுமெண்ணினது பகரமெய்யொன்றுமே நிற்க அதன்மேலே நின்ற எல்லாவெழுத்துங் கெடும். **ஒன்பது இற்று –** ஒன்பதென்னு மெண்முன்னும் உருபுகள் புணருமிடத்து ஆன் சாரியை வரின் அதன் பகர மெய் நிற்க மேலே நின்ற எல்லாவெழுத்துங் கெடும், **எ–று.**

ஆன் வரின் என்றமையால் ஆன் வராவிடத்து ஒருபதனை,ஒருபஃதனை, ஒருபதினை, ஒருபஃதினை, ஒருபஃதை, ஒருபதை என அன் பெறுதலும் இன் பெறுதலும் பெறாமையுங் கொள்க.

உருபுகொள்ளல் எனாமையின் ஒருபான் எழுபான் ஒன்பான் என உருபேலாது தனித்து நிற்றலும் கொள்க.

உ–ம்.:–

ஒரு – பத்து – ஆன் – ஐ – ஒரு – ப் – ஆன் – ஐ – ஒருபானை, ஒருபானோடு, எழுபானை எனவும். ஒன்பானை, ஒன்பானால் எனவும் வரும்.

வகர வீற்றுச் சுட்டுப்பெயர்கள் உருபுகள் புணருமிடத்து எவ்வாறாம்?

வவ்விறு சுட்டிற் கற்றுறல் வழியே.

(வவ்விறு சுட்டிற்கு அற்று உறல் வழியே.)

**இ-ள்.: வவ்விறு சுட்டிற்கு** - வகரமெய்யீற்று மூன்று சுட்டுப் பெயர்களுக்கும், **அற்று உறல் வழி** - உருபுகள் புணருமிடத்து அற்றுச்சாரியை பொருந்துதல் முறையாம், **எ-று.**

**உ-ம்.:-**

அவ்-அற்று-ஐ-அவற்றை, இவற்றை, உவற்றை என அற்றுச் சாரியை வேண்டியே வருதல் காண்க.

வழியே என்ற மிகையால், அவற்றினை, இவற்றினை, உவற்றினை என அற்றோடு இன் சாரியை வருதலும், தனிக்குறின் முன்னொற்று உயிர்வரி னிரட்டாமையுங் கொள்க. ஒழிந்த உருபுகளோடும் இப்படியே யொட்டுக.

(அவ்-ஐ-அவை, கொல்-ஐ-கொலை. கல்-ஐ-கலை, என வரும்; விகுதிப்புணர்ச்சிக்கண் தனிக்குறின் முன்னொற்றிரட் டாமைக்கும் வழியே யென்ற மிகையே விதியாம்.)

அஃது முதலிய சுட்டுப்பெயர்கள் அன் சாரியைவரின் எவ்வாறாம்?

சுட்டின்முன் னாய்த மன்வரிற் கெடுமே.

(சுட்டின் முன் ஆய்தம் அன் வரின் கெடுமே).

**இ-ள்.: சுட்டின் முன் ஆய்தம்** - அஃது இஃது உஃது என்னும் மூன்று சுட்டுப் பெயர்களில் அம்மூன்று சுட்டெழுத்துக்களின் முன்னின்ற ஆய்தம், **அன்வரின் கெடும்** - உருபுகள் புணருமிடத்து அன்சாரியை வரிற் கெடும், **எ-று.**

**உ-ம்.:-**

அஃது-ஐ-அதனை, அஃதை, இஃது-ஐ-இதனை, இஃதை; உஃது-ஐ-உதனை, உஃதை, எனச் சாரியை விகற்பித்து வருதலும் வந்தவழி ஆய்தங் கெடுதலுங் காண்க.

அன்சாரியை வருதுலை நோக்கி ஆய்தங் கெட்டவழி, அது, இது, உது என ஆய்தமில்லாச் சுட்டுப்பெயர் களாய்ப் பின்பு அன்சாரியை பெறுதலால், ஆய்த மில்லாச் சுட்டுப் பெயர்களுக்கும் இதுவே விதியெனக் கொள்க.

அன் வருதலைப் பராமுகமாகக் கூறலால், குவ்வுருபு புணரும் போது அதற்கு என அன்சாரியை தனித்து வருதலே யன்றி அதனுக்கு என உகரச்சாரியையுடன் வருதலுங் கொள்க.

அத்துச்சாரியை முதலெழுத்துக் கெடப்பெறுவது எவ்விடத்து?

அத்தி னகர மகரமுனை யில்லை.

(அத்தின் அகரம் அகரமுனை இல்லை.)

**இ-ள்.: அத்தின் அகரம்** - அத்துச்சாரியையினது அகரவுயிர், **அகர முனை இல்லை** - இயல்பினும் விதியினு நின்ற அகரவுயிரீற்றின் முன் வரின் வகரவுடம்படுமெய் பெறாது கெடும், **எ-று.**

**உ-ம்.:-**

மக - அத்து - கை - மகத்துக்கை, மர-அத்து குறை-மரத்துக்குறை என இரண்டு அகரவீற்றின் முன்னுங் கெட்டது.

## புறனடை

இன்னது இன்னசாரியையைப் பெறுமென்று முற்றவெடுத்துக் கூறலாகாமையின் சாரியையை இவ்வாறு நிச்சயித்துணர்கவெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

இதற்கிது சாரியை யெனினள வின்மையின்
விகுதியும் பதமு முருபும் பகுத்திடை
நின்ற வெழுத்தும் பதமும் இயற்கையும்
ஒன்ற வுணர்த்த லுரவோர் நெறியே.

(இதற்கு இது சாரியை எனின் அளவு இன்மையின்
விகுதியும் பதமும் உருபும் பகுத்து இடை
நின்ற எழுத்தும் பதமும் இயற்கையும்
ஒன்ற உணர்த்தல் உரவோர் நெறியே.)

**இ—ள்.:— இதற்கு இது சாரியை எனின் அளவு இன்மையின்** – விகுதிமுதலிய புணர்ச்சிக்கண் இதற்கு இது சாரியை யென்று அளவுசெய்து விதித்தனவற்றுள்ளும் ஒழிந்தனவற்றுள்ளுந்தனித்தனி சொல்லப்புகின் அளவுபடாமையால், **விகுதியும் பதமும் உருபும் பகுத்து** – விகுதிப்புணர்ச்சியையும் பதப்புணர்ச்சியையும் உருபுபுணர்ச்சியையுங் கண்ட விடத்துப் பகுத்து, **இடைநின்ற எழுத்தும் பதமும்** – நடுவே நின்ற ஏகாரம் அகரம் முதலிய வெழுத்துச் சாரியையினையும், **ஆன் ஆன் முதலிய பதச்சாரியையினையும், இயற்கையும்** – அவை பெறாது பதமு முருபும் தாமே இயல்பாகநிற்கும் இயற்கை நிலையினையும், **ஒன்ற உணர்த்தல் உரவோர் நெறி** – தெரியவறிவித்தல் பெரியோரது கடனாகும், **எ—று.**

**வ—று.:—**

(1) "ஆன நெய் தெளித்து நாண நீவி" என விதித்த பொருட்புணர்ச்சிக்கண், "உருபின் முடிபவை யொக்குமப் பொருளினும்" என்ற மாட்டேற்றால் அமைத்தனகர மெய்ச்சாரியை யன்றி. அகரச் சாரியையும் உடன் வந்தது.

(2). இனி விதியாதொழிந்தவற்றின்கண், பாட்டின் பொருள் எனக் குற்றியலுகரத்திற்கு இன்சாரியை வந்தது.

(3) தன்கை, என்னை எனச் சாரியையின்றி இயல்பாக வந்தன.

இப்படியே மூவகைப் புணர்ச்சிகளையும் பகுத்துணர்ந்து கொள்க.

பல்வகைப் புணர்ச்சிக்கண்ணும் அஃததற்குப் பொருந்தும் விதியினையே ஆய்ந்துகொள்ளுகவெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

விகுதி பதஞ்சா ரியையுரு பனைத்தினும்
உரைத்த விதியினோர்ந் தொப்பன கொளலே.

(விகுதி பதம் சாரியை உருபு அனைத்தினும்
உரைத்த விதியின் ஓர்ந்து ஒப்பன கொளலே.)

**இ—ள்.: விகுதி பதம் சாரியை உருபு அனைத்தினும்** – விகுதியும் பதமுஞ் சாரியையும் உருபும் ஆகிய நான்கின் புணர்ச்சியினிடத்தும், **உரைத்த விதியின் ஓர்ந்து** – பொதுப்படச் சொல்லப்பட்ட விதிகளுள் இவ்விதி இதற்குப் பொருந்தும் இவ்விதி இதற்குப் பொருந்தாது என உய்த்துணர்ந்து, **ஒப்பன கொளல்** – எவ்விதி எதற்குப் பொருந்துமோ அவ்விதியை அதற்குக் கொள்க, எ—று.

வ—று.:–

(1) விகுதிப்புணர்ச்சியுள் "றவ்வொ டுகர வும்மைநிகழ் பல்லவும்" எனப்பொதுப்பட விதித்தாரேனும், விதியுளதென்று நினைந்து, இவ்விகுதி வந்தவிடத் தெல்லாம் இவ்விரண்டு காலமும் பொருந்துமென்று கொள்ளற்க; சென்று, சென்றும் என்றவிடத்து இறந்தகாலமும், சேறு, சேறும் என்றவிடத்து எதிர்காலமும் பொருந்தும் என்று கொள்க.

(2) பதப்புணர்ச்சியுள்: "அல்வழி இஐம் முன்ன ராயினியல்பு மிகலும் விகற்பமு மாகும்" எனப் பொதுப்பட விதித்தாரேனும், விதியுளதென்று நினைத்து ஆடிதிங்கள், குவளைகண் என இயல்பா மென்றும், பருத்திக்குறிது, யானைக்குதிரை என மிகுமென்றுங் கொள்ளற்க; பருத்திகுறிது என எழுவாய்க் கண்ணும் யானை குதிரை என உம்மைத்தொகைக் கண்ணும் இயல்பா மெனவும்; ஆடித்திங்கள் எனப் பண்புத்தொகைக் கண்ணும், குவளைக்கண் என உவமைத்தொகைக்கண்ணும் மிகுமெனவுங் கொள்க.

(3) சாரியைப் புணர்ச்சியுள்: "பதமுன் விகுதியும் பதமு முருபும் புணர்வழியொன்றும் பலவுஞ் சாரியை வருதலுந் தவிர்தலும் விகற்பமு மாகும்" எனப் பொதுப்பட விதித்தாரேனும், விதியுளதென்று நினைத்து, நாட்டினி னீங்கினான் என இன்னுருபிற்கு இன்சாரியை வருமென்றும், நாட்டுக் கணிருந்தான் எனக் கண்ணுருபிற்கு இன்சாரியை வராதென்றுங் கொள்ளற்க: நாட்டின் கண் ணிருந்தான் எனக் கண்ணுருபிற்கு இன்சாரியை வருமென்றும், நாட்டினீங்கினான் என இன்னுருபிற்கு இன்சாரியை வராதென்றுங் கொள்க.

(4) உருபுபுணர்ச்சியுள்: "ஒற்றுயிர் முதலீற்றுருபுகள் புணர்ச்சியி னொக்குமன் னப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே" எனப் பொதுப்பட விதித்தாரேனும், விதியுளதென்று நினைத்து, நம்பிகு என உயிரீற்றுயர்திணைப் பெயர்முன் வந்த குவ்வுருபு மிகாதென்றும், நம்பிக்கண் என மன்னென்றமையாற் கண்ணுருபு மிகுமென்றுங் கொள்ளற்க; நம்பிகண் எனக் கண்ணுருபு மிகாதென்றும், நம்பிக்கு எனக் குவ்வுருபு மன்னென் றமையான் மிகுமென்றுங் கொள்க.

மற்றவைகளும் இப்படியே காண்க.

உயர்திணைப்பெயரிடத்தும் பொதுப்பெயரிடத்தும் உருபு விரிதற்குக் காரணமென்னை?

நம்பியைக் கொணர்ந்தான் கொற்றனைக் கொணர்ந்தான் என்பன நம்பிகொணர்ந்தான் கொற்றன் கொணர்ந்தான் எழுத்ததிகாரத்துக்குப் புறனடை கூறுஞ் சூத்திரம் யாது?

இதற்கிது முடிபென் றெஞ்சா தியாவும்

விதிப்பள வின்மையின் விதித்தவற் றியலான்
வகுத்துரை யாதவும் வகுத்தனர் கொளலே.

(இதற்கு இது முடிபு என்று எஞ்சாது யாவும்
விதிப்ப அளவு இன்மையின் விதித்தவற்று இயலான்
வகுத்து உரையாதவும் வகுத்தனர் கொளலே).

**இ–ள்.: இதற்கு இது முடிபு என்று** – இதற்கு இது முடிபென்று, **யாவும் எஞ்சாது விதிப்ப** – இவ்வதிகாரத்துள் விதிக்கத்தகு வனவற்றை யெல்லாங் குறையாமல் தனித்தனி அளவு செய்து விதிக்கப்புகின், **அளவு இன்மையின்** – அதற்கு ஓரளவில்லாமையால், விதித்தவற்று இயலான் – வகுத்து விதித்தவற்றினுடைய இலக்கணங்களை ஏதுவாக்கிக் கொண்டு, **வகுத்து உரையாதவும் வகுத்தனர் கொளலே** – வகுத்து விதியுரையாதனவற்றையுங் கருதலளவையால் வகுத்து விதியுரைத்துக் கொள்க, **எ–று**.

விதிப்ப எனற்பால அகரங் குறைந்து நின்றது.

**வ–று.:–**

(1) எழுத்தியலுள், "மொழிமுதற்காரண மாமணுத் திரளொலியெழுத்து" என உரைத்தமையால், "கட்புல னில்லாக் கடவுளைக் காட்டுஞ்சட்டகம் போலச் செவிப்புல வொலியை யுட்கொளற் கிடுமுருபாம் வடிவெழுத்தே" எனப் பிறர்கூறியவாறு, இவ்வொலிவடிவைக் காட்டுதற்கு ஒருகருவியாக எழுதிக்கொள்ளப் பட்டது, வரி வடிவெழுத் தெனக் கொள்க.

(2) பதவியலுள், "அன் ஆன் அள் ஆள்" என்னுஞ் சூத்திரத்திலே முறையே அன் ஆன் விகுதி ஆண்பாற்கென உரைத்தமையால், பெருமாள் என்னும் பதம் பெருமையை யுடையானென்னும் பொருள் தோன்ற நின்ற பெருமான் என்னும் பதத்தினது ஆன் விகுதி ஆள் விகுதியாக ஒரோவிடத்தே திரிந்து ஆண்பாலையே யுணர்த்தி நின்றதெனக் கொள்க.

(3) உயிரீற்றுப்புணர்ச்சியுள், "இயல்பினும் விதியினு நின்ற வுயிர்முன் க ச த ப மிகும். என்று சொன்ன மையால்,"ஙன வல்லினம் வரட்டறவும்" என்ற விடத்து டகரமும் வல்லினமாதலின் மிகுந்ததெனக் கொள்க.

(4) மெய்யீற்றுப்புணர்ச்சியுள், "நுந்தம் எம் நம் மீறா மவ்வரு ஞனவே" என உரைத்தமையால், அம்மென்னுஞ் சொல்லிறுதி மகரமுங் குற்றொற்றாதலின் தன்னோடு மங்காத மெல்லினம் வரின் அதுவாய்த் திரிந்து அந்நலம் என அழகினது நலமென்னும் பொருளதாய் வருமெனக்கொள்க.

(5) உருபுபுணர்ச்சியுள், "வவ்விறு சுட்டிற் கற்றுறல் வழியே" என உரைத்தமையால், அதுபோலும் வினாவும் எவற்றை என அற்றுச்சாரியை பெறுமெனவும், இரண்டாம் வேற்றுமைக்கும் மூன்றாம் வேற்றுமைக்கும் புறனடை யுரைத்தமையால், ஏழாம் வேற்றுமையும் வரைபாய்வருடை, " மண்புகுந்தும் விண்பறந்து மாலு மயனுங் காணாவொரு பொருள்" என எழுத்ததிகாரத்துக்குப் புறனடை கூறுஞ் சூத்திரம் யாது?

இதற்கிது முடிபென் றெஞ்சா தியாவும்
விதிப்பள வின்மையின் விதித்தவற் றியலான்
வகுத்துரை யாதவும் வகுத்தனர் கொளலே.

(இதற்கு இது முடிபு என்று எஞ்சாது யாவும்
விதிப்ப அளவு இன்மையின் விதித்தவற்று இயலான்
வகுத்து உரையாதவும் வகுத்தனர் கொளலே).

**இ—ள்.: இதற்கு இது முடிபு என்று** – இதற்கு இது முடிபென்று, **யாவும் எஞ்சாது விதிப்ப** – இவ்வதிகாரத்துள் விதிக்கத்தகு வனவற்றை யெல்லாங் குறையாமல் தனித்தனி அளவு செய்து விதிக்கப்புகின், **அளவு இன்மையின்** – அதற்கு ஒரளவில்லாமையால், விதித்தவற்று இயலான் – வகுத்து விதித்தவற்றினுடைய இலக்கணங்களை ஏதுவாக்கிக் கொண்டு, **வகுத்து உரையாதவும் வகுத்தனர் கொளலே** – வகுத்து விதியுரையாதனவற்றையுங் கருதலளவையால் வகுத்து விதியுரைத்துக் கொள்க, **எ—று.**

விதிப்ப எனற்பால அகரங் குறைந்து நின்றது.

**வ—று.:—**

(1) எழுத்தியலுள், "மொழிமுதற்காரண மாமணுத் திரளொலியெழுத்து" என உரைத்தமையால், "கட்புல னில்லாக் கடவுளைக் காட்டுஞ்சட்டகம் போலச் செவிப்புல வொலியை யுட்கொளற் கிடுமுருபாம் வடிவெழுத்தே" எனப் பிறர்கூறியவாறு, இவ்வொலிவடிவைக் காட்டுதற்கு ஒருகருவியாக எழுதிக்கொள்ளப் பட்டது, வரி வடிவெழுத் தெனக் கொள்க.

(2) பதவியலுள், "அன் ஆன் அள் ஆள்" என்னுஞ் சூத்திரத்திலே முறையே அன் ஆன் விகுதி ஆண்பாற்கென உரைத்தமையால், பெருமாள் என்னும் பதம் பெருமையை யுடையானென்னும் பொருள் தோன்ற நின்ற பெருமான் என்னும் பதத்தினது ஆன் விகுதி ஆள் விகுதியாக ஒரோவிடத்தே திரிந்து ஆண்பாலையே யுணர்த்தி நின்றதெனக் கொள்க.

(3) உயிரீற்றுப்புணர்ச்சியுள், "இயல்பினும் விதியினு நின்ற வுயிர்முன் க ச த ப மிகும். என்று சொன்ன மையால், "ணன வல்லினம் வரட்டறவும்" என்ற விடத்து டகரமும் வல்லினமாதலின் மிகுந்ததெனக் கொள்க.

(4) மெய்யீற்றுப்புணர்ச்சியுள், "நுந்தம் எம் நம் மீறா மவ்வரு ஞனவே" என உரைத்தமையால், அம்மென்னுஞ் சொல்லிறுதி மகரமுங் குற்றொற்றாதலின் தன்னோடு மங்காத மெல்லினம் வரின் அதுவாய்த் திரிந்து அந்நலம் என அழகினது நலமென்னும் பொருளதாய் வருமெனக்கொள்க.

(5) உருபுபுணர்ச்சியுள், "வவ்விறு சுட்டிற் கற்றுறல் வழியே" என உரைத்தமையால், அதுபோலும் வினாவும் எவற்றை என அற்றுச்சாரியை பெறுமெனவும், இரண்டாம் வேற்றுமைக்கும் மூன்றாம் வேற்றுமைக்கும் புறனடை யுரைத்தமையால், ஏழாம் வேற்றுமையும் வரைபாய்வருடை, " மண்புகுந்தும் விண்பறந்து மாலு மயனுங் காணாவொரு பொருள்"என என விரியாது நிற்குமாயின் எழுவாய்த்தொட ராகு மாதலின் விரிய வேண்டியதாயிற்று.

அன்ன பிறவும் என்றதனால், தற்கொண்டான், எற்பணியாள் என ("தன்னென்னென்பவற் றீற்றுனவ் வன்மையோ டுறழும்" என்ற விதிப்படி) உறழவேண்டிய விடத்துத் திரிந்தே வருதலும். விளக்குறைத்தான் என இனமெல்லெழுத்து மிகவேண்டிய விடத்து வல்லெழுத்து மிகுதலும், மரங்குறைத்தான் என மவ்வீறு கெட்டு வல்லெழுத்து மிகவேண்டியவிடத்து மகரம்

இனமெல்லெழுத்தாகத் திரிதலும், மாடு கொண்டான், பயறு தின்றான் என டற வொற் றிரட்டவேண்டியவிடத்து இரட்டாமையும் மருந்து தின்றான் என மென்றொடர் வன்றொடராக வேண்டியவிடத்து அங்ஙனமாகாமையும், வேறொட்டான் தாடொழுதான் என லகர ளகரந் தகரம் வரத் திரிய வேண்டியவிடத்துக் கெடுதலும், குரிசிற்றடிந்தான், அவட் டொடர்ந்தான் என உயர்திணைக்கட் கெடாது திரிந்து நிற்றலும் பிறவுங் கொள்க.

இன்னும் எண்ணின்கணின்ற இயந்தது தழீஇய இழிவுசிறப்பும்மைகளால், ''இடைத்தொடராய்தத் தொடர்'' என்னுஞ் சூத்திரத்தில் வேற்றுமைக்கென விதித்த பொதுவிதியோ டொருங் கொத்து, தெள்கு பிடித்தான். எஃகு கொடுத்தான், நாகு கட்டினான். வரகு தந்தான், என இயல்பில் இயல்பாகியும், ''இயல்பினும் விதியினும்'' என்னுஞ் சூத்திரப்படி மகப்பெற்றான், பலாக்குறைத்தான், வடுப்பெற்றான். சுக்குத்தின்றான், பூத்தொடுத்தான், சேப்பெற்றான் கோக்கறந்தான் என வருமொழி வினையாயவிடத்தும் விகாரத்தில் விகாரமாகியும் வருதலே பெரும்பாலன வென்க.

## சொல்லதிகாரம்

## பெயரியல்

### மூவகைமொழியும் இவையெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

ஒருமொழி யொருபொரு ளனவாந் தொடர்மொழி
பலமொரு ளனபொது விருமையு மேற்பன.

(ஒரு மொழி ஒருபொருளன ஆம்: தொடர்மொழி பலபொருளான: பொது இருமையும் ஏற்பன.)

ஒருமொழிகளானவன பகாப்பதமேனும் பகுபதமேனும் ஒன்று நின்று தத்தமொருபொருளைத் தருவனவாம்.

தொடர் மொழிகளாவன அவ்விரு வகைப் பதங்களுந் தன்னோடும் பிறிதோடும் அல்வழி வேற்றுமைப்பொரு ணேக்கத்தால் இரண்டு முதலிய வாகத் தொடர்ந்து நின்று இரண்டு முதலிய பல பொருளைத் தருவனவாம், பொதுமொழிகளாவன ஒன்றாய் நின்று ஒருபொருளைத் தந்தும் அதுவே தொடர்ந்து நின்று பல பொருளைத் தந்தும் இவ்விரண்டற்கும் பொதுவாய் நிற்பனவாம்.

ஒருமொழியாவது யாது?

''ஒருமொழி யொருபொருளனவாம்''

**வ–று:**

(1) நிலம், நிலத்தான், நட, நடந்தான், தில், மன், தவ, நனி என வருவன ஒரு மொழிகள்.

தொடர்மொழியாவது யாது?

''தொடர்மொழி பலபொருளன''

(2) நிலம் வலிது, அதுகொல், சாலப்பகை, நிலங்கடந்தான், நிலத்தை

கடந்தான், நிலத்தைக் கடந்தான், நிலத்தைக் கடந்த நெடுமால் என வருவன தொடர்மொழிகள்.

பொதுமொழியாவது யாது?

"பொது இருமையு மேற்பன"

(1) எட்டு, தாமரை, வேங்கை, எழுந்திருந்தான் என வருவன பொதுமொழிகள்.

இவை, ஒருமொழிகளாய் ஒரு பொருளைத் தருவதன்றி, எள்ளைத் து, தாவுகின்ற மரை, வேகின்ற கை, எழுந்து பின் இருந்தான்.

எனத் தொடர்மொழிகளாய்ப் பலபொருளைத் தருதலுங் காண்க.

எட்டு – எள்து என்பதில் து–உண்ணென்னும் ஏவல்வினை.

இருதிணை இவையெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

மக்க டேவர் நரக ருயர்திணை

(மக்கள் தேவர் நகரர் உயர்திணையாகும்; அவரையொழிந்த விலங்குமுதலாகிய உயிருள்ளவையும், நிலம் நீர் முதலாகிய உயிரில்லாதவையும் அஃறிணையாகும். எ–று.

உயர்திணையாவது யாது?

"மக்கள் தேவர் நகரர் உயர்திணை"

இம்மூவகையோருடைய உடம்பையும் உயிரையும் வேறாகக் குறிக்கும்போது, அவையும் அஃறிணையாம்.

அஃறிணையாவது யாது?

"மற்றுயிருள்ளவும் இல்லவும் அஃறிணை"

திணை சாதி உயர்திணை உயர்ந்த சாதி; அஃறிணை உயர்திணை அல்லாத சாதி.

உயர்திணைக்குரிய பால் இத்தனை யெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

ஆண்பெண் பலரென முப்பாற் றுயர்திணை.

(ஆண் பெண் பலர் என முப்பாற்று உயர்திணை)

இ–ள்:ஆண்பாலும் பெண்பாலும் பலர்பாலும் என்று மூன்று பாலினியுடைதாகும்,உயர்திணை.

ஆடவர், காளையர் என்பன முதலிய ஆண்பன்மையையும், பெண்டிர், மங்கையர் என்பன முதலிய பெண்பன்மையை யும், மக்கள், அவர் என்பன முதலிய அவ்விருவர் பன்மையையும் அழக்கிப் பலர்பால் என்றார். பின் பலவின் பால் என்பதும் அது.

அஃறிணைக்குரிய பால் இத்தனையெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

ஒன்றே பலவென் றிருபாற் றஃறிணை

(ஒன்று பல என்று இருபாற்று அஃறிணை)

இ–ள்: ஒன்றன்பாலும் பலவின்பாலும் என்று இரண்டு பாலினை யுடையதாகும் அஃறிணை. எ–று

அஃறிணையுள்ளும், களிறு, சேவல் என்பன முதலிய ஆண்பாலும்,

பிடி, பேடை என்பன முதலிய பெண்பாலும், உளவெனினும், அவ்வாண்பாலும், பெண்பாலும், உயிருள்ளனவற்றுள், புழு மர முதலிய சிலவற்றிற்கும் உயிரில்லாதனவற்றிற்கும், இல்லாமையால், அப்பகுப் பொழித்து, எல்லாவற்றிற்கும் பொருந்தும் ஒன்றன் பாலென்றார்.

திணைபால்களுக்குப் புறனடைகூறுஞ் சூத்திரம் யாது?

பெண்மைவிட்டாணவா வுவபே டாண்பால்
ஆண்மைவிட் டல்ல தவாவுவ பெண்பால்
இருமையு மஃறிணை யன்னவு மாகும்.
(பெண்மை விட்டு ஆண் அவாவுவ பேடு ஆண்பால்
ஆண்மை விட்டு அல்லது அவாவுவ பெண்பால்
இருமையும் அஃறிணை அன்னவும் ஆகும்)

**இ–ள்**:மக்கட் பிறப்பினுள் பெண்டன்மையை விட்டு ஆண்டவன் மையை அவாவுனவாகிய பேடுகள் உயர்திணையாண்பாலாகும்; ஆண் டன்மையை விட்டுப் பெண்டன்மையை அவாவுவனவாகிய பேடுகள் உயர்திணைப் பெண்பாலாகும்; இவ்விரு வகைப் பேடுகளும் உயர்திணை யாதலே யன்றி அஃறிணையை யொப்பனவும் ஆகும். **எ–று.**

**உ–ம்**: பேடன் வந்தான். பேடி வந்தாள். பேடு வந்தது. பேடர் வந்தார்.பேடியர் வந்தார். பேடுகள் வந்தன. பெண்ணேயாயினும்பெண்டன்மை சிறிதாக ஆண்டன்மை மிகப்பெற்ற பேடும், ஆணேயாயினும் ஆண்டன்மை சிறிதாக பெண்டன்மை மிகப்பெற்ற பேடும் எனப் பேடு இருவகைப்படும். பேடு அலியென்பன ஒரு பொருட்சொற்கள்.

சொல் தன்னையும் பொருளையு முணர்த்துமாறு கூறுஞ் சூத்திரம் யாது?

படர்க்கைவினை முற்று நாமங் குறிப்பிற்
பெறப்படுந் திணை லனைத்து மேனை
யிடத்தவற் றொருமைப் பன்மைப் பாலே.
(படர்க்கை வினைமுற்று நாமம் குறிப்பிற்
பெறப்படும் திணை பால் அனைத்தும் ஏனை
இடத்து அவற்று ஒருமைப் பன்மைப் பாலே.)

**இ–ள்**.:படர்க்கை வினைமுற்றுச் சொல்லினாலும், படர்க்கைப் பெயர்ச்சொல்லினாலும், சொல்லுவான் குறிப்பாலும் இருதிணையும் ஐம்பாலும் பெறப்படும்; ஒழிந்த தன்மை முன்னிலைகளின் வினைமுற்றுச் சொல்லினாலும், பெயர்ச்சொல்லினாலும் இருதிணையைம்பாலுள் ஒருமைப் பாலும் பன்மைப்பாலும் பெறப்படும்– எ–று.

வ–று:

(1) நடந்தான், நடந்தாள், நடந்தார், நடந்தது, நடந்தன. எ–ம். அவன், அவள், அவர், அது, அவை. எ–ம்; படர்க்கை வினை முற்றுச்சொல்லும், படர்க்கைப் பெயர்ச்சொல்லும், முன்பு தம்மையுணர்த்திப், பின்பு இருதிணையைம்பாற் பொருளையு முணர்த்தின.

(2) நடந்தேன், நடந்தேம்– எ–ம், யான், யாம். எ–ம். தன்மை வினைமுற்றுச் சொல்லுந் தன்மைப்பெயர்ச் சொல்லும், நடந்தாய், நடந்தீர். எ–ம். முன்னிலை வினைமுற்றுச்சொல்லும் முன்னிலைப்பெயர்ச்சொல்லும், முன்னே தம்மையுணர்த்திப், பின்பு இருதிணையைம்பாலுள் ஒருமைப்பாலும் பன்மைப்பாலு முணர்த்தின.

"எனையிடத்தவற்றொருமைப் பன்மைப்பாலே" என்பதிலே திணை கூறப்பட்டமையாற் பெறக்கிடப்பது யாது?

தன்மை முன்னிலைகள் இருதிணைக்கும் பொதுவென்பது.

மூவிடங்களுள் ஒன்றற்குரிய வினைமுற்றும் பெயருந் தம்மையும் பொருளையும் இப்படியுணர்த்துமெனவே, இவ்விடங்களுக்குப் பொதுவாகிய வினைமுற்றுக்களும் பெயர்களும் பொதுமை நீங்கி ஒரிடத்திற் குரியவாகியும், எச்சவினை முதலியனவும் இடைச்சொல்லும் உரிச் சொல்லும் பெயர்வினைகளைச் சார்ந்தும், இப்படியே தம்மையும் பொருளையும் உணர்த்துமெனக்கொள்க.

மூவிடமாவன இவையெனக்கூறுஞ் சூட்திரம் யாது?

தன்மை முன்னிலை படக்கைமூ விடனே

(தன்மை முன்னிலை படர்க்கை மூவிடனே)

இ–ள்: மூவிடமாவன தன்மையும் முன்னிலையும் படக்கையுமாம். எ–று.

வ–று:

யான்,நீ, அவன். எ–ம். வந்தேன், வந்தாய், வந்தான். எ–ம் வரும்.

மேல்வழக் கென்றதன் வகைதொகைகள் கூறுஞ் சூத்திரம் யாது?

இலக்கண முடைய திலக்கணப் போலி

மரூஉவென் றாகு மூவகை யியல்பும்

இடக்க ரடக்கன் மங்கலங் குழூஉக்குறி

எனுமுத் தகுதியோ டாறாம் வழக்கியல்

(இலக்கண முடையது இலக்கணப் போலி

மரூஉ என்று ஆகும் மூவகை இயல்பும்

இடக்க ரடக்கல் மங்கலம் குழூஉக்குறி

எனும் முட்தகுதியோடு ஆறு ஆம் வழக்கியல்)

இ–ள்.:இலக்கண முடையதென்றும் இலக்கணப்போலி யென்றும் மரூஉவென்றும் வழங்கு மூவகை யியல்பு வழக்கும் இடக்கரடக்க லென்றும் மங்கலமென்றுங் குழூஉக்குறி யென்றும் வழங்கு மூன்று தகுதி வழக்குடனே கூட அறுவகைப்படும் வழக்குநெறி, எ–று.

இயல்புவழக்கு எத்தனை வகைப்படும்?

"இலக்கண முடைய திலக்கணப் போலி

மரூஉ என்றாகு மூவகை யியல்பு"

இவைமூன்றும் இயல்பு வழக்கெனப்பட்டமைக்குக் காரணம், யாது?

இம் மூன்றும் ஒருகாரணமு மின்றி இயல்பாய் வருதலின் இயல்பு வழக்கெனப்பட்டன.

**1.இயல்புவழக்கு**

இலக்கணமுடையதென்பது இலக்கணநெறியால் வருவது. இலக்கணப்போலியென்பது,இலக்கணமில்லையாயினும், இலக்கண முடையது போல் சான்றோராலே தொன்று தொட்டு வழங்கப்பட்டு வருவது மரூஉவென்பது, தொன்று தொட்டு வருதலின்றி, இடையிலே, சிலவெழுத்துக் கெட்டும், சிலவெழுத்துத் திரிந்தும், சிலவெழுத்துத் தோன்றியும், இலக்கணத்திற் சிதைந்து, தானே மருவி வழங்குவது.

(1)நிலம், நீர், காற்று, வானம், நன்னிலர், தண்ணீர் வெந்நீர் இவை முதலானவை இலக்கணமுடையன.

(2)இல்முன் என்பதை மூன்றில் என்றும், நகர்ப்புறம் என்பதைப் புறநகர் என்றும், புறவுலா என்பதை உலாப்புறம் என்றும், கண்மீ என்பதை மீகண் என்றும், கோவில் என்பதைக் கோயில் என்றும், பொதுவில் என்பதைப் பொதியில் என்றும், வழங்கும் இவை முதலானவை இலக்கணப்போலி.

(3) அருமருந்தன்னபிள்ளை என்பதை அருமந்தபிள்ளை என்றும், மலையமானாடு என்பதை மலாடு என்றும், சோழனாடு என்பதைச் சோணாடு என்றும், பாண்டியனாடு என்பதைப் பாண்டிநாடு என்றும், தொண்டைமானாடு என்பதைத் தொண்டைநாடு என்றும், அங்குகிடந்த இங்குகிடந்த என்னுஞ் சுட்டுக்களை அந்த இந்த என்றும், மரவடி என்பதை மராடி என்றும் குளவாம்பல் என்பதைத் குளாம்பல் என்றும், யாவர் என்னும் வினாப்பெயரை யார், ஆர் என்றும், யார் என்னுங் குறிப்பு வினையை ஆர் என்றும், எவன் என்னுங் குறிப்பு வினையை என், என்னை, என்ன என்றும், தஞ்சாவூர் என்பதைத் தஞ்சை என்றும் வழங்கும் இவை முதலானவை மரூஉ.

தகுதிவழக்கு எத்தனை வகைப்படும்?

“இடக்க ரடக்கன் மங்கலங்குழூஉக்குறி எனுமுத்தகுதி”

தகுதியெனப்பட்டது யாது பற்றி?

உயர்ந்தோரும் இழிந்தோரும் இவ்வாறு உரைப்பது தக்கதென்று குறித்து வழங்கலிற் றகுதிவழக்கெனப்பட்டது.

இடக்கரடக்கல் என்பது, நன்மக்களிடத்தே சொல்லத்தகாத சொல்லை, அவ்வாய்பாடு மறைத்துப், பிறவாய்பாடாற் சொல்வது மங்கலம் என்பது, மங்கலமில்லாததை யொழித்து மங்கலமாகச் சொல்வது. குழூஉக்குறி யென்பது, ஒவ்வொரு கூட்டத்தார் யாதாயினும் ஒரு காரணம் பற்றி ஒருபொருளினது சொற்குறியை யொழித்து வேறொரு சொற்குறியாற் சொல்வது.

(1)மலங்கழீஇ வருதும் என்பதைக் கால் கழீஇ வருதும் என்றும். பீ என்பதைப் பகரவீ என்றும், பவ்வீ என்றும் வழங்கும் இவை முதலானவை இடக்கரடக்கல்

(2) செத்தாரைத் துஞ்சினார் என்றும், ஓலையைத் திருமுகம் என்றும், காராட்டை வெள்ளாடு என்றும், இடுகாட்டை நன்காடு என்றும் வழங்கும் இவை முதலானவை மங்கலம்.

(3) பொற்கொல்லார் பொன்னைப் பறி என்றும், யானைப் பாகர் ஆடையைக் காரை என்றும்,வேடர் கள்ளைச் சொல்விளம்பி என்றும் வழங்கும் இவை முதலானவை குழூஉக்குறி.

இலக்கணப்போலி மரூஉ இவையிரண்டற்கும், மங்கலம் இடக்கரடக்கல் இவையிரண்டற்கும் தம்முள் வேற்றுமை யாவை?

இலக்கணப்போலி, தன்னியல்பிற் றிரிந்ததாயினும் அப்படிப்பட்ட வழக்குடையது, இல்முன் எனற்பாலது அவ்வழக்கிறந்து முன்றில் எனவும், கண்மீ எனற்பாலது அவ்வழக்கொழிந்து மீகண் எனவும் பண்டுதொட்டு ஆன்றோராற் றிரிந்த வாய்பாட்டான் மாத்திரம் வழங்கப் பட்டு வருதல் காண்க.

மரூஉ, இலக்கண வாய்பாட்டாலும் சிதைவு வாய்பாட்டாலும் வழங்கப்படுஞ் சொற்கள். அருமருந்தன்னா னென்பது அருமந்தன்னா னெவும் அருமந்தானெனவும் இருவழியும் வழங்கல் காண்க. இவையே இரண்டற்கும் தம்முள் வேற்றுமையாம்.

மங்கலமொழி, இலக்கண வாய்பாட்டாலும் தகவு நோக்கி மறைந்த வாய்பாட்டாலும் சொல்லப்படும் மொழிகளாம். செத்தாரென்பது இலக்கண வாய்பாடு. துஞ்சினாரென்பது மறைந்த வாய்பாடு.

இடக்கர் சடையிலே மறைந்தவாய்பாட்டாற் சொல்லப்பட வேண்டுஞ் சொல், பீயென்பதைப் பவ்வீ என்று மறைத்துக் கூறல் மறைந்த வாய்பாடு. இவைவே யிரண்டற்குந் தம்முள் வேற்றுமையாம்.

மேற்செய்யுள் என்றது இதுவெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

பல்வகைத் தாதுவி னுயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக வுணர்வினின்
வல்லோ ரணிபெறச் செய்வன செய்யுள்.
(பல்வகைத் தாதுவின் உயிர்க்கு உடல்போல் பல
சொல்லால் பொருட்கு இடன் ஆக உணர்வினின்
வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்)

**இ–ள்.:** தோல் இரத்தம் இறைச்சி மேதை எலும்பு மச்சை வேதநீர் என்னும் எழுவகைத் தாதுக்களினால் உயிருக்கு இடமாக இயற்றப்பட்ட உடம்பு போல, இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்னு நால்வகைச் சொற்களாற் பொருளுக்கு இடமாகக் கல்வியறிவினாற் செய்யுள் செய்ய வல்லவர் அலங்காரம் பெறச் செய்வன செய்யுளாம். **எ–ம்.**

இப்படிச் சொல்லவே, எழுத்தாலானது சொல்லாதாலால், எழுத்துச் சொற் பொருள் அணி நான்கினாலும் உண்டாவது செய்யுளென்பதாயிற்று.

**வ–று.:**

**வருங்குன்ற மொன்றுரித் தோன்றில்லை யம்பல வன்மலயத்**
**திருங்குன்ற வாண ரிளங்கொடி யேயிடரெய்தலெம் மூர்க்**
**கருங்குன்ற மாளிகை நுண்கள பத்தொளி பாயநும்மூர்**
**கருங்குன்றம் வெண்ணிறக் கஞ்சுக மேய்க்குங் கனங்குழையே**

இக் கட்டளைக் கலித்துறை, இடமணித்தென்னும் பொருளுக்கிடமாகித், தன்மையுவமை யுருவகவணிகளும் பிறவுமுடைத்தாய் வருதல் காண்க.

மேலே குறிப்பு வெளிப்படை என்றன இவையெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

ஒன்றொழி பொதுச்சொல் விகாரந் தகுதி
ஆகு பெயரன் மொழிவினைக் குறிப்பே
முதற்றொகை குறிப்போ டின்ன பிறவுங்
குறிப்பிற் றருமொழி யல்லன வெளிப்படை
(ஒன்று ஒழி பொதுச் சொல் விகாரம் தகுதி
ஆகு பெயர் அன்மொழி வினைக் குறிப்பே
முதல்தொகை குறிப்பு இன்ன பிறவும்
குறிப்பின் தருமொழி அல்லன வெளிப்படை)

**இ–ள்:** இருதிணை யாண்பெண்ணுள் ஒன்றனையொழிக்கும் பொதுச்சொல்லும் வலித்தன் முதலாகிய ஒன்பது விகாரச்சொல்லும் மூவகைத் தகுதிவழக்குச் சொல்லும் ஆகுபெயர்சொல்லும் அன்மொழித் தொகைச் சொல்லும் வினைக்குறிப்புச்சொல்லும் முதற்குறிப்புச்சொல்லும் தொகைக்குறிப்புச் செல்லும் இம்முதறொகை யல்லாத பலவழியாலும் வருங் குறிப்புச்சொல்லும் இவை போல்வன பிறவும் குறிப்பினால் இரு திணையம் பாற் பொருள்களைத் தருஞ் சொற்களாம். இவை யல்லனவெல்லாம் வெளிப்படையால் அப்பொருள்களைத் தருஞ் சொற்களாம்.

(1) ஆயிரமாக்கள் பொருதார் என்றவிடத்து, மக்கள் என்னும் பொதுப்பெயரும், பொருதார் என்னும் பொது வினையும், உயர்திணைப் பெண்பாலை யொழித்து, ஆண்பாலைக் குறிப்பாலுணர்த்தின.

(2) குறுந்தாட்பூதம், மரைமலர் என்றவிடத்து, இவ்விகாரச்சொற்கள், குறுந்தாள், தாமரை என்பன வற்றைக் குறிப்பாலுணர்த்தின.

(3) கால்கழீஇ வருதும், திருமுகம், பறி என்றவிடத்து, இத்தகுதி வழக்குச்சொற்கள், மலங்கழுவி வருதும், ஓலை பொன்ற என்பவற்றைக் குறிப்பாலுணர்த்தின.

(4) புளிதின்றான், கடுத்தின்றான் என்றவிடத்து, இவ்வாகு பெயர்கள், அவற்றின் பழத்தைக் குறிப்பாலுணர்த்தின.

(5)பொற்றொடிதந்த புனைமடல், அறக்கூந்தற் கில்லை யருள் என்றவிடத்து, இவ்வன்மொழித் தொகைகள், அவற்றை யுடைய மகளிரைக் குறிப்பாலுணர்த்தின.

(6)இவனிப்போது பொன்னன் என்றவிடத்துப், பொன்னன் என்பது பெயர்ப்பொருளை யொழித்து, வினைக்குறிப்புப் பொருளைக் குறிப்பாலுணர்த்திற்று.

(7)"அறத்தா றிதுவென வெள்ளைக் கிழிபு" என்றவிடத்து,இம் முதற்குறிப்புச் சொற்கள் "அறத்தா றிதுவென வேண்டா சிவிகை, பொறுத்தானோ டூர்ந்தா னிடை" என்னும் பாட்டைக் குறிப்பாலுணர்த்தின.

(8)"அலங்குளைப்புரவி யைவரொடு சினைஇ" என்றவிடத்து ஐவர் என்னுந் தொகைக்குறிப்புச் சொற்பாண்டவரைக் குறிப்பாலுணர்த்திற்று.

(9) கற்கறித்து நன்கட்டாய், நீயிர் பெரிதுமறிதிர், பாயாவேங்கை, "உவர்க்கட லன்னசெல்வரு முளரே கிணற்றூர் றன்ன நீயுமா ருளையே." "பல்சான்றீரே பல் சான்றீரே கயன்முள்ளன்ன நரைமுதிர் திரைகவுட் பயனின் மூப்பிற் பல்சான் றீரே" இவை முதலானவை யெல்லாம் பலவழியாலும் வருங் குறிப்புச்சொற்கள். கற்கறித்து நன்கட்டாய்– கல்லைக்கறியாக்கி நன்கு சமைத்தாய்– தீதாக அட்டாய் என்பதுகுறிப்பு. நீயிர் பெரிதுமறிதிர்– நீர்யாது மறியீர் என்பது குறிப்பு. உவர்க்க டலன்ன செல்வர் – பயன்படாத செல்வர். பயனின்மூப் பென்று வைத்துப் பல்சான்றீரே என்றதும் இகழ்ச்சிக் குறிப்பு. கிணற்றூற்றன்னநீ– பயன்படுசெல்வன்நீ பாயாவேங்கை– வேங்கைமரம்.

இன்ன பிறவும் என்றதனால், தெரிநிலைவினை குறிப்புவினை யாலணையும் பெயர்களும், தெரிநிலை வினை முற்றாலுங் குறிப்புவினை முற்றாலும் வரு மெச்சங்களும், செய்யுமென்னு முற்றும், "கேட்குநபோலே" முதலியவாக அஃறிணையிடத்துச் சொல்லப்படுவனவும், ஆகிய இவை முதலானவை குறிப்பாற் பொருளுணர்த்து மெனக் கொள்க. இன்னும் "திங்கள் விரவிய பெயரினான்" என்பது புத்திசேனன் என்பதைக் குறிப்பாலுணர்த்தும், இதுபோல்வனவுங் கொள்க. (திங்கள்–மதி–புத்தி)

இப்படியன்றி, நிலம், நீர், தீ, காற்று, வானம், வந்தான் என் வருவன, வெளிப்படையாற் பொருளையும் பொருளது புடைபெயர்ச்சியையும் உணர்த்துவனவாம்.

சொல் இத்துணையவெனத் தொகுத்துக் கூறுஞ் சூத்திரம் யாது?

அதுவே, –

இயற்சொற் றிரிசொ லியல்பிற் பெயர்வினை
எனவிரண் டாகுமிடையுரி யடுத்து
நான்கு மாந்திசை வடசொலணு காவழி.

(அதுவே,
இயற்சொல் திரிசொல் இயல்பின் பெயர் வினை
என இரண்டு ஆகும்; இடை உரி அடுத்து
நான்கும் ஆம்; திசை வடசொல் அணுகாவழி.)

இ–ள்.: மேற்காட்டியசொல் இயற்சொல்லுந் திரிசொல்லுமென்னுந்

தன்மையையுடைய பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் என்று இரண்டாகும். இவற்றுடன் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் அடுத்து நான்குமாகும், இவற்றுடன் திசைச்சொல்லும் வடசொல்லும் சேராவிடத்து. எ–று.

இங்ஙனங் கூறியவதனாற் போந்தது பெயரியற்சொல் பெயர்த்திரிசொல் வினையியற்சொல் வினைத்திரிசொல் இடையியற் சொல் இடைத்திரிசொல் உரியியற்சொல் உரித் திரிசொல் என எண்வகைத்தாந் தமிழ்நாட்டிற்கு உரிய சொல் என்பதாம்.அற்றேல் அடுத்து நான்குமாமென்னாது ஒன்றாக ஒத அமையும் பிறவெனின், பெயர்ச் சொல் பொருளை விளக்குதலானும், வினைச் சொல பொருளது புடைபெயர்ச்சியை விளக்குதலானும் அவற்றை முன் ஒதி, இடைச்சொல் அவ்விரண்டற்கும் விகுதி வேற்றுமை உவமை சாரியை உருபுகளாகியும்,சில பெயர்வினை களாகியும் வருதலானும், தெரிநிலை தேற்றம் முதலிய பொருண்மை விளக்கு தலானும் உரிச்சொல்லும் ஒருவாற்றாற் பெயரேயெனினும் பொருளை விளக்கலும் பெரும்பான்மையும் உருபேற்றலும் இன்றிச் சில வினை போல வரலானும் இவற்றை அவற்றின்பின் ஒதினா ரென்க. அல்லதூஉம் இவை பெயர்வினைபோல இலக்கணம் முற்றும் ஒருதலையாக ஏற்றுத் திணைபாலிடங் களை விளக்கித் தனி நடவா ஆகலானும் வேறு ஒத வேண்டுமென்பது. திசைவடசொல் அணுகாவழியெனவே இப் பகுதிப்படுவது தமிழ்நாட்டிற்கு உரிய சொல்லென் பதூஉம் அவையும் ஈண்டு அணுகப் பெறுமென்பதூஉம் அணுகுதல் ஒருதலையன்மையின் அவற்றிற்கு இலக்கணம் ஈண்டுக் கூறாரென்பதூஉமாயிற்று.

இயற்சொல்லிலக்கணங் கூறுஞ் சூத்திரம் யாது?

செந்தமி ழாகித் திரியா தியார்க்குந்
தம்பொருள் விளக்குந் தன்மைய வியற்சொல்

(செந்தமிழ் ஆகி திரியாது யார்க்கும் தம்பொருள் விளக்கும் தன்மைய இயற்சொல்)

இ–ள்.: செந்தமிழ் நிலத்து மொழியாகித் திரிசொற் போலாகாது கற்றோருக்குங் கல்லாதோருக்கும் ஒப்பத் தம்பொருளை விளக்குந் தன்மையை யுடைய உலகவழக்கே இயற்சொல்லாகும். இயற்சொல் இயல்பாற் பொருளுணருஞ் சொல்.

வ–று:

(1) மண், பொன் என்பன பெயரியற்சொல்

(2) நடந்தான், வந்தான், என்பன வினையியற்சொல்

(3) என்று, மற்று, என என்பன இடையியற்சொல்

(4) கறுப்பு, சிவப்பு என்பன உரியியற்சொல்.

செந்தமிழ் நாடாவது வடக்கே மருதயாறும் கிழக்கே மருவூரும், தெற்கே வைகையாறும் மேற்கே கருவூரும் எல்லையாகவுடைய நாடு.

திரிசொல்லாவது யாது?

ஒருபொருள் குறித்த பலசொல் லாகியும்

பலபொருள் குறித்த வொருசொல் லாகியும்
அரிதுணர் பொருளான திரிசொல்லாகும்.
(ஒருபொருள் குறித்த பலசொல் லாகியும்
பலபொருள் குறித்த ஒருசொல் ஆகியும்
அரிது உணர் பொருளன திரிசொல் ஆகும்.)

இ–ள்.:ஒருபொருளைக் கருதிய பலசொற்களாகியும் பலபொருள் களைக் கருதிய ஒருசொல்லாகியும் அரிதாகக்கற்றோர் அறியும் பொருளின வாய் வருவன திரிசொல்லாகும்.

அரிதுணர் பொருளன என்றதனால், ஒரு பொருள் குறித்த பல சொற்களுள்ளும், பலபொருள் குறித்த ஒருசொற் களுள்ளும் இயற்சொல் லொழியக் கொள்க.

பொருள்வகையா லேதிரிசொல் எத்தனை வகைப்படும்?

"ஒருபொருள் குறித்த பலசொல்," "பலபொருள் குறித்த வொருசொல்" என இருவகைத்து.

திரிசொல் இயற்சொல்லின் வேறுபட்ட சொல். திரிசொல் உறுப்புத் திரிந்ததும் முழுவதுந் திரிந்ததுமென இரு வகைத்து. கிளி என்பது இயற்சொல். அது கிள்ளையென வுறுப்புத் திரிந்து திரிசொல்லாயிற்று. மயில் என்பது மஞ்ஞை எனத் திரிந்ததுமது. மலை என்பது இயற்சொல். அது வரையென முழுவதுந் திரிந்து திரிசொல்லாயிற்று.

(1) கிள்ளை, சுகம், தத்தை என்பன, கிளி என்னுந் ஒரு பொருள் குறித்த பலபெயர்த் திரிசொல், வாரணம் என்பது, யானையுங் கோழியுஞ் சங்கு முதலாகிய பல பொருள் குறித்த ஒருபெயர்த் திரிசொல்.

(2) படர்ந்தான், சென்றான் என்பன, போயினான் என்னும் ஒரு பொருள் குறித்த பலவினைத் திரிசொல். வரைந்தான் என்பது, நீக்கினான், கொண்டான் என்னும் பலபொருள் குறித்த ஒருவினைத் திரிசொல்.

(3) சேறும், வருதும் என்பவற்றுள், றும், தும் என்னும் விகுதிகள், தன்மைப் பன்மையெதிர்காலம் என்னும் ஒரு பொருள் குறித்த பலவிடைத்திரிசொல். கொல் என்பது, ஐயமும் அசையுநிலையுமாகிய பலபொருள் குறித்த ஓரிடைத் திரிசொல்.

(4) சால, உறு, தவ, நனி, கூர், கழி என்பன, மிகுதி என்னும் ஒரு பொருள் குறித்த பலவுரித் திரிசொல். கடி என்பது, காப்பு, கூர்மை, அச்சம், கரிப்பு, விளக்கம், சிறப்பு, மணம் முதலிய பலபொருள் குறித்த ஒருரித்திரிசொல்.

திசைச்சொல் இதுவெனக்கூறுஞ் சூத்திரம் யாது?

செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தினும்
ஒன்பதிற் றிரண்டினிற் றமிமொழி நிலத்தினுந்
தங்குறிப் பினவே திசைச்சொலென்ப
(செந்தமிழ் நிலஞ் சேர் பன்னிரு நிலத்தினும்
ஒன்பதிற் றிரண்டினில் தமிழ்ஒழி நிலத்தினும்
தங்குறிப் பினவே திசைச்சொல் என்ப.)

இ–ள்.: செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த பன்னிரண்டு கொடுந்தமிழ் நிலங்களிலும் பதினெண்மொழிகளுள்ளே தமிழ்நிலமொழிந்த நிலங்களிலு முள்ளோர் தங்குறிப்பினவாய் அடகதிசைகளினின்றுஞ் செந்தமிழ் நிலத்து வந்து வழங்குவன திசைச்சொல்லென்று சொல்லுவர், எ–று.

பன்னிருநிலமாவன:பொங்கர்நாடு,ஒளிநாடு, தென்பாண்டி நாடு, குட்டநாடு, குடநாடு; பன்னிநாடு, கற்காநாடு, சீதநாடு, பூழிநாடு, மலைநாடு, அருவாநாடு, அருவா வடதலை எனச் செந்தமிழ்நாட்டுத் தென்கீழ்பான் முதலாக வடகீழ்பாலிறதியாக எண்ணிக் கொள்க.

இவற்றுச் செந்தமிழ்ப் பாண்டிநாட்டுக்குத் தென்றிசை யிலுள்ள தென்பாண்டிநாட்டார் ஆவினைப் பெற்ற மென்றுஞ் சோற்றைச் சொன்றியென்றும், குட்டநாட்டார் தாயைத் தள்ளையென்றும், குடநாட்டார் தந்தையை அச்சனென்றும், கற்காநாட்டார் வஞ்சரைக் கையரென்றும், பூழிநாட்டார் சிறுகுளத்தைப் பாழியென்றும், அருவா நாட்டார் செய்யைச் செறுவென்றும், சிறுகுளத்தைக் கேணியென்றும், அருவாவடதலையார் புளியை எகி னென்றும், சீதநாட்டார் தோழனை எலுவனென்றும், தோழியை இகுளையென்றும், வழங்குவர். பிறவும் வந்த விடத்துக் காண்க.

இனித் தமிழ்நிலத்தைச் சூழ்ந்த பதினேழ்நிலத்தையும்: "சிங்களஞ் சோனகஞ் சாவகஞ் சீனந் துளுக்குடகங்- கொங்கணங் கன்னடங் கொல்லந் தெலுங்கங் கலிங்கம் வங்கங்–கங்க மகதங் கடாரங் கவுடங் கடுங்குசலந்- தங்கும் புகழ்த்தமிழ் சூழ்பதினேழ்புவி தாமிவையே" என்னுங் கட்டளைக்கலித்துறையாலறிக. சிங்களம் என்றது ஈழநாட்டை.

அந்தோ என்பது சிங்களச்சொல் எருத்தைப்பாண்டில் என்பது தெலுங்குச்சொல். மாமரத்தைக் கொக்கு என்பது துளுவச் சொல். கரைய, குளிர, சிக்கவென்பன கருநாடச்சொல். ஒழிந்தன வந்தவிடங்களிற் காண்க.

வடமொழிவருமாறு கூறுஞ் சூத்திரம் யாது?

பொதுவெழுத் தானுஞ் சிறப்பெழுத் தானும்
ஈரெழுத் தானு மியைவன வடசொல்
(பொது எழுத்தானும் சிறப்பு எழுத்தானும்
ஈரெழுத்தானும் இயைவன வடசொல்)

இ–ள்.:ஆரியத்திற்குந் தமிழிற்கும் பொதுவெழுத்தாலும், ஆரியத்திற்கே யுரிய சிறப்பெழுத்துத் திரிந்த வெழுத்தாலும், இவ்விரண் டெழுத்தினாலும் செந்தமிழ்ச்சொல்லை யொப்பனவாகி வடதிசையிலிருந்து செந்தமிழ்நிலத்து வந்து வழங்குவன வடசொல்லாம். எ–று.

வ–று.:

(1) அமலம், கமலம், மேரு, காரணம், காரியம் என்பன பொதுவெழுத்தாலியைந்தன.

(2) சுகி, போகி, சுத்தி என்பன சிறப்பெழுத்தாலியைந்தன.

(3) அரன், அரி, கடினம், சலம் என்பன ஈரெழுத்தாலுமியைந்தன.

(இடுகுறி காரணம் ஒடு மரபு ஆக்கம் தொடர்ந்து தொழில் அல காலம் தோற்றா

வேற்றுமைக்கு இடன் ஆய் திணைபால் இடத்து ஒன்று ஏற்பவும் பொதுவும் ஆவன பெயரே.)

**இ—ள்.:** இடுகுறியுங் காரணக்குறியும் மரபினையும் ஆக்கப்பாட்டினையுந் தொடர்ந்து வினையாலணையுங் காரணக்குறியொன்றுங் காலங்காட்ட, அல்லாதன காலங் காட்டாதனவாகி எட்டுவேற்றுமையுஞ் சார்தற்கு இடமாகி இருதிணையிலும் ஐம்பாலிலும் மூவிடத்திலும் ஒன்றனையேற்பனவும் பலவற்றினையேற்பனவும் ஆகி வருவன பெயர்களாம், **எ—று.**

**வ—று.:**

(1) மரம், விள, பனை என்பன இடுகுறிமரபு.

(2) அவன், அவள், விலங்கு, பறவை என்பன காரணக்குறிமரபு.

(3) "பொன்போலுங்கள்ளிப்பொறிபறக்குங்கானலிலே-யென்பேதை செல்லற் கியைந்தனளே-மின்போலு-மானவேன் முட்டைக்கு மாறாய தெவ்வர்போங்-கானவேன் முட்டைக்கு மாறாய தெவ்வர்போங்-காவேன் முட்டைக்குங் காடு" என்னும் பொய்யா மொழிப்புலவர்பாட்டில், வேட்டுக்குமரன்றன்பெயர் முட்டையென்றது இடுகுறியாக்கம்.

(4) பொன்னன், பூணன், "மலைமகண் மகனே மாற்றோர் கூற்றே" என்பன காரணக்குறியாக்கம்.

(5) நடந்தவனை, நடந்தோனை, என்பன, வினையாலணையுங் காரணக்குறி காலங்காட்டின.

பெயர்கள் இடுகுறிப்பெயர் காரணப்பெயரென இரண்டாயடங்கு மென எழுத்தியலுள் "இடுகுறிகாரணம் பெயர்பொதுச் சிறப்பின" வென்னுஞ்சூத்திரத்தால் வரையறுக்கப்பட்டன, அவை மரபுபற்றியும் ஆக்கம்பற்றியும் வருமென்பது இச்சூத்திரத்தாற் கூறப்பட்டது. மரபாவது இயற்கை வழக்கு. ஆக்கமாவது செயற்கைவழக்கு.

1. இடுகுறிப்பெயராவது பிறிதோர் நிமித்தமின்றி வழக்காறேபயனாக இதற்கு இதுகுறியென்று இட்டுப்ப ண்டுதொட்டு வழங்கிவரும் பெயர்.

2. காரணப்பெயராவது ஒருநிமித்தம்பற்றி இவ்வியல்பினது இதுவென்று வழங்கிவரும் பெயர்.

உதாரணம் மரமென்பது, ஒருகாரணமும் பற்றாது வழங்கும் பெயராய்ப், பனை, பலா முதலிய பல பொருள்களுக்கும் பொதுவாய் நிற்கையால், இடுகுறிப்பொதுப்பெயர். பனை பலா என்பன, ஒரு காரணமும் பற்றாதுவழங்கும் பெயராய், ஒவ்வொரு பொருளுக்கே சிறப்பாய் நிற்கையால், இடுகுறிச்சிறப்புப்பெயர். அணியென்பது, அணியப்படுதலாகிய காரணம் பற்றி வழங்கும் பெயராய், இடுவன தொடுவன கட்டுவன கவிப்பன முதலிய ஆபரணங்கள் பலவற்றிற்கும் பொதுவாய் நிற்கையாற், காரணப்பொதுப்பெயர். முடி கழல் என்பன, முடியிற் கவிக்கப்படுவதுங்கழலிற் கட்டப்பவதுமாகிய காரணம்பற்றி வழங்கும் பெயராய், ஒவ்வொருபொருளுக்கே சிறப்பாய் நிற்கையாற், காரணச் சிறப்புப்பெயர்.

இச்சூத்திரத்திற்கு இவ்வாறன்றி வேறு பொருளுரைப்பாரு முளர்:—

இடுகுறிப்பெயர், காரணப்பெயர், மரபுபற்றிவரும்பெயர்,

ஆக்கம்பற்றிவரும்பெயர் எனப் பெயர் நான்காம். நிலம் நீர் சோறு முதலியன இடுகுறிப்பெயர். குழையன் நிலத்தன் கரியன் முதலியன காரணப்பெயர். இடையன் பாகன் முதலியன மரபுபற்றியபெயர். தெங்கு கழுகு என்பன முதலியன ஆக்கம்பற்றியபெயர். இவற்றுள் இடையன் என்பது இடைத்தொழில்புரியாதானுக்கும் அவ்வமிசம்பற்றிவருதலின் அத்தொழிற் காரணமின்றி மரபுபற்றியபெயர். தெங்குதின்றான் என்புழித் தெங்கென்பது கனிக்காதலின் ஆக்கம்பற்றியபெயர். இதுவே சிறந்த கொள்கையாம்.

திணைபாலிடங்களுள் ஒவ்வொன்றற்கே யுரியவாய் வருமென்ற பெயர்களுள் உயர்திணையாண்பாற்குரிய பெயர்கள் யாவை?

**அவற்றுள்,–**

**கிளையெண் குழூஉமுதற் பல்பொரு டிணைதேம்**
**ஊர்வா னகம்புற முதல் நிலன்யாண்**
**டிருது மதிநா ளாதிக் காலந்**
**தோள்குழன் மார்புகண் காது முதலுறுப்**
**பள்வறி வொப்பு வடிவு நிறங்கதி**
**சாதி குடிசிறப் பாதிப் பல்குணம்**
**ஓத லீத லாதிப் பல்வினை**
**இவையடை சுட்டு வினாப்பிற மற்றோ**
**டுற்றவவ்வீறு நம்பி யாடூஉ**
**விடலை கோவேள் குரிசி றோன்றல்**
**இன்னன வாண்பெய ராகு மென்ப.**

**(அவற்றுள்,–**
**கிளை எண் குழூஉ முதல் பல்பொருள் திணை தேம்**
**ஊர் வான் அகம் புறம் முதல நிலன், யாண்டு**
**இருது மதி நாள் ஆதிக் காலம்**
**தோள் குழல் மார்பு கண் காது முதல் உறுப்பு**
**அளவு அறிவு ஒப்பு வடிவு நிறம் கதி**
**சாதி குடி சிறப்பு ஆதி பல்குணம்**
**ஓதல் ஈதல் ஆதி பல்வினை**
**இவை அடை சுட்டு வினா பிற மற்றோடு**
**உற்ற னவ்வீறு நம்பி ஆடூஉ**
**விடலை கோ வேள் குரிசில் தோன்றல்**
**இன்னன ஆண்பெயர் ஆகும் என்ப.)**

**இ–ள்.:** மேற் பெயரேயென்றவற்றுள் சுற்றமும் எண்ணுங் கூட்டமும் முதலாகிய பலபொருள்களோடும், ஐந்திணையும் தேயமும் ஊரும் வானும் அகமும் புறமும் முதலியனவாகிய இடங்களோடும், வருடமும், பருவமும் மாதமும்

நாண்மீனும் முதலாகிய காலங்களோடும், புயமும் மயிரும் மார்பும் கண்ணுங் காதும் முதலாகிய அவயவங்களோடும், அளவும் அறிவும் ஒப்பும் வடிவும் நிறமும் நாற்கதியுஞ் சாதியுங் குடியுஞ் சிறப்பும் முதலாகிய பல குணங்களோடும், ஓதுதலுங் கொடுத்தலும்முதலாகிய பல தொழில்களோடும், இவற்றையடைந்த சுட்டும் வினாவும் பிறவும் மற்றுமாகியநான்கனோடும் பொருந்திய னகரமெய்யீற்றுப் பெயர்களும் நம்பி முதலாகச் சொல்லப்பட்ட இப்பெயர்களும் இவை போல்வன பிறவும் உயர்திணையாண்பாற் பெயர்களும் என்று சொல்லுவர் புலவர். **எ—று.**

**வரலாறு**

**(1) பொருளால் வரு பெயர்களாவன:—**

தமன், நமன், நுமன், எமன் என்பன கிளையால் வருபெயர்.

ஒருவன் என்பது எண்ணால் வருபெயர்

அவையத்தான். அத்திகோசத்தான் என்பன குழூஉவால் வருபெயர்.

பொருளன், பொன்னன், முடியன் என்பன முதலென்றதனால் வருபெயர்.

**(2) இடத்தால் வரு பெயர்களாவன:—**

வெற்பன், பொருப்பன் என்பன குறிஞ்சித்திணையால் வருபெயர்.

மறவன், எயினன் என்பன பாலைத்திணையால் வருபெயர்

இடையன், ஆயன் என்பன முல்லைத்திணையால் வருபெயர்.

ஊரன், மகிழ்நன் என்பன மருதத்திணையால் வருபெயர்.

சேர்ப்பன், துறைவன் என்பன நெய்தற்றிணையால் வருபெயர்.

சோழியன், கொங்கன் என்பன தேயத்தால் வருபெயர்.

கருவூரான், மதுரையான் என்பன ஊரால் வருபெயர்.

வானத்தான், அகத்தான், புறத்தான் என்பன வான்முதலிய மூன்றாலும் வருபெயர்.

**(3) காலத்தால் வரு பெயர்களாவன:—**

மூவாட்டையான், பிரபவன் என்பன வருடத்தால் வருபெயர்.

வேனிலான், காரான் என்பன பருவத்தால் வருபெயர்.

தையான், மாசியான் என்பன மாதத்தால் வருபெயர்.

ஆதிரையான், ஓணத்தான் என்பன நாண்மீனால் வருபெயர்.

நெருநலான், காலையான் என்பன ஆதியென்றதனால் வருபெயர்.

(4) சினையால் வருபெயர்களாவன:—

திணிதோளன்; செங்குஞ்சியன், வரைமார்பன், செங்கண்ணன், குழைக்காதன் என்பன தோண்முதலிய ஐந்துறுப்பாலும் வருபெயர்.

குறுந்தாளன், நெடுங்கையன் என்பன முதலென்றதனால் வருபெயர்.

**(5) குணத்தால் வருபெயர்களாவன:—**

பெரியன், சிறியன் என்பன அளவால் வருபெயர்.

அறிஞன், புலவன் என்பன அறிவால் வருபெயர்.

பொன்னொப்பான், மணியனையான் என்பன ஒப்பால் வருபெயர்.

கூனன், குறளன் என்பன வடிவால் வருபெயர்.

கரியன், செய்யன் என்பன நிறத்தால் வருபெயர்.

மானுடன், தேவன் என்பன கதியால் வருபெயர்.

அந்தணன், வேளாளன் என்பன சாதியால் வருபெயர்.

சேரன், சோழன், பாண்டியன் என்பன குடியால் வருபெயர்.

ஆசிரியன், படைத்தலைவன் என்பன சிறப்பால் வருபெயர்.

நல்லன் தீயன் என்பன ஆதியென்றதனால் வருபெயர்.

**(6) தொழிலால் வரு பெயர்களாவன:–**

ஓதுவான், ஈவான் என்பன ஓதன் முதலாகிய இரண்டாலும் வருபெயர்.

கணக்கன், தச்சன் என்பன ஆதியென்றதனால் வருபெயர்.

**(7) சுட்டால் வரு பெயர் முதலானவை:–**

அவன், இவன், உவன் என்பன சுட்டிடைச்சொல்லால் வருபெயர்.

எவன், ஏவன், யாவன் என்பன வினாவிடைச்சொல்லால் வருபெயர்.

பிறன், மற்றையான் என்பன பிற மற்று என்பவற்றால் வருபெயர்.

(8) நம்பி முதலாகிய ஏழுபெயர்களும் உரைக்கிடையிற் காண்க.

இன்னன என்றதனால், வில்லி, வாளி, கிள்ளி, சென்னி, ஏந்தல், செம்மல், ஏனாதி, காவிதி, குடுமி, அண்ணல் என உயர்திணை யாண்பாற்பொருள் குறித்து வருவனவெல்லாங் கொள்க.

சுட்டு, வினா, பிற, மற்று என்னும் இந்நான்கிடைச் சொல்லையும் பற்றி வரும் பெயர்கள், பொருளாதியாறனுள்ளே, சொல்லுவான் குறிப்பின்படி, ஒன்றில் அடங்கும்.

உயர்திணைப் பெண்பாற் பெயர்கள் யாவை?

கிளைமுத லாகக் கிளந்த பொருள்களுள்
ளவ்வொற் றிகரக் கேற்ற வீற்றவுந்
தோழி செவிலி மகடூஉ நங்கை
யையலோ டின்னன பெண்பாற்பெயரே

(கிளை முதல் ஆகக் கிளந்த பொருள்களுள்
ளவ்வொற்று இகரக்கு ஏற்ற ஈற்றவும்
தோழி செவிலி மகடூஉ நங்கை
ஐயலோடு இன்னன பெண்பாற் பெயரே)

**இ–ள்.:** மேலைச்சூத்திரத்துச் சுற்றமுதலாகப் பகுத்துச் சொல்லப்பட்ட அறுவகைப்பொருள்களுள் ளகர மெய்யும் இகர வுயிரும் பொருந்துதற்கு ஏற்ற அவ்விரண்டீற்றுப் பெயர்களும் தோழி முதலாக எடுத்துச்சொல்லப்பட்ட பெயர்களுமாகிய இவற்றுடனே இவைபோல்வன பிறவும் உயர்திணைப் பெண்பாற் பெயர்களாம்.

வரலாறு

(1) **பொருளால் வரு பெயர்:-** தமள், நமள், நுமள், எமள் எனவும், ஒருத்தி. எனவும், அவையத்தாள், அவையத்தி. எனவும், பொன்னாள், பொன்னி, எனவும் வரும்.

(2) **குடத்தால் வரு பெயர்:-** குறத்தி, எயிற்றி, ஆய்ச்சி, உழத்தி, பரத்தி எனவும், வானத்தாள், வானத்தி எனவும், அகத்தாள், அகத்தி எனவும், புறத்தாள், புறத்தி எனவும், மண்ணகத்தாள், மண்ணகத்தி எனவும் வரும்.

(3) **காலத்தால் வரு பெயர்:-** மூவாட்டையாள், எனவும், வேனிலாள் எனவும், தையாள் எனவும், ஆதிரையாள் எனவும், நெருநலாள் எனவும் வரும்.

(4) **சினையால் வரு பெயர்:-** திணிதோளாள், திணிதோளி எனவும், கரிகுழலாள், கரிகுழலி எனவும், நெடுமார்பாள், நெடுமார்பி எனவும், தடங்கண்ணாள், தடங்கண்ணி. எனவும், குழைக்காதாள், குழைக்காதி எனவும், குறுந்தாளாள், குறுந்தாளி எனவும் வரும்.

(5) **குணத்தால் வரு பெயர்:-** பெரியள். எனவும், புலமையள் எனவும், பொன்னொப்பாள் எனவும், கூனள், கூனி எனவும், கரியள் எனவும், மானுடத்தி எனவும், பார்ப்பினி எனவும், கடைத்தலைவி எனவும், நல்லள் எனவும் வரும்.

(6) **தொழிலால் வரு பெயர்:-** ஓதுவாள். எனவும், ஈவாள், எனவும், தச்சிச்சி. எனவும் வரும்.

(7) **சுட்டால் வரு பெயர்முதலானவை:-** அவள், இவள், உமவள் எனவும், எவள், ஏவள், யாவள் எனவும், பிறள் எனவும், மற்றையாள் எனவும் வரும்.

(8) தோழி முதலிய ஐந்து பெயரும் உரைக்கிடையிற் காண்க.

இன்னன என்றதனால், பேதை, பெதும்பை, இகுளை, மடந்தை, மாது, பாங்கி, பெண்டு, பெண்டாட்டி என உயர்திணைப்பால் குறித்து வருவனவெல்லாங் கொள்க.

உயர்திணைப் பலர்பாற்பெயர்கள் யாவை?

கிளந்த கிளைமுத லுற்ற ரவ் வீற்றவுங்
கள்ளெ னீற்றி னேற்பவும் பிறவும்
பல்லோர் பெயரின் பகுதி யாகும்.
(கிளந்த கிளை முதல் உற்ற ரவ்வீற்றவும்
கள் என் ஈற்றின் ஏற்பவும் பிறவும்
பல்லோர் பெயரின் பகுதி ஆகும்.)

**இ—ள்.::** முன்னே சொல்லப்பட்ட சுற்றமுதலாகிய அறுவகைப் பொருளையும் பொருந்திய ரகர மெய்யீற்றுப்பெயர்களும் கள்ளென்னும் விகுதியை ஈறாகவுடைய பெயர்களுள் இவ்விடத்துக்குப் பொருந்தி வருவனவும் இவைபோல்வன பிறவும் உயர்திணைப்பலர்பாற்பெயர்களாம். **எ—று.**

கள் விகுதி அஃறிணைப்பன்மைக்கும் வருதலால், ஏற்பவுமென்றார்.

**வ—று.:**

**தமர்,** நமர், நுமர், எமர், இருவர், மூவர் எனப் பொருளாதியாறனோடுமொட்டுக.

கோக்கள், மனுக்கள், என்றற்றொடக்கத்தன பகுதிப்பொருள் விகுதியீற்றுப்பெயர்கள்.

தமர்கள், நமர்கள் என்றற்றொடக்கத்தன விகுதிமேல் விகுதியீற்றுப்பெயர்கள்.

பிற என்றமையால், மாந்தர், மக்கள், மகார், சிறார், வேளிர், எனப் பலர்பாலைக் குறித்து வருவனவெல்லாங் கொள்க.

அஃறிணை ஒருமைப்பாற்பெயர்கள் யாவை?

வினாச்சுட்டுடனும் வேறு மாம்பொருள்
ஆதி யுறுதுச் சுட்டணை யாய்தம்
ஒன்றனெண் ணின்னன வொன்றன்பெயரே.

(வினாச் சுட்டு உடனும் வேறும் ஆம் பொருள்
ஆதி உறுது சுட்டு அணை ஆய்தம்
ஒன்றன் எண் இன்னன ஒன்றன் பெயரே.)

**இ–ள்.:** வினாவிலுஞ் சுட்டிலும் மறைந்து அவற்றுடனாகியும் வினாவவுஞ் சுட்டவும்படாது வேறாகியும் வரும் பொருளாதியாறனையும் பொருந்திய துவ்விகுதியீற்றுப் பெயரும் சுட்டொடு கூடிய ஆய்தத்தைப் பொருந்திய துவ்விகுதி யீற்றுப் பெயரும் ஒன்றென்னும் எண்ணாகுபெயரும் இவை போல்வன பிறவும் அஃறிணை யொருமைப்பாற் பெயராகும், **எ–று.**

**வ–று.:**

(1) எது, ஏது, யாது எனவும், அது, இது, உது எனவும், வினாவிலுஞ் சுட்டிலும் மறைந்து அவற்றுடனாகிப் பொருளாதியாறையும் பொருந்திய துவ்விகுதி யீற்றுப் பெயர்கள் வரும்.

(2) குழையது, நிலத்தது, மூலத்தது, கோட்டது, குறியது, ஆடலது என வினாவவுஞ் சுட்டவும்படாது வேறாகிப் பொருளாதியாறையும் பொருந்திய துவ்விகுதி யீற்றுப்பெயர்கள் வரும்.

(3) அஃது, இஃது, உஃது எனச் சுட்டோடுகூடிய ஆய்தத்தைப் பொருந்திய துவ்விகுதி யீற்றுப் பெயர்கள் வரும்.

(4) ஒன்று என எண்ணாகுபெயர் வரும்.

இன்னன என்றமையால், பிறிது, மற்றையது என அஃறிணை ஒருமைப்பொருள் குறித்து வருவனவெல்லாங்கொள்க.

அஃறிணைப் பன்மைப்பாற்பெயர்கள் யாவை?

முன்ன ரவ்வொடு வருவை யவ்வுஞ்
சுட்டிறு வவ்வுங் கள்ளிறு மொழியும்
ஒன்ற லெண்ணு முள்ள வில்ல
பல்ல சில்ல வுளவில பலசில
இன்னவும் பலவின் பெயரா கும்மே.

(முன்னர் அவ்வொடு வருவை அவ்வும்
சுட்டு இறு வவ்வும் கள் இறுமொழியும்
ஒன்று அல் எண்ணும் உள்ள இல்ல
பல்ல சில்ல உள இல பல சில
இன்னவும் பலவின் பெயரா கும்மே.

**இ—ள்.:** முன்னே சொல்லப்பட்ட வினாச்சுட்டுடனும் வேறுமாம் பொருளாதியாறனோடும் ஏற்றபடி வரும் வை விகுதி யீற்றுப் பெயர்களும், அகரவீற்றுப்பெயர்களும், வகரமெய்யீற்றுச் சுட்டுப்பெயர்களும், கள்ளென்னும், குதிப்பொருள் விகுதியீற்றுப் பெயர்களும், இரண்டு முதலாகி எண்ணாகுபெயர்களும் உள்ளவென்பது முதலாகிய குறிப்புவினையாவணைத்த எட்டுப் பெயர்களும், இவை போல்வன பிறவும் அஃறிணைப் பன்மைப்பாற் பெயர்களாகும். **எ—று.**

**வ—று.:**

(1) எவை, ஏவை, யாவை எனவும், அவை, இவை, உவை. எனவும், நெடியவை, கரியவை எனவும், வை விகுதிப் பெயர்கள் வரும்.

(2) பொருள, பொருளன; அகத்த, அகத்தன; மூலத்து, மூலத்தன; கோட்ட. கோட்டன; கரிய, கரியன; ஓதுவ, ஓதுவன என அன்சாரியை பெற்றும் பெறாதும் அகரவிகுதிப் பெயர்கள் வரும்.

(3) அவ், இவ், உவ் என வகரமெய்யீற்றுச் சுட்டுப்பெயர்கள் வரும்.

(4) யானைகள், குதிரைகள் எனக் கள் விகுதிப் பெயர்கள் வரும்.

(5) இரண்டு, மூன்று, பத்து, நூறு என எண்ணாகு பெயர்கள் வரும்.

(6) உள்ள முதலாகிய எட்டும் உரைக்கிடையிற் காண்க.

**'இன்னவும்'** என்றமையால், யா, பிற, மற்றைய என அஃறிணைப்பன்மைப்பொருள் குறித்து வருவனவெல்லாங் கொள்க.

இவ்வைம்பாற் பெயர்களுள், ஆண்பாற்பெயர்க்கு "னவ்வீற்று" எனவே அன், ஆன், மன், மான், ன் இவ்வைந்தும், பெண்பாற் பெயர்க்கு "ளவ்வொற்று" எனவே, அள், ஆள், ள் இம்மூன்றும், பலர்பாற்பெயர்க்கு "ரவ்வீற்ற" எனவே, அர், ஆர், மார், இன்னான்கும் அடங்குதலறிக.

அஃறிணையில் இருபாலுக்கும் பொதுவாய்வரும் பெயர்கள் யாவை?

பால்பகா வஃறிணைப் பெர்கள்பாற் பொதுமைய. (பால்பகா அஃறிணைப் பெயர்கள் பாற் பொதுமைய.)

**இ—ள்.:** அஃறிணைப் பெயர்களுள் இப்படிப் பால் பகுக்கப்படாத பெயர்களனைத்தும் அத்திணையிருபாற்கும் பொதுப்பெயர்களாம். **எ—று.**

பால்பகாவஃறிணைப் பெயரெனினும் அஃறிணையியற் பெயரெனினும் பொருந்தும்.

**வ—று.:**

பறவை வந்தது, பறவை வந்தன, மரம் வளர்ந்தது. மரம் வளர்ந்தன என வரும். இவை, பறவை. அலரி எனப் பகுபதமும், மரம், பனை எனப் பகாப்பதமுமாக வரும்.

இருதிணைப் பொதுப்பெயர்கள் இவையெனத் தொகுத்துணர்த்துஞ் சூத்திரம் யாது?

முதற்பெயர் நான்குஞ் சினைப்பெயர் நான்குஞ்
சினைமுதற் பெயரொரு நான்குமுறை யிரண்டுந்
தன்மை நான்கு முன்னிலை யைந்தும்
எல்லாந் தாந்தா னின்னன பொதுப்பெயர்.

(முதற்பெயர் நான்கும் நினைப்பெயர் நான்கும்
சினைமுதற்பெயர் ஒருநான்கும் முறை இரண்டும்
தன்மை நான்கும் முன்னிலை யைந்தும்
எல்லாம் தாம் தான் இன்னன பொதுப்பெயர்.)

**இ–ள்.:** சாத்தன், சாத்தி, கோதை, யானை என்றாற்போல வழங்கு தற்பயத்தவாய நிமித்தமின்றிப் பொருள்பற்றி வரும் இடுகுறிப்பெயராகிய முதற்பெயர்வகை நான்கும். முடவன் முடத்தி செவியிலி நெடுங்கழுத்தல் என்றாற்போலச் சினையுடைமையாகிய நிமித்தம் பற்றி முதன்மேல் வருஞ் சினைப்பெயர்வகை நான்கும், முடக்கொற்றன் முடக்கொற்றி கொடும்புறமருதி பெருங்கால்யானை என்றாற்போலச் சினைப்பெயரோடு தொடர்ந்தல்லது பொருளுணர்த்தாது வருஞ் சினைமுதற்பெயர் வகை நான்கும், தந்தை தாய் என்றாற்போலப் பிறவியான் ஒருவரோடு ஒருவர்க்கு உளதாம் இயைபுபற்றி வரும் பெயராகிய முறையுடைப்பொருண்மேல் வரும் முறைப்பெயர்வகை இரண்டும், யான் நான் யாம் நாம் எனவருந் தன்மைப்பெயர் வகை நான்கும், எல்லீரும் நீயிர் நீவிர் நீர் நீ எனவரும் முன்னிலைப்பெயர்வகை ஐந்தும், எல்லாம் எனவும் தாம் எனவும் தான் எனவும் விதந்தோதப்பட்ட பெயர்வகை மூன்றுமாகிய இருபத்தாறுபெயரும் இவைபோல்வன பிறவும் விரவுப்பெயர்களாம், **எ–று.**

இன்னன என்றமையால், சூரியனுதித்தான், சூரியனுதித்து; சந்திரனுதித்தான், சந்திரனுதித்தது என ஒருபொருளையே உயர்திணைப் பொருளாக்கியும் அஃறிணைப்பொருளாக்கியுங் கூறும் பொதுப்பெயர் முதலானவையும், ஊமைவந்தான், ஊமைவந்தாள் என உயர்திணை யிருபாலையும் உணர்த்தும் பொதுப்பெயர் முதலானவையும், தன்மை முன்னிலை வினையாலணையும் பெயர்களும் பிறவுங் கொள்க.

முதற்பெயர் முதலிய மூன்றும் முறைப்பெயரும் பால் வகையால் இத்தனையா மெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

ஆண்மை பெண்மை யொருமை பன்மையின்
ஆமந் நான்மைக ளாண்பெண் முறைப்பெயர்.

(ஆண்மை பெண்மை ஒருமை பன்மையின்
ஆம் அந் நான்மைகள் ஆண் பெண் முறைப்பெயர்.)

**இ–ள்.:** ஆண்மை முதலாகிய இந்நான்கு பாலுங் காரணமாக அம்முதற்பெயர் சினைப்பெயர் சினைமுதற்பெயர் என்னு மூன்றும் ஒவ்வொன்று

நந்நான்காகும். ஆண்மை பெண்மை என்னும் இருபாலுங் காரணமாக முறைப்பெயர் இரண்டாகும். **எ—று.**

**வ—று.:**

(1) சாத்தன் ஆண்மைமுதற்பெயர். சாத்தி பெண்மை முதற்பெயர். கோதை ஒருமைமுதற்பெயர். கோதைகள் பன்மைமுதற்பெயர். ஆக 4.

(2) முடவன் ஆண்மைச் சினைப்பெயர். முடத்தி பெண்மைச் சினைப்பெயர். செவியிலி ஒருமைச் சினைப்பெயர். செவியிலிகள் பன்மைச் சினைப்பெயர். ஆக 4.

(3) முடக்கொற்றன் ஆண்மைச்சினைமுதற்பெயர். முடக் கொற்றி பெண்மைச் சினைமுதற்பெயர். கொடும்புறமருதி ஒருமைச் சினைமுதற்பெயர். கொடும்புறமருதிகள் பன்மைச் சினைமுதற்பெயர். ஆக 4.

(4) தந்தை ஆண்மைமுறைப்பெயர். தாய் பெண்மை முறைப்பெயர். ஆக 2.

அவை இருதிணையிலும் பால்களை யேற்குமாறு கூறுஞ் சூத்திரம் யாது?

அவற்றுள்,
ஒன்றே யிருதிணைத் தன்பா லேற்கும்.

(அவற்றுள்,
ஒன்றே இருதிணைத் தன்பால் ஏற்கும்.)

**இ—ள்.:** முதற்பெயர் முதலாகச் சொல்லப்படும் இருபத்தாறும் பிறவுமாகிய பொதுப்பெயர்களுள் ஒவ்வொன்றே இருதிணையிலுந் தன்றன் பால்களை ஏற்று வரும், **எ—று.**

எனவே, ஆண்மைப்பொதுப்பெயர் உயர்திணை யாண்பாலையும் அஃறிணை யாண்பாலையும், பெண்மைப் பொதுப்பெயர் உயர்திணைப் பெண்பாலையும் அஃறிணைப் பெண்பாலையும், ஒருமைப் பொதுப்பெயர் உயர்திணை யாணொருமை பெண்ணொருமைகளையும் அஃறிணை யொருமையையும், பன்மைப் பொதுப்பெயர் உயர்திணைப் பன்மையையும் அஃறிணைப் பன்மையையும் ஏற்கு மென்பதாயிற்று.

**வரலாறு**

**(1) முதற்பெயர் நான்கு:—**

சாத்தனிவன், சாத்தனிவ்வெருது என ஆண்மை முதற்பெயர் இருதிணை யாண்பாற்கும் பொதுவாயிற்று.

சர்த்தியிவள், சாத்தியிப்பசு எனப் பெண்மை முதற்பெயர் இருதிணைப் பெண்பாற்கும் பொதுவாயிற்று.

கோதையிவன், கோதையிவள், கோதையிது என ஒருமை முதற்பெயர் இருதிணை யொருமை மூன்றற்கும் பொதுவாயிற்று.

கோதைகளிவர், கோதைகளிவை எனப் பன்மை முதற்பெயர் இருதிணைப்பன்மைக்கும் பொதுவாயிற்று.

**(2) சினைப்பெயர் நான்கு:—**

முடவனிவன், முடவனிவ்வெருது என ஆண்மைச் சினைப்பெயர் இருதிணை யாண்பாற்கும் பொதுவாயிற்று.

முடத்தியிவள், முடத்தியிப்பசு எனப் பெண்மைச் சினைப்பெயர் இருதிணைப் பெண்பாற்கும் பொதுவாயிற்று.

செவிலியிவன், செவியிலியள், செவியிலியிது என ஒருமைச் சினைப்பெயர் இருதிணை யொருமை மூன்றற்கும் பொதுவாயிற்று.

செவியிலிகளிவர், செவியிலிகளிவை எனப் பன்மைச் சினைப் பெயர் இருதிணைப் பன்மைக்கும் பொதுவாயிற்று.

**(3) சினைமுதற்பெயர் நான்கு:–**

முடக்கொற்றனிவன், முடக்கொற்றனிவ்வெருது என ஆண்மைச் சினைமுதற்பெயர் இருதிணைப் பெண்பாற்கும் பொதுவாயிற்று.

முடக்கொற்றியிவள், முடக்கொற்றியிப்பசு எனப் பெண்மைச் சினைமுதற்பெயர் இருதிணைப் பெண்பாற்கும் பொதுவாயிற்று.

கொடும்புறமருதியிவன், கொடும்புறமருதியிவள், கொடும்புற மருதியிது என ஒருமைச் சினைமுதற்பெயர் இருதிணை யொருமை மூன்றற்கும் பொதுவாயிற்று.

கொடும்புற மருதிகளிவர், கொடும்புறமருதிகளிவை எனப் பன்மைச் சினைமுதற்பெயர் இருதிணைப் பன்மைக்கும் பொதுவாயிற்று.

**(4) முறைப்பெயர் இரண்டு:–**

தந்தையிவன், தந்தையிவ்வெருது என ஆண்மை முறைப்பெயர் இருதிணை யாண்பாற்கும்பொதுவாயிற்று.

தாயிவள், தாயிப்பசு எனப் பெண்மை முறைப்பெயர் இருதிணைப் பெண்பாற்கும் பொதுவாயிற்று.

**(5) தன்மைப்பெயர் நான்கு:–**

யானம்பி, யானங்கை, யான்பூதம் என யானென்னுந் தன்மைப் பெயர் இருதிணை யொருமை மூன்றற்கும் பொதுவாயிற்று. நானென்பதனோடும் இவ்வாறொட்டுக.

யாமக்கள், யாம்பூதங்கள் என யாமென்னுந் தன்மைப்பெயர் இருதிணைப் பன்மைக்கும் பொதுவாயிற்று நாமென்பத னோடும் இவ்வாறொட்டுக.

**(6) முன்னிலைப்பெயர் ஐந்து:–**

நீநம்பி, நீநங்கை, நீபூதம் என நீயென்னு முன்னிலைப்பெயர் இருதிணை யொருமை மூன்றற்கும் பொதுவாயிற்று.

நீர்மக்கள், நீர்பூதங்கள் என நீரென்னு முன்னிலைப் பெயர் இருதிணைப் பன்மைக்கும் பொதுவாயிற்று.

எல்லீர், நீயிர், நீவிர் என்பவற்றோடும் இவ்வாறொட்டுக.

**(7) எல்லாம், தாம், தான்:–**

அவரெல்லாம், அவையெல்லாம் என எல்லாமென்பது இரு திணைப் பன்மைக்கும் பொதுவாயிற்று.

அவர்தாம், அவைதாம், எனத் தானென்பது இருதிணைப் பன்மைக்கும் பொதுவாயிற்று.

அவன்றான், அவடான், அதுதான் எனத் தானென்பது இருதிணை யொருமை மூன்றற்கும் பொதுவாயிற்று.

தன்மை முன்னிலை படர்க்கைப்பெயர்கள் இவையெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

தன்மை யானான் யாநா முன்னிலை
எல்லீர் நீயிர் நீவிர் நீர்நீ
அல்லன படர்க்கை யெல்லாமெனல்பொது.

(தன்னை யான் நான் யாம் நாம் முன்னிலை
எல்லீர் நீயிர் நீவிர் நீர் நீ
அல்லன படர்க்கை எல்லாம் எனல் பொது.)

**இ—ள்.:** தன்மைப்பெயர் நான்காவன யான் நான் யாம் நாம் என்பனவாம். முன்னிலைப்பெயரைந்தாவன எல்லீர் நீயிர் நீவிர் நீர் நீ என்பனவாம். இவ்வென்பது மல்லாத பெயர்களெல்லாம் படர்க்கையிடத்திற் குரியனவாம் அவற்றுள் எல்லாமென்னும் பெயரொன்றும் மூவிடத்திற்கு முரித்தாம். **எ—று.**

எல்லாமென்பது மூவிடத்தும் வருமாறு: யாமெல்லாம், நீரெல்லாம், அவரெல்லாம், அவையெல்லாம் என வரும்.

தொழிற்பெயர்க்கும் வினையாலணையும் பெயர்க்கும் இடங் கூறுஞ் சூத்திரம் யாது?

வினையின் பெயரே படர்க்கை வினையால்
அணையும் பெயரே யாண்டு மாகும்.

(வினையின் பெயரே படர்க்கை; வினையால்
அணையும் பெயரே யாண்டும் ஆகும்.)

**இ—ள்.:** வினைப்பெயர்கள் படர்க்கையிடத்திற்கே உரியவாகும்; வினையாலணையும் பெயர்கள் தனித்தனி மூவிடத்திற்கு முரியவாகும். **எ—று.**

வினைப்பெயரெனினுந் தொழிற்பெயரெனினும் ஒக்கும்.

**வ—று.:**

உணல் தினல் செலவு வரவு என்றாற்போல்வன வினையின் பெயராய் அவ்வப் புடைபெயர்ச்சி உணர்த்திப் படர்க்கைக்கும் உரியவாய்நின்றன. பூசல் வேட்டை கூத்து என்றாற் போல்வன வினையின் பெயராய்ப் படைபெயர்ச்சி உணர்த்தாது நின்றன. இவையும் அன்ன. வந்தான் வந்தாள் வந்தேன் வந்தேம் வந்தாய் வந்தீர் என்றாற்போல்வன வினையாலணையும் பெயராய்ப் பிறிதுபொருள் உணர்த்தி மூன்றிடத்திற்கும் உரியவாய் நின்றன. இவை பெயராயினபொழுது உருபேற்றலும் வினையாயினபொழுது பெயர்கொண்டு முடிதலுந் தம்முள் வேறுபாடென்று உணர்க. வந்தவன் சென்றவன் என்றாற் போல்வனவும் வினையாலணையும் பெயரேயாம். பிறவும் அன்ன.

மேலே தன்மை முன்னிலை படர்க்கைப்பெயர்கள் இவையெனக் கூறியபின் இச்சூத்திரம் யாதுபற்றிக் கூறப்பட்டது.

வினையாலணையும் பெயரே யாண்டுமாகும் என்றது வினையாலணைய்ும் பெயர்க்கு “அல்லன படர்க்கை” என்றதனால் எய்தியது விலக்கி இடம் வகுத்தது;

வினையின் பெயரே படர்க்கை என்றது சில வினைப்பெயருக்கு "அல்லன படர்க்கை" என்றதனால் எய்திய இடம் இங்கே யாண்டுமாகும் என்பதனால் இகந்துபடாமற் காத்தது.

ஒருமை பன்மைகளுக்குரிய பன்னிருபெயர்கள் கூறுஞ் சூத்திரம் யாது?

தான்யா னானீ யொருமை பன்மைதாம்
யாநா மெலாமெலீர் நீயிர்நீர் நீவிர்.

(தான் யான் நான் நீ ஒருமை; பன்மை தாம்
யாம் நாம் எல்லாம் எல்லீர் நீயிர் நீர் நீவிர்.)

**இ—ள்.:** தான் யான் நான் நீ என்னு நான்கும் இருதிணை முக்கூற்றொருமைப் பெயர்களாம்; தாம் யாம் நாம் எல்லாம் எல்லீர் நீயிர் நீர் நீவிர் என்னு மெட்டும் இருதிணை யிருகூற்றுப் பன்மைப் பெயர்களாம், **எ—று.**

இருதிணை முக்கூற் றொருமை இருதிணை யிருகூற்றுப் பன்மை யென்பன யாவை?

இருதிணை முக்கூற்றொருமை யென்பது உயர்திணை யாணொருமை உயர்திணைப் பெண்ணொருமை அஃறிணை யொருமைகளை இருதிணை யிருகூற்றுப் பன்மை யென்றது உயர்திணைப் பன்மை அஃறிணைப் பன்மைகளை.

உயர்திணை யாண்பாற்பெயரும் பெண்பாற்பெயரும் எவ்வெண்ணின் மேல் வரும்?

ஒருவனொருத்திப்பெயர்மேலெண்ணில.

(ஒருவன் ஒருத்தி பெயர் மேல் எண் இல.)

**இ—ள்.:** உயர்திணை யாண்பாற்பெயரும் பெண்பாற்பெயரும் எண்ணடியாகத் தோன்றுங்காலத்து ஒன்றென்பது அடியாக ஒருவன் ஒருத்தி யெனத் தோன்றுவதல்லது அதன்மேல் நின்ற இரண்டு முதலிய எண்ணடியாக இருவன் இருத்தியெனத் தோன்றுதல் உளவாகா, **எ—று.**

ஒருவர் என்பது எப்பால் வினைகளைக்கொண்டு முடியும்?

ஒருவ ரென்ப துயரிரு பாற்றாய்ப்
பன்மை வினைகொளும் பாங்கிற் றென்ப.

(ஒருவர் என்பது உயர் இருபாற்று ஆய்ப்
பன்மை வினை கொளும் பாங்கிற்று என்ப.)

**இ—ள்.:** ஒருவரென வழங்குஞ் சொல் உயர்திணை ஒருவன் ஒருத்தி என்னுமிருபாற்கும் பொதுவாய் அத்திணைப் பன்மை வாய்பாட்டு வினையைக் கொண்டு முடியும் பாங்கினை யுடைத்தாகும் என்று சொல்லுவர் புலவர், **எ—று.**

ஆகுபெயராவது யாது?

பொருண்முத லாறோ டளவைசொற் றானி
கருவி காரியங் கருத்த னாதியுள்
ஒன்றன் பெயரா னதற்கியை பிறிதைத்

தொன்முறை யுரைப்பன வாகு பெயரே.

பொருள் முதல் ஆறோடு அளவை சொல் தானி
கருவி காரியம் கருத்தன் ஆதியுள்
ஒன்றன் பெயரான் அதற்கு இயை பிறிதைத்
தொன்முறை உரைப்பன ஆகுபெயரே.

**இ—ள்.:** பொருளிடங் காலஞ் சினை குணந் தொழிலென்னு மாறுடனே, இவற்றின் பகுதியவாகிய நால் வகையளவையும், சொல்லும், தானியம், காரணமும்,காரியமும்,வினைமுதலும், ஆதியாக வரும் பொருள்களுள், ஒருபொருளினது, இயற்பெயரால், அப்பொருளினுக்கு, இயைந்த, பிறிதொரு பொருளை, தொன்றுதொட்டு வருமுறையே, சொல்லப்பட்டு வருவன, ஆகுபெயர்களாம்,.

**வரலாறு.:**

**(1) 'தாமரபுரையுங் காமர்சேவடி' 'கடுத்தின்றான்'** என்புழித் தாமரை கடு என்னும் முதற் பொருளின் பெயர் அதன் சினைப் பொருளாகிய மலருக்குங் காய்குமாதலாற் பொருளாகுபெயர். **கடு – கடுக்காய்**

**(2)'அகனமர்ந்து செய்யாளுறையும்''இப்பட்டுக் கும்ப கோணம்'** என்புழி அகமென்னும் உள்ளப்பெயர் அங்கிருக்கிற மனசிற்கும், கும்பகோணம் அங்கே செய்யப்படும் பட்டுக்கு மாதலால் இடவாகுபெயர்.

**(3)'காரறுத்தது'** என்புழிக் காரென்னும் மழைக்காலப் பெயர் அக்காலத்து விளையும் பயிருக்கு ஆதலாற் காலவாகு பெயர்.

**(4)'வெற்றிலை நட்டான்'** என்புழி வெற்றிலை யென்னும் சினைப்பெயர் அதன் முதலாகிய கொடிக்கு ஆதலாற் சினையாகுபெயர்.

(5)**'நீலஞ்சூடினாள்'** என்புழி நீலமென்னும் நிறக்குணப்பெயர் அதனையுடைய குவளைமலருக்கு ஆதலாற் குணவாகுபெயர்.

**(6)'வற்றலுடனுண்டான்'** என்புழி வற்றலென்னும் தொழிற்பெயர் அதனைப் பொருந்திய உணவிற்கு ஆதலாற் றொழிலாகுபெயர்.

**(7)'காலாலே நடந்தான்'** என்புழிக் காலென்னும் எண்ணலளவைப் பெயர், அவ்வளவைக் கொண்ட உறுப்பிற்கு ஆதலால் எண்ணலளவை யாகுபெயர்.

**'இரண்டுவீசை தந்தான்'** என்புழி வீசையென்னும் எடுத்தலளவைப்பெயர் அவ்வளவைக் கொண்ட பொருளுக்கு ஆதலால் எடுத்தலளவை யாகுபெயர்.

**'நாழியுடைந்தது'** என்புழி நாழியென்னும் முகத்தலளவைப் பெயர் அவ்வளவு கருவிக்கு ஆதலான் முகத்தலளவை யாகுபெயர்.

**'கீழைத்தடி விளைந்தது'** என்புழித் தடியென்னும் நீட்டலளவைப்பெயர் அதனாலளக்கப்பட்ட கழனிக்கு ஆதலால் நீட்டலளவை யாருபெயர்.

(8) **'இந்நூலுக்குரை செய்தான்'** என்புழி உரை யென்னும் சொல்லின் பெயர் அதன் பொருளுக்காதலாற் சொல்லாகு பெயர்.

(9)**'விளக்கு முரிந்தது'** என்புழி விளக்கென்னுந் தானியின் பெயர் அதற்குத் தானமாகிய தண்டிற்காதலாற் **றானியாகு பெயர்.**

(விளக்கு–விளக்குமொளியையுடைய பிழம்பு. தானி–தானத்தையுடையது. தானம்–இடம்.)

(10) திருவாசகம் என்புழி அடையடுத்த வாசகமென்னு முதற் கருவியின் பெயர் அதன் காரியமாகிய ஒருநூலிற்காதலாற் **கருவியாகுபெயர்.**

(11)இந்நூலலங்காரம் என்புழி அலங்காரமென்னுங் காரியத்தின் பெயர் அதனை யுணர்த்துதற்குக் கருவியாகிய நூலிற்காதலாற் காரியவாகுபெயர்.

(12) இந்நூல் திருவள்ளுவர் என்புழித் திருவள்ளுவரென்னுங் கருத்தாவின் பெயர் அவராற் செய்யப்பட்ட நூலிற்காதலாற் **கருத்தாவாகுபெயர்.**

ஆதி என்றதனால், காளை வந்தான், பாவை வந்தாள் என வரும் உவமையாகுபெயர் முதலானவையுங்கொள்க.

இன்னும், இவ்வாகுபெயர், விடாதவாகுபெயர், விட்டவாகு பெயர் எனவும், இருமடியாகுபெயர், மும்மடியாகுபெயர். நான்மடியாகு பெயர் எனவும், அடையடுத்தவாகுபெயர். எனவும், இருபெயரொட்டாகுபெயர். எனவும், பெயர் பெற்று வழங்கும்.

**வ–று.:**

(1) கடுத்தின்றான், புளித் தின்றான் என்புழிக் கடுவும் புளியுஞ், சுவையாகிய தத்தம் பொருளை விடாது நின்று தம் பொருளின் வேறல்லாத காய் கனியென்னும் பொருளை உணர்த்தலால், **விடாதவாகுபெயர்.** அவ்வூர் வந்தது என்புழி, ஊரென்பது, இடமாகிய தன்பொருளை விட்டுத் தன்னிடத் துள்ள மனிதரை யுணர்த்தலால், **விட்டவாகுபெயர்.**

57. வேற்றுமை இலக்கணமுந் தொகையுங் கூறுஞ் சூத்திரம் யாது?

ஏற்கு மெவ்வகைப் பெயர்க்குமீ றாய்ப்பொருள்
வேற்றுமை செய்வன வெட்டே வேற்றுமை.

(ஏற்றும் எவ்வகைப் பெயர்க்கும் ஈறு ஆய் பொருள்
வேற்றுமை செய்வன எட்டே வேற்றுமை)

**இ–ள்.:** தம்மை யேற்றுக்கொள்ளுதற்குரிய எவ்வகைப்பட்ட பெயர்களுக்கும் இறுதியாய் அப்பெயர்ப்பொருளை வேற்றுமைப் படுத்துவனவாகிய வேற்றுமைகள் எட்டே யாகும், **எ–று.**

தன்னையேற்ற பெயர்ப்பொருளுக்கு வேற்றுமை யென்னுங் காரியத்தைச் செய்யுங் கருத்தாவாகிய உருபை வேற்றுமை யென்றது காரியவாகுபெயர். வேற்றுமையென்னும் பண்புப்பெயர் பண்புக்காகாமையாற் பண்பாகுபெயரென்றாயிற்று.

58. வேற்றுமையின் பெயரும் முறையுங் கூறுங் சூத்திரம் யாது?

பெயரே ஐ ஆல் கு இன் அது கண்
விளியென் றாகு மவற்றின் பெயர்முறை.

(பெயர் ஐ ஆல் கு இன் அது கண்
விளி என்று ஆகும் அவற்றின் பெயர் முறை.)

**இ–ள்.:** முன்னே எட்டு வேற்றுமையெனப் பட்டவைகளினுடைய

பெயர்களுங் கிடக்கை முறையுமாவன பெயரும் ஐயும் ஆறுங்குவ்வும் இன்னும் அதுவுங் கண்ணும் விளியும் என்றிப்படிச் சொல்லப்பட்டவை யாகும், எ—று.

59. பெயர்மாத்திரமன்று உருபேற்ற பெயருமொன்று ஆறுருபுகளையு மேற்குமெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

ஆற னுருபு மேற்கு மவ் வுருபே.

(ஆறனுருபும் ஏற்கும் அவ்வுருபே.)

**இ—ள்.:** பெயரேயன்றி ஆறனுருபும் அவ்வுருபுகளை ஏற்கும், எ—று.

**வ—று.** சாத்தனதனை சாத்தனதனால் சாத்தனதற்கு சாத்தனதனின் சாத்தனதனது சாத்தனதன்கண் என வரும். **ஏற்பழிக்கோடலான்** எழுவாயும் விளியும் ஒழித்து ஏனையவே கொள்க. பெயரோடு இதற்கு வேற்றுமை, உருபு ஏற்புழியுந் தன் இரு கிழமைப்பொருளினுந் திரிபின்றி நிற்றலாகும். பெயர்வேற்றுமையும் ஏனையுருபுகளையும் ஏற்குமால் அஃது ஒழிந்ததென்னையெனின் அஃது ஏனையுருபுகளை ஏலாமைமேற் பெறப்படும்.

60. "ஏற்குமெவ்வகைப்பெயர்க்கும்" என்னுஞ் சூத்திரத்தில் ஏற்குமென்றதனால் உருபு ஏலாதபெயரு முண்டென்றாராயிற்று: அவை இவையெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

நீயிர் நீவிர் நா னெழுவா யலபெறா.

(நீயிர் நீவிர் நான் எழுவாய் அல பெறா.)

**இ—ள்.:** நீயிர் முதலாகிய இம்மூன்று பெயர்களும் எழுவாயல்லாத வேற்றுமைகளை ஏலாவாம். எ—று.

61. எழுவாய்வேற்றுமையினியல்பும் அதன் பயனிலையும் கூறுஞ் சூத்திரம் யாது?

**அவற்றுள்,—**

**எழுவா யுருபு திரியில் பெயரே**

**வினைபெயர் வினாக்கொள லதன்பயனிலையே.**

**(அவற்றுள்,—**

**எழுவாய் உருபு திரிபு இல் பெயரே**

**வினைபெயர் வினாக்கொள லதன்பய னிலையே.)**

**இ—ள்.:** முன் சொல்லப்பட்ட எட்டு வேற்றுமைகளுள் முதல்வேற்றுமையினுருபாவது ஐ முதலிய உருபேற்றுத் திரிதலில்லாத பெயரேயாம்; வினையையும் பெயரையும் வினாவையுங் கொள்ள வருதல் அவ்வுருபினது பொருணிலையாய் வருதலாம்.

பயனிலையாவது தொடர்மொழிக்கண் முடிக்குஞ்சொல்.

எனவே, அத்திரிபில்லாத பெயர்தானே தன்பொருளை வினைமுதற் பொருளாக வேற்றுமை செய்யுமென்பதாயிற்று.

இவ்வெழுவாய் கொள்ளும் பெயர், இன்னது, இவ்வளவிற்று என்னும் பொருள்படவரும் பெயராம்.

**உ—ம்.** (1) சாத்தன் வந்தான்; கொற்றன் வாழ்க; இவை தெரிநிலை வினைகொள வந்தன. அவன் பெரியன்; ஆவுண்டு இவை குறிப்புவினை கொள

வினைகொள வந்தன. அவன் பெரியன்; ஆவுண்டு இவை குறிப்புவினை கொள வந்தன.

(2) சாத்தனிவன்; கொற்றனவன்; இவை இன்னது என்னும் பொருள்பட வரும் பெயர்கொள வந்தன. ஆவொன்று; யானை நூறு; இவை இவ்வளவிற்று என்னும் பொருள்பட வரும் பெயர் கொள வந்தன.

(3) அவன் யார்; ஆ யாது; இவை வினாக் கொள வந்தன. வினைமுதற்பொருளாவது ஒரு தொழினிகழ்ச்சியிலே தன்வயத்தாகக் குறிக்கப்படும் பொருளாம். வினைமுதல், செய்பவன், கருத்தா என்பன ஒரு பொருட்சொற்கள்.

**உ–ம்.** சாத்தன் வந்தான் என்புழித் தொழினிகழ்ச்சி வருதல்; அத்தொழினிகழ்ச்சியிலே தன்வயத்ததாகக் குறிக்கப்படும் பொருள் சாத்தனாதலாற் சாத்தன் வினைமுதற்பொருள்.

இவ்வெழுவாய்க்கு, ஐ முதலியன போன்ற உருபில்லையாயினும், உரையிற்கோடலென்னுமுத்தியினாலே, சிறுபான்மை, ஆனவன், ஆகின்றவன், ஆவான், என்பவன், ஆனவள், ஆனவர், ஆனது, ஆனவை முதலிய ஐம்பாற்சொற்களுஞ் சொல்லுருபுகளாக வருமெனக் கொள்க.

**உ–ம்.** சாத்தனானவன் வந்தான்; சாத்தியானவள் வந்தாள்; சாத்தரானவர் வந்தார்; யானையானது வந்தது; யானையானவை வந்தன என வரும். பிறவுமன்ன.

இன்னும், இவ்வுத்தியைப் பின்வரும் வேற்றுமைகளிலே காட்டப்படுஞ் சொல்லுருபுகளுக்கெல்லாங் கொள்க.

62. இரண்டாம்வேற்றுமையுருபும் பயனிலையுங் கூறுஞ் சூத்திரம் யாது?

இரண்டா வதனுரு பையே யதன்பொருள்
ஆக்க லழித்த லடைத நீத்தல்
ஒத்த லுடைமை யாதி யாகும்.

(இரண்டாவதன் உருபு ஐயே அதன் பொருள்
ஆக்கல் அழித்தல் அடைதல் நீத்தல்
ஒத்தல் உடைமை ஆதி ஆகும்.)

**இ–ள்.:** இரண்டாம் வேற்றுமையினதுருபு முன் சொல்லப்பட்ட ஐ யொன்றுமேயாம். அதன்பொருள்களாவன, ஆக்கப் படுபொருளும், அழிக்கப்படுபொருளும், அடையப்படுபொருளும், துறக்கப்படுபொருளும், ஒக்கப்படுபொருளும், உடைமைப் பொருளும் முதலியனவாக அவ்வுருபையேற்ற பெயர்ப்பொருள்கள் வேறுபட்ட செயப்படுபொருள்களாம், **எ–று.**

(உதாரணம்)

குடத்தை வனைந்தான்.................ஆக்கப்படுபொருள்.

கோட்டையை யிடித்தான்........................அழிக்கப்படுபொருள்.

ஊரை யடைந்தான்......................அடையப்படுபொருள்.

மனைவியைத் துறந்தான்.................துறக்கப்படுபொருள்.

புலியை யொத்தான்...............................ஒப்புப்பொருள்.

பொன்னை யுடையான்........................உடைமைப்பொருள்.

செயப்படுபொருளாவது வினைமுதற்றொழிற்பயனுறுவது. செயப்படுபொருள், செய்பொருள், கருமம். காரியம் என்பன ஒரு பொருட்சொற்கள்.

**உ—ம்.** குடத்தை வனைந்தான் என்புழி மண் கூட்டுகை திரிகை சுழற்றுகை முதலியன வினை முதலினது தொழில்; குடத்தினது தோன்றுதல் அத்தொழிலின் பயன்; அப்பயனுறுவது குடமாதலாற் குடஞ்செயப்படுபொருள். கோட்டையை யிடித்தான் என்புழிக் கோட்டையை யிடித்தல் வினைமுதலினது தொழில்; அதனது வடிவு குலைதல் அத்தொழிலின் பயன்; அப்பயனுறுவது கோட்டையாதலாற் கோட்டை செயப்படுபொருள். ஊரையடைந்தான் என்புழி நடந்து செல்லுதல் வினைமுதலினது தொழில்; ஊரைச்சேர்தல் அத்தொழிலின் பயன்; அப்பயனுறுவது ஊராதலால் ஊர் செயப்படுபொருள். மனைவியைத் துறந்தான் என்புழி வெறுத்துவிடுதல் வினைமுதலினது தொழில்; உரிமைக்கேடு அத்தொழிலின் பயன்; அப்பயனுறுவது மனைவியாதலன் மனைவி செயப்படுபொருள். புலியை யொத்தான் என்புழி அஞ்சாது பாய்ந்து கொல்லுதலாற் புலியை உவமானமாகக் கொள்ளுதல் வினைமுதலினது தொழில்; உவமானமாகக்கொளப்படுதல் அத்தொழிலின் பயன்; அப்பயனுறுவது புலியாதலாற் புலி செயப்படுபொருள். பொன்னையுடையான் என்புழிச் சம்பாதித்தல் வினை முதலினது தொழில்; தனதாகுகை அத்தொழிலின் பயன்; அப்பயனுறுவது பொன்னாதலாற் பொன் செயப்படுபொருள்.

ஆதி என்றதனால், வீட்டை விரும்பினான்; நூற்பொருளை யறிந்தான் என விரும்புதலும் அறிதலுமாகிய வினைமுதற்றொழில்களுக்கு விடயமாகிய வீடும் நூற்பொருளுஞ் செயப்படு பொருளாகுகை முதலானவையுங் கொள்க.

அச் செயப்படுபொருள் கருத்திற் செயப்படுவதும், கருத்தின்றிச் செயப்படுவதும், இருமையிற் செயப்படுவதும் என மூவகைப்படும்.

**உ—ம்.** (1) சோற்றையுண்டான் என்புழிச், சோறு உண்ணப்படுவதாக வினைமுதலால் இச்சிக்கப்பட்ட செயப்படு பொருள்.

(2) சோற்றைக் குழைத்தான் என்புழிச், சோறு, குழைக்கப்படுவதாக வினைமுதலால் இச்சிக்கப்படாத செயப்படுபொருள்.

(3) பதரையு நெல்லையும் பணத்திற்குக் கொண்டான் என்புழிப், பதர், கொள்ளப்படுவதாக வினைமுதலால் இச்சிக்கப்படாத செயப்படுபொருள்; நெற் கொள்ளப்படுவதாக வினைமுதலால் இச்சிக்கப்பட்ட செயப்படுபொருள்.

செயப்படுபொருள் குன்றாத முதனிலைகளின்மேல் விபி முதலிய விகுதிகள் புணர்ந்து வருவனவாகிய பிறவினைகளுள்ளே, சிலவற்றிற்கு, இயற்றும் வினைமுதல் இரண்டாம் வேற்றுமையில் வருதலால் இரண்டு செயப்படுபொருள் வரும்; சிலவற்றிற்கு, இயற்றும் வினைமுதல் மூன்றாம்வேற்றுமையில் வருதலால், செயப்படுபொருள் ஒன்றே வரும், இரண்டு வராவாம்.

**உ—ம்.** (1) பகவரைச் சிறைச்சாலையை யடைவித்தான்; சாத்தனைச் சோற்றை யுண்பித்தான்.

(உ) கொற்றனாற் பூதனைக் கொல்வித்தான், சாத்தனாற் பசுவைப் புரப்பித்தான்.

செயப்படுபொருள் குன்றாத தன்வினைகளுள்ளே, கறத்தல், குறைத்தல் முதலிய சிலவினைகளுக்கு இரண்டு செயப்படுபொருள்கள் வருதலுமுண்டு; வரினும், முன்னின்ற செயப்படுபொருள் சிறப்புடைத்தன்றெனக் கொள்க.

உ–ம். பசுவைப் பாலைக் கறந்தான்; யானையைக் கோட்டைக் குறைத்தான் என வரும். இவற்றுள், கறத்தலாவது உள்ளிருக்கு நெகிழ்ச்சிப் பொருட்பிரிவை யுண்டாக்குந் தொழிலை யுண்டாக்குந்தொழில்; ஆதலால், வினைமுதற் றொழிற்பயன் இரண்டாகவே, அப்பயனுறுவதாகிய செயப்படுபொருளும் இரண்டாயின. எங்ஙனமெனின்;–உள்ளிருக்கு நெகிழ்ச்சிப் பொருள் பால்; அப்பாற்கும் பசுவிற்கும் பிரிவையுண்டாக்குந் தொழில் பாலிலிருக்கும் வீழ்ச்சி; அவ்வீழ்ச்சியை யுண்டாக்குந் தொழில் முலைபற்றியுருவல்; இவற்றுள் வீழ்ச்சித்தொழிலானிகழும் பிரிவாகிய பயனுறுவது பசுவெனவும், முலைபற்றி யுருவற் றொழிலானிகழும் வீழ்ச்சியாகிய பயனுறுவது பாலெனவும் அறிக. மற்றை யுதாரணமும் இப்படியே காண்க. குறைத்தலாவது, இங்கே பிரிவை யுண்டாக்குந் தொழிலை யுண்டாக்குத்தொழில். இப்பசுவையும் யானையையுஞ் செயப்படுபொருளாகக் கருதாது, நீக்கப்பொருளாகக் கருதின், பசுவினின்றும் பாலைக்கறந்தான், யானையினின்றுங் கோட்டைக் குறைத்தான் என ஐந்தனுருபும், சம்பந்தப்பொருளாகக் கருதின், பசுவினது பாலைக்கறந்தான், யானையினது கோட்டைக் குறைத்தான் என ஆறனுருபும் வருமெனக் கொள்க.

இன்னும் அச்செயப்படுபொருள், அகநிலை யாகவும், தானே கருத்தாவாகவும் வரும்.

**உ–ம்.** (1) நடத்தலைச் செய்தான்; உண்டலைச்செய்தான் எனத் தெரிநிலை வினைகளை விரித்துரைக்குமிடத்துச் செயப்படுபொருள் அகநிலையாய் வந்தது.

(2) தன்னைக் குத்தினான், தன்னைப் புகழ்ந்தான் எனச் செயப்படுபொருளே கருத்தாவுமாயிற்று.

63. மூன்றாம்வேற்றுமை யுருபும் பொருளுங் கூறுஞ் சூத்திரம் யாது?

மூன்றா வதனுரு பாலா னோடொடு
கருவி கருத்தா வுடனிகழ் வதன்பொருள்.

(மூன்றாவதன் உருபு ஆல் ஆன் ஒடு ஓடு
கருவி கருத்தா உடனிகழ்வு அதன் பொருள்.)

**இ–ள்.**: மூன்றாம்வேற்றுமையினுருபு முன் சொல்லப்பட்ட ஆலேயன்றி ஆனும் ஒடும் ஓடுவுமாம். அவ்வுருபுகளின் பொருள்களாவன கருவிப்பொருளும் வினைமுதற்பொருளும் உடன் நிகழ்ச்சிப்பொருளும் ஆகிய அவ்வுருபுகளையேற்ற பெயர்ப்பொருள்கள் வேறுபட்ட மூன்றுமாகும், **எ–று.**

இந்நான்குருபுகளுக்கும் மூன்றுபொருள்களுமாமெனக் கூட்டி சொன்னாராயினும், **ஏற்புழிக்கோடலென்னு** முத்தியால், அவ்வுருபுகளுள், ஆல் ஆன் உருபுகளுக்குக் கருவியும் வினைமுதலும், ஒடு ஓடு உருபுகளுக்கு உடனிகழ்ச்சியுஞ் சிறந்தனவெனக் கொள்க.

(உதாரணம்)

வாளால் வெட்டினான்..................... கருவி.

வாளான் வெட்டினான்.....................

அரசனாலாகிய கோயில்.................. கருத்தா.

அரசனானாகிய கோயில்...................

மைந்தனோடு தந்தை வந்தான்........... உடனிகழ்ச்சி.

மைந்தனோடு தந்தை வந்தான்............

64. கருவியாவது யாது?

கருவியாவது வினைமுதற்றொழிற்பயனைச் செயப்படு பொருளிற்சேர்ப்பது. கருவி, காரணம், ஏது என்பது ஒருபொருட்சொற்கள்.

**உ–ம்.** வாளாற் பகைவனை வெட்டினான் என்புழி, வாளைப்பற்றி வீசுதல் வினைமுதலினது தொழில்; பகைவனுடம்பறுதல் அத்தொழிற்குப் பயன்; அப்பயனைப் பகைவனாகிய செயப்படுப் பொருளிலே சேர்ப்பது வாளாதலால் வாள் கருவிப்பொருள்.

அக்கருவிப்பொருள் முதற்கருவியுந் துணைக்கருவியுமென இருவகைப்படும். அவற்றுள், முதற்கருவியாவது செயப்படுபொரு ளோடொற்றுமை யுடையது. முதற்காரணம், ஆதிகாரணம் சமவாயிகாரணம் என்பன ஒருபொருட்சொற்கள். துணைக்கருவியாவது முதற்கருவிக்குத் துணையாய் அது காரியப்படுமளவும் உடனிகழ்வது.

**உ–ம்.** (1) மண்ணாற் குடத்தை வனைந்தான் என்புழிக், குடமாகிய காரியத்தோ டொற்றுமையுடையது மண்ணாதலான் மண் முதற்கருவி.

(2) திரிகையாற் குடத்தை வனைந்தான் என்புழி, மண்ணாகிய முதற்கருவிக்குத் துணையாய் அது குடமாகக் காரியப்படுமளவும் உடனிகழ்வது திரிகையாதலாற் றிரிகை துணைக்கருவி.

இக்கருவிப்பொருள் அகக்கருவி புறக்கருவி ஒற்றுமைக்கருவி என மூன்றாயும் வருமெனக்கொள்க.

**உ–ம்.** மனத்தா னினைந்தான்; அகக்கருவி. வாளால் வெட்டினான் புறக்கருவி. அறிவா லறிந்தான் ஒற்றுமைக்கருவி.

வினைமுதல் இன்னதென்பது முன்னே எழுவாய்ச்சூத்திர வுரையிற் காட்டப்பட்டது. அவ்வெழுவாய் வேற்றுமையில் வரும் வினைமுதற்பெயர் தன் விகுதிவினையினாலே முடியும்; இம் மூன்றாம் வேற்றுமையில் வரும் வினைமுதற்பெயர் செயப்படுபொருள் விகுதிவினையினாலே முடியும்; இதுவே அவ்விரண்டற்கும் வேறுபாடாம்.

**உ–ம்.** (1) குயவன் குடத்தை வனைந்தான் என்புழிக், குயவனென்னும் எழுவாய்க்கருத்தாத் தனக்குரிய ஆன்விகுதி வினையினாலே முடிந்தது.

(2) குயவனாற் பானை வனையப்பட்டது என்புழிக், குயவனென்னும் மூன்றனுருபின் கருத்தாத் தனக்குரிய ஆன் விகுதி வினையினாலே முடியாது, செயப்படுபொருட்குரிய துவ் விகுதி வினையினாலே முடிந்தது.

அவ்விருவகை வினைமுதலும், தனித்தனியே, இயற்றும் வினைமுதலும் ஏவும் வினைமுதலும் என, இருவகைப்படும். அவற்றுள், இயற்றும் வினைமுதலாவது கருவியைத் தொழிற்படுத்துவது. ஏவும் வினைமுதலாவத அவ்வியற்றும் வினைமுதலினது தொழிலையுண்டாக்குந் தொழிலுடையது.

உ–ம். (1) தச்சன் கோயில் கட்டினான்; தச்சனாற் கோயில் கட்டப் பட்டது என்புழித் தச்சன் இயற்றுதற்கருத்தா.

(2) அரசன் கோயில் கட்டுவித்தான்; அரசனாற் கோயில் கட்டுவிக்கப்பட்டது என்புழி அரசன் ஏவுதற்கருத்தா.

65. உடனிகழ்ச்சிப்பொருளாவது யாது?

உடனிகழ்ச்சிப்பொருளாவதுவினை கொண்டு முடியும் பொருளின் றொழிலைத் தன்னிடத்தும் உடனிகழ்வதாகவுடைய பொருளாம்.

உ–ம். மைந்தனோடு தந்தை வந்தான் என்புழித், தந்தை, வினைகொண்டு முடியும் பொருள்; வருதல் அப்பொருளின்றொழில்; அவ் வருதற்றொழிலைத் தன்னிடத்திலும் உடனிகழ்வதாகவுடைய பொருள் மைந்தனாதலால் மைந்தன் உடனிகழ்ச்சிப் பொருள்.

அவ்வுடனிகழ்ச்சிப்பொருள், தலைமைப்பொருளும், தலைமையில் பொருளும் என இருவகைப்படும். அவற்றுள், தலைமைப் பொருளாவது வினைகொண்டுமுடியும் பொருளினுயர்வுடையது. தலைமையில் பொருளாவது வினைகொண்டு முடியும்பொருளினிழிவுடையது.

உ–ம் (1) மன்னவனோடு மந்திரி வந்தான் என்புழி, வினைகொண்டு முடியும் பொருள் மந்திரி; அப்பொருளினுயர்வுடைய பொருள் மன்னவனாதலால், உடனிகழ்ச்சிப் பொருள் தலைமைப்பொருளாயிற்று.

(2) மாணாக்கனோடாசிரியன் வந்தான் என்புழி, வினைகொண்டு முடியும்பொருள் ஆசிரியன்; அப்பொருளினிழிவுடைய பொருள் மாணாக்கனாதலால், உடனிகழ்ச்சிப்பொருள் தலைமையில் பொருளாயிற்று.

66. ஆல் ஆன் ஒடு ஓடு தமக்குரிய பொருளில் மாறியும் வருமோ?

ஆல் ஆன் உருபுகள் உடனிகழ்ச்சிப்பொருளிலும் ஒடு ஓடு உருபுகள் வினைமுதற்பொருள் கருவிப்பொருள்களிலும், ஒரோவிடத்து அருகி வரும்.

உ–ம். (1) "தூங்கு கையா னோங்கு நடைய" "உறழ்மணியானுயர்மருப்பின" என ஆனுருபு உடனிகழ்ச்சிப் பொருளில் வந்தது காண்க. இவற்றிற்குத் தூங்குகையோடு என்றும், உறழ்மணியோடு என்றும், பொருள் கொள்க. தூங்கு கையா னோங்கு நடைய என்புழி, நடத்தலாகிய வேறிடப்புணர்ச்சி கைக்கும் யானைக்கும் உளதாதலறிக. உறழ்மணியானுயர் மருப்பின என்புழி, யானையினது உடைமை மணிக்கும் மருப்பிற்கும் உளதாதலறிக.

(2) "கொடியொடு துவக்குண்டான்;" "ஊசியொடு குயின்ற தூசும்பட்டும்" என்புழிக், கொடியொடு, ஊசியொடு என்பன கொடியால், ஊசியால் எனப் பொருள்படுதலும், கொடி, ஊசி என்பன முறையே வினைமுதற்பொருள் கருவிப்பொருளாதலுங் காண்க.

சிறுபான்மை ஆல் ஆன் உருபுகள், முதற்பொருண்மே லேற்றிச் சொல்லப்படும் விசாரத்தையுடைய சினைப்பொருளிலும், தொறுப்பொருளிலும் வரும்.

உ–ம். (1) கண்ணாற் குருடன்; காலான் முடவன் என்புழிக், குருடன் முடவன் முதற்பொருள்கள்; அவைகளின் மேலேற்றிச் சொல்லப்படும் விகாரங் குருட்டுத்தன்மையும் முடத்தன்மையும், அவ்விகாரத்தையுடை சினைப்பொருள்

கண்ணுங் காலுமாதல் காண்க.

(2) "ஊரானோர் தேவகுலம்" என்புழி, ஊர்தோறு மொவ்வொரு தேவகுலம் எனப் பொருள்கொள்ளப்படும். தொறுவென்பது தன்னையேற்ற பெயர்ப்பொருளெங்கும் அப்பெயர்ப்பொரு ளோடியையும் பொருளிருக்கை. தேவ–குலம்கோயில்.

சிறுபான்மை ஒடு ஓடு உருபுகள், வேறு வினையுடனிகழ்ச்சிப் பொருளிலும், வினையியல்பொருளிலும், கலப்புறு பொருளிலும், ஒப்புப்பொருளிலும்; ஒப்பலொப்புப்பொருளிலும், ஒற்றுமைப்பொருளிலும், அடைமொழிப்பொருளிலும், வரும்.

**உ–ம்.** (1) "தொடியொடு தொல்கவின் வாடிய தோள்" என்புழி, வினைகொண்டு முடியும் பொருள் கவின்; அதனது தொழில் வாடல்; அத்தொழில் நிகழுங்காலையில் நிகழும் வேறுதொழில் சேர்தல்; அதனையுடையது தொடியாதலால், தொடி வேறுவினையுடனிகழ்ச்சிப் பொருள்.

(2) "மலையொடு பொருத மால்யானை" என்புழிப், பொருதல் யானைக்கல்லது மலைக்கில்லாமையால் மலைவினையில்பொருள்.

(3) "பாலொடு தேன் கலந்தற்றே" என்புழித், தேன்கலக்கப்படுதலாற் பால் கலப்புறுபொருள்.

(4) மதியொடொக்கு முகம் என்புழி, முகத்துக்கு உவமானமாகுகையால், மதி ஒப்புப்பொருள்.

(5) "விலங்கொடு மக்களனையர்" என்புரி, ஒப்பல்லாத விலங்கு ஒப்பாகச் சொல்லப்படுதலால், விலங்கு ஒப்பலொப்புப்பொருள்.

(6) "எழுத்தொடு புணர்ந்த சொல்" என்புழி, உருபைத் தொடர்ந்த சொல்லென்னும் பொருளோடு ஒற்றுமை யுடையதாதலால், எழுத்து ஒற்றுமைப்பொருள்.

(7) கோபத்தோடு வந்தான் என்புழி, வருதற்கு விசேடண மாதலால், கோபம் அடைமொழிப்பொருள்.

ஆல் ஆன் உருபுகள் நிற்றற்குரியவிடத்துக் கொண்டென்பதும், ஒடு ஓடு உருபுகள் நிற்றற்குரியவிடத்து உடனென்பதும், சொல்லுருபுகளாக வரும்.

**உ–ம்.** வாள்கொண்டு வெட்டினான். தந்தையுடன் மைந்தன் வத்தான் என வரும்.

67. "பெயரே ஐ ஆல் கு" என்னுஞ் சூத்திரத்திலே மூன்றாவதற்கு ஒருருபுகூறி இங்கே "மூன்றாவதனுருபு ஆல் ஆன் ஒடு ஓடு" என நான்குருபு கூறியதென்னை?

அங்கே ஆலென்றதனால் ஆல் வேற்றுமையென மூன்றாம் வேற்றுமைக்குப் பெயரிட்டார். இங்கே அவ்வேற்றுமைக்குரிய உருபுகளெல்லாங் கூறினார்.

68. நான்காம்வேற்றுமை யுருபும் பயனுங் கூறுஞ் சூத்திரம் யாது?

நான்கா வதற்குரு பாகுங் குவ்வே

கொடைபகை நேர்ச்சி தகவது வாதல்

பொருட்டுமுறை யாதியி னிதற்கிதெனல் பொருளே.

(நான்காவதற்கு உருபு ஆகும் குவ்வே

கொடை பகை நேர்ச்சி தகவு அது ஆதல்

பொருட்டு முறை ஆதியின் இதற்கு இதுஎனல் பொருளே)

**இ–ள்.:** நான்காம்வேற்றுமைக்குருபு முன் சொல்லப்பட்ட குவ் வொன்றுமேயாம். அவ்வுருபின் பொருள்களாவன கொடையும் பகையும் நட்பும் தகுதியும் முதற்காரணமும் நிமித்தகாரணமும் முறையும் முதலான பொருட்சொற்களின் புணர்ச்சியில் இதற்கு இதுவென்பது படவருவனவாகிய அவ்வுருபேற்ற பெயர்ப்பொருள் வேறுபட்ட பலவுமாம். **எ–று.**

69. நான்காவதன் உருபு யாது?

"நான்காவதற்கு உருபாகும் குவ்வே"

70. குவ்வுருபின் பொருள்கள் யாவை?

"கொடை பகை நேர்ச்சி தகவு அதுவாதல்

பொருட்டு முறையாதியின் இதற்குஇதெனல் பொருளே"

கொடையெனவே கோடற்பொருளும், பகை நேர்ச்சியெனவே பகைதொடர்பொருளும் நட்புத்தொடர்பொருளும், தகுதியெனவே தகுதியுடைப் பொருளும், அதுவாதலெனவே முதற்காரண காரியப்பொருளும், பொருட்டெனவே நிமித்தகாரண காரியப்பொருளும், பொருட்டெனவே நிமித்தகாரண காரியப்பொருளும், முறையெனவே முறைக்கியைபொருளும், குவ்வுருபின் பொருள்களாமென்பது பெற்றாம்.

**(உதாரணம்)**

இரவலர்க்குப் பொன்னைக் கொடுத்தான்–கோடற்பொருள்.

பாம்புக்குப் பகை கருடன்..............................பகை தொடர்பொருள்.

சாத்தனுக்கு நட்பாளன் கொற்றன்.......................... .நட்புத்தொடர்பொருள்.

அரசர்க்குரித் தருங்கலம்............................. தகுதியுடைப்பொருள்.

குண்டலத்திற்குப் பொன்........................................ முதற்காரண காரியப்பொருள்.

கூலிக்கு வேலை செய்தான்...................................நிமித்தகாரண காரியப்பொருள்.

சாத்தனுக்கு மகன் கொற்றன்...............................முறைக்கியை பொருள்.

கோடற்பொருளாவது கொடுத்தற்றொழிலின் செயப்படுபொருளைத் தனக்குரிய தாக்கிக் கொள்ளு தலையுடைய பொருளாம். கோடற்பொருள், கோளிப்பொருள் என்பன ஒருபொருட்சொற்கள்.

**உ–ம்.** இரவலர்க்குப் பொன்னைக்கொடுத்தான் என்புழிக், கொடுத்தலின் செயப்படுபொருள் பொன்; அதனைத் தனக்குரிய தாக்கிக் கொள்ளுதலையுடையபொருள் இரவலராதலால், இரவலர் கோடற்பொருள்.

இன்னும், மாணாக்கனுக்கறிவு கொடுத்தான் என்புழி, அறிவாகிய செயப்படுபொருள் கொடுப்போன் பொருளாய்க் கொள்வோனிடத்துச் செல்லாமை

ஆண்டுத் தோன்றினும் அதனைத் தனக்குரிய தாக்கிக் கொள்ளுதலால், மாணாக்கன் கோடற்பொருள். அன்றியும், மாணாக்கனுக்கு நூற்பொருளுரைத்தான் என்புழிச் சொல்லுதலின் செயப்படுபொருளாகிய நூற்கொருளை அறிதலையுடைய பொருளாகிய மாணாக்கனுங் கோடற்பொருளேயாம். இன்னும், அவர் கொடுத்தற்குடம்பட்டார் என உடம்படுதற்கு விடயமான பொருளும் ஒருகோடற்பொருளாகவே வரும்.

கோடல் பலவகைப்படும்; அவை: கேளாதேற்றல், கேட்டேயேற்றல், ஏலாதேற்றல், ஈவோனேற்றல், உயர்ந்தோனேற்றல், இழிந்தோனேற்றல், ஒப்போனேற்றல், உணர்வின்றேற்றல், விருப்பாயேற்றல், வெறுப்பாயேற்றல் முதலியன.

**உ–ம்.** ஆவிற்கு நீர் விட்டான் என்பது கேளாதேற்றல். இரந்தார்க்கீந்தான் என்பது கேட்டேயேற்றல். மாணாக்கனுக்கறிவுகொடுத்தான் என்பது ஏலாதேற்றல். தனக்குச் சோறிட்டான் என்பது ஈவோனேற்றல். அரனுக்குக் கண்மலர் கொடுத்தான் அரி என்பது உயர்ந்தோனேற்றல். அரிக்குச் சக்கரங்கொடுத்தான் அரன் என்பது இழிந்தோனேற்றல். சோழனுக்கு விருந்திட்டான் சேரன் என்பது ஒப்போனேற்றல். சோற்றிற்கு நெய்விட்டான் என்பது உணர்வின்றேற்றல். மாணாக்கனுக்குக் கசையடி கொடுத்தானாசிரியன் என்பது விப்பாயேற்றல். கள்ளனுக்குக் கசையடி கொடுத்தானரசன் என்பது வெறுப்பாயேற்றல். (கசை–குதிரைச்சம்மட்டி.)

கொடுத்தலும் பலவகைப்படும்; அவை: வழக்கத்திற் கொடுத்தல், உரிமையிற் கொடுத்தல், அச்சத்திற் கொடுத்தல், பாவனையிற் கொடுத்தல், உவகையிற் கொடுத்தல், வெகுளியிற் கொடுத்தல், அவலத்திற் கொடுத்தல் முதலியன.

**உ–ம்.** மருமகனுக்கு மகளைக் கொடுத்தான் என்பது வழக்கத்திற்கொடுத்தல், மகனுக் காசுகொடுத்தான் என்பது உரிமையிற் கொடுத்தல். அரசற்குத் திறை கொடுத்தான் என்பது அச்சத்திற்கொடுத்தல். தந்தை தாய்க்குத் திதி கொடுத்தான் என்பது பாவனையிற்கொடுத்தல். அவனுக்குப் பரிசு கொடுத்தான் என்பது உவகையிற்கொடுத்தல். அவனுக்குத் தண்டனை கொடுத்தான் என்பது வெகுளியிற்கொடுத்தல். வாய்க்கரிசியிட்டான் என்பது அவலத்திற் கொடுத்தல்.

பகை தொடர் பொருளாவது ஒருபொருளினிடத்துள்ள பகை தொடர்தற்கு இடமாகிய பொருளாம்.

**உ–ம்.** பாம்புக்குப்பகை கருடன் என்புழிக், கருடனிடத்துள்ள பகை தொடர்தற்கு இடம் பாம்பாதலாற் பாம்பு பகைதொடர் பொருள்.

நட்புத்தொடர்பொருளாவது ஒருபொருளினிடத்துள்ள நட்புத்தொடர்தற்கு இடமாகிய பொருளாம்.

**உ–ம்.** சாத்தனுக்கு நட்பாளன் கொற்றன் என்புழிக் கொற்றனிடத்துள்ள நட்புத் தொடர்தற்கு இடஞ் சாத்தனாதலாற் சாத்தன் நட்புத்தொடர்பொருள்.

வைவிற்றீமை தொடர்பொருளும் வாழ்த்தி னன்மைதொடர்பொருளும் பகை நேர்ச்சிகளில் அடங்குமெனக் கொள்க. அவை: தீயோர்க்குக் கேடுண்டாகுக; நல்லோர்க்குச் செல்வமுண்டாகுக என வரும்.

தகுதியுடைப்பொருளாவது தன்னோடு பொருந்துதற்குத் தகுதியாகிய பொருளையுடைய பொருளாம்.

**உ–ம்.** அரசர்க் குரித்தருங்கலம் என்புழி, அரசரோடு பொருந்துதற்குத் தகுதியாகிய பொருள் அருங்கலம்; அப்பொருளையுடையபொருள் அரசராதலால் அரசர் தகுதியுடைப்பொருள். முதற்காரணகாரியப் பொருளாவது முதற்காரணத்தாலாகும் பொருளாம்.

**உ–ம்.** குண்டலத்திற்குப் பொன் என்புழிப் பொன் முதற்காரணம், அதனாலாகிய காரியங் குண்டலமாதலாற் குண்டலம் முதற்காரணகாரியப்பொருள்.

நிமித்த காரணகாரியப்பொருளாவது நிமித்தகாரணத்தால் ஆகும் பொருளாம்.

**உ–ம்.** கூலிக்கு வேலை செய்தான் என்புழி வேலை நிமித்தகாரணம், அதனாலாகிய காரியங் கூலியாதலாற் கூலி நிமித்தகாரணகாரியப்பொருள்.

முறைக்கியை பொருளாவது பிறப்பினால் ஒரு பொருளின் முறைக்குத் தான் இயைந்து நிற்கும்பொருளாம்.

**உ–ம்.** சாத்தனுக்கு மகன் கொற்றன் என்புழிக் கொற்றனிடத்துள்ள மகனென்னுமுறைக்குத் தானியைந்து நிற்கும் பொருள் சாத்தனாதலாற் சாத்தன் முறைக்கியை பொருள்.

'ஆதி' என்றதனால், மழைக்கு மின்னல் என உற்பாதத்தாற் குறிக்கப்படுவதும், அவனுக்கிதுபோதும் எனக் குறைவின்மையைக் கொள்வதும், பிறவுங் கொள்க. (உற்பாதம்–மேல்விளையுநன்மை தீமையை யறிவிக்குங் குறி.)

குவ் வுருபு நிற்றற்குரிய சிலவிடங்களிலே, பொருட்டு, நிமித்தம் என்பனவும், குவ் வுருபின்மேல் ஆக வென்பதுஞ் சொல்லுருபுகளாக வரும்.

உ–ம. கூழின்பொருட்டு வேலை செய்தான்; கூலியினிமித்தம் வேலைசெய்தான்; கூலிக்காக வேலைசெய்தான் என வரும்.

71. ஐந்தாம் வேற்றுமை யுருபும் பயனுங் கூறுஞ் சூத்திரம் யாது?

ஐந்தா வதனுரு பில்லு மின்னு
நீங்கலொப் பெல்லை யேதுப் பொருளே.

(ஐந்தாவதன் உருபு இல்லும் இன்னும்
நீங்கல் ஒப்பு எல்லை ஏதுப் பொருளே.)

**இ–ள்.:** ஐந்தாம்வேற்றுமையின் உருபாவன இல்லும் இன்னுமாம்; அவ்வுருபுகளின் பொருள்களாவன நீக்கப்பொருளும் ஒப்புப் பொருளும் எல்லைப்பொருளும் ஏதுப்பொருளுமாகிய அவ்வுருபுகளையேற்ற பெயர்ப்பொருள்கள் வேறுபட்ட இன்னான்குமாம், **எ–று.**

72. ஐந்தாம் வேற்றுமையுருபுகள் யாவை?

"ஐந்தாவதன் உருபு இல்லும் இன்னும்"

73. ஐந்தாம் வேற்றுமை யுருபுகளின் பொருள் யாவை?

"நீங்கல் ஒப்பு எல்லை ஏதுப்பொருளே"

மலையின் வீழருவி..............................நீக்கப்பொருள்.

காக்கையிற்கரிது களம்பழம்..................ஒப்புப்பொருள்.

மதுரையின் வடக்குச் சிதம்பரம்.......................எல்லைப்பொருள்.

கல்வியிற் பெரியன் கம்பன்...............................ஏதுப்பொருள்.

நீக்கப்பொருளாவது பிரிவையுண்டாக்குந் தொழிலின்றிப் பிரிவை மாத்திரந் தன்னிடத்துடைய பொருளாம்.

**உ—ம்.** மலையின் வீழருவி என்புழி, அருவியின் வீழ்ச்சி பிரிவை யுண்டாக்குந் தொழில்; அது தன்னிடத்தில்லாமல் அவ்வீழ்ச்சியாலாகிய பிரிவொன்றையே தன்னிடத்துடையது மலையாதலால், மலை நீக்கப்பொருள்.

ஒப்புப்பொருளாவது உவமேயப்பொருளிலுந் தன்னிலுமிருக்கின்ற பொதுத்தன்மையால் உவமானமாகும் பொருளாம். உவமேயம், புகழ்பொருள் என்பன ஒருபொருட்சொற்கள்.

**உ—ம்.** காக்கையிற்கரிது களம்பழம் என்புழிக் களம்பழம் உவமேயம்; உவமேயத்திலுந் தன்னிலுமுள்ள பொதுத்தன்மை கருமை; இதனால் உவமானமாகிய பொருள் காக்கையாதலாற் காக்கை ஒப்புப்பொருள்.

எல்லைப்பொருளாவது அறியப்படாத பொருளினது திசையளவு வழியளவு காலவளவு பண்பு முதலியவற்றைக் குறிப்பித்தற்கு எல்லையாக நிற்கும் பொருளாம்.

**உ—ம்.** (1) 'மதுரையின் வடக்குச் சிதம்பரம்' என்புழி, அறியப்படாத சிதம்பரத்தினது திசையைக் குறிப்பித்தற்கு எல்லையாக நிற்பது அறியப்பட்டபொருளாகிய மதுரையாதலால், மதுரை எல்லைப்பொருள்.

(2) 'கச்சியிற் றிருத்தணிகை முக்காவதம்' என்புழி, அறியப்படாத திருத்தணிகையினது வழியளவை அறிவித்தற்கு எல்லையாக நிற்பது அறியப்பட்டபொருளாகியகச்சியாதலாற் கச்சி எல்லைப்பொருள்.

(3) 'சாத்தனிலிரடாண்டு மூத்தவன் கொற்றன் என்புழி, அறியப்படாத கொற்றனுடைய பிராயத்தைக் குறிப்பித்தற்கு எல்லையாக நிற்கும் பொருள் அறியப்பட்ட சாத்தனாதலாற் சாத்தன் எல்லைப்பொருள்.

(4) 'அரசரிற் பெரியரந்தணர்'; 'ஆவினிழிந்தது மேதி' என்புழி, அறியப்படாத அந்தணரும் மேதியுமாகிய பொருள்களின் உயர்வு தாழ்வுகளைக் குறிப்பித்தற்கு எல்லையாக நிற்கும் பொருள்கள் அறியப்பட்ட அரசரும் ஆவுமாதலால், அரசரும் ஆவும் எல்லைப்பொருள்கள். இவ்வுயர்வு தாழ்வுகளை நீக்கப்பொருளென்பாருமுளர்.

ஏதுப்பொருளாவது ஒருபொருளின் பெருமை முதலியவற்றிற்கு ஏதுவாகும் பொருளாம்.

**உ—ம்.** கல்வியிற் பெரியன் கம்பன் என்புழிக், கம்பனுடைய பெருமைக்கு ஏதுக் கல்வியாதலாற் கல்வி ஏதுப்பொருள்.இன்னும், மாயையிற் றோன்றியதுலகம் என முதற்காரணப்பொருளிலும், மண்ணுலகின் வேறு விண்ணுலகம் என வேற்றுமைக் கெதிர்ப்பொருளிலும், பாவத்தின் வெறுக்கின்றான் என விடயப்பொருளிலும், ஐந்தனுருபு வருமெனக் கொள்க.

நீக்கப்பொருளிலும், எல்லைப்பொருளிலும், இன் இல் உருபுகளின் மேல், நின்று, இருந்து என்பவை, உம்பெற்றும் பெறா துஞ் சொல்லுருபுகளாக வரும்.

உ–ம். (1) ஊரினின்றும் போயினான்; ஊரினின்று போயினான்; ஊரிலிருந்தும் போயினான். இவை நீக்கப்பொருள்.

(2) காட்டினின்றுமூர்காவதம், காட்டினின்றூர்காவதம்; காட்டிலிருந்துமூர்காவதம், காட்டிலிருந் தூர்சாவதம் இவை எல்லைப்பொருள்.

74. ஆறாம்வேற்றுமை யுருபும் பயனுங் கூறுஞ் சூத்திரம் யாது?

ஆற னொருமைக் கதுவு மாதுவும்
பன்மைக் கவ்வு முருபாம் பண்புறுப்
பொன்றன் கூட்டம் பலவி னீட்டந்
திரிபி னாக்க மாந்தற் கிழமையும்
பிறிதின் கிழமையும் பேணுதல் பொருளே.

(ஆறன் ஒருமைக்கு அதுவும் ஆதவும்
பன்மைக்கு அவ்வும் உருபு ஆம் பண்பு உறுப்பு

ஒன்றன் கூட்டம் பலவின் ஈட்டம் திரிபின் ஆக்கம் ஆக் தற்கிழமையும் பிறிதின் கிழமையும் பேணுதல் பொருளே.)

இ–ள்.: ஆறாம்வேற்றுமையினது வருமொழியினொருமைப் பொருண்மைக்கு முன் சொல்லப்பட்ட அதுவேயன்றி ஆதவும் வருமொழியின் பன்மைப்பொருண்மைக்கு அகரமும் உருபாம்; அவற்றின் பொருள்களாவன குணமுந் தொழிலுமாகிய பண்பும், அவயமும், ஒருபொருட்கூட்டமும், பலபொருட்கூட்டமும், ஒன்று திரிந்தொன்றாதலும் ஆகிய ஐந்துதற்கிழமைப் பொருள்களையும், அவையல்லாத பிறிதின்கிழமைப்பொருள்களையும், உடையனவாக அவ்வுருபுகளையேற்ற பெயர்ப்பொருள்கள் வேறுபட்ட இவ்விருவகைச் சம்பந்தப்பொருள்களுமாம், எ–று.

75. ஆறாம் வேற்றுமை யுருபுகள் யாவை?

"ஆறனொருமைக் கதுவுமாதுவும் பன்மைக்கவ்வுமுருபாம்"

76. ஆறாம் வேற்றுமை ஒருமையுருபுகள் யாவை?

ஆறனொருமைக்கு அதுவும் ஆதுவும்..உருபாம்"

77. ஆறாம் வேற்றுமைப் பன்மை யுருபு யாவை?

"ஆறன்...பன்மைக்கு அவ்வு முருபாம்"

78. ஆறாம் வேற்றுமைப் பொருள் யாவை?

"பண்பு உறுப்பு ஒன்றன் கூட்டம் பலவின் கூட்டம் திரிபின் ஆக்கம் ஆம் தற் கிழமையும் பிறிதின் கிழமையும் பேணுதல் பொருளே"

79. சுருக்கிக்கூறின் ஆறாம் வேற்றுமைக்குப் பொருள் எத்தனை?

கிழமைப்பொருள் ஒன்றே.

80. அக்கிழமை எத்தனைவகைப்படும்?

தற்கிழமை பிறிதின் கிழமை என இரண்டு.

81. தற்கிழமை எத்தனைவகைப்படும்?

"பண்பு உறுப்பு ஒன்றன் கூட்டம் பலவினீட்டம் திரிபினாக்கம் என ஐந்துவகைப்படும்.

82. பிறிதின் கிழமை எத்தனை வகைப்படும்?

பொருளிடம் காலம் என மூவகைப்படும்.

83. தற்கிழமையை வகைப்படுத்துக்கூறிப் பிறிதின் கிழமையை வகைப்படுத்துக் கூறாததென்னை?

ஆறாம்வேற்றுமைக்குப் பொருண்முடிவு பொருளிடங்காலம் சினை குணந்தொழில் என்னும் அறுவகைப் பெயரேயாதலால், அவற்றுள், சினை குணந் தொழில் என்னும் மூவகையிலும் தற்கிழமைப்பேதம் ஐந்துமடங்க் எஞ்சுவன பொருளிடங் காலம் என்னு மூன்று மென்பதுதானே பெறப்படுதலின் கூறாது விடப்பட்டது.

84. கிழமையாவது யாது?

கிழமையாவது இதனுடையது இது என்பதுபடவரும் உடைமை.

தற்கிழமைப்பொருளாவது தன்னோடொற்றுமையுடையது. பிறிதின்கிழமைப் பொருளாவது தன்னின் வேறாயது. இப்படிப் பலவகையாலும் வருஞ் சம்பந்தப்பொருளே இவ்வேற்றுமை யுருபுகளின் பொருளென்பதாயிற்று.

**உ—ம். 1. தற்கிழமை**

சாத்தனது கருமை.....(குணம்)– பண்புத்தற்கிழமை

சாத்தனது வரவு..........(தொழில்) – "

சாத்தனது கை............. – உறுப்புத்தற்கிழமை.

புலியது வால்................ – "

மாந்தரது தொகுதி............ – ஒன்றன் கூட்டத் தற்கிழமை.

நெல்லது குப்பை.............. – "

படைகளது தொகுதி......... – பலவின் கூட்டத் தற்கிழமை.

பறவைகளது கூட்டம்.............. – "

நெல்லினது பொரி.................. – ஒன்றுதிரிந்தொன்றாயதன்றற் கிழமை.

மஞ்சளது பொடி....................... – "

2. பிறிதின்கிழமை

சாத்தனது பசு..........................பொருட்பிறிதின்கிழமை

முருகனது வேல்...................... "

86. ஏழாம் வேற்றுமையுருபும் பொருளுங் கூறுஞ் சூத்திரம் யாது?

ஏழ னுருபுகண் ணாதி யாகும்
பொருண்முத லாறு மோரிரு கிழமையின்
இடனாய் நிற்ற லதன்பொரு ளென்ப.
(ஏழன் உருபு கண் ஆதி ஆகும்
பொருள் முதல் ஆறும் ஓரிருகிழமையின்
இடம் ஆய் நிற்றல் அதன் பொருள் என்ப.)

இ–ள்.: ஏழாம்வேற்றுமையினுருபு முன் சொல்லப்பட்ட கண்ணேயாம். இடமாகிய பொருள்முதலாறும் ஆறாம்வேற்றுமைச் சூத்திரத்திலே சொல்லப்பட்ட இருகிழமைப்பொருள்களுக்கும் இடமாய்நிற்றல் அதன் பொருளாம் என்று சொல்லுவர் புலவர். என்றவாறு. ஆதி என்பதற்கு இங்கே இடமெனப் பொருள்கொள்க.

(உதாரணம்)

மணியின் கணிருக்கின்றதொளி................தற்கிழமை – பொருளிடமாயிற்று.

பனையின்கண் வாழ்கின்றதன்றில். பிறிதின்கிழமை. – „

ஊரின் கணிருக்குமில்லம்........................................தற். – இடமிடமாயிற்று.

ஆகாயத்தின்கட்பறக்கின்றது பருந்து...............பிறி. „

நாளின்கணாழிகையுள்ளது.................................தற். – காலமிடமாயிற்று.

வேனிற்கட்பாதிரி பூக்கும்..................................பிறி. „

கையின்கணுள்ள துவிரல்...................................தற். – சினையிடமாயிற்று.

கையின்கண்விளங்குகின்றதுகடகம்...................பிறி „

கறுப்பின்கண்மிக்குள்ளதழகு............................தற். – குணமிடமாயிற்று.

இளமையின்கண் வாய்த்ததுசெல்வம்................பிறி – „

ஆடற்கணுள்ளது சதி.........................................தற் – தொழிலிடமாயிற்று.

ஆடற்கட்பாடப்பட்டதுபாட்டு..............................பிறி. „

87. இடப்பொருளாவது யாது?

வினைமுதல்வழியாக வினைமுதற்றொழிற்காயினும், செயப்படுபொருள் வழியாகச் செயப்படுபொருளிலிருக்கின்ற பயனுக்காயினும் இடமாகும் பொருள் இடப்பொருளென்பர் வடநூலார்.

உ–ம். (1) மணியின் கணிருக்கின்றதொளி என்புழி, ஒளியென்னும் வினைமுதலின் வழியாக அதனது இருத்தற்றொழிற்கு மணி இடமாயிற்று.

(2) கழுவின் கட்கள்வனை யேற்றினான் என்புழிக், கள்வனென்னுஞ் செயப்படுபொருளின் வழியாக அச்செயப்படுபொருளிலிருக்கின்ற உயிர்ப்பிரிவாகிய பயனுக்குக் கழு இடமாயிற்று.

88. இடப்பொருள் எத்தனைவகைப்படும்?

இடப்பொருள் தன்னிற்சிறிதிடமாவதும், தான்முழுதுமிடமாவதும், விடயமாவதும் என மூவகைப்படும்.

உ–ம். (1) ஊர்க்கணிருந்தான், பாயிலிருக்கின்றான். ஒரோவழி மேவல்.

(2) மணியின்கணொளி, உயிரின்கணுணர்வு, பாலின்கட்சுவை, தீயின்கட் சூடு, நீரின்கட் சீதம் எங்கும் வியாபகம்.

(3) கல்வியின்கணாசை வைத்தான், குருவின்கணன்பு செய்தான். விடயம்.

சிறுபான்மை ஏழனுருபுகள், கூட்டிப் பிரித்தற்கெல்லையாகும் பொருளிலும், பிரித்துக்கூட்டலிற் குழுவாகும் பொருளிலும், ஒரு தொழிற் காலத்தைக் குறிக்கும் பிறிதுதொழிலாகும் பொருளிலும் வரும்.

**உ–ம்.** (1) மக்களுள் உயர்ந்தோரந்தணர்; குறிலைந்தனுள் அ இ உ இம்மூன்றும் சுட்டு. கூட்டிப்பிரிக்குமெல்லைப்பொருள்.

(2) அறஞ்செயுமகன் றேவருள் வைக்கப்படுவான்; கல்வியறிவில்லாதவன் விலங்கினுள் வைத்தெண்ணப்படுவான். பிரித்துக்கூட்டுங் குழூஉப்பொருள்.

(கூ) பால்கறக்கையில் வந்தான்; பொருதற்கண் மழை பெய்தது. ஒருதொழிற் காலத்தைக் குறிக்கும் பிறிது தொழில்.

ஆதியாகும் பொருண்முதலாறும் என்றது இடப்பொருளேயன்றி ஏனைய ஐந்துபொருளும் ஈண்டிடனாய் நிற்றலினென்க.

89. ஏழனுருபு கண்ணாதியாகும் என்பதற்கு ஏழாம்வேற்றுமையுருபு கண்: முதலியனவாமெனப் பொருள் கூறலாகாதோ?

கூறலாகாது. கண் என்பதொன்றுமே அதற்குரிய வுருபாம். இதன்பொருள் என்புழி இதுவென்னு பொருமைச்சுட்டு ஒன்றேயென வலியுறுத்தலாலும், மேல்வருஞ் சூத்திரத்திற் கூறப்படும் உருபுகளெல்லாம் இடப்பொருளுருபெனப்பட்டதுவே யன்றி ஏழனுருபெனப்படாமையாலும், உருபென்பது ஆசிரியர் கருத்தாயின் கூறியது கூறலாய்க் கண்ணென்பதை மீட்டுங் கூறாராகலானும், புறம் அகம் வலம் என்பன, ஊர்ப்புறத்திருந்தான் ஊரகத்திருந்தான் கை வலத்துள்ளது என அத்துச்சாரியை பெறுதலின் உருபாயின் அத்துப்பெறுதல் பொருந்தாமையானும், அவ்வுரை பொருந்தாதென்க. சேனாவரையரும் வைத்தியநாத நாவலரும் இக்கருத்தேபற்றி உரையிட்டார்களன்றோ.

90. இடப்பொருளுருபாக வருவன இவையெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

கண்கால் கடையிடை தலைவாய் திசைவயின்
முன்சார் வலமிட மேல்கீழ் புடைமுதல்
பின்பா டளைதே முழைவழி யுழியுளி
உள்ளகம் புறமில் லிடப்பொரு ளுருபே.

(கண் கால் கடை இடை தலை வாய் திசை வயின்
முன் சார் வலம் இடம் மேல் கீழ் புடை முதல்
பின் பாடு அளை தேம் உழை வழி உழி உளி
உள் அகம் புறம் இல் இடப்பொருள் உருபே.)

**இ–ள்.:** கண் முதலாக இல்லீறாகச் சொல்லப்பட்ட இவ்விருபத்தெட்டும் இடப்பொருளுருபுகளாம்.

91. கண்ணுருபிற்கும் இவைகளுக்கும் தம்முள் வேற்றுமை யாது?

ஐ ஆல் கு இன் அது என்பன இடைச்சொன்மாத்திரையாய் நின்று தம்மையேற்ற பெயர்ப்பொருளை வேறுபடுத்துவதுபோலக் கண்ணுருபும் இடைச்சொன் மாத்திரையாய்த் தன்னையேற்ற பெயர்ப்பொருளை வேறுபடுத்துவது. கண்கால்முதலியனவோ வேறு வேறுபட்ட இடப்பொருளாகிய பெயராய்க் கண்ணுருபு நிற்றற்குரியவிடத்து நின்று அதன் பொருளை யுணர்த்துவன. இவையே தம்முள் வேற்றுமையாம்.

**உ–ம்.** கண்–கண்ணெதிரேநின்று சொன்னவனைப் பார்த்து "என்

கண்ணின் றிவைசொல்லற்பாலையல்லை” என்னுமிடத்துக் கண் இடப்பொருளுருபு.

கால் – “ஊர்க்கானிவந்த பொதும்பர்.”

கடை – “வேலின்கடை மணிபோற்றிண்ணியான்.”

இடை – “நல்லாரிடைப்புக்கு”

தலை – “வலைத்தலை மானன்ன நோக்கியர்.”

வாய் – “குரைகடல்வாயமுதென்கோ”

திசை – “ தேர்த்திசையிருந்தான்.”

வயின் – “அவர்வயிற்செல்வாய்.”

முன் – “கற்றார்முற்றோன்றா கழிவிரக்கம்.”

சார் – “காட்டுச்சாரோடுங் குறுமுயால்.”

வலம் – “கைவலத்துள்ளது கொடுக்கும்.”

இடம் – “இல்லிடப்பரத்தை.”

மேல் – “தன்மேற்கடுவரைநீரிற்கடுத்து வரக் கண்டும்.” (கடுப்பு–விரைவு.)

கீழ் – “பிண்டிக் கண்ணார்நிழற்கீ ழெந்தமடிகள்”

புடை – “எயிற்புடை நின்றான்.”

முதல் – “சுரன்முதல் வந்த வுரன்மாய் மாலை” (சுரன்–பாலை நிலம்.)

பின் – “காதலிபின் சென்றதம்ம.”

பாடு – “கம்பா டணையாத நான்.”

அளை – “கல்லளைச்சுனைநீர்.”

சேம – “கோழிக்குரியவை சோடாய்தேத்து.” (சோடாய்–கைத்தாய்)

உழை – “அவனுழைவந்தான்.”

வழி – “நின்றதோர்நறவேங்கைநிழல்வழியசைந்தன்ன.”

உழி – “உறையுழியோலைபோல.” (உறை – வாழ்நாள்.)

உளி – “குயில்சேர்குளிர்காவுளிசேர்புறையும்.”

உள் – “முல்லையங்குவட்டுள் வாழும்.”

அகம் – “பயன்சாராப் பண்பில்சொற்பல்லாரகத்து.”

புறம் – “செல்லுமென்னுயிர்ப்புறத்திறுத்த மருண்மாலை.”

இல் – “ஊரிலிருந்தார்.”

இனிக் கண் கான் முதலியன, இடவேறுபாடுகளை யுணர்த்தும்போது ஒருதிறத்தனவாகிய உருபாகாது, பலதிறத்தனவாகிய இடங்களையுணர்த்தும் பெயர்களாம்.

**உ–ம்.** கண்ணகன் ஞாலம், அகத்திலிருந்தான், வீட்டின் புறத்திலிருந்தான், மேலிடத்திருந்தான், முன்னிருந்தான், கடைநாள், இடைச்சுரம், தலையாயார், தென்றிசை என வரும். பிறவு மன்ன.

92. எட்டாம் வேற்றுமை உருபும் பொருளும் கூறுஞ் சூத்திரம் யாது?

எட்ட னுருபே யெய்துபெய ரீற்றின்
றிரிபு குன்றன் மிகுத லியல்பயற்
றிரிபு மாம்பொருள் படர்க்கை யோரைத்
தன்முக மாகத தானழைப் பதுவே.
(எட்டன் உருபே எய்து பெயர் ஈற்றின்
திரிபு குன்றல் மிகுதல் இயல்பு அயல்
திரிபு ஆம் பொருள் படர்க்கையோரைத்
தன்முகம் ஆக தான் அழைப்பதுவே.)

**இ—ள்.:** எட்டாம் வேற்றுமையினுருபுகளாவன விளியடைந்த பெயர் ஈறு திரிதலும் கெடுதலும் மிகுதலும் இயல்பாதலும் ஈற்றயலெழுத்துத் திரிதலுமாகும்; அவற்றின் பொருள் படர்க்கையிடத்தாரை ஒருவன் தனக்கெதிர்முகமாக விளித்தலாம், **எ—று.**

93. எய்துபெயரென்றதனாற் பெறப்படுவது யாது?

எய்தாப்பெயரு முண்டென்பது. அது மேல்வரும் "துவ்வொடு வினாச்சுட்டு" என்னுஞ் சூத்திரத்திற் காண்க.

94. படர்க்கையோரென்பதனாற் பெறப்படுவது யாது?

மற்றையிடத்தார் விளிக்கப்படாரென்பது. தான் அசைநிலை. விளித்தற்குக் கருவியாகிய உருபை விளியென்றது காரியவாகுபெயர்.

95. விளியேற்கும்பெயர் இவையெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

இ உ ஊவோ டையோ ன ள ர ல
யவ்வீற் றுயர்திணை யோரவல் லிவற்றொடு
ணஃகா னாவீ றாகும் பொதுப்பெயர்
ஞநவொழி யனைத்தீற் றஃறிணை விளிப்பன.
(இ உ ஊ ஒடு ஐ ஓ ன ள ர ல
ய ஈற்று உயர்திணை, ஓ ர அல் இவற்றொடு
ணஃகான் ஆ ஈறு ஆகும் பொதுப்பெயர்
ஞ ந ஒழி அனைத்து ஈற்று அஃறிணை விளிப்பன.)

**இ—ள்.:** இகரமும் உகரமும் ஊகாரமும் ஐகாரமும் ஓகாரமும் என்னுமுயிர்களும் ன ள ர ல ய என்னுமெய்களும் ஆகிய பத்தெழுத்துக்களையும் இறுதியிலுடைய உயர்திணைப் பெயர்களும், இவற்றுள் ஓகாரவுயிரும் ரகரமெய்யுமாகிய இரண்டு மொழித்து நின்ற எட்டுடனே ணகரமும் ஆகாரமுமாகிய இரண்டுங்கூடிய பத்தெழுத்துக்களும் இறுதியாகிய பொதுப் பெயர்களும், ஞகர நகரங்களும் (ஈறாகாத எகரமு) மொழிந்த இருபத்தோரெழுத்துக்களையும் ஈற்றிலுடைய அஃறிணைப்பெயர்களும் அழைக்கப்படுவன, **எ—று.**

96. விளியேற்கும்பெயர்கள் யாவை?

உயர்திணைப்பெயர். பொதுப்பெயர். அஃறிணைப்பெயர்.

97. அவ்வுயர்திணைப்பெயர்களினுடைய ஈறுகள் யாவை?

இ உ ஊ ஐ ஓ ன ள ர ல ய என்னும் பத்து ஈறுகளுமாம்.

98. அப்பொதுப்பெயர்களினுடைய ஈறுகள் யாவை?

ஒ ர அல் இவற்றொடு ணஃகான் ஆவீறு.

(இ உ ஊ ஐ ன ள ல ய ண ஆ என்னும் பத்துமாம்.)

99. அவ்வஃறிணைப்பெயர்க்கு ஈறாமெழுத்துக்க ளெத்தனை?

ஞ ந ஒழி அனைத்தீற்றஃறிணை என்றதனால் இருபத்தோ ரெழுத்துக்கள்.

100. உகரமெனப் பொதுப்படக் கூறியதனாற் கொள்ளக்கிடப்பது யாது?

பொதுப்படக்கூறியதனால் பெரும்பான்மை குற்றுகரமும் சிறுபான்மை முற்றுகரமுமாமென்பது.

101. மூவகைப்பெயர்க்கும் பொதுவாகிய விளியுருபு கூறுஞ் சூத்திரம் யாது.

இம்முப் பெயர்க்கண் ணியல்பு மேயும்

இகர நீட்சியு முருபா மன்னே.

(இம்முப் பெயர்க்கண் இயல்பும் ஏயும்

இகர நீட்சியும் உருபு ஆம் மன்னே.)

**இ–ள்.:** முன் விளிக்கப்படுமென்ற மூவகைப் பெயர்களிடத்தும் இயல்பாதலும் பிறிதுவந்தடைதலாய் ஏகாரமிகுதலும் இகரம் ஈகாரமாதலும் பெரும்பாலும் விளியுருபுகளாகும், **எ–று.**

102. அவ்விளியுருபுகள் யாவை?

பெயரீறு இயல்பாதலும், ஏகாரம் மிகுதலும், இகரம் ஈகாரமாதலும் உருபுகளாம்.

103. இயல்பாக நின்று விளிப்பது எவ்விடத்து?

அண்மைக்கண் விளிகொள்ளுமிடத்து.

**வரலாறு:–** நம்பிவாழி, வேந்துவாழி, திருவாழி, ஆடூஉவாழி, நங்கை வாழி, கோவாழி என உயிரீற்று உயர்திணைப்பெயர்கள் அண்மைக்கண் இயல்பாயின.

கணி–கணியே, வேந்து–வேந்தே, திரு–திருவே, ஆடூஉ–ஆடூஉவே. கோ–கோவே என உயிரீற்று உயர்திணைப்பெயர்கள் பிறிதுவந்து அடைதலால் ஏகாரம் மிக்கன.

நம்பி–நம்பீ, தோழி–தோழீ என இகர ஈற்று உயர்திணைப்பெயர்கள் ஈகாரமாய்த் திரிந்தன.

னகர ஈற்று உயர்திணைப்பெயருள் "நம்பின்சிறி தேயிடைதந்திது கேட்க" என அன்னீறுஞ் சேரமான் மலையமான் என ஆனிறும் அண்மைக்கண் இயல்பாயின.

"படிவ வுண்டிப் பார்ப்பான் மகனே" என முறைமை சுட்டா மகனுந் "தென்னவனே தேர்வேந்தே தேறுநீர்க் கூடலார்–மன்னவனே மார்பின் மறு" என அன்னீறுந் தம்முன் தம்முனே என முன்னீறும் பிறிதுவந்து அடைதலாய் ஏகாரம் மிக்கன.

கடவுள்வாழி, அடிகள்கூறீர், கோமான்கூறாய், கடியாள்கூறாய் "ஆவுமானியற்பார்ப்பனமாக்களு மெம்மம்பு கடிது விடுது நும்மரண் சேர்மின்" என ளகர ஈற்றுயர்திணைப்பெயர்கள் அண்மைக்கண் இயல்பாயின.

"அகவன்மகளே யகவன்மகளே" என முறைமை சுட்டாமகளென்னும் ளகர ஈற்று உயர்திணைப்பெயர் பிறிதுவந்து அடைதலாய் ஏகாரம்மிக்கது.

மாந்தர்கூறீர் சான்றோர்கூறீர் கேளிர்வாழி "பெண்டிரும்பிணியுடையீரு நும்மண்சேர்மின்" என ரகர ஈற்று உயர்திணைப்பெயர்கள் அண்மைக்கண் இயல்பாயின.

இறையவர்–இறையவரே, வந்தவர்–வந்தவரே, கரியவர்–கரியவரே என ரகர ஈற்று உயர்திணைப்பெயர்கள் பிறிதுவந்து அடைதலாய் ஏகாரம் மிக்கன.

குரிசில்கூறாய் தோன்றல்கூறாய் ஆண்பால்கூறாய் பெண்பால்கூறாய் என லகர ஈற்று உயர்திணைப்பெயர்கள் அண்மைக்கண் இயல்பாயின.

திருமாலே, தோன்றலே, "குருசிலேயெம்மையுள்ளாய்" என லகரஈற்று உயர்திணைப்பெயர்கள் பிறிதுவந்து அடைதலாய் ஏகாரம் மிக்கன.

ஆய்வாழி–என யகர ஈற்று உயர்திணைப்பெயர் அண்மைக்கண் இயல்பாயிற்று.

ஆயேகூறாய்–என யகர ஈற்று உயர்திணைப்பெயர் பிறிதுவந்து அடைதலாய் ஏகாரம் மிக்கது.

பிணாவாராய், சாத்திகூறாய், பூண்டுகூறாய் அழிதூவாராய் தந்தை வாராய் அன்னையருளாய் என உயிரீற்று விரவுப்பெயர்கள் அண்மைக்கண் இயல்பாயின.

பிணாவேகூறாய், பூண்டேகூறாய், என உயிரீற்று விரவுப்பெயர்கள் பிறிதுவந்து அடைதலால் ஏகாரம் மிக்கன.

சாத்தி, சாத்தீ, எம்பி, எம்பீ, என இகர ஈற்று விரவுப்பெயர்கள் ஈகாரமாய்த் திரிந்தன.

ஆண்வாழி, பெண்வாழி, சாத்தன்வாழி, மகள்வாழி, நூங்கல்வாழி, தாய்வாழி என ஒற்றீற்று விரவுப்பெயர்கள் அண்மைக்கண் இயல்பாயின.

ஆண் – ஆணே, பெண்– பெண்ணே, மகன்–மகனே, மருமகன் – மருகனே, மகள் – மகளே, மருமகள்– மருமகளே, தூங்கல்–தூங்கலே, கூந்தல்– கூந்தலே, தாய்–தாயே என ஒற்றீற்று விரவுப்பெயர்கள் பிறிதுவந்து அடைதலாய் ஏகாரம் மிக்கன.

நெஞ்சம்வருந்தினை, வாழியநெஞ்சம் எனவும், "குருகு கருங்கால்வெண் குரு கொன்று கேண்மதி" எனவும் ஒற்றீற்று அஃறிணைப் பெயரும் உயிரீற்று அஃறிணைப்பெயரும் அண்மைக்கண் இயல்பாயின.

இதண் – இதணே, புனம் – புனமே, மான் – மானே, வேய் – வேயே, காரி – காரே, குயில் – குயிலே, புள் – புள்ளே எனவும், விள – விளவே, நிலா – நிலாவே, கிளி – கிளியே, வீ – வீயே, குருந்து – குருந்தே, பூ – பூவே, சே – சேவே, கழை – கழையே எனவும் ஒற்றீற்று அஃறிணைப் பெயர்களும் பிறிது வந்து அடைதலாய் ஏகாரம் மிக்கன.

மந்தி–மந்தீ, தும்பி–தும்பீ என இகர ஈற்று அஃறிணைப் பெயர்களின் இகரம் ஈகாரமாய்த் திரிந்தன. பிறவும் அன்ன.

மன்னென்றமிகையானே ஐகார ஈற்று உயர்திணைப்பெயர் பிறிது வந்து அடைதலாய் ஏகாரம் ஏலாதனவும் அஃறிணைப்பெயர் அன்மொழித் தொகையாய்த்தான் ஆகுபெயராய்த்தான் உயர்திணைக்கண்வந்துழி உயர்திணைப்பெயராய்ச் சுடர்த்தொடி "சுடர்த்தொடீகேளாய்" என இகர ஈறு ஈகாரமாய்த் திரிந்துந் தாழ்குழல் தாழ்குழலே எனப் பிறிதுவந்து அடைதலாய் ஏகாரம் மிக்கும், விளியேற்றுலுந் தோழீஇஇஇ தோழீஇஇஇஇ எனத் தொழில்செய்கின்றவளேயென்னும் பொருட்டாய் நிற்பதோர் இகர ஈற்று அளபெடைப்பெயரும், உழாஅஅன் கிழாஅஅன் என னகர ஈற்று அளபெடைப்பெயரும், சிறாஅஅர் மகாஅஅர் என ரகர ஈற்று அளபெடைப்பெயரும் கோஒஒள் என ளகர ஈற்று அளபெடைப் பெயரும், மாஅஅல் என லகர ஈற்று அளபெடைப்பெயரும் இயல்பாய் விளியேற்றலும், நம்முன் நம்முனா என முன்னீறு ஆகாரம் மிகுதலும் அம்மசாத்தா என்புழிச் சாத்தா என்பதே எதிர்முகமாக்குமாயினும் அம்ம என்னும் இடைச்சொல்லும் எதிர்முகமாக்குதலே குறித்துநிற்றலின் அதுவும் அம்மாசாத்தா என இறுதி திரிந்து விளியேற்றலும் இவ்வாறுவருவன பிறிவுங்கொள்க.

இவ்வளபெடைப்பெயர்கள் செய்யுளுட் குறைந்துவந்தன சந்த
இன்பநோக்கி விகாரத்தான் வந்தனவென்க.

பெரும்பாலும் என்றதனால், இவ்வுருபுகள் சிலவற்றிற்குப் பொருந்தாமை யுளவேற் கொள்க.

104. ஐகாரவீற்றுப்பெயர்களுக்கு முற்கூறியவுருபுகளேயன்றி வேறுருபுகளும் உளவெனக் கூறுஞ் சிறப்புச்சூத்திரம் யாது?

ஐயிறு பொதுப்பெயர்க் காயு மாவும்
உருபா மல்லவற் றாயு மாகும்.
(ஐ இறு பொதுப்பெயர்க்கு ஆயும் ஆவும்
உருபு ஆம் அல்லவற்று ஆயும் ஆகும்.)

இ–ள்.: ஐகாரவீற்றுப் பொதுப்பெயர்க்குப் பொதுவிதியால் இயல்பும் ஏகாரமிகுதலுமன்றி ஐகாரம் ஆயும் ஆவு மாகத்திரிதலும் அஃதல்லாத உயர்திணை அஃறிணைப்பெயர்களுக்கு அவ்விரண்டுருபுகளின்றி ஐகாரம் ஆயெனத் திரிதலும் விளியுருபுகளாம், எ–று.

உ–ம். (1) அன்னை அன்னாய், அன்னா பொதுப்பெயர்க்கு ஆயும் ஆவும் வந்தன.

(2) விடலை–விடலாய் எனவும், நாரை–நாராய் எனவும், உயர் திணைப் பெயர்க்கும் அஃறிணைப்பெயர்க்கும் ஆய் வந்தது.

உரையிற்கோடலென்னு முத்தியால், "அன்னை யுன்னை யல்லா லினியாரை நினைக்கேனே." எனப் பொதுப்பெயர்க்கு ஐகாசம் ஏகார்மாகத் திரிதலுங் கொள்க.

105. னகரவீற்று உயர்திணைப்பெயர்களுக்கு முற்கூறிய விளியுருபுகளே யன்றி வேறுருபுகளுமுள வெனக் கூறுஞ் சிறப்புச் சூத்திரம் யாது?

ஒருசார் னவ்வீற் றுயர்திணைப் பெயர்க்கண்

அளபீ றழிவய னீட்சி யதனோ
டீறு போத லவற்றோ டோவுறல்
ஈறழிந் தோவுற லிறுதியவ் வாதல்
அதனோ டயறிரிந் தேயுற லீறழிந்
தயலே யாதலும் விளியுருபாகும்
(ஒருசார் னவ்வீற்று உயர்திணைப் பெயர்க்கண்
அளபு ஈறு அழிவு அயல் நீட்சி அதனோடு
ஈறு போதல் அவற்றோடு ஓ உறல்
ஈறு அழிந்து ஓ உறல் இறுதி யவ்வாதல்
அதனோடு அயல் திரிந்து ஏ உறல் ஈறு அழிந்து
அயல் ஏ ஆதலும் விளியுருபு ஆகும்.)

**இ—ள்.**: பொதுவிதியன்றி னகரமெய்யீற்றுயர் திணைப்பெயர்களுட் சில அளபெடுத்தலும், சில ஈறு கெடுதலும், சில ஈற்றயனீளுதலும், சிலஈற்றயனீண்டு ஈறு கெடுதலும், சில ஈறு கெட்டு ஈற்றயனீண்டு ஓகார மிகுதலும், சில ஈறுகெட்டு ஓகாரமிகுதலும், சில இறுதி னகரமெய் யகரமெய்யாதலும், சில ஈற்று னகரமெய் யகரமெய்யாகத் திரிந்து அயலில் ஆகாரம் ஓகாரமாய் ஏகாரமிகுதலும், சில ஈறுகெட்டு அயலில் அகரம் ஏகாரமாதலும் விளியுருபுகளாகும், **எ—று.**

106. இச்சூத்திரவிதிப்படி னகர வீற்றுயர்திணைப் பெயர்க்கண் விளியுருபு எத்தனை வகையாகவரும்.

அளபு, ஈறழிவு, அயல்நீட்சி, அதனோடு (அயல் நீட்சியோடு) ஈறுபோதல், அவற்றோடு (ஈறுபோதல் ஈற்றயானீளுதலோடு) ஓவுறல், ஈறழிந்தோவுறல், இறுதியவ்வாதல், அதனோடு அயறிரிந்து ஏயுறல், ஈறழிந்தயல் ஏயாதல் என்னும் ஒன்பது வகையாக வரும்.

**உ—ம்.** 1. அம்பர்கிழான்—அம்பர்கிழாஅன் அளபாயிற்று. 2.புலவன்--புலவ ஈறழிந்தது 3.பெருமன்—பெருமான் ஈற்றயனீண்டது. 4.மன்னன்—மன்னா ஈற்றயனீண்டு ஈறுகெட்டது. 5. ஐயன்—ஐயாவோ ஈற்றயனீண்டு ஈறுகெட்டு ஓகாரமிக்கது. 6. திரையன்—திரையவோ ஈறழிந்து ஓகார மிக்கது. 7. வாயிலான்—வாயிலாய் இறுதி யவ்வாயிற்று. 8. வாயிலான்—வாயிலோயே இறுதி யவ்வாய் ஈற்றயலாகாரம் ஓகாரமாய் ஏகார மிக்கது. 9. ஐயன் ஐயே ஈறழிந்து அயலின் அகரம் ஏகாரமாயிற்று.

இவ்வொருசாரென்பதை விளியதிகாரமுழுதுங் கூட்டுக.

107. னகரவீற்று உயர்திணைப்பெயர்கள் விளிக்கண் முற்கூறிய விளியுருபுகளே யன்றி வேறுருபுகளும் பெறுமெனக் கூறுஞ் சிறப்புச் சூத்திரம் யாது?

**ளஃகா னுயர்பெயர்க் களபீ றழிவயல்**
**நீட்சி யிறுதி யவ்வொற் றாதல்**
**அயலி லகரமே யாதலும் விளித்தனு.**
**(ளஃகான் உயர்பெயர்க்கு அளபு ஈறு அழிவு அயல்.**

**நீட்சி இறுதி யவ்வொற்று ஆதல்**

**அயலில் அகரம் ஏ ஆதலும் விளித்தனு.)**

**இ—ள்.:** பொதுவிதியன்றி ளகரமெய் யீற்றுயர்திணைப்பெயர்களுட் சில அளபெடுத்தலும் சில ஈறு கெடுதலும் சில ஈற்றயனீளுதலும் சில இறுதி ளவ்வொற்று யவ்வொற்றாதலும் சில ஈற்றயலகரம் ஏகாரமாதலும் விளியுருபுகளாகும், **எ—று.**

**உ—ம்.** 1. வேள்—வேஎள் அளபெடுத்தது. 2. எல்லாள்—எல்லா ஈறுகெட்டது. 3. மக்கள்—மக்காள் ஈற்றயனீண்டது. 4. குழையாள்—குழையாய் ளவ்வொற்று யவ்வொற்றாயிற்று. 5. அடிகள்—அடிகேள் ஈற்றயலகரம் ஏகாரமாயிற்று.

108. ரகரவீற்று உயர்திணைப்பெயர்கட்கு விளியுருபு வகுத்த விதியின்மேற் சிறப்புவிதி கூறுஞ் சூத்திரம் யாது?

ரவ்வீற் றுயர்பெயர்க் களபெழ லீற்றயல்
அகரம் இ ஈ யாத லாண்டையா
ஈயாத லதனோ டேயுற லீற்றே
மிக்கயல் யாக்கெட் டதனய னீடல்
ஈற்றினீ ருற லிவையுமீண் டுருபே.

(ரவ்வீற்று உயர்பெயர்க்கு அளபு எழல் ஈற்றயல் அகரம் இ ஈயாதல் ஆண்டைஆ ஈ ஆதல் அதனோடு ஏ உறல் ஈற்று ஏ மிக்கு அயல் யாக் கெட்டு அதன் அயல் நீடல் ஈற்றின் ஈர் உறல் இவையும் ஈண்டு உருபே.)

**இ—ள்.:** பொதுவிதி யன்றி ரகர மெய்யீற்றுயர்திணைப் பெயர்களுள் சில அளபெடுத்தலும் சில ஈற்றயலகரம் இகரமாதலும் ஈகாரமாதலும் சில அவ்விடத்து ஆகாரம் ஈகாரமாதலும் சில அதனோடு ஏகாரம் ஏற்றலும், சில ஈற்றில் ஏகாரமிக்கு அயலில் யாக்கெட்டு அதனயலிகரம் ஈகாரமாதலும் சில ஈற்றில் ஈர் ஆதலும் ஆகியவிவையும் இவ்விடத்து விளியுருபுகளாகும், **எ—று.**

**உ—ம்.** 1. சிறார்—சிறாஅர் அளபெடுத்தது. 2. தெவ்வர்—தெவ்விர் ஈற்றயலகரம் இகரமாயிற்று. 3. நாய்கர்—நாய்கீர் ஈற்றயலகரம் ஈகாரமாயிற்று. 4. சான்றார்—சான்றீர் ஈற்றயல் ஆகாரம் ஈகாரமாயிற்று. 5. கணியார்—கணியீரே ஈற்றயலாகாரம் ஈகாரமாய் ஏகாரமிக்கது. 6. தோழியார்—தோழீரே நம்பியார்—நம்பீரே ஈற்றிலேகாரமிக்கு அயல் யாக்கெட்டு அதனயலிகரம் ஈகாரமாயிற்று. 7. எமர்—எமரீர் ஈரேற்றது.

ஈண்டென்ற மிகையால், கடலாரே, கடலீரே; சாத்தியாரே, சாத்தியீரே எனவும், அஃறிணைப்பெயர் பொதுப்பெயர்களைச் சிறப்பித்து, ரவ்வீற்றுயர்திணைப்பெயர்போலக் கூறினும், இவ்வுரு பேற்றல் கொள்க.

109. லகார யகார வீற்று உயர்திணைப்பெயர்க்கண் விளியுருபிற்குச் சிறப்புவிதி கூறுஞ் சூத்திரம் யாது?

லகாரவீற் றுயர்பெயர்க் களபய னீட்சியும்
யகர வீற்றிற் களபுமா முருபே,

(லகார ஈற்று உயர்பெயர்க்கு அளபு அயல் நீட்சியும்
யகாரவீற்றிற்கு அளபும் ஆம் உருபே.)

**இ—ள்.:** பொதுவிதி யன்றி லகர மெய்யீற்றுயர்திணைப் பெயர்க்குச் சில அளபெடுத்தலும் சிலஈற்றயனீளுதலும் யகரமெய்யீற்று யர்திணைப்பெயர்க்கு அளபெடுத்தலும் விளியுருபுகளாகும், **எ—று.**

**உ—ம்.** மால்—மாஅல் எனவும், தோன்றல்—தோன்றால் எனவும், சேய்—சேஎய் எனவும் அம் மூன்றுருபுகளும் வந்தன.

110. னகரவீற்று அஃறிணைப்பெயர்க்கும் விரவுப்பெயர்க்கும் எட்டாம் வேற்றுமைக்கண் பொதுவிதியானன்றிச் சிறப்புவிதியா னெய்தும் உருபுகள் யாவை?

னவ்வீற் றுயர்திணை யல்லிரு பெயர்க்கண்

இறுதி யழிவத னோடய னீட்சி.

(னவ்வீற்று உயர்திணை அல் இருபெயர்க்கண்

இறுதி அழிவு அதனோடு அயல் நீட்சி.)

**இ—ள்.:** பொதுவிதியன்றி னகரமெய் யீற்றஃறிணைப்பெயர் பொதுப்பெயர்களிடத்துச் சில ஈறு கெடுதலும் சில ஈறுகெடுதலுடனே ஈற்றயனீளுதலும் விளியுருபுகளாம், **எ—று.**

**உ—ம்.** அலவன்—அலவ எனவும், கலுழன்—கலுழா எனவும், சாத்தன்—சாத்த எனவும், கொற்றன்—கொற்றா எனவும், முறையே அஃறிணைப்பெயரிலும் பொதுப்பெயரிலும் அவ்விரண்டும் வந்தன.

111. லளவீற்று அஃறிணைப்பெயர்க்கும் பொதுப்பெயர்க்கும் எய்தியதன் மேற் சிறப்புவிதியால் விளியுருபு கூறுஞ் சூத்திரம் யாது?

லளவீற் றஃறிணைப் பெயர்பொதுப் பெயர்க்கண்

ஈற்றய னீட்சியு முருபா கும்மே.

(ல ள ஈற்று அஃறிணைப்பெயர் பொதுப்பெயர்க்கண்

ஈற்று அயல் நீட்சியும் உருபு ஆகும்ஏ.)

**இ—ள்.:** லகர ளகர மெய்யீற்றஃறிணைப்பெயர்க்கும் பொதுப்பெயர்க்கும் பொதுவிதி யன்றி ஈற்றயலெழுத்து நீளுதலும் விளியுருபாகும், **எ—று.**

**உ—ம்.** முயல்—முயால், கிளிகள்—கிளிகாள் எனவும், தூங்கல்—தூங்கால், மக்கள்—மக்காள் எனவும் வரும்.

112. இதுகாறும் எட்டாம் வேற்றுமைக்குக் கூறிய இயல்பு முதலிய உருபுகள் இன்னஇன்னவிடத்திற் குரியனவெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

அண்மையி னியல்புமீ றழிவுஞ் சேய்மையின்

அளபும் புலம்பி னோவு மாகும்

(அண்மையின் இயல்பும் ஈறு அழிவும் சேய்மையின்

அளபும் புலம்பின் ஓவும் ஆகும்.)

**இ—ள்.:** முன் சொல்லப்பட்ட விளியுருபுகளுள் இயல்பாதலும் ஈறு கெடுதலுஞ் சமீபவிளிக்கண்ணும், அளபெடுத்தல் தூரவிளிக்கண்ணும், ஓகாரமிகுதல் புலம்பல்விளிக்கண்ணும், வரும், **எ—று.**

எனவே, மற்றைவிளியுருபுகள் இம்மூன்றிடத்துங் கலந்து வருமென்பதுபெற்றாம்.

113. விளியேலாப் பெயர்கள் இவையெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

நுவ்வொடு வினாச்சுட்டுற்ற ன ள ர

வை துத் தாந்தா னின்னன விளியா

(நுவ்வொடு வினாச்சுட்டு உற்ற ன ள ர

வை து தான் தாம் இன்னன விளியா.)

**இ–ள்.:** நுவ்வுடனே மூன்று முதல்வினாவையும் மூன்று சுட்டையும் முறையே பொருந்திய ன ள ர என்னும் மூன்றீற்றுயர் திணைப்பெயர்களும் வை து என்னுமிரண்டீற்றஃறிணைப் பெயர்களும் தாம் தானென்னும் பொதுப்பெயர்களும் இவை போல்வன பிறவும் விளிக்கப்படுவனவல்ல, **எ–று.**

வை து என்னு மிரண்டும் நுவ்வொடு பொருந்தா என்பார், ஒடுக்கொடுத்துப் பிரித்தார்.

**உ–ம்.** நுமன், நுமள், நுமர் எனவும், எவன், எவள், எவர், எவை, எது எனவும், யாவன், யாவள், யாவர், யாவை, யாது எனவும், எவன், ஏவள், எவர், எவை, எது எனவும், அவன், அவள், அவர், அவை, அது எனவும், இவன், இவள், இவர், இவை, இது எனவும், உவன், உவள், உவர், உவை, உது. எனவும், தாம், தான் எனவும் வரும் இப்பெயர்கள் விளியேலாமை காண்க.

இன்னன என்றதனால், தமன், தமள், எமன் முதலியனவும் மற்றையாள், மற்றையார், மற்றையது, மற்றையன, மற்றையவை, பிறன், பிறள், பிறிது, பிற முதலியனவுங் கொள்க.

114. முதல்சினைத்தொடர்பின்கண் இரண்டாமுருபு தடுமாறிவருமெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

முதலை யையுறிற் சினையைக் கண்ணுறும்

அதுமுதற் காயிற் சினைக்கை யாகும்.

(முதலை ஐ உறின் சினையைக் கண் உறும்

அது முதற்கு ஆயின் சினைக்கு ஐ ஆகும்.)

**இ–ள்.:** முதற்சொல்லினை ஐயுருபு பொருந்தினாற் சினைச்சொல்லைக் கண்ணுருபு பொருந்தும் அதுவுருபு முதலுக்குவரிற் சினையினுக்கு ஐயுருபு வரும், **எ–று.**

**உ–ம்.** யானையைக் கோட்டின்கட் குறைத்தான். யானையது கோட்டைக் குறைத்தான்.

இப்படிவருமெனவே சிறுபான்மை யானையைக் கோட்டைக் குறைத்தான் என ஈரிடத்தும் ஐயுருபே வருதலும் முண்டெனப்தாயிற்று.

115. முதற்பொருளுக் கோதப்பட்டவுருபு சினைக்கும் வருமெனவும் வரினும் முதற்பொருளுக் கோதியவிதி பிழையாதெனவும் பிண்டப் பொருளும் அவ்வாறே வருமெனவுங் கூறுஞ் சூத்திரம் யாது?

முதலிவை சினையிவை யெனவே றுளவில

உரைப்போர் குறிப்பின வற்றே பிண்டமும்.

(முதல் இவை சினை இவை என வேறு உள இல

உரைப்போர் குறிப்பின அற்றே பிண்டமும்)

**இ—ள்.:** முதற்பொருள் இவை சினைப்பொருள் இவை எனத் தம்முள் வேறுவேறு பொருளுமாகா; சொல்லுவாரது குறிப்பின்வழி முதற்பொருள் சினைப்பொருளுமாய்ச் சினைப்பொருள் முதற்பொருளுமாய் நிற்பன பிண்டப்பொருண்மையை யுணர்த்தும் பெயரும் அவ்வியல்பினதாம், **எ—று.**

116. அற்றே பிண்டமும் என்பதனாற் கொள்ளக்கிடப்பது யாது?

பிண்டப்பொருளும் முதலுஞ் சினையுமாக வழங்கப்பட்டு முதலுக்கு இரண்டாவதுவரின் சினைக்கு ஏழாவது வருதலும், சிறுபான்மை இரண்டாவது வருதலும், முதலுக்கு ஆறாவது வரின் கினைக்கு இரண்டாவது வருதலும் பெறும் என்பது.

முதலெனப்பட்டது தானே தன்னைப் பிறிதொன்றற்கு ஏகதேசமாக நோக்கிச் சினையெனக் குறித்தவழிப் படையதியானை எனச் சினையும், சினையெனப்பட்டது தானே தன்கண் ஏகதேசத்தை நோக்கி, முதலெனக் குறித்தவழிக் கோட்டதுநுனி என முதலுமாமென்பார் **'உரைப்போர் குறிப்பின்'** என்றார். கோட்டைநுனிக்கட் குறைத்தான் கோட்டைநுனியைக் குறைத்தான் கோட்டதுநுனியைக் குறைத்தான்என முதற்கு ஓதப்பட்ட உருபு சினைக்கண்ணும் வந்ததாலென்று ஐயுற்றாற்குக் கருத்துவகையாற் கோடென்பதூஉம் ஆண்டு முதலாய் நிற்றலின் முதற்கு ஓதிய உருபே முதற்கண் வந்ததென ஐயமகற்றியவாறு காண்க. குப்பையைத் தலைக்கட் சிதறினான் குப்பையைத் தலையைச்சிதறினான் குப்பையது தலையைச்சிதறினான் என வரும். இது வேறுபல குழீஇய காடு முதலியவற்றிற்கும் ஒக்கும். பிண்டமும், முதலுஞ் சினையுமாகலின் வேறு கூறவேண்டாவெனின், குப்பையென்புழித் தொக்க பல்பொருளல்லது அவற்றின் வேறாய் அவற்றின் இயன்று தான் ஒன்றெனப்படும் பொருளின்மையிற் றொல்லாசிரியர் அதனை முதலென்று வேண்டார் அது மேற்றொட்டு வழங்கிவருங் கூற்றால் மருவியமரபென்பது அறிவித்தற்கு வேறுகூறினாரென்க.

117. உருபுமயக்கம் வந்தவிடத்துப் பொருள்கொள்ளுமாறு கூறுஞ் சூத்திரம் யாது?

யாத னுருபிற் கூறிற் றாயினும்

பொருள்சென் மருங்கின் வேற்றுமை சாரும்

(யாதன் உருபின் கூறிற்று ஆயினும்

பொருள் செல் மருங்கின் வேற்றுமை சாரும்.)சூத்திரம் – "எல்லா வுருபொடுஞ் செயப்படு பொருளெழும்."

**உ—ம்.** அரிசியடப்பட்டது—எழுவாய்; அரிசியை யட்டான்—இரண்டாம் வேற்றுமை; அரிசியாற் சோறாக்கினான்—மூன்றாவது; அவட்குக்கொள்ளுமிவ்வணி—நான்காவது; பழியினஞ்சும்—ஐந்தாவது; நூலது குற்றங்கூறினான்—ஆறாவது; தூணின்கட் சார்ந்தான்—ஏழாவது.

அரிசியடப்பட்டது—அரிசியையட்டது. அரிசியாற் சோறாக்கினான்—அரிசியைச் சோறாக்கினான். அவட்குக் கொள்ளுமிவ்வணி—அவளைக்கொள்ளுமிவ்வணி. பழியினஞ்சும்—பழியை அஞ்சும். நூலதுகுற்றங்கூறினான்—நூலைக் குற்றங் கூறினான்.

3. கருவிப்பொருள், மூன்றனுருபு ஐந்தனுருபுகளோடன்றிச் சிறுபான்மை எழுவாயுருபு நான்கனுருபு ஆறனுருபுகளோடும் வரும்.

சூத்திரம் – "ஒன்று மூன்றுநான் கைந்தா றுருபொடு
கருவி வருமெனக் கருதினர் பெரியோர்."

**உ–ம்.** கண்காணும்–எழுவாய்; கண்ணாற்காணும்–மூன்றாவது; கண்ணுக்குக்காணலாம்–நான்காவது; கண்ணிற்காணாம்–ஐந்தாவது; கண்ணதுகாணல்–ஆறாவது.

கண்காணும்–கண்ணாற்காணும். கண்ணுக்குக்காணலாம்–கண்ணாற் காணலாம். கண்ணிற் காணலாம்–கண்ணாற் காணலாம். கண்ணதுகாணல்–கண்ணாற்காணல்.

4. கோடற்பொருள், நான்கனுருபோடன்றிச், சிறுபான்மை எட்டாம் வேற்றுமையொழிந்த எல்லாவுருபுகளோடும் வரும்.

சூத்திரம் – "எல்லா வுருபொடுங் கொள்வோ னேழுமே."

**உ–ம்.** இரப்பவர் என்பெறினுங்கொள்வர்–எழுவாய்; செய்யவள் தவ்வையைக் காட்டிவிடும்–இரண்டாவது; நாகராற்பலி-மூன்றாவது; நாகர்க்குப்பலி–நான்காவது; நாகரினன்பு செய்தான்–ஐந்தாவது; நாகரதுபலி–ஆறாவது; நாகர்கணன்புசெய்தான்–ஏழாவது.

இரப்பவர் என்பெறினுங்கொள்வர்–இரப்பவர்க்கு என்பெறினுங் கொள்வர். தவ்வையைக் காட்டிவிடும்–தவ்வைக்குக் காட்டிவிடும். நாகராற்பலி–நாகர்க்குப்பலி. நாகரினன்பு–நாகர்க்கன்பு. நாகரதுபலி–நாகர்க்குப்பலி. நாகர்கணன்பு–நாகர்க்கணன்பு.

5. ஐந்தாம்வேற்றுமைப்பொருள்களுள், நீக்கப்பொருள் சிறுபான்மை இரண்டனுருபோடும், எல்லைப்பொருள் சிறுபான்மை நான்கனுருபோடும் வரும்.

சூத்திரம் – "இரண்டுநான் கைத்தொடு மெழுமே நீக்கம்."

**இ–ள்.:** ஒரு வேற்றுமைப்பொருள் மற்றொரு வேற்றுமையுருபாற் சொல்லப்பட்டதாயினும், அவ்வுருபு மயங்கிவந்தமையின், அவ்வுருபு சென்றவழியே பொருள் சாராது அப்பொருள் சென்றவழியே அவ்வுருபு சாரும், **எ–று.**

எனவே, பொருளுக்கு இயையாது மயங்கிவந்த உருபைப் பொருளுக்கியைந்த உருபாகத் திரித்துப் பொருள்கொள்க என்பதாயிற்று.

**உ–ம்.** (1) "நாகுவேயொடுநக்குவீங்குதோள்" (இளமூங்கிலை நகைத்துப் பருத்ததோள் என்பது பொருள்). என்புழி, வேய் உடனிகழ்ச்சிப்பொருளாகாது செயப்படுபொருளாய் நிற்றலால், ஒடுவுருபை ஐயுருபாகத் திரித்துப் பொருள்கொள்க. (2) "கிழங்குமணற்கீன்றமுளை" (கிழங்கு மணற்கண் ஈன்ற முளை என்பது பொருள்.) என்புழி, மணல் கோடற்பொருளாகாது இடப்பொருளாய் நிற்றலால், குவ்வுருபைக் கண்ணுருபாகத் திரித்துப் பொருள்கொள்க. பிறவுமன்ன.

(3) சாத்தனினெடியன் என ஐந்தாவதனுருபு சாத்தற்கு நெடியன் என நான்காவதனுருபாக மயங்கிற்று.

இனி **உரையிற்கோட** லென்னுமுத்தியால், ஒரு வேற்றுமைப்பொருள் மற்றொரு வேற்றுமை யுருபுகளோடு தகுதியாக வருதலும் உண்டெனக் கொள்க. அவை வருமாறு:–

1. வினைமுதற்பொருள், எழுவாயுருபு மூன்றனுருபுகளோடன்றிச் சிறுபான்மை நான்கனுருபு ஆறனுருபுகளோடும் வரும்.

சூத்திரம்– "ஒன்று மூன்றுநான் காறெனு முருபொடு

வருமே வினைமுத லெனவகுத் தனரே."

**உ–ம்.** அவர் செய்யத்தகுமக்காரியம்–எழுவாய்; அவராற் செய்யத்தகுமக்காரியம்–மூன்றாம்வேற்றுமை; அவர்க்கு செய்யத் தகுமக்காரியம்–நான்காவது; அவரது செயல்–ஆறாவது. அவராற்செய்யத் தகுமக்காரியம் என்பது முதலியவெல்லாம் உருபின்றியும் எழுவாய் மாத்திரையாகவும் நிற்கும்.

2. செயப்படுபொருள், இரண்டனுருபோடன்றிச், சிறுபான்மை எழுவாய்வேற்றுமையுருபு முதல் ஏழாம்வேற்றுமையுருபீறாய உருபுகள் எல்லாவற்றோ்டும் வரும்.

**உ–ம்.** மதுரையை நீங்கினான்–இரண்டாவது. மதுரைக்கு வடக்குச் சிதம்பரம்–நான்காவது. மதுரையின் வடக்குச் சிதம்பரம்–ஐந்தாவது.

மதுரையை நீங்கினான்–மதுரையினீங்கினான். மதுரைக்கு வடக்கு–மதுரையின்வடக்கு.

6. சம்பந்தப்பொருள், ஆறனுருபோடன்றிச், சிறுபான்மை நான்கனுருபு ஐந்தனுருபு ஏழனுருபுகளோடும் வரும்.

சூத்திரம் – "நான்கைத் தாறே ழோடுகுறை நடக்கும்."

இங்கே குறையென்றது ஆறாம்வேற்றுமையை.

**உ–ம்.** சாத்தனுக்கு மகன்–சாத்தனது மகன். மரத்தினீங்கின கொம்பு–மரத்தினது ஒருதிசைநோக்கி நீங்கினகொம்பு. சாத்தனதுகை. உயிரின் கண்உணர்வு–உயினதுணர்வு.

7. இடப்பொருள், ஏழனுருபோடன்றிச், சிறுபான்மை எழுவாயுருபு இரண்டனுருபு நான்கனுருபுகளோடும் வரும்.

சூத்திரம் – "ஒன்றி ரண்டுநான் கேழோ டிடமெழும்."

**உ–ம்.** தூண்போதிகை தொட்டது – தூண்கட்பொதிகை தொட்டது. தூணைச்சார்ந்தான் – தூண்கட்சார்ந்தான். இன்றைக்குவருவான் நாளைக்குவருவான் வீட்டிற்குவருவான் – இன்றைக்கண்வருவான் நாளைக்கண்வருவான் வீட்டின்கண் வருவான்.

118. வேற்றுமையுருபுகளுட் சிலவுருபுகள் செய்யுளிலே திரிந்தும் வருமெனக்கூறுஞ் சூத்திரம் யாது?

ஐயான்குச் செய்யுட் கவ்வு மாகும்

ஆகா வஃறிணைக் கானல் லாதன.

(ஐ ஆன் கு செய்யுட்கு அவ்வும் ஆகும்

ஆகா அஃறிணைக்கு ஆன் அல்லாதன.)

**இ–ள்.:** ஐயும் ஆனுங் குவ்வுமாகிய மூன்றுருபுகளுஞ் செய்யுளிடத்து ஒரோவழி அகரமாகத் திரிந்து வரவும்பெறும். அஃறிணையிடத்து ஆனல்லாத ஐயும் குவ்வும் அகரமாகத் திரியாவாம்.

அவ்வும் என்றவும்மையால் இங்ஙனமாதல் சிறுபான்மையெனக் கொள்க.

ஆகாவஃறிணைக் கானல்லாதன எனவே, மூன்றும் உயர்திணைக் கண்ணாமென்பது தானே போதருமென்க.

119. திரியுமெனக்கூறாது ஆகுமெனக் கூறியது யாதுபற்றி?

ஐகாரம் அகரமாகத் திரிதலும், ஆன் அகரம் பெறுதலும், குவ்வீது அகரமாகத் திரிதலும் பெறுமென்பது குறித்தற்காம்.

120. உயர்திணையிலே அகரமாகத் திரியவும்பெறும் வேற்றுமையுருபுகள் யாவை?

“ஐயான்குச்செய்யுட்கவ்வுமாகும்.”

121. அஃறிணையிலே அகரமாகத்திரியவும் பெறும்வேற்றுமையுருபு யாது?

“ஆன்” (ஆகாவஃறிணைக்கானல்லாதன)

உ–ம். (1) களிறுமஞ்சுமக் காவலோனை என்பது “களிறுமஞ்சுமக்காவலோன” என்றும், புரைதீர்கேள்விப்புலவரான் என்பது “புரைதீர்கேள்விப்புலவரான” என்றும், கடிநிலையின் றேயாசிரியற்கு என்பது “கடிநிலையின்றே யாசிரியற்க” என்றும் உயர்திணையிலே மூன்றுருபுந் திரிந்தன.

122. எட்டுவேற்றுமைக்கும் முடிக்குஞ்சொல் உணர்த்துஞ் சூத்திரம் யாது?

எல்லை யின்னு மதுவும் பெயர்கொளும்
அல்ல வினைகொளு நான்கே ழிருமையும்
புல்லும் பெரும்பாலு மென்மனார் புலவர்.
(எல்லை இன்னும் அதுவும் பெயர் கொளும்
அல்ல வினை கொளும் நான்கு ஏழ் இருமையும்
புல்லும் பெரும்பாலும் என்மனார் புலவர்.)

**இ–ள்.:** எல்லைப்பொருட்டாகிய ஐந்தாம் வேற்றுமையும் ஆறாம் வேற்றுமையும் பெயரைக்கொண்டு முடியும். ஒழிந்த எழுவாய் முதலிய வேற்றுமைகளெல்லாம் முற்றும் எச்சமுமாகிய வினையைக்கொண்டு முடியும். அவற்றுள் நான்காம் வேற்றுமையும் ஏழாம்வேற்றுமையும் வினையையும் பெயரையுங்கொண்டு முடியும் பெரும்பாலுமென்று சொல்லுவர்புலவர்.

123. பெயர்கொண்டுமுடியும் வேற்றுமைகள் எவை?

“எல்லையின்னும் அதுவும் பெயர்கொளும்.”

124. வினைகொண்டுமுடியும் வேற்றுமைகள் யாவை?

“அல்லவினைகொளும்.”

125. வினையும் பெயருங்கொண்டு முடியும் வேற்றுமைகள் எவை?

“நான்கேழ் இருமையும்புல்லும்.”

பெரும்பாலும் என்றதனால், வினைகொளற்குரியன சிறுபான்மை தொழிற்பெயரையும் வினையாலணையும் பெயரையுங்கொண்டு முடிதலும், அவற்றுள் எழுவாய்வேற்றுமை வினைகொண்டு முடிதலே யன்றிச் சிறுபான்மை பெயரையும் வினாவையுங் கொண்டு முடிதலுங் கொள்க.

**உ–ம்.** (1) கருவூரின்கிழக்கு, சாத்தனதுகை என எல்லையின்னும் அதுவும் பெயர்கொண்டன.

(2) சாத்தன்வந்தான் ... தெரிநிலைவினை

குடத்தைவனைந்தான் ... „
வாளால்வெட்டினான் ... „
சாத்தனுக்குக்கொடுத்தான் ... „
நோயினீங்கினான் ... „
அவையின்கணிருந்தான் ... „
கொற்றாகொள் ... „
சாத்தன்நல்லன் ... „ குறிப்புவினை
குடத்தையுடையன் ... „
வாளால்வலியன் ... „
சாத்தனுக்குநல்லன் ... „
நோயிற்கொடியன் ... „
அவையின்கட்பெரியன் ... „
கொற்றாவலியை ... „

என அல்லவை இருவகை வினையுங் கொண்டன.

(3) பிணிக்குமருந்து, மணியின்கணொளி என நான்காம்வேற்றுமையும் ஏழாம்வேற்றுமையும் வினையேயன்றிப் பெயருங்கொண்டன.

(4) சாத்தன்வருதல், சாத்தன்வந்தவன்; குடத்தைவனைதல். குடத்தைவனைந்தவன் எனச் சிறுபான்மை தொழிற்பெயரும் வினையாலணையும்பெயருங் கொண்டன. பிறவுமன்ன.

(5) சாத்தனவன், சாத்தன் யாவன், சாத்தன்யார் என எழுவாய்வேற்றுமை சிறுபான்மை சுட்டுப்பெயரும் வினாப் பெயரும் வினாவினைக் குறிப்புங்கொண்டது.

எட்டுவேற்றுமைகளுள், எட்டாவதும் ஆறாவதுமொழிந்த ஆறு வேற்றுமைப்பொருள்களும் வினைகொண்டுமுடியிற் காரகமெனப் பெயர்பெறும். ஆறாவதும், வினைப்பெயர் கொள்ளின்; அப்பெயர்பெறும்.

சூத்திரம் – "விளிகுறை யிரண்டையும் விட்டவேற் றுமைகள்
வினையான் முடியிற் காரகமெனப்பெறுங்
குறையும் வினைகொளி னொரோவழிக் கூடும்
நாரா யணன்பூ வோரா யிரத்தைக்
கரத்தாற் கொய்தோ ரரற்கே கொடுத்துச்
சக்கரச் சிறமையி னீங்கி நற்சுவைப்
பாற்கடற் கண்ணே பள்ளிகொண் டானெனத்
காரக முழுதும் வந்தன காண்க
இவற்றினு ளொன்றே யியம்பினுங் காரகம்"

126. காரகமாவது யாது?

காரகமாவது ஒருவாக்கியத்திலேயுள்ள பெயருக்கும் முடிக்கும் வினைக்குமிடையேயுள்ள தொழிற்சம்பந்தம். எனவே வினைகொண்டுமுடியும்

வேற்றுமைகளெல்லாம் காரகம் எனப் பெயர்பெறும். காரகம் செயல். எழுவாய் வேற்றுமையின் செயல் கர்த்திருகாரகமெனப்படும். இரண்டாம் வேற்றுமையின் செயல் கருமகாரகமெனப்படும். மூன்றாம் வேற்றுமையின்செயல் கரணகாரகமெனப்படும். நான்காவதன்செயல் சம்பிரதான காரகமெனப்படும். எல்லைப்பொருளில் வராத ஐந்தாவதன்செயல் அபாதான காரகமெனப்படும். ஏழாவதன்செயல் அதிகரண காரகமெனப்படும்.

கண்ணனதுவரவு என்புழி ஆறாம்வேற்றுமையின் செயலும் ஒருவாறுகாரகமாம்.

127. "எல்லையின்னும்" என்னுஞ் சூத்திரத்தில் வரும் "வினைகொளும்" என்பதனாற் கொள்ளக்கிடப்பது யாது?

மேல்வரும் வினையியலுக்குத் தோற்றுவாய் செய்தாரென்பது.

## வினையியல்

**வினையியல் என்பதன் பொருள் யாது?**

வினையிலக்கணம் உணர்த்தும் பகுதியென்பது அதன் பொருள்.

வினைச்சொல் எத்தனை வகைப்படும்?

வினைச்சொல் தெரிநிலைவினை குறிப்புவினையென இருவகைப்படும்.

அவற்றுள் தெரிநிலைவினைச்சொற்கெல்லாம் பொதுவிலக்கணங்கூறுஞ் சூத்திரம் யாது?

செய்பவன் கருவி நிலஞ்செயல் காலம்
செய்பொரு ளாறுந் தருவது வினையே.

(செய்பவன் கருவி நிலம் செயல் காலம்
செய்பொருள் ஆறும் தருவது வினையே.

**இ–ள்.:–** கருத்தாவுங் காரணமும் இடமுஞ் செயலுங் காலமுஞ் செயப்படுபொருளுமாகிய அறுவகைப்பொருளையும் தருவது தெரிநிலைவினைச்சொல்லாம், **எ–று.**

வினையென்றது வினைச்சொல்லை யுணர்த்தலின் ஆகுபெயர்.

வினையென்றது நடவாமுதலிய வினைப்பகுதியை.

தெரிநிலைவினையென்பதன் பொருள் யாது?

தொழிலையுங் காலத்தையும் தெற்றெனத்தெரிவிக்கும் வினை என்பது.

இச்சூத்திரம் வினையெனப் பொதுப்படக்கூறவும் அது தெரிநிலைவினை யிலக்கணங் கூறிற்றென்பது எதனாற் பெறப்பட்டது?

மேல்வருஞ் சூத்திரம் குறிப்புவினை யிலக்கணங் கூறுதலின் இச்சூத்திரம் தெரிநிலைவினையே கூறிற்றென்பது பெறப்பட்டது.

செய்பவனென ஆண்பாலிலே சொன்னாரேனும், "ஒருமொழியொழிதன் னினங்கொளற் குரித்தே" என்பதனால் ஐம்பாலுங்கொள்க.

**வ—று.:—**

வனைந்தான் என்புழிக், குயவனாகிய செய்பவனும், அதற்குக் கருவியாகிய மண் தண்டசக்கர முதலியனவும், வனைதற்காதா ரமாகிய இடமும், வனைதற்றொழிலாகிய செயலும், அத் தொழில் நிகழுங் காலமும், குடமுதலிய செயப்படுபொருளுங் கருதப்படுதல் காண்க.

குறிப்புவினை யிலக்கணங் கூறுஞ் சூத்திரம் யாது?

பொருண்முத லாறினுந் தோற்றிமுன் னாறனுள்
வினைமுதன் மாத்திரை விளக்கல்வினைக் குறிப்பே.

(பொருள் முதல் ஆறினும் தோற்றி முன் ஆறனுள் வினைமுதல் மாத்திரை விளக்கல் வினைக் குறிப்பு எ.)

**இ—ள்.:—** பொருளாதியாறும் முதனிலையடியாக அவற்றினிடத்தே பிறந்து, முன்சொல்லப்பட்ட செய்பவன்முதலாகிய ஆறனுட் கருத்தாவொன்றையுமே விளக்குதல் வினைக்குறிப்புச் சொல்லிலக்கணமாம், **எ—று.**

குறிப்புவினையென்பதன் பொருள் யாது?

தொழிலுங் காலமுந் தெற்றென விளங்காது குறித்துக் கொள்ளக்கிடப்பது என்பது அதன்பொருள்.

**வ—று.;—**

குழையன், பொன்னினன் எனவும், அகத்தினன், புறத்தினன் எனவும், ஆதிரையான், ஓணத்தான் எனவும், குறுந்தாளன், செங்கண்ணன் எனவும், கரியன், நல்லன் எனவும், கடுநடையன், இன்சொல்லன் எனவும் வரும். இவற்றுள் விகுதியாற் செய்பவன் விளங்கிற்று. மற்றவைகள் குறிப்பாக உண்டெனக் கொள்க.

குழையன் என்புழி வினைமுதற்பெயரைத் தோற்றுவித்து நிற்கும் அன் என்னும் பால் காட்டும் ஈறு நின்று உடைமைப் பொருளைத் தனக்கு உரிமைசெய்யும் உடைமையை விரித்துக் குழையையுடையன் என நிற்கும்.

இவை, பொருளாதியாறால் ஒரு பொருளை வழங்குதற்கு வரும்பெயராய் நில்லாது, குழையையுடையனாயினான், ஆகின்றான், ஆவான் எனவும், அகத்தின்கணிருந்தான். இருக்கின்றான், இருப்பான் எனவும், ஆதிரைநாளிற் பிறந்தான், பிறக்கின்றான், பிறப்பான் எனவும், குறுந்தாளை யுடையனாயினான், ஆகின்றான், ஆவான் எனவும், கரும்வண்ணமாயிருந்தான், இருக்கின்றான், இருப்பான் எனவும், கடுநடையாக நடந்தான், நடக்கின்றான், நடப்பான் எனவும், வருதலால், வினைக்குறிப்புச் சொல்லாயின. இவை, முன்பு வினைக்குறிப்பாய்ப் பின்பு பொருள்களை வழங்குதற்குரிய பெயராய் வரின், அவை குறிப்புவினை யாலணையும் பெயராம். இவை தம்முள் வேற்றுமையென்க.

முற்கூறிய இருவகைவினையும் இத்தனை பகுதியவெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

அவைதாம்,

முற்றும் பெயர்வினை யெச்சமு மாகி

ஒன்றற் குரியவும் பொதுவு மாகும்.

(அவை தாம்

முற்றும் பெயர்வினை யெச்சமும் ஆகி

ஒன்றற்கு உரியவும் பொதுவும் ஆகும்.)

**இ–ள்.:** முன்னிரண்டு சூத்திரங்களாலுந் தெரிநிலையாயுங் குறிப்பாயும் வருமென்ற வினைச்சொற்கள், முற்றுவினைச்சொற்களும் பெயரெச்சவினைச் சொற்களும், வினையெச்சவினைச் சொற்களுமாகித் திணைபாலிடங்களுள் ஒன்றற்குச் சிறப்பாய்வருவனவும் பலவற்றற்குப்பொதுமையினிற்பனவுமாகும்.

9. முற்றுக்கும் எச்சத்திற்கு தம்முள் வேற்றுமை என்ன?

பிறிதொரு சொல்லோடு இயையாது தாமே தொடராதற்கு ஏற்கும் வினைச்சொல் முற்றாம். பிறிதோர் சொற்பற்றியல்லது நிற்றலாற்றா வினைச்சொல் எச்சமாம்.

இவற்றிற்கு உதாரணந் தத்தஞ் சிறப்புச் சூத்திரங்களிற் காண்க. இனி "ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே" என்பதனால், பிறவழியால் ஒன்றற்குரியவும் பொதுவுமாய் நிற்பனவுஞ் சிலவுளவெனக் கொள்க.

**வ–று.;–**

(1) நடந்தான் தன்வினை; நடத்தினான் பிறவினை; வெளுத்தான் தன்வினை பிறவினையிரண்டற்கும் பொதுவினை.

(2) நடந்தான் விதிவினை; நடவான் மறைவினை; சாவான், வேவான் விதிவினை மறைவினையிரண்டற்கும் பொதுவினை.

(3) உண்டான் செய்வினை; உண்ணப்பட்டது செயப்பாட்டு வினை; புலிகொன்றயானை, முன் விழுங்கினவன் செய்வினை செயப்பாட்டுவினை யிரண்டற்கும் பொதுவினை.

(4) தேடியசாத்தன், தேடியவந்தான் எனச் சொல்லொன்றே பெயரெச்சம் வினையெச்சமிரண்டற்கும் பொதுவாயின. இவைபோல்வன. பிறவுமன்ன.

அவற்றுள் முற்றுவினை யிலக்கணம் கூறுஞ் சூத்திரம் யாது?

பொதுவியல் பாறையுந் தோற்றிப் பொருட்பெயர்

முதலறு பெயரல தேற்பில முற்றே.

(பொது இயல்பு ஆறையும் தோற்றி பொருட்பெயர்

முதல் அறுபெயர் அலது ஏற்பு இல முற்று ஏ.)

**இ–ள்.:** பலவகை வினைகளுக்கும் பொதுவிலக்கணமாகிய செய்பவன் முதலிய, ஆறையுந் தோன்றச்செய்து பொருட்பெயர் முதலிய அறுவகைப் பெயரையும் பயனிலையாக ஏற்பனவாகி மற்றொன்றையுமேலாதன முற்றுவினைச்சொற்களாம்.

பொதுவியல்பு ஆறுமாவன யாவை?

செய்பவன் முதலிய வாறுமாம்.

அம் முற்றுவினைகள் எவற்றோடு முடியும்?

"பொருட்பெயர் முதலறு பெயரல தேற்பில முற்றே."

**வரலாறு.:–**

**(1) தெரிநிலைவினைமுற்று:–**

செய்தான் அவன்............................பொருட்பெயர் கொண்டது.

குளிர்ந்ததுநிலம்..............................இடப்பெயர் கொண்டது.

வந்தது கார்..................................காலப்பெயர் கொண்டது.

குவிந்ததுகை..............................சினைப்பெயர் கொண்டது.

பரந்ததுபசப்பு.............................குணப்பெயர் கொண்டது.

ஒழிந்ததுபிறப்பு...............................தொழிற்பெயர் கொண்டது.

**(2) குறிப்புவினைமுற்று:–**

நல்லன் அவன்..................................பொருட்பெயர் கொண்டது.

நல்லதுநிலம்............................................இடப்பெயர் கொண்டது.

நல்லதுகார்..........................................காலப்பெயர் கொண்டது.

நல்லதுகை...................................சினைப்பெயர் கொண்டது.

நல்லதுகருமை..............................குணப்பெயர் கொண்டது.

நல்லதுபிறப்பு...............................தொழிற்பெயர் கொண்டது.

மற்றைத் திணைபாலிடங் காலங்கடோறும் ஒட்டுக.

தெரிநிலைவினைமுற்றுச் சொற்களிலே செய்பவன்முதலிய ஆறனுள் எத்தனை எவற்றால் வெளிப்படையாகத் தோன்றும்? வினைமுற்றுச்சொற்கு வகையும் விரியுங்கூறுஞ் சூத்திரம் யாது?

ஒருவன்முத லைந்தையும் படர்க்கை யிடத்தும்
ஒருமைப் பன்மையைத் தன்மைமுன் னிலையினு
முக்கா லத்திலு முரண முறையே
மூவைந் திருமூன் றாறாய் முற்று
வினைப்பத மொன்றே மூவொன் பானாம்.

(ஒருவன் முதல் ஐந்தையும் படர்க்கை இடத்தும்
ஒருமை பன்மையைத் தன்மை முன்னிலையினும்
முக்காலத்தினும் முரண முறையே
மூவைந்து இருமூன்று ஆறு ஆய் முற்று
வினைப்பதம் ஒன்றே மூவொன்பான் ஆம்.)

**இ–ள்.:–** ஆண்பான் முதலாகிய ஐம்பால் வினைமுற்றுக்களையும் படர்க்கையிடத்திலும் ஒருமைவினை முற்றையும் பன்மைவினைமுற்றையுந் தன்மையிடத்திலும் முன்னிலையிடத்திலும் வைத்து முக்காலங்களாலும் பெருக்க, சொல்லப்பட்ட முறையே படர்க்கைவினைமுற்றுக்கள் பதினைந்தும்

தன்மைவினைமுற்றுக்கள் ஆறும் முன்னிலை வினைமுற்றுக்கள் ஆறும் ஆகிய தெரிநிலை வினைமுற்றுப்பதமொன்றுமே இருபத்தேழாகும்.

படர்க்கைவினைமுற்று எவ்வாறு பதினைந்தாம்?

"ஒருவன்முதலைந்தையும் படர்க்கையிடத்து முக்காலத்தினு முரணமூவைந்தாம்."

**வரலாறு.:–**

(1) நடந்தான், நடந்தாள், நடந்தார், நடந்தது, நடந்தன இவை இறந்தகாலவினைமுற்று–5. நடக்கின்றான். நடக்கின்றாள், நடக்கின்றார், நடக்கின்றது, நடக்கின்றன. இவை நிகழ்கால வினைமுற்று–5. நடப்பான், நடப்பான், நடப்பார், நடப்பது, நடப்பன. இவை எதிர்கால வினைமுற்று–5. ஆகப்படர்க்கை வினைமுற்று–15.

தன்மைவினைமுற்று எவ்வாறு ஆறாம்?

"ஒருமை பன்மையைத் தன்மையிடத்தின் முக்காலடத்தினு முரண இருமூன்றாம்."

**வரலாறு.:–**

(2) நடந்தேன், நடந்தேம் இவை இறந்தகாலவினைமுற்று–2. நடக்கின்றேன், நடக்கின்றேம் இவை நிகழ்கால வினைமுற்று–2. நடப்பேன், நடப்பேட் இவை எதிர்கால வினைமுற்று–2. ஆகத்தன்மைவினைமுற்று 6.

முன்னிலைவினைமுற்று எவ்வாறு ஆறாம்?

"ஒருமை பன்மையை முன்னிலையிடத்து முக்காலத்திலு முரண ஆறாம்.

**வரலாறு:–**

(3) நடந்தாய், நடந்தீர் இவை இறந்தகால வினைமுற்று–2. நடக்கின்றாய், நடக்கின்றீர் இவை நிகழ்காலவினை முற்று–2. நடப்பாய், நடப்பீர் இவை எதிர்காலவினைமுற்று–2. ஆக முன்னிலைவினைமுற்று–6.

ஆக வகைமூன்றுக்கும் முற்றுவினை–27.

ஆகவினைமுற்று எத்தனையாம்?

"முற்றுவினைப்பதமொன்றே மூவொன்பானாம்"

முக்காலத்தின் பெயருமுறையு மென்ன?

"இறப்பு நிகழ்வெதிர் காலமூன்றே"

இறப்பாவது தொழிலது கழிவு. நிகழ்வாவது தொழில் தொடங்கப்பட்டு முற்றுப்பெறாத நிலைமை. எதிர்வாவது தொழில் பிறவாமை.

உயர்திணை ஆண்பாற்படர்க்கை ஒருமைவினைமுற்று இவை எனக் கூறுஞ் சூத்திரம் யாது?

அன் ஆ னிறுமொழி யாண்பாற் படர்க்கை.

(அன் ஆன் இறு மொழி ஆண்பாற் படர்க்கை)

**இ–ள்.:** அன் ஆன் என்னும் இருவிகுதியையும் இதியிலுடைய மொழிகள் உயர்திணை யாண்பாற் படர்க்கை வினைமுற்றுங் குறிப்பு முற்றுமாம், **எ–று.**

வரலாறு:—

| இறந்தகாலத்தெரிநிலை வினைமுற்று | நிகழ்காலத் தெரிநிலை வினைமுற்று |
|---|---|
| நடந்தனன் | நடக்கின்றனன் |
| நடந்தான் | நடக்கின்றான் |
| உண்டனன் | உண்ணாநின்றனன் |
| **எதிர்காலத்தெரிநிலை வினைமுற்று** | **குறிப்பு வினைமுற்று** |
| நடப்பன் | குழையன் |
| நடப்பான் | குழையான் |
| உண்பன் | ஊணன் |

**இவற்றெதிர்மறை;—**

நடந்திலன் நடக்கின்றிலன் நடவான் குழையனல்லன்

மற்றவைகளும் இப்படியே வரும்.

22. உயர்திணைப் பெண்பாற்படர்க்கை ஒருமைவினைமுற்று இவை எனக் கூறுஞ் சூத்திரம் யாது?

அள் ஆ ளிறுமொழி பெண்பாற் படர்க்கை.

(அள் ஆள் இறு மொழி பெண்பாற் படர்க்கை.)

**இ—ள்.:** அள் ஆள் என்னும் இரண்டு விகுதியையும் இறுதியிலுடைய மொழிகள் உயர்திணைப் பெண்பாற்படர்க்கை வினை முற்றுங் குறிப்புமுற்றுமாம், **எ—று.**

| இ.தெரி. | நி.தெரி. | எ.தெரி | குறி. | |
|---|---|---|---|---|
| நடந்தனள் | நடக்கின்றனள் | நடப்பன் | குழையள் | அவள் |
| நடந்தாள் | நடக்கின்றாள் | நடப்பாள் | குழையாள் | |

மற்றவைகளும் இப்படியே வரும்.

பலர்பாற் படர்க்கைவினைமுற்று இவை எனக் கூறுஞ் சூத்திரம் யாது?

அர் ஆர் பவ்வூ ரகரமா ரீற்ற
பல்லோர் படர்க்கைமார் வினையொடு முடிமே.

(அர் ஆர் பஊர் அகரம் மார் ஈற்ற
பல்லோர் படர்க்கை மார் வினையொடும் முடிமே)

**இ—ள்.:—** அர் ஆர் ப மார் என்னும் நான்கு விகுதிகளையும் இறுதியிலுடைய மொழிகள் உயர்திணைப் பலர்பாற்படர்க்கை வினைமுற்றுங் குறிப்புமுற்றுமாம். இவற்றுள் மாரீற்று வினைமுற்று, பொதுவிதியாற் பெயருடன் முடிதலின்றி வினையுடன் முடியும், **எ—று.** ப ஊர் அகரம்=ப் ஊர்ந்த அ=ப.

பலர்பாற் படர்க்கை வினைமுற்றுக்கள் யாவை?

"அர் ஆர் பவ்வூர் அகரம் மார் ஈற்ற, பல்லோர் படர்க்கை."

மாரீற்றுவினைமுற்று யாதுகொண்டு முடியும்?

"மார் வினையொடு முடிமே."

குறிப்புவினைமுற்றிலே வராத உயர்திணைப் பலர்பாற் படர்க்கை வினைமுற்று விகுதிகள் யாவை?

மார் ப என்னுமிருவிகுதிகளுமாம்.

அவை அங்ஙனம் வராமைக்குக் காரணமென்னை?

"மாரெதிர்வும் ப அந்தஞ் செலவொடு வரவும்" எனப் பதவி யலுட் காலத்தை வெளிப்படக்காட்டும் விகுதிகள் எனக் கூறப்பட்டமையால் இவைகள் காலங்காட்டாத குறிப்புவினை முற்றுக்கண் வாராவாம்.

**வரலாறு.:**

| | | | |
|---|---|---|---|
| இ.தெரி. | நி.தெரி. | எ.தெரி. | குறி. |
| நடந்தனர் | நடக்கின்றனர் | நடப்பர் | குழைய அவர் |
| நடந்தார் | நடக்கின்றார் | நடப்பார் குழையார் | |

நடப்ப, எய்துப, மொழிப அவர் எனப் பவ் விகுதி வரும்.

"பெரிய வோதினுஞ் சிறிய வுணராப் பீடின்று பெருகிய திருவிற்பாடின் மன்னரைப் பாடன்மா ரெமரே" என மாரீற்றச் சொல்லானது பெயர்கொண்டு முடிந்ததெனின், அது பாடுவார் என்னும் ஆரீற்று முற்றுச்சொல்லின் எதிர்மறையாய் அல் எதிர்மறையிடை நிலையும் மகரப்பேறும்பெற்று பாடு–அல்–ம்–ஆர் பாடன்மார்என நிற்பதொன்றாமாதலின் மாரீற்று முற்றுன்று. மாரீறு வினையோடல்லது பெயரோடு முடியாதன்றோ.

"**மாரைக்கிளவியும் பல்லோர் படர்க்கை, காலக்கிளவியொடு முடியுமென்ப**" என்றார் தொல்காப்பியனாரு மென்க

"எள்ளுமார் வந்தார்" என மாரீற்று வினைமுற்று வினையொடு முடிந்தது. எள்ளுமார் என்பது எள்ளுவார் எனப்பொருள்படும்.

இதுசெய்யிற் பழிப்பார் கண்டவர் என் றிக்காலத்து வழங்குதல் போல, பழிப்பார் வந்தவர் என்னும் பொருள்பட "எள்ளுமார் வந்தார்" என்பது அக்காலத்து வழக்கு.

அஃறிணை யொன்றன்பாற் படர்க்கை வினைமுற்று இவை எனக்கூறுஞ் சூத்திரம் யாது?

துறுடுக் குற்றிய லுகர வீற்ற

ஒன்றன் படர்க்கைடுக் குறிப்பி னாகும்.

(துறுடுக் குற்றிய லுகர ஈற்ற ஒன்றன் படர்க்கை டுக் குறிப்பின் ஆகும்.)

**இ–ள்.:–** துறுடு என்னு மூன்று விகுதிகளையும் இறுதியிலுடைய குற்றியலுகர வீற்று மொழிகள் அஃறிணையொன்றன் பாற்படர்க்கை வினைமுற்றுங் குறிப்புமுற்றுமாம். இவற்றுள் டுவ் விகுதி குறிப்புவினைமுற்றிலன்றித் தெரிநிலைவினைமுற்றில் வாராது.

ஒன்றன்பாற் படர்க்கை வினைமுற்றுச் சொற்கள் யாவை?

"து று டு க்குற்றிய லுகரணாவீற்ற ஒன்றன்படர்க்கை"

30. அவற்றுள் டுவ்விகுதி எங்கே வரும்?

"டுக்குறிப்பி னாகும்."

டுக் குறிப்பினாகு மென்றதனாற் பெறப்படுவது யாது?

டுவ் விகுதியைப் பிரித்தெடுத்துக் கூறினமையால் மற்றைத்து வ் விகுதியும் றுவ் விகுதியும் தெரிநிலைவினை குறிப்புவினை யிரண்டிலும் வருமென்பது.

றுவ்விகுதி இறந்தகால விடைநிலையோடு மாத்திரங் கூடிவரும். துவ் விகுதி முக்காலத்திற்கு முரித்து. டுவ்விகுதி முக்காலத்திற்கு முரிய வினைக்குறிப்பிற்கல்லாது வராது.

வரலாறு.:-

| இ.தெரி. | நி.தெரி. | எ.தெரி. |
| --- | --- | --- |
| (1) நடந்தது | நடக்கின்றது | நடப்பது அது |
| கூயிற்று | | அது |

றுவ்விகுதி, வந்தன்று, உண்டன்று, சென்றன்று எனத் தடறவொற்றிடைநிலைகளின் முன்னும், புக்கன்று, விட்டன்று, பெற்றன்று என விகாரப்பட்டிறந்தகாலங் காட்டுங் குடுறு வீற்றுப் பகுதிகளின் முன்னும், அன்சாரியை பெற்று வரும். இவை முறையே வந்தது, உண்டது, சென்றது, புக்கது, விட்டது, பெற்றது எனப் பொருள்படும். றுவ்விகுதி, கூயின் று கூயிற்று, போயின்று போயிற்று என இன்னிடைநிலையின் முன் மாத்திரஞ் சாரியை பெறாது வரும். தந்தின்று என றுவ்விகுதி தகர விடைநிலையின் முன் இன்சாரியை பெற்றதன்றோ எனின்; அன்று. அது தந்தன்று என்னும் உடன்பாட்டுவினையை மறுத்தற்குத் தகரவிடைநிலைக்கும றுவ்விகுதிக்கும் இடையே இல்லென்னும் எதிர்மறையிடைநிலை ஏற்று வந்த மறைவினை யென்றறிக. தந்தின்று தந்ததில்லை யெனப் பொருள்படும்.

(2) கோட்டது, குழையது, நெடுஞ்செவித்து, வடிவிற்று, வரவிற்று, குறுந்தாட்டு, குண்டுகட்டு, அற்று, இற்று, ஏற்று என்பன குறிப்பு வினைமுற்றுக்கள்.

தாட்டு-தாளையுடையது. கட்டு-கண்ணையுடையது. அற்று-அத்தன்மைத்து. இற்று-இத்தன்மைத்து. எற்று-எத்தன்மைத்து.

அஃறிணைப் பலவின்பாற் படர்க்கை வினைமுற்று இவையெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

அ ஆ ஈற்ற பலவின் படர்க்கை

ஆவே யெதிர்மறைக் கண்ண தாகும்.

(அ ஆ ஈற்ற பலவின் படர்க்கை ஆவே எதிர்மறைக் கண்ணது ஆகும்.)

**இ-ள்.:** அ ஆ என்னும் இருவிகுதிகளை யிறுதியிலுடைய மொழிகள் அஃறிணைப் பலவின்பாற்படர்க்கை வினைமுற்றுங் குறிப்புமுற்றுமாம். அவற்றுள் ஆகாரம் எதிர்மறையினிடத்து வருமன்றி உடன்பாட்டினிடத்து வாராது, **எ-று.**

அவற்றுள் ஆகாரவிகுதி எப்பொருட்கண் வரும்?

"ஆவே எதிர்மறைக் கண்ண தாகும்."

'ஆவே யெதிர்மறைக்கண்ணதாகும்' என்றதனால், மற்றைவிகுதி உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் வருமென்பது பெற்றாம்.

அகர விகுதி அன்சாரியை பெற்றும் பெறாதும் வரும்.

**(வரலாறு)**

| இ.தெரி. | நி.தொ. | எ.தெரி. | குறி | |
|---|---|---|---|---|
| நடந்தன | நடக்கின்றன | நடப்பன | கரியன | அவை |
| நடந்த | நடக்கின்ற | நடப்ப | கரிய | |

நடந்தில, நடவாநின்றில, நடவா – அவை.

இல்லன, இல்ல என்னும் எதிர்மறைவினைக்குறிப் புமுற்றின்கட் பகுதியே எதிர்மறைப்பொருள் தந்து நிற்றலின், இதற்கெதிர்மறை யாகாரம் வேண்டாமையின், ஏற்புழிக் கோடலென்னு முத்தியால், இவ் வெதிர்மறை விகுதி தெரிநிலைக்கேகொள்க.

இங்கே காட்டிய அன் பெறாத நடப்ப என்னும் பலவறிசொல்லின் இறுதிநோக்கி, உயர்திணைப்பன்மைப் படர்க்கைக்கும் அஃறிணைப்பன்மைப் படர்க்கைக்கும் பொதுவினையெனக் கொள்ளாதொழிக. இதனுட் பகர வொற்று எதிர்கால வினையிடைநிலை யாதலால், இத் தொடக்கத்தன வெல்லாம் பல பொருளொருசொல் லென்றுணர்க.

34. உயர்திணை அஃறிணை இரண்டுக்கும் பொதுவாகிய-வினைகளிவையெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

தன்மை முன்னிலை வியங்கோள் வேறிலை
உண்டீ ரெச்ச மிருதிணைப் பொதுவினை.

(கன்மை முன்னிலை வியங்கோள் வேறு இலை
உண்டு ஈரெச்சம் இருதிணைப் பொதுவினை.)

**இ–ள்.:–** தன்மைவினை வினைக்குறிப்பு முற்றுக்களும், முன்னிலைவினை வினைக்குறிப்பு முற்றுக்களும், வியங்கோள்வினைமுற்றுக்களும், வேறு இல்லை உண்டு என்னு மூன்று வினைக்குறிப்பு முற்றுக்களும், பெயரெச்சவினை வினைக்குறிப்புக்களும், வினையெச்சவினை வினைக்குறிப்புக்களும் உயர்திணை அஃறிணை என்னும் இருதிணைக்கும் பொதுவினைகளாம், **எ–று.**

செய்யுமென்னும் பெயரெச்சமே செய்யுமென்னு முற்றாதலால். அம்முற்றும் இருதிணைப் பொதுவினையாமென்பது தானே தோன்றுதல் காண்க.

35. இருதிணைப்பொதுவினையென்றது யாது பற்றி?

பொதுமையிற் பிரிந்து ஒருகால் உயர்திணையை உணர்த்தியும், ஒருகால் அஃறிணையை உணர்த்தியும் வேறுபடுந் தொழிலையுடையதாய், இருதிணையும் உணர்த்துஞ் சொல்லாதலின் இருதிணைப் பொதுவினை யெனப்பட்டது.

36. இருதிணை முக்கூற்றொருமைத் தன்மைமுற்று இவை யெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

குடுதுறு வென்னுங் குன்றிய லுகரமோ
டல்லன் னென்னே னாகு மீற்ற
இருதிணை முக்கூற் றொருமைத் தன்மை.
(கு டு து று என்னும் குன்றியலுகரமோடு
அல் அன் என் ஏன் ஆகும் ஈற்ற
இருதிணைமுக்கூற்று ஒருமைத்தன்மை.)

**இ—ள்.**: கு டு து று என்னுங் குற்றியலுகர விகுதிகளும், அல் அ ன் என் ஏன் என்னு நான்கு மெய்யீற்று விகுதிகளும் ஆகிய இவ்வெட்டு விகுதிகளையும் இறுதியிலேயுடைய மொழிகள் இருதிணையிடத்தனவாகிய ஒருவன் ஒருத்தி ஒன்று என்னு மூன்றுபால்களுக்கும் பொதுவாகிய ஒருமைத் தன்மைவினை முற்றுங் குறிப்புமுற்றுமாம், **எ—று.**

கு டு து று என்னு நான்குந் தாமே காலங்காட்டுதலாற் குறிப்புவினைக்கு வாரா. அவ்விகுதி எதிர்காலவிடை நிலைகளோடு மாத்திரம் வரும்.

**(வரலாறு)**

இ.தெரி. எ.தெரி.

உண்கு–(உண்பேன்) யான்

உண்டு – (உண்டேன்) யான்

வந்து – (வந்தேன்) வருது–(வருவேன்) யான்

சென்று – (சென்றேன்) சேறு–(செல்வேன்) யான்

உண்பல்–(உண்பேன்) யான்

இ.தெரி. நி.தெரி. எ.தெரி. குறி.

உண்டனன் உண்ணாநின்றனன் உண்பன் தாரினன் யான்

உண்டனென் உண்ணாநின்றனென் உண்பென் தாரினென் யான்

உண்டேன் உண்ணாநின்றேன் உண்பேன் தாரினேன் யான்

மேற் பதவியலுட் கூறிய ஈற்றுவகையானே உண்கு வருது சேறு எனவும் உரிஞுகு திரிமுகு எனவும் வருங் குற்றுகர ஈற்றுத் தன்மை யொருமைமுற்றுச் சொல்லும், இடைநிலைவகையானே உண்பல் வருவல் எனவரும் அல்லீற்றுத் தன்மை யொருமைமுற்றுச் சொல்லும், கூறுவன் எனவரும் அன் னீற்றுத் தன்மை யொருமைமுற்றுச் சொல்லும் எதிர்காலம்பற்றிவரும். என்னீறும் ஏனீறும் இடைநிலைவகையானனே மூன்று காலமும்பற்றிவரும். அவற்றுள் என்னீறு இறப்பும் நிகழ்வும் பற்றிவருங்காற் புக்கனென் உண்ணாநின்றனென் என உயர்திணையாண்பாற்படர்க்கை அன்னீற்றோடு ஒத்து இடைநிலைகளின் முன் அன்பெற்று வரும். ஏனையவற்றோடும் ஒட்டுக. இனி எதிர்காலம்பற்றி வருங்கால் உண்பென் உண்ருவென் வருவென் வருகுவென் என முதனிலையெழுத்தின் முன் குகரம் பெறாதும் பெற்றும் இடைநிலை பெற்றுவரும். இனி ஏனீறு இறப்பினும் நிகழ்வினும் புக்கனேன் புக்கேன் உண்ணாநின்றனேன் உண்ணாநின்றேன் என

அன்பெற்றும் பெறாதும் எதிர்வின்கண் உண்பேன் உண்குவேன் உரிஞுவேன் எனக் குகரமும் உகரமும் பெறாதும் பெற்றும் இடைநிலை பெற்றுவரும். ஏனையவற்றோடும் ஒட்டுக.

39. தன்மைப்பன்மை வினைமுற்று இவை யெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

அம்மா மென்பன முன்னிலை யாரையும்
எம்மே மோமிவை படர்க்கை யாரையும்
உம்மூர் கடதற விருபா லாரையுந்
தன்னொ படுக்குந் தன்மைப் பன்மை.

(அம் ஆம் என்பன முன்னிலையாரையும் எம் ஏம் ஓம் இவை படர்க்கையாரையும் உம் ஊர் க ட த ற இருபாலாரையும் தன்னொடு படுக்கும் தன்மைப் பன்மை.)

**இ–ள்.:–** தன்னிலையின் நிற்பதன்றி அம் ஆம் என்னும் இவ்விரு விகுதிகளையும் இறுதியிலுடைய மொழிகள் முன்னிலையிடத்தாரையும், எம் ஏம் ஓம் என்னும் இம்மூன்று விகுதிகளையும் இறுதியிலுடைய மொழிகள் படர்க்கையிடத்தாரையும். கும் டும் தும் றும் என்னும் இந்நான்கு விகுதிகளையும் இறுதியிலுடைய மொழிகள் முன்னிலை படர்க்கை என்னும் ஈரிடத்தார்களையும் தன்னுடன் கூட்டும் உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வினைமுற்றுங் குறிப்புமுற்றுமாம்.

40. தான் என்பது ஒருமையாதலின் தனக்குஒருமையல்லது பன்மையில்லையே; அங்ஙனமாகவும் தன்மைப்பன்மை யென்பது யாது?

சொல்லுவான் தன்னொடு பிறரையுங் கூட்டி உளப்படுத்துரைக்குஞ் சொல்லாம்.

41. அவ்வுளப்படுத்தல் எத்தனை வகைப்படும்?

முன்னின்றாரை யுளப்படுத்தலும், படர்க்கையிடத்தாரை யுளப்படுத்தலும், அவ்விருவரையு மொருங்குளப்படுத்தலுமென மூவகைப்படும்.

42. முன்னிலையாரை யுளப்படுத்தும் தன்மைப்பன்மை முற்றுவிகுதிகள் யாவை?

"அம்மா மென்பன முன்னிலையாரைத் தன்னொடு படுக்குந் தன்மைப்பன்மை."

வரலாறு.:

| இ.தெரி. | நி.தெரி. | எ.தெரி. | குறி. |
|---|---|---|---|
| உண்டனம் | உண்கின்றனம் | உண்பம் | தாரினம் |
| உண்டாம் | உண்கின்றாம் | உண்பாம் | தாரினாம் |

யானுநீயும்

.43. படர்க்கையாரை யுளப்படுத்துந் தன்மைப்பன்மை முற்றுவிகுதிகள் யாவை?

"எம்மே மோமிவை படர்க்கையாரைத் தன்னொடு படுக்குந் தன்மைப் பன்மை."

உண்டெனம் உண்கின்றனெம் உண்பெம் தாரினெம் – யானுமவனும்

உண்டேம் உண்கின்றேம் உண்பேம் தாரினேம்

உண்டோம் உண்கின்றோம் உண்போம் தாரினோம்

44. முன்னிலை படர்க்கையென்னு மீரிடத்தாரையு முளப்படுக்குந் தன்மைப்பன்மை முற்றுவிகுதிகள் யாவை?

"உம்மூர் கடதற விருபா லாரையுந் தன்னொடு படுக்குங் தன்மைப் பன்மை."

| | | |
|---|---|---|
| இ.தெரி. | எ.தெரி. | |
| | உண்கும்–(உண்பேம்) | யானுநீயுமவனும் |
| உண்டும்–(உண்டேம்) | வருதும்–(வருவேம்) | " |
| வந்தும்–(வந்தேம்) | | " |
| சென்றும்–(சென்றேம்) | சேறும்–(செல்வேம்) | " |

மேற்கூறிய வுதாரணங்களை யாமென்னும் பெயரோடு மொட்டுக.

யாமென்பது தன்மையோடு முன்னிலை படர்க்கையிடத்தா

ரையு முளப்படுத்தும் பெயர்.

கும் டும் தும் றும் என்னு நான்குந் தாமே காலங்காட்டுதலாற் குறிப்புவினைக்கு வாரா. இவை சிறுபான்மை இம்முறையின்றி மயங்கி வருதலுமுண்டு. மற்றவைகளும் இப்படியே வரும்.

உண்டிலம் உண்கின்றிலம் உண்ணேம் முதலியனவும் உண்டுமல்லேம் உண்குமல்லேம் முதலியனவும் இவற்றெதிர் மறையாம்.

45. குவ்வீற்று முற்றுக்கும் கும்மீற்றுமுற்றுக்கும் முடிபுவேறுபாடு கூறுஞ் சூத்திரம் யாது?

செய்கெ னொருமையுஞ் செய்குமென் பன்மையும்

வினையொடு முடியினும் விளம்பிய முற்றே.

(செய்கு என் ஒருமையும் செய்கும் என் பன்மையும்

வினையொடும் முடியினும் விளம்பிய முற்றே.)

**இ–ள்.:** செய்கென்னுந் தன்மையொருமை முற்றும் செய்குமென்னுந் தன்மைப்பன்மை முற்றும் பெயருடனே முடிதலின்றி வினையொடு முடியினும் முன்சொல்லப்பட்ட முற்றுக்களேயாம், **எ–று.**

**வ–று.:–**

உண்குவந்தேன், உண்கும்வந்தேம் என வரும்.

46. இவை வினையெச்சமாகாவோ?

ஆகா; வினையெச்சமாய்த் திரியுமாயின், செய்தெனெச்சத்திற்கு ஏலாமையிற் செயவெனெச்சமாய்த் திரியுமெனல் வேண்டும். வேண்டவே, செயவெனச்சத்திற்கு உரிய வினைமுதல்வினையும் பிறவினையுங் கொள்வான் செல்லும். வினைமுதல்வினை அல்லது கொள்ளாமையிற் செயவெனெச்சமாய்த் திரியுமெனல் பொருந்தாது; பிறிதொராறின்மையின் முற்றுச்சொல்லாயே நின்றன வெனப்படுமென்க.

47. உளப்பாட்டுப் பன்மை முன்னிலைக் கண்ணுமுண்டெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

முன்னிலை கூடிய படர்க்கையு முன்னிலை.

(முன்னிலை கூடிய படர்க்கையு முன்னிலை.)

**இ—ள்.:** தன்மையோடு கூடிய முன்னிலை படர்க்கைகள் தன்மை யானாற்போல முன்னிலையோடு கூடிய படர்க்கையும் முன்னிலையாம், **எ—று.**

**(வரலாறு)**

உண்டனிர் குழையினிர் நீயுமவனும்

உண்டீர் குழையீர் ,,

உண்மின்

48. உளப்பாட்டுப் பன்மை மூவிடங்களுள் எவ்விடத்துக் குரியதாகாது?

தன்மை முன்னிலைகளுக்கே யன்றிப் படர்க்கைக் குரியதன்று.

இச் சூத்திரம் முன்னிலைப்பன்மை முற்றுக் கூறியவழியே கூறாது, இங்கே கூறப்பட்டது **ஒன்றினமுடித்த றன்னினமுடித்தல்** என்னு முத்தியால்.

முன்னிலை யொருமைமுற்று இவையெனக்கூறுஞ் சூத்திரம் யாது?

ஐயா யிகர வீற்ற மூன்றும்

ஏவலின் வருஉ மெல்லா வீற்றவும்

முப்பா லொருமை முன்னிலை மொழியே

(ஐ ஆய் இகர ஈற்ற மூன்றும் ஏவலின் வருஉம் எல்லா ஈற்றவும் முப்பால் ஒருமை முன்னிலை மொழியே.)

**இ—ள்.:** ஐ ஆய் என்னு மூன்று விகுதிகளை இறுதியிலுடைய மொழிகளும், ஏவற்பொருண்மைக்கண் வரும் இருபத்துமூன்றீற்று மொழிகளும் ஒருவன் ஒருத்தி ஒன்று என்னு மூன்று பால்களுக்கும் பொதுவாகிய முன்னிலையொருமை வினைமுற்றுங் குறிப்புமுற்றுமாம், **எ—று.**

இகரம் த ட ற வூர்ந்து எதிர்காலம்பற்றி வரும்.

**உ—ம்.:—**

உரைத்தி, உண்டி, தின்றி, சேறி.

உண்டி உண்ணாநின்றி என்பனவற்றை இறந்தகாலமும் நிகழ்காலமும் பற்றி வழங்கல் பிற்காலத்து வழக்கு.

ஏவல்வினைமுற்றுத் தெரிநிலைவினை யொன்றற்கே யுரிமையின் உம்மை கொடுத்துப் பிரித்தார்.

ஏவலின் வருஉம் எல்லாவீற்றவும் என்றது எவற்றை?

பதவியலிற் கூறிய நட வா மடி முதலியனவற்றை.

நட வா மடி முதலியனவெனச் சுட்டாது ஏவலின் வருஉ மெல் லாவீற்றவும் என்றது யாது பற்றி?

நட வா மடி முதலியன ஏவலாயும் வினைப்பகுதியாயும் வரு மியல்புடையனவாதலின் அவை ஏவற்பொருளவாய் வருமிடத்தன்றி, முன்னிலையொருமைவினை முற்றாகாவென்பது குறித்தற்கேயாமென்க.

ஏவற்பொருட்கண் வரும் நட வா முதலியனவற்றிற்கும் வினைப்பகுதி யாக நிற்கும் நட வா முதலியனவற்றிற்கும் தம்முள் வேற்றுமை யாது?

ஏவற்பொருட்கண் வரும் நட வா முதலியன எடுத்துச்சரிக்கப்படுதலோடு ஆய்விகுதி பெறுதற்கு முரியனவாம். வினைப்பகுதியாகுமிடத்து நட வா முதலியன படுத்துச்சரிக்கப்படும். ஆய்விகுதி பெறுதற்கு உரியனவாகா. இங்ஙனம் நிற்றலே வேற்றுமையாம்.

முன்னிலையில் எத்தனைபாலும் எத்தனைதிணையு மடங்கும்?

உயர்திணை ஆண்பெண்பால்களும், அஃறிணை ஒன்றன்பா லுமாக மூன்றுபாலும் இருதிணையும் அடங்கும்.

**வரலாறு.:**

| இறந்தகாலத் தெரிநிலை | நிகழ்காலத் தெரிநிலை | எதிர்காலத் தெரிநிலை | குறிப்பு | |
|---|---|---|---|---|
| உண்டனை | உண்கின்றனை | உண்பை | குழையை | |
| உண்டாய் | உண்கின்றாய் | உண்பாய் | குழையாய் | |
| உண்டி | உண்ணாநின்றி | சேறி | வில்லி | நீ |

இவை எதிர்மறைக்கண் உண்டிலை, உண்கிலை, உண்ணலை, உண்டிலாய் என வரும்.

ஐ, ஆய், இ, அல், ஏல், ஆல் என்னும் விகுதிகளை இறுதியில் உடைய வினைச்சொற்களும், ஆய்விகுதி புணர்ந்து குன்றிப் பகுதிமாத்திரையாய் நிற்கும் வினைச்சொற்களும், முன்னிலை யேவலொருமைத் தெரிநிலை வினைமுற்றுக்களாம்.

**வரலாறு.:–**

உண்பை, உண்ணாய், உண்ணுதி, உண்.

இவற்றுள், அல், ஏல், ஆல் என்னும் மூன்று விகுதிகளும் எதிர்மறை யிடத்து வரும்.

**உ–ம்.** உண்ணல் உண்ணேல் மறால்.

எதிர்மறை யேவலொருமை வினைமுற்றுக்கள், உண்ணாதே, உண்ணாதி என, எதிர்மறை ஆகார விடைநிலையின் முன் தகரவெழுத்துப் பேற்றோடு, ஏகார விகுதி இகர விகுதிகளுள் ஒன்றுபெற்றும் வரும்.

மேற்கூறிய முன்னிலைக்கண் விகுதிகளல்லாத எழுத்துக்களுமுளவெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

முன்னிலை முன்ன ரீயு மேயும்
அந்நிலை மரபின் மெய்யூர்ந்து வருமே.
(முன்னிலை முன்னர் ஈயும் ஏயும்
அந்நிலை மரபின் மெய் ஊர்ந்து வருமே.)

**இ–ள்.:–** முன்னிலையேவன் முற்றென முன்சொல்லப்பட்டவற்றிற்கு முன்

ஈகாரமும் ஏகாரமும் அவ்விடத்து நிற்றற்குரிய மரபினையுடைய யாதானுமொரு மெய்யை யூர்ந்து வரும், எ–று.

**வ–று.:–**

"சென்றீ பெருமநிற் றகைக்குநர் யாரே" எனவும், "அட்டிலோலை தொட்டனை நின்மே" எனவும் வரும். இவ்வீகார ஏகாரங்கள் விகுதிகளல்ல; ஆய்விகுதி குறைந்த ஏவலில் வருமுன்னிலையசையாம். இங்கே, ஈயும் ஏயும் முறையே றகரவொற்றையும் மகரவொற்றையும் ஊர்ந்து வந்தன. றகரவொற்றும் மகரவொற்றும் எழுத்துப்பேறு.

55. முன்னிலைப்பன்மை வினைமுற்று இவையெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

இர் ஈ ரீற்ற விரண்டு மிருதிணைப்

பன்மை முன்னிலை மின்னவற் றேவல்.

(இர் ஈர் ஈற்ற இரண்டும் இருதிணைப் பன்மை முன்னிலை மின் அவற்று ஏவல்.)

**இ–ள்.:–** இர் ஈர் என்னும் இரண்டுவிகுதிகளையும் இறுதியிலுடைய மொழிகள் இருதிணைக்கும் பொதுவாகிய பன்மைமுன்னிலை வினைமுற்றுங் குறிப்புமுற்றுமாம். மின்விகுதியை இறுதியிலுடைய மொழிகள் முன்னிலைப் பன்மை யேவன்முற்றாம், **எ–று.**

மின் விகுதியன்றி, ஈர் உம் விகுதிகளும் முன்னிலைப்பன்மை யேவலுக்கு வருமெனக் கொள்க.

**(வரலாறு)**

| இ. தெரி. | நி. | தெரி. | எ. தெரி. | குறி. |
|---|---|---|---|---|
| உண்டனிர் | உண்கின்றனிர் | உண்பிர் | | குழையினிர் |
| உண்டீர் | உண்கின்றீர் | உண்பீர் | | குழையீர் நீர் |

உண்மின், உண்ணீர், உண்ணும் என ஏவல்வினைமுற்று வந்தன.

வியங்கோண்முற்றும் அவை வருமிடமும் இவை எனக் கூறுஞ் சூத்திரம் யாது?

கயவொடு ரவ்வொற் றீற்ற வியங்கோள்

இயலு மிடம்பா லெங்கு மென்ப.

(கய வொடு ரவ்வொற்று ஈற்ற வியங்கோள்

இயலும் இடம் பால் எங்கும் என்ப.)

**இ–ள்.:–** கயவென்னும் இரண்டுயிர்மெய்யினையும் ரகரமெய்யினையும் இறுதியிலுடைய மொழிகள் வியங்கோள்முற்றுக்களாம். அவை மூன்றிடங்களிலும் ஐம்பால்களிலுஞ் செல்லும் என்று சொல்லுவர் புலவர், **எ–று.**

வியங்கோள் என்பதன் பொருள் யாது?

இருதிணை யைம்பான் மூவிடங்களிலும் பாந்துபோய்க் கொள்ளும் ஏவல் என்பது அதன் விரிபொருள். வியம்–பரத்தல். கோள்–கொள்வது. வியம்–ஏவல்–கோள்–கொள்வது எனினும் பொருந்தும்.

**வரலாறு.:–**

| | | | | |
|---|---|---|---|---|
| வாழ்க | உண்க | ஆடுக | யான்,யாம், நீ, நீர், | |
| அவன், | அவள், | அவர், | அது, | அவை. |
| வாழிய | உண்ணிய | ஆடிய | „ | |
| வாழியர் | உண்ணியர் | ஆடியர் | „ | |

**உரையிற் கோடலென்னு** முத்தியால், "நான்மறையறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க," "மக்கட்பதடியெனல்," "மனத்துக்கண் மாசிலனாதல்" என அ, அல், தல் என்பனவும் வியங்கோள் விகுதிகளாய் வருமெனக் கொள்க.

வியங்கோள்வினைமுற்று: "ஆறிரு தடந்தோள் வாழ்க வறுமுகம் வாழ்க" என வாழ்த்துதற் பொருளிலும், நடக்க, வருக. உண்க என உயர்ந்தோன் இழிந்தோனை இன்னது செய்கவென விதித்தற் பொருளிலும், "போற்றி யருளுக நின்னாதியாம் பாதமலர்" என வேண்டிக்கோடற் பொருளிலும், "பரந்து கெடுகவுலகியற்றியான்" என வைதற்பொருளிலும், வருமெனக் காண்க. விதித்தற்பொருள் தன்மையில் வராது.

ஐம்பான் மூவிடங்களுக்கும் பொதுவாகிய வினைக்குறிப்பு முற்றுக்களிவை யெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

வேறில்லை யுண்டைம் பான்மூ விடத்தன

(வேறு இல்லை உண்டு ஐம்பால் மூவிடத்தன.)

**இ–ள்.:** வேறு இல்லை உண்டு என்னு மூன்று வினைக்குறிப்பு முற்றுக்களும் ஐம்பாலுக்கு மூவிடத்திற்கு முரியனவாம், **எ–று.**

**வ–று.:–**

யான் வேறு, யாம் வேறு, நீ வேறு, நீர் வேறு, அவன் வேறு, அவள் வேறு, அவர் வேறு, அது வேறு, அவை வேறு, இல்லை, உண்டு என்பவற்றையும் மூவிடப்பெயர்களோடும் ஒட்டுக. இல்லை யென்பது சிறுபான்மை இல் என நிற்றலுமுண்டு.

இனி, **மொழிந்தபொருளோடொன்ற** வவ்வயின் **மொழியாததனையு முட்டின்று முடித்த**லென்னு முத்தியால், வேண்டும், தகும், படும் என்னுஞ் சொற்களும் ஐம்பான்மூவிடத்துக்கும் பொதுவாமெனக் கொள்க. இம்மூன்றும் ஒருபொருட்சொற்களாய்த் தொழிற்பெயராய்த் தேற்றப்பொருள்பட்டே நிற்கும்.

**வ–று.** அவரோதல்வேண்டும்; நீ போதல்வேண்டும்; யானுண்ணல் வேண்டும் எனவும், இச்சோறுண்ணத்தகும்; இவராலிக்காரியஞ் செய்யத்தகும் எனவும், வஞ்சரையஞ்சப்படும்; "கற்றறிந்தோ ரைத் தலைநிலத்து வைக்கப்படும்" எனவும் வரும்.

பெயரெச்சவிலக்கணமும் அதன்வாய்ப்பாடுங் கூறுஞ் சூத்திரம் யாது?

செய்த செய்கின்ற செய்யுமென் பாட்டிற்
காலமுஞ் செயலுந் தோன்றிப் பாலொடு
செய்வ தாதி யறுபொருட்பெயரும்
எஞ்ச நிற்பது பெயரெச் சம்மே.

(செய்த செய்கின்ற செய்யும் என் பாட்டில்
காலமும் செயலும் தோன்றி, பாலொடு
செய்வது ஆதி அறுபொருட்பெயரும்
எஞ்ச நிற்பது பெயரெச்சம்)

**இ–ள்.:** செய்தவென்றுஞ் செய்கின்றவென்றுஞ் செய்யுமென்றுஞ் சொல்லப்படும் மூவகைச் சொற்களிலே முறையே இறப்பு நிகழ்வு எதிர்வு என்னு மூன்றுகாலங்களுந் தொழிலுந் தோன்றிப், பால்காட்டும் விகுதியும், செய்பவன் கருவி நிலம் செயல் காலம் செயப்படுபொருள் என்னும் அறுவகைப்பொருட்பெயர்களும் ஒழிய நிற்பது பெயரெச்சவினைச்சொல்லாம், **எ–று.**

பெயரெச்சம்வரும் வாய்பாடுகள் யாவை?

"செய்த செய்கின்ற செய்யுமென்பாடு"

அவை காட்டுங் காலங்கள் யாவை?

செய்த என்னும் வாய்ப்பாட்டுப் பெயரெச்சம் இறந்தகாலமும், செய்கின்ற என்னும் வாய்பாட்டுப்பெயரெச்சம் நிகழ்காலமும், செய்யும் என்னும் வாய்ப்பாட்டுப் பெயரெச்சம் எதிர்காலமுங் காட்டும்.

பெயரெச்சத்திலே வெளிப்படத்தோன்றி நிற்பன யாவை?

"காலமுஞ் செயலும்"

பெயரெச்சம் என்னும் பெயர்க்குக் காரணம் யாது?

"பாலொடு–செய்வதாதி அறுபொருட்பெயரும் எஞ்சநிற்பது ஆதலின் பெயரெச்சமெனப்பட்டது. பெயர் எஞ்ச நிற்பது பெயரெச்சம்.

எனவே பெயரெச்சம் எதனை அவாவி நிற்கும்?

செய்வதாதி அறுபொருட்பெயருள் ஒன்றை அவாவி நிற்கும்.

பாலொடு எனப் பாலை ஒடுக் கொடுத்துப்
பிரித்தது யாது பற்றி?

ஐம்பாலாகிய வினைமுதலைக்காட்டும் விகுதியுறுப்புக்குறைந்
ததென்பது காட்டுதற்கும், ஐம்பான் மூவிடங்களுக்கும் உரியதென்பது புலப்படுத்தற்குமாம்.

குறிப்புவினைப் பெயரெச்சத்திற்கும் இதுவே இலக்கணமாமோ?

அன்று; குறிப்புவினைப் பெயரெச்சம் காலமுஞ் செயலும் வெளிப்படக்காட்டாது பால்காட்டும் விகுதியும் பெயரும் எஞ்சநிற்கும்.

செய்யுமென்னும் வாய்பாட்டெச்சமும் செய்யுமென்னும் வாய்பாட்டு முற்றும் வழக்கின்கண்ணுஞ் செய்யுட்கண்ணும் எவ்வாறாம்?

செய்யுமெ னெச்சவீற் றுயிர்மெய் சேறலுஞ்
செய்யுளு ளும்முந் தாகலு முற்றேல்
உயிரு முயிர்மெய்யு மேகலுமுளவே.

(செய்யும் என் எச்ச ஈற்று உயிர்மெய் சேறலும் செய்யுளுள் உம் உந்து ஆகலும் முற்றேல் உயிரும் உயிர்மெய்யும் ஏகலும் உளவே.)

**இ—ள்.:—** செய்யுமென்னும் வாய்பாட்டுப் பெயரெச்சத்தினுடைய இறுதியிலுள்ள உயிர்மெய் கெடுதலும், செய்யுளிடத்து உம்விகுதி உந்து எனத் திரிதலும் அது முற்றாயின் அதனிறுதி யுயிராயினும் உயிர்மெய்யாயினுங் கெடுதலும் உளவாம், **எ—று.**

செய்யுளுளும்முந்தாம் எனவே, மற்றவிதிகள் வழக்குச் செய்யு ளிரண்டிடத்துமாம் என்பதும், முற்றேல் எனவே, செய்யுமென்னும் பெயரெச்சம் முற்றுவினையுமாம் என்பதும் பெற்றாம்.

**வ—று.;—**

(1) ஆகும்பொருள்— ஆம்பொருள்; போகும்போது—போம் போது என வழக்கினும், "ஆம்பொருள்க ளாகுமவையார்க்குமழிப் புண்ணாவாம்" "வாம்புரவி வழுதி" எனச் செய்யுளினும், செய்யுமெனெச்சத் தீற்றுயிர்மெய் கெட்டன. இவை, மகரவொற்று நிற்றலின், வினைத்தொகை யாகாவென்க.

(2) "தெண்கடற் றிரைமிசைப் பாயுந்து;" நீர்க்கோழி கூப்பெயர்க்குந்து" எனச் செய்யுளிற் பாயும் என்பது பாயுந்து எனவும், கூப்பெயர்க்கும் என்பது கூப்பெயர்க்குந்து எனவும், உம் உந்தாயின.

(நு) அஃதாம், இவைபோம் என வழக்கில், ஆகும். போகும் என்பன, முற்றாயவிடத்து, ஆம்; போம் என ஈற்றுயிர்மெய் கெட்டன "சார னாடவென் றோழியுங் கலுழ்மே;" "அம்பலூரு மவனொடு மொழிமே" எனச் செய்யுளிற், கலுழும், மொழியும் என்பன, முற்றாயவிடத்துக், கலுழ்ம், மொழிம் என உயிரும் உயிர்மெய்யுங் கெட்டன.

செய்யுமென்னு முற்றென்றாயினுஞ் செய்யுமென்னு மேவன்முற்றென்றாயினும் விதவாது, பொதுமையின் முற்றேலென்றமையின், "மாமறை மாக்கள் வருகுவங் கேண்மோ;" "முதுமறையந்தணிர்முன்னிய துரைமோ" எனக் கேளும் உரையும் என்னுமேவன் முற்றும் இவ்வாறு உயிரும் உயிர்மெய்யுங் கெட்டு வருதல் கொள்க. இவை இங்ஙனமாதலால், **"சொற்றொறுமிற்றிதன் பெற்றி"** என்னுஞ் சூத்திரத்தால், ஆடுவாமோ என்னுந் தன்மைப்பன்மைமுற்றும் "பொன்னுசலாடாமோ" என எதிர்காலவிடைநிலை கெட்டு வருதலும் பிறவுங் கொள்க

.வினையெச்சமாவது யாது?

தொழிலுங் காலமுந் தோன்றிப் பால்வினை

ஒழிய நிற்பது வினையெச் சம்மே

(தொழிலும் காலமும் தோன்றி பால் வினை

ஒழிய நிற்பது வினையெச்சம் ஏ.)

**இ—ள்.:—** பின்பு விதந்து சொல்லப்படும் வாய்பாடுகளிலே தொழிலுங் காலமும் விளங்கிப் பால்காட்டும் விகுதியும் வினையுமெஞ்ச நிற்பன வினையெச்சவினைச்சொல்லாம், **எ—று.**

வினையெச்சத்தால் வெளிப்படக்காட்டப்படுவன யாவை?

"தொழிலுங்காலமும்"

வினையெச்சம் எவை எஞ்சநிற்பது?

"பால்வினை ஒழியநிற்பது"

வினையெனப் பொதுப்படக் கூறினமையால், "உடன்பாடும் எதிர்மறையும் பற்றி வருந் தெரிநிலையுங் குறிப்புமாகிய வினைமுற்றும், பெயரெச்சமும், வினையெச்சமும், வினையாலணையும் பெயருந் தொழிற்பெயருமாகிய ஐவகை வினைச்சொற்களுங் கொள்க.

வ–று.;–

உண்டு வந்தான் தெரிநிலைவினையெச்சம். அருளின்றிச் செய்தான் குறிப்புவினையெச்சம். இவற்றுள்; உண்டு என்பது, உண்ணலென்னுந் தொழிலும் இறந்தகாலமுந் தோன்றி, அத் தொழினிகழ்த்துதற்கு வேண்டும் பாறொன்றாமையும் அப்பாலுடனே வினையொழிய நின்றமையுமறிக.

பெயரெச்சம் வினையெச்சம் இரண்டற்கும் பொதுவாகிய இலக்கணங்களெவை.

தொழிலுங்காலமுந் தோன்றுதலும் பால்காட்டும் விகுதிகுறைந்து நிற்றலும் இரண்டுக்கும் பொதுவாகிய இலக்கணங்களாம்.

இருவகையெச்சங்களுக்குமுரிய சிறப்பிலக்கணமென்ன?

பெயரெச்சம் பெயரை அவாவி அதனோடு முடியும். வினையெச்சம் வினையை யவாவி அதனோடு முடியும்.

வினையெச்ச வாய்பாடும் அவற்றின் காலவுரிமையுங் கூறுஞ் சூத்திரம் யாது?

செய்து செய்பு செய்யாச் செய்யூச்
செய்தெனச் செயச்செயின் செய்யிய செய்யியர்
வான்பான் பாக்கின வினையெச் சம்பிற
ஐந்தோன் றாறுமுக் காலமு முறைதரும்.
(செய்து செய்பு செய்யாச் செய்யூச்
செய்தெனச் செயச்செயின் செய்யிய செய்யிர்
வான் பான் பாக்கு இன வினையெச்சம்பிற
ஐந்து ஒன்று ஆறு முக்காலமும் முறை தரும்.)

இ–ள்.:– செய்தென்பது முதற் செய்யியரென்ப தீறாகிய ஒன்பதுவாய் பாட்டால் வருவனவும், வான் பான் பாக்கென்னு மூன்று விகுதிக்ளைக் கொண்டு வருவனவும், இவைபோல்வன பிறவும் வினையெச்ச வினைகளாம் முன்னையவைந்தும் நடுநின்ற ஒன்றும் பின்னைய ஆறும் இறந்தகாலமும் நிகழ்காலமும் எதிர்காலமும் முறையே காட்டுவனவாம்.

இறந்தகாலங்காட்டும் வினையெச்சவாய்பாடுகள் யாவை?

"செய்து செய்பு செய்யாச் செய்யூச் செய்தென."

நிகழ்கால வினையெச்சவாய்பாடு யாது?

"செய"

எதிர்கால வினையெச்ச வாய்பாடுகள் யாவை?

"செயின் செய்யிய செய்யியர் வான் பான் பாக்கு"

ஆக வினையெச்ச வாய்பாடுகள் எத்தனை?

"ஐந்து ஒன்று ஆறு" (பன்னிரண்டு.)

இவற்றுட் செய்து, செய்தென என்னுமிரண்டும் இடைநிலையாலும், ஒழிந்தன இறுதிநிலையாலுங் காலங்காட்டு மெனவுணர்க.

வான் பான் பாக்கென்பன அவ்வவ்வெச்ச விகுதிகளையுடைய மொழிகளை யுணர்த்தி நின்ற குறிப்புச்சொல்.

உ–ம்.:–

(1) செய்து என்னும் வாய்ப்பாட்டு உகரவீறு:–

நக்கு, உண்டு, வந்து, சென்று எனக் க ட த றக்களை ஊர்ந்து இறந்தகாலம் பற்றி வரும்.

(2) செய்பு என்னும் வாய்பாட்டுப் புகர வீறு:–

உண்ணுபு போனான், நகுபுவந்தான் என இறந்தகாலம் பற்றி வரும்.

(3) செய்யா என்னும் வாய்பாட்டு ஆகார வீறு:–

உண்ணாவந்தான், கல்லாக்கழிப்பர் எனப் பின்வருந் தொழிற்கு இடையின்றி முன்வருந் தொழின்மேல் விரைவுணர்த்தி இறந்தகாலம் பற்றி வரும்.

(4) செய்யூ என்னும் வாய்பாட்டு ஊகார வீறு:–

உண்ணூவந்தான், "படுமகன்கிடக்கைகாணூ – வீன்றஞான்றினும் பெரிதுவந்தனளே" என மேற்கூறியவாறு விரைவுணர்த்தி இறந்தகாலம் பற்றி வரும்.

(5) செய்தென என்னும் வாய்ப்பாட்டு என வீறு:–

உண்டெனப்பசியகன்றது. உரைத்தெனவுணர்ந்தான் என முடிக்குஞ்சொல்லால் உணர்த்தப்படுந் தொழிற்குத் தன்முதனிலைத்தொழில் காரணமென்பது படக் க ட த ற வூர்ந்து இறந்தகாலம் பற்றி வரும். எஞ்சியென, உரிஞியென எனப் பிறவெழுத்தோடும் வரும்.

(6) செய என்னும் வாய்பாட்டு அகர வீறு:–

நடக்கக் காண்கின்றான், ஞாயிறு பட வந்தான் என நிகழ்காலம் பற்றி வரும். ஞாயிறு பட வந்தான் என்பது சூரியன் படுகிறபோது வந்தான் எனப் பொருள்படுதலின் பட வென்பது நிகழ்கால வினையெச்சம்.

(7) செயின் என்னும் வாய்பாட்டு இன்னீறு–

மழைபெய்யிற் குள நிறையும், மெய்யுணரின் வீடெளிதாம் எனக் காரணப்பொருட்டாய் எதிர்காலம் பற்றிவரும்.

(8) செய்யிய என்னும் வாய்பாட்டு இயவீறு–

உண்ணிய வருவான் என எதிர்காலம் பற்றி வரும்.

(9) செய்யியர் என்னும் வாய்பாட்டு இயரீறு–

உண்ணியர் வருவான் என எதிர்காலம் பற்றி வரும்.

(10) செய்வான் என்னும் வாய்பாட்டு வானீறு–

கொல்வான் வந்தான் என எதிர் காலம் பற்றி வரும்.

(11) செய்பான் என்னும் வாய்பாட்டுப் பானீறு–

உண்பான் செல்வான் என எதிர்காலம் பற்றி வரும்.

(12)செய்பாக்கு என்னும் வாய்பாட்டுப் பாக்கீறு–

செல்வந்தருபாக்குச் சென்றான் என எதிர்காலம்பற்றி வரும்.

உண்ணுபு வந்தான் என்பது உண்ணாநின்று வந்தான் எனவும் பொருள்படும். உண்டுகொண்டு வந்தான் என இக்காலத்து வழங்குவர். ஆதலின் உண்ணுபு என்பதன் தொழில், முடிக்குஞ் சொல்லானுணரப்படுந் தொழிலோடு உடனிகழ்தலின் இறந்தகாலத்தில் நிகழ்காலம் பற்றி வந்ததெனக் கொள்ளல்வேண்டும்.

இன என்றமையாற் கொள்ளக்கிடப்பது யாது?

மேற்கூறிய வாய்ப்பாட்டு ஈறுகளேயன்றி அவ்வாய்பாடுகள் பற்றி வரும் வேறு ஈற்று எச்சங்களுமுள வென்பது.

'இன' என்றமையால், ஆடிக் கொண்டான், போய்க் கொண்டான் எனச் செய்தென்வாய்பாடு பற்றி இகர விகுதியும் யகர மெய் விகுதியும் வருமெனவும். தழீஇக்கொண்டான் என விகுதி விகாரப்பட்டு வருமெனவும், புக்கு வந்தான் எனப் பகுதி விகாரப்பட்டு வருமெனவும், உணற்கு வந்தான் எனச் செயவென் வாய்பாடு பற்றிக் குவ்விகுதி வருமெனவும், உண்டாற் பசிதீரும் உண்டக்காற் பசி தீரும், உண்டக்கடைப் பசி தீரும், உண்டவழிப்பசி தீரும், உண்டவிடத்துப் பசி தீரும், உண்ணுமேற் பசி தீரும் எனச் செயினென்வாய்ப்பாடு பற்றி ஏல், கால், கடை, வழி, இடத்து, எல் விகுதிகள் வருமெனவும், எள்ளுமேனும் வரும், காண்டலுமிதுவே கூறும் என எனும் உம்மும் ஒரோவிடத்து விகுதிகளாய் வருமெனவும், உண்ணாமே வந்தான், உண்ணாமை வந்தான், உண்ணாமைக்கு வந்தான், உண்ணாமல் வந்தான் என எதிர்மறையிடத்து, மே, மை, மைக்கு, மல் விகுதிகள் வருமெனவும், அருளின்றி வந்தான், அறமல்லாதில்லை, அறமல்லாமேயில்லை அறமல்லாமை யில்லை, அறமல்லாமலில்லை, நீயல்லாலில்லை என வினை யெச்சக் குறிப்புகளுக்கு, றி, து, மே, மை, மல், ஆல் என்பவை விகுதிகளாமெனவுங் கொள்க.

**உரையிற்கோடலென்னு**முத்தியினாலே, செயவெனெச்சம் நிகழ்காலமன்றி மற்றைக்காலமுந் தருமெனக் கொள்க. அது, தனக்குரிய நிகழ்காலத்தின்கண் இது நிகழாநிற்க இது நிகழ்ந்தது என்னும் பொருட்டாயும், இறந்தகாலத்திற் காரணப்பொருட்டாயும், எதிர்காலத்திற் காரியப்பொருட்டாயும், வரும். காரணப்பொருட்டாய் வருதலாவது முடிக்குஞ்சொல்லால் உணரப்படுந் தொழில் காரணமென்பது பட வருதல்; காரியப்பொருட்டாய் வருதலாவது முடிக்குஞ்சொல்லால் உணரப்படுந் தொழிற்கு வினையெச்சத்தாலுணரப்படுந் தொழில் காரியமென்பது பட வருதல்.

**வ–று.:–**

சூரியனுதிக்க வந்தான்..................................நிகழ்.

மழை பெய்ய நெல் விளைந்தது..................................இற.

நெல் விளைய மழை பெய்தது..................................எதிர்.

இன்னும், **உரையிற்கோடலென்னு**முத்தியால், வான், பான், பாக்கென்னு மூன்றுட் சிறுபான்மை தொழிற்பெயர் விகுதிகளாயும் வருமெனக் கொள்க.

வ—று.:—

நீ வருவானேன் யானுரைப்பானேன்; "ஒழுக்கத்தினொல் சாருரவோ ரிழுக்கத்தி—னேதம் படுபாக் கறிந்து" என வரும். இங்கே, வருவான், உரைப்பான், படுபாக்கு என்பன, முறையே, வருதல், உரைத்தல், படுதல் எனப் பொருள்படுதல் காண்க. வினையெச்சங்களுக்கு முடிபு கூறுஞ் சூத்திரம் யாது?

அவற்றுள்,

முதலி னான்கு மீற்றின் மூன்றும்

வினைமுதல் கொள்ளும் பிறவுமேற் கும்பிற.

(அவற்றுள்,—

முதலில் நான்கும் ஈற்றில் மூன்றும்

வினைமுதல் கொள்ளும் பிறவும் ஏற்கும் பிற.)

இ—ள்.: மேலைச் சூத்திரத்துட் சொல்லிய வினையெச்சங்களுள் முதலிலுள்ள செய்து செய்பு செய்யாச் செய்யூ என்னுநான்கும் இறுதியிலுள்ள வான் பான் பாக்கு என்னும் விகுதிகளையுடைய மூன்றும் வினைமுதல்வினையைக் கொண்டு முடியும், நடுவிலுள்ள செய்தெனச் செயச் செயின் செய்யிய செய்யியர் என்னும் ஐந்தும் இவைபோல்வன பிறவுமென்றதனால் வருஞ் செய்தால் முதலியவையும் வினையெச்சக்குறிப்புக்களும் ஆகிய இவைகள் பிறகருத்தாவினது வினையையும் தம்மை நிகழ்த்தின கருத்தாவினது வினையையுங் கொண்டு முடியும், எ—று.

வரலாறு:—

உ — தானடந்து வந்தான் முதலினான்கும் ஈற்றின் மூன்றும் வினைமுதல் வினை கொண்டுமுடிந்தன.

பு — தானுண்குபு போனான் "

ஆ — தான் கல்லாக் கழித்தான் "

ஊ — தான் காணூஉ மகிழ்ந்தான் "

வான் — தான் கொல்வான் செல்வான் "

பான் — தானலைப்பான் புகுந்தான் "

பாக்கு — தான்றருபாக்கு வருவான் "

என தானுண்டென மகிழ்ந்தான்

இடையினைந்தும்வினைமுதல் வினையும் பிறவினையுங் கொண்டன.

| | | |
|---|---|---|
| | பிறனுண்டென மகிழ்ந்தான் | |
| அ | தானுண்ண வருகிறான் | " |
| | பிறனுண்ணக் காண்கிறான் | " |
| இன் | தானுண்ணின் மகிழ்வான் | " |
| | பிறனுண்ணிற் கொடுப்பான் | " |
| இய | தானுண்ணிய வருவான் | " |

பிறனுண்ணிய கொடுப்பான் „

இயர் தானுண்ணியர் போவான் „

பிறனுண்ணியர் வழங்குவான் „

மழைபெய்தற்கு முழங்கும், மழைபெய்தற்கு வெயிலெறிக்கும். உண்டாலுவக்கும், உண்டாற்பசிதீரும் எனவும் மழையின்றிப் பொய்ப்பின், விருந்தின்றி யுண்டான் எனவும் இனவென்றதனால் வருஞ் செய்தால் முதலியவையும் வினையெச்சக்குறிப்பும் இப்படியே வினைமுதலும் பிறவுமேற்றல் காண்க.

சினைவினைக்கு முடிபுகூறுஞ் சூத்திரம் யாது?

சினைவினை சினையொடு முதலொடுஞ் செறியும்.

(சினைவினை சினையொடும் முதலொடும் செறியும்.)

**இ–ன்.:–** முதலினான்கும் ஈற்றின் மூன்றும் என்ற வினையெச்சங்கள் சினைவினையாயின் அவை முன் வினைமுதல் வினைகொள்ளும் என்ற விதியினாலே சினைவினையுடனேயன்றி ஒற்றுமைபற்றி முதல்வினையுடனும் முடியும், **எ–று.**

**வ–று.:–**

கால் ஒடிந்து வீழ்ந்தது. இதிற் சினையின் வினையாகிய ஒடிந்து என்னும் எச்சம் சினையின் வினையாகிய வீழ்ந்தது என்பதோடு முடிந்தது.

அவன் கால் ஒடிந்து வீழ்ந்தான். இதிற் சினை வினையாகிய ஒடிந்து என்னும் எச்சம் முதல்வினையாகிய வீழ்ந்தான் என்பதோடு முடிந்தது.

இச்சூத்திரக் கருத்து யாதெனின், முதலினான்கு மீற்றின் மூன்றும் வினைமுதல் கொள்ளுமென்ற விதிபற்றிச் சினைவினையோடு முடிதற்பாலவாகிய சினையின்வினை, அச்சினை தன்முதலோடு ஒற்றுமையுடைமையான் முதல்வினையோடு முடியினும் வினைமுதல்வினை கொண்டனவே யாம்.

ஒருவினையெச்சம் மற்றொருவினையெச்ச வாய்பாடாகத் திரியிற் பொருள் வேறுபடாதோ?

சொற்றிரி யினும்பொரு டிரியா வினைக்குறை

(சொல் திரியினும் பொருள் திரியா வினைக்குறை.)

**இ–ன்.:** முதலினான்கு மீற்றின் மூன்றும் என்ற வினையெச்ச வாய் பாடுகளாகப் பிற வினையெச்சவாய்ப்பாடுகள் வேறுபடினும் அவற்றின் பொருள்கள் வேறுபடாவாம், **எ–று.**

**வ–று.:–**

(1) ஞாயிறு பட்டு வந்தான் என்புழிப், படவென்னுஞ் செயவென் வாய்ப்பட்டு நிகழ்காலவினையெச்சம் பட்டெனத் திரிந்து நின்றது.

(2) மழை பெய்து நெல் விளைந்தது என்புழிப், பெய்யவென்னுங் காரணப் பொருட்டாகிய செயவென் வாய்பாட்டிறந்தகால வினை யெச்சம் பெய்தெனத் திரிந்து நின்றது. ஆகிடந்து செறு விளைந்தது; பூணணிந்து விளங்கிய புகழ் காண் மார்ப; உண்டு பசி கெட்டது என்புழிக், கிடக்க, அணிய, உண்ண என்பன, முறையே, கிடந்து, அணிந்து, உண்டு எனத் திரிந்துநின்றன.

(3) யான் கொள்வான் பொன் கொடுத்தான் என்புழிக், கொளவென்னுஞ் செயவென் வாய்பாட்டு வினையெச்சங் கொள்வானெனத் திரிந்து நின்றது.

கோழி கூவிப் பொழுது புலர்ந்தது என்புழிக், கூவவென்பது கூவியெனத் திரிந்ததன்று; கூவுதல் புலர்தற்குக் காரணமாகாமையாலும், செயவெனெச்சங் காரணப்பொருண்மை யுணர்த்துமிடத்தல்லது இறந்தகால முணர்த்தாமையாலு மென்றுணர்க. கூவுவித்து என நிற்கற்பாலது கூவியென விவ்விகுதி தொக்குநின்றது. "குடிபொன்றிக் – குற்றமு மாங்கே தரும்;" "குடிமடிந்து குற்றம்பெருகும்;" "இருணீங்கி யின்பம் பயக்கும்." என்புழிப், பொன்றுவித்து, மடிவித்து, நீங்குவித்து எனற்பாலன, பொன்றி, மடிந்து, நீங்கி என விவ்விகுதி தொக்கு நின்றன.

சொற்றிரியினும் என்றதனால் இன்னும் கொள்ளக்கிடக்கும் **வினையெச்சங்கள் உளவோ?**

செய்து என்னும் வினையெச்சம் தனக்குரிய இறந்தகாலத்தை விட்டு எதிர்காலத்தைப் பற்றியும் வருமென்பதும். "நீ பொய்கூறியபின் மெய்கூறுவார் யார்," தின்னாமுன், உரைத்தவழி, உரைக்குமிடத்து, உண்டக்கால், என்புழிப் பின் முன் முதலியனவும் காலங்கருதி வரும் வினையெச்ச வீறுகளாமென்பதும் கொள்ளப்படும். நீ உண்டு வருவாய், அவன் வந்து செய்வான் என்புழிச் செய்தெனெச்சம் பொருள் சிதையாமல் எதிர்கலத்து வந்தவாறு கண்டு கொள்க.

வினைக்குறிப்பு எத்தனை வகைப்படும்?

ஆக்க வினைக்குறிப்பு இயற்கை வினைக்குறிப்பென இரு வகைப்படும்.

ஆக்கவினைக்குறிப்பின் இயல்பு யாது?

ஆக்க வினைக்குறிப் பாக்கமின் றியலா.

(ஆக்க வினைக்குறிப்பு ஆக்கம் இன்று இயலா.)

**இ–ள்.:–** ஆக்கத்தால் வரும் வினைக்குறிப்புச் சொற்கள் விரிந்தாயினுந் தொக்காயினும் வரும் ஆக்கச் சொல்லின்றி வராவாம், **எ–று.**

**வ–று.:–**

சாத்தனல்லனாயினான், சாத்தனல்லன்; கல்வியாற் பெரியனாயினான், கல்வியாற்பெரியான்; கற்று வல்ல னாயினான், கற்று வல்லன் என ஆக்கச்சொல் விரிந்துந் தொக்கும் வந்தன. எனவே, நல்லனென்பது இயற்கைவினைக் குறிப்பாயின், விரிதல் தொகுதலென்னும் இரண்டனுள் ஒருவாற்றானும் ஆக்கம் வேண்டாது, சாத்தனல்லன் என்றே வருமென்பதாயிற்று.

செய்யுமென்னு முற்றுச்சொற்குப் பால் இடவுரிமை கூறுஞ் சூத்திரம் யாது?

பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையிற்

செல்லா தாகுஞ் செய்யுமென் முற்றே.

(பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையில் செல்லாது ஆகும் செய்யும் என் முற்றே.)

**இ–ள்.:–** செய்யு மென்னு முற்றானது உயர்திணைப் பன்மைப் படர்க்கை யிலும் முன்னிலையிலுந் தன்மையிலுஞ் செல்லாது, **எ–று.**

எனவே, பலரொழிந்த படர்க்கை நாற்பாலிலுஞ் செலுமென்பது பெற்றாம்.

**வ—று.:—**

அவனுண்ணும், அவளுண்ணும், அதுவுண்ணும், அவையுண்ணும் என வரும்.

யார் என்னும் வினாப் பொருளை யுணர்த்தும் வினைக்குறிப்புக்குப் பால் வரையறை கூறுஞ் சூத்திரம் யாது?

யாரென் வினாவினைக் குறிப்பெயர் முப்பால்

(யார் என் வினாவினைக் குறிப் உயர் முப்பால்.)

**இ—ள்.:—** வினாப்பொருளைத் தரும் யாரெனும் வினைக்குறிப்புமுற்று உயர்திணை முப்பால்களுக்கும் பெரிதுவினையாம், **எ—று.**

**வ—று.:—**

அவன் யார், அவள் யார், அவர் யார் என வரும்.

அஃதியார், அவையார் எனவும், யான் யார், யாம் யார் எனவும், நீ யார், நீர் யார் எனவும், அஃறிணையிருபாலிலும், மற்றை யீரிடத்திலும் வருதல், உயர் என்றமையால் இழி யிருபாலிலும் சிறுபான்மை கொள்ளப்படும் என்பதனாற் கொள்க.

யார் என்பது ஆரென விகாரப்பட்டும் வரும். இங்கே சொன்ன யார் என்பது, யாவரென்னும் உயர்திணைப் பலர்பாற்சொல் விகாரப்பட்ட யாரென்பதன்று.

எவன் என்னும் வினாவினைக்குறிப்பு எப்பாலின்கண் வரும்?

எவனென் வினாவினைக் குறிப்பிழி யிருபால்.

(எவன் என் வினா வினைக்குறிப்பு இழி இருபால்.)

**இ—ள்.:** வினாப்பொருளைத் தரும் எவனென்னும் வினைக்குறிப்பு முற்றும் அஃறிணையிருபாலுக்கும் பொதுவினையாம், **எ—று.**

**வ—று.:—**

அஃதெவன், அவை யெவன் என வரும்.

எவனென்பது, என், என்ன, என்னையென விகாரப்பட்டும் வரும். இங்கே சொன்ன எவனென்பது, உயர்திணை யாண்பாலை யுணர்த்தும் எவனென்பதன்று.

வினைமுற்றுத் திரிந்து எச்சமாகி வருதலு முளவெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

வினைமுற் றேவினை யெச்ச மாகலுங்
குறிப்புமுற் றீரெச்ச மாகலு முளவே

(வினைமுற்றே வினையெச்சம் ஆகலும்
குறிப்புமுற்று ஈரெச்சம் ஆகலும் உளவே.)

**இ—ள்.:** தெரிநிலைவினைமுற்றே வினையெச்சமாகி வருதலும்

வினைக்குறிப்புமுற்றே வினையெச்சமாகியும் பெயரெச்சமாகியும் வருதலும் உளவாம், **எ—று.**

89. எச்சம் முற்றாகுமென்னாது முற்று எச்சமாதலு முண்டெனக் கூறியதென்னை?

பால்காட்டும் விகுதிபெறுதல் எச்சத்திற்குரிய இலக்கண மாகாமையின் எச்சம் முற்றாதலுமுள வென்னாது வினைமுற்றே யெச்சமாகலு முளவெனப்பட்டது.

**வ—று.:—**

(1) கண்டனன் வணங்கினான் என்பது கண்டு வணங்கினான் எனவும், பொருள்படுதலால், வினைமுற்று வினையெச்ச மாதல் காண்க.

(2) அவன் வில்லினன் வந்தான் என்பது அவன் வில்லினனாகி வந்தான் எனப் பொருள்படுதலாற் குறிப்புவினையெச்சமாதல் காண்க. "வெந்திறலினன் விறல்வழுதியொடு" என்பது வெந்திறலினனாகிய வழுதி எனப் பொருள்படுதலாற் குறிப்புமுற்றுப் பெயரெச்சமாதல் காண்க. பிறவுமன்ன.

## பொதுவியல்

செய்யுளிலே பெயர்வினைகளின்கண் இவ்வெழுத்து இவ்வெழுத்தாகத் திரியவும் பெறுமெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

பெயர்வினை யிடத்து ன ள ர ய வீற்றயல்
ஆவோ வாகலுஞ் செய்யுளு ளுரித்தே.
(பெயர் வினையிடத்து ன ள ர ய ஈற்று அயல்
ஆ ஒ ஆகலும் செய்யுளுள் உரித்தே.)

**இ—ள்.:—** பெயரிடத்தும் வினையிடத்தும் னகர ளகர ரகர யகர வீற்றிற்கு அயலிலுள்ள விகுதி முதல் ஆகாரம் ஓகாரமாதலும் செய்யுளிடத்துரித்தாம், **எ—று.**

**வ—று.:—**

(1) "வில்லோன் காலன கழலே;" "தொடியோண் மெல்லடி மேலனசிலம்பே;" "நல்லோர் யார்கொல்;" "வரையாது கொடுத்தோய்" எனப் பெயரிடத்து ஆகாரம் ஓகாரமாயிற்று.

(2) "படைத்தோன் மன்றவப் பண்பிலாளன்;" "நல்லோண் மன்றகூப்பெயர்த்தோளே;" "சென்றோ ரன்பிலர் தோழி," "வந்தோய் மன்ற தெண்கடற் சேர்ப்ப" என வினையிடத்து ஆகாரம் ஓகாரமாயிற்று.

வினையாலணையும் பெயரிடத்தன்றி வினையிடத்தும் ஒரோவழி ஆவோவாகத் திரிந்து வருதலின், அதனையு முடன்கூறினார்.

**ஏற்புழிக்கோடலால்,** சேரமான் வண்ணான் உண்ணான் உறங்கான் முதலியன திரியாவெனவும், ஆவீறு திரிதல் பெரும்பான்மையும் உயர்திணைக்கண்ணே யாமெனவுங் கொள்க.

இனி **ஒன்றென முடித்தலால்,** "பழமுதிர் சோலை மலைகிழவோனே" என ஒரோவழி அகரம் ஓகாரமாதலுங் கொள்க.

எதிர்மறைக்கண்ணும் வேற்றுமைப்பெயரும் வினையும் பொருணிலை திரியாவெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

உருபும் வினையு மெதிர்மறுத் துரைப்பினுந்
திரியா தத்தம் பொருணிலை யென்ப.

(உருபும் வினையும் எதிர்மறுத்து உரைப்பினும்
திரியா தத்தம் பொருள்நிலை என்ப.)

**இ–ள்.:–** எட்டு வேற்றுமையுருபுகளும் மூவகை வினைச்சொற்களும் எதிர்மறுத்துச் சொல்லுமிடத்தும் தத்தம் பொருணிலை வேறுபடா என்று சொல்லுவர் புலவர், எ–று.

**வ–று.:–**

சாத்தன் வாரான்; குடத்தை வனையான்; வாளா லெறியான்; புல்லர்க்குக் கொடான்; நிலையினீங்கான்; பொருளின தின்மை; தீயர்கட் சேரான்; சாத்தா போகேல் எனவும், நடவான், நடவாத, நடவாது எனவும் வரும். ஓடாக்குதிரை, இதில் ஓடாதவென்னும் பெயரெச்சவீறு கெட்டது.

பொருணிலைதிரியா வென்றமையால் வினையினீறு திரியவும் பெறும் என்றாராதலின், செய–செய்யாமல், செய்யாமே, செய்யாமல், செய்யாமே, செய்யாமை என வரும் வினையெச்சமும், நடத்தல்–நடவாமை எனத் தொழிற்பெயரும், உண்ணாய்–உண்ணேல்–உண்ணாதே என ஒருமையேவலும், ஈறு திரியினும் பொருணிலை திரியாதே வருமெனக் கொள்க.

"உருபும் வினையு மெதிர்மறுத் துரைப்பினுந் திரியா தத்தமீற்றுருபி னென்ப" எனப் பாடபேதங்கொண்டு "தத்தம் ஈற்றினின்றும் அவ்வவ் வுருபினின்றும் வேறுபடா என்று சொல்லுவர் புலவர்" எனப் பொருள் கூறவாருமுளர். அது பொருந்தாதென்க.

இச்சூத்திரக் கருத்துத்தான் யாது?

இச் சூத்திரக் கருத்து யாதெனின், குடத்தை வனையான், வாளால் எறியான் என்றவழி அவ்வினைகள் நிகழாமையின் குடமும் வாளும் முறையே செயப்படுபொருளுங் கருவியு மாகாவாயினும், எதிர்மறைவினையும் விதி வினையோ டொப்புமை யுடையதாதலின் ஆண்டுவந்த உருபுகளும் செயப்படுபொருள் முதலியவற்றின் மேல்வந்தனவாகவே கொள்ளப்படல் வேண்டுமென வழுவமைத்தவாறும், "செய்த செய்கின்ற" எனவும் "செய்து செய்பு" எனவும் விதிவாய்பாடு பற்றி யன்றிச் செய்யாத, செய்யாது என எதிர்மறை வாய்ப்பாடு பற்றியுங் கூறாமையான் அவையும் அவ்வெச்சப் பொருண்மையிற் றிரியாது பெயரும் வினையுங் கொள்ளுமென முற்கூறாதொழிந்ததைக் ஈண்டுக் கூறியவாறுமாமென்க.

அடுக்கி வரும் உருபுகளும் வினைகளும் எவ்வாறு முடியும்?

உருபுபல வடுக்கினும் வினைவே றடுக்கினும்
ஒருதம் மெச்ச மீறுற முடியும்.

(உருபு பல அடுக்கினும் வினை வேறு அடுக்கினும்
ஒருதம் எச்சம் ஈறு உற முடியும்.)

**இ—ள்.:—** வேற்றுமையுருபுகள் விரிந்துந் தொக்குந் தம்முள் விரவிப் பலவடுக்கி வரினும் வெவ்வேறு பலவடுக்கி வரினும் மூவகை வினைச்சொற்களும் வெவ்வேறு பலவடுக்கி வரினும் தத்தமெச்ச மொன்று இறுதியில் வர அதனோடனைத்தும் முடியும், எ—று.

இங்கே எச்சமென்றது எதனை?

முடிக்குஞ்சொல்லை.

**வ—று.:—**

(1) அரசனானவன் பகைவனை வாளால் வெட்டினான் என உருபுகள், விரிந்து, தம்முள் விரவிப் பலவடுக்கி, வெட்டினாரென்னும் ஒருவினை கொண்டன. வாள் கைக்கொண்டான் என உருபு தொக்கு அவ்வாறு வந்தன.

(2) சாத்தனையுங் கொற்றனையும் வாழ்த்தினான் எனவும், சாத்தனுக்குங் கொற்றனுக்குந் தந்தை எனவும், ஐயுருபுங் குவ்வுருபும், விரிந்து, வேறுபலவடுக்கி, வாழ்த்தினா னென்னும் ஒருவினையும் தந்தை யென்னும் ஒருபெயரும் முறையே கொண்டன. அருளறமுடையான் என உருபு தொக்கு, அவ்வாறு வந்தன.

(3) ஆடினான் பாடினான் சாத்தன். எனவும், இளையண் மெல்லியண் மடந்தை. எனவும், வினைமுற்றுங் குறிப்புமுற்றும், வேறு பலவடுக்கிச், சாத்தன் மடந்தை என்னும் ஒரு பெயரும் முறையே கொண்டன.

(4) கற்ற கேட்ட பெரியோர் எனவும், நெடிய பெரிய மனிதன். எனவும், தெரிநிலைவினைப்பெயரெச்சமுங் குறிப்புவினைப் பெயரெச்சமும், வேறு பலவடுக்கிப், பெரியோர் மனிதன் என்னும் ஒருபெயர் முறையே கொண்டன.

(5) கற்றுக் கேட்டறிந்தார் எனவும், விருப்பின்றி வெறுப்பின் றியிருந்தார் எனவும், தெரிநிலை வினையெச்சமுங் குறிப்புவினையெச்சமும், வேறு பலவடுக்கி, அறிந்தார் இருந்தார் என்னும் ஒருவினை முறையே கொண்டன.

97. வேற்றுமைச் சொல்லும் முற்றும் எச்சமும் பெயரையும் வினையையுங் கொண்டு முடியுமென்பது முந்திய வியல்களிலே கூறப்பட்டதாகவும் மீளவும் அவற்றிற்கு முடிபு கூறிய தென்னை?

முடிக்குஞ் சொல்லாகிய ஒரு பெயரோடாயினும் வினையோடாயினும் வேற்றுமைச்சொல்லும் வினைச் சொல்லும் தனித்தனி ஒவ்வொன்றே சென்று முடிதல்வேண்டு மென்னும் நியதியின்றிப் பலசென்று முடிதலும் வழுவாகா தென்பது இச்சூத்திரக் கருத்தாம்.

வேற்றுமையுருபேற்ற சொற்களுக்கும் முற்றுக்களுக்கும் எச்சங்களுக்கும், அவை கொண்டு முடியவேண்டிய பெயருக்கும் வினைக்குமிடையே அவ்விடத்திற்கு ஏற்பனவாகிய பிறசொற்கள் வருதலும் பிழையாகாதெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

உருபு முற்றீ ரெச்சங் கொள்ளும்
பெயர்வினை யிடைப்பிற வரலுமா மேற்பன.
(உருபு முற்று ஈரெச்சம் கொள்ளும்
பெயர் வினையிடை பிற வரலும் ஆம் ஏற்பன.)

இ–ள்.: வேற்றுமையுருபுகளும் முற்றுக்களும் பெயரெச்சங்களும் வினை யெச்சங்களுந் தாந்தாங் கொண்டு முடியும் பெயர்ச்சொற்கும் வினைச்சொற்கு மிடையே பிறசொற்கள் வருதலுமாம் அவ்விடத்திற்குப் பொருந்துவன, எ–று.

இச்சூத்திரக் கருத்து யாது?

முடியவேண்டுஞ்சொல் முடிக்குஞ் சொல்லோடு ஒட்டி நிற்ற ற்குரியதாகலின் இடையே பிறசொல் வரப் பெறுதல் வழுவாமாயினும், இயைந்ததாயின் பிறிதொன்று இடையே வருதல் குற்றமாகாதென்பதே இச் சூத்திரக் கருத்தாம்.

**(வரலாறு)**

(1) சாத்தன் (வயிறார) உண்டான் வேற்றுமையுருபு

அறத்தை (அழகு பெறச்) செய்தான்.

வாளால் (மாய) வெட்டினான்.

தேவர்க்குச் (செல்வம் வேண்டிச்) சிறப்பெடுத்தான்.

மலையினின்று (உருண்டு) வீழ்ந்தான்.

சாத்தனது (இத்தடக்கை) யானை.

ஊர்க்கண் (உயர்ந்தவொளி) மாடம்.

சாத்தா (விரைந்து ஓடி) வா.

(3) வந்தான் (அவ்வூர்க்குப்போன) சாத்தன் .......... வினைமுற்று.

(4) வந்த (வடகாசி) மன்னன்........................பெயரெச்சம்.

(5) வந்து (சாத்தனவ்வூர்க்குப்) போயினான் .......... வினையெச்சம்.

இனி ஏற்பன என்றதனால், எலாதன வரிற் பொருள் கவர்படுமாதலால், அவை இடையில் வரப்பெறாவென்ப தாயிற்று. கவர்படுதல் இருபாற்பட்டுத் துணிவு தோன்றா வண்ண நிற்றல். **வ–று.:–**

உண்டு விருந்தோடு வந்தான் என்புழி, விருந்தோடு என்பது, வருதலை விசேடியாது, உண்டலை விசேடித்தும் பொருள்கவர்படுதலால், இதுபோல்வன இடையில் வரப்பெறா வென்றறிக.

வல்ல மெறிந்த நல்லிளங்கோசர் தந்தை மல்லல் யானைப் பெருவழுதி என்புழி, வல்லமெறிதல், வழுதிமேலாகாது, நல்லிளங்கோசர் மேலுமாகிப் பொருள் கவர்படுதலால், இதுபோல்வன இடையில் வரப்பெறாவென்றறிக.

முடிக்குஞ்சொல் முதலிலே யன்றி யீற்றில் வருதலும் பிழையாக தென்று கூறுஞ் சூத்திரம் யாது?

எச்சப்பெயர்வினை யெய்து மீற்றினும்.

(எச்சப் பெயர்வினை எய்தும் ஈற்றினும்.)

**இ–ள்.:–** உருபுகளும் முற்றுக்களும் பெயரெச்சங்களும் வினையெச்சங்களுங் கொண்டு முடியுமெச்சமாகிய பெயரும் வினையும் அவற்றிற்கீற்றிலும் வரும், **எ–று.**

**இச்சூத்திரக் கருத்தென்னை?**

ஒன்றனது அவாய் நிலையை முடித்தற்கு வருஞ் சொல் பின்வருதல் மரபாகலின் வழுவற்க என்பதும், முன் வருதல் மரபாகாமையின் வழுவேயாயினும், முடித்தற்குரியனவாயின் முன் வருதலுங் கொள்க என்பதும் இச்சூத்திரக் கருத்தாம்.

ஈற்றினுமென்ற உம்மையால், முதலினும் வருதல் கொள்க.

**(வரலாறு)**

| ஈறு | முதல் |
|---|---|
| சாத்தன் வந்தான் | வந்தான் சாத்தன் |

உருபுகளினெச்சங்கள் ஈரிடத்தும் வந்தன.

| | |
|---|---|
| மரத்தைக் குறைத்தான் | குறைத்தான் மரத்தை |
| சாத்தனால் வந்தான் | வந்தான் சாத்தனால் |
| சாத்தனுக்குக் கொடுத்தான் | கொடுத்தான் சாத்தனுக்கு |
| சாத்தனி னீங்கினான் | நீங்கினான் சாத்தனின் |
| சாத்தன தாடை | |
| சாத்தன்கட் சென்றான் | சென்றான் சாத்தன்கண் |
| குன்றத்துக்கட் கூகை | |
| சாத்த வா | வா சாத்தா |
| வந்தான் சாத்தன் | சாத்தன் வந்தான் |

முற்றெச்சங்களினெச்சங்கள் ஈரிடத்தும் வந்தன.

| | |
|---|---|
| வந்த சாத்தன் | |
| வந்து போயினான் | போயினான் வந்து |

எய்துமீற்றின் என்றாற்போல முதற்கண் வருதலை யெடுத்தோதாது உம்மையாற் றழுவிக்கொண்டார், ஆறனுருபினெச்சமும் ஏழனுருபினெச்சப் பெயரும் பெயரெச்சத்தினெச்சமும் முதற்கண் வாரா என்பதும், ஒழிந்தன முதற்கண் வரினும் இறுதிக்கண் வருதல்போற் சிறப்பினவல்ல என்பதுந் தோன்றுதற்கென்க.

எழுவாயுருபு வினைமுற்றுப்பயனிலையை இறுதியிலே கொண்டதும், வினைமுற்றுப் பெயர்ப்பயனிலையை முதலிலே கொண்டதும், சாத்தன்வந்தான் என வரும். தம்முள் வேற்றுமை யாதோவெனின், கேட்போர்க்குச் சாத்தன் இதுசெய்தான் என வினையை யுணர்த்தும் போது, சாத்தனென்னு மெழுவாய்க்கு வந்தானென்னு முற்றுவினை பயனிலையாகக் கொள்ளப்படும்; இது செய்தோன் சாத்தன் என வினைமுதலை யுணர்த்தும்போது, வந்தானென்னு முற்று வினைக்குச் சாத்தனென்னும் பெயர் பயனிலையாகக் கொள்ளப்படும். வந்தான் சாத்தன் என்னு முற்றுத்தொடருக்கும் இவ்வாறறிக.ஒரு சொல்லால் அதன் இனமுங் கொள்ளப்படுமெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே.

(ஒருமொழி ஒழி தன் இனம் கொளற்கு உரித்தே.)

இ—ள்.:— ஒரு சொல்லானது பொருளாற்றலால் ஒழிந்துநின்ற தன்னினத்தைத் தழுவிக்கொள்ளுதற்குரியதாம், எ—று.

**வரலாறு.**

சோற்றை நனியுண்டான் என்றவழிக், கறியை நனிதின்றான் என்றற்றொடக்கத்தனவும், பாக்கை நனிதின்றான் என்றவழி, வெற்றிலையை நனிதின்றான், சுண்ணாம்பை நனிதின்றான் என்பனவும், நஞ்சுண்டவன் சாவான் என்றவழி, நஞ்சுண்டவள் சாவாள், நஞ்சுண்டவர் சாவார், நஞ்சுண்டது சாம், நஞ்சுண்டவை சாம் என்பனவுங் கூறாதே யமைதலின், இனங்களா யெஞ்சிநின்றன.

பெயர்வினைகளின் பொதுமையை நீக்குவது இதுவெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

பொதுப்பெயர் வினைகளின் பொதுமை நீக்கும்
மேல்வருஞ் சிறப்புப் பெயர்வினை தாமே.
(பொதுப் பெயர் வினைகளின் பொதுமை நீக்கும்
மேல் வரும் சிறப்புப் பெயர்வினை தாமே.)

இ—ள்.:— திணைபாலிடங்கட்குப் பொதுவாகிய பெயர் வினைகளுடைய பொதுத்தன்மையை நீக்கி ஒன்றற்குரிமை செய்யும் மேலே வருஞ் சிறப்பாகிய பெயர்வினைகள்தாமே, எ—று.

ஒன்றற்கு முன்பின் என்னும் இருமருங்கும் மேலெனப்படுதலாற், சிறப்புப்பெயர் வினை யெவ்விடத்துவரினுங் கொள்க.

இச்சூத்திரம் முன்னியல்களிலே கூறப்பட்ட எவ்வெச் சூத்திரங்களால் முடிந்தவற்றுக்கு ஒழிபு கூறுகின்றது?

பெயரியலிலே 25 முதல் 32 இறுதியாகவுள்ள சூத்திரங்களாலும் வினையியலிலே 11ம் சூத்திரத்தாலு முடிந்தவற்றுக்கு ஒழிபு கூறுகின்றது.

**வ—று.** :—

(1) சாத்தனிவன்; சாத்தனிது எனவும், சாத்தன்வந்தான்; சாத்தன் வந்தது எனவும், பெயர்த்திணைப் பொதுமையைப், பின்வந்த சிறப்புப்பெயரும் வினையும், நீக்கி ஒருதிணையை யுணர்த்தின.

(2) ஒருவரென்னையர்; ஒருவரென்றாயர். எனவும், மரம் வளர்ந்தது; மரம்வளர்ந்தன. எனவும், பெயர்ப்பாற் பொதுமையைப், பின்வந்த சிறப்புப்பெயரும் வினையும், நீக்கி ஒருதிணையையுணர்த்தின.

(3) யாமெல்லாம் வருவம்; நீயிரெல்லாம் போமின் அவரெல்லாமிருந்தார் எனப் பெயரிடப்பொதுமையை, முன் வந்த சிறப்புப்பெயரும், பின்வந்த சிறப்புவினையும், நீக்கி ஒவ்வோரிடத்தை யுணர்த்தின.

(4) வாழ்க அவன், அவள், அவர், அது, அவை, யான், யாம், நீ, நீர் என வினைத்திணை பாலிடப்பொதுமையைப், பின்வந்த சிறப்புப்பெயர்கள், நீக்கி ஒரு திணையையும் பாலையும் இடத்தையும் உணர்த்தின. பிறவு மன்ன.

எச்சமனைத்திற்கு முடிபுகூறுஞ் சூத்திரம் யாது?

பெயர்வினை யும்மைசொற் பிரிப்பென வொழியிசை

எதிர்மறை யிசையெனுஞ் சொல்லொழி பொன்பதுங்

குறிப்புந் தத்த மெச்சங் கொள்ளும்.

(பெயர் வினை உம்மை சொற் பிரிப்பு என ஒழியிசை

எதிர்மறை இசை எனும் சொல்லொழிபு ஒன்பதும்

குறிப்பும் தத்தம் எச்சம் கொள்ளும்.)

**இ—ள்.:—** பெயரெச்சமும் வினையெச்சமும் உம்மையெச்சமும் சொல்லெச்சமும் பிரிநிலையெச்சமும் என வெச்சமும் ஒழியிசையெச்சமும் எதிர்மறையெச்சமும் இசையெச்சமும் என்னுஞ் சொல்லெச்சங்கள் ஒன்பதும் குறிப்பெச்சமொன்றும் தத்தமெச்சங்களைக் கொண்டு முடியும், **எ—று.**

எனவே எச்சம் எத்தனை வகைப்படும்?

சொல்லெச்சங் குறிப்பெச்சமென இரண்டு.

அவற்றுள் சொல்லெச்ச மெத்தனை?

"பெயர்வினை யும்மைசொற் பிரிப்பென வொழியிசை எதிர்மறை யிசையெனுஞ் சொல்லொழி பொன்பது."

குறிப்பெச்சம் எத்தனை?

குறிப்பெச்சம் ஒன்று.

இப்பத்தனுள் எத்தனை எச்சச்சொற்கள் வெளிப்பட்டு நிற்கும்?

இப்பத்தெச்சங்களுள்ளும், பெயரெச்சம் வினையெச்சம் என வெச்சமென்னும் மூன்றற்கும் எச்சச்சொற்கள் வாக்கியங்களில் வெளிப்பட்டு நிற்கும்; ஒழிந்தனவற்றிற்கு எச்சச்சொற்கள் வருவித்துரைக்கப்படும்.

தொகைநிலைத் தொடர்ச்சொல்லுக்கு இலக்கணம் கூறுஞ் சூத்திரம் யாது?

பெயரொடு பெயரும் வினையும் வேற்றுமை

முதலிய பொருளி னவற்றி னுருபிடை

ஒழிய விரண்டு முதலாத் தொடர்ந்தொரு

மொழிபோ னடப்பன தொகைநிலைத் தொடர்ச்சொல்.

(பெயரொடு பெயரும் வினையும் வேற்றுமை

முதலிய பொருளின் அவற்றின் உருபு இடை

ஒழிய இரண்டு முதலாத் தொடர்ந்து ஒரு

மொழிபோல் நடப்பன தொகைநிலைத் தொடர்ச்சொல்.)

**இ—ள்.:** பெயர்ச்சொல்லோடு பெயர்ச்சொல்லும், பெயர்ச்சொல்லோடு வினைச்சொல்லும் பின்சொல்லப்படும் வேற்றுமை முதலாகிய அறுவகைப் பொருட்புணர்ச்சிக்கண் அவற்றினுருபுகள் நடுவிலே தொக்குநிற்ப இரண்டுசொற்கள் முதலாகப் பலசொற்கள் தொடர்ந்து ஒருசொற்போல நடப்பவை தொகைநிலைத் தொடர்ச்சொற்களாம், **எ—று.**

தொகையாவது யாது?

தொகையாவது இரண்டும் பலவுமாகிய சொற்கள் ஒருசொல்லாக ஒட்டிநிற்கும் ஒட்டு.

**உ–ம்.** யானைக்கோடு–பெயரோடு பெயர்தொக்க இருமொழித் தொடர்.

நிலங்கடந்தான்–பெயரோடு பெயர்தொக்க இருமொழித் தொடர்.

கற்சுனைக்குவளையிதழ்–பன்மொழித்தொடர்.

தொகையாவது யாது?

தொகையாவது இரண்டும் பலவுமாகிய சொற்கள் ஒருசொல்லாக ஒட்டிநிற்கும் ஒட்டு.

**உ–ம்.** யானைக்கோடு–பெயரோடு பெயர்தொக்க இருமொழித் தொடர்.

நிலங்கடந்தான்–பெயரோடு பெயர்தொக்க இருமொழித் தொடர்.

கற்சுனைக்குவளையிதழ்–பன்மொழித்தொடர்.

அத்தொகை எத்தனை வகைப்படும்?

வேற்றுமை வினைபண் புவமை யும்மை
அன்மொழி யெனவத் தொகையா றாகும்.

(வேற்றுமை வினை பண்பு உவமை உம்மை
அன்மொழி என அத்தொகை ஆறு ஆகும்.)

**இ–ள்.:** வேற்றுமைத்தெகையும் வினைத்தொகையும் பண்புத் தொகையும் உவமைத்தொகையும் உம்மைத்தொகையும் அன்மொழித்தொகையுமென முன்னே சொல்லப்பட்ட தொகைநிலைத் தொடர்மொழிகள் ஆறுவகைப்படும், **எ–று.**

வேற்றுமைத்தொகையாவது யாது?

இரண்டு முதலா மிடையா றுருபும்
வெளிப்பட லில்லது வேற்றுமைத் தொகையே.

(இரண்டு முதல் ஆம் இடை ஆறு உருபும்
வெளிப்படல் இல்லது வேற்றுமைத் தொகையே.)

**இ–ள்.:** இரண்டாவது முதலிய ஆறு வேற்றுமை யுருபுகளும் இடையே வெளிப்படுதல் இல்லாத தொடர்மொழி வேற்றுமைத்தொகையாம், **எ–று.**

**(வரலாறு)**

நிலங்கடந்தான், குழைக்காது– இரண்டாம்வேற்றுமைத்தொகை.

தலைவணங்கினான், பொற்குடம் – மூன்றாம்வேற்றுமைத்தொகை.

சாத்தன்மைந்தன், கருப்புவேலி – நான்காம்வேற்றுமைத்தொகை.

ஊர்நீங்கினான், வரைபாய்தல் – ஐந்தாம்வேற்றுமைத்தொகை.

சாத்தன்கை, கொற்றனுணர்வு – ஆறாம்வேற்றுமைத்தொகை.;

குன்றக்கூகை, மாரிமா – ஏழாம்வேற்றுமைத்தொகை.

இவை எவ்வாறு விரிக்கப்படும்?

நிலத்தைக்கடந்தான் குழையையுடையகாது, தலையால் வணங்கினான்

பொன்னாலரயகுடம், சாத்தனுக்குமைந்தன் கரும்புக்குவேலி, ஊரினீங்கினான் வரையிற்பாய்தல், சாத்தனதுகை கொற்றனதுணர்வு, குன்றத்துக்கட்கூகை மாரிக்கணுளதாம் மா என முறையே விரிக்கப்படும்.

இடையே தொக்கதனைத் தொகைநிலைத்தொட ரென்றமையானே, கடந்தானிலம் இருந்தான் குன்றத்து என இறுதிக்கட்டொக்கு நிற்பனவு முளவாதலின் அவை தொகைநிலைத்தொடராகாவோ?

நிலங்கடந்தான் குன்றத்திருந்தான் என்பன ஒரோவழி இங்ஙனம் மாறிக் கூறப்படுமாயினும் அவையும் இடைக்கட்டொக்க தொகைநிலைத் தொடரேயாமென்க. ஐயுங் கண்ணுமே யன்றி ஏனையுருபுகள் இறுதிக்கட் டொகுமாறில்லை யென்பது முணர்க.

வேற்றுமையுருபுகள் இடையிலே தொகுமென்றாராயினும் அவை விரிந்துநிற்குமிடத்து எப்பொருள் படுமோ அப்பொருள்படுமிடத்தே தொக்குநிற்கப்பெறும்; அப்பொருள்படாவிடத்தே தொக்குநிற்கப்பெறாவாம்.

வினைத்தொகை யிதுவெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

காலங் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை.

(காலம் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை.)

**இ–ள்.:** காலங்காட்டும் இடைநிலையும் ஈறும் குறைந்து வினைமுதன்மாத்திரம் நின்று தொடர்ந்த பெயரெச்சத்தொடர் வினைத்தொகையாம், எ–று.

வினைத்தொகைக்கும் பெயரெச்சத்திற்கும் தம்முள் வேற்றுமை யாது?

காலமும் வினையுந் தோன்றிப் பால் தோன்றாது பெயர்கொள்ளுஞ்சொல் பெயரெச்சம். வினைச்சொற்கும் வினைப்பெயர்க்கும் முதனிலையாய் உண் தின் செல் என வினைமாத்திரமுணர்த்தி முக்காலத்திற்கும் பொதுமையுடைய வாய்ப் பெயர்கொள்ளுஞ் சொல் வினைத்தொகையாம். இதுவே தம்முள் வேற்றுமையாம்.

அற்றேல் வினைத்தொகையைப் பெயரெச்சமெனல் கூடாதோ?

வினைத்தொகை விரிக்கப்படுமிடத்துப் பெயரெச்சப் பொருளவாய் வருவனவே யன்றி அவைதாம் பெயரெச்சமாகாமையின் அவற்றைப் பெயரெச்சம் எனல் கூடாது. அதுபற்றயே "காலங் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை" யெனப்பட்டதாமென்க.

காலமென்றது ஆகுபெயர். இடைநிலை முதலியன தொகுமெனவே, முதனிலைமாத்திரந் தொகாதிருக்குமென்பது பெற்றாம்.

**வ–று.:–**

ஆடரங்கு, செய்குன்று, புணர்பொழுது, அரிவாள், கொல்யானை, செல்செலவு என வரும்.

இவை நேற்று ஆடரங்கு இன்று ஆடரங்கு நாளை ஆடரங்கு என முக்காலத்தின் கண்ணுஞ் செல்லும் பொதுமையுடையன. இவை தொகைக்கணன்றிப் பிரித்தவழித் தனித்துநின்று காலமுணர்த்தாவாம்.

இவை, ஆடிய, ஆடுகின்ற, ஆடும் எனவும், செய்த, செய்கின்ற, செய்யும் எனவும், பொருள் விரிக்கப்படும்.

வருபுனல், தருசுடர், நடந்திடுகுதிரை என வினைப்பகுதி விகாரப்பட்டும் வினைத்தொகை வரும்.

பண்புத்தொகை யிலக்கணம் கூறுஞ் சூத்திரம் யாது?

பண்பை விளக்கு மொழிதொக் கனவும்

ஒருபொருட் கிருபெயர் வந்தவும் குணத்தொகை. கச

(பண்பை விளக்கும் மொழி தொக்கனவும்

ஒருபொருட்கு இருபெயர் வந்தவும் குணத்தொகை.)

**இ—ள்.:** பண்பை விளக்குஞ் சொல் தொக்குநின்ற தொடர்களும் ஒருபொருளுக்குப் பொதுப்பெயருஞ் சிறப்புப் பெயருமாகிய இருபெயர்கள் வந்தவையும் பண்புத்தொகைகளாம்.

பண்பை விளக்குஞ்சொல் தொகுதலாவது யாது?

பண்பை விளக்குஞ் சொல் தொகுதலாவது கருமை செம்மை முதலியனவற்றிற்கெல்லாம் முதனிலையாய்ச், சொல்லாய் நிரம்பாது கரு செவ்வென நிற்பதாம்.

பண்பெனப் பொதுப்படச் சொன்னதனால், வண்ணம், வடிவு. அளவு, சுவை முதலாயினவை யெல்லாங்கொள்க.

**(வரலாறு)**

செந்தாமரை, கருங்குதிரை – வண்ணப்பண்புத்தொகை.

வட்டக்கல் சதுரப்பலகை – வடிவுப்பண்புத்தொகை.

ஒருபொருள், முக்குணம் – அளவுப்பண்புத்தொகை.

துவர்க்காய், இன்சொல் – சுவைப்பண்புத்தொகை.

ஆயன்சாத்தன், சாரைப்பாம்பு – இருபெயரொட்டுப் பண்புத்தொகை.

செவ்விதாகிய தாமரை, கரிதாகிய குதிரை, வட்டவடிவினதாகிய கல், சதுரவடிவினதாகிய பலகை, ஒருமையினதாகிய பொருள், துவர்ப்பினதாகிய காய், ஆயனாகிய சாத்தன் என விவை பொருள் விரிக்கப்படும். இவ்வாறன்றிச் செம்மையாகிய தாமரை, கருமையாகிய குதிரை என விரிப்பின் செம்மை என்பது ஒருதாமரையும் கருமை என்பது ஒரு குதிரையு மாதல் வேண்டும். அங்ஙனமாகாமையின் செவ்விதாகிய குதிரையெனவே பொருள் விரிக்கப்படுதல் வேண்டுதமென்க.

உவமத்தொகை யிலக்கணங் கூறுஞ் சூத்திரம் யாது?

உவம வுருபில துவமத் தொகையே.

(உவம உருபு இலது உவமத்தொகையே.)

**இ—ள்.:** வினை பயன் மெய் உரு என்பவற்றைப்பற்றி வரும் உவமவுருபுகள் தொக்க தொடர்மொழிகள் உவமத்தொகைகளாம்.

**(வரலாறு)**

புலிக்கொற்றன், குருவிகூப்பிட்டான் – வினையுவமத்தொகை.

மழைக்கை, கற்பகவள்ளல் – பயனுவமத்தொகை.

துடியிடை, குவளைக்கண் – மெய்யுவமத்தொகை.

பொற்சுணங்கு, பவளவாய் – உருவுவமத்தொகை.

இவை, விரியுமிடத்துப், புலிபோலுங்கொற்றன், மழைபோலுங்கை துடிபோலுமிடை, பொன்போலுஞ்சுணங்கு என விரியும். செயப்படுபொருள் குறித்தவிடத்துப், புலியைப்போலுங் கொற்றன் என ஐயுருபும் உடன் விரியும்.

உவமவுருபுகள் இவையெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

போலப் புரைய வொப்ப வுறழ

மானக் கடுப்ப வியைய வேய்ப்ப

நேர நிகர வன்ன வின்ன

என்பவும் பிறவு முவமத் துருபே.

(போலப் புரைய ஒப்ப உறழ மானக் கடுப்ப இயைய ஏய்ப்ப

நேர நிகர அன்ன இன்ன

என்பவும் பிறவும் உவமத்துருபே.)

இ–ள்.:– இப்போல முதலாகிய செயவெனெச்சம் பத்தும் அன்ன இன்ன என்னும் பெயரெச்சக் குறிப்பிரண்டும் இவை போல்வன பிறவும் உவமை யுருபுகளாம். எ–று.

பிறவென்றதனால், போல், புரை, பொருவ, ஏற்ப, அனைய, இகல, எதிர, சிவண, மலைய முதலானவையுங் கொள்க.

உம்மைத்தொகை யிலக்கணக்கணங் கூறுஞ் சூத்திரம் யாது?

எண்ண லெடுத்தன் முகத்த னீட்டல்

எனுநான் களவையு ளும்மில தத்தொகை.

(எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல்

எனும் நான்கு அளவையுள் உம் இலது அத்தொகை.)

இ–ள்.:– எண்ணலளவை எடுத்தலளவை முகத்தலளவை நீட்டலளவை யென்னும் நால்வகை யளவைகளாற் பொருள்களை அளக்குமிடத்துத் தொடரும் அவ்வளவைப்பெயர்களுள் உம் என்னும் இடைச்சொல் தொக்குநிற்பவை அவ்வும்மைத் தொகைச் சொற்களாம், எ–று.

(வரலாறு)

ஒன்றேகால், கபிலபரணர் – எண்ணலும்மைத்தொகை.

கழஞ்சேகால், தொடியேகஃசு – எடுத்தலும்மைத்தொகை.

கலனே தூணி, நாழியாழாக்கு – முகத்தலும்மைத்தொகை.

சாணங்குலம், சாணரை – நீட்டலும்மைத்தொகை

சேரசோழபாண்டியர், புலிவிற்கெண்டை – பன்மொழித்தொடர்.

இவை, விரியுமிடத்து, ஒன்றுங் காலும், கபிலனும் பரணனும், கழஞ்சுங் காலும், தொடியுங் கஃசும், கலனுந் தூணியும், நாழியும் ஆழாக்கும், சாணு மங்குலமும், சாணும் அரையும், சேரனுஞ் சோழனும் பாண்டியனும், புலியும் வில்லும் கெண்டையும் என விரியும்.

கபிலபரணர்ப் பரவினான் என வரும்வழிக், கபிலனையும் பரணனையும் பரவினான் என வேற்றுமை யுருபும் உடன்விரியு மன்றோ , எனின், பரவினானென்னும் வருமொழிநோக்கி வேற்றுமைத் தொகையாகவும், கபிலபரணரென்னு நிலைமொழி யிரண்டையுநோக்கி உம்மைத்தொகையாகவும் கொள்ளப்படு மென்க.

வேற்றுமைத்தொகை முதலாயின இரண்டிறந்த பலசொல்லாற் றொகுதல் சிறுபான்மை எனவும், உம்மைத்தொகை இரு சொல்லாலும் பலசொல்லாலும் தொகுமெனவுங்கொள்க

அன்மொழித்தொகை யிதுவெனக்கூறுஞ் சூத்திரம் யாது?

ஐந்தொகை மொழிமேற் பிறதொக லன்மொழி.

(ஐந்தொகை மொழிமேல் பிறதொகல் அன்மொழி.)

**இ–ள்.:–** வேற்றுமைத்தொகை முதலிய ஐவகைத் தொகைநிலைத் தொடர்மொழிகளுக்கும் புறத்தே அவையல்லாத பிறமொழிகள் தொகுதல் அன்மொழித்தொகையாம், **எ–று.**

(1) பூங்குழல் என்பது இரண்டாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. இது பூவையுடைய குழலினையுடையாள் என விரியும்.

பொற்றொடி என்பது மூன்றாம் வேற்மைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது பொன்னாலாகிய தொடியினையுடையாள் என விரியும்.

கவியிலக்கணம் என்பது நான்காம் வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது கவிக்கிலக்கணஞ் சொல்லப்பட்ட நூல் என விரியும்.

பொற்றாலி என்பது ஐந்தாம் வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது பொன்னினாகிய தாலியினையுடையாள் என விரியும்.

கிள்ளிகுடி என்பது ஆறாம்வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது கிள்ளியினது குடியிருக்குமூர் என விரியும்.

கீழ்வயிற்றுக் கழலை என்பது ஏழாம் வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது கீழ்வயிற்றின்கண் எழுந்த கழலை போல்வான் என விரியும்.

(2) தாழ்குழல் என்பது வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது தாழ்ந்த குழலினையுடையாள் என விரியும்.

(3) கருங்குழல் என்பது உவமத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை இது துடிபோலுமிடையினையுடையாள் என விரியும்.

(5) தகரஞாழல் என்பது உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது தகரமு ஞாழலுங் கலந்துண்டாகிய சாந்து என விரியும்.

தகரஞாழன்முலை என்பது பன்மொழித்தொடர். இது தகரமு ஞாழலுங் கூடியுண்டாகிய சாந்தை யணிந்த முலையினை யுடையாள் என விரியும்.

இனிப் பன்மொழித் தொடரில் அறுவகைத் தொகைகளுங் கலந்து தொகுமாறு:– திகழ்செவ்வான் மதித் திருமுகப் பூங்குழல் என வரும். இவை,

விரியுமிடத்துத், திகழ்ந்த செவ்விதாகிய வானத்தின்கண் மதிபோலுந் திருமுகத்தினையும் பூவையணிந்த குழலினையுமுடையாள் என விரியும்.

இதுகாறுங் கூறிய அறுவகைத் தொடர்ச்சொற்களும் ஒருசொன்னடையவா பலசொன்னடையவா?

ஒருசொல் தனித்துநின்று தன்னை முடிக்குஞ் சொற்களோடு முடியுமாறுபோல இரண்டும் பலவுமாகிய சொற்கள் அறுவகைப்பட்ட தொகை முறையாற் கூடி நின்று தம்மை முடிக்குஞ் சொற்களோடு முடிதலின் அவ்வறுவகைத் தொகைநிலைத் தொடர்ச்சொற்களும் ஒருசொன்னடையவாம்.

**உ—ம்.:—**

நிலங்கடந்தான் தந்தான், சேர சோழ பாண்டியர் வந்தார், பொற்றொடி சென்றாள் என வரும்.

அன்மொழித்தொகை இயல்பு யாது?

மற்ற ஐவகைத் தொகைச் சொற்களும் தம் பொருளை விடாது நின்றுணர்த்த அன்மொழித்தொகைச்சொன் மாத்திரம் தம் பொருளை யுணர்த்தாது தமக்குச் சம்பந்தமான மற்றொருபொருளை யுணர்த்தும். தம் பொருளை யுணர்த்தாது தமக்குச் சம்பந்தமான பொருளை யுணர்த்துஞ் சொற்கள், தனிமொழியேயாக இரண்டும் பலவுமாகிய தொகைமொழியேயாக அவையெல்லாம் ஆகுபெயராம். ஆதலின் அன்மொழித்தொகைச் சொல்லெல்லாம் என்னதொகை என்றவழி அன்மொழித்தொகை யெனவும், என்னபெயர் என்றவழி ஆகுபெயரெனவும் கூறப்படும்.

மேற்கூறிய அறுவகைத் தொகைக்கண்ணும் பொருள் மேற்பட்டுத் தோன்றுமிடங் கூறுஞ் சூத்திரம் யாது?

முன்மொழி பின்மொழி பன்பொழி புறமொழி
எனுநான் கிடத்துஞ் சிறக்குந் தொகைப்பொருள்.
(முன்மொழி பின்மொழி பன்மொழி புறமொழி
எனும் நான்கு இடத்தும் சிறக்கும் தொகைப்பொருள்)

**இ—ள்.:** முன்மொழியும் பின்மொழியும் அனைத்துமொழியும் அனைத்துமொழிக்கும் புறத்து வருமொழியும் என்று சொல்லப்படும் இந்நான்கிடங்களுள் ஒன்றிலே தொகைநிலைத் தொடர்ப்பொருள் சிறந்து நிற்கும், எ—று.

**(வரலாறு)**

(1) குடம் வனைந்தான், குழிசி வனைந்தான், வேங்கைப் பூ, சண்பகப்பூ, விரிபூ, குவிபூ, செந்தாமரை, வெண்டாமரை, வேற்கண், கயற்கண் என்பவைகளிலே குடமுதலிய முன்மொழிகள் இனம் விலக்கி நிற்றலால், அம்முன்மொழி களிற் பொருள் சிறந்தன.

(2) நிலமுழுதான், கண்ணிமை, நீர்க்குவளை, சுடுதீ, செஞ்ஞாயிறு என்பவைகளிலே, நிலமுதலிய முன்மொழிகள் இனமும் இனத்தை

விலக்குதலுமின்றி நிற்றலால், உழுதான் முதலிய பின்மொழிகளிற் பொருள் சிறந்தன.

(3) கபிலபரணர், சேர சோழ பாண்டியர், புலிவிற்கெண்டை என்றற்றொடக்கத்தும்மைத் தொகைகளிலே, அனைத்துமொழிகளிலும் பொருள்சிறந்தன.

(4) பூங்குழல், உயிர்மெய் என்றற்றொடக்கத் தன்மொழித்தொகைகளிலே, சொல்லுவோனுடைய கருத்து இவ்விருமொழிப் பொருண்மேலதாகாது இவ்விருமொழியு மல்லாத உடையான் முதலிய புறமொழிப்பொருண் மேலதாதலால், அப்புறமொழிகளிற் பொருள் சிறந்தன.

இடத்தொகை பெயர்த்தொகைகளுக்குக் குறியீடு கூறுஞ் சூத்திரம் யாது.

வல்லொற்று வரினே யிடத்தொகை யாகும்
மெல்லொற்று வரினே பெயர்த்தொகை யாரும்.

(வல்லொற்று வரினே இடத்தொகை ஆகும்
மெல்லொற்று வரினே பெயர்த்தொகை ஆகும்.)

**இ–ள்.:–** வல்லொற்றானது இடையே வந்தால் இடத்தின்கண்ணே தொக்க தொகையாகும். மெல்லொற்றானது இடையே வந்தாற் பெயரின்கண்ணே தொக்க தொகையாகும்.

**வ–று.:–**

(1) வடுகக்கண்ணன்; இது வடுகநாட்டிற்பிறந்த கண்ணன் என விரியும். வடுகங்கண்ணன் இது வடுகனாகிய கண்ணன் என்றாயினும், வடுகனுக்கு மகனாகிய கண்ணன் என்றாயினும் விரியும்.

(2) துளுவச்சாத்தன்; இது துளுவநாட்டிற் பிறந்த சாத்தன் என விரியும். துளுவஞ்சாத்தன் இது துளுவனாகிய சாத்தன் என்றாயினும், துளுவனுக்கு மகனாகிய சாத்தன் என்றாயினும் விரியும்.

வடுகக்கண்ணனென்னும் இடத்தொகை "மவ்வீறொற்றழிந்து" என்னுஞ் சூத்திரவிதியாலும் "இயல்பினும் விதியினும்" என்னுஞ் சூத்திரவிதியாலும் புணர்ந்தது. வடுகங்கண்ணனென்னும் பெயர்த்தொகை "சில விகாரமா முயர்திணை" என்னும் விதியாற் புணர்ந்தது.

வல்லொற்றுவரின் மெல்லொற்றுவரின் என்றதனால், வல்லின முதன்மொழி வந்து புணர்ந்து இடத்தொகையும் பெயர்த் தொகையுமாய் ஐயுறநிற்கும்போது இக்குறியினாலே துணியப்படுமென்பதும், வடுகநாதன், வடுகவணிகன், வடுகவரசன் எனவரிற் சொல்லுவான் குறிப்பாலன்றி இவ்வாறு துணியப்படாவென்பதுந் தாமே போதருமென்க.

உம்மைத்தொகைக்கண் உயர்திணை இவ்வீற்றான் முடிதல்வேண்டுமெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

உயர்திணை யும்மைத் தொகைபல ரீறே.

(உயர்திணை யும்மைத்தொகை பலர் ஈறே.)

**இ—ள்.:** உயர்திணையொருமையில் வரும் உம்மைத்தொகைகளானவை ரவ்வொற்றுங் கள்ளுமாகிய பலர்பால் விகுதியையுடையனவேயாம். எ—று.

வ—று.:—

கபிலபரணர், கல்லாடமாமூலர், சேரசோழபாண்டியர், தேவன்றேவிகள் எனவரும். னகரவீறு இடையே கெடுதல் "சில விகாரமா முயர்திணை" என்பதனாலும், இறுதிக்கட்கெடுதல் இதுனுட் "பலரீறே" என்பதனாலுங் கொள்க.

இச்சூத்திரக்கருத்து யாது?

கபிலபரணர் வந்தார்; கபிலன் பாணன் என்னும் உம்மைத் தொகை சந்தியால் கபிலபரணன் என நின்று பன்மை வினைகொண்டு முடியவேண்டு தலின் ஆண்டுநின்ற ஒருமையீறு பன்மையோடு முடிதல் வழுவென்று கருதி னகர வீறு ரகர வீறாய் நிற்குமென வழுவமைத்தபடியாம்.

பலரீறே என்னுந் தேற்றத்தால், அஃறிணை யொருமையில் வரும் உம்மைத்தொகைகளும் பொதுத்திணை யொருமையில் வரும் உம்மைத்தொகைகளுந் தத்தம் பன்மையீறாகவே வரல் வேண்டு மென்னும் நியதியின்றி, உண்மையின்மைகள், உண்மையின்மை, இராப்பகல்கள், இராப்பகல் எனவும், தந்தைதாயார், தந்தைதாய்கள், தந்தைதாய்; சாத்தன் சாத்தியர், சாத்தன் சாத்திகள், சாத்தன்சாத்தி எனவும், பன்மை யீற்றாலும் இயல்பாய் ஒருமையீற்றாலும் வருமென்பதாயிற்று.

மேற்கூறிய தொடர்மொழிகள் ஒருபொருளவாய் நிற்றலேயன் றிப் பலபொருளவாயும் நிற்குமெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

தொக்குழி மயங்குந விரண்டு முதலேழ்
எல்லைப் பொருளின் மயங்கு மென்ப.

(தொக்குழி மயங்குந இரண்டு முதல் ஏழ் எல்லைப் பொருளின் மயங்கும் என்ப.)

**இ—ள்.:** வேற்றுமையுருபு முதலாகிய உருபுகள் தொக்குநின்றவழிப் பொருள்களினாலே மயங்குந் தன்மையனவாகிய தொடர்மொழிகள் இரண்டுமுதல் ஏழீறாகிய பொருள்களால் மயங்கும் என்று சொல்லுவர் புலவர், **எ—று.**

**(வரலாறு)**

(1) தெய்வவணக்கம் என்பது, தெய்வத்தை வணங்கும் வணக்கம், தெய்வத்துக்கு வணக்கம் என இருபொருள்களி னாலே மயங்கியது.

(2) தற்சேர்ந்தார் என்பது, தன்னைச்சேர்ந்தார், தன்னொடு சேர்ந்தார், தன்கட்சேர்ந்தார் என மூன்று பொருள்களினாலே மயங்கியது.

(3) சொல்லிலக்கணம் என்பது, சொல்லின் திலக்கணம், சொற்கிலக்கணம், சொல்லின்கணிலக்கணம், சொல்லின திலக்கணஞ் சொன்னநூல் என நான்கு பொருள்களினாலே மயங்கியது.

(4) பொன்மணி என்பது, பொன்னாலாகிய மணி, பொன்னாகிய மணி, பொன்னின்கண் மணி, பொன்னொடு சேர்ந்த மணி. பொன்னுமணியும் என ஐந்துபொருள்களி னாலே மயங்கியது.

(5) மரவேலி என்பது, மரத்தைக்காக்கும் வேலி, மரத்திற்கு வேலி, மரத்ினது வேலி, மரத்தின் புறத்து வேலி. மரத்தாலாகிய வேலி, மரமாகிய வேலி என ஆறுபொருள்களி னாலே மயங்கியது.

(6) சொற்பொருள் என்பது, சொல்லாலறியப்படும் பொருள், சொல்லினது பொருள், சொற்குப்பொருள், சொல்லின்கட் பொருள், சொல்லும் பொருளும், சொல்லாகிய பொருள், சொல்லானது பொருள் என ஏழு பொருள்களினாலே மயங்கியது. சொல்லானது பொருளென்றது தொகாநிலைப் பொருளாகிய எழுவாய்த் தொடர்.

(7) புலி கொல் யானை என்னும் பன்மொழித்தொடர், புலியைக் கொன்ற யானை, புலியானது கொன்ற யானை, புலியினாலே கொல்லப்பட்ட யானை என மூன்று பொருள்களினாலே மயங்கியது.

இவ்வாறு செம்பொருள்கொள்ளாது வலிந்து பொருள் கொள்ளப்புகின், ஏழெல்லையென்னும் வரையறையினில்லாது பலவாமாதலின், அது தொன்னெறியன் றென்பது விளங்குதற்கு 'என்ப' என்றார்.

தொகாநிலைத்தொடர்மொழி இவையெனக்

கூறுஞ் சூத்திரம் யாது?

முற்றீ ரெச்ச மெழுவாய் விளிப்பொருள்

ஆறுரு பிடையுரி யடுக்கிவை தொகாநிலை.

(முற்று ஈரெச்சம் எழுவாய் விளிப்பொருள்

ஆறு உருபு இடை உரி அடுக்கு இவை தொகாநிலை.)

**இ–ள்.:** வினைமுற்றும் பெயரெச்சமும் வினையெச்சமும் எழுவாயும் விளியுமாகிய ஐவகைப் பொருள்களிலே பெயர் வினைகள் புணரும் புணர்ச்சியும் வேற்றுமைப்பொருள்களில் அவற்றினுருபுகளாகிய இரண்டாவது முதலிய ஆறுருபுகளும் இடையே விரிந்து நிற்கப் பெயர்வினைகள் புணரும் புணர்ச்சியும் இடைச்சொற்புணர்ச்சியும் உரிச்சொற்புணர்ச்சியும் ஒருசொல்லடுக்கி வரும் புணர்ச்சியுமாகிய இவ்வொன்பதுந் தொகாநிலைத் தொடர்மொழிகளாம், **எ–று.**

**(வரலாறு)**

(1) உண்டான் சாத்தன் – வினைமுற்றுத்தொடர்.

குழையன் கொற்றன் "

(2) உண்ட சாத்தன் – பெயரெச்சத்தொடர்.

கரிய சாத்தன் "

(3) உண்டு வந்தான் – வினையெச்சத்தொடர்.

உழுதன்றி யுண்ணான் – "

(4) சாத்தன் வந்தான்..............................எழுவாய்த்தொடர்.

(5) சாத்தா வா...............................விளித்தொடர்.

(6) குடத்தை வனைந்தான். – வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்.

வாளால் வெட்டினான்.

இரப்போர்க் கீந்தான்.

மலையினிழிந்தான்.

சாத்தனது கை.

மணியின்கணொளி.

(7) மற்றொன்று..............................இடைச்சொற்றொடர்.

(8) நனிபேதையே.......................உரிச்சொற்றொடர்.

(9) பாம்பு பாம்பு..............................அடுக்குத்தொடர்.

வேற்றுமைத்தொகை விரிந்தவிடத்து வேற்றுமைத்தொகாநிலைத் தொடராம். வேற்றுமையுருபும் பொருளும் உடன்றொக்க தொகை விரிந்தவிடத்து, முன்னது வேற்றுமைத் தொகா நிலைத்தொடரும், பின்னது பெயரெச்சத் தொகாநிலைத் தொடருமாம். (கைக்களிறு–கையையுடைய களிறு என விரியும். கையையுடைய என்பது வேற்றுமைத் தொகா நிலை. உடையகளிறு பெயரெச்சத் தொகாநிலைத்தொடர்.) வினைத்தொகை விரிந்தவிடத்துப் பெயரெச்சத் தொகாநிலைத் தொடராம். பண்புத்தொகையும் உம்மைத்தொகையும் விரிந்த விடத்து, இடைச்சொற்றொடராம். உவமத்தொகை விரிந்தவிடத்து, முன்னது இடைச்சொற்றொடரும், பின்னது இடைச்சொல்லடியாகப் பிறந்த பெயரெச்ச வினையெச்சத் தொடருமாம். அன்மொழித்தொகை விரிந்தவிடத்து வேற்றுமைத் தொகாநிலைத் தொடர் முதலேற்பனவாம்.

வழு இவை யென்பதும் இத்தனை யென்பதுங் கூறுஞ் சூத்திரம் யாது?

திணையே பாலிடம் பொழுது வினாவிறை
மரபா மேழு மயங்கினாம் வழுவே.

(திணையே பால் இடம் பொழுது வினா இறை
மரபு ஆம் ஏழும் மயங்கின் ஆம் வழுவே.)

**இ–ள்.**:– இருதிணையும் ஐம்பாலும் மூவிடமும் முக்காலமும் வினாவும் விடையும் பலவகை மரபுகளும் ஆகிய ஏழும் தத்தம் நெறி மயங்கின் வழுவாம், **எ–று.**

**(வரலாறு)**

(1) அவன் வந்தது..............................திணைவழு.

(2) அவன் வந்தாள்.....................பால்வழு.

(3) யான் வந்தான்..................................இடவழு.

(4) நாளை வந்தான்..................................காலவழு.

(5) கறக்கின்றவெருமை பாலோ சினையோ?..........வினாவழு.

(6) கடம்பூர்க்கு வழி யாது? எனின், இடத்துள்ளது என் கன்றன்று என்பது – விடைவழு.

(7) யானை மேய்ப்பானை இடையன், ஆடு மேய்ப்பானைப் பாகன் என்பன – மரபுவழு.

இவ்வாறே எழுவகை வழுக்களையு முணர்ந்து, வழக்கினுள்ளுஞ் செய்யுளுள்ளும் அவை வராமல் நீக்குக.

மரபாவது தொன்றுதொட்டு வழங்கு முறைமை.

திணையின்கண்ணும் பாலின்கண்ணும் ஐயநிகழுமிடத்து இவ்வாறு கூறுகவெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

ஐயந் திணைபா லவ்வப் பொதுவினும்

மெய்தெரி பொருண்மே லன்மையும் விளம்புப.

(ஐயம் திணை பால் அவ்வப் பொதுவினும் மெய் தெரி பொருண்மேல் அன்மையும் விளம்புப.)

**இ–ள்.:–** திணைஐயத்தையும் பால்ஐயத்தையும் அவ்வவற்றின் பொதுச்சொல்லாலும் துணிந்த பொருண்மேல் அல்லாத தன்மையை வைத்தும் சொல்லுவர் புலவர், **எ–று.**

பொதுவென்றது எவற்றை?

பொதுவென்றது உருமுதலிய பொதுச்சொல்லையும் அவ்வத்திணைப் பன்மையையுமென வுணர்க.

ஐயப்பொருளாவது யாது?

ஐயப்பொருளாவது சிறப்பியல்பாற்றோன்றாது பொதுவியல் பாற்றோன்றிய பொருள்.

திணைபால்களின் கண் ஐயம் வருமிடத்து எவ்வாறு சொல்லுதல் வேண்டும்?

"ஐயந் திணை பால் அவ்வப் பொதுவின் விளம்புப."

திணைபாலில் ஐயுற்றபோது துணிந்தபொருள் ஒன்றாயின் எவ்வாறு சொல்லுதல் வேண்டும்?

"மெய் தெரி பொருண்மேல் அன்மை விளம்புப."

**(வரலாறு)**

வினா. (1) ஒருபொணாருளைக் கண்டவிடத்துக் குற்றியோ மகனோ என்று திணையில் ஐயந்தோன்றியபோது, குற்றியோ மகனோ அவ்விடத்துத் தோன்றுகின்ற வுரு எனப் பொதுச் சொல்லால் வினாவுக. குற்றிக்கும் மகனுக்கும் உருப் பொதுப்பட நிற்றலால், உருப் பொதுச்சொல்லாயிற்று. (குற்றி–மரக்கட்டை). இங்கே உருவின் பரியாயமெல்லாங் கொள்க. இங்ஙனங் கூறாது, தோன்றாநின்றது, தோன்றாநின்றான் எனச் சிறப்புச் சொல்லாற் கூறிற் றிணைவழுவும் வினாவழுவுமாம்.

(2) ஆண்மகனோ பெண்மகளோ என உயர்திணையிற் பாலையந் தோன்றியபோது, ஆண்மகனோ பெண்மகளோ அங்கேதோன்றுகிறவர் எனப் பன்மைச் சொல்லால் வினாவுக. இங்ஙனங் கூறாது, தோன்றுகிறவன், தோன்றுகிறவள் எனச் சிறப்புச்சொல்லாற் கூறிற் பால் வழுவும் வினாவழுவுமாம்.

(3) ஒன்றோ பலவோ என அஃறிணையிற் பாலையந் தோன்றியபோது, ஒன்றோ பலவோ இச்செய்புக்கன எனப் பன்மையாலும், ஒன்றோ பலவோ இவ்வயல்புக்கவுரு, ஒன்றோ பலவோ இச்செய்புக்க பெற்றம் எனப் பொதுச்சொல்லாலும் வினாவுக, உரு பெற்றமென்பன பால்பகாவஃறிணைப்பெயராய் அத்திணையிருபாற்கும் பொதுப்பட நிற்றலாற் பொதுச் சொல்லாயின. (செய்–வயல். பெற்றமென்பது பசுவுங் காளையும்.) இங்ஙனங் கூறாவிடத்துப் பால்வழுவும் வினாவழுவுமாம்.

ஒருமையாற் கூறின் வழுப்படுதல் நோக்கிப் "பொதுவினும் விளம்புப" வென வழாநிலைபோலக் கூறினாரேனும் ஒருமையைப் பன்மையாற் கூறுதலும் வழுவாதலின் ஐயப் பொருண் மேற் சொல் நிகழுமா றுணர்த்துமுகத்தாற் பால் வழுவவமைத்தவாறாம்.

விடை. (1) குற்றியோ மகனோ என்றையுற்றபோது, துணிந்த பொருள் குற்றியெனின், மகனன்று எனவும், மகனெனிற் குற்றியல்லன் எனவும், துணிந்த பொருண்மேல் மற்றொன்றல்லாத தன்மையை வைத்துக் கூறுக.

(2) ஆண்மகனோ பெண்மகளோ என்றையுற்றபோது, துணிந்த பொருள் ஆண்மகனெனின், பெண்மகளல்லன் எனவும், பெண்மகளெனின், ஆண்மகனல்லள் எனவும், துணிந்த பொருண்மேல் மற்றொன்றல்லாத தன்மையை வைத்துக் கூறுக.

(3) ஒன்றோ பலவோ என்றையுற்றபோது, துணிந்த பொருள் ஒன்றெனின், பலவன்று எனவும், பலவெனின், ஒன்றல்ல எனவும், துணிந்த பொருண்மேல் மற்றொன்றல்லாத தன்மையை வைத்துக் கூறுக.

குற்றியல்லன் என்புழிக் குற்றியென்பது அல்லனென்னுஞ்சொல் லோடு எவ்வாறியையும்?

குற்றியென்பது அல்லன் என்பதன் அன்மையோடு இயைந்து தானும் எழுவாயாகவே நிற்கும். யான் நீ யல்லேன் என்புழி நீ என்பதும் இவ்வாறு முடிதல் காண்க. இவ்வகை எழுவாய் இயைபெழுவாயெனப்படும்.

மகனல்லன் அவ்வுருக்குற்றி எனக் கூறிற் சொற் பல்குதலென்னும் விடை வழுவாம்.

அஃறிணைச்சொற்கள் உயர்திணை முடிபுகொள்ளல் வழுவேயாயினும் இவ்வாறுவரின் தழுவுகவெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

உயர்திணை தொடர்ந்த பொருண்முத லாறும்

அதனொடு சார்த்தி னத்திணை முடிபின.

(உயர் திணை தொடர்ந்த பொருள் முதல் ஆறும்

அதனொடு சார்த்தின் அத்திணை முடிபின.)

**இ—ள்.:—** உயர்திணை யெழுவாயைத் தொடர்ந்த அஃறிணைப் பொருளாதியாறும் அவ்வுயர்திணையோடு சேர்த்து முடிக்கின் அவ்வுயர்திணை முடிபினவாம், **எ—று.**

தொடர்தலாவது அஃறிணைப்பொருளாதியாறும், உயர்திணைக்குக் கிழிமைப்பொருள்களாய் நிற்றல். சார்த்தலாவது உயர்திணையெழுவாயின் பயனிலையோடு அஃறிணையெழுவாயையும் உடன் முடித்தல்.

**வ—று.:—**

நம்பி பொன் பெரியன் – இங்கே உயர்திணையெழுவாயின் பயனிலையோடு அஃறிணை யெழுவாயு முடிந்ததறிக.

நம்பி நாடு பெரியன் "

நம்பி வாழ்நாள் பெரியன்

நம்பி மூக்குக் கூரியன்

நம்பி குடிமை கல்லன்

நம்பி நடை கடியன் ”

“சொற்றோறு மிற்றிதன்பெற்றி” என்பதனாலே, கிணறு நீருறிற்று, மாடு கோடு கூரிது என அஃறிணையோடு சேர்ப்பின், அஃறிணை முடிபினவாதலுங் கொள்க.

சார்த்தின் என்றமையாற் கொள்ளக்கிடப்பது யாது?

சார்த்தாவிடின் வழாநிலையாக அவ்வஃறிணைச்சொற்கள் தமக்குரிய முடிபே கொள்ளுமென்பது?

**உ–ம்.:–**

நம்பிக்குப் பொன் பெரிது, நம்பிக்கு மூக்கு நல்லது எனவரும்.

பொன்னென்னும் அஃறிணை யெழுவாய், நம்பி யென்னும் உயர்திணை யெழுவாயினது பயனிலையாகிய பெரியனென் னும் உயர்திணை வினையைக் கொண்டு முடிதலால் வழுவாகித், தொடர்புண்டாயிருத்தல் பற்றிச் சார்த்தி முடித்தலால் வழுவமைதியாயிற்று.

திணைகளும் பால்களும் பொருள்களும் கலந்து வரும்போது தத்தம் முடிபுகொள்ளாது ஒருமுடிபு கொள்ளலுமுண்டென ஏதுக்கூறுஞ் சூத்திரம் யாது?

திணைபால் பொருள்பல விரவின சிறப்பினும்

மிகவினு மிழிபினு மொருமுடி பினவே.

(திணை பால் பொருள் பல விரவின சிறப்பினும்

மிகவினும் இழிபினும் ஒருமுடிபினவே.)

**இ–ள்.:** திணை பால் பொருள் பல விரவின – திணைகளும் பால்களும் வெவ்வேறு வினைக்குரிய பல பொருள்களும் தத்தமிற் கலந்து ஒருதொடராக வருவனவாயின் அவை, சிறப்பினும் மிகவினும் இழிபினும் ஒரு முடிபின – சிறப்பினாலும் மிகுதியினாலும் இழிவினாலும் ஒரு முடிவினவாகும், **எ–று.**

அவை ஒருமுடிபினவாதற்கு ஏதுக்கள் யாவை?

சிறப்பு மிகவு இழிபு.

**(வரலாறு)**

திணை:– (1) “அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்குந் – திங்களுஞ் சான்றோரு மொப்பர்மற் – றிங்கண் – மறுவாற்றஞ் சான்றோரஃ தாற்றார் தெருமந்து – தேய்வ ரொருமா சுறின்” என்புழி, இருதிணையுங் கலந்து, சிறப்பினால் **‘ஒப்பர்’** என்னும் உயர்திணைமுடிபைப் பெற்றன. சான்றோர் திங்கள் போல மறுத் தாங்கமாட்டாமை இங்கே சிறப்பு.

(2) “பார்ப்பார் தவரே சுமந்தார் பிணிப்பட்டார்–மூத்தா ரிளையார் பசுப்பெண்டி ரென்றிவர்கட்–காற்ற வழி விலங்கினாரே பிறப்பிடைப் – போற்றி யெனப்படுவார்” என்புழி, இரு திணையுங் கலந்து, மிகுதியால் ‘இவர்கள்’ என்னும் உயர்திணை முடிபைப் பெற்றன. பசுவென அஃறிணைப்பொருள் ஒன்றேயாகப், பார்ப்பார் முதலிய உயர்திணைப்பொருள் எழாதல் இங்கே மிகுதி.

(3) “மூர்க்கனு முதலையுங் கொண்டதுவிடா” என்புழி, இருதிணையுங் கலந்து, இழிவினால் ‘விடா’ என அஃறிணை முடிபைப் பெற்றன.

பால்: "நானுமென் சிந்தையு நாயகனுக் கெவ்விடத்தோந்–தானுந்தன் றையலுந் தாழ்சடையோ னாண்டிலனேல்–வானுந் திசைகளு மாகடலு மாயபிரான்–றேனுந்து சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ" என்புழி, ஆண்பாலும் பெண்பாலுங் கலந்து, சிறப்பினால் 'ஆண்டிலன்' என ஆண்பான்முடிபைப் பெற்றன. பெண்ணினும் ஆண் உயர்ந்தமை இங்கே சிறப்பு.

"சொற்றொறு மிற்றிதன் பெற்றி" என்பதனாலே கலவாதெண்ணித், தோழனுந் தானும் வந்தான், தோழியுந் தானும் வந்தாள் என முடிதலுங் கொள்க.

மரபு: கறியுஞ் சோறுமுண்டான்; மாலையு முடியும் கவித்தான் என்புழி, வேறுவினைப் பல்பொருள்கள் கலந்து; சிறப்பினால் 'உண்டான்' 'கவித்தான்' என ஒருபொருட்குரிய வினை முடிபைப் பெற்றன. உண்டலென்னும் வினைக்குரிய சோறு தின்றலென்னும் வினைக்குரிய கறியினுந் தலைமை யுடைமையும், கவித்தலென்னும் வினைக்குரிய முடி சூடுதலென்னும் வினைக்குரிய மாலையினுந் தலைமை யுடைமையும் இங்கே சிறப்பு.

இங்கே இறுதியிற் சொல்லிய மரபுவழுவமைதி "வேறுவினைப் பல்பொரு டழுவிய பொதுச்சொல்லும்–வேறவற் றெண்ணு மோர் பொதுவினை வேண்டும்" என்னுஞ் சூத்திரத்தோடு மாறுகொளக் கூறலன்றோவெனின், சிறப்பு முதலிய குறியாது ஒத்த நிலைமையில் எண்ணியபோது முடியு மரபு அங்கே கூறுதலால், அதற்கு இது மாறுகொளக் கூறலன்றென்க.

இன்ன வின்னவிடத்துப் பால் திணைகள் வழுவிவரினும் தள்ளாது அமைத்துக்கொள்ளுக வெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

உவப்பினு முயர்வினுஞ் சிறப்பினுஞ் செறலினும்
இழிப்பினும் பாறிணை யிழுக்கினு மியல்வே.

(உவப்பினும் உயர்வினும் சிறப்பினும் செறலினும்
இழிப்பினும் பால் திணை இழுக்கினும் இயல்பே.)

**இ–ள்.:–** மகிழ்ச்சியின்கண்ணும் மேன்மையின்கண்ணும் சிறப்பின்கண்ணும் கோபத்தின்கண்ணும் பழிப்பின்கண்ணும் பாலுந்திணையும் வழுவிவரினும் இயல்பாம், **எ–று.**

இழுக்கினும் இயல்பே என்பதனாற் கொள்ளக்கிடப்பது யாது?

வழுவென்று கடியாது கொள்ளுக வென்பது.

**(வரலாறு)**

**பால்:–**

(1) தன்புதல்வனை என்னம்மை வந்தாள் என்பது உவப்பின்கண் ஆண்பால் பெண்பாலாயிற்று.

(2) ஒருவனை அவர்வந்தார் என்பது உயர்வின்கண் ஒருமைப்பால் பன்மைப்பாலாயிற்று.

(3) "தாதாய் மூவேழுலகுக்குந் தாயே" என்பது சிறப்பின்கண் ஆண்பால் பெண்பாலாயிற்று.

(4) "எனைத்துணைய ராயினு மென்னாந் தினைத்துணையுந்–தேரான் பிறனில் புகல்" என்பது செறலின்கட் பன்மைப்பால் ஒருமைப்பாலாயிற்று.

(5) பெண்வழிச் செல்வானை நோக்கி 'இவன் பெண்' என்பது இழிப்பின்கண் ஆண்பால் பெண்பாலாயிற்று.

**திணை:** (1) ஓர்பசுவை, 'என்னம்மை வந்தாள்' என்பது உவப்பின் கண் அஃறிணை உயர்திணையாயிற்று.

(2) "செந்தார்ப் பசுங்கிளியார் சென்றார்க்கோ ரின்னுரை– தந்தாரேற்றந்தாரென் னின்னுயிர்" என்பது உயர்வின்கண் அஃறிணை உயர்திணையாயிற்று.

(3) "தம்பொரு ளென்பதம் மக்கள்" என்பது சிறப்பின்கண் உயர்திணை அஃறிணையாயிற்று.

(4) "ஏவவுஞ் செய்கலான் றான்றேரா னவ்வுயிர்–போஒமளவு மோர் நோய்" என்பது செறலின்கண் உயர்திணை அஃறிணையாயிற்று.

(5) நாமரனுடைமை என்பது இழிப்பின்கண் உயர்திணை அஃறிணையாயிற்று.

இனிச் "சொற்றொறு மிற்றிதன் பெற்றி" என்பதனாலே, புதல்வனை அப்பன்வந்தான் என்றும், புதல்வியை அம்மைவந்தாள் என்றும், வழங்கு மரபுவழுவமைதிகளுங் கொள்க.

ஒருமை பன்மைகளும் இடங்களும் மயங்கி வருதலு முண்டெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

ஒருமையிற் பன்மையும் பன்மையி னொருமையும்
ஓரிடம் பிறவிடந் தழுவலு முளவே.

(ஒருமையின் பன்மையும் பன்மையின் ஒருமையும்
ஓரிடம் பிறவிடம் தழுவலும் உளவே)

**இ–ள்.:** ஒருமைப்பாவிற் பன்மைப்பாற் சொல்லையும் பன்மைப் பாலில் ஒருமைப்பாற் சொல்லையும் ஓரிடத்திற் பிறவிடச் சொல்லையும் தழுவிக் கூறுதல்களும் உளவாம். **எ–று.**

**(வரலாறு)**

**பால்.**

(1) "அஃதை தந்தை யண்ணல்யானை யடுபோர்ச்செழியர்" என்புழி, உயர்திணையிலே தந்தையென்னும் ஒருமைப்பாலிற் செழியன் என நிற்றற்குரியவிடத்தே செரியரென்னும் பன்மைச்சொற் சேர்த்துச் சொல்லப்பட்டது. அஃதை தந்தை அஃதைக்குத்தந்தையென விரியும். (அஃதைபென்பது திக்கற்றவன் திக்கற்றவள் திக்கற்றது என உயர்திணை யாணொருமை பெண்ணொரமை அஃறிணையொருமைகளில் விரவி நிற்பதோர் பொதுச்சொல்.) தந்தையென்னு மொருமையிற் செழியரெனப் பன்மைவந்ததுவழு; தனித்தனி யொவ்வொருவராகக் கூடிச் செழியரென நின்ற பன்மையில், ஒவ்வொருவருந் தனித்தனி அஃதைக்குத்தந்தைபோல் வாராதலால். வழுவமைதியாயிற்று. நீர் பரந்தன, பால்சுரந்தன என வருவனவும் ஒருமையிற் பன்மை.

(2) இரண்டுகண்ணுஞ் சிவந்தது என்புழி, அஃறிணையிலே இரண்டென்னும் பன்மைப்பாலிற் சிவந்ததென்னும் ஒருமைச் சொற்சேர்த்துச் சொல்லப்பட்டது. "ஏவ்லிளையர் தாய்வயிறு கரிப்ப" என்புழி, உயர்திணையிலே

எவவிளையரென்னும் பன்மைப்பாலிற் றாயென்னும் ஒரமைச்சொற்சேர்த்துச சொல்லப்பட்டது. (எவலிளையர் - போர்புரிவீரர்.) எவலிளையர் தாய் எவலிளையருக்குத் தாயென விரியும். சேனைமுழுமையு முள்ள இளையருக்குத் தாய் ஒருத்தியாதல் கூடாமையால், இங்கே தாயென ஒருமைருதல் வழு; இச்சேனையிலே திரண்டுநின்ற இளையருள் ஒவ்வொருவருக்குந் தாயெனத் தனித்தனி சென்றியைதலால், வழுவமைதியாயிற்று. நாடெல்லாம்வந்தது, படைவந்தது என வருவனவும் பன்மையினொருமை.

ஒருமை நிற்றற்குரியவிடத்தே பன்மைவருதல் பகுதி கருதியவிடத்தும், பன்மை நிற்றற்குரியவிடத்தே ஒருமைவருதல் தொகுதி கருதியவிடத்துமாம்.

இனிமேனியெல்லாம் மாசு பூத்தது என்புழி, எல்லாம் என்பது. எஞ்சாப்பொருட்கண் வந்தமையின் ஒருமையிற் பன்மையன்று. அது வழாநிலை.

நாடெல்லாம் என்பதற்கும் மேனியெல்லாம் என்பதற்கும் தம்முள் வேற்றுமை யாது?

நாடெல்லாம் என்பது நாடுகள் எல்லாம் எனப் பொருள்படும். மேனியெல்லாமென்பது மேனிமுழுவதுமெனப் பொருள்படும்.

இடம்:

(1) சாத்தன்றாயிவை செய்வலோ என்புழி, யானெனச் சொல்லல்வேண்டுந் தன்மையிலே சாத்தன்றாயெனப் படர்க்கைச்சொற் சேர்த்துச் சொல்லப்பட்டது. சாத்தன் றாயாகிய யான் என்பது பொருள்.

(2) "திண்பொரு ளெய்தலாகுந் தெவ்வரைச் செகுக்கலாகு-நண்பொடு பெண்டிர் மக்கள் யாவையு நண்ணலாகு-மொண் பொருளாவதையா வுடன்பிறப் பாக்கலாகா-வெம்பியை யீங்குப்பெற்றே னென்னெனக் கரியதென்றான்" என்புழி, தன்றம்பியை முன்னிலைப்படுத்து அவனையே நோக்கிக் கூறுதலால், நின்னையெனச் சொல்லல்வேண்டும் முன்னிலையிலே எம்பியையெனப் படர்க்கைச்சொற்சேர்த்துச் சொல்லப்பட்டது.

நீயோவவனோ யாரிதுசெய்தார்; யானோவவனோ யாரிதுசெய்தார்; நீயோயானோ யாரிதுசெய்தார்; நீயோவவனோ யானோ யாரிதுசெய்தார் என விரவி ஒரிடத்திற் பிறவிடம் வருதலுங் கொள்க

.படர்க்கைக்குரிய சில சொற்களுட் சில ஏனையிடத்தும் வருமெனக்கூறுஞ் சூத்திரம் யாது?

தரல்வரல் கொடைசெலல் சாரும் படர்க்கை

எழுவா யிரண்டு மெஞ்சிய வேற்கும்.

(தரல் வரல் கொடை செலல் சாரும் படர்க்கை எழுவாய் இரண்டும் எஞ்சிய ஏற்கும்.)

**இ-ள்.:-** தரல் என்பது முதலிய இந்நான்கு சொற்களையும் படர்க்கையடையும்; இவற்றுள் முதலிவேநின்ற தரல் வரல் என்னும் இரண்டு சொற்களையும் ஒழிந்த தன்மை முன்னிலைகள் எற்கும். எ-று.

தரல் வரல் கொடை செலவென்பன அவ்வப்பகுதிகளை யுணர்த்தி நின்றனவாதலால், அப்பகுதிகளாற் பிறக்கும் வினைவிகற்படங்களனைத்துங் கொள்க.

**வ–று.:–**

அவனுக்குத்தந்தான்; அவனிடத்துவந்தான்; அவனுக்குக் கொடுத்தான்; அவனிடத்துச்சென்றான். எனவும், எனக்குத்தந்தான்; என்னிடத்துவந்தான். எனவும், உனக்குத்தந்தான்; உன்னிடத்துவந்தான். எனவும் வரும்.

தரல் வரலென்னு மிரண்டையுந் தன்மை முன்னிலைக்குங் கூட்டினமையாற் படர்க்கைக்கே சிறந்தன கொடை செலலென்னுமிரண்டுமென்பதும், ஒழிந்த தரலும் வரலும் அத்துணைச் சிறப்பினவல்லவென்பதும் பெற்றாம்.

முக்காலமு மிவையெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

இறப்பெதிர்வு நிகர்வெனக் கால முன்றே.

(இறப்பு எதிர்வு நிகழ்வு எனக் காலம் முன்றே.)

**இ–ள்.:** முன்சொல்லப்பட்ட காலம் இறந்தகாலமும் எதிர்காலமும் நிகழ்காலமுமென மூன்றாம். **எ–று.**

காலமாவது யாது?

தொழில்நிகழ்ச்சிக்கு இடமாதற்றன்மையையுடையது காலமாம்.

இறந்தகாலமாவது யாது?

தொழிலினது கழிவுணர்த்துவது.

எதிர்காலமாவது யாது?

தொழில் பிறவாமையுணர்த்துவது.

நிகர்காலமாவது யாது?

தொழில் முற்றுப்பெறாதநிலை யுணர்த்துவது.

நிகழ்காலத்தாற் சொல்லப்படும் பொருள் ஏனைக்காலங்களையு முணர்த்துமென்பது கூறுஞ் சூத்திரம் யாது?

முக்கா லத்தினு மொத்தியல் பொருளைச்
செப்புவர் நிகழுங் காலத் தானே.

(முக்காலத்தினும் ஒத்து இயல் பொருளைச் செப்புவர் நிகழும் காலத்தானே.)

**இ–ள்.:–** தந்தொழிலிடையறாமல் மூன்றுகாலங்களிலும் ஒருதன்மையை யுடையனவாய் நிகழும் பொருள்களை நிகழ்காலத்தினாற் சொல்லுவர் புலவர். **எ–று.**

நிகழ்காலச்சொல்லென்றாரேனும் இறந்தகாலத்தையும் எதிர்காலத்தையும் அகப்படுத்தி மூன்றுகாலத்திற்கும் பொதுவாய் நிற்குஞ் செய்யுமென்னும் முற்றும் எச்சமுமே கொள்க.

**வ–று.:–**

மலைநிற்கும், தீச்சுடும், ஞாயிறியங்கும், "வெங்கதிர்க் கனலியொடு மதிவலந் திரிதருந் தண்கடல் வரைப்பின்" என வரும். தீச்சுடுமென்றாற் பண்டும் இன்றும் மேலுஞ் சுடுமென்பதனை ஒப்பவிளக்கியவாறு காண்க. இதனால் ஏனை நிகழ் காலச்சொற்கள் பொருந்தாமையுணர்க.

முக்காலமும் இன்னவேதுக்களாற் பிறழவும் பெறுமெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

விரைவினு மிகவினுந் தெளிவினு மியல்பினும்

பிறழவும் பெறூஉமுக் காலமு மேற்புழி.

(விரைவினும் மிகவினும் தெளிவினும் இயல்பினும் பிறழவும் பெறூஉம் முக்காலமும் ஏற்புழி.)

**இ—ள்.:** விரைவினாலும் மிகுதியினாலும் தெளிவினாலும் இயல்பினாலும் மூன்றுகாலங்களும் ஒன்று மற்றொன்றாகச் சொல்லப்படவும் பெறும் ஏற்குமிடத்து. **எ—று.**

விரைவாவது யாது?

தொழில் முடியுமுன்னே அதனை உடன்முடிக்கக் கருதி மேற்கொள்ளு மூக்கம்.

**வ—று.:—**

(1) சோறு வேவாநிற்க அதனையுண்டுபோதற்கிருப்பானை விரைவில் உடன்கொண்டுபோகவேண்டிய மற்றொருவன் பார்த்து இன்னும் உண்டிலையோ என்றால், உண்டேனுண்டேன் என்பான். உண்ணாநிற்பானை அவ்வாறு வினாவினாலும், உண்டேனுண்டேன் என்பான். இங்கே விரைவுபற்றி எதிர்காலமும் நிகழ்காலமும் இறந்தகாலமாகச் சொல்லப்பட்டன.

மிகவாவது யாது?

மிகவு என்பது புண்ணியபாவங்கண்மேற் செல்லு மூக்கம்.

(புண்ணியபாவங்கள் எல்லாச் செயல்களுள்ளும் மிக்க னவாதலின் மிகவெனப்பட்டன.)

(2) யாவன் தவஞ்செய்தமான் அவன் சுவர்க்கம்புகும், யாவன் தாயைக்கொன்றான் அவன் நிரயம்புகும் எனவும், ஒருவன் தவஞ்செயிற் சுவர்க்கம்புகும், தாயைக்கொல்லின் நிரயம்புகும், எனவுஞ் சுட்டி யொருவர்பெயர் கொள்ளாது பொதுவகையாற் கூறியவழி மிகுதிபற்றி இறப்பமெதிர்வும் நிகழ்வொடு மயங்கும்.

தெளிவாவது யாது?

நூலுணர்ச்சியாற் பெறுந் துணிவு.

(3) எறும்பு முட்டைகொண்டு திட்டையேறியது கண்டுழி மழை பெய்யுமென்னாது மழைபெய்தது மழைபெய்கின்றது எனத் தெளிவுபற்றி எதிர்வு இறப்போடும் நிகழ்வோடும்மயங்கும்.

இயல்பாவது யாது?

பலகானும் அநுபவத்தாற் கண்ட துணிவு.

(4) இக்காட்டிற்புகிற் கூறைபறிகொடுத்தான், பறிகொடுக்கிறான் என இயல்புபற்றிய பறிகொடுப்பான் என்னும் எதிர்வு இறப்போடும் நிகழ்வோடும் மயங்கும்.

இரட்டுறமொழிதலால் இயல்பு என்பதற்கு வேறு பொருளும் கொள்ளப்படுமோ?

ஆம். காரணமின்றிய வழக்கு எனவும் பொருள் கொள்ளப்படும்.

(5) இவர் பண்டிப்பொழிலகத்து விளையாடுவர்; நாளை அவன் வாளோடு வெகுண்டுவந்தான் பின் நீ யென்செய்குவை என இறந்தகாலமு மெதிர்காலமும் காரணமின்றி மயங்கின. பிறவுமன்ன.

வினா இத்தனை என்பதும் வழுவமைதியுங் கூறுஞ் சூத்திரம் யாது?

அறிவறி யாமை யையுறல் கொளல் கொடை

எவறரும் வினா வாறு மிழுக்கார்.

(அறிவு அறியாமை ஐயுறல் கொளல் கொடை எவல் தரும் வினா ஆறும் இழுக்கார்.)

**இ—ள்.:—** அறிதலும் அறியாமையும் சந்தேகித்தலும் கொள்ளுதலும் கொடுத்தலும் ஏவுதலுமாகிய அறுவகைப்பொருளையும் தருதலால் வரும் வினாக்கள் ஆறனையுங்களையாது கொள்வர் புலவர். **எ—று.**

அறிவினாவாவது யாது?

தானறிந்ததைப் பிறர்க்குணர்த்துதல் முதலிய காரணங்களால் வினாவுதல் அறிவினாவாம்.

அறியாவினாவாவது யாது?

தான் அறியாத ஒன்றை அறிந்தான்பால் வினாவுதல் அறியாவினா.

ஐயவினாவாவது யாது?

துணிவுபிறவாத பொருளின்மேல் வினாவுதல் ஐயவினா.

கொளல்வினாவாவது யாது?

உடையார்பால் ஒன்று பெறுமாறு வினாவுதல் கொளல்வினா.

கொடைவினாவாவது யாது?

குறைதீர்த்தற்கு வினாவும் வினா.

ஏவல்வினாவாவது யாது?

கருமம் முடிக்கத் தூண்டும்வினா ஏவல்வினாவாம்.

**வ—று.:—**

(1) ஆசிரியன் இச்சூத்திரத்திற்குப் பொருள் யாது என்பது அறிவினா.

(2) மாணாக்கன் அப்படிச் சொல்வது அறியாவினா.

(3) குற்றியோ மகனோ என்பது ஐயவினா.

(4) பொன்னுண்டோ வணிகீரே என்பது கொளல்வினா.

(5) சாத்தனுக்காடையில்லையா என்பது கொடைவினா.

(6) சாத்தாவுண்டாயா என்பது ஏவல்வினா.

விடைவகையும் வழுவமைதியுங் கூறுஞ்சூத்திரம் யாது?

சுட்டு மறைநே ரேவல் வினாதல்
உற்ற துரைத்த லுறுவது கூறல்
இனமொழி யெனுமெண் ணிறையு ளிறுதி
நிலவிய வைந்துமப் பொருண்மையி னேர்ப.

(சுட்டு மறை நேர் ஏவல் வினாதல் உற்றது உரைத்தல் உறுவது கூறல் இனமொழி எனும் எண்ணிரையுள் இறுதி நிலவிய ஐந்தும் அப்பொருண்மையின் நேர்ப.)

**இ—ள்.:—** சுட்டும் எதிர்மறுத்தலும் உடன்படலும் ஏவுதலும் எதிர் வினாவுதலும் உற்றதைச் சொல்லுதலும் உறுவதைச் சொல்லுதலும் இனத்தைச்சொல்லுதலும் என்னும் இவ்வெட்டுவிடைகளுள் ஈற்றில் விளங்கிய ஐந்தும் அவ்விடைப்பொருளைத்தருதலினாலே விடைகளாகவே தழுவிக் கொள்வார்புலவர்.

எனவே, முதன்மூன்றுஞ் செவ்வனிறையும், பின்னையவைந்தும் இறைபயப்பனவுமாமென்பதாயிற்று.

**வ—று.:—**

(1) தில்லைக்கு வழியாது எனின், இது என்பது சுட்டுவிடை. (2) சாத்தாவிதுசெய்வாயா என்றபோது, செய்யேனென்பது மறைவிடை.

(3) செய்வேனென்பது நேர்விடை.

(4) நீ செய் என்பது ஏவல்விடை.

(5) செய்வேனோ என்பது வினாவிடை.

(6) உடம்புநொந்தது, நோவா நின்றது என்பன உற்றதுரைத்தல்விடை.

(7) உடம்புநேரம் என்பது உறுவதுகூறல்விடை.

(8) மற்றையது செய்வேன் என்பது இனமொழிவிடை.

சினையு முதலுந் தம்முண் மயங்கிவ்ருதல் வழுவெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

வினாவிலுஞ் செப்பினும் விரவா சினைமுதல்.

(வினாவினும் செப்பினும் விரவா சினை முதல்.)

**இ—ள்.:—**வினாவுதற்கண்ணும் விடைகொடுத்தற்கண்ணும் சினையும்முதலும் ஒற்றுமைகருதி மயங்கச் சொல்லப்படாவாம்.

**வ—று.:—**

கண்பிறழ்ந்ததோ கயல்பிறழ்ந்ததோ; சாத்தனல்லனோ கொற்றனல்லனோ. எனவும், இவ்வாறு வினாவினார்க்குக், கண் பிறழ்ந்தது கயல்பிறழ்ந்தது; சாத்தனல்லன் கொற்ற னல்லன். எனவும் வரும். பிறவுமன்ன. எனவே, கண்பிறழ்ந்ததோ எனச் சினையை வினவுவான் அதனை யொழித்து அதனையுடையாளைக் கருதி இவள் பிறழ்ந்தாளோ கயல் பிறழ்ந்ததோ என வினவுதலும், அவள் பிறழ்ந்தாள் எனச் செப்புதலும், இவ்வாறு முதலை வினர்வுவானுஞ் செப்புவானும் அதனையொழித்துச் சினையை வினவுதலுஞ் செப்புதலும் வழுவாமென்பதாயிற்று.

இச்சூத்திரக்கருத்தென்னையெனின், சினைக்குஞ் சினைக்கும், முதலுக்கும் முதலுக்கும், ஒப்புமையும் மாறுபாடும் கருதி வினாவுமிடத்தும் விடையளிக்குமிடத்தும், சினையோடு முதலையும் முதலோடு சினையையு மயங்கவையாது அவ்வப்பொருளுக்கு அவ்வப்பொருளையே வைத்தல் வேண்டும் எனபதாம்.

இவள்கண்ணி னிவள்கண் பெரியவோ என வினாவின் இவள்கண் பெரியவென்றும், எம்மரசனையொக்குமோ நும்மரசன் என வின்வின் ஒவ்வான் என்றாயினும் ஒக்குமென்றாயினும் கூறல்வேண்டும். இவ்வாறன்றிக் கண்ணுக்குத் தோளையும் தோளுக்குக் கண்ணையும் எடுத்தல் வழுவாம்.

மரபிலக்கணங்கூறுஞ் சூத்திரம் யாது?

எப்பொரு ளெச்சொலி னெவ்வா றுயர்ந்தோர்
செப்பின ரப்படிச் செப்புதன் மரபே.

(எப்பொருள் எச்சொலின் எவ்வாறு உயர்ந்தோர் செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே.)

**இ–ள்.:** யாதொருபொருளை யாதொருசொல்லால் யாதொருவழியால் அறிவுடையோர்கள் சொன்னார்களோ அப்பொருளை அச்சொல்லால் அவ்வழியாற் சொல்லுதன் மரபாம்.

**வ–று.;–**

குதிரைக்குட்டி, யானைக்குட்டி, புலிக்குட்டி, எனவும், யானைக்கன்று, பசுக்கன்று, மான்கன்று. எனவும், யானையிலண்டம், ஆட்டுப்புழுக்கை, எருமைச்சாணம். எனவும் வரும். இப்படியன்றிப், பசுவின்குட்டி, குதிரைக்கன்று, யானைச்சாணம், எருமையிலண்டம் எனக் கூறின் மரபுவழுவாம்.

பொதுவினைவேண்டும் சொற்கள் இவையெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

வேறுவினைப் பல்பொரு டழுவிய பொதுச்சொலும்
வேறவற் றெண்ணுமோர் பொதுவினை வேண்டும்.

(வேறுவினைப் பல்பொருள் தழுவிய பொதுச்சொலும் வேறு அவற்று எண்ணும் ஓர் பொதுவினை வேண்டும்.)

**இ–ள்.:–** வெவ்வேறு வினைகளுக்குரிய பலபொருள்களையும் ஒருங்குதழுவி நிற்கும் பொதுச்சொல்லும், வேறுவினைப்பொதுச் சொல்லினது எண்ணும்மைத்தொடர்க்கண் வரும் சிறப்புச் சொற்களும் எல்லாவற்றிற்கு முரியதோர் பொதுவினையை வேண்டுவனவாம். **எ–று.**

வேறுவினைப் பலபொருடழுவிய பொதுச்சொல்லாவது யாது?

வேறுபட்ட வினையையுடைய பலபொருட்குப் பொதுவாகிய சொல். அவை அடிசில் அணி படை இய மென்னுந் தொடக்கததன.

வேறவற்றெண்ணாவது யாது?

வேறுவினைப் பொதுச்சொல்லினது சிறப்புச்சொற்களாய் இரண்டும் பலவுமா உம்மைத்தொடர்க்கண் வருவன. அவை சோறுங் கறியும், யாழுங்குழலும் என்னுந்தொடக்கத்தன.

இச்சூத்திரம் பொதுவினை வேண்டுமென விதித்தது யாது பற்றி?

ஒருச்சார்க்குரிய வினையாற் கூறின் வழுவாமாதலின் அவ்வழுநிகழாமற் காத்தற்கே பொதுவினை விதிக்கப்பட்ட தென்க.

**வ—று.:—**

(1) அடிசிலென்பது உண்பன நக்குவன பருகுவனவற்றிற் கெல்லாம் பொதுச்சொல்லாதலால, அடிசிலயின்றார், அடிசின் மிசைந்தாரென்க. அணியென்பது கவிப்பன கட்டுவன இடுவன தொடுவனவற்றிற் கெல்லாம் பொதுச்—சொல்லா தலால், அணியணிந்தார், அணிதாங்கினாரென்க. இயமென்பது கொட்டுவன ஊதுவனவற்றிற் கெல்லாம் பொதுச்சொல்லாதல், இயமியம்பினார், இயம்படுத்தாரென்க. படையென்பது எய்வன எறிவன வெட்டுவன குத்துவனவற்றிற் கெல்லாம் பொதுச்சொல்லாதலால், படை வழங்கினார் படை தொட்டாரென்க.

(2) சிலநாட் சோறுஞ் சிலநாண் மாவுஞ் சிலநாட் பாலுஞ் சிலர்ணீருஞ் சலநாட் சருகும் அயின்றார், அல்லது மிசைந்தாரென்க. முடியுங் குழையு மோதிரமு நெடுநாணு மணிந்தார்; பறையுங் குழலுமியம்பினார்; வாழும் வேலும் வழங்கினா ரென்க.

குறித்த பொருள் விளங்காமற்கூறல் மரபன்மையின் விளங்கக்கூறுகவெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

வினைசார் பினமிட மேவி விளங்காப்

பலபொருள் ளொருசொற் பணிப்பர்சிறப் பெடுத்தே.

(வினை சார்பு இனம் இடம் மேவி விளங்காப் பலபொருளொருசொல் பணிப்பர் சிறப்பு எடுத்தே.)

**இ—ள்.:** குறித்தபொருளை விளக்கும் வினையுஞ் சார்பும் இனமும் இடமும் பொருந்தி விளங்காத பலபொரு ளொருசொல்லைச் சிறப்புச் சொல்லோடு கூட்டிச் சொல்லுவர் புலவர்.

பலபொருளொருசொல்லை எத்தனை ஏதுக்களால் விளங்கக் கூறல்வேண்டும்?

வினை சார்பு இனம் இடம் எனு நான்கு ஏதுக்களால் விளங்கக் கூறல்வேண்டும்.

அந்நான்கேதுக்களாலும் விளங்காத பலபொருளொருசொல்லை எவ்வாறு கூறல்வேண்டும்?

"விளங்காப் பலபொரு ளொருசொற் பணிப்பர் சிறப்பெடுத்தே"

எனவே, வினைமுதலியவற்றுள் ஒன்றைப்பொருந்தி விளங்கிக்கிடந்த பலபொரு ளொருசொல்லை வாளாகூறுவ ரென்பதாயிற்று.

**வ—று.:—**

(1) மாவென்பது மாமரத்திற்கும் வண்டிற்கும் ஒருசார்விலங்கிற்குந் திருவிற்குந் பொதுவான பலபொருளொருெ சொல். இப்பொருள்களுள், மாப்பூத்தது, மாக்காய்த்தது என்றவழி, மரமென்பது வினையால் விளங்கிற்று. மாவீழ்மலர் என்றவழி, வண்டென்பது சார்பால் விளங்கிற்று. தேர்கரிமாக்காலாள்

என்றவழிக், குதிரையென்பது இனத்தால் விளங்கிற்று. மாமறுத்த மார்பன் என்றவழித், திருவென்பது இடத்தால் விளங்கிற்று. இவை வாளா கூறப்பட்டன.

(2) இனி, மாவேறினான், மாவியாது என்வரி பொதுமை நீங்கித் தெளியத்தோன்றாமையால், விளங்குதற்பொருட்டுப், பாய்மாவேறினான், மாமரமேறினான்; பாய்மாயாது மாமரம் யாது எனச் சிறிப்புச்சொல்லோடு கூட்டிக் கூறுக. பிறவு மன்ன.

புணர்ச்சியாற் சொல்லும் பொருளும் ஐயுறநிற்குந் தொடர்மொழிகள் இதனாற் றெளியப்படுமெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

எழுத்தறிய றிரியாப் பொருடிரி புணர்மொழி

இசைத்திரி பாற்றெளி வெய்து மென்ப.

(எழுத்து இயல் திரியாப் பொருள் திரி புணர்மொழி இசைத்திரிபால் தெளிவு எய்தும் என்ப.)

**இ–ள்.:–** எழுத்து இயல் திரியப் பொருள் திரி புணர்மொழி எழுத்தினது தன்மை வேறுபடாது பொருள் வேறுபட்டுச் சொல்லும் பொருளும் ஐயுறநிற்குந் தொடர்மொழிகள், இசைத்தி திரிபால்–குறிக்கப்பட்ட சொற்களினிறுதியும் முதலுந் தோன்ற இசையறுத்துச் சொல்லும் வேறுபாட்டினாலே, தெளிவு எய்தும் என்ப– துணியப்படும் என்று சொல்லுவர் புலவர். **எ–று.**

எனவே, அவ்வாறு இசையறுத்துக் கூறுதல் மரபென்பதாயிற்று.

**வ–று.:–**

செம்பொன்பதின்றொடி, நாகன்றேவன் போத்து, குன்றேறாமா, குறும்பரம்பு என வரும். இவை, செம்பொன்பதின்றொடி என இசையறுத்துக் கூறின். செம்பொன் பத்துப்பலம். எனவும், செம்–பொன்பதின்றொடி என இசையறுத்துக் கூறின் செம்பு ஒன்றபது பலம். எனவும், நாகன்–தேவன்–போத்து என இசையறுத்துக் கூறின், நாகனுந் தேனும் – போத்து என இசையறுத்துக் கூறின், நாகனுந் தேவனும் போத்தும். எனவும், நாகன்றே–வன்போத்து என இசையறுத்துக் கூறின், இளம்பெண்ணெருமையன்று முதிர்ந்த எருமைக்கடா. எனவும், குன்றேறா–மா என இசையறத்துக் கூறின், குன்றின் மேலேறாத விலங்கு. எனவும், குன்–றேறாமா என இசையறுத்துக்கூறின், குன்றின் மேலேறுங் காட்டுப்பசு. எனவும், குறும்ப–ரம்பு என இசையறுத்துக் கூறின், குறுநிலமன்னருடைய அம்பு. எனவும், குறும்–பரம்பு என இசையறுத்துக்கூறின், குறுமையாகிய கழனி திருத்தும்பலகை. எனவும், பொருடுணியக் கிடந்தமை காண்க.

ஒருபொருளைக் குறித்துவந்த பல பெயர்ச்சொற்கள் இறுதியில் ஒருவினையே பெறுமென்பதும், ஒரோவழிப் பெயர்தோறும் அவ்வொருவினையே வரவும் பெறுமென்பதுங் கூறும் சூத்திரம் யாது?

ஒருபொருண் மேற்பல பெயர்வரி னிறுதி

ஒருவினை கொடுப்ப தனியு மொரோவழி.

(ஒருபொருண்மேல் பல பெயர் வரின் இறுதி ஒருவினை கொடுப்ப தனியும் ஒரோவழி.)

**இ—ள்.:**— ஒருபொருள்மேல் பலபெயர் வரின்—ஒ்ருபொருளின் மேலே பலபெயர்கள் வருமாயின், இறுதி ஒருவினை கொப்ப—பொருளொன்றேயென்பது தோன்ற இறுதியில் ஒரு முடிக்குஞ்சொல்லைக் கொடுத்துக் கூறுவர், ஒரோவழித் தனியும் (கொடுப்ப)—ஒருபொருளாகுகை தவறாதவிடத்தே பெயர்தோறுங் கொடுத்துங் கூறுவர் புலவர். எ—று.

**வ—று.:**—

(1) ஆசிரியன் பேரூர்கிழான் சாத்தன் வந்தான். எனவும்,

"குயிலைச் சிலம்படிக் கொம்பினைத் தில்லையெங்
கூத்தப்பிரான்
கயிலைச் சிலம்பிற்பைம் பூம்புனங் காக்குங் கருங்கட்
செவ்வாய்
மயிலைச் சிலம்பகண் டியான்போய் வருவன் பண்பூங்கொடிகள்
பயிலச் சிலம்பெதிர் கூய்ப் பண்ணைகண்ணும்
பளிக்கறைக்கே."

எனவும், இவை, இறுதியிலே முறையே, வந்தான். எனவும், கண்டு. எனவும், ஒருமுடிக்குஞ் சொல்லைக் கொண்டன.

(2) "மூவர்கண் முதல்வன் வந்தான் முக்கணான் குமரன் வந்தான்—மேவலர் மடங்கல் வந்தான் வேற்படை வீரன் வந்தா—னேவருந் தெரித றேற்றா திருந்திடு மொருவன் வந்தான்—றேவர்க டேவன் வந்தா னென்றன சின்ன மெல்லாம்" என்புழி, முதல்வன், குமரன், மடங்கல், வீரன், ஒருவன், தேவன் என்பன முருகனென்னும் ஓர்பொருளேயென்பது தெளிய நின்றமை யினாலே. பெயர்தோறும் வந்தான் என ஒருவினை கொடுக்கப்பட்டமை காண்க.

ஒருபொருளுணர்த்து மிருபெயர்க்கு வழக்காறு கூறுஞ் சூத்திரம் யாது?

திணைநிலஞ் சாதி குடியே யுடைமை
குணந்தொழில் கல்வி சிறப்பாம் பெயரோ
டியற்பெய ரேற்றிடிற் பின்வால் சிறப்பே.

(திணை நிலம் சாதி குடியே உடைமை குணம் தொழில் கல்வி சிறப்பு ஆம் பெயரோடு இயற்பெயர் ஏற்றிடின் பின் வரல் சிறப்பே.)

**இ—ள்.:**— ஐந்திணையும் தேசமும் குலமும் குடியும் உடைமையும் குணமும் தொழிலும் வித்தையும் சிறப்பும் ஆகிய இவற்றைப்பற்றிவரும் பெயருடனே இயற்பெயரை அடுக்குமிடத்து அவ்வியற்பெயர் பின்வருதல் சிறந்த மரபாம். எ—று.

ஈண்டுச் சிறப்பு என்றது மன்னர் முதலாயினாராற் பெறும் எனாதி காவிதி முதலிய வரிசைப் பெயர்களை.

பின்வரல் சிறப்பே என்றதனால், முன்வரல் சிறப்பன்று என்பது, பெற்றாம்.

**(வரலாறு)**

| | |
|---|---|
| குன்றவன்கொற்றன் | திணை. |
| அருவாளனழகன் | நிலம். |
| பார்ப்பான் பாராயணன் | சாதி. |

| | |
|---|---|
| சேரமான் சேரலாதன் | குடி. |
| ஊர்கிழானோணன் | உடைமை. |
| கரியன் கம்பன் | குணம். |
| நாடகி நம்பி | தொழில். |
| ஆசிரிய னமிழ்தன் | கல்வி. |
| எனாதிநல்லுதடன் | சிறப்பு. |

இன்னும், இயற்பெயர் முன்வருமிடத்து, வைத்தியநாதநாவலன், கச்சியப்பப்புலவன் என இறுதிவிகாரமாகவருதலுங்காண்க.

சுட்டுப்பெயர்க்கு வழாநிலையிடமும் வழுவமைதியிடமும் வகுக்குஞ் சூத்திரம் யாது?

படர்க்கைமுப் பெயரோ டணையிற் சுட்டுப்
பெயர்பின் வரும்வினை யெனிற்பெயர்க் கெங்கும்
மருவும் வழக்கிடைச் செய்யுட் கேற்புழி.

(படர்க்கை முப்பெயரோடு சுட்டுப்பெயர் அணையின் பின் வரும்; வினை எனின் பெயர்க்கு எங்கும் மருவும் வழக்கிடை செய்யுட்கு ஏற்புழி.)

**இ–ள்.:**–படர்க்கையிடத்தையுடையஉயர்திணைப்பெயர் அஃறிணைப் பெயர் விரவுப்பெயர் என்னு மூவகைப்பெயர்களோடு சுட்டுப்பெயர் சேரின், அச்சுட்டுப்பெயர் அம்மூவகைப்பெயர்க்கும் பின்வரும். அவ்விடத்தே வினையாகிய முடிக்குஞ்சொல் வருமாயின். அம்முடிக்குஞ் சொல்லில்லையாயின் அப்பொருர்க்குப் பின்னுமுன்னும் வரும். இம்மரபு வழக்கத்தினிடத்தவாம்; செய்யு ளிடத்தே நியதியின்றி வேண்டியவாறே வரப்பெறும். **எ–று.**

படர்க்கை முப்பெயராவன யாவை?

உயர்திணைப்பெயர், அஃறிணைப்பெயர், விரவுப்பெயர்.

படர்க்கைமுப்பெயரைச்சார்ந்துவருஞ்சுட்டுப்பெயர் எங்கேவரும்?

"படர்க்கைமுப் பெயரோ டணையிற் சுட்டுப்பெயர் பின்வரும் வினையெனில் வழக்கிடை"

**வ–று.:–**

(1) நம்பிவந்தான் அவனுக்குச் சோறிடுக. எனவும், எருதுவந்தது அதற்குப் புல்லிடுக. எனவும், சாத்தன் றெய்வம் அவனுக்குப் பலியிடுக. எனவும், சாத்தன் வந்தது அதற்குப் புல்லிடுக. எனவும், வினைநிகழ்வழிச் சுட்டுப்பெயர் பின்வந்தன.

வினை நிகழாதவழிச் சுட்டுப்பெயர் பெயர்க்கு எவ்விடத்தே வரும்?

"பெயர்க் கெங்கும் மருவும் வழக்கிடை."

(2) நம்பியவன்; அவனம்பி எனப் பெயர்க்குப் பின்னு முன்னுஞ் சுட்டுப்பெயர் வந்தன.

செய்யுளிடத்து அஃது எங்கே வரும்?

"செய்யுட்கு ஏற்புழி"

(3) "அவனணங்கு நோய்செய்தா னாயிழாய் வேலன்–விறன்மிகுதார்ச் சேந்தனபேர் வாழ்த்தி முகனமர்ந்–தன்னையலர்க்டப்பந் தாரணியி

னென்னைகொல்–பின்னை யதன்கண் விழைவ" எனச் செய்யுளில் வினைவருவழியும் முன்வந்தது.

சுட்டுப்பெயர் செய்யுளிடத்துப் பின்வருதல் வழாநிலை; முன்வருதல் வழுவமைதி. வழக்கிடத்து வினைநிகழ்வழிப் பின்வருதல் வழாநிலை. ஒருசொல் பலமுறை யடுக்கிவருதற்கு அளவும் இடமுங் கூறுஞ் சூத்திரம் யாது?

அசைநிலை பொருணிலை யிசைநிறைக் கொருசொல்

இரண்டு மூன்றுநான் கெல்லைமுறை யடுக்கும்.

(அசைநிலை பொருணிலை இசைநிறைக்கு ஒருசொல் இரண்டு மூன்று நான்கு எல்லை முறை அடுக்கும்.)ல

**இ–ள்.:**– அசைநிலைக்கும் விரைவு வெகுளி உவகை அச்சம் அவல முதலிய பொருணிலைக்கும் இசைநிறைக்கும்ஒரு மொழி இரண்டு மூன்று நான்களவு முறையே அடுக்கும். **எ–று.**

எனவே, அசைநிலைக்கிரண்டும், பொருணிலைக்கிரண்டு மூன்றும், இசைநிறைக்கிரண்டும் மூன்றும் நான்கும் அடுக்குமென்பதாயிற்று.

**(வரலாறு)(1)** அன்றே யன்றே...............அசைநிலை.(2) உண்டேனுண்டேன், போ போ போ............விரைவு.(3) எய்யெய்; ஏற யெறி யெறி...........................வெகுளி.(4) வருக வருக; பொலிக பொலிக பொலிக..............உவகை.(5) பாம்பு பாம்பு; தீத்தீத்தீ.................................அச்சம்.(6) உய்யேனுய்யேன்; வாழேன் வாழேன் வாழேன் அவலம்.(7) ஏயே யம் பன் மொழிந்தனன் யாயே இசைநிறை.நல்குமே நல்குமே நல்குமே நாமகள்,பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ,ஒருசொல்லைப் பலகாற் சொல்லுதல் வழுவாயினும், இவ்விடத்தே ஆமென்றல் வழுவமைதியும், இதற்கு இவ்வெல்லை கடவா தென்றல் வழுவாமற் காத்தலுமாம்.

இரண்டடைச்சொற்கள் நின்றொலிக்கு முறைகூறுஞ் சூத்திரம் யாது?

இரட்டைக் கிளவி யிரட்டிற்பிரிந் திசையா.

(இரட்டைக்கிளவி இரட்டின் பிரிந்து இசைய.)

**இ–ள்.:** இரட்டைச்சொற்கள் அவ்விரட்டிப்பினின்றும் பிரிந்து தனித்தொலியாவாம். **எ–று.**

எனவே, வலிந்து பிரித்துக் கூறிற் பொருள்படாதென்பதும், இரட்டித்துக் கூறதலே மரபென்பதுமாயிற்று.

**வ–று.;–**

"சலசல மும்மதம் பொரிய"

"கலகல–கூந்துணையல்லால்";

"குறுகுறு நடந்து";

"வற்றியவோலை கலகலக்கும்";

"துடிதுடித்துத் துள்ளிவரும்" எனவரும். துடிதுடித்து என்புழிப், பின்னையது பிரிந்திசைக்குமாயினும், முன்னையது பிரிந்திசையாமல், இரட்டைச்சொல்லேயா மென்க.

ஒருபொருட்குப் பலபெயர் இன்னபடிவரின் கொள்கவென விதிக்குஞ் சூத்திரம் யாது?

ஒருபொருட் பல்பெயர் பிரிவில வரையார்.

(ஒருபொருட் பல்பெயர் பிரிவு இல வரையார்.)

**இ–ள்.:–** ஒருபொருளின்மேற் பலபெயர் சொல்லும்போது அப்பொருளினின்றும் பிரிதலில்லாதனவற்றை நீக்காது கொள்வர் புலவர். **எ–று.**

எனவே, பிரிவுள்ளனவற்றை நீக்குவரென்பதாயிற்று.

**வ–று.:–** ஆசிரியன் பேரூர்கிழான் சாத்தன்வந்தான்; பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி வந்தான் என்பன, பிரிவிலவாய்ப், பலபெயரும் ஒருபொருளின் மேற் சென்று, கேட்போர்க்குச் சொல்லுவோன் குறித்தபொருளை விளக்கிநின்றன.

பகையியல்பாயிலி படைக்கை மறவன்; எழுத்துணர்வில்லோ னிலக்கண நிறைகடல் எனவரிற், பகையியல்பாகவேயில்லாதவனைப் படைக்கைமறவ னென்றலும், எழுத்துணர்வில்லாதவனை இலக்கண நிறைகடலென்றலுங் கூடாமையாற் பிரிந்து வழுவாமென்க.

ஒரு பொருண்மேற் பலசொல்வழங்கல் வழுவேயாயினும் இன்ன வழிக்கொள்க எனக்கூறுஞ் சூத்திரம் யாது?

ஒருபொருட் பன்மொழி சிறப்பி னின்வழா.

(ஒருபொருட் பன்மொழி சிறப்பினின் வழா.)

**இ–ள்.:–** ஒருபொருளைக்குறித்து வரும் பலசொற்கள் அவ்வாறு வருதற்கோர் காரணமின்றாயினும் சிறந்து நிற்கையால் அவை வழுவென்று நீக்கப்படாவாம். **எ–று.**

சிறந்துநிற்றல் செவிக்குச் சொல்லின்பந்தோன்ற நிற்றல்.

**வ–று.;–**

மீமிசைஞாயிறு; புனிற்றிளங்கன்று; நாகிளநகமுகு; உயர்ந்தோங்கு பெருவரை; குழிந்தாழ்ந்தகண் எனவரும்.

முற்றும்மைவேண்டும் பொருளு மிடமுங் கூறுஞ் சூத்திரம் யாது?

இனைத்தென் றறிபொரு ளுலகி னிலாப்பொருள்

வினைப்படுத் துரைப்பி னும்மை வேண்டும்.

(இனைத்து என்று அறிபொருள் உலகின் இலாப்பொருள் வினை ப்படுத்து உரைப்பின் உம்மை வேண்டும்.)

இ–ள் இவ்வளவினதென்று வரையறையுணரப்படும் பொருளும் எக்காலத்தும் எவ்விடத்தும் இல்லாதபொருளும் வினைப்படுத்துச் சொல்லும்போது முற்றும்மையை வேண்டிநிற்கும். **எ–று.**

இனைத்தென்றறிபொருளாவது யாது?

கேட்போரான் இத்துணையதென்னும் வரையறையுடைபொருள்.

வ—று.:—

(1) தமிழ்நாட்டுமூவேந்தரும் வந்தார்; இறைவற்குக் கண் மூன்று முச்சுடர்; வேதநான்குமுணர்ந்தான் என இனைத் தென்றறிபொருள்கள், வினைப்படுத்துச் சொல்லும்போது, முற்றும்மை வேண்டிநின்றன.

(2)முயற்கோடு ஆகாயாப்பூவென்றுமில்லை; ஒளிமுன் னிருளெங்கு மில்லை என உலகினிலாப்பொருள்கள், வினைப்படுத்துச் சொல்லும்போது, முற்றும்மை வேண்டி நின்றன.

இவை உம்மைவேண்டிநிற்பது எப்போது?

வினைப்படுத்துரைக்கும்போதேயாம்.

வினைப்படுத்துவரையாவிடத்து எவ்வாறாம்?

அவை முற்றும்மைவேண்டா.

உ—ம். "பன்னிருதடந்தோள்"

"முத்தமிழ்" "ஐந்தலைநாகமுடன்றது." செயப்படுபொருள் கருத்தாவா வழங்கப்படுதல் வழுவேயாயினும் அமைக்கவெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

செயப்படு பொருளைச் செய்தது போலத்

தொழிற்படக் கிளத்தலும் வழக்கினு ளுரித்தே.

(செயப்படுபொருளைச் செய்ததுபோலத் தொழிற்படக் கிளத்தலும் வழக்கினுள் உரித்தே.)

இ—ள்.: செயப்படுபொருளைச் செய்த கருத்தாவைப்போல வைத்து அதன்மேல் அவ்வினைமுதல் வினையேற்றிக் கூறுதலும் வழக்கினிடத்துரித்தாம். எ—று.

வ—று.:—

இம்மாடியான்கொண்டது; இச்சோறியான்கொடுத்தது; இவ்வெழுத்தியானெழுதியது; திண்ணை மெழுகிற்று என வரும்.

கிளத்தலுமென்ற உம்மையாற் கொள்ளக்கிடப்பது யாது?

கிளத்தலும் என்ற உம்மையினாலே, கருமத்தைக் கருத்தாவாகக் கூறுதலேயன்றி, கருவி நிலஞ் செயல் காலங்களைக் கருத்தாவாகக் கூறுதலும் அமையுமென்பது பெற்றாம். அவைவருமாறு: — இவ்வெழுத்தாணி யானெழுதியது—கருவி; இவ்வீடியானிருந்தது—நிலம்; இத்தொழில் யான் செய்தது—செயல்; இந்நாள் யான்பிறந்தது—காலம் எனவரும்.

அடையடுத்துவருஞ் சொற்கள் இத்தனை வகையவெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

பொருண்முத லாறா மடைசேர் மொழியினம்

உள்ளவு மில்லவு மாமிரு வழக்கினும்.

(பொருள் முதல் ஆறு ஆம் அடை சேர் மொழி இனம் உள்ளவும் இல்லவும் ஆம் இருவழக்கினும்.)

இ—ள்.:— பொருளாதி ஆறாகிய அடைகளடுத்துவரும் மொழிகள் இனமுள்ளவையேயாமன்றி இனமில்லாதவையுமாம் உலக வழக்கினுள்ளுஞ் செய்யுள்வழக்கினுள்ளும். எ—று.

ஒன்றற்கு அடைகொடுத்துக் கூறுவது யாதுக்கு?

குறித்தபொருள் பொதுவிலக்கணத்தாற் றம்மினத்தோடு மயங்கி நில்லாது தனித்து விளங்குதற்கேயாம்.

இனமில்லாத பொருளுக்கு அடைகொடுத்தல் யாது பற்றி?

இனமில்லாத பொருளுக்கு அடைகொடுத்தல் அணிபற்றியும் அதனியல்புபற்றியுமாம்.

அடையினால் அடுக்கப்பட்டது அடைகொளியெனப்படும். அடையெனினும் விசேடணமெனினும் பொருந்தும். அடைகொளியெனினும் விசேடியமெனினும் பொருந்தும். இனச்சுட்டுள்ளவடை பிறிதினையுநீக்கிய விசேடணமெனவும், இனச்சுட்டில்லாவடை தன்னோடியைபின்னமைநீக்கிய விசேடணமெனவும் பெயர்பெறும்.

**(வரலாறு)**

| இனமுள்ளன. | இனமில்லன. |
|---|---|
| நெய்க்குடம் | உப்பளம்...............பொருள். |
| குளநெல் | ஊர்மன்று...............இடம். |
| கார்த்திகைவிளக்கு | நாளரும்பு...............காலம். |
| பூமரம் | இலைமரம்...............சினை. |
| செந்தாமரை | செம்போத்து...............குணம். |
| ஆடுபாம்பு | தோய்தயிர்...............தொழில். |

188. இனைத்தென்றறிபொருளாவது யாது?

கேட்போரான் இத்துணையதென்னும் வரையறையுடைய பொருள்.

**வ–று.** (க) தமிழ்நாட்டுமூவேந்தரும் வந்தார்; இறைவற்குக் கண்மூன்று முச்சுடர்; வேதநான்குமுணர்ந்தான் என இனைத் தென்றறிபொருள்கள், வினைப்படுத்துச் சொல்லும்போது, முற்றும்மை வேண்டிநின்றன.

(2)முயற்கோடு ஆகாயாப்பூவென்றுமில்லை; ஒளிமுன்னிருளெங்குல்லை என உலகினிலாப்பொருள்கள், வினைப்படுத்துச் சொல்லும்போது, முற்றும்மைவேண்டிநின்றன.

இவை உம்மைவேண்டிநிற்பது எப்போது?

வினைப்படுத்துரைக்கும்போதேயாம்.

வினைப்படுத்துரையாவிடத்து எவ்வாறாம்?

அவை முற்றும்மைவேண்டா.

**உ–ம்.** "பன்னிருதடந்தோள்" "முத்தமிழ்" "ஐந்தலைநாகமுடன்றது."

ஒரு தொடர் ஒருபொருளுணர்த்தியமையாது வேறொருபொருளுங் குறித்துநிற்றல் வழுவாயினும் அமைக்கவெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

அடைமொழி யினமல் லதுந்தரு மாண்டுறின்.

(அடைமொழி இனம் அல்லதும் தரும் ஆண்டு உறின்.)

**இ–ள்.:**– தொடர்மொழியானது தனக்குரியபொருளைத் தருதலே யன்றி

இனமல்லாதபொருளையும் குறித்துநிற்கும் அவ்விடத்துக்குப் பொருந்துமாயின். எ—று.

உ—ம்.:—

அறஞ்செய்தான் துறக்கட்புகும் என்பது மறஞ்செய்தான் அறக்கம்புகான் என்னுங் குறிப்பைத் தருதலும் அது குறிகப்படாதவழித் தன்பொண்மாத்திரமே தருதலுங்காண்க.

அடையுஞ் சினையுமுதலுந் தம்முட்டொடரும்வழிப்படுவதோர் மரபுகூறுஞ் சூத்திரம் யாது?

அடைசினை முதன்முறை யடைதலு மீரடை
முதலோ டாதலும் வழக்கிய வீரடை
சினையொடு செறிதலு மயங்கலுஞ் செய்யுட்கே.

(அடை சினை முதல் முறை அடைதலும் ஈரடை முதலோடு ஆதலும் வழக்கு இயல்; ஈரடை சினையொடு செறிதலும் மயங்கலும் செய்யுட்கு.)

இ—ள்.:— ஓரடையும் ஒருசினையும ஒருமுதலும் ஒன்றையொன்று விசேடித்து வருதலும் இரண்டடை முதலை விசேடித்துவருதலும் வழக்குநடையாம்; இரண்டடை சினையை விசேடித்து வருதலும் இவ்வரம்பு கடந்து வருதலும் செய்யுணடையாம்.

(வரலாறு)

வழக்கு:

(1) வேற்கை, முருகன், செங்கால் நாரை, முழங்குதிரைக் கடல் இவை ஓரடையும் ஒருசினையும் ஒருமுதலுமாகி ஒன்றையொன்று விசேடித்து வந்தன.

(2) மனைச்சிறு கிணறு, சிறுகருங்காக்கை இவை இரண்டடை முதலைவிசேடித்து வந்தன.

செய்யுள்:

(1)"சிறுபைந் தூவியிற் செயிரறச்செய்த;" "கருநெடுங் கண்டருங் காமநோயே" இவை இரண்டடை சினையை விசேடித்து வந்தன.

(2) "பெருந்தோட் சிறுமருங்குற் பேரமர்க்கட் பேதை;" "சிறுநுதற்பேரமர்க்கட்செய்ய வாயைய நுண்ணிடையாய" இவை இவ்வரம்பு கடந்துவந்தன.

அடைசினைமுதன்முறையடைதலொன்றும் வழுவாமற்காத்தலும், ஒழிந்தமூன்றும் வழுவமைதியுமாமென்க.

விகாரமில்லா வியல்பினையுடைய இயற்கைப்பொருளுக்கு இயல் பெடுத்துரைக்குமிடத்து இவ்வாறு கூறுகவென் கூறுஞ் சூத்திரம் யாது?

இயற்கைப் பொருளை யிற்றெனக் கிளத்தல்.

(இயற்கைப் பொருளை இற்று எனக் கிளத்தல்.)

இ—ள்.: தன்னியல்பிற்றிரியாது நின்றபொருளை, அதனியல்பு கூறுங்கால் இத்தன்மைத்தென்று சொல்லுக. எ—று.

இயற்கைப்பொருளாவது யாது?

இயற்கைப்பொருள் தனக்குப் பின்றோன்றாது தான்றோன்றும்போது உடன்றோன்றிய தன்மையுடைய பொருள்.

(இயற்கை – அவிகாரம்.)

**வ–று.:–**

நிலம் வலிது; நீர் தண்ணிது; தீ வெய்து; மயிர் கரிது; பால் வெளிது; பயிர் பசியது; மெய் யுள்ளது; பொய் யில்லது எனவரும்.

இயற்கைப்பொருளை இற்றென்னும் வினைக்குறிப்பாகிய செயற்படுத்துக்கூறுதலின், இது வழுவமைதியாயிற்று.

காரணத்தாலே தன்மைதிரிந்தபொருளை அதன்திரிபுகூறுமிடத்து இவ்வாறு கூறுகவெனக்கூறுஞ் சூத்திரம் யாது?

காரண முதலா வாக்கம் பெற்றுங்

காரண மின்றி யாக்கம் பெற்றும்

ஆக்க மின்றிக் காரண மடுத்தும்

இருமையு மின்றியு மியலுஞ் செயும்பொருள்.

(காரணம் முதல் ஆ ஆக்கம் பெற்றும் காரணம் இன்றி ஆக்கம் பெற்றும் ஆக்கம் இன்றிக் காரணம் அடுத்தும் இருமையும் இன்றியும் இயலும் செயும்பொருள்.)

**இ–ள்.:** காரணச்சொன் முன்வர ஆக்கச்சொற் பின்வரப்பெறறும், காரணச்சொற் றொக்குநிற்க ஆக்கச்சொல் வரப்பெற்றும், ஆக்கச்சொற் றொக்குநிற்கக் காரணச்சொல் வரப்பெற்றும் இவ;விருவகைச் சொல்லுந் தொக்குநிற்கவும் நடக்கும் செயற்கைப்பொருள். **எ–று.**

செயற்கைப்பொருளாவது யாது?

காரணத்தாற் றன்னியல்பு திரிந்தபொருள்.

செயற்கைப்பொருள் எத்தனைவகையாலியலும்?

1. "காரணமுதலாவாக்கம் பெற்றும்"

2. "காரணமின்றியாக்கம் பெற்றும்"

3. "ஆக்கமின்றிக் காரணமடுத்தும்"

4.. "இருமையுமின்றியும்"

ஆக நான்குவகையாலும் "இயலுஞ் செயும்பொருள்."

**வ–று.;–**

(1) எண்ணெய் பெற்றமையான் மயிர் நல்லவாயின; எருப்பெய் திளங்களைகட்டு நீர் கால்யாத்தமையாற் பயிர் நல்லவாயின. இவை முன் காரணச் சொல்லும் பின் ஆக்கச் சொல்லும் வரப்பெற்றன.

(2)மயிர் நல்லவாயின; பயிர் நல்லவாயின. இவை காரணச் சொற்றொக்குநிற்க ஆக்கச்சொல் வரப்பெற்றன.

(3)எண்ணெய்பெற்றமையான் மயிர்நல்ல; எருப்பெய் திளங்களை கட்டுநீர்

கால்யாத்தமையாற் பயிர்நல்ல. இவை ஆக்கச்சொற்றொக்குநிற்கக் காரணச்சொல் வரப்பெற்றன.

(4) மயிர்நல்ல; பயிர்நல்ல. இவை காரணச்சொல் ஆக்கச்சொல் இரண்டுந் தொக்குநிற்கப் பெற்றன.

காரணமுதலா வாக்கம் பெறுதலொன்றும் வழுவாமற் காத்தலும், ஒழிந்தமூன்றும் வழுவமைதியுமாமென்க.

தம்பாலில்லாதபொருளை இல்லையெனப் புகுமிடத்துச் சொற்சுருங்க விடைகூறுமாறு கூறுஞ் சூத்திரம் யாது?

தம்பா லில்ல தில்லெனி னினனாய்

உள்ளது கூறி மாற்றியு முள்ளது

சுட்டியு முரைப்பர் சொற்சுருங் குதற்கே.

(தம்பால் இல்லது இல் எனின் இனன் ஆய் உள்ளது கூறி மாற்றியும் உள்ளது சுட்டியும் உரைப்பர் சொல் சுருங்குதற்கே.)

**இ—ள்.:**— தம்மிடத்து இல்லாதபொருளை இல்லையெனப் புகின் வினாவப்பட்டதற்கு இனமாய்த் தம்மிடத்துள்ள பொருளைச் சொல்லி அச்சொல்லைக்கொண்டு அதனையில்லையென்றும், உள்ளபொருளைச்சுட்டி இதுவல்ல தில்லையென்றும் சொல்லுவர் வினாவும் விடையுமாகிய சொற்கள் சுருங்குதற்பொருட்டு. **எ—று.**

உள்ளபொருளைச்சுட்டி இதுவல்லதில்லையென்பது யாது பற்றி?

தம்மிடத்துள்ள பொருளைச்சுட்டி இதுவல்லதில்லையென்பது, வினவினான் வினவிய பொருளின் நன்மையுந் தீமையு முணர்ந்து அப்பொருளைக் கொள்ளுதற்குந் தவிர்தற்குமாம்.

தம்மிடத்து இல்லாதபொருளை இல்லையெனப் புகுமிடத்துச்சொற் சுருங்குதற்கு எத்தனை வகையாற் சொல்லுவர்?

இனனாயுள்ளது கூறிமாற்றியும், உள்ளது சுட்டியும் இருவகையாற் கூறுவர்.

குன்றக்கூறன் முதலிய குற்றங்களை நீக்கிச் சுருங்கச்சொல்லன் முதலிய அழகோடு கூறுதல் வழக்கிற்கும் வேண்டுமென்பார், சொற்சுருங்குதற்கே யென்றார்.

**வ—று.:**—(1) பயறுண்டோ வணிகீரே என்றவருக்கு, அஃதில்லை யென்பார், உழுந்துண்டு, உழுந்துந் துவரையு முண்டு என அதனினத்தைச் சொல்லக்கடவர். இவ்வின மொழிகள் பயறில்லையென்னும் விடைப்பொருளைத் தந்து நிற்றலே யன்றி, மேலே உழுந்துண்டோ துவரையுண்டோ என்னும் வினாக்களும் அவற்றிற்கு விடைகளும் பல்காமற் காத்து நிற்றலுமுடையனவாதல் காண்க.

(2) பயறுண்டோ வணிகீரே என்றவருக்கு இப்பயறல்ல தில்லையென வுள்ளதைச் சுட்டிக்கூறக்கடவர். இதனால் இதனிலுஞ்சிறந்த பயறில்லையோவென மேல்வினாவும் விடையும் பல்காமற் காத்தல் காண்க. "உள்ளதுசுட்டியும்" என்பதற்கு "உள்ளபொருளாயின் இவ்வளவுண்டென்றும்" என்றுரைத்து அதற்குப் "பயறுண்டோ வணிகீரே என்றவர்க்கு அஃதுண்டென்பார், இருகல்முண்டு இருநாழியுண்டு என அதனளவைச் சொல்லக்கடவர்" என வுதாரணங் கூறுவாருமுளர். அது, தம்பாலில்லதை

இல்லையென்று கூறப்புகுவாராயின் எனவெடுத்துக்கொண்ட சூத்திர அதிகாரத்துக்குப் பொருந்துவதன்றாம்.

இரப்புச்சொல் இவையென்றும் இன்னார்க்கு இன்னசொல்லுரிதென்றும் கூறுஞ் சூத்திரம் யாது?

ஈதா கொடுவெனு மூன்று முறையே
இழிந்தோ னொப்போன் மிக்கோ னிரப்புரை.

(ஈ தா கொடு எனும் மூன்றும் முறையே இழிந்தோன் ஒப்போன் மிக்கோன் இரப்புரை.)

**இ–ள்.:–** ஈ தா கொடு என்னு மூன்று சொற்களும் முறையே இழிந்தவனும் ஒப்பலனும் உயர்ந்தவனும் இரத்தற்கு வருஞ் சொற்களாகும். **எ–று.**

எனவே, ஈ என்பது இழிந்தோன் உயர்ந்தோனிடத்து இரக்கும் இரப்புரையும், தா என்பது ஒப்போன் ஒப்போனிடத்து இரக்கும் இரப்புரையும், கொடு என்பது உயர்ந்தோன் இழிந்தோனிடத்து இரக்கும் இரப்புரையுமாமெனக் கொள்க.

**வ–று.:–**

தந்தாயீ; இழிந்தோனிரப்பு. தோழாதா; ஒப்போனிரப்பு. மைந்தாகொடு; உயர்ந்தோனிரப்பு எனவரும். பிறவழிவரும் ஒப்புயர்வுதாழ்வுகளிலும் இப்படியேயொட்டுக.

கொடுவென்னுஞ்சொல் முதனிலைவகையாற் படர்க்கைச்சொல்லன்றோ?

படர்க்கையாயினும் தன்னைப் பிறனொருவன்போலக் கூறங் கருத்துவகையால் தன்னிடத்துச் செல்லும். அதுபற்றியே இடவழுவமைத்தவாறாம்.

இதுவுமது.

**இ–ன்.:– ஈதா கொடுவெனு மூன்ற முறையே** – ஈதாகொடு என்கிற இம் மூன்று சொற்களும் நிரனிறையாகவே, இழிந்தோன் ஒப்பேன் மிக்கோனிரப்புரை தாழ்ந்தவனும்–சமானமானவனும்–உயர்ந்தோனுமாகிய இம்மூவரும் இரக்கும் இரப்பு வார்த்தைகளாம், **எ–று.**

எனவே, ஈ–என்பது தாழ்ந்தவன் உயர்ந்தவன் இடத்தி ல்இரக்கு மிரப்புரையும், தாவென்பது சமானமானவன் சமானமான்வனிடத்தி லிரக்கும் இரப்புரையும், கொடுவென்பது–உயர்ந்தோன் தாழ்ந்தவனிடத்தி ல்இரக்கும் இரப்புரையும், ஆமெனக் கொள்க. இரப்புரை–யாசக வார்த்தை,

**வ–று.:–**

தந்தையீ, எம்பெருமா எனக்கொருபிடி சோறுதா எனவும், தோழாதா, எனக்குச் சோறுதா எனவும், மைத்தா கொடு இவனுக்கு ஊண் கொடு எனவும் வரும். வேறே மார்க்கங்களிலே வருகிற ஒப்பு உயர்வு தாழ்வுகளிலு மிவ்வாறே யொட்டுக.

இவை வழங்கு நல்கு வீசு என்னுந் தொடக்கத்து இரப்புரைகள் போலாகாமல், ஈதா கொடு என்ற மாத்திரமே ஈவோர்க்கும் ஏற்போர்க்கும் உயர்வு தாழ்வுகளை யுணர்த்தி நிற்பதினாலே யிவற்றை யித்தன்மைத் தென்றறி பொருளாகக் கூறினார். இனி, 'அருள்–அளி' என்னும் இரப்புரைகளும் ஈவோர்க்கு உயர்வும் ஏற்போர்க்குத் தாழ்வும் உணர்த்தின வன்றோ எனின், அவை

கருணைக்குரிய சொற்கள். குறிப்பினாலே இரத்தற்பொருளை யுணர்த்தி நின்றன அன்றி, இரப்புரை யல்ல வென்க. இனி யிம்மூன்று சொற்களு மிங்கே சொல்லியமுறை பிறழ்ந்து வருமாயின் அவற்றைப் 'புதியனபுகுதலும் வழுவல'வென்றதனால் அமைத்துக் கொள்க. தரல்வர ல்என்னுஞ் சூத்திரத்தால் கொடு என்பது தன்மையிடத்து வந்த வழுவமைதி யென்றாயினுத் தன்னைப் பிறன்போற் கூறும் வகையால் வந்த வழுவமைதி யென்றாயினுங் கொள்க.

**ஈதா கொடுவெனக் கிளக்கு மூன்று**

**மிரவின் கிளகி யாகிட னுடைய**

எனவும், அவற்றுள்,

**ஈயென் கிளவி யிழிந்தோன் கூற்றே**

எனவும்,

**தாவென் கிளவி யொப்போன் கூற்றே**

எனவும்,

**கொடுவென் கிளவி யுயர்ந்தோன் கூற்றே**

எனவும்,

சொல்லானன்றிச் சொல்லுவான் குறிப்பினாலும் பொருளுணரப் படுஞ் சொற்களுமுவெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

முன்னத்தி னுணருங் கிளவியு முளவே.

(முன்னத்தின் உணரும் கிளவியும் உளவே.)

**இ—ள்.:—** சொல்லானன்றிச் சொல்லுவான் குறிப்பினாற் பொருளறியப்படுஞ் சொற்களுஞ் சிலவுளவாம். **எ—று.** (முன்னம்—குறிப்பு.)

**வ—று.:—**

மோதிரங்கொண்டு கோழியெறியும் வாழ்க்கையர் என்ற வழிப், பெருஞ் செல்வவாழ்க்கையர் என்பது குறிப்பினாலுணரப்பட்ட பொருளாம். பிறவுமன்ன.

கேட்பவர்கள் வருத்தப்படாமல் அவர்களுக்குப் பொருள்விளங்கச் சொல்லல் மரபாதலால், இது வழுவமைதியாயிற்று.

உயர்திணைக்குரிய கேட்டல் பேசல் முதலிய செய்தியை அஃறிணை மேலுமேற்றிக் கூறதல் வழுவாயினும் அமைக்கவெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

கேட்குந போலவுங் கிளக்குந போலவும்

இயங்குந போலவு மியற்றுந போலவும்

அஃறிணை மருங்கினு மறையப் படுமே.

(கேட்குந போலவும் கிளக்குந போலவும் இயங்குந போலவும் இயற்றுந போலவும் அஃறிணை மருங்கினும் அறையப்படுமே.)

**இ—ள்.:—** கேளாதனவற்றை கேட்பனபோலவும் பேசாதனவற்றைப் பேசுவனபோலவும் நடவாதனவற்றை நடப்பனபோலவும் இத்தொழில்களல்லன பிற செய்யாதனவற்றைச் செய்வன போலவும் அஃறிணையிடத்துஞ் சொல்லப்படும். **எ—று.**

இவை குறிப்புமொழிகளாம்.

**வ–று.:–**

(1) ''நன்னீரை வாரியனிச்சமே'' என்புழிக், கேளாதது கேட்பது போலச் சொல்லப்பட்டது.

(2) ''பகைமையுங் கேண்மையுங் கண்ணுரைக்கும்'' என்புழிப், பேசாதது பேசுவதுபோலச் சொல்லப்பட்டது.

(3) ''இவ்வழி யவ்வூர்க்குப்போகும்'' என்புழி, நடவாதது நடப்பதுபோலச் சொல்லப்பட்டது.

(4) ''தன்னெஞ்சே தன்னைச்சுடும்'' என்புழி, செய்யாதது செய்ததுபோலச் சொல்லப்பட்டது.

உயர்திணையஃறிணைகளும் சினைமுதல்களும் இன்னவிடத்துப் பிறழினுங் கொள்கவெனக்கூறுஞ் சூத்திரம் யாது?

உருவக வுவமையிற் றிணைசினை முதல்கள்

பிறழ்தலும் பிறவும் பேணினர் கொளலே.

(உருவக உவமையில் திணை சினை முதல்கள் பிறழ்தலும் பிறவும் பேணினர் கொளலே.)

**இ–ள்.:** உருவகத்திலும் உவமையிலும் உயர்திணையஃறிணை தம்முண்மயங்குதலும் சினைமுதல் தம்முண்மயங்குதலும் இவ்வியலுட் சொல்லா தொழிந்தவையும் பாதுகாத்துக் கொள்க. **எ–று.**

உருவகமாவது யாது?

உவமேயத்தை உவமானமாகக் கூறுவதோரலங்காரம்.

**(வரலாறு)**

உருவகம்:–

(1) நம்மரசனாகிய சிங்கத்திற்குப் பகைவர்கூட்டமாகிய யானைகளஞ்சியோடின என உயர்திணை அஃறிணையோடு மயங்கிற்று. கல்விமங்கையை நல்லோர் விரும்புவார் என அஃறிணை உயர்திணையோடு மயங்கிற்று.

(2) அவ்வரசனுக்குத் தம்பியிருவரு மிரண்டுதோள்கள் என உயர் திணை முதல் உயர்திணைச்சினையோடு மயங்கிற்று. முகமாகியமதி என உயர்திணைச்சினை அஃறிணை முதலோடு மயங்கிற்று.

உவமை:–

(1)மயில்போலுமங்கை என உயர்திணை அஃறிணையோடுமயங்கிற்று. நெற்பயிர்கள் கல்வியுடையார் போலிறைஞ்சிச் சாய்த்தன என அஃறிணை உயர்திணை யோடு மயங்கிற்று. பொருள்கோளின் பெயரும் முறையும் தொகையுங் கூறுஞ் சூத்திரம் யாது?

**யாற்றுநீர் மொழிமாற்று நிரனிறை விற்பூண்**

**டாப்பிசை யளைமறி பாப்புக் கொண்டுகூட்**

**டறிமறி மாற்றெனப் பொருள்கோ ளெட்டே.**

(யாற்றுநீர் மொழிமாற்று நிரனிறை விற்பூண் தாப்பிசை அளைமறி பாப்புக் கொண்டுகூட்டு அடி மறி மாற்று என பொருள்கோள் எட்டே.)

**இ—ள்.:—** யாற்றுநீர்ப்பொருள்கோளும் மொழிமாற்றுப் பொருள் கோளும் நிரனிறைப்பொருள்கோளும் விற்பூட்டுப்பொருள் கோளும் தாப்பிசைப் பொருள்கோளும் அளைமறிபாப்புப் பொருள்கோளும் கொண்டுகூட்டுப் பொருள்கோளும் அடிமறிமாற்றுப் பொருள்கோளு மெனப் பொருள்கோ ளெட்டாம். **எ—று.**

யாற்றுநீர்ப்பொருள் கோளாவது யாது?

மற்றைய நோக்கா தடிதொறும் வான்பொருள்

அற்றற் றொழுகுமஃ தியாற்றுப் புனலே.

(மற்றைய நோக்காது அடிதொறும் வான் பொருள் அற்று அற்று ஒழுகும் அஃது யாற்றுப்புனலே.)

**இ—ள்.:** ஏனையடிகளைநோக்காது அடிதோறுஞ் சிறந்த பொருள் அற்றற்றொழுவதாகிய அப்பொருள்கோள் யாற்றுநீர்ப்பொருள்கோளாம். **எ—று.**

**வ—று.:—**

"சொல்லருஞ் சூற்பசும்பாம்பின் றோற்றம்போன்—மெல்லவே கருவிருந் தீன்றுமேலலார்—செல்வமே போற்றலை நிறுவித் தேர்ந்தநூற்—கல்விசேர் மாந்தரி னிறைஞ்சிக் காய்த்தவே" எனவரும். இப்பாட்டினுட் சொல்லென்னுமெழுவாயினை முதலெடுத்து, அதன்றொழிலாகிய இருந்து, ஈன்று, நிறுவி, இறைஞ்சியென்னும்வினையெச்சங்கள் ஒன்றனை யொன்றுகொள்ள இடையே முறைநிறுத்திக், காய்த்தவென்னும் பயனிலையை யிறுதியிலேதந்து முடித்தமையால், இப்பொருளொழுகுதல் யாற்றுநீரொழுக்குப் போலுதல் காண்க. (சொல்—நெற்பயிர்.)

மொழிமாற்றாவது யாது?

ஏற்ற பொருளுக் கியையு மொழிகளை

மாற்றியோ ரடியுள் வழங்கன்மொழி மாற்றே.

(ஏற்ற பொருளுக்கு இயையும் மொழிகளை மாற்றி ஓரடியுள் வழங்கல் மொழிமாற்றே.)

**இ—ள்.:** தாங்குறித்த பொருளுக்குப் பொருந்துமொழிகளை ஓரடியுள்ளே மாற்றிச் சொல்லுதல் மொழிமாற்றுப் பொருள் கோளாம். **எ—று.**

**வ—று.:—**

"சுரையாழ வம்மிமிதப்ப வரையனைய – யானைக்குநீத்து முயற்கு நிலையென்ப—நானகநாடன்சுனை" எனவரும். இதனுள், ஆழவென்னும் பயனிலைக் கியைந்த அம்மியென்னு மொழியினை மிதப்பவென்னும் பயனிலைக்கும், மிதப்ப வென்னும் பயனிலைக் கியைந்த சுரையென்னு மொழியினை ஆழவென்னும் பயனிலைக்கும், நீத்தென்னும் பயனிலைக் கியைந்த முயலென்னுமொழியினை நிலையென்னும் பயனிலைக்கும், நிலையென்னும் பயனிலைக் கியைந்த யானையென்னு மொழியினை நீத்தென்னும் பயனிலைக்குமாக மாற்றிக் கூறியவாறு காண்க.

நிரனிறைப்பொருள்கோளாவது யாது?

பெயரும் வினையுமாஞ் சொல்லையும் பொருளையும்

வேறு நிரனிறீஇ முறையினு மெதிரினும்

நேரும் பொருள்கோ ணிரனிறை நெறியே.

(பெயரும் வினையும் ஆம் சொல்லையும் பொருளையும் வேறு நிரல் நிறீஇ முறையினும் எதிரினும் நேரும் பொருள்கோள் நிரனிறை நெறியே.)

**இ–ள்.:** பெயரும் வினையுமாகியசொற்களையும் அவைகொள்ளும் பெயரும் வினைமாகிய பயனிலைகளையும் வேறுவேறு வரிசையாக நிறுத்தி முறையாகவேனும் எதிராகவேனும் இதற்கிது பயனிலையென்பதுபடக் கூறும் பொருள்கோள் நெறிப்பட்ட நிரனிறைப்பொருள்கோளாம். **எ–று.**

நிரனிறை எத்தனை வகைப்படும்?

முறைநிரனிறை எதிர்நிரனிறையென இருவகைப்படும்.

**வ–று.:–**

(1) "கொடிகுவளை கொட்டை நுசுப்புண்கண் மேனி–மதிபவள முத்த முகம்வாய் முறுவல்–பிடிபிணை மஞ்ஞை நடைநோக்குச்சாயல்– வடிவினளேவஞ்சிமகள்" இது, கொடிநுசுப்பு, குவளைஉண்கண், கொட்டைமேனி. எனவும், மதிமுகம், பவளம்வாய், முத்தம் முறுவல், எனவும், பிடி நடை, பிணை நோக்கு, மஞ்ஞை சாயல். எனவும், பெயர்ச்சொற்களும் பெயர்ப்பயனிலைகளுமாய் நின்ற முறைநிரனிறை.

(2) "காதுசேர் தாழ்குழையாய் கன்னித் துறைச்சேர்ப்–போது சேர் தார்மார்ப போர்ச்செழிய–நீதியான்–மண்ணமிர்த மங்கையர்தோண் மாற்றாரை யேற்றார்க்கு–நுண்ணியவாய பொருள்." இது, கா மண், து அமிர்தம், சேர் மங்கையர் தோள், தாழ் மாற்றாரை, குழை ஏற்றார்க்கு, ஆய் நுண்ணியவாய பொருள் என வினைப்பயனிலைகளும் பெயர்களுமாய் நின்ற முறை நிரனிறை.

(3) "களிறுங் கந்தும்போல நளிகடற்–கூம்புங் கலனுந் தோன்றுந்– தோன்றன் மறந்தோர் துறைகெழு நாட்டே" இது, களிறு கலன், கந்து கூம்பு எனப் பெயர்ச்சொற்களும் பெயர்ப்பயனிலைகளுமாய் நின்ற எதிர்நிரனிறை. (கந்து– யானை கட்டுந்தறி. கூம்பு–பாய்மரம். கலன்–தோணி.)

(4) "ஆடவர்க ளெவ்வா றகன்றொழிவார் வெஃகாவும்–பாடகமு மூரகமும் பஞ்சரமா–நீடியமா–னின்றா னிருந்தான் கிடந்தா னிதுவன்றோ–மன்றார் மதிற்கச்சி மாண்பு." இது, வெஃகா கிடந்தான், பாடகம் இருந்தான், ஊரகம் நின்றான் எனப் பெயர்ச்சொற்களும் வினைப்பயனிலைகளுமாய் நன்ற எதிர்நிரனிறை. (நிரனிறை–நிரல் நிறை, நிரல்–நிரை நிறை–நிறுத்துல் எனவே நிரையே வைத்தல்.)

தாப்பிசைப்பொருள் கோளாவது யாது?

இடைநிலை மொழியே யேனையீ ரிடத்தும்

நடந்து பொருளை நண்ணுத றாப்பிசை.

(இடை நிலை மொழி ஏனை ஈரிடத்தும் நடந்து பொருளை நண்ணுதல் தாப்பிசை.)

**இ–ள்.:** இடையிலே நிற்குமொழி ஒழிந்த முதலினு மீற்றினுஞ் சென்று பொருளைக்கூடும் பொருள்கோள் தாப்பிசைப்பொருள்கோளாம். **எ–று.**

தாப்பிசையென்பதற்கு ஊஞ்சல்போல் இடைநின்று இருமருங்குஞ் செல்லும் சொல்லென்பது பொருள். (தாம்பு—ஊஞ்சல். இசை—சொல்.)

**வ—று.:—**

"உண்ணாமை யுள்ள துயிர்நிலை யூனுண்ண—வண்ணாத்தல் செய்யா தளறு" இதனுள், ஊன் என இடையிலே நின்ற மொழி ஊனுண்ணாமையுள்ளத என முதலிலும், ஊனுண்ண எனப் பின்னருஞ்சென்று கூடுதல் காண்க.

அளைமறிபாப்புப்பொருள்கோளாவது யாது?

செய்யு ளிறுதி மொழியிடை முதலினும்

எய்திய பொருள்கோ ளளைமறி பாப்பே.

(செய்யுள் இறுதி மொழி இடை முதலினும் எய்திய பொருள்கோள் அளைமறி பாப்பே.)

**இ—ள்.:** செய்யுளில் இறுதியில் நின்றசொல் இடையிலும் முதலிலுஞ் சென்ற பொருள்கோள் அளைமறிபாப்புப்பொருள் கோளாம். **எ—று.**

அளையினுள்ளே பாம்புமண்டலட்டு வால்நுனியுங் தலையும் நடுவயிற்றையணைந்துபொருந்த மடங்கிக்கிடக்கும். இப்பொருள் கோள் அதுபோதலின் அளைமறிபாப்புப்பொருள்கோளெனப்பட்டது.

**வ—று.:—**

"தாழ்ந்த வுணர்வினராய்த் தாளுடைந்து தண்டுன்றித் தளர்வார் தாமுஞ்—சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்து நாற்கதியிற் சுழல்வார்தாமு—மூழ்ந்த பிணிநலிய முன்செய்த வினையெல்றே முனிவார் தாமும்—வாழ்ந்த பொழுதினே வானெய்து நெறிமுன்னி முயலா தாரே" எனவரும். இதனுள், வாழ்ந்த பொழுதினே வானெய்து நெறிமுன்னி முயலாதார் மூழ்ந்த பிணி நலிய முன் செய்த வினையென்றே முனிவார், சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்து நாற்கதியிற் சுழல்வார், தாழ்ந்த வுணர்வினராய்த் தாளுடைந்து தண்டுன்றித் தளர்வார் எனத் தலைகீழாய் இடையிலு முதலிலுஞ் சென்று கூடுதல் காண்க.

கொண்டுகூட்டுப்பொருள்கோளாவது யாது?

யாப்படி பலவினுங் கோப்புடை மொழிகளை

ஏற்புழி யிசைப்பது கொண்டு கூட்டே.

(யாப்பு அடி பலவினும் கோப்பு உடை மொழிகளை ஏற்புழி இசைப்பது கொண்டு கூட்டே.)

**இ—ள்.:** செய்யுளடிகள் பலவற்றினுங் கோக்கப்படுதலையுடைய சொற்களை எடுத்துப் பொருளுக்கேற்றவிடத்துக் கூட்டும் பொருள்கோள் கொண்டுகூட்டுப் பொருள்கோளாம். **எ—று.**

**வ—று.:—**

"தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட பைங்கூந்தல்—வெண்கோழி முட்டை யுடைத்தன்ன மாமேனி—யஞ்சனத்தன்ன பசலை தணிவாமே—வங்கத்துச் சென்றார் வரின்" எனவரும். இதனுள், வங்கத்துச் சென்றார் வரின் அஞ்சன த்தன்ன பைங்கூந்தலையுடையாளது மாமேனிமேல் தெங்கங்காய்போலத் திரண்டுருண்ட கோழிவெண்முட்டை யுடைத்தன்ன பசலை தணிவாம் எனக் கொண்டுகூட்டுக.

அடிமறிமாற்றுப்பொருள் கோளாவது யாது?

ஏற்புழி யெடுத்துடன் கூட்டுறு மடியவும்
யாப்பீ றிடைமுத லாக்கினும் பொருளிசை
மாட்சியு மாறா வடியவு மடிமறி.

(ஏற்புழி எடுத்து உடன் கூட்டுறும் அடியவும் யாப்பு ஈறு இடை முதல் ஆக்கினும் பொருள் இசை மாட்சியும் மாறா அடியவும் அடிமறி.)

**இ–ள்.:** பொருளுக்கேற்குமிடத்து எடுத்து நீங்காது கூட்டும் அடியையுடையவையும் யாதானுமோரடியைஎடுத்து அச்செய்யுளின் இறுதி நடு முதல்களில் யாதானுமோரிடத்துக் கூட்டினும் பொருளோடு ஓசைமாட்சியும் ஓசையொழியப்பொருண்மாட்சியும் வேறுபடாத அடியையுடையவையும் அடிமறிமாற்றுப் பொருள்கோளாம். எ–று.

**வ–று.:–**

(1) "நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பந் துடையார–கொடுத்துத்தான் றுய்ப்பினு மீண்டுங்கா லீண்டு–மிடுக்குற்றுப் பற்றினு நில்லாது செல்வம்–விடுக்கும் வினையுலந்தக் கால்." என்பதனுள், கொடுத்துத்தான் றுய்ப்பினு மீண்டுங்கா லீண்டும் விடுக்கும் வினையுலந்தக்கா விடுக்குற்றுப் பற்றி னுநில்லாது செல்வம் (இஃதறியார்) நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பந் துடையார் என அடிகளை ஏற்குமிடத்து எடுத்துக்கூட்டுக.

(2) "மாறாக் காதலர் மலைமறந் தனரே–யாராக் கட்பனி வரலானாவே–வேறா மென்றோள் வளைநெகி ழும்மே–கூறாய் தோழியான் வாழு மாறே." இதனுள், எவ்வடியை எங்கே கூட்டினும் பொருளும் ஓசையும் வேறுபடாமை காண்க.

(3) "அலைப்பான் பிறிதுயிரை யாக்கலுங் குற்றம்–விலைப்பாலிற் கொண்டூன் மிசைதலுங் குற்றஞ்–சொலற்பால வல்லாத சொல்லுதலுங் குற்றங்–கொலைப்பாலுங் குற்றமேயாம்." இதனுள், ஈற்றடியொழிந்த மூன்றடியுள் யாதானு மொன்றை யெடுத்து யாதானுமோரிடத்துக் கூட்டியுச்சரித்துப் பொருளுமோசையும் வேறுபடாமையும், ஈற்றடியையெடுத்து யாதானுமோரிடத்துக் கூட்டியுச்சரித்து ஓசை வேறுபட்டுப் பொருள் வேறுபடாமையுங் காண்க.

**பொதுவியல் முற்றிற்று**

## இடையியல்

இடைச்சொல்லாவதி யாது?

வேற்றுமை வினாசா ரியையொப் புருபுகள்
தத்தம் பொருள் விசைநிறை யசைநிலை
குறிப்பெனெண் பகுதியிற் றனித்திய லின்றிப்

பெயரினும் வினையினும் பின்முன் னோரிடத்

தொன்றும் பலவும் வந்தொன்றுவ திடைச்சொல்.

(வேற்றுமை வினை சாரியை ஒப்பு உருபுகள் தத்தம் பொருள் இசை நிறை அசைநிலை குறிப்பு என் எண் பகுதியின் தனித்து இயல் இன்றி பெயரினம் வினையினும் பின் முன் ஓர் இடத்து ஒன்றும் பலவும் வந்து ஒன்றுவது இடைச் சொல்.)

**இ—ள்.:—** ஐம்முதலிய வேற்றுமையுருபுகளும், விகுதிகளும், இடைநிலை களுமாகிய வினையுருபுகளும், அன் ஆன் முதலிய சாரியையுருபுகளும், போலப் புரைய் முதலிய உவமவுருபுகளும், பிறவாறு தத்தமக்குரிய பொருளையுணர்த்தி வருபவையும், வேறுபொருளின்றி இசைநிறையே பொருளாக வருபவையும், அசைநிலையே பொருளாக நிற்பவையும், வெளிப்படையின் வரும் இவைபோலாது ஒலி அச்சம் விரைவு இவற்றைக் குறிப்பாலுணர்த்தி வருபவையும் என்னும் எட்டுவகையினை யுடையனவாய்த் தனித்து நடத்தலின்றிப் பெயரினகத்தும் வினையினகத்தும் அவற்றின் புறமாகிய பின்னும் முன்னும் இவ்விடங்களாறனு ளோரிடத்து ஒன்றாயினும் பலவாயினும் வந்து அப்பெயர்வினைகளுக்கு அகத் துறுப்பாயும் புறத்துறுப்பாயும் ஒன்றுபட்டு நடக்குந் தன்மையது இடைச் சொல் லாகும். **எ—று.**

அவை எத்தனை வகைப்படும்?

"வேற்றுமையுருபு, வினையுருபு, சாரியையுருபு, ஒப்புருபு தத்தம்பொருள், இசைநிறை, அசைநிலை, குறிப்பு என் எண்பகுதி."

இடைச்சொல் என்பதன் பெயர்க்காரணம் யாது.?

பெரும்பாலும் பெயருக்கிடையினும் வினைக்கிடையினும் வருதல்பற்றி அஃது இடைச்சொல் எனப்பட்டது.

இசைநிறையென்பது வேறுபொருளுணர்த்தாது செய்யுளில் ஓசையை நிறைத்து நிற்பது.

அசைநிலையென்பது வேறுபொருள் உணர்த்தாது பெயர்ச்சொல்லோடும் வினைச்சொல்லோடுஞ் சார்த்திச் சொல்லப்பட்டு நிற்பது. (அசைத்தல்— சார்த்துதல்.)

**வ—று.:—**

(1) குழையன் என்புழிப், பெயரினகத்துறுப்பாய் விகுதியிடைச் சொல் ஒன்று வந்தது. தச்சிச்சி, நிலத்தினன் என்புழிப், பெயரினகத்துறுப்பாய் முறையே இடைநிலையும் விகுதியும், இடைநிலையுஞ் சாரியையும் விகுதியுமாகிய இடைச்சொற்கள் பலவந்தன.

(2) உண்ணாய் என்புழி, வினையினகத்துறுப்பாய் விகுதி யிடைச்சொல் ஒன்றுவந்தது. நடந்தான், நடந்தனன் என்புழி, வினையினகத்துறுப்பாய் முறையே இடைநிலையும் விகுதியும், இடைநிலையுஞ் சாரியையும் விகுதியுமாகிய இடைச்சொற்கள் பலவந்தன.

(3) அதுமன், கொன்னூர் என்புழிப், பெயரின் புறத்துறுப்பாய்ப் பின்னுமுன்னும் ஒன்றுவந்தது. அதுமற்றம்ம, இனி மற்றொன்று என்புழிப், பெயரின் புறத்துறுப்பாய்ப் பின்னு முன்னும் பலவந்தன.

(4) வந்தானோ, ஐயோவிறந்தான் என்புழி, வினையின் புறத்துறுப் பாய்ப் பின்னுமுன்னும் ஒன்று வந்தது. கொன்றான் கூடகூட, சீசீபோ என்புழி, வினையின் பறத்துறுப்பாய்ப் பின்னுமுன்னும் பலவந்தன.

இடைச்சொற்களினது பொருள்கள் யாவை?

தெரிநிலை தேற்ற மையமுற் றெண்சிறப்

பெதிர்மறை யெச்சம் வினாவிழை வொழியிசை

பிரிப்புக் கழிவாக்க மின்னன விடைப்பொருள்.

(தெரிநிலை தேற்றம் ஐயம் முற்று எண் சிறப்பு எதிர்மறை எச்சம் வினா விழைவு ஒழியிசை பிரிப்பு கழிவு ஆக்கம் இன்னன இடைப்பொருள்.)

இ–ள்.:– தெரிநிலையும் தெளிவும் சந்தேகமும் முற்றும் எண்ணும் சிறப்பும் எதிர்மறையும் எச்சமும் வினாவும் விருப்பமும் ஒழிந்த சொல்லும் பிரிநிலையும் கழிவும் ஆக்கமும் இவைபோல் வனபிறவும் இடைச்சொற்களுடைய பொருள்களாம். எ–று.

இன்னனவென்றதனாற் சில வருமாறு:–

(1) அ, இ, உ என்பன சுட்டுப்பொருளைத் தருவன.

(2) எ, ஏ, யா, ஆ என்பன வினாப்பொருளைத் தருவன.

(3) முன், பின் என்பன காலப்பொருளையும் இடப்பொருளையுந் தருவன.

(4) இனியென்பது காலவிடங்களின் எல்லைப்பொருளைத்தருவது.

(5) தொறும், தோறும் என்பன இடப்பன்மைப் பொருளையுந் தொழிற்பயில்வுப்பொருளையுந் தருவன.

(6) வாளா, சும்மா என்பன பயனின்மைப்பொருளைத் தருவன.

(7) ஆவது, ஆதல், ஆயினும், தான் என்பன விகற்பப்பொருளைத் தருவன.

(8) ஐயோ, அந்தோ முதலியவை இரக்கப்பொருளைத் தருவன.

(9) ஆ, அம்ம, ஓ, ஓகோமுதலியவை வியப்புப்பொஜளத் தருவன.

(10) கூடகூட, ஐயோ முதலியவை அச்சுப்பொருளைத் தருவன.

(11) சீ, சீச்சி, சை முதலியவை இகழ்ச்சிப்பொருளைத் தருவன.

குறிப்பின் வருமிடைச்சொற்கள் வருமாறு:–

(1) அம்மென, இம்மென, கோவென, சோவென, துடுமென, ஒல்லென, கஃறென, எனவும், கடகடென, களகளென, திடு திடென, நெறுநெறென, படபடென. எனவும், வருவன ஒலிக் குறிப்புப்பொருளைத் தருவன.

(2) துண்ணென, துணுக்கென, திட்கென, திடுக்கென என்றாற் போல்வன அச்சுக்குறிப்புப்பொருளைத் தருவன.;

(3) பொள்ளென, பொருக்கென, கதுமென, ஞெரேலென, சரேலென என்றாற்போல்வன விரைவுக் குறிப்புப்பொருளைத் தருவன.

ஏகாரவிடைச்சொல் எத்தனைபொருளைத் தரும்?

பிரிநிலை வினாவெண் ணீற்றசை தேற்றம்

இசைநிறை யெனவா றேகா ரம்மே.

(பிரிநிலை வினா எண் ஈற்றசை தேற்றம் இசைநிறை என ஆறு ஏகாரம்மே.)

**இ—ள்.:—** பிரிநிலையும் வினாவும் எண்ணும் ஈற்றிலசைத்தலும் தெளிவும் இசைநிறைத்தலும் என்று ஆறுபொருளைத் தரும் ஏகாரவிடைச்சொல். **எ—று.**

**வ—று.:—**

(1) அவருள் இவனே கள்வன்: இங்கே ஒருகூட்டத்தினின்றும் ஒருவனைப் பிரித்துநிற்றலாற் பிரிநிலை.

(2) நீயே கொண்டாய்: இங்கே நீயா கொண்டாயென்னும் பொருளைத் தருமிடத்து வினா.

(3) நிலமே நீரே தீயே வளியே: இங்கே நிலமு நீருந் தீயும் வளியும் எனப் பொருட்பட எண்ணிநிற்றலால், எண்.

(4) "என்று மேத்தித் தொழுவோ மியாமே." இங்கே வேறுபெருளின்றி இறுதியிலே சார்த்தப்பட்டு நிற்றலால் ஈற்றசை.

(5) உண்டே மறுமை: இங்கே உண்டென்பதற்கு ஐயமில்லையென்னுந் தெளிவுப்பொருளைத் தருதலால் தேற்றம்.

(6) "ஏயேயிவளொருத்தி பேடியோவென்றார்." இங்கே வேறு பொருளின்றிச் செய்யுளில் இசை நிறைத்து நிற்றலால் குசைநிறை.

அவனே கொண்டான் என்பது ஒரோரிடத்து அவன்கொண்டிலன் என எதிர்மறைப்பொருள்பட நிற்றல் "புதியன புகுதலும் வழுவல" என்பதனாற் கொள்க.

ஒகாரவிடைச்சொல் எத்தனைபொருளைத் தரும்?

**ஒழியிசை வினாச்சிறப் பெதிர்மறை தெரிநிலை**

**கழிவசை நிலைபிரிப் பெனவெட் டோவே.**

(ஒழியிசை வினா சிறப்பு எதிர்மறை தெரிநிலை கழிவு அசைநிலை பிரிப்பு என எட்டு ஒவே.)

**இ—ள்.:—** ஒழியிசையும் வினாவும் சிறப்பும் எதிர்மறையும் தெரிநிலையும் கழிவும் அசைநிலையும் பிரிநிலையும் என்று எட்டுப்பொருதைத் தரும் ஒகார விடைச்சொல். எ—று

சிறப்பு: உயர்வுசிறப்பும் இழிவுசிறப்பும் என இருவகைப்படும். உயர்வுசிறப்பு ஒருபொருளினது உயர்வைச் சிறப்பித்தல். இழிவுசிறப்பு ஒருபொருளினது இழிவைச் சிறப்பித்தல். இங்கே சிறப்பித்தல் என்றது. உயர்வேயாயினும் இழிவேயாயினும் அதனது மிகுதியை விளக்குதல்.

**வ–று.:–**

(1) படிக்கவோ வந்தாய். இங்கே படித்தற்கன்று விளையாடுதற்கு வந்தாய் என ஒழிந்த சொற்களைத் தருதலால் ஒழியிசை.

(2) சாத்தனுண்டானோ என்பது வினாப்பொருளைத் தருதலால் வினாவோகாரம்.

(3) ஒஓ பெரியன். இங்கே ஒருவனது பெருமையாகிய உயர்வின் மிகுதியை விளக்குதலால், உயர்வுசிறப்போகாரம்.

ஒஓ கொடியன். இங்கே ஒருவனது கொடுமையாகிய இழிவின் மிகுதியை விளக்குதலால் இழிவுசிறப்கபோகாரம்.

(4) அவனோ கொண்டான். இங்கே கொண்டிவன் என்னும் பொருளைத் தருமிடத்து எதிர்மறையோகாரம்.

(5) ஆணோ அதுவுமன்று பெண்ணோ அதுவுமன்று. இங்கே

அத்தன்மையில்லாமையைத் தெரிவித்து நிற்றலால் தெரிநிலை யோகாரம்.

(6) உறுதியுணராது கெட்டாரை ஒஓ தமக்கோ ருறுதியுணராரோ என்னுமிடத்துக் கழிந்ததற் கிரங்கலிற் கழிவோகாரம்.

(7) "காணிய வம்மினோ" இங்கே வேறுபொருளின்றிச் சார்த்தப்பட்டு நிற்றலால் அசைநிலையோகாரம்.

(8) இவனோ கொண்டான். இங்கே பலருணின்றும் ஒருவனைப் பிரித்துநிற்குமிடத்துப் பிரிநிலையோகாரம்.

எனவென்னு மிடைச்சொல்லும் என்றென்னு மிடைச்சொல்லும் எத்தனை பொருண்மையில் வரும்?

**வினைபெயர் குறிப்பிசை யெண்பண் பாறினும்**

**எனவெனு மொழிவரு மென்று மற்றே.**

(வினை பெயர் குறிப்பு இசை எண் பண்பு ஆறினும் என எனும் மொழி வரும் என்றும் அற்றே.)

**இ–ன்.:** வினையும் பெயரும் குறிப்பும் இசையும் எண்ணும் பண்புமாகிய ஆறுபொருண்மையிலும் எனவென்னுமிடைச் சொல்வரும்; என்றென்னு மிடைச் சொல்லும் அப்படியே ஆறுபொருண்மையிலும் வரும். **எ–று.**

**வ–று.:–**

(1) மைந்தன் பிறந்தானெனத் தந்தை யுவந்தான். இங்கே வினைப்பொருண்மை குறித்து வந்தது.

(2)"அழுக்கா றெனவொரு பாவி". இங்கே பெயர்ப்பொருண்மை குறித்து வந்தது.

(3)"பொள்ளென வாங்கே புறம் வேரார்." இங்கே குறிப்புப் பொருண்மை குறித்து வந்தது.

(4)"பொம்மென்ன வண்டலம்பும் புரிகுழலை." இங்கே குசைப் பொருண்மை குறித்து வந்தது.

(5)நிலமென நீரெனத் தீயென வளியென வானெனப் பூதங் களைந்து. இங்கே எண்ணுப்பொருண்மை குறித்து வந்தது.

(6) வெள்ளென விளர்த்தது. இங்கே பண்புப்பொருண்மை குறித்துவந்தது.

இனி என்று என்பதும்,–

(1) ரைவருமென்றெண்ணி''......................வினைப்பொருண்மை

(2)''பாரியென்றொருவனுளன்''.......................... பெயர்ப் பொருண்மை

(3)''விண்ணென்றுவிகைத்தது''...................... குறிப்புப் பொருண்மை.

(4)''ஒல்லென்றொலிக்கும்''................................ குசைப் பொருண்மை

(5)''நிலனென்று நீரென்று தீயென்று'' எண்ணுப்பொருண்மை

**உம்மையிடைச்சொல் பொருள்வகையால் எத்தனை?**

எதிர்மறை சிறப்பைய மெச்சமுற் றளவை

தெரிநிலை யாக்கமோ டும்மை யெட்டே.

(எதிர்மறை சிறப்பு ஐயும் எச்சம் முற்று அளவை தெரிநிலை ஆக்கம ஒடு உம்மை எட்டே.)

**இ–ள்.:** எதிர்மறை சிறப்பு ஐயம் எச்சம் முற்று எண் தெரிநிலை ஆக்கம் என உம்மைச்சொல் எட்டாம். **எ–று.**

எச்சவும்மை எத்தனைவகைப்படும்?

எச்சவும்மை இறந்ததுதழீ இயவெச்சமும், எதிரதுழீஇய வெச்சமும் என இருவகைப்படும்.

. எதிர்மறையும்மைக்கும் எச்சவும்மைக்கும் வேற்றுமை யாது?

எதிர்மறையும்மை எச்சத்தின்பாற் படுமாயினும் பிறிதொரு பொருளைத் தழுவாது ஒருபொருளின வினையை மீறுத்தலின் அதனின் வேறாம்.

சிறப்பும்மை எத்தனை?

உயர்வுசிறப்பும்மை இழிவுசிறப்பும்மை என இரண்டு.

**வ–று.:–**

(1) ''சாத்தன் வருதற்குமுரியன்'' என்புழி, வராமைக்கு முரியன் என்னும்பொருளைத்தருதலால் எதிர்மறையும்மை.

(2) ''குறவரு மருளுங் குன்றம்''குன்றத்து மயங்காது செல்லு தலிற் குறவர் சிறந்தமையாற் சிறப்பும்மை.

''புலையனும் விரும்பாப் புன்புலால் யாக்கை''. இங்கே உடம்பி னிழிவைச் சிறப்பித்தலால் குழிவுசிறப்பும்மை.

(3) சாத்தனும் வந்தான். இங்கே கொற்றன் வந்ததன்றி என்னும் பொருளைத் தந்தால் குறந்ததுதழீகுயவெச்சம்; இனிக் கொற்றனும் வருவான் என்னும் பொருளைத் தந்தால், எதிரது தழிகுயவெச்சவும்மை.

(4)இன்னும் இவ்வெச்சந்தானே, யான் கருவூர்க்குச் செல்வல் என்றார்க்கு யானும் அவ்வூர்க்குப் போதுவல் என முழுதுந் தழுவுவதும் அவ்வாறு கூறினார்க்கு யானும் உறையூர்க்குப் போதுவல் என ஒருபுடைதழுவுவதுமென இருவகைத்தாம்.

(5) எல்லாரும் வந்தார். இங்கே எஞ்சாப்பொருளைத் தருதலால் முற்றும்மை.

(6) இராவும் பகலும். இங்கே எண்ணுதற்கண் வருதலால் எண்ணும்மை.

(7) ஆணுமன்று பெண்ணுமன்று. இங்கே இன்னதெனத் தெரிவித்துநிற்றலால் தெரிநிலையும்மை.

(8) பாலுமாயிற்று. இங்கே அதுவே மருந்துமாயிற்று என்னும் பொருளைத் தருதலால் ஆக்கவும்மை.

முற்றும்மை வேறுபொருண்மையிலும் வருமெனக்கூறுஞ் சூத்திரம் யாது?

முற்றும்மை யொரோவழி யெச்சமு மாகும்.

(முற்றும்மை ஒரோவழி எச்சமும் ஆகும்.)

**இ–ள்.:** மேற்கூறிய முற்றும்மை ஒரோவிடத்து எச்சவும்மையாம். **எ–று.**

**வ–று.** எல்லாரும் வந்திலர்; அவர் பத்துங் கொடார். இங்கே சிலர் வந்தார்; சிலகொடுப்பார் எனவும் பொருள்படுதலால், எச்சவும்மையாயிற்று.

எச்சப்படுவது எதிர்மறைவினைக்கண்ணேயாம்.

எச்சவும்மை யீற்றில் வருமாயின் என்னபொருளல் வரும்?

செவ்வெண் ணீற்றதா மெச்ச வும்மை.

(செவ்வெண் ஈற்றது ஆம் எச்சவும்மை.)

**இ–ள்.:** எச்சவும்மை செவ்வெண்ணில் வருமாயின் ஈற்றில் வரும். **எ–று.**

செவ்வெண்ணாவது எண்ணிடைச்சொற் றொக்குநிற்ப வருவது.

**வ–று.:–**

கல்வி செல்வ மொழுக்கங் குடிப்பிறப்பும் பெறுவாருமுளர் என்புழி, இவற்றுட்சில பெறுவாருமுளர் எனப் பொருள்படுதல் காண்க.

எண்ணிடைச்சொற்கள் தொகைபெற்றும் பெறாதும் வருமெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

பெயர்ச்செவ் வெண்ணே யென்றா வெனாவெண்

ணான்குந் தொகைபெறு மும்மையென் றெனவோ

டிந்நான் கெண்ணுமஃ கின்றியு மியலும்.

(பெயர்ச்செவ்வெண் ஏ என்றா எனா எண் நான்கும் தொகை பெறும்; உம்மை என்று என ஒடு இந்நான்கு எண்ணும் அஃது இன்றியும் இயலும்.)

**இ–ள்.:–** பெயர்களினிடையே யெண்ணிடைச்சொற் றொக்குநிற்பவருஞ் செவ்வெண்ணும் பெயரோடு தொகாதுவரும் ஏகாரவெண்ணும் என்றா வெண்ணும் எனாவெண்ணுமாகிய நான் கெண்களுந் தொகையைப் பெற்று நடக்கும்; உம்மையெண்ணும் என்றெண்ணும் எனவெண்ணும் ஒடெண்ணுமாகிய இந்த நான்கெண்களும் அத்தொகை பெறாதும் நடக்கும். **எ–று.**

**(வரலாறு)**

(1) சாத்தன் கொற்றனிருவரும் வந்தார்
பெயர்ச்செவ்வெண்.

சாத்தனே கொற்றனே யிருவரும் வந்தார்
ஏகாரவெண்.

சாத்தனென்றா கொற்றனென்றா விருவரும்வந்தார்
என்றாவெண்.

சாத்தனெனாக் கொற்றனெனா விருவரும்வந்தார்
எனாவெண்.

இவை தொகைபெற்றேவந்தன. இவை வழக்கிடத்து ஒரோவழித் தொகை பெறாதுவரின, இசையெச்சமாகவும். செய்யுளிலே தொகைபெறாது வரிற் றொகுத்தல் விகாரமாகவுங் கொள்க.

(2) சாத்தனுங் கொற்றனு மிருவரும்வந்தார்
உம்மையெண்.

சாத்தனென்று கொற்றனென் றிருவருளர்
என்றெண்.

சாத்தனெனக் கொற்றனென விருவருளர்
எனவெண்.

சாத்தனோடு கொற்றனோடிருவருளர் – ஒடெண்.

இவை தொகைபெற்று வந்தன. சாததனுங் கொள்ளனும் வந்தார்; நிலனென்று நீரென்று தீயென்று காற்றென் றளவறு காயமென் றாகிய வுலகம்; நிலனென நீரெனத் தீயெனக் காற்றென வளவறு காயமென வாகிய வுலகம்; நிலனோ நீரோடு தீயோடு காற்றோ டளவறு காயமோ டாகிய பூதம். இவை தொகைபெறாது வந்தன.

என்றும் எனவும் ஒடுவும் ஒரோவிடத்து நின்று எண்ணுப் பொருண்மைக்கட் பிரிந்து சென்று ஒன்றுதலு முண்டெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

என்று மெனவு மொடுவு மொரோவழி
நின்றும் பிரிந்தெண் பொருடொறு நேரும்.

(என்றும் எனவும் ஒடுவும் ஒரோவழி நின்றும் பிரிந்து எண் பொருள்தொறும் நேரும்.)

**இ–ள்.**:– என்று என ஒடுவென்னும் இம்மூன்றிடைச்சொற்களும் ஓரிடத்து நின்றும் பிரிந்து எண்ணப்டும் பொருடோறுஞ் சென்று பொருந்தும். **எ–று.**

**வ–று.**;–

(1) "வினைபகை யென்றிரண்டி னெச்சநினையுங்காற்–றீயெச்சம் போலத்தெறும்." இங்கே என்றென்பது, வினை யென்று பகையென்று என நின்றவிடத்துப் பிரிந்து, பிறவழியுஞ் சென்று பொருந்தியது.

(2) "பகைபாவ மச்சம் பழியென நான்கு–மிகலாவா மில்லிறப்பான் கண்." இங்கே எனவென்பது, பகையெனப் பாவமென அச்ச மெனப் பழியென, என்றுநின்றவிடத்துப் பிரிந்து, பிறவழியுஞ் சென்று பொருந்தியது.

(3) "பொருள்கருவி காலம் வினையிடனோ டைந்து–மிருடீர வெண்ணிச் செயல்". இங்கே ஒடுவென்பதுமு பொருளொடு கருவியொடு காலத்தொடு

வினையொடு இடனொடு என நின்றவிடத்துப் பிரிந்து, பிறவழியுஞ் சென்று பொருந்தியது.

இச்சூத்திரக்கருத்து யாது?

எனையவெண்ணிடைச்சொற்கள் எண்ணும் பொருள்தோறு நிற்கும். இவை மூன்றும் ஒரோவழி நின்றும் எண்ணும் பொருடோறுஞ் சென்று பொருள் தரும் என்பது கருத்து.

எண்ணிடைச்சொற்கள் வினைச்சொற்கண்ணும் வருமெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

வினையொடு வரி னுமெண் ணினைய வேற்பன.

(வினையொடு வரினும் எண் இனைய ஏற்பன.)

**இ—ள்.:**— வினையொடு வந்துநிற்பினும் எண்ணிடைச்சொற்கள் முற்கூறிய இயல்பினவாய்த் தொகைபெற்றும் பெறாதும் வருவனவாம் பொருந்துவன. **எ—று.**

**வ—று.:**—

மயிலாடக் குயில்வாட மாமுதிலெழுந்தது. இது செவ்வெண். கற்றுங் கேட்டுங் கற்பனை கடந்தார். இது உம்மையெண். உண்ணவென் றுடுக்கவென்று வந்தான். இது எனவேண். உண்ணவுடுக்கவென்றுவந்தான். இது பிரிந்து கூடுமெண்.

தில்லென்னுமிடைச்சொல் எத்தனை பொருண்மைக்கண் வரும்?

விழைவே கால மொழியிசை தில்லே.

(விழைவே காலம் ஒழியிசை தில்லை.)

**இ—ள்.:**— ஆசையுங் காலமும் ஒழிந்த சொல்லுமாகிய மூன்றுபொருளையுந் தருந் தில்லென்னு மிடைச்சொல். **எ—று.**

**வ—று.:**—

(1) "வார்ந்தி லங்குவை யெயிற்றுச் சின்மொழி—யரிவையைப் பெறுகதில் லம்ம யானே" இங்கே அரிவையைப் பெறுதல் ஆசையை யுணர்த்தலால் விழைவு.

(2) "பெற்றாங் கறிகதில் லம்மலிவ் வூரே." இங்கே பெற்றகாலத்தறிக எனக் காலத்தையுணர்த்தலாற் காலம்.

(3) "வருகதில் லம்மவெஞ் சேரி சேர." இங்கே வந்தால் ஒன்று செய்வேன் என்னும் ஒழிந்த சொற்பொருளையுணர்த்தலால் ஒழியிசை.

மன்னென்னுமிடைச்சொல் இன்னபொருட்கண்வருமெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

மன்னே யசைநிலை யொழியிசை யாக்கங்

கழிவு மிகுதி நிலைபே றாகும்.

(மன்னே அசைநிலை ஒழியிசை ஆக்கம் கழிவு மிகுதி நிலைபேறு ஆகும்.)

**இ—ன்.:**— மன்னென்னுமிடைச்சொல் அசைத்துநிற்றற்பொருளிலும் ஒழிந்த சொற்பொருளிலும் ஆக்கப்பொருளிலும் கழிதற்பொருளிலும் மிகுதிப்பொருளிலும் நிலைபெறுதற்பொருளிலும் வரும். **எ—று.**

**வ—று.:**—

(1) "அதுமற் கொண்கன் றேரே." இங்கே வேறுபொருளின்றிச் சார்த்தப்பட்டு நிற்றலால் அசைநிலை.

(2)"கூரியதோர் வாண்மன்." இங்கே இரும்பை அறத்துணித்தது என்னும் ஒழிந்த சொற்களைத் தருதலால் ஒழியிசை.

(3) "பண்டு காடுமன்." இங்கே இன்று வயலாயிற்று என்னும் ஆக்கப்பொருளைத் தருதலால் ஆக்கம்.

(4) "சிறியகட்பெறினே யெமக்கீயு மன்னே." இங்கே இப்பொழுது அவன் இறந்ததனால் எமக்குக் கொடுத்தல் கழிந்தது என்னும் பொருளைத்தருதலாற் கழிவு. சிறியகட் பெறினே–சிற்றளவினதாகிய தேனைப்பெற்றால், எமக்கீயும்–எங்களுக்குத் தருவன், மன்னே–அது கழிந்தது. இது இறந்துகிடந்த வள்ளலாகிய அதிகமானைக்கண்டு ஔவை பாடிய பாட்டின் முதலடி.

(5) "எந்தை யெமக்கருளுமன்." இங்கே மிகுதியும் அருளுவன் என்னும் பொருளைத் தருதலால் மிகுதி.

(6) "மன்னா வுலகத்து மன்னியது புரிமோ." இங்கே இவ்விடைச்சொல்லடியாகப் பிறந்த வினைகள். நிலைபெறாத வலகத்திலே சிலைத்ததைச் செய் என்னும் பொருள்பட திற்றலால் நிலைபேறு. மற்றென்னு மிடைச்சொல் எத்தனை பொருள்பட வரும்?

வினைமாற் றசைநிலை பிறிதெனு மற்றே.

(வினைமாற்று அசைநிலை பிறிது எனும் மற்றே.)

**இ–ள்.:–** மற்றென்னு மிடைச்சொல் வினைமாற்றுப் பொருளையும் அசைத்துநிற்றற் பொருளையும் பிறிது பொருளையுந்தரும். **எ–று.**

**வ–று.;–**

(1) "மற்றறிவா நல்வினை யாமிளைய மென்னாது." இங்கே விரைந்தறிவாமென்னும் னையையொழித்து விரையாதறி வாமென்னும் வினையைத் தருதலால். வினைமாற்று.

(2) "மற்றென்னை யாள்க." இங்கே வேறுபொருளின்றிச் சார்த்தப்பட்டு நிற்றலால். அசைநிலை.

(3) "ஊழிற் பெருவலி யாவள மற்றொன்று–சூழினுந் தான்முக்துறும்." இங்கேஊழல்ல தொன்றென்னும் பொருளைத் தருதலாற். பிறிது.

**மற்றையென்னு மிடைச்சொல் என்னபொருள்பட வரும்?**

மற்றைய தென்பது சுட்டிய தற்கினம்.

(மற்றை அது என்பது சுட்டியதற்கு இனம்.)

**இ–ள்.:–** மற்றை என்னுமிடைச்சொல் அதுவென்பதனாற் சுட்டப்பட்ட பொருளொழிய அதற்கினமாகிய பொருளைக் குறித்துநிற்கும். **எ–று.**

**வ–று.:–**

ஆடைகொணர்ந்தவழி அவ்வாடை வேண்டாதான் மற்றை யாடை கொணாவென்னும்: அஃது அச்சுட்டிய ஆடை யொழித்து இனமாகிய பிறஆடை குறித்துநிற்றல் காண்க.

மற்றையான் மற்றையது மற்றையன முதலியன இவ்வடியான் வந்த சொற்கள்.

**கொல்லென்னு மிடைச்சொல்லின் செய்தி யாது?**

கொல்லே யைய மசைநிலைக் கூற்றே.

(கொல்லே ஐயம் அசைநிலைக் கூற்றே.)

**இ–ள்.:–** கொல்லென்பது ஐயப்பொருளையும் அசைநிலைப்பொருளையுந் தருமிடைச்சொல்லாம். **எ–று.**

**வ–று.:–**

(1) இவ்வுருக் குற்றிகொல் மகன்கொல். இங்பே குற்றியோ மகனோ என்னும் பொருளைத் தருதலால் ஐயம்.

(2) "கற்றதனா லாய பய னென்கொல்."

இங்கே வேறுபொரு ளின்றிச் சார்த்தப்பட்டு நிற்றலால் அசைநிலை. **இசைநிறைத்தற்பொருட்கண் வரும் இடைச்சொற்கள் யாவை?**

ஒடுவுந் தெய்யவு மிசைநிறை மொழியே.

(ஒடுவும் தெய்யவும் இசைநிறை மொழியே.)

**இ–ள்.:** ஒடு தெய்ய என்னுமிரண்டும் இசைநிறைத்தற்பொருளைத்தருஞ் சொற்களாம். **எ–று.**

**வ–று.:–**

"விதைகுறு வட்டிற் போதொடு பொதுள."

எனவும்,

சொல்லேன்றெய்ய நின்னொடு பெயர்த்தே. எனவும் வரும்.அசைநிலை இடப்பொருள் இரண்டற்குமுரிய இடைச்சொற்ள் யாவை?

அந்திலாங் கசைநிலை யிடப்பொரு ளவ்வே.

(அந்தில் ஆங்க அசைநிலை இடப்பொருளவ்வே.)

**இ–ள்.:–** அந்தில் ஆங்க என்னும் இவ்விரண்டிடைச் சொல்லும் அசை நிலைப் பொருளவாயும் இடைப் பொருளவாயும் வரும். **எ–று.**

ஆங்கவென்னு மிடைச்சொல் அகரவீறு குறைந்து நின்றது. இரட்டுற மொழிதலால் ஆங்கென்னுஞ் சொல் ஆங்கவென்னுஞ்சொல்லையும் ஆங்க என்னுஞ் சொல்லையுங் குறித்து நின்றது எனினும் பொருந்தும்.

**வ–று.:–**

(1) "அந்திற் கழவினன் கச்சினன்." இங்கே வேறு பொருளின்றிச் சார்த்தப்பட்டு நிற்றலால் அசைநிலை.

"வருமே–சேயிழைது யந்திற் கொழுநற் காணிய." இங்கே அவ்விடத்துவரும் என்னும் பொருளைத் தருதலால் இடம்.

(2) "ஆங்கக் குயிலு மயிலுங்காட்டு." இங்கே வேறு பொருளின்றி சார்த்தப்பட்டு நிற்றலால் அசைநிலை.

"ஆங்காங்காயினுமாகா." இங்கே அவ்வவ்விடத்து என்னும் பொருளைத் தருதலால் இடம்.

அம்மவென்னு மிடைச்சொல் என்னபொருளில் வரும்?

அம்ம வுரையசை கேண்மினென் றாகும்.

(அம்ம உரையசை கேண்மின் என்று ஆகும்.)

**இ—ள்.:**— அம்மவென்பது உரையசைப்பொருளைத் தருவதும் ஒன்றுசொல்வேன் கேண்மினென்னும் எவற்பொருண்மையைத் தருவதுமாம். **எ—று.**

**வ—று.:**—

(1) "அதுமற்றம்ம." இங்கே கட்டுரைக்கண் வருதலால் உரையசை. கட்டுரை—புனைந்துரை.

(2) "அம்ம வாழி தோழி." இங்கே ஒன்றுசொல்வேன் கேள் என்னும் எவற்பொருளில் வந்தது.

மாவென்னுமிடைச்சொல் என்னபொருண்மையில் வரும்?

மாவென் கிளவி வியங்கோ ளசைச்சொல்.

(மா என் கிளவி வியங்கோள் அசைச்சொல்.)

**இ—ள்.:**— மாவென்னுமிடைச்சொல் வியங்கோளைச் சார்ந்து வரும் அசைச்சொல்லால். **எ—று.**

**வ—று.:**—

"உப்பின்று—புற்கை யுண்கமா கொற்கையோனே". இங்கே மாவென்னும் அசைச்சொல் உண்கவென்னும் வியங்கோள் வினையை யடுத்துவந்தது.

முன்னிலையசை இடைச்சொற்கள் யாவை?

மியாயிக மோமதி யத்தை யித்தை
வாழிய மாளவீ யாழமுன் னிலையசை.

(மியா இக மோ மதி அத்தை இத்தை வாழிய மாள ஈ யாழ முன்னிலை அசை.)

**இ—ள்.:**— மியா இக மோ மதி அத்தை இத்தை வாழிய மாள ஈ யாழ என்னும் பத்திடைச்சொற்களும் முன்னிலையிடத்துவரும் அசைச்சொற்களாம். **எ—று.**

**வ—று.:**—

மியா—கேண்மியா, சென்மியா.

இக – "தண்டுறையூர காணிக வென்வே"

மோ – "காமஞ் செப்பாது கண்டது மொழிமோ"

மதி – "சென்மதி பெரும்"

அத்தை – "சொல்லிய ரத்தைநின் வெகுளி"

இத்தை – "வேய் நரல் விடரக நீயொன்று பாடித்தை"

வாழிய – "காணியவாவாழியமலைச்சாரல்"

மாள – "சிறிது–தவிர்ந்தீக மாளநின் பரிசில ரும்மார்"

ஈ – "சென்றீ பெருமநிற் றகைக்குநர் யாரே"

யாழ – "நீயே செய்வினை மருங்கிற் செலவயர்ந் தியாழ"

அசைச்சொல்லாய் எல்லாவிடங்களிலும் வரும் இடைச்சொற்கள் யாவை?

யாகா பிறபிறக் கரோபோ மாதிகுஞ்

சின்குரை யோரும் போலு மிருந்திட்

டன்றாந் தாந்தான் கின்றுநின் றசைமொழி.

(யா கா பிற பிறக்கு அரோ போ மாது இகும் சின் குரை ஒரும் போலும் இருந்து இட்டு அன்று ஆம் தாம் தான் கின்று நின்று அசைமொழி.)

**இ–ள்.:**– யா யா பிற பிறக்கு அரோ போ மாது இகும் சின் குரை ஒரும் போலும் இருந்து இட்டு அன்று ஆம் தாம் தான் கின்று நின்று என்னும இருபதிடைச்சொற்களும் எல்லாவிடங்களிலும் வரும் அசைச்சொற்களாம். **எ–று.**

**வ–று.:**–

யா – ா பன்னிருவர் மாணாக்க ரகத்தியனார்க்கு.

கா – "புரநிழற் பட்டாளோ விவளிவட் காண்டிகா"

பிற – "ஆனையல்லைபிற"

பிறக்கு – "பிறக்கிதனுட், செல்லான் பெருந்தவம் பட்டான்"

அரோ – "நோதக விருங்குயி லாலு மரோ"

போ – "பிரியின் வாழா தென்போ"

மாது – "விளிந்தன்று மாதவர்த் தெளிந்தவென் னெஞ்சே"

இகும் – "காண்டிகு மல்லமோ கொண்க."

சின் – "தீக்கா கியவா லென்றிசின்"

குரை – "அது பெறலங் குரைத்தே"

ஒரும் – "அஞ்சுவ தோரு மறனே"

போலும் – "வடுவென்ற கண்ணாய் வருந்தினை போலும்"

இருந்து – "நனவென் றெழுந்திருந்தே னல்வினையொன்றில்லேன்"

இட்டு – "நெஞ்சம் பிளந்திட்டு"

அன்று – "பிர மாபுர மேவிய பெம்மானிவ னன்றே"

ஆம் – "பணியுமா மென்றும் பெருமை சிறுமை அணியுமாந் தன்னை வியந்து"

தாம் – " நீர்தாம்.

தான் – " நீதான்.

கின்று – "வார்வா னாசைப்பட் டிருக்கின்றேன்."

நின்று – "அழலடைந்த மன்றத் தரந்தையராய் நின்றார் நீழலடைந்தே நின்னையென் றேத்த"

கயல்போலுங்கண் என்புழிவரும் போலுமென்பது ஒப்புமையுணர்த்துஞ் சொல். வருந்தினைபோலும் என்புழிவரும் போலும் என்பது ஒப்புமை யுணர்த்துவதன்று அஃதுரையசை.

மேற்சொல்லப்பட்டனவன்றிச் சொல்லப்படாதன பலவுள. அவற்றை இடைச்சொற்குக் கூறிய விலக்கணங்கொண்டா ராய்ந்துணர்க.

**இடையியல் முற்றிற்று**

## உரியியல்

உரிச்சொற்கெல்லாம் பொதுவிலக்கணங்கூறுஞ் சூத்திரம் யாது?

பல்வகைப் பண்பும் பகர்பெய ராகி

ஒருகுணம் பலகுணந் தழுவிப் பெயர்வினை

ஒருவா செய்யுட் குரியன வுரிச்சொல்.

(பல்வகைப் பண்பும் பகர் பெயர் ஆகி ஒரு குணம் பலகுணம் தழுவிப் பெயர் வினை ஒருவா செய்யுட்கு உரியன உரிச்சொல்.)

**இ—ள்.:—** இசையுங் குறிப்பும் பண்புமாகிய பலவேறுவகைப்பட்ட பண்புகளையும் உணர்த்தும் பெயராகி அவ்வாறுணர்த்தும்போது ஒருசொல் ஒருகுணத்தையுணர்த்துவனவும் பலகுணங்களையுணர்த்துவனவுமாய்ப் பெயர் வினைகளைவிட்டு நீங்காவாய்ச் செய்யுளுக்கு உரியவையாய்ப் பொருட்குரிமைபூண்டு நிற்பவை உரிச்சொற்களாம். **எ—று.**

2. உரிச்சொல் என்னும்பெயர் யாதுபற்றி வந்தது?

தமக்கியல்பில்லா விடைச்சொற்போலாது இசை குறிப்புப்பண்பென்னும் பொருட்குத் தாமேயுரியவாதலின் உரிச்சொல் எனப்பட்டது.

இசை ஓசை. குறிப்பு மனத்தாற் குறித்துணரப்படுவது. பண்பு பொறியாலுணரப்படுங் குணம்.

பண்பாவது யாது?

**உயிருயி ரல்லதாம் பொருட்குணம் பண்பே.**

(உயிர் உயிர் அல்லது ஆம் பொருட்குணம் பண்பே.)

**இ—ள்.:** உயிராகிய பொருளும் உயிரல்லாத பொருளுமென இருவகையுளடங்கும் உலகத்துப் பொருள்களின் குணங்கள் பண்புகளாம். **எ—று.**

உயிரெத்தனை வகைப்படும்?

மெய்ந்நா மூக்கு நாட்டஞ் செவிகளின்

ஒன்றுமுத லாக்கீழ்க் கொண்டுமே லுணர்தலின்

ஒரறி வாதியா வுயிரைந் தாகும்.

(மெய் நா மூக்கு நாட்டம் செவிகளின் ஒன்று முதலா கீழ்க்கொண்டு மேல் உணர்தலின் ஓரறிவு ஆதியா உயிர் ஐந்து ஆகும்.)

**இ–ள்.:– மெய் நா மூக்கு நாட்டம் செவிகளின்** – மெய்யும் நாவும் நாசியுங் கண்ணுங் காதுமாகிய ஐம்பொறிகளாலும், **ஒன்று முதலா** – மெய்யாற் பரிசத்தையுணரு முணர்ச்சி யொன்று முதலாக, **கீழ்க்கொண்டு**–கீழ்ப்போன வுணர்ச்சியுங்கொண்டு, **மேல் உணர்தலின்**–இரதம உருவஞ் சத்தமென மேல்வரும் புலன்களை யொன்றோடொன்றாக உணர்தலின், **ஓர் அறிவு ஆதியாக ஐந்து ஆகும் உயிர்**–ஓரறிவுயிர் முதலாக ஐந்து வகையாகும் அவ்வுயிர்.எ–று.

ஓரறிவுயிர்களாவன யாவை?

**புன்மர முதலவுற் றறியுமோ ரறிவுயிர்.**

(புல் மரம் முதல உற்று அறியும் ஓரறிவு உயிர்.)

**இ–ள்.:** புல்லும் மரமும் முதலியவை மெய்யாற் பரிசித்துப் பரிசத்தையறியும் ஓரறிவுயிர்களாம். **எ–று.** மூவறிவுயிர்களாவன யாவை?

சிதலெறும் பாதிமூக் கறிவின்மூ வறிவுயிர்.

(சிதல் எறும்பு ஆதி மூக்கு அறிவின் மூவறிவு உயிர்.)

**இ–ள்.:–** கறையானும் எறும்பும் முதலியவை கீழ்ப்போன இரண்டறிவுகளே யன்றி மூக்காற் கந்தத்தையறியும் அறிவோடு மூவறிவுயிர்களாம். **எ–று.**

ஈரறிவுயிர்களாவன யாவை?

முரணந் தாதிநா வறிவொடீ ரறிவுயிர்.

(முரண் நந்து ஆதீ நா அறிவொடு ஈரறிவு உயிர்.)

**இ–ள்.:–** இப்பியுஞ் சங்கும் முதலியவை கீழ்ப்போன மெய்யறிவேயன்றி நாவா விரதத்தையறியும் அறிவோடு ஈரறிவுயிர்களாம். **எ–று.**

நான்கறிவுயிர்களாவன யாவை?

தும்பிவண் டாதிகண் ணறிவினா லறிவுயிர்.

(தும்பி வண்டு ஆதி கண் அறிவின் நாலறிவு உயிர்.)

**இ–ள்.:–** தும்பியும் வண்டும் முதலியவை கீழ்ப்போன மூன்றறிவுயிர்களே யன்றிக் கண்ணால் உருவத்தையறியும் அறிவோடு நாலறிவுயிர்களாம். **எ–று.**

ஐயறிவுயிர்களாவன யாவை?

**வானவர் மக்க ணரகர் விலங்குபுள்**

**ஆதிசெவி யறிவோ டையறி வுயிரே.**

(வானவர் மக்கள் நரகர் விலங்கு புள் ஆதி செவி அறிவோடு ஐயறிவு உயிரே.)

**இ—ள்.:—** தேவரும் மனிதரும் நரகரும் மிருகங்களும் பறவைகளும் முதலியவை. கீழ்ப்போன நாலறிவுகளேயன்றிச் செவியாற்சத்தத்தையறியும் அறிவோடு ஐயறிவுயிர்களாம். **எ—று.**

சடப்பொருளாவன யாவை?

உணர்விய லாமுயி ரொன்று மொழித்த
உடன்முத லனைத்து முயிரல் பொருளே.

(உணர்வு இயல் ஆம் உயிர் ஒன்றும் ஒழித்த உடல் முதல் அனைத்தும் உயிர் அல்பொருளே.)

**இ—ள்.:—** அறிவுமயமாகிய உயிரொன்றுமேயன்றி உடம்பு முதலாகிய உலகத்துப் பொருள்களெல்லாம் உயிரல்லாத பொருள்களாம். எ—று.

உடலுமுயிரும் வேறுவேறென்பது எவ்வாறு துணியப்படும்?

ஒற்றுமை நயத்தி னொன்றெனத் தோன்றினும்
வேற்றுமை நயத்தின் வேறே யுடலுயிர்.

(ஒற்றுமை நயததின் ஒன்று எனத் தோன்றினும் வேற்றுமை நயத்தின் வேறே உடல் உயிர்.)

**இ—ள்.:** எவ்வுயிர் எவ்வுடம்பையெடுத்ததோ அவ்வுடம்பின் மயமாய் நிற்கும் ஒற்றுமைநயங் கருதியவழி ஒன்றுபோற்றொன் றுமாயினும் உயிர் சித்தாயும் உடம்பு சடமாயும் நிற்கும் வேற்றுமை நயமாகிய உண்மை கருதியவழி அவ்வுடலு முயிரும் வேறாம். **எ—று.**

உயிர்க்குணம் யாவை?

அறிவரு ளாசை யச்ச மான
நிறைபொறை யோர்ப்புக் கடைப்பிடி மையல்
நினைவு வெறுப்புவப் பிரக்கநாண் வெகுளி
துணிவழுக் காறன் பெளிமை யெய்த்தல்
துன்ப மின்ப மிளமை மூப்பிகல்
வென்றி பொச்சாப் பூக்க மறமதம்
மறவி யினைய வுடல்கொ ளுயிர்க்குணம்.

(அறிவு அருள் ஆசை அச்சம் மானம் நிறை பொறை ஓர்ப்புக் கடைப்பிடி மையல் நினைவு வெறுப்பு உவப்பு இரக்கம் நாண் வெகுளி துணிவு அழுக்காறு அன்பு எளிமை எய்த்தல் துன்பம் இன்பம் இளமை மூப்பு இகல் வென்றி பொச்சாப்பு ஊக்கம் மறம் மதம் மறவி இனைய உடல் கொள் உயிர்க்குணம்.)

**இ—ள்.:—** அறிவு அருள் ஆசை அச்சம் மானம் நிறை பொறை ஓர்ப்புக் கடைப்பிடி மையல் நினைவு வெறுப்பு உவப்பு இரக்கம் நாண் வெகுளி துணிவு அழுக்காறு அன்பு எளிமை எய்த்தல் துன்பம் இன்பம் இளமை மூப்பு இகல் வென்றி பொச்சாப்பு ஊக்கம் மறம் மதம் மறவியென்னு முப்பத்திரண்டும் இவைபோல்வன பிறவும் உடம்போடு கூடிய உயிர்களினுடையகுணங்களாம். **எ—று.**

உயிர்த்தொழிற்குணம் யாவை?

துய்த்த றுஞ்ச றொழுத லணிதல்

உய்த்த லாதி யுடலுயிர்த் தொழிற்குணம்.

(துய்த்தல் துஞ்சல் தொழுதல் அணிதல் உய்த்தல் ஆதி உடல் உயிர்த் தொழிற்குணம்.)

**இ–ள்.:–** **துய்த்தல்**–உண்ணல், **துஞ்சல்**–உறங்கல், **தொழுதல்**–பணிதல், **அணிதல்**–அலங்கரித்தல், **உய்த்தல்**–செலுத்துதல் என்னும் ஐந்தும், **ஆதி**–இவைபோல்வன பிறவும், **உடல் உயிர்த் தொழிற்குணம்**–உடம்போடு கூடிய உயிரினுடைய தொழிற்குணங்களாம். எ–று.

உயிரல்லாத பொருட்குணங்கள் யாவை?

பல்வகை வடிவிரு நாற்றமை வண்ணம்

அறுசுவை யூறெட் டுயிரல் பொருட்குணம்.

(பல்வகை வடிவு இருநாற்றம் ஐவண்ணம் அறுசுவை ஊறு எட்டு உயிர் அல் பொருட்குணம்.)

**இ–ள்.:–** வட்டம் இருகோணம் முக்கோணஞ் சதுரமுதலிய பலவகை வடிவுகளும் நற்கந்தந் துர்க்கந்தமென்னும் இருநாற்றங்களும் வெண்மை செம்மை கருமை பொன்மை பசுமையென்னும் ஐந்து வண்ணங்களும் கைப்புப் புளிப்புத் துவர்ப்பு உவர்ப்புக் கார்ப்பு இனிப்பு என்னும் அறுசுவைகளும் வெம்மை தண்மை மென்மை வன்மை நொய்மை சீர்மை இழுமெனல் சருச்சரை யென்னும் எட்டூறுகளும் உயிரல்லாத பொருள்களினுடைய குணங்களாம். எ–று.

உயிர்ப்பொருள் உயிரல்பொருள் இரண்டற்கும் பொதுக்குணம் யாவை?

தோன்றல் மறைதல் வளர்தல் சுருங்கல்

நீங்க லடைத னடுங்க லிசைத்தல்

ஈத லின்னன விருபொருட் டொழிற்குணம்.

(தோன்றல் மறைதல் வளர்தல் சுருங்கல் நீங்கல் அடைதல் நடுங்கல் இசைத்தல் ஈதல் இன்னன இருபொருட் டொழிற்குணம்.)

**இ–ள்.:–** தோன்றல் மறைதல் வளர்தல் சுருங்கல் நீங்கல் அடைதல் நடுங்கல் இசைத்தல் ஈதலென்னும் ஒன்பதும் இவைபோல்வன பிறவும் உயிர்ப்பொருளும் உயிரல்பொருளுமாகியஇரண்டற்கும் பொதுவாகிய தொழிற்குணங்களாம். **எ–று.**

**வ–று.:–**

உயிர் தோன்றி மறைந்தது; உடறோன்றி மறைந்தது; நெருப்புத் தோன்றி மறைந்தது எனவரும்.

மிகுதிப்பொருட்கண் வரும் உரிச்சொற்கள் யாவை?

சால வுறுதவ நனிகூர் கழிமிகல்.

(சால உறு தவ நனி கூர் கழி மிகல்.)

**இ–ள்.:** சாலவென்பது முதலாகிய இவ்வாறுரிச்சொற்களம் மிகுதியாகிய ஒரு குணத்தையுணர்த்தும் உரிச்சொற்கள். **எ–று.**

வ.று:–

சால – "பருவந்து சாலப் பலகொலென் றெண்ணி"

உறு – "உறுவளி துரக்கு முயர்சினை மாவின்"

தவ – "தவச்சேய் நாட்டா ராயினும்"

நனி – "வந்துநனி வருந்தினை வாழிய நெஞ்சே"

கூர் – "துனிகூ ரெவ்வமொடு"

கழி – "காமங் கழிகண் ணோட்டம்"

சாலவென்பது சாலென்னு முரிச்சொல்லடியாகப் பிறந்த வினையெச்சக்குறிப்பு.

17. உரிச்சொல் எத்தனை வகைப்படும்?

ஒரு குணந் தழுவிய வுரிச்சொல்லும் பலகுணந் தழுவிய உரிச்சொல்லுமென விருவகைப்படும்.

பலகுணந்தழுவிய உரிச்சொற்களுள் கடியென்னுஞ்சொல் எத்தனை பொருளில் வரும்?

கடியென் கிளவி காப்பே கூர்மை
விரையே விளக்க மச்சஞ் சிறப்பே
விரைவே மிகுதி புதுமை யார்த்தல்
வரைவே மன்றல் கரிப்பின் ஆகும்.

கடி என் கிளவி காப்பே கூர்மை
விரையே விளக்கம் அச்சம் சிறப்பே
விரைவே மிகுதி புதுமை ஆர்த்தல்
வரைவே மன்றல் கரிப்பின் ஆகும்.

இ–ள்.: கடியென்னுமுரிச்சொல் காவலும் கூர்மையும் வாசனையும் விளக்கமும் அச்சமும் சிறப்பும் விரைவும் மிகுதியும் புதுமையும் ஒலித்தலும் நீக்கலும் மணமும் கரிப்புமாகிய பதின் மூன்று குணங்களிலும் வரும். எ–று.

வ–று.:–

"கடிநகரடைந்து" .......................... காப்பு.

"கடிநுனைப்பகழி" .............................. கூர்மை.

"கடிமாலைசூடி" ........................................ நாற்றம்.

"கண்ணாடியன்ன கடிமார்பன்" .......... .விளக்கம்.

"கடியரமகளிர்க்கே கைவிளக்காகி" ...... அச்சம்.

"அம்புதுஞ்சுங்கடியரண்" ................. சிறப்பு.

"எம்மம்பு கடிவிடுதும்" ..................... விரைவு.

"கடியுண் கடவுட்கிட்ட செழுந குரல்" ..... மிகுதி.

"கடிமணச்சாலை" ............................ புதுமை.

"கடிமுரசு" ................................. ஆர்த்தல்.

"கடிமதுநுகர்வ" ........................... வரைவு.

"கடிவினைமுடுகினி" ......................... மன்றல்.

"கடிமிளகுதின்ற கல்லாமந்தி" ................ கரிப்பு.

சால்லென்னுமொருகுணத்தை யுணர்த்துமுரிச்சொற்கள் யாவை?

மாற்ற நுவற்சிசெப் புரைகரை நொடியிசை

கூற்றுப் புகறன் மொழிகிளவி விளம்பறை

பாட்டுப் பகர்ச்ச யியம்பல் சொல்லே.

(மாற்றம் நுவற்சி செப்பு உரைகரை நொடி இசை கூற்றுப் புகறல் மொழி கிளவி விளம்பு அறை பாட்டுப் பகர்ச்சி இயல்பல் சொல்லே.)

இ–ள்.:– மாற்றமுதலாகிய பதினாறும் சொல்லென்னும் ஒருகுணத்தை யுணர்த்தும் உரிச்சொற்களாம். எ–று.

வ–று.:–

"கோவலர்வாய் மாற்றமுணர்ந்து"; "இருபிறப் பாளர் பொழு தறிந்துநுவல"; தெருண்டாரவைசெப்பலுற்றேன்"; "உரைப்பா ருரைப்பவை யெல்லாம்"; "அறங் கரைநாவி னான்மறை முற்றிய"; "அஞ்சொற் பெரும்பணைத்தோ ளாயிழயா டானொடி யும்"; "நசையுநர்க் கடையா நன்பெருவாயி–லிசையெனப் புக்கு"; "நசையுநர்க் கடையா நன்பெருவாயி–லிசையென்ப் புக்கு"; "உற்றது நாங்கள் கூற வுணர்ந்தனை"; "புகன்ற வன்றியும் பூமி கவருமே"; "காமஞ்செப்பது கண்டது மொழிமோ"; "கிளந்த கிளைமுத லுற்ற"; "மெய்ம்மூ வாறென விளம்பினர் புலவர்"; "அச்சுத னடிதொழு தறைகுவன் சொல்லே"; "ஒருவன் செய்ந்நன்றி கொன்றார்க்–குய்தியில்லென வறம்பாடின்றே"; "வார்த்தை பகர்குற்றேன்"; "இடிபோல வியம்பினானே" என முறையே காண்க.

ஒசையென்னு மொருகுணத்தை யுணர்த்து முரிச்சொற்கள் யாவை?

முழக்கிரட் டொலிகலி யிசை துவை பிளிறிரை

இரக்கழுங் கியம்ப லிமிழ்குளி றதிர்குரை

கனைசிலை சும்மை கௌவை கம்பலை

அரவ மார்ப்போ டின்னை வோசை.

(முழக்கு இரண்டு ஒலி கலி இசை துவை பிளிறு இரை இரக்க அழுங்கு இயல்பல் இமிழ்குளிறு அதிர் குரைகனைசிலை சும்மை கௌவை கம்பலை அரவம் ஆர்ப்பு ஒடு இன்னன ஒசை.)

இ–ள்.:– முழக்குமுதலாகிய இருபத்திரண்டும் இவைபோல்வன பிறவும் ஒசையென்னும் ஒருகுணத்தை யுணர்த்து முரிச்சொற்களாம். எ–று.

வ–று.:–

"முழங்கு முந்நீர் முழுவதும் வளைஇ"; "குடிஞை யிரட்டுங் கோடுயர் நெடுவரை"; "ஒல்லென வொலிக்கு மொலிபுன லூரற்கு"; "கலிகெழு மூதூர்"; "பறையிசை யருவி"; "பல்லியந் துவைப்ப"; "பிளிறுவார் முரசம்"; "இரைக்கு மஃஞ்சிறைப் பறவைகள்"; "இரங்கு முரசினம்"; "இரும்பிழிமாரி யழுங்கின மூதூர்"; "காலை முரசமதியம்ப"; "இமிழ் கடல் வளைஇய"; "குளிறு முரசங் குணில்பாய"; "களிறு களித்த திருங்கார்"; "குரைபுனற் கன்னி"; "கனைகடற் சேர்ப்ப"; "சிலைத்தார் முரசங் கறங்க"; "தள்ளாத சும்மை மிகு தக்கின நாடுநண்ணி"; "கௌவை நீர் வேலி"; "வினைக் கம்பலை மனைச் சிலம்பவும்"; "அறைகட லரவத்தானை"; "ஆர்த்த பல்லியக்குழாம்" என முறையே காண்க.

## புறனடை

இவ்வியலுக்குப் புறனடை கூறுஞ் சூத்திரம் யாது?

இன்ன தின்னுழி யின்னண மியலும்
என்றிசை நூலுட் குணகுணிப் பெயர்கள்
சொல்லாம் பரத்தலிற் பிங்கல முதலா
நல்லோ ருரிச்சொலி னயந்தனர் கொளலே.

(இன்னது இன்னுழி இன்னணம் இயலும் என்று இசை நூலுள் குணகுணிப் பெயர்கள் சொல்லாம் பரத்தலின் பிங்கலம் முதலா நல்லோர் உரிச்சொலில் நயந்தனர் கொளலே.)

**இ—ள்.:—** பெயர்வினையிடையுரிகளில் இன்னசொல் தன்மை முன்னிலை படர்க்கைகளிலும் வழக்குச்செய்யுள்களிலும் இவ்விடத்தே இவ்விலக்கண முடையதாய் நடக்கும் என்று சொல்லக்கடவதாகிய இந்நூலுள் குணப்பெயர் களையும் குணிப்பெயர்களையும் வேண்டியமட்டுஞ் சொல்வதன்றி விரித்துச் சொல்லக்கடவமல்லம்; விரிக்கின் மற்றொன்று விரித்தலென்னுங் குற்றம் வருமாதலின். அவற்றைக் கண்டறியவேண்டினோர் மற்றைப் புலவராற் கூறப்பட்ட பிங்கலந்தை திவாகர முதலிய நூல்களில் உரிச்சொற் றொகுதியுள் விரும்பிக் கொள்க. **எ—று.**

எனவே இச்சூத்திரங் கூறுவன யாவை?

உரிச்சொற்களெல்லாம் இந்நூலிற் சொல்லப்படாமைக்குக் காரணமும் அவை கூறப்படுமிடமுமாம்.

இவ்வதிகாரத்திற்குப் புறனடை கூறுஞ் சூத்திரம் யாது?

சொற்றொறு மிற்றிதன் பெற்றியென் றனைத்து
முற்ற மொழிகுறின் முடிவில வாதலிற்
சொற்றவற் றியலான் மற்றைய பிறவுந்
தெற்றென வுணர்த றெள்ளியோர் திறனே.

(சொற்றொறும் இற்று இதன் பெற்றி என்று அனைத்தும் முற்ற மொழிகுறின் முடிவு இல ஆதலின் சொற்றவற்று இயலான் மற்றைய பிறவும் தெற்றென உணர்தல் தெள்ளியோர் திறனே.)

**இ—ள்.:—** சொற்றோறும் இத்தன்மைத்து இதனிலக்கணமென்று முழுதும் நிறைவுறச் சொல்லப்புகுந்தால் முடிவிலவாம். ஆதலால் எடுத்துச்சொல்லப்பட்ட சொற்களுடைய இலக்கணங்களைக்கொண்டு சொல்லப்படாதவற்றி னிலக்கணங் களையும் ஒப்புமை கருதி இதுவுமதுவென உணர்தல் நூலோதித் தெளிதற்குரிய மாணாக்கரது கடனாம். **எ—று.**

**வ—று.:—**

யானும் நீயும் அவனுஞ் செல்வேம் என ஏனையிடத்திற்கு உரிய

சொற்களுந் தன்மையோடு இயைந்தவழித் தன்மையான் முடிந்தாற்போல அவனும் நீயுஞ் சென்மின் எனவும், "ஒண்டுவி நராய்நின் சேவலு நீயுமாய்–வண்டுதும் பூங்கானல் வைகலுஞ் சேறிரால்" எனவும் படர்க்கைச்சொன் முன்னிலையோடு இயைந்தவழி முன்னிலையான் முடிதலும் இவைபோல்வனவுமாம்.

இந்நூற்குப் புறனடைகூறுஞ் சூத்திரம் யாது?

பழையன கழிதலம் புதியன புகுதலும்

வழுவல கால வகையி னானே.

(பழையன கழிதலும் புதியன புகுதலும் வழு அல கால வகையினானே.)

**இ–ள்.:** முற்காலத்துள்ள விலக்கணங்களுட் சில பிற்காலத்திற்த்தலும் முற்காலத்தில்லன சில பிற்காலத் திலக்கணமாதலும் குற்றமல்லவாங் கால வேற்றுமை யதுவாகலால். **எ–று.**

**உ–ம்.:–**

கேட்டையென்றா நின்றையென்றா முதலியன அக்காலத்து வழக்கு; அவை இக்காலத்தருகினமையின் இலக்கணங் கூறாராயினர். பழையன கழிதல்.

வருகிறான் என்புழிக் கிறு இடைநிலை இக்காலத்து வழக்கு. அது புதியன புகுதல்.

**நன்னூல் இலகுபோதம் முற்றிற்று**

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

தரமணி, சென்னை – 600 113

## அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| வல்லம் தலபுராணம் | 200.00 |
| இதழியல் உலகம் | 120.00 |
| தமிழும் தமிழ்க் கற்பித்தலும் | 60.00 |
| படைப்பிலக்கியம்–விளிம்புநிலைமக்கள்ஆய்வுநோக்கு | 100.00 |
| அண்ணா ஒரு சமூகக் குறியீடு | 40.00 |
| பழந்தமிழும் கிளைமொழிகளும் | 65.00 |
| சுவடிப்பதிப்பாசிரியர்கள் | 45.00 |
| உலக மொழிகளில் தமிழ்ச் சொற்களும் இலக்கணக் கூறுகளும் | 85.00 |
| மதங்களும் மனிதநேயமும் | 90.00 |
| பெயரியல் | 55.00 |
| சங்க இலக்கியத்தில் பாணர் வாழ்வியல் | 80.00 |
| தமிழ் இசுலாம் உருவாக்கமும் திருக்குர்ஆன் தமிழ் வாசிப்பும் | 45.00 |
| தலித் அறம் | 45.00 |
| உலகச் செம்மொழிகள் | 90.00 |
| பொதுவுடைமை இயக்க இதழ்கள் | 115.00 |
| தமிழில் இதழியல் | 270.00 |
| சேக்கிழாரும் இசைத்தமிழும் | 50.00 |
| சித்தர்களின் நெறியில் வேதாத்திரிய யோகம் ஓர் ஒப்பாய்வு | 105.00 |
| கவிஞர் புதுவைச் சிவத்தின் சீர்திருத்த நாடகங்கள் | 120.00 |
| பெ.நா.அப்புசுவாமியின் அறிவியல் கட்டுரைகள்–தொகுதி–3 | 235.00 |
| சிந்தனைச்சிற்பி ம.சிங்காரவேலரும் தந்தைபெரியாரும் | 105.00 |
| மொழிஞாயிறு தேவநேயப்பாவாணரின் பன்முக ஆளுமை | 50.00 |
| நரம்புக் கருவிகள் | 70.00 |
| திணை வரலாறு | 70.00 |
| பெரியாரிய நோக்கில் மு.வ. | 55.00 |
| திருமுறைகளில் அகப்பொருள் மரபுகளும் தொண்டு நெறிகளும் | 75.00 |
| சுவடிப்பதிப்பு முன்னோடிகள் | 60.00 |
| விடுதலைச் சிந்தனையாளர் வ.உ.சிதம்பரனார் தமிழியல் பண்புகள் | 80.00 |
| அயல்நாட்டுத் தமிழ் இலக்கியங்கள் (தொகுதி–1) | 175.00 |
| அயல்நாட்டுத் தமிழ் இலக்கியங்கள் (தொகுதி–2) | 200.00 |
| உதயணகுமாரகாவியம் உணர்த்தும் வாழ்வியல் நெறிகள் | 50.00 |
| பாணர் இனவரைவியல் | 110.00 |
| திராவிட மொழிகளும் திராவிட மொழி ஆய்வுகளும் | 135.00 |
| சுவடிப்பதிப்புகளில் உரைவேறுபாடுகள் (தொகுதி–1) | 135.00 |
| சுவடிப்பதிப்புகளில் உரைவேறுபாடுகள் (தொகுதி–2) | 140.00 |

**நன்னூல் உரை வளம்** இலகுபோதம் **130.00**